தேர்த்தட்டு வார்த்தை

(வாரன்) ஸ்ரீ உ.வே. வானமாமலை. ஆர். நரசிம்மாச்சாரியார் எம்.ஏ.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

தேர்த்தட்டு வார்த்தை

பகவத் கீதை

(ஸ்ரீவாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் அருளிச் செய்த பகவத்கீதை வெண்பாவைத் தழுவியது)

ஸ்ரீ.உ.வே. வானமாமலை
ஆர். நரசிம்மாச்சாரியார் ஸ்வாமி
(வாரன்)
மதுரைக்கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் (ஓய்வு)
மதுரை – 10

முதற் பதிப்பு : Jan 2003

படிகள் : 500

அளவு : 1 x 8 Demmy Size

விலை : Rs.125/-

நூல் வெளியிட்டோர்:

N. ராமன்

N.சுகந்தா

N.ஜயலக்ஷ்மி

N.வசந்தா

N.ஜானகி

R.திருவேங்கடம்

R.நரசிம்மன்

நூல் கிடைக்குமிடம்:

N.ராமன்
3B/7 விவேகானந்தா தெரு,
S.V.நகர், S.S.காலனி,
மதுரை – 625 010
Ph.:0452-2606600

அச்சிட்டோர்:

ஸ்ரீ லக்ஷ்மி பிரஸ்
603, திருமலைகாலனி மெயின்ரோடு,
P.P.சாவடி, மதுரை – 10.
போன் : 5351563, 2380035

Sri:
Srimathe Ramanujaya Nama:

Ph: 250119(Std.04635)

SRI VANAMAMALAI MUTT

NANGUNERI - 627 108.

Srimath Paramahamsa Jagadguru
Sri Kaliyan Vanamamalai Ramanuja Jeer Swami
E.mail : Varamangai2001@Yahoo.com

|| ஸ்ரீ: ||

Place . NANGUNERI
Date : 14-1-2003

"அருளுரை"

அன்பர்களே, தமிழ் கூறும் நல்லுலகின் சான்றோர்களே, திருவள்ளுவப் பெருந்தகை அருளிய "திருக்குறள்" நூலினை செந்தமிழ் இலக்கிய வானில் மின்னி மிளிருகின்ற "உலகப் பொதுமறை" என அறிஞர் போற்றுவர். வள்ளுவர்க்கும் பன்னூற்றாண்டுகள் முன்பே அவதரித்து வடமொழி இலக்கிய வானில் சுடர்விடும் "உலகப் பொதுமறை"யாக, எம்பெருமான் கண்ணன் திருவாய் மலர்ந்தருளிய 'பகவத் கீதை' துலங்கி நிற்கின்றது. இதனை எல்லா உபநிடதங்களது சாரம் என்றுரைப்பர் பெரியோர்கள். இவ்வரிய நூல் அருச்சுனனுக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அத்தனை மானுடர்கட்கும் உணர்ந்து உய்யவேண்டிய தத்துவங்களைத் தெளிவுறப் போதிக்கும் பெருமை வாய்ந்து திகழ்கின்றது. உலகின் பல முக்கிய மொழிகளிலே, பேரறிஞர்களால் பெயர்க்கப்பட்டுத் திகழும் வேதாந்த நூலிது.

நம் பாரத புண்ணிய பூமியிலும், பல்வேறு மொழிகளிலே இவ்வடமொழி நூலினை. சிறந்த அறிஞர் பெருமக்கள் பெயர்த்துள்ளனர். வேதாந்த ஆசார்யர்களாக விளங்கிய ஸ்ரீ சங்கர பகவத் பாதர், ஸ்ரீ பகவத் ராமானுஜர், ஸ்ரீ ஆனந்ததீர்த்தரெனும் மத்வாசார்யரும், ஏனைய மதத்தின் ஸம்ப்ரதாயங்கட்கும், இப்பெருநூலிற்கு பாஷ்ய மெனப்படும் பேருரைகளை அருளியுள்ளார்கள். உபநிடதங்களையும் சேர்த்து இம்மூன்றினையும் வேதாந்த இலக்கியப் பெருந்துறையில் 'ப்ரஸ்தானத்ரயம்' என ஆன்றோர் அழைப்பார்கள்.

இப்பெற்றி பெற்ற 'கீதை'யை, நாம் இசைப
சிறுமைகளையும் பொறுத்துய்த்திட வேண்டும் என்ற கருணையினால்
கொண்டு, அன்னை தாய் மொழி தமிழிலேயே "ஸ்ரீ வாதிகேசரி
அழகிய மணவாள ஜீயர்" என்ற பேராசான் நம் திருத்தமிழிலே
மிகவும் அழகிய வெண்பாக்களால் யாத்துக் கோர்த்துக் கொடுத்
துள்ளார். படிப்பவர் மனங்களைக் கவர்ந்து கொண்டு, அழகாகக்
கருத்துக்களைப் புரிய வைக்கும் மகத்தான வெண்பா நூலிது.
படித்துப் பயன் பெற வேண்டிய இவ்வெண்பா நூலினையும், அந்த
மூல 'கீதை' சுலோகங்களையும் இணைத்துக்காட்டி, எளிய, இனிய
அழகிய பாங்கிலே தெளிவுரையை ஒரு பேராசிரியர்
மிகப் பொருத்தமான "கீதைத் திட்பவாக்கு" என்ற பெயரில்
எழுதி வெளியிட்டார். இந்த அருமையான விளக்கவுரை நூல்
சிறப்புடைய ஆன்மீகச் சூழலிலே 'தேசமித்திரன்' வாரப் பதிப்பில்
தொடராக வெளியிடப்பட்டது. அதைத் தவறாது வாசித்து பக்தர்
பலர் காத்திருந்து வாங்கிப் படித்துச் சிந்தித்தனர் சிறப்புடைய அன்-
பர்கள். அக்காலத்தில் இம்மக்கள் கூட்டத்தில் யானும் ஒருவனாக
இருந்து இப்பொழுது நானும் இதனைக் கண்டு மகிழ்ந்தேன்.

அப்படிப்பட்ட சிறந்த எழுத்தாளரான
ஸ்ரீமான் இப்பொழுது இந்தப் புத்தகத்தை வெளியிடுகிற பேராசிரியர் ஸ்ரீமான்
நாட்டுப் பற்றுடையவராவார். தம்முடைய இளமையைப்
பெரும்பாலும் அங்கேயே கழித்து அவர் தொடர் சொற்பொழிவுகளை
நடத்திக் கொண்டு வந்து பழங்கால நூல்களையும் அவர்
ஆராய்கின்றார். பேச்சிலும், பெருமை படைப்பிலும் மிகச் சிறந்த
பாகவதராகிய இந்தப் பேராசிரியர் தம் வாக்கினால் அனைத்து
சிறப்புகளும் அனைவரும் போற்றும் வண்ணம் கொண்டவர்.
நாட்டின் மக்கள் அனைவரும் தொடர்ந்து வருகிறது. இப்போது
பேராசிரியரின் கீர்த்தி மகிழ்ந்த பெருமையும் திகழ்கிறார்.

[illegible]

[illegible] 3.1.2003, 1.2.2003, 2.2.2003 [illegible]

[illegible]

[illegible] – 30
[illegible]
14.1.2003

[illegible signature]

தேர்த்தட்டு வார்த்தை

மகா சாஸனம், அட்லாண்டிக் சார்ட்டர், வார்சேல்ஸ் உடன் படிக்கை இவற்றைப் பற்றிய விவரங்கள் நம்மில் பலருக்குத் தெரியும். ஒவ்வொன்றும் சரித்திரப் பிரசித்தம் பெற்றது. அரசியல் பிராதான்யம் வாய்ந்தது என்கிறோம். சாஸனமோ உடன்படிக்கையோ ஒரு காலத்தில் ஒரு தேசத்தில் வாழ்ந்த மக்களுக்கு நன்மையாக இருந்திரக்கலாம். பிற தேசங்களுக்குத் தீமையாகவுமிருந்திரக்லாம். அக்காரணங்களாலேயே அப்பொழுது இருந்த மக்களின் கவனத்திற்குரிய விஷயமாயிருந் திருக்கலாம். பிற்காலத்திலோ, பள்ளிக்கூடத்தில் சரித்திரம் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் பரீட்ச்சையில் தேறும் பொருட்டு ஞாபகத்தில் வைக்க வேண்டிய செய்திக் குப்பைகளில் ஒன்றாகிவிடுகிறது.

இதன்றி, ஞானிகள் அல்லது பக்தர்கள் கோஷ்டியில் பிரசித்தமாக வழங்கிவரும் வார்த்தைகளும், செய்திகளும் பல உண்டு. அவற்றின் பிராதான்யம் கூடுதல் குறைவில்லாமல் எக்காலத்திலும் ஒரேவிதமாகிருக்கும். அவை, தோன்றிய காலத்தில் பயன்பட்டது போலவே நடக்கும் காலத்திலும், வருங்காலத்திலும் பயன்படும். ஒரு தேசத்தாருக்கோ ஒரு வகுப்பாருக்கோ மட்டும் இல்லாமல் அகில உலகத்திற்கும் பயன்படும்.

பாரதப்போர் ஆரம்பாகுமுன் இருவரிடையே ஓர் சம்வாதம் நிகழ்ந்தது. சோக மோகத்தால் இருண்ட உலகில் கலங்குவோர் சம்வாதத்தில் மனத்தைச் செலுத்தினால் ஒளியும் தெளிவும் பெறலாகும். இச்சம்வாதத்தின் சாரத்தைப் பருகிய நம்வாழ்வார் 'வார்த்தை' என்றே கூறுகிறார். வார்த்தை என்பது பொதுவாக எல்லாச் சொற்களையும் பேச்சையும் குறிக்கும் எனினும், அவை பயனற்றவை. இச் சம்வாதம் ஒன்றே படிப்போர்க்கும் கேட்போர்க்கும் அழியாத பயன் தருவது எனக்கருதி, 'வார்த்தை அறிபவர் மாயவர்காளன்றி ஆவரோ' எனக் கூறினார். ஆண்டாள் இச் சம்வாதத்தை 'மெய்மைப் பெரு வார்த்தை' என்று அடைமொழி தந்து குறிப்பிட்டாள். பொய்கையாழ்வார் "திறன் உரையே சிந்தித்து இரு" (திறன்வலி) எனச் சம்வாதத்தை வலிமை கொண்ட சொற்களாகப் பேசுகிறார்.

இந்தியாவில் மாத்திரமன்றி, பிற நாடுகளிலும் கீதா என்ற பெயரால் வழங்கும் இச்சம்வாதம் மஹாத்மா காந்தியடிகளின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. கீதையின் பண்பைத்

தெரிந்துகொண்டதிலிருந்து, கீதாபாராயணம் இல்லாமல் ஒரு நாள் கூட மகாத்மாவின் வாழ் நாளில் கழிந்ததில்லை, பக்தி என்னும் தோணிகொண்டு சதா கீதைக் கடலில் மூழ்கிய ஞானிகளின் மகாத்மா தலை சிறந்தவர். மூழ்கி எடுத்த உபதேசரத்னங்களை ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைக் கூட்டத்தின் போது அள்ளி வீசினார். அவ்வாறே வாழ்ந்து காட்டினார். கீதையின் கருத்தை உள்ளபடி உணர்ந்தோர், உடலையும் உயிரையும் எவ்வாறு பாவிப்பர் என்பதைத் தானே வீர மரணம் எய்தியும் காட்டினார்.

'கீதா கீதா' என்று ஓயாமல் சொல்லி வந்தால், 'தியாகீ தியாகீ' என்ற சொல் தோன்றும். அதிலிருந்து தியாக புத்தியும் உண்டாகும். என ஆசார்யர்களுள் ஒருவர் கூறுகிறார். கீதையில் திளைத்த மஹாத்மாவிடம் நாம் கண்ட தியாகத்தின் பெருமை எல்லையற்றது. சென்ற பல நூற்றாண்டுகளாக வாழ்ந்தவர்களில் மஹாத்மா தியாகராஜனாக விளங்குகிறார். பிறர் நலத்திற்காகத் தந்நலனைச் சிறிதளவாவது தியாகம் பண்ண உலக மக்கள் அனைவரும் தயாராக வேண்டும். அவ்வித தியாகத்திலேதான் உலக சுபிட்சம் தோன்ற முடியும் என்று அடிக்கடி கூறி வந்தார். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மஹாத்மா சென்னை நகரத்தில் ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது 'பகவத்கீதை படிப்பதற்காகவாவது நீங்கள் அனைவரும் வடமொழி பயின்றால் நான் மகிழ்ச்சியடைவேன்' என்று குறிப்பிட்டது நமது சிந்தைனைக்குரியது. கீதை படிப்போர் தமிழ்நாட்டில் மிகக் குறைவாயிருப்பதை நினைத்து மகாத்மா அவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். குறைவாயி ருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இந்தியாவில் பேசப்படும் பாஷைகளில் தமிழ் ஒன்றே வடமொழியோடு மிகமிகக் குறைந்த தொடர்புடையது. எழுத்து, ஒலி, பொருள், இலக்கணம் இவற்றில் வடமொழியிலிருந்து அதிகம் வேறுபட்டிருப்பதால் தமிழ் பேசுவோருக்கு கீதையைப்படித்தறியும் அளவிற்குக்கூட வடமொழி கற்பது கடினமான காரியமாகிறது. அதனால் 'பொருளிலும், அழகிலும், சாரத்திலும் மூலத்தோடு வேறுபடாமல் தமிழில் ஆக்கப்பட்ட கீதை நூல் இருந்தால் நமக்குச் சாதகம் ஆகும் எனப் பலர் நினைப்பது இயல்பு. ஆனால் சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன்னேரே அவ்வாறு ஆக்கப்பட்ட கீதை நூல் தமிழில் இருந்தும் நம்மவரில் பெரும்பாலோர் அதை அறியாமலிருக்க நேர்ந்தது. வட மொழியிலுள்ள ஒவ்வொரு கீதா ஸ்லோகமும் இந்நூலில் ஒவ்வொரு

வெண்பாப் பாட்டாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள வடமொழிப் பண்டிதர்களில் இத்தமிழ்ப் பாடல்களைச் சொல்லக் கேட்டு ஆச்சர்யப்படாதாரில்லை. ‘கடவுள் அவதாரம் போல் வடமொழி கீதையின் தமிழ் அவதாரம்’ என்று கொண்டாடுகின்றனர்.

‘தான் பெற்ற பேறு இவ்வையமும் பெறுக’ என்று சான்றோர்க்கு இயல்பாக வருகின்ற மஹாத்மா ஆசையைப் பூர்த்தி செய்யலாமே! ஆத்மானந்தம் பெற தமிழன் கீதை வெண்பாவைப் பயில பிரதி வாரமும் ஒரு சிறிது நேரமாவது செலவிடக்கூடாதா? கீதையைத் தமிழில் வெளியிட்ட ஆசிரியர் ‘வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர்’ என்று அழைக்கப்படுகிறார். இவருடன் தொடர்பு கொண்ட பக்தர்கள் நம்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை முதலியோர் இப்பக்தர்கள் கோஷ்டியில் கீதை ‘தேர்த்தட்டு வார்த்தை’ என்றே சொல்லப்பட்டது.

எப்பொருளிலும் தங்கியிருப்பவன் இறைவன். மனம் மொழி மெய்களைக் கடந்து நிற்பவர் கடவுள். எங்கும் ஒக்க வியாபித்து இருப்பவன் வாஸுதேவன். அத்தகைய பரம்பொருள், அனைவரும் காணும் உருவம் பெற்று, பாரத யுத்தத்தின் போது தன்மேன்மையைப் பாராது, சாரதியாகித் தேரின் கீழ்த் தட்டில் அமர்ந்தார். தனக்கு மேல் ஸ்தானத்தில் இட்ட ஆசனத்தில் அமர்ந்திருந்த அர்ஜுனனுக்குக் கிருஷ்ண பகவான் தலைப்பாகையணிந்து, கையில் சாட்டையேந்தி, தன் உடலில் புழுதிபடிய தேர்த்தட்டில் வீற்றிருந்த சாரத்ய நிலையையும், அதை மேற்கொண்ட காரணத்தையும் அடிக்கடி சுட்டிக்காட்டியே கீதோபதேசம் செய்தார். சாரதியாய் கீழ்த்தட்டில் அமர்ந்திருந்த தன் நிலையிலேயே சீலகுணமாகிய பகவத்தன்மையைக் காட்டினார். சாரமாகிய அப்பொருளையே கீதையில் விவரித்தார். ஆதலால், ஞானிகளும் பக்தர்களும் கீதையை ‘தேர்த்தட்டு வார்த்தை’ என்று விவரிப்பர்.

1. அகமும் குருடு

பாண்டவர் சேனையும், கௌரவ சேனையும் அணிவகுக்கப்பட்டு குருக்ஷேத்திரம் அடைந்தன. ராஜ்யாதிபத்தியத்திற்காகப் போராடுவதென்றே முடிவு செய்த பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தம் பரிவாரங்களோடு போர்க்களம் சென்றனர். அத்தருணத்தில் வியாஸரின் அருளால் போர்க்களத்தில் நடப்பன யாவற்றையும் கண்டறியவல்ல சக்தி பெற்றிருந்த சஞ்சயனைப் பிறவிக் குருடனாகிய திருதராஷ்டிரன் அணுகினான் ஒரு கேள்வியும் கேட்கிறான்.

தன்மநில மாகும் குருநிலத்துத் தாம் சேர்ந்து
வன்மை அமர் இச்சித்தென் மைந்தரும்தம்-தன்மையுறப்
பஞ்சவரும் என் செய்தார் ? என்றந்தன் பண்புரைப்பச்
சஞ்சயனும் சொன்னான் சமைந்து

(ப-ரை) வன்மை அமர் இச்சித்து – கொடிய போரை விரும்பி, தன்ம நிலம் ஆகும் குருநிலத்து – புண்ணிய பூமியாகிய குருக்ஷேத்திரத்தை, தாம் சேர்ந்து – தாங்கள் அடைந்து, என் மைந்தரும் – எனது புத்திரர்களும், தம்நன்மை உறப் பஞ்சவரும் – தமது அரசு பதவியை அடையப் பாண்டவர்களும், என் செய்தார்? – என்ன காரியம் செய்தார்கள்? – என்று அந்தன் பண்பு உரைப்ப – என்று பிறவிக் குருடனான திருதராஷ்ட்ரன் இயல்பு கேட்க, சஞ்சயனும் சமைந்து சொன்னான் – சஞ்சயனும் ஏற்ற பதில் சொன்னான்.

[4] தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:
மாமகா: [3] பாண்டவாஸ் சைவ கிமகுர்வத ஸஞ்சய.

(ப-ரை) ஸஞ்சய – ஸஞ்சயனே! தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே – புண்ணிய பூமியாகிய குருக்ஷேத்திரத்தில், யுயுத்ஸவ :– யுத்தம் செய்யவெண்ணி, ஸமவேதா :– கூடின, மாமகா : – எம்மவர்களும், பாண்டவாஸ்சைவ – பாண்டவர்களும் கூட, கிம குர்வத? – என்ன செய்தார்கள்?

தருமம் தோன்றுவதற்கும் ஏற்கனவே தோன்றியது வளர்வதற்கும், ஆகவித்துக்கு விளைநிலம் போல் விளங்கியதால் குருக்கள் வாழ்ந்த இடத்தை ‘தன்மநிலம்’ என்று குறிப்பிடுகிறார். போர் செய்யும் நோக்குடன் சென்ற போதிலும், தர்ம க்ஷேத்திரத்தின்

மகிமையால் 'அஹிம்ஸா தர்மம் தோன்றிப் போரை நிறுத்திவிட்டனரே,' என்ற ஐயங்கொண்டு இரு சாராரும் என்ன செய்தனர்? என்று குருடன் கேட்டான். தர்ம நோக்குடைய பாண்டவரும் தனக்கு மைந்தர் களாகவிருக்க அவர்களை வேறு பிரித்து என் மைந்தரும் களாகவிருக்க அவர்களை வேறு பிரித்து என் மைந்தரும் பஞ்ச வரும் என்று துரியோதனாதியரிடம் தனக்கிருக்கும் பேரபிமானத் தையும், பாண்டவர்களிடம் தனக்கிருக்கும் த்வேஷத்தையும் வெளிப்படுத்துகிறான். பாண்டவர் தரும நெறியில் செல்பவர். சாத்விகம் மிக்கவர். ஆதலின் யுத்தம் எப்படி நடந்தது? என்று கேட்பதைவிட்டு, நிலத்தின் மகிமையால் தன் மைந்தர்கள் தெளிவு பெற்று, பாண்டவர்ளிடமிருந்து வஞ்சனையால் ராஜ்யத்தை அபகரித்த பிழையை உணர்ந்து, அனுதாபத்தோடு போரின்றியே அந்த ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டால் தனக்கு நஷ்டமும் தொல்லையும் ஆகுமே என்று தடுமாற்றமடைந்திருப்பது 'என் செய்தார்?' என்ற கேள்வியில் நன்கு வெளியாகிறது. வெளிப் பார்வையிழந்த திருதராஷ்ட்ரன் புத்திர வாஞ்சை மேலிட்டு தர்மநோக்கு மிழந்திருக்கிறான் என்பது அவன் கேள்வியில் வெளியாவதால், பெயர் கூறாது அவனின் இருண்ட இருதயத்தையும் காட்ட 'அந்தன்' என்றார். அந்தன் கேட்ட கேள்வி அவன் மனோ நிலையை நன்கு வெளிப்படுத்தியதால், 'அந்தன் பண்புரைப்ப' எனப்பட்டது. எனவே, திருதராஷ்ட்ரன் புறத்திலும் குருடன்; அகத்திலும் குருடனாயிருப்பது கண்ட சஞ்சயன் நடுநிலை பிறழாது ஏற்ப பதில் சொன்னான்.

2. வஞ்சன் நெஞ்சம்

விருப்பு, வெறுப்புகளை வென்றதனால் சஞ்சயன் என்று பெயர் பெற்ற ஞானியிடம் 'என்மக்களும் பாண்டவரும் குருக்ஷேத்திரத்தையடைந்து என்ன செய்தார்கள்?' என்று அந்தன் கேட்டான். ஞான திருஷ்டியால் சஞ்சயன் அந்தனின் உள்ளக்கிடக்கையை அறிந்தான். தரும பூமியை அடைந்ததனால் மனம் தெளிந்து கௌரவர் அரசைக் கொடுத்துவிடுவரோ என்ற அச்சமே அந்தனை அவ்வாறு கேட்கத் தூண்டியது என்பதை அறிந்தேதான் சஞ்சயனும் பதில் கூறுகிறான். தர்ம பூமியைச் சேர்ந்தும் கௌரவர்கள் மனோபவத்தில் திருந்தவில்லை. பொறமையே கொண்டிருக்கிறார்கள்

என்பதாக ஆரம்பத்தில் துரியோதனனின் தீச்செயலையே வெளியிடுகிறான்.

***பாண்டவர்கள் தங்கள் படை வகுத்த பாங்கதனைப்
பூண்டுமிக நோக்கிப் பொறாமையினால் தூண்டுபரித்
துரோணன்பால் சென்றடைந்து செப்பினான்
தாரார் துரியோதனன்.***

(இ-ள்) தார் ஆர் துரியோதனன் – பூமாலை அணிந்த துரியோதனன், பாண்டவர்கள் தங்கள் படை வகுத்த – பாண்டவசேனை வியூகமாய் வகுப்பட்ட, பாங்கு அதனை – தன்மையை, பூண்டு மிக நோக்கி – நன்றாக உற்றுப்பார்த்து, பொறாமையினால் – மனம் தாங்காமாட்டாமல், பரிதூண்டு தேர் ஆர் துரோணன் பால் – குதிரை இழுக்கும் தேர்ப்படை நிறைந்த துரோணனிடம், சென்று அடைந்து – (தானே) போய்ச் சேர்ந்து, செப்பினான் – சொன்னான்.

*த்ருஷ்ட்வாது[3] பாண்ட[3]வ நீகம் வ்யூட[4]ம் து[3]ர்யோ[4]த[3]னஸ்ததா
ஆசார்யம் உபஸங்கம்ய ராஜா[3] வசந மப்ரவீத்[3]*

(இ-ள்) ராஜா துரியோதன: – அரசனாகிய துரியோதனன், வ்யூடம் – வியூகமாய வகுக்கப்பட்ட, பாண்டவாநீகம் – பாண்டவ சேனையே, த்ருஷ்ட்வா – பார்த்து, ஆசார்யம் – (துரோணராகிய) குருவை, உபஸங்கம்ய – அடைந்து வசனம் – வார்த்தையை, அப்ரவீத் – சொன்னான்.

துரியோதனன் வேந்தனாகையால், யாவரையும் தன்னிடம் அழைத்திருக்கலாம். பாண்டவசேனையைக் கண்டு பெரிதும் பயந்தானாதலால், அவ்வாறு செய்யாது பரபரப்புடன் தானே துரோணரிடம் சென்றான். சென்று செப்பினான் என்று கூறாமல், சென்றடைந்து செப்பினான் என்றதனால், தன்னைக் காக்கும் பொருட்டு வில்வித்தையில் தேர்ந்த துரோணரைத் துரியோதனன் சரணம் புகுந்தான் என்பதையும் சஞ்சயன் குருடனுக்குச் சுட்டிக்காட்டினான் என்பது குறிப்பு. ஆடையும் ஆரமும் அணிந்து டம்பமான ஆள் அலங்காரத்தோடு சரி; ஆண்மை, அழகு சிறிதும் இல்லாதவன் துரியோதனன் என்று இகழ்ச்சி தோன்றவே சஞ்சயன் ‘தாரார் துரியோதனன்’ என்று கூறினான்.

உள்ளத்தில் பொறாமை தோன்றினால் அதை அடுத்து ஆத்திரம் மூளும். அவ்வாத்திரம் அழிவு வேலையைச் செய்யப் பெரும்பாலும்

துணையும் தேடும். துரோணருக்குப் பாண்டவர்கள் பிரியமான சிஷ்யர்களாகையால், பாண்டவர்களின் வில் வன்மையைக் கண்டு மகிழ்ந்து துரோணர் போர் செய்யாமல் நின்றுவிடுவாரோ என்ற பயமும் துரியோதனுக்கு ஆத்திரம் மூண்ட உள்ளத்தில் கலந்தது. பாண்டவர் செயலை அவருக்கு அறிவித்துக் கோபம் மூட்ட முயன்றான். அதனால் தன் ஆத்திரம் வெளிப்பட துரோணருக்கும் ஆத்திரம் எழும் பொருட்டுத் தன் பேச்சை 'பார்' என்ற சொல்லை முதலில் வைத்துத் தொடங்குகிறான்.

பார்ஆ ரியனேயிப் பாண்டவர்கள் சேனையினைத்
தார்ஆரும் பாஞ்சாலன் தந்தமகன் - சீரார்
மதியுடைமை நீகொடுத்த வண்மையினால் காக்கும்
விதியுடைமை பூண்ட வியப்பு.

(இ-ள்) ஆரியனே!-பெரியோனே! இப்பாண்டவர்கள் சேனையினை- இப்பாண்டவர்கள் படையை, தார் ஆரும்-மாலை சூடிய, பாஞ்சாலன் தந்த மகன்-பாஞ்சால மன்னன் திருபதன் பெற்ற மகனாகிய திருஷ்டத்யும்னன், நீ கொடுத்த-நீ கற்றுக் கொடுத்ததால் (வந்த),சீர் ஆர்மதி உடைமை வண்மையினால்-சிறப்புப்பொருந்திய (போர் நுட்ப) அறிவுச் செல்வ வளமையின் உதவியால், காக்கும்-(தலைமை பூண்டு) நிர்வகிக்கும், விதி உடைமை பூண்ட வியப்பு-ஊழ் வினையோடு பிணைந்திருக்கிற ஆச்சரியத்தை, பார்-காண்பாய்.

பச்யைதாம் பாண்டு[3] புத்ராணாம் ஆசார்ய மஹதீம் சமூம்
வ்யூடாம்[3] த்ருபத[3] புத்ரேண[3] தவ சிஷ்யேண தீமதா[4].

(இ-ன்) ஆசார்ய - ஆசார்யனே! தவ சிஷ்யேண -உமக்குச் சிஷ்யனாய், தீமதா - புத்திசாலியான, த்ருபத புத்ரேண - பாஞ்சாலன் மைந்தனால், வ்யூடாம் - வியூகமாய் வகுக்கப்பட்ட, மஹதீம் - பெரிதான, ஏதம் - இந்த, பாண்டு புத்ராணாம் - பாண்டு மைந்தர்களான தரும புத்திராதியர்களின், சமூம்-சேனையை, பச்ய- பார்.

ஆசார்யராகத் தாங்களும் தங்களையொத்த மகானுபாவர்களும் இங்கிருக்க, அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எதிர்த்து நிற்கும் பாண்டவர்களின் பெரிதான இச்சேனையைத் தாங்களே பார்க்க வேணும் என்கிறான். தங்களை அவ்வளவு அவமதிப்பதோடு நின்று விடவில்லை. தங்களிடம் கற்றுப் போர் நுட்பம் தெரிந்து கொண்ட

தங்கள் சிஷ்யனையே படைத் தலைவனாகக் கொண்டு தங்களையே எதிர்க்கக் கோலினார்கள் என்று தெரிவித்து, ஆத்திரம் மூட்ட நீ கொடுத்த வண்மையினால் காக்கும்' என்று கூறுகிறான்.

திருஷ்டத்யும்னனின் தந்தை த்ருபதனுக்கும் துரோணருக்கு முள்ள உள்ள பழைய விரோதத்தை ஞாபகப்படுத்தித் தூரோணருக்குக் கோபமூட்டக் கருதினான். அதனால் த்ருஷ்டத்யும்னன் என்னது 'பாஞ்சாலன் தந்த மகன்' என்றது, துரியோதனனின் வஞ்சம் நிறைந்த நெஞ்சத்தையும், எதையும் தனக்குச் சாதகம் ஆக்கிக் கொள்ள முயலும் அவன் சாமர்த்தியத்தையும் நன்கு புலப்படுத்தும். 'சிஷ்யன் தானே,' என்று அலட்சியமாக விருத்தலாகாது எனக் கருதி, 'மதியுடைமையினால்' என்றான், பராக்காயிராது மேற்கொண்ட காரியத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்ததற்காகத் துரோணரை 'பார்' இச்சேனையை என்று சுட்டிக்காட்டிக் கவனத்தைத் தன் வழிதிருப்புவது நாடகவியல்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

'பார்' என்ற சொல்லில் துரியோதனன் படும் ஆற்றாமை கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் நன்கு தெரிகிறது. தந்தைக்குச் சத்துருவான உன்னைத் தனக்கும் சத்துருவாகக் கொண்டு உன்னைக் கொல்ல உன்னிடமே வித்தை கற்று கொல்லவும் எதிரே நிற்கிறானே திருஷ்டத்யும்னன், அவனல்லவோ புத்திமான்! உன்னை வதைக்கவே த்ருபதன் நோற்றுப் பெற்றான் என்பதை அறியாமல் பகைவன் மைந்தனுக்கு வித்தையைக் கொடுத்தாயே. அதனால் அவன் வலிமை பெற்றதாலன்றோ எனக்கு இவ்வாறு நேர்ந்தது? இந்த ஆற்றாமையை யாரிடம் சொல்வேன்! நீயே காணாய்! என்று ஓடும் உள்ளத்துணர்ச்சி நன்கு பிரதிபலிக்கக் காணலாம்.

எதிரே தோன்றும் காட்சி விசித்திரத்துக்கு எதைக் காரணமாகச் சொல்வது? விதியைத்தான் சொல்ல வேண்டும், என்று துரியோதனன் வெளியிடுவதை ஊன்றிக் கவனிக்க வேண்டும். எதிரே நின்ற திருஷ்டத்யுமானனாலேயே துரோணர் பாரதப் போரில் மாண்டார். 'இவனால் நீ இறக்க வேண்டிய விதி விசித்திர காட்சியில் கண்கூடாகத் தெரிவதை நீயே பார்' என்பதை போல் வார்த்தை வெளிவருவது நயத்திலும் நயம்.

3. பசு உருவத்தில் வந்த புலி

'பாரும் எதிரிகளின் படைவகுப்பை' என்று துரியோதனன் பேச்சைத் தொடங்கிய போது, துரோணர் அத்திசையை நோக்கினார். துரியோதனன் மேலும் சொல்லுகிறான். 'பாண்டவ சேனையில் ஒவ்வொருவரும் பீமனுக்கும், அர்ஜுனனுக்கும் சமமாயிருக்கின்றனர் பெரிய விற்களையும் பிற ஆயுதங்களையும் தாங்கியிருக்கும் யுயுதானன், விராடன், துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், புருஷஜித்து, குந்தி போஜன், சைப்யன், யுதாமந்யு, உத்தமௌஜா, சுபத்திரை மைந்தன், துரோபதை மக்கள் முதலிய தலைவர்களைப் பாரும் ஒவ்வொருவனும் பதினாயிரம் வில்லாளிகளை எதிர்க்ககூடிய மகாரதியாகவே இருக்கிறான்.

நமது சார்பிலோ, நீரும், பீஷ்மரும், கர்ணனும், கிருபாசாரியரும் இருக்கிறீர்கள். உங்களைப் போலவே என்பொருட்டு, உயிரைவிடத் துணிந்து ஆயுதம் தாங்கியவர்களாய் சயசாலியான அசுவத்தாமாவும், விகர்ணனும், பூரிசிரவசும், ஜயத்திரனும், வேறு பல வீரர்களும் பலசாலிகளாய் இருக்கின்றார்கள். எனினும், பீஷ்மரால் காக்கப்படுகிற நமது சேனை வலிமையற்றது. பீமனால் காக்கப்படுகிற பாண்டவ சேனையோ, அளவில் குறைந்த போதிலும், வலிமையுடையது. நீங்கள் எல்லோரும் அவரவர்க்குரிய இடங்களிலிருந்து கொண்டு பீஷ்மரையே எல்லாப் பக்கங்களிலும் காக்க வேண்டும் என்று துரியோதனன் கூற, அவனுக்கு உற்சாகமுண்டாக, பீஷ்மர் சிங்கநாதம் செய்து சங்கத்தை ஊதினார். பேரி முதலிய போர் வாத்தியங்கள் முழங்கின. வெண் குதிரை பூட்டிய தேரில் ஏறிய கிருஷ்ணனும் அர்ஜுனனும் சங்கத்தை ஊதினர். யுதிஷ்டிரர் முதலியோரும் தனித்தனியர்ய்ச் சங்கங்களை ஊதினர். இவ்வொலி எங்கும் பரவி, கௌரவர் நெஞ்சைப் பிளந்தது.

இரு சேனைகளும் வில்லேந்தி அம்பு விடும் வேளையில் அர்ஜுனன் கௌரவர்களை நோக்கி வில்வளைத்தான். அம்பு தொடுக்கு முன் தன் தேரை இரண்டு சேனைகளுக்கும் நடுவே கொண்டு போய் நிறுத்தச் சொல்லக், கிருஷ்ணனும்

என்று விசயன் இசைப்ப எழில்கண்ணன்
சென்றங் கிருபடையுள் தேர் நிறுத்தி - நின்றணியும்

பாட்டன் துரோணன்முன் பார்த்தனே பல் குருக்கள்
ஈட்டம்பார் என்றான் எடுத்து

(இ–ள்) என்று விசயன் இசைப்ப– (நடுவே நிறுத்து) என்று அர்ஜுனன் சொல்ல, எழில் கண்ணன்–அழகுடைய கிருஷ்ணன், இருபடையுள் சென்று–இரண்டு சேனைகளுக்கும் நடுவே போய் அங்குநின்ற அணியும் பாட்டன் துரோணன் முன் தேர் நிறுத்தி– அவ்விடத்தில் நின்றபடியே(போருக்கு ஆயத்தமாக ஆயுதங்களைப்) பூண்டு கொண்டிருந்த பீஷ்மர், துரோணர் முதலானோர் முன்னே தேரை நிறுத்தி, பார்த்தனே–அர்ஜுனா! பல்குருக்கள் ஈட்டம்பார்–கௌரவர் பலர் சேர்ந்த கூட்டத்தைக் காண்பாயாக (என்று), எடுத்து என்றால் – எடுத்துச் சொன்னான்.

ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ[3] குடாகேசேந[3]பா[4]ரத
ஸேநயோ[4] ருபயோர்[4] மத்யே ஸ்தா[2]பயித்வா ரதோ[2]த்தமம்
பீ[4]ஷ்ம த்[3]ரோண ப்ரமுகத: ஸர்வேஷாம்[2]ச மஹீக்ஷிதாம்
உவாச பார்த ப[2]ச்யைதாந் ஸமவேதாந் குரூநிதீ

(இ–ள்) ஸஞ்சயன் சொல்வது:– பாரத–திருதராஷ்டிரனே! ஹ்ருஷிகேச:– கிருஷ்ணனானவர், குடாகேசேந–அர்ஜுனனால், ஏவம் உக்த:–இவ்வாறு சொல்லப்பட்டு, உபயோ ஸேநயோ மத்ய–இரண்டு சேனைகளுக்கும் நடுவில், பீஷ்மத்ரோண ப்ரமுகத:– பீஷ்ம துரோணருக்கு முன்பும், ஸர் வேஷாம் மஹீக்ஷிதாம்ச – எல்லா அரசர்களுக்கு முன்பும், ரதோத்தமம் – சிறந்த ரதத்தை, ஸ்தாபயித்வா – நிறுத்தி பார்த்த – குந்தி புத்திரனே! ஸமவேதாந் – சேர்ந்திருக்கிற, ஏதாந் குருந் – இந்தக்கவுரவர்களை, பச்ய–பார், இதி உவாச – என்று சொன்னார்.

அர்ஜுனன் பெண்களைப் போலவே சோக மோகங்களுக்கு வசப்படக்கூடியவன் என்பதைக் கிருஷ்ணன் நன்கு அறிந்திருந்தார். வேறுவேறு பெயரிட்டழைக்காமல் அதற்கேற்ப 'பார்த்தனே' என்று விளித்தார். பிருதை என்னும் பெயருடைய குந்தி தேவியின் புத்திரன் என்பது பொருள். அர்ஜுனனை வியாஜமாக்கி கிருஷ்ண பகவான் உலக நன்மையின் பொருட்டு தத்துவத்தை வெளியிட வேண்டுமென்று கருதினார். அதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தைத் தோற்றுவிக்க விரும்பினார். அர்ஜுனன் உள்ளத்தில் தகாத கருணையும், அதன் காரணமாக சோக மோகத்தையும் உண்டாக்கும் பொருட்டு, எதிர் அணியில் அன்பிற்கும்

மரியாதைக்குமுரிய பிரதான புருஷர்கள் நன்கு தெரிய வேண்டும் என்று 'பல் குருக்கள் ஈட்டம்பார்' என்று எடுத்துக் கூறினார்.

அப்பொழுது அர்ஜீனன், தந்தையரையும், பாட்டன்மார்களையும், குருக்களையும், மாமன்மாரையும், சகோதரர்களையும், புதல்வர், பேரர், தோழர் முதலியோரையும் தனக்கு எதிரியாகப் போர் செய்யத் திரண்டிருப்பதைப் பார்த்தான். பலமுறை எண்ணிப் பின் செய்வதற்குத் துணிந்த போராகிய கருமத்திற்குத் தடையாக அர்ஜுனன் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி தோன்ற வாரம்பித்தது. அது வரவர அளவில் பெருகி, புறத்தோற்றத்தால் பெருங்கருணையென்றே அர்ஜுனன் நினைக்கும்படி யாயிற்று. அவ்வுணர்ச்சி தோன்றியதும, வளர்ந்ததும், வளர இடங்கொடுத்தவனைப் பற்றியதும், அப்பொழுது அவன் அடைந்த நிலையையும் கவிக்கண்ணாடியிலேதான் காண வேண்டும்.

மேவலராய் நின்றுஎதிர்ந்த மிக்கபெருஞ் சுற்றமாம்
காவலரை நோக்கிக் கவுந்தேயன்-நோவதனான்
மிக்கமனம் பேரிரக்க மேவிப் பிரான்முன்தான்
தக்கஉரை செய்தான் தளர்ந்து.

(இ-ள்) மேவலராய் நின்று – (ஐந்து வீடுகளும் கொடுக்க) உடன் படாதிருந்து, எதிர்ந்த – (சண்டையில்) எதிர்த்து வந்த மிக்க பெறும் சுற்றமாம் காவலரை – எண்ணில் மிகுந்த நெருங்கிய உறவினராகிய தலைவர்களை நோக்கி – பார்த்து, கவுந்தேயன்– குந்தி புத்திரன், பேர் இரக்கம் மேவி – பெருங்கருணை அடைந்து, அதனால் நோவுமிக்க மனம் – அதன் காரணமாக வேதனை அதிகரித்த மனம், தளர்ந்து – குன்றி, பிரான்முன்– கிருஷ்ணன் முன்னிலையில், தான் தக்க உரைசெய்தான் – அவன் (சோக மிகுதிக்குத்) தகுதியான வார்த்தை சொன்னான்.

தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேயஸ் ஸர்வாந்ப[3]ந்து[4]ந வஸ்தி[2]தாந்
க்ருபயா பரயா விஷ்டோ விஷீத[3]ந்நித[3]மப்[3]ரவீத்.

(இ-ள்) ஸ: கௌந்தேய :– அந்தக் குந்தி புத்திரன், அவஸ்தி தாந் – போர்களத்தில் இருந்த, தாந்ஸர்வாந் பந்தூந் – அந்த எல்லா பந்துக்களையும், ஸமீக்ஷ்ய – பார்த்து, பரயாக்ருபயா:– பெருங்கருணையால், ஆவிஷ்ட:– பற்றப்பட்டவனாய், விஷீதந்– துக்கித்துக் கொண்டு, இதம்–இந்த வார்த்தையை, அப்ரவீத் சொன்னான்.

அர்ஜுனன் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்ற மாட்டாமல் மனம் தளர்ந்து பின்வாங்கலானான். அதனால் பெண்கள் போல் அர்ஜுனன் பேதமையுடையவனாயிருத்தல் பற்றி 'குந்தியின் மைந்தன்' என்னும் பொருள்பட 'கவுந்தேயன்' என்றார்.

துரியோதனாதியர் தன் மனைவியை அரச சபையில், இழுத்துவந்து துகில் உரித்தது அவமதித்தனர். பதின்மூன்று வருஷ வனவாசத்திற்குப் பின் பாதி ராஜ்யம் கொடுப்பதாகச் சம்மதித்திருந்தும், ஐந்து வீடுகளும் கொடுக்க மறுத்தனர். அதனால் தன் இனத்தவரிடம் இரக்கமும் பகைவரிடம் கோபமும் கொண்டு போர் செய்வது நியாயம் என முடிவு செய்து, போர்க்களம் வந்தபின் அர்ஜுனனுக்குப் பகைவரிடம் இரக்கம் உண்டாயிற்று. அவ்விரக்கம், முன்னமே தன் மீதும், தன் மனைவி, சகோதரர் மீதும் கொண்ட இரக்கத்திற்குப் பாதகமாகி அதை வென்று அழித்து விட்டதால் 'பேர் இரக்கம்' எனப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் தீயகுணம் நற்குண வேஷம் பூண்டு வந்து ஏமாற்றுவதுண்டு. நீதிபதிக்கு, குற்றம் நன்குருஜுவான குற்றவாளிக்குத்தண்டனை விதிக்க வேண்டிய காலத்தில் தோன்றும் கருணையும், சட்டத்தை மீறுகிறவனைக் கைது செய்யும் போது போலீஸ் அதிகாரிக்கு அதற்குத்தடையாக மனதில் ஏற்படும் கருணையும் இந்த ரகத்தைச் சார்ந்ததே. யுத்தம் செய்வதைக் கடமையாகக் கொண்ட க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த அர்ஜுனன், தீவிரமான ஆலோசனைக்குப்பின் போரை மேற்கொண்டான். போர் செய்யும் தருணத்தில் சோகம் என்னும் புலி, கருணை என்ற பசுந்தோலைப் போற்றிக் கொண்டு அர்ஜுனனை ஏமாற்ற வந்தது.

4. சோகத்தில் வந்த மோகம்

கண்ணன் இரு சேனைகளுக்கும் நடுவே தேரை நிறுத்திய பொழுது அர்ஜுனன் தன்னை எதிர்க்கக்கூடியிருந்த உறவினர், நண்பர், ஆசாரியர் முதலியோரைப் பார்க்க அவன் மனதில் சோகம் பிறந்தது. அதனால் வேதனை மிகுந்தவனாகக் கண்ணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்:-

போர் புரிய வந்திருக்கும் இந்தச் சுற்றத்தாரைப் பார்த்து எனது அவயங்கள் சோர்வடைகின்றன. என் தேகம் நடுங்குகின்றது. மயிர்க்

கூச்சலும் உண்டாகிறது. காண்டீவம் கையிலிருந்து நழுவுகின்றது. உடலின் மேல் தோல் தவிக்கின்றது. உட்காரவும் சக்தி அற்றிருக்கிறேன். என் மனம் கலங்குகின்றது. தீச்சகுனங்களையும் காண்கிறேன் என்று சோகத்தால் பேசிய அர்ஜுனனுக்கு மனக்கலக்கம் உண்டாயிற்று. கலங்கிய மனம், ஏற்கனவே துணிந்து மேற்கொண்டிருந்த போரைக் கைவிடுவதற்கான போலிக் காரணங்களையும் காண ஆரம்பித்தது.

தன்தமரைக் கொன்று சமரத்துத் தான்சேரும்
நன்று தனையொன்றும் நான்காணேன்-கொன்ற
விசையமு நான்கண்ணனே வேண்டேன் அரசும்
அசைவில் வருஞ்சுகமும் ஆங்கு

கண்ணனே-கண்ணா! தன் தமரை – தனது உறவினரை, சமரத்துகொன்று-போரில் கொலை செய்து, தான் சேரும்-ஒருவன் அடையப்போகும், நன்றிதனை ஒன்றும்-நன்மை எதையும் நான் காணேன், கொன்ற விசையமும்-கொலை செய்து வந்த வெற்றியையும் நான் வேண்டேன், நான் விரும்பவில்லை, அரசும் அசைவில் வரும் சுகமும் (வேண்டேன்) – அவ்வாறே ராச்சியத்தையும் நிலையாக வரும் இன்பத்தையும் விரும்பவில்லை.

நச ச்ரேயோநு பச்யாமி ஹத்வா ஸ்வஜனம் ஆஹவே
நகாம்க்ஷே விஜயம் க்ருஷ்ண நச ராஜ்யம் ஸுகானிச 2

(இ-ள்) ஆஹவே – யுத்தத்தில், ஸ்வஜனம் – உறவினர்களை, ஹத்வா – கொன்று, அது – அதன் பிறகுச்ரேயச்ச – (அடையும்) மேன்மையை, நபச்யாமி நான் காணவில்லை, க்ருஷ்ண – கண்ணனே, விஜயம்-வெற்றியை, நகாம்க்ஷே(நான்) விரும்பவில்லை, ராஜ்யம் ச – அரசாட்சியையும் (விரும்பவில்லை).

சோக முதிர்ச்சியால் முன்னே கடமை என்று செய்யத் துணிந்த போரை அர்ஜுனன் கைவிட விரும்பினான். கைவிடுவதற்கான காரணங்களும் அவன் கலங்கிய உள்ளத்தில் தோன்றின. யாருக்காக ராஜ்யத்தைப் பெற்று வாழ வேண்டும் என்ற ஆசை உண்டாகுமோ அந்தக் குருக்கள் தந்தையர், புத்திரர் அங்ஙனமே பாட்டன்மார், அம்மான்கள், பேரர் மைத்துனர் உயிரையும் விடச் சித்தமாய் போரில் எதிரியாய் வந்தார்கள். அதனால் அவர்களைக் கொன்றுவரும் ஜயத்தால் ராச்சியத்தைப் பெற்றாலும் இம்மையில் பயன் கிட்டாது. யோகம் கைவரப்பெற்ற சந்நியாசியும், போரில் இறக்கும் வீரனுமே சூரிய

மண்டலத்தைப் பிளந்து கொண்டு போய்ச் சுவர்க்கத்தை அடைகின்றான் என ச்ருதி ஸம்ருதிகள் கூறுகின்றன. அதனால் போரில் பிறரைக் கொன்று தான் பிழைத்திருப்பவன் மறுமையில் யாதொரு பயனையும் பெறுவதில்லை. வெற்றி பெறுவதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த அர்ஜுனனுக்கு வெற்றி'இன்மையிலும் மறுமையிலும் பயன் அளியாது' என்று தோன்றியபொழுது விரும்பத் தகாததாயிற்று.

தன்னை அவர்கள் கொல்லவரினும் தான் கௌரவர்களைக் கொல்லப் போவதில்லை என்று மேலும் கூறிய அர்ஜுனன் எதிரிகள் பாவிகளாயினும் அவர்களை வதைப்பதால் தனக்குப் பாவமே வரும் எனக் கருதுகிறான்.

பாவிகளா மற்றிவரைக் கொன்றாலும் பாவமே
மேவும் எமை ஆதலின் இம்மேவலரைச் - சாவநினைந்
தேதமுயல் கிற்கிலோம் என்சுற்றம் கொன்றிங்கே
மாதவனே யாம்சுகிப்போம் வந்து

(இ-ள்) மாதவனே! - கண்ணா! பாவிகள் ஆம் இவரைக் கொன்றாலும் பாவிகளாயிருக்கிற இந்தக் கௌரவர்களைக் கொன்றாலும், எமை பாவமே மேவும்-எங்களைப் பாவம் தான் அடையும். ஆதலின் - ஆகையால், இம் மேலவரை - இப் பகைவர்களை, சாவ நினைத்து ஏதம் முயல்கிற்கிலோம் - கொல்ல எண்ணிக் குற்றத்தைச் செய்ய முயலமாட்டோம். இங்கே வந்து - இப்போர்க்கள மடைந்து, சுற்றம் கொன்று - உறவினரைக் கொன்று, யாம் என் சுகிப்போம்? நாங்கள் என்ன சுகத்தைப்பெறுவோம்?

நிஹத்ய தார்த்த ராஷ்ட்ராந்ந: காப்ரீதி ஸ்யாஜ் ஜனார்தன
பாப மேவாச்ரேயே தஸ்மாந் ஹத்வைதா நாத தாயிந:

(இ-ள்) ஜனார்தன! - கிருஷ்ணா! தார்த்த ராஷ்ட்ராந் - திருதராஷ்டிர புத்திரர்களை, நிஹத்ய-கொன்று, ந; நமக்கு, கா ப்ரீதி; ஸ்யாத்?- என்ன ப்ரீதி உண்டாகப் போகிறது?' ஆததாயிந; ஏதாந் - ஆததாயிகளான இவர்களை, ஹத்வா கொன்று, அஸ்மாந்-நம்மை, பாப மேவ - பாவமே, ஆச்ரயேத் - அடையும்.

தீவைப்பார், விஷம் இடுவார், கொலை செய்வார், நிலத்தை அபகரிப்பார், வழிப்பறி செய்வார், பிறன் மனைவியைக் காதலித்துச் செல்வார் என்ற அறுவகைப் பாவம் செய்தோர் ஆததாயிகள் எனப்படுவர். ஆததாயிகள் என்ற தன் பொருளைக் குறிப்பிடவே

'பாவிகள்' என்றார். இவ்வாறு கொடுஞ் செயல்களுமுள்ள துரியோதனாதியரை விசாரணையின்றிக் கொல்வது தருமமாயினும், தான் செய்ய மாட்டாமைக்கு மேலும் காரணம் கூறுகிறான்.

எதிரியாக வந்த கௌரவாதியர் பலர். மண்ணாசையால் விவேகம் குறைந்து குல நாசத்தாற் வரும் பாவத்தையும், மித்ர துரோகத்தின் பாதகத்தையும் அவர்கள் அறியவில்லை. போரில் பலர் இறந்தால் குல நாசமும் அதனால் அனாசாரமும் அதனால் பெண்களின் ஒழுக்கக் கேடும் ஏற்படும். பெண்களின் ஒழுக்கக் கேட்டால் வர்ணக் கலப்பு உண்டாகி அனாதியான குல தர்மங்கள் கெடும். அதனால் நரக வாசத்திற்கு ஏதுவாகும். இதை அறிந்து வைத்தும் இப்போரை நான் மேற்கொண்டால் நரகத்திற்கு ஆளாவேன். குலாசாரங்களை இழந்து மக்களை நரகத்துக்கு எய்துவித்து நானும் நரகம் செல்வதைவிட நிராயுதபாணியாகி இறப்பதே நல்லது. இதோவில்லை எறிந்து விட்டேன். எதிரிகள் என்னைக் கொல்லட்டும் என்று கூறி, வில்லை எறிந்து ரதத்தில் உட்கார்ந்தான்.

ஒருவன் பலருக்கு அன்னதானம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். கறிகாய்களில் உள்ள கிருமிகள் இறந்து போவது அவன் கண்ணில் பட்டது. ஜீவகாருண்யம் மேலிட்டது. அஹிம்சைக் கொள்கையே தர்மம் என்று அன்னதானத்தை வேண்டாம் என்று கைவிட்டு விட்டான்.

க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த அர்ஜுனனும் போரை மேற்கொண்டான். எதிரிகள் உறவினராயிருக்கக் கண்டு சோகம் தோன்றியது. சோக முதிர்ச்சியில் மோஹம் உண்டாயிற்று. அம் மோஹத்தால் தனக்குரிய கடமையையும், தர்மத்தையும் மறந்து சந்நியாசிகள் எல்லாக் காலங்களிலும் மேற்கொள்ளவேண்டிய அஹிம்சையைத் தனக்கு மேலான தர்மமாக நினைத்தார். அதனால் நன்கு ஆராய்ந்து ஏற்கனவே மேற்கொண்டிருந்த செயலையும் கைவிடலானான்.

5. சாரமும் பலனும்

மனதினால் தீர ஆலோசனை செய்த பின்னரே வாக்கினால் வெளியிட வேண்டும். அதைச் செயலாக ஆற்றும்போது கலக்கம் கொள்ளலாகாது. அர்ஜுனனோ போருக்கு ஸ்ஸந்நாஹம் செய்து போர்முனையை அடைந்தான், எதிரிகளாக வந்த பந்துமித்திரர்களைப் பார்த்த போது அவன் மனம் கலங்கிற்று. தென்றல் வீசும்பொழுது விசிறியின் அவசியம் இல்லாது போகிறது. அதே போல் விசேஷ தர்மத்தை மேற்கொண்டு போர் செய்ய வந்த க்ஷத்திரியனுக்கு ஸந்நியாசிகளின் விசேஷதர்மமாகிய அஹிம்சை, சாமான்ய தர்மமாக முடிவதால் அதை அனுஷ்டிக்க வேண்டிய அவசியம் இல்லாது போகிறது. போரில் உறவினரே பகைவராய்த் தோன்றினாலும், நோயினால் பருக்கும் உடல் இளைக்க மருந்துண்பது போலவும், உடலில் தோன்றிய கட்டியைக் கத்தி கொண்டு அறுப்பது போலவும், கொல்லுதல் க்ஷத்திரியனுக்குக் கடமையாகும். கலக்கத்தால் விவேகம் குன்றிய அர்ஜுனன் இவ்வுண்மையை உணரமாட்டாது எதிரிகளைப் பந்து மித்திரர்கள் எனக்கருதி போர் செய்ய மாட்டாமல் சோகம் கொண்டு தனது நிலையைக் கண்ணனிடம் தெரிவித்தான். இப்பகுதி கீதையில் 'விஷாத யோகம்' எனப் பெயர் பெறும். விஷாதம் என்னும் சொல் சோகம் என்று பொருள்படும். யோகம்– (நன்மையில்) சேர்ப்பது என்று பொருள் பட்டு, நேராகவாயினும், பரம்பரையாகவாயினும், முக்தியில் கொண்டு போய் சேர்க்கும் வழிகளையே விசேஷமாகக் குறிக்கும். அர்ஜுனனது சோகம் அவனை ப்ரும்ம வித்தையைக் கேட்டல் ஆகிற நன்மையிற் கொண்டு சேர்த்து முடிவாகப் பேரின்பமாகும், முக்திக்கும் சாதனம் ஆயிற்று. அதனால் 'அர்ஜுன விஷாத யோகம்' எனவும் சொல்லப்பட்டது.

பலனை விரும்பாது கருமத்தைச் செய்வதையே கீதை அடிக்கடி வற்புறுத்துகிறது. மஹாத்மா போன்ற பெரியோர்கள் அவ்வாறே கருமத்தை விடாது ஆற்றினார்கள். பலனை விரும்பாமலே தினந்தோறும் பகுதியாக வேறு பாராயணமும் செய்து வந்தார்கள். ஆனால் பலனை விரும்பிப் பாராயணம் செய்வார்க்குக் கீதையைப் போல் மிகமிக உயர்ந்த நன்மைகளைத் தரவல்லது வேறு எதுவும் இல்லை என்று பாத்ம புராணம் கூறுகிறது. கீதையின் ஒவ்வொரு

அத்தியாயத்திற்கும் உரிய பலன் ஒவ்வொரு கதையாகச் சொல்லப்படுகிறது.

பலனைக் கூறும் கதை

ஸுசர்மா என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் தன் மரபிற்குரிய வைதிக கர்மாக்களைச் செய்யாது அடியோடு விட்டான். உழவுத் தொழிலை மேற்கொண்டு மாமிஸகாரமும், மதுபானமும் செய்யலானான். ஊரார் 'பாவி' என்று நிந்திக்கும் படியான தீயகுணங்கள் அவனிடம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இவ்வாறு வாழ்ந்தவன் ஒரு நாள் திடீரெனப் பாம்பு கடித்திறந்தான்.

மறு உலகில் தன் பாபத்திற்கேற்ற நரக தண்டனைகளை அனுபவித்த பின்னர் பூமியில் ஒரு காளைமாடாகப் பிறந்தான். அக்காளை ஒரு நொண்டிக்கு உடைமையாயிருந்தது. அந்நொண்டி தன் வேலைகளைக் கவனிக்கஅக்காளையை உபயோகப்படுத்தி வந்த பொழுது, ஒரு நாள் கடும் வெய்யிலில் அவசர வேலைக்காக அக்காளையை அடித்து துரத்தி வேகமாக ஓட்டினான். கடும் வெய்யில் காரணமாகக் காளை களைத்தது. சரியான உணவும், நீரும் பெறாததால் கண்கள் சுழன்று பெரு மூச்சு விட ஆரம்பித்தது. அத்தருணத்தில் மாட்டுக்கார நொண்டியின் அடி அதிக வேதனை தரவே நிற்கவும் மாட்டாமல் வாயில் நுரை ததும்பக் கீழே விழுந்தது. சாகவும் மாட்டாமல் பிழைத்து எழுந்திருக்கவும் மாட்டாமல் காளை தாங்க முடியாத வேதனையை அடைந்தது.

அங்கு வந்த வழிப்போக்கர் பலர், கிடைகொள்ளாமல் தவித்த காளை மரணாவஸ்தையில் இருப்பதைக் கண்ணுற்றனர். நெடு நேரம் அவ்வாறே தவிப்பது கண்டு மனம் இரங்கித் தத்தம் புண்ணியத்தை அக்காளைக்கு அர்ப்பணம் செய்து அது நற்கதி பெறப் பிரார்த்தித்தனர். அப்பொழுதும் காளையின் வேதனை அதிகரித்ததே ஒழிய அது இறங்கவும் இல்லை. பிழைக்கவும் இல்லை. சிறிது நேரஞ் சென்ற பின் அவ்வழியாக ஒரு தரஸி வந்தாள். தனது புண்யத்தையும் இன்னதென்று அறிந்திராத ஞான சூன்யையாய் இருந்தாள். பிறர் தமது புண்யத்தை அர்ப்பணம் செய்வதைப் பார்த்து அவளும் விளையாட்டாய் தன் புண்யத்தை (அர்ப்பணம்) என்றாள். அந்த க்ஷணமே காளை கஷ்டமின்றி உயிரைவிட்டது. தாஸி அளித்த புண்ணியத்தின் காரணமாக, யம லோகத்தில் நன்கு வரவேற்கப்பெற்றது. நரகவேதனை எதுவும்

அடையாமல் உத்தம ஜன்மமாகிய மனித ஜன்மத்தில் அந்தணர் மரபில் பிறக்கும் பாக்கியம் பெற்றது. அந்தணர் மரபில் உதித்துத் தக்க வயதை அடைந்த போது பெரியோர் அருளால் முற்பிறப்பின் ஞாபகம் வந்தது.

அதனால் அவ்வந்தணன் தனக்கு மாட்டுப் பிறப்பில் உதவி செய்த வேசியிடம் சென்றான். தனக்கு அர்ப்பணம் செய்த புண்ணியம் யாதெனக் கேட்டான். அவள் எனக்கு எதுவும் தெரியாது. நான் வளர்க்கும் கிளியின் பேச்சு என்மனதை இழுக்கும். அதை மனம் உருகக் கேட்டேன். அதுவன்றி வேறு நற்செயல் எதுவும் என்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை என்றாள். முற்பிறப்பில் ஸுசர்மா எனப்பட்ட அவ்வந்தணன் உடனே அக்கிளியிடம் சென்று 'நீ யார்? நீ அடிக்கடி சொல்வது யாது?' அதை யாரிடம் கற்றாய்?' என்று கேட்டான். கிளி பதில் கூறியது.

முற்பிறப்பில் நான் மகா பண்டிதனாயிருந்தேன். அப்பொழுது கல்விக்கேற்ற ஒழுக்கமும், வினயமும் என்னிடம் இல்லை. பொறாமை கொண்டு பிற வித்வான்களை நிந்திப்பதில் என் பெரும் பொழுதைப் போக்கி வந்தேன். இறந்தபின் தீவினைக்கேற்ற தண்டனையை யமன் உலகில் அனுபவித்தபின் கிளியாகப் பிறந்தேன். பிறந்த பொழுதே தாயை இழந்து, உணவின்றித்தவித்த என்னை எடுத்து முனிவர்கள் கருணையோடு வளர்த்தனர். அங்கு முனிகுமாரர்கள் சொல்லும் கீதை முதல் அத்தியாயத்தை அடிக்கடி நான் கேட்பதுண்டு. கேட்டதையே நானும் அடிக்கடி கூறுவதுண்டு. ஒரு நாள் என்னை ஒரு வேடன் பிடித்து இத்தாஸியிடம் விற்றுவிட்டான். நான் இங்கு வந்தது முதல் முனி குமாரர்களிடம் கேட்ட கீதை முதல் அத்தியாத்தையே சொல்லி வருகிறேன். தாஸியால் உனக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது அவள் என்னிடம் கீதை முதல் அத்தியாத்தைக் கேட்டதின் பலனே ஆகும். முதல் அத்யாயச்ரவண பலத்தால் நீ காளைப்பிறப்பு நீங்கி உத்தமப்பிறப்பை பெற்றாய். நானும் இவ்வேசியும் நற்கதிப் பெறப் போகிறோம் என்று கூறியதும், கிளி தன்னுருவை விட்டு ஒளி வீசும் உடல் பெற்று விமானம் ஏறி வானுலகு சென்றது. வேசியும், அந்தணனும் அதைப் பாராயணம்.செய்து நற்கதி பெற்றனர்.

6. நீதியில் வளர்ந்த சோகம்

வில்லை எறிந்துவிட்டுத் தேர்த்தட்டில் உட்கார்ந்திருந்த அர்ஜுனன் கண்களிலிருந்து அருவி போல் நீர் பெருகிற்று. முகம் சோபை குன்றி விகாரமடைந்தது, நெஞ்சில் விபரீதமாகத் தோன்றிய கருணையில் வந்த துக்கத்தை நன்கு பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே அவன் முகம் காணப்பட்டது. இவற்றையறிந்த கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கட்டளை வடிவில் நீதியை உபதேசித்தார்.

எத்தாலே உன்னைத் தசாவிடத்தே இக்கலக்கம்
சத்தானார் சாராது சார்ந்ததுதான் இத்தாலே
மேலுலகம் இல்லை மிகுபழியாம் பார்த்தனே
ஏலுமதன் றேகா ணிது.

(இ-ள்) 'சத்தானார்' சாராது - ஞானிகள் அடையாத, இக் கலக்கம் - இந்த விபரீத ஞானம். தசா இடத்தே - தகாத காலத்தில், எத்தாலே உன்னைச் சார்ந்தது? - எவ்விதம் உன்னை வந்து அடைந்தது! இத்தாலே - இக் கலகத்தால், மேல் உலகம் இல்லை - மறுமையில் நன்மை இல்லை, மிகு பழியாம் -(இம்மையில்) மிகுந்த பழி உண்டாகும், பார்த்தனே! -அர்ஜீனா! இது - இவ்வாறு கலங்குவது, ஏலும் அதன்று காண் - பொருத்தம் அற்றது என்பதை அறிந்து கொள்.

குதஸ்த்வா கஸ்மல மிதம் விஷமே ஸமுபஸ்திதம்
அநார்யஜுஷ்டம் அஸ்வர்க்யம் அகீர்த்திகரம் அர்ஜுந.

(இ-ள்) அர்ஜுந-அர்ஜுநா!, அநார்மை;-தெரியாதவர்களால், ஜுஷ்டம் - போற்றப்படுவதும், அஸ்வர்க்யம்-ஸ்வர்க்கத்திற்கு விரோதியும், அகீர்த்தி கரம்-அபகீர்த்தியை உண்டாக்குவதும் (ஆகிய) இதம் கஸ்மலம் - இந்தச் சோகமானது. விஷமே - தகாத வேளையில் சங்கடத்தில்) குத; - ஏன், த்னா - உன்னை, ஸமுபஸ்திதம் - அடைந்தது?

உலகில் ஒவ்வொருவனும் ஒரு காரியத்தைச் செய்வதற்கு இச்சையே தூண்டு கோலாகவிருக்கும். நீ மேற் கொள்ளவிருக்கும் விபரீதச் செயல் மோக்ஷ இச்சையாலும் ஸ்வர்க்க இச்சையாலும் ஏற்பதற் கில்லை. கீர்த்தியில் இச்சை கொண்டும் ஏற்கத்தக்கில்லை. இம்மையின் பொருள், போகம் இவற்றில் இச்சையாலும் கொள்ளத்தக்கதில்லை. எந்த

விதமான ஆசைக்கும் இடமில்லாததால் இவ்விபரீத கலக்கம் உனக்கு எதனால் உண்டாயிற்று என்பார் 'எத்தாலே' என்றார். கீர்த்தியில் இச்சை இல்லாதவன். கீர்த்திதரும் செயலை விட்டிருக்கலாம். அச்செயலே பழிக்கிடமா குமானால் விடத்தகாது என்பதை ஆலோசித்து பார்த்தால் அறியலாகும் என்று கூறுவார். 'காண்' என்று கொண்ட கருமத்தை விடுவதால் வரும் இழிவைச் சிந்தித்தால் நீயே காண்பாய். ஆதலால் அச்சத்தை விடு. தாமதம் இன்றிப் போருக்கு எழு என்று கிருஷ்ணன் நீதியை தர்க்க ரீதியாகச் சுருங்க உபதேசித்தார். அதன் முடிவகைக் கட்டளை வடிவிலே 'எழு' 'உத்திஷ்ட' என்று வெளியிட்டார்.

அவ்வுத்திரவை அர்ஜுனன் அப்பொழுதே ஏற்றுக் கொள்ளத் தொடங்கி இருந்தால் நமக்குக் கிடைத்திருக்கும் பெரிய அளவில் கீதை தோன்றிராது. 'ஒன்றைச் செய், ஒன்றைச் செய்யாதே' என்ற தோரனையில் வரும் உபதேசம் நன்மை பயப்பதாயிருந்தாலும், எப்பொழுதும் உலகில் அனுஷ்டானமாக வருவதில்லை. அத்தகைய உபதேசங்களைச் சட்டத்தின் பெயரால் மக்களைக் கைக்கொள்ளுமாறு வற்புறுத்தினாலும் காரியகரமான இல்லை. இம்மையிலோ, மறுமையிலோ ஹிதம் பயக்கும் நீதிகளையும் விவேகத்திற்கியைந்த விஷயமாக்காமல் பயத்தாலும், நம்பிக்கையாலும், பலவந்தத்தாலுமே மேற்கொள்ள நேர்ந்தால் அது சோகத்தையே பெருக்கும்.

ஆகவே 'கர்மத்தை விட்டால் பழிவரும் கர்மத்தைக் கைக்கொள்' என்ற கிருஷ்ணனின் உபதேசம் அர்ஜுனனின் சோகத்தையே பெருக்கியது. கிருஷ்ணனின் உத்திரவுப்படிப் போர் செய்தால், நேரும் சம்பவங்களை நினைக்க நினைக்க அர்ஜுனனுக்குச் சோகம் வளர்ந்து கொண்டே போயிற்று. அவன் கிருஷ்ணனுக்குப் பதில் கூறும் வார்த்தைகளிலும் முன்னிலும் பன்மடங்கு சோகம் ததும்புவதைக் காணலாம்.

தொழப்படுமே லோரைத் தொலை யாதுலகில்
எழப்படுதல் நன்றே யிரப்பில் விழப்படுத்தி
வாய்ந்த பொருள் காமித்த மற்றவரை யக்குருதி
தோய்ந்ததுவோ போகத்தின் துய்ப்பு

(இ–ள்) தொழப்படுமேலோரை –வணங்கற்குரிய (தந்தை, ஆசாரியர் போலும்) பெரியோரை, தொலையாது – கொல்லாமல்

(விலகி), உலகில் இரப்பில் எழப்படுதல் நன்றே—உலகில் பிக்ஷை எடுப்பதை மேற்கொண்டு பிறரால் பரிகசிக்கப்படுவது சிறந்தது, வாய்ந்த பொருள் காமித்தவரை—அமைந்த பொருளில் ஆசை கொண்டவர்களை, விழப்படுத்தி—(போரில்) கொன்று, அக் குருதி தோய்ந்ததுவோ — இவ்விரத்தத்தில் முழுகி வருவதுதானா, போகத்தின் துய்ப்பு?— இன்பத்தின் அனுபவம்?

குரூந் அஹத்வாஹி மஹாநு பாவாந்
ஶ்ரேயோ போக்தும் பைக்ஷ மபீஹ லோகே
ஹத்வார்(த்)த காமாம்ஸ்து குரூந் இஹைவ
புஞ்ஜீய போகாந் ருதிரப்ரதிக் தாந்

(இ—ள்) மஹா நு பாவாந்—பெரியோர்களான. குரூந் — ஆசாரியர்களை, அஹத்வா—கொல்லாமல், இஹைவலோகே— இவ்வுலகத்தில், பைக்ஷம்—பிச்சை அன்னத்தை போக்தும் அபி— புசிப்பதும், ச்ரேய:ஹி— நல்லதல்லவா? அர்த்த காமாந்— செல்வத்தை விரும்பிய, குரூந்ஹத்வா — குருக்களைக் கொன்று, ருதிரப்ரதிக்தாந்— ரத்தத்தால் பூசப்பட்ட போகங்களை, இஹைவ—இங்கேயே, ஸ்தித்வா— இருந்து, கதம் புஞ்ஜீய — எப்படி அனுபவிப்பேன்?

'புகழை விரும்பிப் போரைச் செய், பழிக்கிடமாகப் போரைக் கைவிடாதே' என்ற கிருஷ்ணனின் உபதேசம் அர்ஜுனன் சோகத்தைப் பெருக்கியதோடு விபரீதமாகவும் கொள்ளத் தூண்டிற்று, புகழும் வேண்டாம், பழியும் வரட்டும் அதுவே நன்மை என்ற விபரீத உணர்வு உறுதிப்பட்டே அர்ஜுனன் கண்ணனுக்குப் பதில் கூறுகிறான். விபரீத உணர்வு உறுதிப்படப்பட, சோகம் பெருகுவது உலக இயற்கை. சோகப்பெருக்கில் வரும் கலக்கமே அர்ஜுனன் பேச்சில் பெரிதும் காணப்படுகிறது.

போரில் எதிரியாக நிற்போர் தான் வணங்கற்குரிய பெரியோர். அவர்களை வணங்காதிருத்தல் தவறு. அதனினும் தவறு, அவர்களைக் கொல்லுதல். அதனினும் தவறு, அவர்களைக் கொன்றதால் வரும் செல்வத்தைக் கொண்டு போகம் அனுபவித்தல் என்று அலைஅலையாய் அர்ஜுனன் உள்ளத்தில் நினைவுகள் எழுகின்றன. இதனடுவே தனக்கு வெற்றி வருவதாயினும் அதற்குமுன், தன் மரியாதைக் குரிய பெரியோருக்கு ஏற்படவிருக்கும் ஆபத்துக்களும் அவன் மனக் கண்ணுக்குப் புலனாகின்றன. அனைவரையும் வெட்டியும் குத்தியும் பெருகும் ரத்த வெள்ளத்தில் தான் நீந்தியே போகக் கரையை

அடையவிருக்கும் அவசியம் யுத்தம் செய்வதில் இருப்பது தெரிய வருகிறது. கத்தியும், ஈட்டியும், அம்பும் கொண்டு பெரியோர் உடலை அழிப்பது வெறுப்பிற்கும் சோகத்திற்கும் இடமாகிறது. அதுவே பழியாகவும் அர்ஜுனனுக்குத் தோன்றுவதால் போரைவிட்டுப் பிக்ஷையெடுத்துப் பழிக்கிடமாக வாழ்வது அதினும் மேல் என்று தோன்றவே 'உலகில் எழப்படுதல் நன்றே இரப்பில்' என்றான்.

சோகமிகுதியில் கலக்கமுற்றிருந்த அர்ஜுனன் எவ்வகையிலானும் தெளிவுபெற விரும்பினான். அதனால் தெளிவுபெற விரும்பிக் கண்ணனைச் சரண் புகுந்து தன்னைத் தேற்றுமாறு வேண்டினான். கண்ணன் அப்பொழுது அர்ஜுனன் பேச்சில் தோன்றிய சோகம் அபிமானமாகிய வேரைப் பற்றியிருப்பதக் கண்டு கொண்டார். அதை வேருடன் களையத் தீர்மானித்து உபதேசிக்க வாரம்பித்த பகுதியே சாங்க்ய யோகம் எனப்படுகிறது.

7. மரணத்திற்கு முன்னும் பின்னும்

கண்ணன் அர்ஜுனன் கொண்ட சோகத்தையும் கலக்கத்தையும் சொல்லக் கேட்டார். சோகத்திற் காதாரமான அபிமானத்தை அகற்ற எண்ணி மேலும் உபதேசம் செய்யத் தொடங்கினார். விவேகத்திற்கிட மில்லாத அர்ஜுனனின் சோகப் பேச்சுக் கண்ணனுக்குச் சிரிப்பையே உண்டாக்கிவிட்டது. அதனால் சிரித்துக் கொண்டே பேசியதாக 'முறுவலிப்பான் போல், ப்ரஹஸந் இவ' எனச் சொல்லப் படுகிறது.

சோதிக்க லாதவற்றைச் சோகித்தாய் தொல்லறிவி
லாகப் படிபகர்வ தாகின்றா-யோகத்தான்
மாயு முயுர்ளையு மாயா வுயிர்களையு
மாயுமவர் சோகியா ராங்கு.

(இ–ள்) சோகிக்க லாக வற்றைச் சோகித்தாய் – துக்கப்படத்தகாதவைகளைக் குறித்துத் துக்கப் பட்டாய். தொல்லறிவில் ஆகப்படி பகர்வது ஆகின்றாய் – ஞான சாஸ்திர வாதங்களையும் பேசுகிறாய். யோகத்தான் – யோக அறிவு காரணமாக மாயும் உயிர்களையும் – அழியும் தேகங்களைப் பற்றியும், மாயா உயிர்களையும் – அழியாத ஜீவாத்மாக்களைப்பற்றியும். ஆயும் அவர் – ஆராயும் பண்டிதர்கள். சோகியார் – துக்கிக்க மாட்டார்கள் (ஆங்கு–அசை)

அஸோச்யாந் அந்வஸோச ஸ்த்வம் ப்ரஜ்ஞா வாதாம்ஸ்ச பாஷஸே
கதாஸூந் அகதா ஸூம்ஸ்ச நாநு ஸோசந்தி பண்டிதா:

(இ-ள்) அர்ஜுந-அர்ஜுந! தவம்-நீ, அசோச்யாந் - துக்கிக்கத்தகாதவர்களைக் குறித்து அந்வசோச: - துக்கித்தாய், ப்ரஜ்ஞாவாதாஞ்ச - ஞானவரதங் களையும், பாஷஸே- பேசுகிறாய், கதாஸூந்-அநித்தியங்களைப் பற்றியும், அகதாஸூந் - நித்திய (ஜீவாத்மா)ங்களைப் பற்றியும், பண்டிதா: - தெரிந்த வர்கள், நஅநு சோகந்தி - துக்கிக்கமாட்டார்கள்.

வாழ்வு, இறப்பு ஆகிய இரண்டில் ஏதேனுமொன்றை ஏற்கத் தயாராகிப் போர் செய்ய வந்த எதிரிகளைக் குறித்து, அர்ஜீனன் துக்கம் கொண்டான் அல்லவா? அதையே கண்ணன் சுட்டிக் காட்டிக் காட்டுவதற்காக 'சோகிக்கலாதவற்றைச் சோதித்தாய்' என்றார் அல்லது 'மரியாதை செய்யத் தகுந்த பீஷ்மத் துரோணர் மரணத்தை விரும்பியே நற்கதி பெறலாம்' என்று வந்திருக்கும் போது அவர்களின் மரணம் துக்கத்திற்கு விஷயமில்லை. அப்படியிருந்தும் துக்கித்தாயே' என்று பரிகாசமாகக் கூறியதாகவுமாம். விபரீத உணர்வும் கலக்கமும் வந்தபோது ஆசாரியனை அண்டி வணங்கி வினையமாகத் தன்னைத் தெளிவுறச் செய்ய வேணுமென்று பிரார்த்திக்கும்படிச் சாஸ்திரம் கூறுகிறாரே அர்ஜுனன் கண்ணனை வணங்கித் தன்னை அறிவுறுத்த வேண்டினான். அதனால் 'தொல்லறிவில் ஆகப்படி பகர்வதாகின்றாய்' என்று கண்ணன் கூறினார். இருப்பவர், இறப்பவர் இரு சாரரையும் கவலைக்கு விஷயமாக்காமல் யோக சாஸ்திர ஞானத்தால் தேகாத்ம விவேகம் உடையவர் ஒரே மாதிரியாகவே காண்பர்' என்று முடிவில் கூறினார். அவ்வாறு காண்பதற்குக் காரணம் அடுத்து வரும் செய்யுளில் சுருக்கமாகக் கூறப்படுகிறது. இக்கருத்து பற்றி வரும் சுலோகம் நம் நாட்டுப் பிரபல ஆசாரியர்களால் பெரிதும் விவாதிக்கப்பட்டு வெவ்வேறான அபிப்பிராயங்களும் கூற இடம் தருகிறது. கீதையில் நமது ஆழ்ந்த சிந்தனைக் குள்ளாக்க வேண்டிய பகுதிகளில் இதுவும் ஒன்று.

இறையாகிய யானும் இவ்வுயிரா நீயும்
முறையால் அரசர்இவர் முற்று - மறையாலே
முந்நாளும் இன்மையிலை முற்றுமிதன் மேலாகும்
எந்நாளும் இன்மையிலை யாம்.

(இ–ள்) இறையாகியானும்–தலைவனாகிய நானும், இ உயிரா நீயும் முறையால் அரசர் இவர் முற்றும் – இந்த உயிராகிய நீயும் வரிசையாக வந்திருக்கிற அரசர்(தலைவர்) முதலிய அனைவரும், மறையாலே – வேதப் பிரமாணமாக, முன்னாளும் இன்மை இலை– சென்ற காலங்களில் எல்லாம் இல்லாமல் இருக்கவில்லை. இதன் மேலாகும் எந்நாளும் – இதற்கு மேல் வரப்போகிற காலங்களில் எல்லாம், யாம் முற்றும் – நாம் அனைவரும், இன்மை இலை – இல்லாமல் இருக்கப் போவதில்லை.

நத்வே வாஹம் ஜாது நாஸம் நத்வந்நேமே ஜநாதிபா:
தசைவ நபவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்.

(இ–ள்) அஹம் ஜாது – நான் ஒருக்காலும், நாஸம் இதி ந – இல்லாதிருந்தேன் இல்லை, த்வம் – நீயும் (ஜாது நாஸி:) ந– ஒருக்காலும் இல்லை என்றில்லை, இமே ஜநாதிபா:– இந்த ராஜாக்கள், (ஜாது க ஆஸந்) ந – ஒருக்காலும் இல்லை என்றில்லை, ஸர்வே வயம் – நாம் எல்லோரும், அத: பரம்–இனிமேலும், நச பவிஷ்யாம (இதி) நைவ – இருக்கப்போகிறதில்லை என்று இல்லவே இல்லை.

'ஒருவன் அல்லது ஒருத்தி எனச் சொல்லப்படுவர் யாவரும் ஒருமுறை பிறந்து வாழ்ந்து இறந்தபின் இருப்பதில்லை' என்ற எண்ணமே மனத்தில் எல்லோருக்கும் தடித்திருக்கிறது 'முன்னே இல்லாமல் பிறக்கமுடியுமா?' தோன்றியது மறையும் அல்லது விகாரப் படுமேமொழிய இல்லாமலே போகுமா? என்ற சிந்தைக்கு இடம் கொடாமலே பலர் வாழ்வதால் மரணத்திற்குப் பிந்திய காலங்களும், பிறப்பிற்கு முந்திய காலங்களும் பலருக்குப் புரியாத ரகசியமாகவே இருக்கின்றன. அதனால் ஒருவனின் மரணம் அவனிடம் அபிமானம் கொண்ட பலருக்குத் துக்கத்தையும் பயத்தையும் விளைவிக்கிறது. அதைப்பரிகரிக்கவே நான்,நீ,அவன் என்று விவரிக்கப்படுகிற எல்லோரும் மரணத்திற்கு முன் சென்ற எல்லாக் காலங்களிலும், மரணத்திற்குப் பின் வரப்போகிற எல்லாக்காலங்களிலும் ஆக முக்காலங்களிலும் இடையீடின்றி இருக்கவே செய்கிறார்கள் என்று கண்ணன் கூறினார்.

மூன்று சித்தாந்தங்கள்

அழியாத விகாரமின்றி ஒருபடித்தாயிருக்கும் வஸ்து ஒன்று என்றும் பல என்று கூறும் வாக்கியங்கள் உபநிஷத்துக்களிலும், வியாஸர் இயற்றிய ப்ரும்ம சூத்திரத்திலும் காணப்படுகின்றன. 'வஸ்து'

ஒன்று என்றே சொல்லும் வாக்கியங்களைப் பிரதானமாகக் கொண்டு பல என்று வரும் வாக்கியங்களை அவற்றிற்குச் சேரப் பொருள் செய்து கொண்ட சித்தாந்தம் அத்வைதம் ஆகும். வஸ்துவைப் பலவாகக் கூறும் வாக்கியங்களுக்குப் பிராதான்யம் கொடுத்து அவற்றிக்குச் சேர ஒன்று என்று வரும் வாக்கியங்களை பொருள் செய்து கொண்ட சித்தாந்தம் த்வைதமாகும். ஒன்று என்றும், பல என்றும் வரும் எல்லா வாக்கியங்களுக்கும் சமமாகப் பிராதான்யம் கொடுத்து தன்னை யொழியப் பிறவற்றைத் தனக்கு அங்கமாகக் கொண்டு, தான் ஒன்றே அங்கி என்று கொண்ட சித்தாந்தம் விசிஷ்டாத்வைதமாகும். சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளுவதற்கு மேற்கூறிய சித்தாந்தங்களை இரண்டாகவும் பிரித்துக் கொள்ளலாம். நித்திய வஸ்துவாகிய ஆத்மா அல்லது ப்ரும்மம், ஜீவர்களில் இருந்து வேறுபடாத ஒரே வஸ்து என்றும், ஜீவர்கள் பலவாக பேதப்பட்டுத் தோற்றுவதற்குத் தேகவேறுபாடுகளே காரணம் என்றும் அவ்வேறுபாட்டுக்காகக் காரணம் அஞ்ஞானம் அல்லது மாயையே என்றும் கூறுவோரை அபேவாதிகள் என்று கூறலாம். நித்தியமான பரமாத்மா நித்தியமாய்ப் பலவாயிருக்கும் ஜீவாத்மாக்களினின்றும் வேறுபட்டது என்போரைப் பேதவாதிகள் என்று கூறலாம். அத்வைதத்தைப் பிரபலப்படுத்திய சங்கரரும் வசிஷ்டாத்வைத்தைப் பிரபலப்படுத்திய ராமானுஜரும், த்வைத்தைப் பிரபலப் படுத்திய பெரியோர்களும் கீதை உரை எழுதியுள்ளார்கள். இச்சுலோகத்திற்கு அவர்கள் கூறிய உரையின் சுருக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

(ச–ங்) 'நானும் நீயும் இந்த அரசர்களும் ஆகிய நாமெல்லோரும் தேகம் அழிந்த பின்னும் எப்பொழுதும் இருக்கிறோம் என்ற பொருள் படவரும் இதிற் பிரயோகிக்கப்பட்டிருக்கிற பன்மை பதங்கள் தேகத்தைப்பற்றியவைகளேயாகும். ஆத்மாவைப் பற்றியவையல்ல. பல தேகங்களிலும் உள்ள ஆத்மா ஒன்றே, அவ்வாறே நீ, நான், என்று பேதப்படுத்திப் பேசியதைத் தேகங்களைப்பற்றி வந்ததாகக் கொள்க. (அத்வைதம்)

(ராமானுஜர்) 'பரமாத்மாவாகிய நான் எப்படி நித்தியமாயிருக்கிறேனோ, அப்படியே ஜீவாத்மாக் களாகிய நீங்களும் நித்தியராயிருக்கிறீர்கள்' என்று பகவான் கூறுகிறார். இதனால் பரமாத்மாவாகிய ஸர்வேச்வரனிடத்திலிருந்து ஜீவாத்மாக்கள் ஒவ்வொன்றுக்கும் பரஸ்பர பேதம் உண்மை என்று பகவான்

அருளியதாகவே கொள்ள வேண்டும். மோகம் அடைந்து கலங்கிய அர்ஜுனனுக்கு கண்ணன் ஆத்ம சொரூப நிச்சய தத்துவத்தை உபதேசிக்கிறார். இத்தருணத்தில் 'நான், நீ, இந்த ராஜாக்கள்' என்றும் 'நாமெல்லோரும்' என்றும் பகவான் சொல்லுவதால் பேத தத்துவமே சத்தியம் என விளங்குகிறது. ஆத்மாவில் பேதம், அஞ்ஞானம் அல்லது பொய், உபாதியால் கற்பிக்கப்பட்டது என்றால், உள்ளபடியே ஆத்ம தத்துவத்தை உபதேசிக்கப் புகுந்த பகவான் பொய்யாகிய பேத ஞானத்தை உபதேசித்தார் என்பது அசம்பாவிதம் அபேதம் உண்மையானால் சுத்த நித்திய ஞான சொரூபனான பகவானுக்கு, தத்துவத்தை உபதேசிக்கும் காலத்தில் 'நீ, நான், இந்த ராஜாக்கள், என்னும் பேத ஞானம் இருத்தல் கூடாது. இருப்பின், பகவானை சர்வக்ஞன், மாயா தீதன், ஞானத்தையே சொரூபமாகவுடையவன் என்ற வேதத்திற் கொண்டாடுகின்ற வாக்கியங்கள் பொய்யாகும். 'பகவானும் அர்ஜுனனும் வேறல்லர்' என்றால் சர்வக்ஞனாகிய பகவான் உபதேசிக்க வேண்டியதில்லை. கண்ணனும் தன்னைச் சரணமடைந்த அர்ஜுனனைப்போல் அஞ்ஞானியாயின், உபதேசம் செய்வதில் பயனுமில்லை. ஆக இப்பகுதியால் பேதமே உண்மையெனக்கொண்டு உபதேசித்ததாத் தோற்றுகிறது. (விசிஷ்டாத்வைதம்)

(ராக) பரமாத்மா போல ஜீவனும் நித்யம். தேகமே அழியும் சுபாவமுடையது. தேகத்தைப் பெறுவதும் விடுவதும் ஜீவனுக்கு இடைவிடாத காரியமாயிருக்கிறது. ஆகவே அழியும் இயல்புடைய உடலைப்பற்றி நீ வருந்த வேண்டாம். (த்வைதம்)

'தேகம்பெறு முன்னும் தேகம் அழிந்த பின்னும் தேகம்' இருக்கும் போதும் ஆக முக்காலங்களிலும் அழியாத 'நான், நீ' என்னும் விவகாரயோமான உயிர் இருந்து கொண்டே வருகிறது' என்று கண்ணன் கூறியதாக எல்லா சித்தாந்திகளும் ஏகமனதாக ஒப்புக் கொள்கின்றனர். அப்படியானால் மரணம் என்பது என்ன? மரண காலத்தில் ஒருவனுக்கு என்ன சம்பவிக்கிறது? என்ற கேள்விகள் எழுகிறதல்லவா அடுத்த படியாக அக்கேள்விகளுக்கே விடையளிக்கிறார்.

8. பருவம் மாறினால் அழுவதா?

தென்றலும் சிறிதுளியும் கலந்து வீசும் வசந்த காலம். அதிக உஷ்ணமும், அதிகக் குளிரும் இல்லாததால் எல்லோருக்கும் இன்பகரமாகவே இருக்கிறது. ஆனால் அப்பருவம் நிலைத்திருப்ப தில்லையே! உடனே மழைக்காலம். அது நீங்கப் பணி மிகுந்த குளிர் காலம். அது நீங்கி வெப்பம் மிகுந்த கோடைகாலம் என்று பருவ நிலைகள் மாறிக் கொண்டே போகின்றன. வெப்பம் தாங்க முடியாத கோடை வரப்போகிறதே, என்ன செய்வது என்று ஒருவன் அழுதால் பயன் உண்டா? அதனால் வரப் போகும் பருவம் வராது தடைப்பட்டு நிற்குமோ?

அவ்வாறே, தோன்றிய உடல் சிறிது காலத்திற்கு வளர்ந்து கொண்டே போகும் பால்யப் பருவத்தைப் பெற்றிருக்கிறது. பின்னர் வளராது முன்னைய நிலையிலேயே பெற்ற வலிமையும் தோற்றமும் குன்றாது சிறிது காலத்திற்கு இளமைப்பருவத்தை அடைந்து நிற்கிறது. முடிவில் வலிமையும் அழகும் குறைந்து கொண்டே போகும் முதுமைப் பருவத்தை அடைகிறது. பால்யம், இளமை, மூப்பு என்று உடலுக்கு இவ்வாறு மாறிவரும் பருவங்களைத் தடுக்க முடியுமா? மாறப்போகிறதே என்று மனம் கலங்குவதா? 'இதே போன்ற நிகழ்ச்சி தான் மரணத்தின் போது உயிருக்கும் சம்பவிக்கிறது' என்கிறார்.

இந்தவுயிர் கௌமாரம் யௌவனம்மூப் பென்பவற்றை
வந்தஉடல் நின்று மருவுதல்போல் - அந்த உயிர்
வேறுடல மேவுதலு மித்தன்மைய தாங்கதனைத்
தேறுமவர் தாம்கலங்கார் தீர்ந்து.

(இ-ள்) இந்த உயிர்-பிறந்தான் இறந்தான் எனப்படும) இந்த உயிர், வந்த உடல் நின்று - (பிறப்பில் தனக்கு) கிடைத்த தேகத்தின் மூலமாக, கௌமாரம் - பால்யப்பருவம், யௌவனம் - இளமை அல்லது மத்திய பருவம், மூப்பு - கிழப்பருவம், என்பவற்றை - என்ற நிலைகளை, மருவுதல் போல் - அடைவது போல் அந்த உயிர் - (முன் குறிக்கப்பட்ட) அந்த உயிர், வேறு உடலம் மேவுதலும் இத்தன்மையது - வேறு தேகத்தைப் பெறுவதும் இது போன்றதே, அதனை தேறும் அவர் - அந்த உண்மையைத் தெளிந்து கொண்டவர், தீர்ந்து - (தடுக்கமுடியாத

நிகழ்ச்சி என்று) உணர்ந்து, தாம் கலங்கார் – தாங்கள் கவலைப்படமாட்டார்.

தே[3]ஹிநோஸ்மிந் யதா[2] தே[3]ஹே கௌமாரம் யௌவநம் ஜரா
ததா[2] தே[3]ஹாந்தரப்ராப்தி: தீ[4]ர: தத்ர நமுஹ்யதி

(இ–ள்) அஸ்முந்தேஹே – இந்த சரீரத்தில், தேஹிந: – சரீரியான உயிருக்கு, கௌமாரம் – பால்யமும், யௌவனம் – வாலிபமும், ஜரா – கிழத்தனமும். யதா – எப்படியோ, ததா–அப்படியே, தேஹாந்தர ப்ராப்தி:– வேறு தேஹம் வருவது ஆகும், தத்ர – அவ்விஷயத்தில், தீர:–புத்திமான், நமுஹ்யதி – மோகமடையமாட்டான்.

உடல் ஒரு பருவத்தை விட்டு வேறு பருவத்தைப் பெறுவது போல் உயிர் மரண காலத்தில் ஒரு உடலை விட்டு வேறு உடலை அடைகிறது. காரில் ஒருவன் சென்று கொண்டே இருக்கிறான். நாளடைவில் காரின் உறுப்புகள் தேய்ந்து போகின்றன. உபயோகத்திற்குத் தகுதி இல்லாமல் போகிறது. அந்த நிலையில் உபயோகித்த காரை விட்டுவிட்டுப் புதிய காரை வாங்கி உபயோகிக்கவில்லையா? பழைய வீட்டைவிட்டுப் புதிய வீட்டில் பிரவேசிப்பது இல்லையா? அதேபோல் உயிரும் புதிய தேகத்தைக் கிரகிக்கிறது. இதில் எல்லாப் பருவங்களையும் உடல் அடைந்து அனுபவித்தப்பின் தான் அதை விட்டுப்புதிய உடலை உயிர் பற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. உயர்ந்த விலையுள்ள காரைத் தனக்கென்று வைத்துச் சமாளிக்க முடியாதவர் என்ன செய்கிறார்கள்? கார் நல்ல நிலையில் இருக்கும் போதே அதைக் கொடுத்துவிட்டு, மட்ட ரகமான வேறொன்றை வாங்கிக்கொள்ளுகிறார்கள். வசதி அதிகம் உள்ளவர்கள் உள்ளதைவிட்டு அதைவிட விலை உயர்ந்ததொன்றை வாங்கிக்கொள்கிறார்கள். தேய்வும் அழிவும் வீட்டிற்கோ அல்லது வாகனத்திற்கோ வந்தாலும், அவற்றையுடையவனுக்கு வருவதில்லை. அதே போல் பருவ மாறுதல்களும், பிறப்பும், இறப்பும் தேகங்களுக்கு வந்தாலும், அவற்றைப் பெற்றிருக்கிற உயிருக்கு ஒன்றும் ஏற்படுவதில்லை. உயிர் எத்தகையது!

நில்லா வுடலகத்து நிற்குமுயிர் சத்ததனால்
இல்லாத துக்குஉண்மை இல்லை உண் மைக்-இல்லாத
தென்று இரண்டின் ஈறுகண்டேய்ந்தவத் தத்துவத்தை
நின்று என்றுங் காண்பார் நிகழ்ந்து

(இ—ள்) நில்லா உடல் அகத்து— அழியும் தன்மை வாய்ந்த உடலில், நிற்கும் உயிர் – நிற்கின்ற உயிர், சத்து— சத்து அல்லது உண்மையாகச் சொல்லப்படுகிறது. அதனால் – ஆகையால் இல்லாததுக்கு உண்மை இல்லை – அசத்து எனப்படும். இல்லாப் பொருளுக்கு உண்மை நிலை இல்லை, உண்மைக்கு இல்லாதது இல்லை, – சத்திற்கு இன்மை நிலை இல்லை, என்று இரண்டின் ஈறு கண்டு – என்று பொருள்களின் இரு வேறு நிலைகளை ஆராய்ந்து, ஏய்ந்த தத்துவத்தை – பொருந்திய உண்மையை (பெரியோர்) நின்று நிகழ்ந்து —பெரியோர்கள் நிதானமாய் உறுதியாய், என்றும் காண்பார் – எப்பொழுதும் அறிந்து கொள்வார்கள். (குறிப்பு உண்மைக்கு இல்லாதது இல்லை, பெரியோர் கோடிட்ட சொற்களை வருவித்தே பொருள் கொள்ள வேண்டும்).

நாஸதோ வித்[3]யதே பா[4]வோ நாபா[4]வோ வித்[3]யதே ஸத:
உ_பயோரபி த்[3]ருஷ்டோந்த ஸ்த்வன இயோ ஸ்தத் வ[3]தர்[4]சிபி

(இ—ள்) அஸத:— இல்லாததற்கு; பாவ:—நவித்ப – இருப்பு இல்லை, ஸத;—ஸத்துக்கு, ஆத்மாவுக்கு, அபாவ: நவித்யதே – இன்மை இல்லை. அநபோ உபயோ:—இவ்விரண்டுக்கும் அந்த:— பொ .ருள்களின் நிலை இதுதான் என்ற முடிவு. தத்வதர் சிபி—தத்வமறிந்தவர்களால், த்ருஷ்ட:— கண்டு கொள்ளப் பட்டது.

தத்துவ தரிசிகள் பொருள்களை நித்தியம், அநித்தியம் என்று இரண்டாகப் பிரித்துக் கூறுகிறார்கள். நித்தியம் பொருள் ஸத்து என்றும் அநித்யப் பொருள் அஸத்து என்றும் சொல்லப்படுகின்றன. 'ஸத்து அஸத்தகவோ, அஸத்து ஸத்தாகவோ எந்நாளும் ஆகமுடியாது' என்று ஞானிகள் உறுதியாக அறிவார்கள். தேகத்தையுடைய உயிர் நித்தியப்பொருளாகிய ஸத்தாகையால் மரணத்தால் அவனுக்கு இன்மை நிலை வராது. மாறுதலும் வராது. அதனால் ஒருவன் மரணம் அடையும் காலத்தில் அவனைச் சார்ந்தோர் அவனது உயிரைக் கருதி வருந்த இடமே இல்லை. உடலை எண்ணி வருந்தலாமா? கூடாதா? விடையை வரும் ¢ வியில் காணலாம்.

மாயாது அளவின்றி மன்னும் சரீரிதனக்கு
ஓயாது மாறும் உடலம்இவை-மீயரும்
அந்தம் உடைய எனும் ஆதலினால் பார்த்தானே!
இந்த அமர்முயல்வாய் இன்று

(இ-ள்) மாயாது - அழியாமல் அளவு இன்றி மன்னும் - முக்காலங்களிலும் நிலைபெற்றிருக்கும், சரீரி தனக்கு உயிருககு, உடலும் ஓயாது மாறும் தேஹங்கள்: ஓயாமல் மாறிக்கொண்டேயிருக்கும். தேஹங்கள், மீ ஆரும் அந்தம்! உடைய எனும் ஆதலினால்-மிக்க நாசமுடையன வாய் இருப்பவை ஆதலால்! பார்த்தனே! - அர்ஜுனா! இந்த அமர் இன்று முயல்வாய் - மேற்கொண்ட) இந்த யுத்தத்தை இப்பொழுதே ஆரம்பிப்பாயாக

அந்தவந்த இமே தேஹா[3] நித்யஸ்யோக்தாயே ஸரீரிண:
அநாஸிநோ ப்ரமேயஸ்ய[4] தஸ்மாத் யுத்யஸ்வ[4] பாரத

(இ-ள்) அந்தவந்த:-நாசமுடைய, இமே தேஹா:- இந்தச் சரீரங்கள், நித்யஸ்ப - நித்தியனும், அநாஸிந:- நாசமில்லாதவனும், அப்ரமேயஸ்ய - (ஐம்பொறி உணர்வால்) அறிய முடியா தவனுமான, சரீரிகை:- சரீரியாகி உயிருக்கு, உக்தா:- (பல மாறி மாறி வரும் என்று) சொல்லப்பட்டன. தஸ்மாத்- ஆகையால், பாரத! -அர்ஜுனா! யுத்வஸ்வ- யுத்தம் செய்வாயக.

போரில் கொல்லப்படுவோரின் உடலங்கள் இயக்கம் இல்லாமல் விழுகின்றன. நாளடைவில் அழிந்து மண்ணோடு மண்ணாய் மறைந்து விடுகின்றன. அவ்வாறு அழிவதற்குக் கொல்வோனே பொறுப்பாளியாவதால் அழித்ததை நினைத்து வருந்த இடம் உண்டே என்ற சங்கையைக் கண்ணன் பரிகரிக்கிறார். தேகம் அஸத்து, வகையைச் சார்ந்ததாகையால் தானே அழிந்து இன்மையாய்ப் போகும். அழியாத ஸத்தாகிய உயிரும் உடனே புதிய தேக்கத்தை அடையும். இவ்வாறு உயிருக்கு உடல் மாறுவதும் பழைய உடல் முடிவில்லாமல் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளேயாதலால் சுயதர்மம் காரணமாகப் போரை மேற்கொண்டு எதிரிகளைக் கொல்வோன் தேகத்தை அழிக்கும். குற்றத்திற்குப் பொறுப்பாளியாக மாட்டான். போரில் மரணமடைந்தோருக்குப் புதிய உடலும், அவரவர் கருமத்திற்கேற்ப உயர்ந்த நிலையோ, தாழ்ந்த நிலையோ உடனே வருவதால் அபிமானம் காரணமாக உடலை நினைத்தும் வருந்த வேண்டியதில்லை. 'ஆதலால் புகழைத்தரும் யுத்தத்தை இப்பொழுதே செய்ய முற்படு' என்று அர்ஜுனனுக்குக் கூறினார்.

அர்ஜுனனோ அப்பொழுதும் போரை மேற்கொள்ளவில்லை. ஸத்தாகிய உயிரின் தன்மையாதோ? என்று நினைத்துப் பின்னும் கலங்கினான். 'மரணம் வரை உடல் இயங்கக் காரணமாக இருப்பது

உயிரல்லாவா? அதன் ஸ்வரூபத்தை அர்ஜுனன் கண்டதும் இல்லை. அறியவும் இல்லை. அது எவ்வாறிருக்குமே.. என்ற எண்ணங்கள் அவன் மனதில் அலையலையாக எழுந்தன. மரணத்தின் போது உடலைப்பற்றிவரும் பயம் நீங்கிய போதிலும் தான் அறியாத உயிரைப்பற்றி வரும் பயமும், கலக்கமும் அர்ஜுனனுக்கு நீங்கவில்லை. அதை அறிந்துகொண்ட கண்ணபிரான் உயிரின் ஸ்வரூபத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

9. யார்யாரைக் கொல்வது?

ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறியாதவர்களே உலகில் பலராயிருக்கின்றனர். அவர்கள் நீதி நிர்வாகம், கலைகள் முதலிய துறைகளில் மகா நிபுணர்களாயிருக்கலாம். அவை சம்பந்தப்பட். வரையில் அவர்கள் வியவகாரம் செய்துவரும் பாஷைகள் பிழையற்றிருக்கலாம். ஆனால் மரணத்தின் மர்மத்தை அவர்கள் உள்ளபடி அறிந்து கொள்ளாததால் அதுபற்றி அவர்கள் விவரிக்கும் வார்த்தைகளை ஞானிகள் பொருள் உடையதாக எந்நாளும் கொள்ளவே மாட்டார்கள். 'அவன் கொலை செய்தான். அதனால் அவன் கொலையுண்டான்' என்று பேசி வியவகாரம் செய்வோர் அனைவரும் தத்துவதர்சிளால் முட்டாள்களாகவே கருதப்படுவர். அம்முட்டாள்கள் இரு சாரார்.

யாவன் இவனை இவன் கொல்வான் என்றறியும்
யாவன் இவன் கொல்லுண்பான் என்றறியும் - மேவும்
அறிவு இருவருஞ்சாரார் ஆங்கிவனும் கொல்லான்
நெறிய வனும் கொலுண்ணுனேர்ந்து.

(இ-ள்) யாவன்-எவன் ஒருவன், இவனை இவன் கொல்வான் என்று அறியும்-இன்னாரை இன்னான் கொலை செய்வான் என்று நினைப்பனோ,யாவன்-எவன் ஒருவன், இவன் கொல்லுண்பான் என்று அறியும்-இன்னான் கொலை செய்யப்படுவான் என்று நினைப்பானோ, இருவரும்-(இந்த) இரு சாராரும்,மேவும் அறிவு சாரார்-சரியான ஞானத்தைப் பெறாதவர் ஆவர். இவனும் (இவன் என்று குறிக்கப்டும் ஜீவாத்மாவும்) கொல்லான்-கொல்லமாட்டான், நெறி அவனும்-

தன்னியல்பு மாறாத (அவன் என்று குறிக்கப்படும்) ஜீவாத்மாவும்,நேர்ந்து கொல்லுண்ணான்–தான் கொலை செய்யப்படமாட்டான்.

ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யச்சை நம் மந்யதே ஹதம்
4
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி நஹந்யதே.

(இ–ள்)ய: ஏநம்–எவன் இவன் எனப்படும் ஜீவாத்மாவை, ஹந்தாரம் மந்யதே–கொல்லுவான் என்று எண்ணுகிறனோ, ய:ச ஏ நம்–பின்னும் எவன் இவன் எனப்படும் ஜீவாத்மாவை, ஹதம் மந்யேத–கொல்லப்பட்டவனாக என்னுகிறானோ, தௌ உபௌ அபி–அவ்விரண்டு பேர்களும், நவிஜா நீத:–அறியாதிருக்கிறார்கள், அயம்–இவன் (ஜீவாத்மா) நஹந்தி–கொல்ல மாட்டான், ந ஹந்யதே–கொல்லப்பட(வும்) மாட்டான்.

'நான்,நீ,இவன்,அவன்' என்று விவரிக்கப்படுகின்றவன் தேகமே என்று பலர் பிரமிக்கின்றனர். பிரமையின் காரணமாக மரணத்தின்போது அழிகின்ற உடலைக் கண்டு இவன் அவன் எனப்படுவோனும் அழிந்துவிட்டதாக நினைந்து வருந்துகின்றனர். 'இவன்,அவன்' எனப்படுவோன், உண்மையில் தேஹமும் அல்ல,அதைவிட சூட்சுமமான பிராணனும் அல்ல, அதனினும் சூட்சுமமான மனமும அல்ல், அதனினும் சூட்சுமமான அறிவும் இல்லை. அறியப்படுகின்ற வஸ்துக்கள் எதுவும் இல்லை. அறிகின்ற ஆத்மாவே 'நான், நீ, இவன்,அவன்' என்று விவகரிக்கப்படுகின்றான். மரணத்தில் தேகம் அழியும்போது இவ்வாத்மா அழிவதில்லை. அவன் அழிப்பதும் இல்லை. 'கொலை' என்பது ஒரு செயல்.அதை ஒருவன் செய்கிறான். ஒருவன் செய்யப்படுகிறான் என்கிறோம். அத்தொழிலுக்கு ஒருவனைக் கர்த்தாவாக்கி ஒருவனைச் செயப்படுபொருள்(கர்மா) ஆக்கி விவகாரம் செய்வது உலக வழக்கமாகவிருக்கிறது. கர்த்தா, கர்மா இலக்கண பாஷையில் எழுவாய் செயப்படுபொருள் (ஸப்ஜெக்ட், ஆப்ஜெக்ட்) எனப்படுகின்றன. அவன் இவன் எனப்படும் ஆத்மா கொலைத் தொழிலில் எழுவாயாகவோ செயப்படுபொருளாகவோ இருப்பதில்லை. இருக்கவும் முடியாது, 'இந்த உண்மையை நீ மேலும் அறிந்து கொள்வதற்கு ஜீவாத்மா ஸ்வரூபத்தைக் கேள்'என்று கண்ணன் ஆத்ம லக்ஷணம் சொல்லுகிறார்.

என்றும் பிறவான் இவன் இறவான் முன்புளனாய்ச்
சென்று பிறந்திலனாம் செய்தியிலன்-இன்று என்றும்
தொல்லையவனான இவன் தோன்றும் உடல் கொன்றாலும்
கொல்லரியன் ஆகும் குறித்து

(இ—ள்)இவன்—ஜீவாத்மா என்றும் பிறவான்—எப்பொழுதும் பிறப்பதில்லை, இறவான்—இறப்பதில்லை, முன்பு உளனாய்—முன் ஒரு காலத்தில் இருந்து, சென்று பிறந்து இலன் ஆம் செய்தி இலன்—(ஒரு உடம்பில் போய்) பிறந்து பின் (இறந்து) இல்லாதவன் ஆனான் (என்று) சொல்லப்படுவதும் இல்லை, இன்று என்றும்—தற்பொழுது போலவே எப்பொழுதும், தொல்லையவன் ஆன இவன்—புராதனனாக இருக்கின்ற இந்த ஜீவாத்மா, தோன்றும் உடல் கொன்றாலும்—(தன் இருப்புத்) தோன்றும்படி (பெற்றுக்கொள்ளும்) தேகம் அழிக்கப்பட்டாலும், குறித்துகொல் அரியன் ஆகும்—நினைத்து அழிக்கப்படமாட்டாதவன் ஆவன்.

நஜாயதே ம்ரியதேவா கதாசிந் நாயம் பூத்வா பவிதாவா ந பூய:
அஜோ நித்ய ஶ்ஶாஶ்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்ய
மானே ஶரீரே.

(இ—ள்) அயம்—இந்த ஜீவாத்மா, கதாசித் அபி—ஒருபொழுதும், நஜாயதே—பிறக்கிறதில்லை, நம்ரியதேவா—இறக்கிறதுமில்லை, அயம்—இவன், பூத்வா—(நடுவில்)உண்டாகி,பூய:—கற்பாந்தத்தில்பின்,நபவிதா—(அழிந்து) உண்டாவதுமில்லை, அத:அயம்—ஆகையால் இவன், அஜ:—பிறப்பற்றவன், நித்ய:—அழிவில்லாதவன், சாத்வத:—எப்போதும் ,இருப்பவன்,புராண:—புராதனன், சரீரே ஹந்யமாநே—தேகங்கள் அநேக மாறுதல் அடைந்தாலும், நஹந்யதே—(இவன்)மாறுதல் அடையாதவன்.

முன் இல்லாதிருந்து நடுவே தோன்றுவது பிறப்பு. முன்னே இருந்து பின் இல்லாமல் போவது இறப்பு. இவ்விரண்டும் ஜீவாத்மாவுக்கில்லை, உடலுக்கேயுரியது. உடலுக்குரிய விவகாரங்கள் பிறப்பு, இருப்பு, வளர்தல், குறுகுதல், திரிதல், நசித்தல் என ஆறுவகைப்படும். இவ்வாறு விகாரங்களும் அறவே இல்லாதவன் ஜீவாத்மா. மரணத்தின்போது இடையே வந்த தேகம் கொல்லப்பட்டால் இவனுக்கென்ன? புராதானனான இவன் ஒருபொழுதும் கொல்லப்படுவதில்லை. மாறுதல் அடைவதும் இல்லை. இந்த உண்மையை உணர்ந்த புருஷன் விஷயத்தில் மரணம் எவ்வாறாகிறது? எவ்வாறு விவரிக்கப்படவேண்டும்?

உண்டாய்ப் பிறந்து வளர்ந்தோங்கிக் குறைந்திறத்தல்
கொண்டோ டுடம்பியல்வைக் கூடானைக்-கண்டான்
எவனைத்தான் கொல்லுவிக்க ஏல்வான் மற்றெங்ஙு
னெவனத்தான் கொல்வானி யன்று

(இ-ள்) உண்டாய்-(நடுவே) தோன்றி, பிறந்து வளர்ந்து ஓங்கி குறைந்து இறத்தல் கொண்டு ஓடும்-பிறத்தல் வளர்தல் செழித்தல் தேய்தல் அழிதல் ஆகும் விகாரங்கள் பெற்றுச் செல்லும், உடம்பு இயல்வைக் கூடானை - உடம்பின் விகாரங்களைப் பெறாத ஜீவாத்மாவை, கண்டான்-அறிந்து கொண்டவன், எவனைத்தான் கொல்லுவிக்க ஏல்வான்?-எந்த ஆத்மாவைக் கொல்விக்க முடியும்? இயன்று எங்ஙன் எவனைத்தான் கொல்வான்?-முயன்று எவ்வாறு எவனைக்கொல்வான்?

வேதா விநாசிநம் நித்யம் ய ஏ நம் அஜம் அவ்யயம் [3]
கதம் ஸ புருஷ: பார்த்த கம் காதயதி ஹந்திகம். [2] [2]

(இ-ள்) பார்த்த - அர்ஜுனா! ய: ஏநம்-எவன் இவ்வாத்மாவை, அவிநாசிநம்-நாசமற்றதாயும், அஜம்-பிறப்பற்றதாயும், அவ்யயம்-குறைதல் அற்றதாயும், நித்யம்-நித்யமாகவும், வேத-அறிகிறானோ, ஸ: புருஷ:-அந்த புருஷன், கதம்-எப்படி,கம்-எந்த (ஆத்மாவை) காதயதி-கொல்விக்கிறான்? கம் ஹந்தி-எதைக்கொல்கிறான்?

இவன் அவன் என்று விவகரிக்கப்டுகன்றவன். தேகத்திற்கப் பாற்பட்டவன். தேகத்திற்கு உரிய விகாரங்களில் எதையும் ஏற்காதவன், ஆதியும் அந்தமும் அற்றவன் என்று ஆத்மாவின் தன்மையை உள்ளபடி அறிந்தவர் மரண விஷயத்தில் 'ஒருவன் ஒருவனைக் கொலை செய்தான்' என வரும்பேச்சைப் பொருள் உடையதாக எப்படி அங்கீகாரம் செய்வர்? அவனும் இவனும் அழிவற்றவர்களாய் இருக்கும் பொழுது 'யார் யாரைக் கொலை செய்வது?' செய்வதாக நினைப்பது அபத்தம் அல்லவா?

இவ்வுண்மையைக் கண்டவர், பிறரைக் கொல்லவோ கொல்விக்கவோ மாட்டார்கள்.இயலாத காரியம், ஆதலால் தம்மைக் கொல்ல நினைப்போர் முயல்வோரை எண்ணித் தமக்குள்ளே ஏளனம் செய்வர். அல்லது ஆத்மாவின் உண்மை நிலையை உணரமாட்டாது, அழியாத தன்னை அழிக்க முயலும் அறிவிலிகளின் வீண் முயற்சியை நினைந்து வருந்தவும் செய்வர். தம்மைத் தேகத்திற்கப்பாற்பட்ட ஆத்மாவாக நினைக்கிறார்கள். ஆதலால் மரணத்தின்போது தேகம் அழியுமே என்று கவலைகொள்ள மாட்டார். அஞ்சமாட்டார்.

நண்பர்போல நடித்து நஞ்சை ஊட்ட வரும் விரோதிகளும் பக்தன் போல நடித்து பையில் குண்டும், துப்பாக்கியும் வைத்துக் கொல்லவரும் விரோதிகளும் தனக்குஆயிரக்கணக்கில் இருந்தாலும் ஆத்ம ஞானி அஞ்சமாட்டான். விரோதிகளை நண்பராகவே நினைப்பான்.

ஆத்ம ஞானிக்கு எவனும் விரோதி இல்லை. அறியாமையினால் ஆத்ம ஞானியை சிலர் தமக்கு விரோதியாக நினைக்கலாம். கொல்லவும் முயலலாம். ஆத்ம ஞானியின் உடலில் குண்டுகளைப் பொழியவும் செய்யலாம். ஆனால் தான் உடல் அல்லாவாதலால் ஆத்மஞானி அஞ்சி அகல மாட்டான். தன் உடலில் துப்பாக்கிகொண்டு சுடுவோனின் மீது சீற்றமும் கொள்ளமாட்டான். இந்நிலை ஒருவனுக்கு வர முடியுமா? என்று கேட்கலாம்.

கீதையை அடிக்கடி படித்து படிப்படியாக அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால் முடியும்.குண்டைத் தன் மார்பின்மீது பொழிபவன் எதிரே நின்றபோது அஞ்சாமல் அகலாமல் நின்றபடியே 'ஹேராம்' என்று உடலை விட்ட மஹாத்மாபோல்வர்க்குத்தான் முடியும்.

10. புது உடை அணிய வருத்தமேன்?

ஒருவன் குடியிருக்கும் வீடு என்றும் ஒன்று போல் இருக்கிறதா? நாளடைவில் பழமை அடைகிறது. மேல் கூறை சுவர், தரை எல்லாம் ஜீரணம் ஆகிக்கொண்ட வருகின்றன. அப்பொழுது சொந்தக்காரன் என்ன செய்கிறான்? அதை அழித்துப் புதிய வீட்டை நிர்மாணம் செய்கிறான். அல்லது அதைவிட்டு விட்டு உறுதியான புதியதொரு வீட்டிற்குப் போகிறான். புதிய வீடு புகுதலை 'கிருகப்பிரவேசம்' என்று சொல்லித் தன் பந்துமித்திரர்களுடன் சந்தோஷமாகக் கொண்டாடுகிறானேயொழிய வருத்தப்படுவதில்லை. அவ்வாறே நாம் சிலநாள் உடுத்திக் கொண் உடை அழுக்கடைந்து போகிறது. நைந்து கிழிந்து போகிறது. அப்பொழுது பழைய உடையைக்களைந்து புது ஆடையை அணிகிறோம் அல்லவா?

தீபாவாளியின் போது புது உடை அணிய எவ்வளவு மகிழ்ச்சி கொள்கிறோம். தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் புது உடை உடுக்கக் கண்டவர் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியுமா? அச்சமயத்தில் ஒருவன் வருந்துவது புதுமை இல்லையா? இதே போன்ற நிகழ்ச்சி மரணத்தால் உயிருக்குச் சம்பவிக்கும் பொழுது வருந்துவது எதற்கு? 'மரணத்தின் பொருளைக் கேள்' என்று கண்ணன் சொல்கிறார்.

பீறும் பழம்புடவை பேணாது விட்டொருவன்
வேறு புதுப்புடவை மேவுதல் போல் - ஈறில் அவன்
முத்து டம்பை விட்டு முதிராது வேறு வரும்
புத்துடம்பைச் சேரும் புகுந்து.

(இ-ள்) ஒருவன் -, பீறும் பழம் புடவை - கிழிந்து போன பழைய வஸ்திரத்தை, பேணாது விட்டு - உபயோகிக்காமல் கைவிட்டு, வேறு புது புடவை மேவுதல் போல் - வேறு ஒரு புது வஸ்திரத்தை அணிந்து கொள்வது போல, ஈறில் அவன் - முடிவில்லாத ஜீவாத்மா, முத்து உடம்பு விட்டு - முதிர்ந்து போன (கிழத்தனங் கொண்ட) உடம்பை விட்டு, முதிராது வேறுவரும் புத்துடம்பை - பழமையடையாது வேறாகவரும் புதிய உடம்பை, புகுந்து சேரும் - சென்று அடையும்.

வாஸாம்ஸி ஜீர்ணாநி[2] யதா விஹாய நவாநி[3] க்ருஹ்ணாதி நரோபராணி

ததா[2] ஶரீராணி விஹாய ஜீர்ணாநி அந்யாநி ஸம்யாதி நவாநி[3] தேஹீ

(இ-ள்) நர:- மனிதன், யதா-எப்படி, ஜீர்ணாநி - கிழிந்த, வாஸாம்ஸி விஹாய - வஸ்திரங்களை விட்டு, அபாரணி நவாநி - வேறான புதியவைகளை, க்ருஹ்ணாதி - கிரஹிக்கிறானோ, ததா - அப்படியே, தேஹீ - ஜீவாத்மா, ஜீர்ணாநி - பழகிக் கெட்டுப்போன சரீராணி - உடம்புகளை, விஹாய-விட்டு, அந்யாநி நவாநி - வேறு புதிய உடம்புகளை, ஸம்யாதி - அடைகிறான்.

அர்ஜுனா! உனக்குப் பூஜ்யரான ஆசார்யர்கள் பாட்டான்மார்களுக்கு மரணம் வந்தால் என்ன? பழைய கிழத்தனமான உடம்பு போய், இளமைக்கிருப்பிடமான புதிய உடம்பு உடனே அவர்களுக்கு வந்துவிடும். பழைய உடைபோய் புதிய உடையை ஒருவன் பெறுவது போலத்தானே அவர்களுக்கு அம்மரணம்! ஏன் கவலை? என்று கிருஷ்ணன் சொல்லும்போது அர்ஜுனன் போரில் வந்திருந்தோர் ஏந்தியிருந்த வாள், வேல், ஈட்டி, வில், அம்பு முதலிய ஆயுதங்களைப் பார்க்கிறான். உயிரைப்பற்றிய கவலை பின்னும் அவன் மனதில் எழுகிறது. காலில் முள்தைத்த வேதனை தாங்காமல் இறந்து போவோரும் உலகில் இருக்கிறார்கள். போர்வீரன் மார்பில் ஆழப்பதியும் ஈட்டி உடலில் எங்கெங்கோ மறைந்திருந்த ரத்தத்தைக் கொண்டு வந்து வெளியே பீறிட்டு அடிக்கச் செய்கிறது. ஆயுதத்தால் சிப்பாயின்

மண்டையில் ஓங்கி விழுந்த அறை மறைந்து கிடந்த மூளையை நிலத்தில் சிதற வைக்கிறது. கத்தியால் அறுப்புண்ட குறை உடலும், அவயவமும் நெடுநேரம், ஆடுகின்றன. மரணத்தின் போது ஏற்படும் இத்தனை வேதனைகளையும் உயிர் அடையாமல் தப்பிவிடுமா? எத்தனை ஆயுதங்கள்? எத்தனை விதமான ஆயுதங்கள்! இவை அனைத்திற்கும் உயிர் தப்ப முடியுமா? என்று சந்தேகமும் கலக்கமும் அர்ஜுனனுக்கு எழுகின்றன. ஒன்று உடலைப்பற்றி, அதைப் பரிகரித்தால் உயிரைப்பற்றி அதைப் பரிகரித்தால், பின்னும் உடலைப்பற்றி என்று மாறிமாறிக் கலக்கம் வருகிறது. நெடுநாளாக நம்மிடையே ஊறிப் போயிருக்கிற விபரீத உணர்வு எளிதில் நீங்குமா? நீக்க முயன்றாலும் மாறி மாறிக்கலக்கம் வருவது இயற்கைதானே? அர்ஜுனனுக்கு, முன்னே ஜீவாத்மாவின் தன்மையை கிருஷ்ணனால் சொல்லக்கேட்டும் ஆயுதங்களைக் கண்டபோது அவனுக்கு மறுபடியும் உயிரைப் பற்றிக்கலக்கம் வந்தது. அதையறிந்து கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

ஆயுதங்கள் ஆங்கிவனைச் சேதியா அன்னவகை
தீயும் அவனைத் தெகியாது-பாயும்
சலத்ததாறு மற்றவனைத் தான்கரைக்க மாட்டாது
உலர்த்தாது மாருதமும் உற்று.

(இ—ள்) இவனை—இந்த ஜீவாத்மாவை, ஆயுதங்கள் சேதியா — ஆயுதங்கள் வெட்டமாட்டா, அன்னவகை தீயும் அவனைத் தெகியாது — அவ்வாறே ஜீவாத்தமாவை நெருப்பும் சுடாது, பாயும் சலத்தாறு — ஓடும் நீருடைய நதி, அவனை தான் கரைக்கமாட்டாது — அந்த ஜீவாத்மாவைக் கரைக்க முடியாது, மாருதமும் —காற்றும் உற்ற உலர்த்தாது — (அவனை) அடைந்து உலர்த்தமாட்டாது.

நைநம் சி[2]ந்த[3]ந்தி ஸஸ்த்ராணி நைநம் த[3]ஹதி பாவக:
நசைநம் க்லேத[3]யம் த்யாபோ நஸோஷயதி மாருத:

(இ—ள்) சஸ்த்ராணி — ஆயுதங்கள், ஏநம்—இந்த ஜீவாத்மாவை, நசிந்தந்தி — வெட்டுகிறதில்லை, ஏநம் — இந்த ஆத்மாவை, பாவக:— அக்கினி, நதஹதி — கொளுத்துகிறதில்லை, ஏநம்—இதை ஆப:— ஜலங்கள், நக்லேதயந்தி — நனைக்கிறதில்லை, ஏநம்—இவ்வாத்மாவை, மாருத:— காற்று, நசோஷ்யதி — உலர்த்துகிறதில்லை.

ஆயுதங்களின் வலிமையை நினைத்து, 'அவைகள் ஜீவாத்மாவை மரண காலத்தில் ஊறு செய்யாமல் இருக்குமா?' என்று அர்ஜ ுனன்

கலங்கினான். உலகின் நிலையையே அடியோடு மாற்றவும் அழிக்கவும் வல்ல ஐம்பெரும் பூதங்களே ஆத்மாவை எந்த வகையிலும் பாதிக்க இயலாத பொழுது ஆயுதங்கள்அவனை என்ன செய்ய முடியும்? என்று கண்ணன் சமாதானம் கூறினார். 'இத்தகைய அற்புதவஸ்து எவ்வாறியிருக்க முடியும்? இருந்தால் அதன் உருவம் எப்படி இருக்கும்? அதைப்பிரத்தியட்சப் பிரமாணத்தால் அறிய முடியாததை நம்பி யுத்தத்தை எப்படி மேற்கொள்வது?' என்று அர்ஜுனன் மேலும் சிந்திக்கவாரம்பித்தான். அதனால் கண்ணன் பின்னும் ஆத்மாவின் இயல்பை சொல்லலானார்.

அவ்வற்றால் ஏதும் அழியான் இவன்என்றும்
எவ்விடத்தும் தாணுவாய் ஏய்ந்தசைவற்று இவ்வகை என்று
ஆகும் தெரியான் அறிவு அறிவான் என்று அறிந்து
யாதும் துயரேல் நீ இங்கு.

(இ–ள்) இவன் ஜீவாத்மா, அ அவற்றால் ஏதும் அழியான் – யாவற்றாலும் எந்த வகையிலும் அழியமாட்டான், என்றும் எவ்விடத்தும் எக்காலத்திலும் எல்லா இடங்களிலும், தாணுவாய் நிலையாய், அசைவு அற்று ஏய்ந்து – சலனம் இல்லாதவனாய் பொருந்தி, இ வகை என்று ஆதும் தெரியான் – (உருவம் நிறம்) இவற்றால் இன்ன தன்மையன் என்று தெரிந்து கொள்ளப்பட மாட்டாதவன், அறிவு அறிவான் – (ஐம் பொறி மனம் இவற்றாலறியப்படாது) ஞானத்தால் அறியப்படுவான் என்று அறிந்து – என்பதை (வேதப்பிரமாணத்தால்) அறிந்து, நீ இங்கு – நீ இப்போர்களத்தில், யாதும் துயரேல் – சிறிதும் வருந்தாதே.

ஜீவாத்மா மனதிற் கெட்டாதவன். ஐவகை இந்திரியங்களின் ஆதீனத்தில் இருந்து வரும் மனம் போன வழிச் செல்லும் மனிதர்கள் ஆத்மாவை எப்படிக் காணமுடியும்? கண்டவர் அதன் ஸ்வரூபத்தைச் சொன்னாலும் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? ஞானிகளுக்குப் பிரத்யட்சமாகவிருக்கும் வஸ்து அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் பலருக்குப் பிரத்தியட்சமாகப் புலப்படாவிட்டால் இல்லாமல் போய்விடுமா? ஜீவாத்மாவை அறிவதற்கான நிலையை அடைவதற்குரிய சாதனங்களைப் பயிலுமுன் ஒருவன் ஜீவாத்மா விஷயத்தில் வேதத்தையே பிரமாணமாகக் கொள்ள வேண்டும். ஆத்ம ஸ்வரூபத்தை அனுபவத்தால் அறிந்து சொன்ன ஆன்றோர் வார்த்தைகளை நம்பியே சாதனங்களில் இறங்க வேண்டும்.

மனத்தின் வசப்பட்டிருப்பதால் அர்ஜீனா! உன்னால் அதை இத்தகையது என்று காணவோ, அறியவோ முடியாது. நான் சொன்னாலும் பிரத்யட்சானுபவத்தால் நீ கிரகித்துக்கொள்ள முடியாது!. கண்ணாற் காணப்படாதவன்; சிந்தைக் கெட்டாதவன்; முக்காலங்களிலும் எங்கும் நிலையாய் உள்ளவன்; என்று ஆத்ம விஷயத்தில் வேதம் கூறும் வார்த்தைகளையே நம்பு. 'மரணங் காரணமாக மனதில் வரும் கவலையை விட்டொழி' என்று கண்ணன் சொன்னபோதும் அர்ஜுனன் போரை மேற்கொள்ளவில்லை. மேலும் தயங்கவே செய்தான். ஜீவாத்மா விஷயத்தில் வேதம் கூறும் வார்த்தைகளில் நம்பிக்கையில்லா விட்டாலும் போர் செய்ய வேண்டியது உனக்கு அவசியம்' என்று கண்ணன் பின்னும் காரணங் கூறலானார்.

11. அழிவில் அடங்கிய ரகஸியம்

இயங்கும் உடம்பில் இந்திரியங்களாலும் மனத்தாலும் அறிய முடியாத ஜீவாத்மா இருந்து வருகிறது. அது உடல் தோன்றும் முன்னும் இருந்தது. உடல் அழிந்த பிறகும் அதே நிலையில் இருக்கப் போகிறது என்று வேதாந்திகள் கூறி வருகிறார்கள். ஜீவாத்மாவை அறிய மாட்டாதவர்களுக்கு 'அது உண்டு' என்று சொல்ல வேதத்தையே பிரமாணமாகக் காட்டுகிறார்கள். ஆனால் அதில் எல்லோருக்கும் நம்பிக்கை சுலபமாக ஏற்படுமா? ஏற்பட்டாலும் அது அனுஷ்டானம் வரை வந்து மரணத்தால் வரும் பயத்தையும் சோகத்தையும் எல்லோருக்கும் போக்குமா? போக்காதுதான். வாழ்வின் போது இயங்கி வந்த தேகம், மரணம் ஏற்பட்ட மறுகணமே இயக்கம் இல்லாமல் போகிறது. இதையே பிரத்தியட்சமாகப் பார்ப்பதால் பலர் உயிரும் உடலைப்போலவே நிலைகெட்டு உடலோடு அழிந்து போகிறது என்றே நினைக்கிறார்கள். அவ்வாறு நினைத்தாலும் துக்கிப்பதற்கு இடம் இல்லை. மரணத்தில் உயிர் அழிவதாக நினைத்தாலும், உடலும் உயிரும் அழிவதாக நினைத்தாலும் இரண்டும் விலக்க முடியாதிருப்பதால் வருந்துவதில் என்ன பயன்? என்று கண்ணன் அர்ஜுனனைக் கேட்பது அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது.

பிறந்தவனுக்கு ஆங்கிறத்தல் பின்அறுதி அவ்வா

றிறந்தவனுக் கும்பிறப்பும் எய்தும்-திறம்தன்னால்

ஒன்றும் பரிகாரம் இல்லா ஒருபொருட்கு
நின்று மனந்தளரேல் நீ

(இ–ள்) பிறந்தவனுக்கு பின் இறத்தல் அறுதி – பிறந்தவன் இறந்து போவது நிச்சயம், அவ்வாறு இறந்தவனுக்கும் பிறப்பும் எய்தும் – அதுபோலவே இறந்து போனவன் மறுபடி பிறப்பை அடைவதும் (நிச்சயம்), திறம் தன்னால் ஒன்றும் பரிகாரம் இல்லா – தன் பலத்தால் எந்த விதத்திலும் விலக்க முடியாத, ஒரு பொருட்கு – மரணமாகிய ஒன்றிற்கு, நீ–, நின்று மனம் தளரேல் – எப்போதும் வருத்தப்படாதே.

ஜாதஸ்ய ஹித்ருவோ ம்ருத்யு த்ருவம் ஜந்ம ம்ருதஸ்யச
தஸ்மாத் அபரிஹார்யேர்தே நத்வம் சோதிதும் அர்ஹஸி

(இ–ள்) ஜாதஸ்ய –பிறந்ததற்கு, ம்ருத்யு:– அழிவு, த்ருவம் – நிச்சயம், ம்ருதஸ்யச–அழிவுற்றதற்கு, ஜந்மத்ருவம்ஹி – பிறப்பும் நிச்சயமாகும், தஸ்மாத் – ஆகையால், அபரிஹார்யே – தவிர்க்க முடியாத, அர்(த்)தே – விஷயத்தில், த்வம் சோசிதும் – நீ துக்கிப்பதற்கு, நார்ஹஸி–தகாதவனாயிருக்கிறாய்.

மரணம் தவிர்க்க முடியாத விஷயம்தான். ஆனால் அது எல்லோருடைய வெறுப்பிற்கும் இடமானதாயிருக்கிறதே. கொஞ்சம் கூட விருப்பத்திற்குகந்த விஷயமாயில்லையே, விருப்பிற்கிடமில்லாது கேவலம் வெறுப்பிற்கே இடமாயிருக்கும் ஒன்றிலிருந்து சோகமும் பயமும் எங்ஙனம் உண்டாகாதிருக்கும்? தவிர்க்க முடியாத மரணத்தால் சரீரம் அழிந்து போவது எல்லோருக்கும் பிரத்தியட்சமாயிருக்கிறது. சரீரம் சாமானியமானதா? வாஸனைத் திரவியங்களையூட்டி பிறர் விரும்பப் பரிமளம் வீசச் செய்யப்பட்டது. குழந்தையாயிருந்த காலத்தில் பெற்றோரும் உறவினரும் தழுவி முத்தமிட்டுக் கொஞ்சி ஆனந்தம் பெறுவதற்கு இருப்பிடமாயிருந்தது. ஒரு காலத்தில் புருஷனோ அல்லது பெண்ணோ இன்பம் பெறுவதற்கு இடமாயிருந்தது. அத்தகைய சரீரம் வாழும் காலத்தில் எடை குறைந்தால் கவலைக்கிடமாகிறது. நோய் காரணமாக சருமத்தின் நிறம் மாறி விகாரமாகத் தோன்றினால் கவலை உண்டாகிறது. எடையைக் கூட்ட மருந்து சாப்பிடுவது, புதிதாகச் சத்துள்ள உணவைக் கொள்வது; சரும நிறத்தைச் சரியாக்கத் தைலம் பூசுவது; ஊசி போட்டுக்கொள்வது என்று விதவிதமாகப் பரிகாரங்கள் தேடிப் பாதுகாக்கப்பட்ட உடல் மரணத்தில் அடியோடு அழிந்து போவதை எப்படிச் சோகமும் பயமும் இல்லாமல் சகித்துக் கொண்டிருக்

முடியும்? உடலுக்கு ஒரு காலத்தில் வரும் அழிவை தவிர்க்க முடியாததாயிருந்தாலும், அவ்வழிவைச் சற்று முன்பே உண்டாக்க எல்லோருக்கும் மனம் வருமா? பீஷ்மர், துரோணாதியரின் சரீரங்கள் அன்புடனும் மரியாதையுடனும் அர்ஜுனனால் வணங்கப்பட்டன. சரீரத்தின் அழிவு தவிர்க்கவொண்ணாததென்று நினைத்து அர்ஜுனனால், தானே அவற்றை அழிக்க முற்பட முடியவில்லை. சோகமும் பயமும் உண்டாகவே செய்தன. அதையறிந்துகொண்ட கண்ணன் அடுத்தபடியாக 'அழிவு' என்பதில் அடங்கிய பொருளைத் தெளிவுபடுத்துகிறார்.

பூதங்களான புணர்ச்சி முதல் விளங்கா
சாதனங்களான விடைதான்விளங்கு - மீதங்குப்
பொன்று நிலைதான் விளங்கா போக்காம் அதில்
வெறுப்பென் நின்றதனைக் கேளின்ன நீ

(இ–ள்) பூதங்களான புணர்ச்சி முதல் விளங்கா – (பஞ்ச) பூதங்களின் சேர்க்கையாலான சரீரங்கள் ஆதியில் தோன்றாத நிலையுடையன, சாதனங்களான இடைதான் விளங்கும் – கருவிகளாக இயங்கும் இடைக்காலத்தில் தோன்றும் நிலையுடையன, மீது அங்கு பொன்று நிலைதான் விளங்கா–மேலும் அழிகின்ற கடைசிக்காலத்தில் தோன்றா நிலையுடையன, போக்காம்–அது சரீர காரணமான வஸ்துவினது சுபாவமாம். அதில் வெறுப்பு ஏன்? – அதில் வெறுப்புக்காட்டி என்ன பயன்? இன்னம் நீ – மேலும் நீ, நின்றதனைக் கேள்– (அழியாது) நிலைத்திருப்பதைப் பற்றி கேட்பாயாக.

அவ்யக்தா^{3}தீநி பூ^{4}தாநி வ்யக்த மத்^{4}யாநி பாரத
அவ்யக்த நித^{4} நாந்யேவ தத்ரகா பரிவேத^{3} நா

(இ–ள்) பாரத! – அர்ஜுனா! பூதாநி – சரீரங்கள், அவ்யக் தாதீநி – அறியப்படாத, பூர்வா வஸ்த்தையுடையன, வ்யக்த மத்யானி – நடுவில் தோன்றும் நிலையை உடையன, அவ்யக்த நிதநாந்யேவ(முடிவில்) புலப்படாத அழிவையுடையவைகளே, தத்ர–அவ்விஷயத்தில், பரிவேத நாகா–சோகம் (கொள்வதால் பயன்) என்ன?

கண்ணால் காணப்படும் அல்லது காண இயலும் எல்லாப் பொருள்களுக்கும் முதல் இடை கடை என மூன்று நிலைகள் உண்டு. அந்நிலைகளை ஆதி, மத்திமம், அந்தம் என்றும் சொல்லலாம். இடைக்காலம் ஒன்றிலேதான் பொருள்கள் பலவாய்க் காணும் நிலையில்

இருக்கின்றன. அதற்கு முன்னம் பின்னும் பொருள்கள் இல்லாமல் போவதில்லை. கண்ணால் காணும் உருவத்தில் இருப்பது இல்லை. காண இயலாத பொருளின் இருப்பை உலக இயல்பைக் கொண்டே அறியலாம்.

தண்ணீர் காணும் உருவில் இருக்கிறது. அதை நன்றாக் கொதிக்கவைத்தால் நீராவியாக மாறிவிடுகிறது. அந்நிலையில் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. தகுந்த கருவிகளின் உதவியால் நீராவி நிலையில் நிற்கும் நீரைக் குளிரச் செய்தால், மறுபடி கண்ணிற்குப் புலனாகக்கூடிய தண்ணீராக மாறுகிறது. கண்ணுக்குப் புலப்படும் நீரின் நிலையை அப்பொருளின் இடைக்காலம் என்று கொள்ளலாம். அதற்கு முன்னே நீராவியாக இருந்திருக்க வேண்டிய அதன் நிலையை முதல்காலம் என்று கொள்ளலாம். சூட்டினால் நீரின் நிலை மாறி மறுபடி நீராவியாகி உருவம் தெரியாதிருக்கும் நிலையைக் கடைக்காலம் என்று சொல்லாம்.

மேற்கூறியபடியே கண்ட பொருள் எதுவும் இல்லாமல் போவதில்லை. ஒரு துண்டுப் பேப்பரை நெருப்பில் காட்டினால் கருகுகிறது. பின் பொடியாகிச் சாம்பலாகிறது. 'பேப்பர் கெட்டுவிட்டது, அழிந்து விட்டது' என்று சொல்லுகிறோம். அதன் ொபருள் என்ன? பேப்பர் உருவத்தில் நம் கண்ணுக்குத் தோன்றிய வஸ்து இல்லாமல் போய்விட்டதா? இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதன்நிலை மாறிவிட்டதால் முன்னைப்போல் தோன்றவில்லை. கண்ணுக்குத் தோன்றும் பதார்த்தங்களின் நிலைகள் மாறிக்கொண்டே இருக்கும். ஒரு நிலையில் தோன்றிய உருவத்துடன் மறு நிலையில் தோன்றுவதில்லை. ஒரு நிலையில் கண்ணுக்குத் தோன்றி, மறு நிலையில் கண்ணுக்குத் தோன்றுவதும் இல்லை. ஆனால் பதார்த்தங்கள் மாறுதல் அல்லது விகாரம் அடைந்தாலும் எப்பொழுதும் இல்லாமல் போவதில்லை. அழிவினால் பதார்த்தங்களில் மாறுதல் ஏற்படுகிறதேயொழிய பதார்த்தங்களுக்கு இன்மை நிலை உண்டாவதேயில்லை. இன்மை நிலையை எவராலும் உண்டாக்கவும் இயலாது.

அவ்வாறே பிராணிகளின் சரீரங்களாகக் காணப்படும் வஸ்து ஆதியில் மூலப்பிரகிருதியில் மறைந்து கிடந்து நடுவில் மனுஷ்யாதி சரீரங்களாக் காணப்படுகிறது. கடைசியில் மாறி மூலப்ரக்கிருதியிலேயே மறையப் போகின்றது, என்று சிருஷ்டியும், ஸ்திதியும், ஸம்ஹாரமும்

ஆகிய பிரபஞ்சத்தின் மூன்று தன்மைகளும் இப்பாடலில் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன.

ஆதியில் மூலப்ரக்தி அதிலிருந்து மஹான், அதிலிருந்து அஹங்காரம், தன் மாத்திரை, அதிலிருந்து ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பூமி என்ற முறையில் தோன்றி அவற்றின் சேர்க்கையால் கர்மேந்திரியம், ஞானேந்திரியம், மனம் இவற்றிக்கிடமான தேகம் தோன்றியது. தோன்றிய முறையிலேயே தேகம் மண்ணாக மாறி அது ஜலமாகி, நெருப்பாகி, வாயுவாகி ஆகாசமாகி முடிவில் மூல்ப்ரக்ருதியில் ஒடுங்கும்–ஐம்பொருள் சேர்க்கையாலான சரீரம் மரணத்தால் சாம்பலாகவோ மண்ணாகவோ மாறும். நாளடைவில் மாறிக்கொண்டே போய் தோன்றாத மூல ப்ரக்ருதியிலே ஒடுங்கும்.

போர் செய்ய வந்திருக்கும், எந்த வீரனாலும் ஆயுதங்களின் உதவியாலோ தன் பலத்தாலோ தேகத்தை இல்லாதபடி அழித்துவிட முடியாது. தேகத்திற்குக் காரணமான வஸ்து எப்பொழுதும் இருந்து கொண்டே இருப்பதை அறியாதவர்கள் மரணத்தில் தேகத்திற்கு அழிவினால் 'நிலை மாறுதல்' ஒன்றே வருவதைக் கிரகிக்க முடியாமல், மரணத்தில் தேகத்தை நினைத்துச் சோகிக்கிறார்கள். 'அழிவில் அடங்கிய ரகஸியம்' இதுதான் என்று அறிந்தவர்கள் மரணத்தை நினைத்து மேற்கொண்ட காரியத்தைக் கைவிடமாட்டார்கள் என்று கண்ணன் கூறினார்.

12. மரணத்தினும் கொடியது பழி

மரணத்தால் உடல் அழிகிறது, அழிந்தாலும் மூலப் பொருள் அழிவதில்லை. உருவமே அழிகிறது. அதை மூலப் பொருளுக்கு ஏற்படும் மாறுதல் அல்லது விகாரம் என்றே கொள்ள வேண்டும். அநாதியான மூலப்பொருள் எப்பொழுதும் இல்லாமல் போவதில்லை என்று கண்ணன் உலக இயல்பிலிருந்து உதாரணங்கள் காட்டி உபதேசித்தார் அல்லவா? அதை அர்ஜுனன் சிந்திக்க ஆரம்பித்தான். மனதில் ஒரு முடிவு உண்டாகவில்லை. கலக்கமும் நீங்கவில்லை. சாமானியரால் உணரமுடியாத ஜீவாத்மா தத்துவம் போலவே சரீரங்ளகுக் காரணமான ப்ரகிருதி தத்துமும் அர்ஜுனனுக்குக் கிரகிக்க அரியதாயிருந்தது. ஓரளவு கிரகிக்க முடிந்தாலும் சோகத்தையும் பயத்தையும் விட்டு உடனே கொலைக்கிடாமான போரை மேற்கொள்ளமுடிய வில்லை.

அதையறிந்து கொண்டு கண்ணன் மேலும் கூறுகிறார். அர்ஜுனா! வேதங்களில் கூறிய சாதனங்களைப் பயின்று ஈச்வரன் அருளால் அறிய வேண்டிய ஆத்மா, பிரக்ருதி இவைகளின் தத்துவத்தை நீ உடனே தெரிந்து கொள்ளமாட்டாமைக்கு வருந்த வேண்டாம். உள்ளபடி பூரணமாக உணர்ந்தவர் மிகமிகக் குறைவு என்றே சொல்ல வேண்டும். ஆத்மாவை ஒருவன் ஆச்சரிய வஸ்துப் போலப் பார்க்கிறான். மற்றொருவன் ஆத்மாவை ஒருவன்அறியாமலேயே ஆச்சரிய வஸ்துப் போலப் பேசுகிறான். மற்றொருவன் ஆச்சரிய வஸ்துப் போலக் கேட்கிறான். பார்த்துப் பேசிக் கேட்ட போதிலும் அவர்களில் ஒருவனும் ஆத்மாவை உள்ளபடி அறியவே இல்லை. ஒவ்வொருவரும் தத்துவ விசாரம் செய்து தெளிவுற்ற பின்னரே ஒரு செயலை மேற்கொள்ளவது என்று கொண்டால் சமூகமே சீர்குலைந்துவிடும், தத்துவ விசாரம் செய்து தெளிவு பெறுவது எல்லோருக்கும் சாத்தியமும் இல்லை. தன் மனம் தெளியவில்லை என்று ஒருவன் செயலை மேற்கொள்ளாது சோம்பியிருத்தாலும் கூடாது.

உனது குலத்தையும், அதனால் உனக்கு ஏற்பபட்ட கடமையையும் நீ ஆலோசித்தால் கொலையை எண்ணி யுத்தத்தில் நீ பின் வாங்கமாட்டாய். க்ஷத்திரியனுக்கு யுத்ததைக்காட்டிலும் சிறந்த தர்மமில்லை; கடமையுமில்லை; புகழைத்தரக்கூடியது வேறு எதுவும் இல்லை. போலீஸ் அதிகாரிகளுக்குக் குற்றவாளிளைக் கண்டு தண்டனைக்குள்ளாக்குவதைவிடச் சிறந்த கடமை இல்லை. குற்றம் ருஜுவானவனைத் தண்டிப்பதைவிட நீதிபதிக்குச் சிறந்ததொரு கடமையும் இல்லை. யுத்ததையோ, தண்டிப்பதையோ பிறர் மேற்கொள்வது ஹிம்சையாகும். அதனால் அது அவர்களுக்குப் பாவச் செயலுமாகும். க்ஷத்திரியனக்கு யுத்ததை மேற்கொள்வதும் நீதிபதிக்கு தண்டனை (பிறருக்கு) விதிப்பதும் தர்மமாகும். கடமையுமாகும். அஹிம்ஸா தர்மத்தை மிக மிகச் சிறந்ததொன்றாக விதிக்கும் வேதம் அக்னிஷ்டோமாதி யாகங்களில் பசு ஹிம்சையை தர்மமாக விதிப்பதுபோல், க்ஷத்திரியனுக்கு யுத்தத்தில் கொலை முதலிய பாதங்களைக் தர்மாகவே விதிக்கும்போது, நீ ஏன் பின் வாங்க வேண்டும்? மருந்தே சுவைக்கிடமான சிறந்த உணவுமானால் எந்த நோயாளி அதை உட்கொள்ளப்பின் வாங்குவான்?

தானே வருமிந்தத் தன்ம சமரத்தை
வானேறும் வாயி லெனமதித்துத்-தேன் ஏறும்
தார்மன்னர், பார்த்தனே! தாங்கள் சுகமுடனே
சீர்மன்ன ஏறுவர்காண் சென்று.

(இ-ள்) பார்த்தனே! – அர்ஜுனா!, தானே வரும் இந்த தன்ம சமரத்தை – தானாகவே வந்திருக்கும் இந்தத் தருமப்போரை, வான் ஏறும் வாயில் என மதித்து – சுவர்க்கத்திற்குச் செல்லும் வழி என்று எண்ணி, தேன் ஏறும் தார் மன்னர் தாங்கள் – வண்டு மொய்க்கும் மாலை அணிந்த அரசர்கள், சுகமுடனே – மகிழ்ச்சியோடு, சீர்மன்ன – (தங்கள்) புகழ் நிலைபெற, சென்று ஏறுவர் – (விரும்பிச்) சென்று ஏற்பார், காண் – (இவ்வுண்மையை) நீ அறிந்து கொள்.

3 2 3 3
யத்ருச்சயா சோபபந்தம் ஸ்வர்கத்வாரம் அபாவ்ருதம்
2 2 4 3 4 3
ஸுகிந: க்ஷத்ரியா பார்த லபந்தே யுத்த மீத்ருசம்.

(இ-ள்) பார்த்த – அர்ஜுனா! யத்ருச்சயா – முயற்சியில்லமல் உபபந்நம்–வந்ததும், அபாவ்ருதம் திறந்திருக்கிறதுமான, ஸ்வர்க்த்வாரம் – சுவர்க்க வழியாயிருக்கின்ற, ஈத்ருசம் யுத்தம் – இந்த விதமான போரை, சுகிந:–பாக்யவான்களான, க்ஷத்ரியா:–க்ஷத்திரியர்கள், லபந்தே – அடைகிறார்கள்.

அல்பமான பலனைப் பெறத் தேவதைகளின் பிரீதிக்கிடமான காரியங்களைச் செய்ய வேண்டிருக்கிறது. அதன் பொருட்டு எவ்வளவோ திரவியமும், சாமான்களும் திரட்ட வேண்டும். செயல் ஆற்றும் பொழுது தவறுகள் நேராதிருக்க எவ்வளவு முயற்சிகள் செய்யவேண்டும். அல்ப பலன்களுக்கு எத்தனை முயற்சிகள்! 'இதற்கு மேலான பலன் எதுவும் இல்லை' என்னும்படியான முக்தி அல்லது பேரின்பம். அதை எய்துவிக்க க்ஷத்திரியனுக்குச் சாதனமாயிருக்கின்ற யுத்தம் சுயதர்மமாயிருப்பதாலும் கும்பிடப் போக வேண்டிய தெய்வம் தேடி வந்தது போல் மோக்ஷசாதனமான யுத்தம் தானே வந்திருப்பதாலும், மன்னர் 'சுகமுடனே ஏறுவர்' என்றார் பந்தத்திற்கிடமான சம்சாரத்தினும் முக்தி நிலையே உயர்ந்தது. போரில் இறப்பது முக்திக்குச் சாதனம். ஆதலால் போர் மரணம் உயர்ந்த முக்தி நிலையை உயிருக்குக் கொடுக்கும் என்ற உறுதிபற்றி, போரில் மாண்டோர் உயர்வர் என்பது தோன்ற 'ஏறுவர்' என்றார். மரணத்தால் இம்மையில் புகழ் உண்டாகும் ஆதலால் 'சீர்மன்ன ஏறுவர்' எனப்பட்டது.

மறுமையில் நற்கதியும் வேண்டாம். இம்மையில் புகழும் வேண்டாம். இவ்விரண்டிற்கும் தானே க்ஷத்திரியனுக்குச் சுயதர்மமான இப்போர் சாதனமாயிருக்கிறது. நற்கதி, புகழ் இரண்டையும் வேண்டாதவர் எதற்காக இப்போரை மேற்கொள்ள வேணடும்? என்று அர்ஜுனன் ஆலோசிக்கக் கண்ணன் 'பாவமும் பழியும் உண்டாகுமே' என்று மேலும் கூறுகிறார்.

நீ இத் தரும சமரத்தை நின்றுஇயலாய்
ஆயில் புகழ் உன் அறம்விட்டுப்-போயிற்றால்
பாவசந்தனை அடைதி பாரெல்லா நின்று இசைக்கும்
ஏவம் தனையே எழுந்து.

(இ—ள்) நீ—, இத் தரும சமரத்தை — இவ்விதமான தர்மப் போரை நின்று இயலாய் ஆயில் — பின் வாங்காமல் செய்யாவிட்டால் உன் புகழ் அறம் விட்டுப் போயிற்று. உனது கீர்த்தியும் தர்மபலனும் அழிந்து போகும், பாவம்தனை அடைதி—பாவத்தை அடைவாய், பார் எல்லாம் உலகினர் எல்லோரும், ஏவம் தனையே எழுந்து நின்று இசைக்கும் — பழியையே குதூகலத்துடன் இடைவிடாமல் பேசுவார்கள். (ஆல்—அசை)

அத² சேத்வமிமம் த⁴ர்ம்யம் ஸங்க்³ராமம் நகரிஷ்யஸி
தத⁴ஸ்வதர்மம் கீர்த்திம்ச ஹித்வா பாபம் அவாப்ஸ்யஸி.

(இ—ள்) அத—இல்லாவிட்டால், த்வம்—நீ, தர்ம்யம்—நியாயமாய்க் கிடைத்த, இமம் ஸங்க்ராமம் — இந்த யுத்தத்தை, ந கரிஷ்ய ஸிசேத் — செய்யாவிட்டால், தத:— அதனால், ஸ்வதர்மம்—தன் தருமத்தையும், கீர்த்திஞ்ச — புகழையும், ஹித்வா—விட்டு, பாபம்—பாபத்தை, அவாப்ஸ்யஸி — அடையப் போகிறாய்.

'வந்த போரை அரசர் கைவிட்டால் புகழும் புண்ணியமும் அழிந்தே தீரும்' என்ற உறுதிதோன்ற எதிர் காலத்தை 'அறம் விட்டுப் போயிற்று' என்று நிகழ் காலமாகக் கூறினார். வடமொழி மூலச் சுலோகத்தில் 'கீர்த்தி' என்று வந்த சொல் தமிழ்ப் பாடலில் 'புகழ்' என்று கொள்ளப்பட்டது. இச் சொல்லுக்குச் சங்கரர் அருமையாக உரை எழுதியது உற்ற நோக்கத்தக்கது. மகாதேவன் ஒரு காலத்தில் வேடனாய் வந்து, அர்ஜுனனோடு போர் தொடுத்தார். பின் வாங்காமல் அர்ஜுனன் போர் செய்து பரமசிவனையும் வியக்கச் செய்து வெற்றி கொண்டான். பரிசாக பரமசிவனிடம் அஸ்திரங்களும் பெற்று, அன்று முதல் அர்ஜுனன் என்றும் இல்லாத புகழ்கொண்டு விளங்குவானான். அந்தப் புகழே இங்கு கண்ணனால் சுட்டிக் காட்டப்பட்டதகா உரை எழுதியுள்ளார்.

பிற அரசர்களுக்கும் வீரர்களுக்கும் பெறமுடியாத சிறந்த புகழையும் அர்ஜுனன் தன் ஆசார்யர்களின் மரணத்தை விலக்குவதற்காக, தான் இழக்கத் தயாராயிருந்தான் ஆனால் 'போரைக் கை விடுவதால் உலகினர் தன்னைப் பழி கூறுவர்' என்று கண்ணன் சொல்லியதன் காரணத்தை அறிந்து கொள்ளமாட்டாமல் தயங்கினான். அதனால் கண்ணன் மேலும் கூறுகிறார்.

கொண்டாட்டு உற்றார்க்குக் கொடிதுபழி சாம்அதனில்;
கண்டார்கள் அச்சத்தால் காதமரில் - திண்டாடி
மீண்டாய் எனநினைப்பார்; மேலாம் வியப்புறு நீ
வேண்டாத நோய்மையுறல் மிக்கு.

(இ-ள்) கொண்டாடடு உற்றார்க்கு - கௌரவிக்கப் பட்டவர்களுக்கு, சாம் அதனில பழி கொடிது - மரணத்தைவிடப் பழியே கொடிது, கண்டார்கள் - பார்த்தவர்கள், காதமரில் அச்சத்தால் திண்டாடி மீண்டாய் என நினைப்பார் - (அரசர்) விரும்பும் யுத்தத்தில் பயத்தால் கலங்கிப்பின் வாங்கினாய் என்று நினைப்பார்கள், மேலாம் வியப்பு உறு நீ - மிக உயர்ந்த நிலையை அடைய வேண்டிய நீ, மிக்கு வேண்டாத நோய்மை உறேல் - முழுதும் விரும்பத்தகாத பழியை அடையாதே.

ஸம்பா விதஸ்யாசகீர்(த்)தி: மரணாத் அதிரிச்யதே.[2]

(இ-ள்) ஸம்பாவி தஸ்யச-(எல்லா) கௌரவங்களும் கிடைத்திருக்கிற ஒருவனுக்கு, அகீர்(த்)தி:- பழியானது, மரணத்- மரணத்தைக் காட்டிலும், அதிரிச்யதே - அதிகக் கொடியது.

ஆசார்யர், பாட்டன்மார் முதலியோரிடம் அர்ஜுனனுக்கு அளவு கடந்த பக்தி இருந்தது. அவர்களைக் கொலை செய்யாதிருக்கும் பொருட்டு மறுமையில் சுவர்க்கத்தையும் இம்மையில் புகழையும் இழக்கத் துணிந்து போரைக் கைவிடலாம். கைவிட்டால் உலகினர் அத்தகைய மனப்பண்பை அறிந்து கொள்வர்களா? வசை கூறக் காத்துக்கொண்டிருக்கம் பகைவர்களும் மஹாரதர்களுமான கர்ணன் துரியோதனாதியர் 'அர்ஜுனன் போர் செய்ய வந்தும் பயத்தால் புறங்காட்டி ஓடினான்' என்று உடனே தூற்றவாரம்பிப்பார்கள். புகழும், கௌரவமுமே துணையாக வாழ்ந்தவர்களுக்கு இத்தகைய பழி மரணத்தினும் கொடியதாயிருக்கும். இருந்து பழி ஏற்பதை விட இறப்பது நல்லது. ஆதலால் போரைச் செய் என்பது உபதேசம்.

13. மருந்தே உணவும் ஆனால்...

'தானாக வந்த போரைக் கைவிட்டு உயிரோடிருந்தால் உலகினர் பழிப்பர். மகாரதர்களாகிய கர்ணன் போல்வாரும் இகழ்வர். அப்பழி மரணத்திலும் கொடியது என்று கண்ணன் உபதேசித்த போதிலும், அர்ஜுனனால் போரைத் தொடங்க முடியவில்லை. போர்க்களத்தினின்றும் நீங்கி உயிரைவைத்துக் கொண்டு வாழ்ந்தால்தானே பழி தன்னை வாட்டும். ஆசாரியர்களைக் கொல்லுவதற்கு பதில் தன்னைத்தானே முடித்துக் கொண்டால் பழியின் வேதனை தனக்கு எங்ஙனம் உண்டாகும்? அல்லது போர்க்களத்திலே தான் வாளாவிருந்து பகைவரே தன்னைக் கொல்ல அனுமதித்திருந்தால் பழி என்ன செய்யும்? ஆசார்யர்களின் மரணத்திற்குத்தான் காரணமாயிருப்பதைவிடத் தற்கொலை மேல் அல்லவா?" என்று ஆலோசிக்கலானான் அதை அறிந்து கொண்ட கண்ணன் சுயதர்மம் அல்லது கடமையின் மேன்மையை உபதேசித்தார்.

நோயாளிக்குச் சில வைத்தியர்கள் கொடுக்கும் மருந்து கசப்பாக இருக்கிறது. கசப்பின் மிகுதியால் மருந்தில் வெறுப்பும் ஏற்பட்டு அதனால் அதை உட்கொண்ட உடனே வாந்தியும் உண்டாகி உடலுக்கு வேதனை ஏற்படுவதும் உண்டு. அதற்குமேல் மருந்து சாப்பிடும் காலங்களில் வைத்தியர்கள் நோயாளிக்கு விதிக்கும் பத்தியம் கடுமையாகவிருந்தால் அனுஷ்டிக்க அரிதாகிவிடுகிறது. வைத்தியர் சொன்னபடி உணவுகளை விலக்கி, மருந்தையும் பத்தியத்தையும் ஏற்றுக் கொண்டால் உடல் வாடித் தளர்ந்து போகிறது. 'என்றைக்கோ குணம் ஏற்படப் போகிறது', என்று வைத்தியர் சொல்லும் வார்த்தையை வேதமாக நம்பி நோயாளி கஷ்டங்களை மேற்கொள்வது துர்லபம் தான். ஆனால் பத்தியமே இல்லாமல் கொடுக்கும் மருந்து உடலை வளர்க்கக்கூடிய சிறந்த ருசியுள்ள உணவுமாயிருந்தால், அதை ஏற்றுக் கொள்ள எந்த நோயாளியாவது மறுப்பானா? நோயைப் பரிகரித்தாலும் பரிகரிக்காவிட்டாலும் சாப்பிட ருசியாயிருக்கிறது. ஆகாரமும் ஆகிறது! பரிகாரமாவது பின்னே தெரியட்டும் என்று எவனும் உடனே வாங்கி விழுங்குவனே அம்மருந்து போல் அல்லவா அரசர்களுக்குச் சுயதர்மமாகிய போரும்.

இன்றுஇகலில் பொன்றில்நீ இந்திரலோ கம்பெறுதி
வென்றிஉறில் ஆளுதிஇம் மேதினியை-என்றுஇதனை
ஓர்ந்துஅதனால் கௌந்தேயா! உற்றுஎழுநீ
வெஞ்சமத்துத் தீர்ந்து மனத்தோடும் தெளிந்து.

(இ-ள்) இன்று இகலில் பொன்றில்-இப்பொழுது போரில் மாண்டால், நீ இந்திர லோகம் பெறுதி-நீ சுவர்க்கத்தை அடைவாய், வென்றி உறில்-வெற்றி பெற்றால், இ மேதினியை ஆளுதி - இந்தப் பூமியை அரசாள்வாய், என்று இதனை ஓர்ந்து-எனக்கொண்டு இதை நன்கு உணர்ந்து, அதனால் தீர்ந்து மனத்தோடும் தெளிந்து - அதனால் முடிவும் தெளிவும் கொண்ட மனத்தோடு, கௌந்தேயா! - அர்ஜுனா! நீ வெம்சமத்து உற்று எழு - நீ கடும் போரைச் செய்ய விருப்பத்தோடு எழுவாயாக.

ஹதோவா ப்ராப்ஸ்யஸே[2] ஸ்வர்கம்[3] ஜித்வாவா[4] போக்ஷ்யஸே மஹீம்
தஸ்மாத்[2] உத்திஷ்ட கௌந்தேய[3] யுத்தாய[4] க்ருத நிஸ்சய:த

(இ-ள்) ஹே கௌந்தேய-குந்தி புத்திரனே! ஹ தோவா-கொல்லப் பட்டாயாகிலும், ஸ்வர்க்கம் - சுவர்க்கத்தை, ப்ராப்ஸ்யஸே-அடைவாய். ஜித்வதவத-ஜயித்தாயாகிலும், மஹீம் போக்ஷ்யஸே-பூமியை அனுபவிக்கப் போகிறாய், தஸ்மாத்-ஆகையால், க்ருத நிச்சய:-நீ நிச்சயம் பண்ணிக் கொண்டு, யுத்தாய உத்திஷ்ட - யுத்தம் செய்ய எழுந்திரு.

சில தர்மங்களை அனுஷ்டிப்பது துன்பமாகவே இருக்கும். அவற்றால் ஏற்படும் பலன் இம்மையில் பெற முடியாததாயிருக்கும். மறுமையில் மாத்திரம் நற்பயன் கிட்டும்' என்ற நம்பிக்கை கொண்டு அவற்றை அனுஷ்டிக்க முற்படுவோர் அரிதாயிருப்பார். மறுமையில் கஷ்டங்கள் வந்தாலும் இம்மையில் சுகம்தரும் என்றிருக்கம் கருமம் அதர்மமாயிருந்தாலும் அதை அனுஷ்டிக்கப் பலர் முற்படுவர் இம்மையிலும் சுகம். மறுமையிலும் சுகம் பயக்கும்' என்ற தர்மத்தை எல்லோரும் மறுமையில் நம்பிக்கையில்லாத நாஸ்திகரும் அத்தருமத்தை ஏற்பரேயொழிய விலக்கத் துணியார். உனக்கு எதிரியாக வந்திருக்கும் ஆசார்யர் பாட்டன்மார் முதலியோர் 'வென்று இருந்தாலும் இம்மையில் செல்வம் போர் செய்து மாண்டாலும் மறுமையில் செல்வம்! என்பதை நன்கு தெளிந்து இருக்கவோ இறக்கவோ இரண்டிற்கும் தயாராகிப்

போர் செய்ய வந்திருக்கின்றனர். வேதத்திலும், வேதம் கூறும் மறுமைப் பயன்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கும் ஆஸ்திகனாகிய நீ இச்சுய தர்மத்தைச் செய்ய ஏன் கலங்குகிறாய்? இம்மை, மறுமை இரண்டிலும் நன்மை தரும் போரை உறுதியுடனும் உற்சாகத்துடனும் செய்ய இப்பொழுதே முற்படு' என்று கண்ணன் கூறினார்.

கூறிய போதும் அர்ஜுனன் தயங்கவே செய்தான் போரை மேற்கொள்ளவில்லை பகைவராய் வந்த பெரியோர்கள் விஷயமாய்த் தன்மனதில் அன்பும் அனுதாபமும் பெருகித் தடை செய்யும் பொழுது அத்தடையை மீறிக்கொணடு அவர்களை எப்படிக் கொல்வது? அக்கொலைத்தொழிலால் தனக்குப் பாவம் உண்டாகாதா? என்ற எண்ணம் அர்ஜுனனுக்கு உண்டாயிற்று. அதனால் கண்ணன் பாவம் அர்ஜுனனைப் பற்றாதிருக்கப் போர் செய்யுமுன் எவ்வித மனப்பான்மையைக் கொள்ள வேண்டும்' என்பதைப்பற்றி அடுத்தபடியாக விதிக்கிறார்.

இன்பம் துன்பம் பேறுஇழவு சயாசயங்கள்
உன்பந்தத்து ஒக்க உணர்வுஎய்தி - வன்பந்தத்
தெவ்வகையார் வெம்சமத்தைச் சேர்வுறு நீ பாவத்தை
இவ்வகையான் மேலணையாய் இங்கு.

(இ—ள்) இன்பம் துன்பம் – சுக துக்கங்களையும் பேறு இழவு – லாப நஷ்டங்களையும், சய அசயங்கள் – வெற்றி தோல்விகளையும், உன் பந்தத்து ஒக்க உணர்வு எய்தி – உனக்கு (அவை சம்பந்தமாக உள்ள) உறவை சமமாகப் பாவிக்கும் ஞானப்பண்பை அடைந்து, நீ வன் பந்த தெவ் வகையார் வெம்சமத்தை சேர்வுறு – நீ மிக்க ஒற்றுமையுடையுடைய பகைவர் கூடிய கொடிய போரை மேற்கொள். இவ்வகையான் இங்கு பாவத்தை மேலணையாய் – இவ்வாறு செய்வதால் இப்போரில் பாவத்தை அடைய மாட்டாய்.

ஸுகதுக்:கே[2][3] ஸமே[2]க்ருத்வா லாபா[4]லாபௌ[4] ஜயாஜயௌ
ததோ யுத்[3]தா[4]ய யுஜ்யஸ்வ நைவம் பாபம் அவாப்ஸ்யஸி

(இ—ள்) சுகதுக்கே – சுகதுக்கங்களையும், லாபா லாபௌ— லாபநஷ்டங்களையும் ஜயா ஜயௌ – வெற்றி தோல்விகளையும், ஸமேக்தருத்வா – சமமாக எண்ணி, தத:—அதன் பிறகு, யுத்தாய— யுத்தத்தின் பொருட்டு, யுஜ்யஸ்வ – கூடு, ஏவம்—இப்படியானால், பாபம்— பாபத்தை, ந அவாப்ஸ்யஸி—அடையமாட்டாய்.

சுகம் லாபம் ஜயம் இவற்றைப் பெறவே எல்லோரும் விரும்புகின்றனர். முயல்கின்றனர். தானகவோ முயற்சியாலோ வந்தால் அளவு கடந்து சந்தோஷிக்கின்றனர் துக்கம், நஷ்டம், தோல்வி இவற்றை வெறுக்கின்றனர். விலக்கப் பார்க்கின்றனர். தானாகவோ பிறிதொன்றைக்கருதிச் செய்யும் முயற்சியாலோ அவைகளில் ஒன்றோ பலவோ வந்தால் மிகவும் கவலை கொள்கின்றனர்.

'அவ்வாறின்றி ஒரு செயலை ஆற்று வதால் வரும் சுக துக்கம், லாப நஷ்டம், ஜயம் தோல்வி இவைகளில் ஒரு ரகத்தை மாத்திரம் எப்பொழுதும் அடைய வேண்டும் ; மற்றொரு ரகத்தை அடையவே கூடாது என்ற எண்ணம் கொள்ளாமல் எல்லாவற்றையும் சமமாகக் கருதிச் செய்தால் பாவத்திற்கு ஆளாக வேண்டியதில்லை. சமமாகக் கருதினால் பேராசைக்கு இடமில்லாமல் போகும். பேராசை ஒழிந்தால் சமூகத்தில் தன்னை யொழிந்த பிறருக்குத் தீங்கு செய்ய மனம் வராது. அதுவே தனக்கும் பிறருக்குச் சுகம் தேடும் உண்மை மார்க்கம் ஆதலால் பலனில் சமத்வ புத்தி கொள்ளுவது உலக நோய்க்கே உரிய சிறந்த பரிகாரமாகக் கண்ணனால் சொல்லப்பட்டது. மனித சமூகத்தில் பல்வேறு துறைகளில் இருந்து உழைப்போர் கண்ணன் அர்ஜுனனை வியாஜயமாக வைத்துக் கூறிய இவ்வுண்மையை அறிந்து கடைப்பிடிப்பார்களானால் உலகம் வியக்கத்தக்க ரீதியில் முன்னேறும் மகாத்மா இவ்வுண்மையை உணர்ந்து கடைப்பிடித்தார். உலகமும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆவல் கொள்ளவும் செய்தார். அதற்காகக் கீதையைப் படிப்பதில் தினம் அரை மணியாவது செலவிடவேண்டுமென்று அடிக்கடி சொல்லியும் வந்தார்.

இச்சுலோகத்திற்கு ஒரு உரை ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: சுகதுக்கங்களுக்குக் காரணம் லாப நஷ்டங்கள். லாப நஷ்டங்களுக்குக் காரணம் ஜயாபஜயங்கள். ஆகவே காரண காரியம் இரண்டையும் சமமாக எண்ணி இரண்டில் விஷயமாக வரும் விருப்பு வெறுப்பை விட வேண்டும்.

இதுவரைச் சொல்லப்பட்ட விஷயம் இன்னது என்பதையும், மேலே சொல்லப்போகிற விஷயம் இன்னது என்பதையும், அடுத்தபடியாகக் கண்ணன் சொல்லுகிறார்.

சாங்கியத்தின்தன்மையின்மேற்புந்தித்தகவு உரைத்தேன்
ஈங்குகன்ம யோகத்து இயல்பில்இதன்-பாங்கியம்பக்

கேளாய் இப் புத்தியினைக் கிட்டவினை கட்டினை நீ மூளாமல் நிற்றி முயன்று.

(இ–ள்) சாங்கியத்தின் தன்மையின் மேல்–சாங்கிய தத்துவத்தை ஒட்டி, புந்தித் தகவு உரைத்தேன் – அறிவிற்கு உரியதைச் சொன்னேன், ஈங்கு–இப்பொழுது நீ–, புத்தியினைக் கிட்ட – ஞானத்தைப் பெற, கன்மயோகத்து இயல்பில் இதன் பாங்கு இயம்பக் கேளாய்–கர்ம யோகத்தில் இப்பகுதியின் தன்மையைச் சொல்லக் கேட்பாயாக, (அதனால்) வினைக்கட்டினை – பந்தத்தை, நீ முயன்று மூளாமல் – நீ உன் முயற்சிகொண்டு அதிகரித்துக் கொள்ளாமல், நிற்றி – (ஒரே நிலையில்) இருப்பாய்.

4 2 3 3 4 3
ஏஷாதே பிஹிதா ஸாங்க்யே புத்திர் யோகேத் விமாம்ச்ருணு
3 3 4 2 3 3
புத்த்யா யுக்தோ யயாபார்த கர்ம பந்தம் ப்ரஹாஸ்யஸி

(இ–ள்) பார்த்த – அர்ஜுனா! ஸாங்க்அய – ஸாங்க்த்திலுள்ள தத்துவ விஷயத்தில் ஏஷா புத்தி:– இதுவரை சொன்ன புத்தியானது, தே அபிஹிதா – உனக்குச் சொல்லப்பட்டது. யோகே – கர்மயோக விஷயத்தில் யயா புத்யா – எந்த அறிவை, யுக்த: த்வம் – நீ அடைந்தால், கர்ம பந்தம் – கர்மத்தால் வரும் ஸம்ஸாரத்தை ப்ரஹாஸ்யஸி – விட்டுவிடுவாயோ; இமாம் – (அந்த) இதை, ச்ருணு – கேள்.

கீதை முதல் அத்தியாத்தில் அர்ஜுனன் அடைந்த சோகம் விவகரிக்கப்பட்டது. அதனால் சோகம் என்று பொருள் தரும் விஷாதம் என்ற சொல்லால் அப்பகுதியைப் பெரியோர் விஷாதயோகம் என்று வழங்குவர் பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிவதே சோகத்திற்குப் பரிகாரமாதலின் தத்துவ ஆராய்ச்சியாகிய ஸாங்க்யத்தின் பகுதியைக் கண்ணன் சோகம் கொண்ட, அர்ஜுனனுக்கு முமுதலில் உபதேசித்தார். அடுத்தபடியாக ஸாங்க்யத்தின் மற்றோர் பகுதி என்றே கொள்ளத்தக்க வேறோர் யோகத்தைப் பின்னும் கூறலானார்.

14. யோகம் யாருக்கு இல்லை?

உலகில் பிறந்துவிட்டால் இறக்கம்வரை தொழிற்பட்டேயாக வேண்டும். கருமம் செய்வது சுபாவமாய் அமைந்திருப்பதால் உலகில் ஏழை, பணக்காரன், ஞானி, அஞ்ஞானி ஆகிய யாவரும் சிறிதளவாவது செயல் இன்றி இருப்பதில்லை. சிலர் லாபத்தைக் கருதி ஒரு கருமத்தை மேற்கொள்ளுகிறார்கள். நான் என்னும் அகங்கார மிகுதியால் 'ஒன்றில் வெற்றி பெறுவோம்' என்னும் புகழ் ஆசையால் சிலர் கருமத்தை மேற்கொள்ளுகிறார்கள். இவ்விரு சாரரும் லாபமோ வெற்றியோ கிட்டினால் சந்தோஷிக்கிறார்கள். நஷ்டமோ தோல்வியோ பணவசதிக் குறைவாலோ எடுத்த கருமத்தை தொடர்ந்து செய்ய முடியாமல் போனால், ஏற்பட்டால் துக்கப்படுகிறார்கள். தேகாரோக்கியக் குறைவாலோ எடுத்த கருமத்தைக் தொடர்ந்து செய்ய முடியாமல் போனால் பலனையும் பெறாமல் துக்கப் படுகிறார்கள்.

அவ்வாறின்றி ஞானிகள் ஆரம்பத்திலேயே தமது விவேகத்தைக் கொண்டு, தமக்குரிய கடமை இன்னதென்று நிச்சயித்துக் கொள்ளுகிறார்கள். செயல் அற்று இருக்க முடியாத(தனு உடல்) கரணங்களை, அவயங்களை கடமைக்குரிய கருமங்களைடச் செய்வதிலேயே தொழிற்படுத்துகிறார்கள். கடமையாக ஒரு கருமத்தை செய்யும்போது பிரதிபலனை எதிர்பார்ப்பதற்கில்லை. பலனை எதிர்பாரதவர்களுக்கு கருமத்தைச் செய்யும்போது லாபம், நஷ்டம் என்ற இரு வேறு நிலைகள் தோன்றுவதற்கே இடமில்லை. எதிர்பார்த்த பலன் கிட்டுவதும் கிட்டாதுமே வெற்றி தோல்வியாதலால் பலனை எதிர்பாரத ஞானிக்கு கருமத்தில் வெற்றியும் தோல்வியும் தோன்றுவதில்லை. அதனால் அவன் கருமத்தால் இன்ப துன்பமும் எய்துவதில்லை. ஞானியின் மனோபாவம் இல்லாதவர்களுக்கு ஞானி செய்யும் காரியங்களில் லாப நஷ்டம், வெற்றி தோல்வி அதனால் ஞானிக்கு இன்ப துன்பம் ஏற்படுவதைபோலத் தோன்றும் செய்யும் கருமத்தைக் கடமையாக உணர்ந்தது, அதனால் லாப நஷ்டம், இன்பம் துன்பம், வெற்றி தோல்வி என்றும் கரும நிகழ்ச்சிகளைப் போலியாக வேறுபடுத்திக் காட்டும் மனத்தை வென்று எல்லாவற்றையும் உள்ளவாறே சமமாகக் காணமுயல்பவன் யோக சாதனம் பயில்வோனாகிறான். சமத்வ புத்தி வரப்பெற்றவன் யோகியாகிறான், பயிலும் சாதனம் உயர்நிலையில் சேர்ப்பதால் யோகம் ஆகிறது. அதுவே

தத்துவ(உண்மை) ஆராய்ச்சியோடு முரண்படாமல், ஏற்ற சாதனமாயும் இருப்பதால் ஸாங்க்ய யோகம் எனப்பட்டது. அந்த யோகத்தின் ஒரு பகுதியாகிய ஸம பாவனையை அடைந்து போரை மேற்கொண்டால் கொலை முதலிய ஹிம்ஸையால் வரும்பாவம் உன்னையடையாது' என்று தெரிவித்து அடுத்தபடியாக அத்தகைய கருமத்தின் சிறப்பைக் கூறுகிறார்.

செய்த அறம் குன்றாது சேராது அவம் சிறிதும்
எய்தருமம் காக்கும் மிகுபயத்தில்-பொய்தவரும்
புத்திதீர்வு ஒன்றாகும் புன்மைப் பல நினைவாம்
அத்திரம் தீர் வில்லாத வர்க்கு.

(இ–ள்) செய்த அறம் –(ஆரம்ப மாத்திரமானாலும்) செய்தவரை இந்தத் தருமம், குன்றாது–அழியாது. அவம் சிறிதும் சேராது – (இடையேவிட்டாலும்) கொஞ்சம் கூடத்தோஷம் உண்டாகாது எய்தருமம். தருமத்தின் கொஞ்ச பாகமும் மிகு பயத்தில் –(பிறப்பு இறப்புபாகிற) பெரும் பயத்தினின்றும் காக்கும்–காப்பாற்றும், பொய்தவிரும் புத்தி தீர்வு–(இந்த நிஷ்காம கரும யோகத்தில்) நிச்சய ரூபமான புத்தியின் தன்மை ஒன்றாகும்–ஒரே விதமாயிருக்கும். அத்திரம் தீர்வு இல்லாதவர்களுக்கு–நிச்சய புத்தி இல்லாதவர்க்கு புன்மை பல நினைவாம்–அற்பமான பல அபிப்பிராயங்கள் (உண்டு)

நேஹா [4]பிக்ரமநா சோஸ்தி ப்ரதய வாயோ ந வி[3]த்யதே
ஸ்வல்பமப்யஸ்ய [4]தர்மஸ்ய த்ராயதே மஹதோ [4]பயாத்
வ்யவஸாயாத்மிகா [3 3 4]புத்திரேகேஹ குரு [3]நந்தந
[3]பஹு[2]சாகா ஹ்யனந்தாஸ்ச புத்தயோ வ்யவ ஸாயிநாம்.

(இ–ள்) இஹ–இந்த யோகத்தில், அபிக்ரம நாச:– ஆரம்ப மாத்திரத்திற்கும் அழிவு நாஸ்தி–இல்லை. (நடுவே விட்டாலும்) ப்ரத்யவயோ:– தோஷமும் நவித்யதே – இல்லை. அஸ்ய தர்மஸ்ய – இத் தருமத்தினுடைய, ஸ்வல்பம் அபி– சிறிது பாகம் கூட மஹதோபயாத் – பெரும் பயத்தினின்றும் த்ராயதே – காப்பாற்றும்.

குருநந்தன–அர்ஜுனா! இஹ–இந்தயோகத்தில் வ்யவஸாயாத்மிகா – நிச்சய ரூபமான புத்தி:– புத்தியானது ஏகா ஏவ – ஒரேவிதம், அவ்வியவஸாயினம்–(ஸ்பரூப நிச்சியமில்லாதவருடைய புத்தய– புத்திகளோ, பஹுசாகா :– அநேக வகைகள், அநந்தாச்ச – முடிவற்றவை.

பலனில் ஆசை கொண்டு செய்யப்படும் பிறகருமங்கள் முற்றுப் பெற்றுப் பலன் கிடைக்காவிட்டால் செய்த முயற்சி வீணாகும். முற்றுப் பெறாது, இடையே முறிந்தாலும் செய்த முயற்சி வீணாகும். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கருமங்கள் பலத்தில் ஆசையால் செய்யப்பட்டு முடிவு பெறாது தடைப்பட்டால், செய்தவனைப் பாவத்திற்கும் ஆளாக்கும். பலனில் ஆசையின்றிச் செய்யப்படும் நிஷ்காம்ய கருமமோ செய்த அளவில் வீணாகாது இடையே விடுவதால் பாவத்தையும் தராது. செய்யப்பட்ட அதன் சிறிய பாகமும் பிறப்பு இறப்பாகிற பந்தயத்திலிருந்து ஒருவனைக் காப்பாற்றும். "செய்தமட்டில் மிகப்பெரிய பலனாகிற மோட்சத்தைப் பெறுவதற்குச் சாதனமாகும்" என்பது சங்கரர் கூறும் கருத்து. இக்கீதாச் சுலோகத்திற்கு இவ்வாறே பொருள் கருதுவதுபோல "வீழ்நாள் படா அமை நன்று ஆற்றின் அஃது ஒருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்" (வீழ் நாள் படா அமை – வீணாக நாள் செல்லாமல்) என்று திருக்குறளும் அமைந்து இருக்கிறது.

உண்மை இவ்வாறு இருக்கப் பலர் வேதத்தில் சொல்லப்பட்ட இம்மைப் பலன்களையும் சுவர்க்காதி பலன்களையும் கண்டு ஏமாறுகின்றனர். கடல் காற்றின் சுகத்தை மாத்திரம் அனுபவித்துத் திரும்புகின்றவர்கள் கடலின் ஆழத்திலிருக்கும் முத்துக்களையும், ரத்தினங்களையும் தேடி எடுத்து அனுபவிக்கின்றவனுக்குச் சமானமாவார்களா! அவர்கள் தன்மையை அர்ஜுனா! நீ நன்கு கேள்.

"புன்பயனால் பூத்தஉரை போதப் புகல்வர் அறிவு
என்பதனை இல்லார் எழில்மறையில் - நன் பகரும்
சொல்பயனே பற்றிஅதில் தொல் பொருள் மற்றுஇல் என்பார்
கற்பதனைக் காணாதார் கண்"

(இ-ள்) அறிவு என்பதனை இல்லார் – உண்மை ஞானம் இல்லாதவர்களாய், புன் பயனால் – அற்பமான பலனில் ஆசையால் பூத்த உரை – (பூத்துக் காயாத மரத்தின், புஷ்ப மாத்திர பலம் போன்ற) வார்த்தைகளை போதப் புகல்வர் – நிரம்பச் சொல்வார்கள். எழில் மறையில் – சிறந்த வேதத்தில் நன்பகரும் – வெளிப்படையாகத் தெரிகின்ற சொல்பயனே பற்றி – வார்த்தைகளின் அர்த்தத்தைக் கிரகித்து, அதில் – அவ்வேகத்தில் தொல்பொருள் மற்று இல்லென்பார் – சிறந்த அர்த்தம்(பலன்) வேறு இல்லை என்பார்கள், கற்பதனைச் காணாதார் – அறிய வேண்டியதை அறியமாட்டார்கள்.

யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவத3ந்த்ய அவிபஸ்சித:
வே3தவாத்3ரதா: பார்த்த2 நான்யத3ஸ்தீதி3 வாதின:

(இ–ள்) பார்த்த – பார்த்தனே! வேதவாதரதா:– வேதச்சொல் பொருளிலே (வாச்யார்த்தம்) பற்றுடையவர்களாய் அந்யத் நாஸ்தி – (சுவர்க்காதிபலனைத் தவிர) வேறு இல்லை. இதி வாதிந:– என்று வாது செய்து கொண்ட யாமிமாம் புஷ்பிதாம் வாசம் – யாதொரு இந்தப் புஷ்ப மாத்திர பலமுடைய வார்த்தையை, ப்ரவதந்தி – சொல்லுகிறார்களோ (அவர்கள்) அவிபச்சித:– அற்ப புத்தியுடையவர்கள்.

வேதம் 'ஒன்றைச் செய்' என விதிக்கும், செய்தால் இன்ன பலன் என்றும் சொல்லும். விதியையும் பலனையும் சிறப்பாகவும் பேசும் அவ்விதியில் விசுவாசம் ஏற்பட்டுச் சிரத்தையோடு செய்வதற்காக அவ்வாறு பேசுகிறது. அவ்வார்த்தைகளால் கிடைக்கும் பொருளையே கிரகித்து ஆழ்ந்து ஆலோசித்து உள்பொருளைக் காணாமல் வாதிப்பது 'அர்த்த வாதம்' என்று சொல்லப்படுகிறது. வேதத்தால் ஆத்மஸ்வ ரூபத்தை அறிந்துகெண்டவன் மோட்சமே பெறத்தக்க பலன் என்று உணர்வான் உணர்ந்தபோது தேகாரோக்கியம், அதிகாரம், செல்வம் பதவி முதலிய அற்ப பலன்களை அடைவதற்காகவே நம் தர்மங்களை விதிக்கவில்லை. அவ்வாறு கொள்வது சொற்பொருளே அன்றி ஸாரார்த்தம் அல்ல என்று கண்டுகொள்வான் கண்டுகொண்டவன் கருமங்களைப் பகவதர்ப்பணம் செய்து நிஷ்காம்யமாகவே செய்வான். அவன் புத்தி ஒரேவிதமாய்த் தீர்மானமுடையதாயிருக்கும்.

பதவி, பணம்,சொர்க்கம் முதலிய அற்ப பலனை விரும்புவோர் வேத ஸாரத்தை கிரகிக்காதவர்கள்.ஆகையால் வீண் வாதம் செய்வர்கள். சுவர்க்காதி பலன்களில் தாம் மயங்கியிருப்பது போலவே பிறரையும் மயக்குவார்கள். பலன்களில் வைத்திருக்கும் ஆசை காரணமாக மேலும் மேலும் பிறந்திறந்து உழல்வார்கள். ஆசைக்கிடமான பலன்களோ பலவாயிருப்பதால் பலனில் இச்சையுள்ளவர்களுக்கு எண்ணங்கள் பலவாய் எதிலும் தீர்மானம் இல்லாதிருக்கும் அர்ஜுனா! அவர்களுக்கு இந்த யோகம் எவ்வாறு சித்திக்கும்?

போகமிகு செல்வத்துப் பூண்டதன் னெஞ்சழிந்தார்க்கு
ஏக வகையுற்ற எழிற்புந்தி - யோகம்
அமைவுறாது உள்ளத்தில் ஆதலால் வேதச்
சமைவுதான் கேளாய் தரித்து!

(இ–ள்) போகம் மிகு செல்வத்துப் பூண்டு – இன்பம் மிகுந்த சுவர்க்காதி செல்வத்தை விரும்பி அதன் நெஞ்சழிந்தார்க்கு – அதனால் மனம் கலங்கியவர்களுக்கு, உள்ளம்–மனதில், ஏகவகை உற்ற எழில் புந்தி–ஒரேவித நிச்சய ரூபமான சிறந்த புத்தியாகிற, யோகம்–, அமைவுறாது – உண்டாகாது ஆதலால் தரித்து வேதச்சமைவுதான் கேளாய் – நிதானமாய் வேத இயல்பைக்கேள்.

3 3 4 4 4

வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ நவிதீயதே

(ஸமாதௌ – (அவர்களுடைய) மனதில், வ்யவஸாயாத்மிகா புத்தி:– நிச்சய ரூபமான புத்தி நவிதீயதே –(உண்டாகிறதில்லை)

இன்ப துன்பத்தில் ஏற்படும் சமபாவனையே யோகம் பலனில் ஆசை வைத்துக் கருமத்தைச் செய்வோருக்கு, பிறவிப் பிணிக்கு மருந்தாகிய அந்த யோகம் கிட்டுவதே இல்லை. அதை அறிய வேதத்தின் இயல்பையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

15. தாகம் தீரத் தடாக நீர் முழுதும் வேண்டுமா?

வேதத்தின் உண்மை இயல்பு தெரியாதவர்களுக்கு அதன் எல்லாப்பகுதிகளும் பிரதானம் போலவே படும் விவேகத்தைக் கொண்டு ஊன்றிக் கவனிப்போருக்கு அதில் அடங்கிய சாரப்பொருள் விளங்கும் ஸாரப் பொருளை உணர்ந்து பரந்த வேதத்தை நோக்கும் பொழுது கொள்ள வேண்டியதும், விலக்க வேண்டியதும் நன்கு தெரியவரும். பல்வேறு காண்டங்களில் வரும் வாக்கியங்கள் ஒன்றிற்கொன்று முரணாகத்தோன்றினாலும், அவை அவ்வாறு இருக்கவேண்டியதின் அவசியத்தை நன்கு உணர்ந்து அவை யாவற்றிக்கும் சேர அர்த்தம் செய்து கொள்வது மகா விவேகிகளுக்கு சாத்யமாகும். சாமானியர் வேதத்தை விபரீதமாகவும் கிரகிப்பர். தமது அற்ப மதியைக் கொண்டு முழுதும் கிரகிக்கமாட்டாமல் ஒரு சில பகுதிகளை மாத்திரம் பார்த்து 'முன்னுக்குப் பின் முரண்' என்று சொல்லி வேதத்தையே பிரமாணம் இல்லை என்று விலக்கவும் செய்வர். தமது யுக்திக்குப் பொருந்த வில்லையாதலால் கொள்ளத்தக்க பிரமாணம் இல்லை என்று நிந்திக்கவும் செய்வர். வேதமோ கண்ணுக்கெட்டாத கடல் போல பரந்ததாயிருக்கிறது. அர்ஜுனா! நான் சொல்லுகிற சாராத் தங்களாகிற கர்மயோகம் ஞான யோகம் இவற்றைத் தெரிவிக்க வேதம் காண்டம்,

சாகை, ஸம்ஹிதை, உபநிஷத்து, மந்த்ரம் என்று வரும் பல உட்பிரிவுகளோடு கூடியதாய் இவ்வளவு விரிவாய் ஏன் இருக்க வேண்டும்? சில வார்த்தைகளில் மட்டும் ஏன் சுருக்கமாய் இருக்கக் கூடாதா? பலனைச்சொல்லி ஒரு பகுதி கர்மாவை விதிப்பானேன்? மற்றொன்று 'பலனில் ஆசையை விட்டுக் கருமத்தைச் செய்' என்று சொல்லுவானேன்? என்று நீ ஆலோசிக்கலாம்! அதன் காரணத்தைக் கேள்' என்று கண்ணன் கூறலானார்.

முக்குணத்தோர் பண்புரைக்கு மூண்டுமறை நீமன்னா
அக்குணத்து மன்னேல் அவா நெஞ்சாய்-இக்குணத்தால்
சாருதுயர் அற்றுஎன்றும் சத்துவத்தின் அப்புறத்தில்
ஆருமியோ கக்கேம மற்று.

(இ–ள்) மறை–வேதம், முக்குணத்தோர் பண்பு – சத்துவம், ராஜஸம், தாமஸம் ஆகிய மூன்று குணங்களுக்கு வசமானவர்களின் தன்மைக்கேற்ப, மூண்டு உரைக்கும் – எடுத்துப் பேசும், மன்னா! – தலைவனே(அர்ஜுனா) நீ, அவா நெஞ்சாய் – பற்று இல்லாத மனம் உடையவனாய் இக்குணத்தால் சாரு துயர் அற்று – இம்முக்குணங்கள் காரணமாக வரும் துன்பம் இல்லாதவனாய், என்றும் சத்துவத்தின் அப்புறத்தில் ஆரும் – எப்பொழுதும் சத்துவ குணத்தில் நிலைத்து இ–, யோகம் கேமம் அற்று – இந்த யோகக்ஷேமங்கள் இல்லாதவனாய், அக் குணத்த மன்னேல்–அம்முக்குணங்களில் பொருந்தாதே

த்ரை[3] குண்ய விஷயா வேதா[2] நிஸ்த்ரை[3] குண்யோ பவார்ஜு[4]ந
நிர்[3]த்வந்[3]த்வோ நித்ய ஸத்வஸ்தோ[2] நிர்யோக க்ஷேம
ஆத்மாவாந்

(இ–ள்) வேதா–வேதங்கள், த்ரைகுண்ய விஷயா:– மூன்று குணங்களின் விஷயமானவை. அர்ஜுந–, த்வம்–நீ நிஸ்த்ரை குணய: பவ–முக்குணங்கள் இல்லாதவனாய் ஆகு, நிர்த்வந்த்வ:–தொடர்பற்று வனாய் (ஆகு), நித்ய ஸத்வஸ்த :– எப்பொழுதும் ஸத்துவ குணத்தில் பொருந்தி, நிர்யோக க்ஷேம:– யோக க்ஷேமங்களற்று ஆத்மவாந் (பவ) ஊக்கம் உடையவனாக ஆகு.

ஜீவாத்மாக்கள் யாவரும் வேதத்தால் நன்மை அடைந்து உய்ய உரிமை படைத்தவர்கள். குணத்தால் அவர்கள் ஒரே விதாயில்லை. பலவகையாய்ப் பல்வேறு விருப்பங்களோடு இருப்பதால் அவர்கள் எல்லோருடைய நன்மையையும் வேதம் நாட வேண்டியிருக்கிறது.

அதனால் வேதம் சொல்லும் விஷயமும் பல வகையாக வேறுபட்டு விரிவாய் இருக்க வேண்டியது அவசியமாகிறது ஒரு வகுப்பில் வேறுபட்ட பல ரகமான மூளையும், விருப்பங்களும் உடைய மாணவர்கள் நாற்பது பேர் இருந்தால் அவர்கள் யாவரும் அந்த வகுப்பிற்குரிய பாடத்திட்டப்படி அறிய வேண்டியவற்றை அறிந்துதான் ஆக வேண்டும். ஓர் ஆசிரியன் அவர்கள் எல்லோருக்கும் ஒரே விதமான போதனா முறையைக் கையாண்டால் நோக்கம் நிறைவேறுமா? நிறைவேற்ற எண்ணமுடைய ஒரு உத்தம ஆசிரியன் பல்வேறு முறைகளைக் கையாள்கிறான். மூளையும் அதனால் கிரகிக்கும் சக்தியும் அதிகம் படைத்த மாணவனுக்குக் குறைந்த வார்த்தைகளைக் கொண்டு மிகக் குறைந்த நேரத்தில் விளக்குவிக்கும், ஒரு முறையும், குறைந்த மூளையும் அதனால் கிரகிக்கும் சக்திக்குறைவும் உடைய மாணவனுக்கு மிகுந்த வார்த்தைகளைக் கொண்டு உவமை உதாரணம் விளக்கக் கதை முதலியவைகளால் நீண்ட நேரத்தில் விளக்குவிக்கும் வேறு முறையும் என்று பலவிதமாகக் கையாள்கிறான்.

வேகத்தை, மாணவர் முன்னேற்றத்திலே ஊக்கமும் உற்சாகமும் கொண்ட உத்தம ஆசிரியனாகச் சொல்லலாம். தான்பெற்ற குழந்தைகளிடத்தில் அன்பும் கருணையும் கொண்ட தாயாகவும் சொல்லலாம். தான் பெற்ற தனயன் தீயவழிச்செல்வதைச் சகிக்க மாட்டாமல் அதற்காகத் தண்டனை தரும் தந்தையாகவும் சொல்லலாம். வேதத்தால் நன்மை அடைய வேண்டியவர்களிலே பலர் தாமஸகுணம்மிகுந்து மந்த மதிகளாயிருக்கின்றனர் ஊனையும் போகத்தையுமே பிரதான பலன்களாக மதிக்கின்றனர். சிலர் ராஜஸகுண மிகுதியால் பொருள், பதவி இவற்றில் ஆசை கொண்டு கருமத்தில் முயற்சியுடையவர்களாய் சித்த சமாதானமின்றி இருக்கின்றனர். அகங்கார மிகுதியால் இவர்களுக்குப் பொருளாலும் பதவியாலும் வரும் போகமே சிறந்த பலனாகத் தோன்றுகிறது.

வேதம் இவர்களையும் நல்வழிக்கு இழுக்கப் பார்க்கிறது. பிரதான பலமாகிற பந்த நிவர்த்தியில் நாளடைவிலேயாவது இச்சையைப் பிறப்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் அவர்கள் செல்லும் வழியில் தானும் சென்று அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குரிய மந்திரங்களையும் கர்மாக்களையும் சொல்லுகிறது. ஒருவன் தனது இஷ்ட சித்திக்குத் தடை செய்ய வரும் விரோதிகளை அழிப்பதற்கான மந்திரம், சேனயாகம் முதலிய கர்மாக்களையும் சொல்லுகிறது. பிறரைக் கெடுப்பதற்கான செய்வினை, ஏவல் ஆகிய தீய

மாந்த்ரீக கர்மாக்களும் அவற்றிற்குரிய மந்திரங்களும், ஆயுதங்கள் கொடிய மருந்துகள் ஆக்கும் முறைகளும் வேதத்தாற் சொல்லப்படுகின்றன.அதனால் அவர்களுக்கும் வேதத்தில் ஒரு நம்பிக்கை. மேலும் இதில் என்ன அடங்கியிருக்கிறது பார்க்கலாம் என்ற ஆவல் எப்பொழுதாவாது ஏற்படலாம். ஏற்பட்டுப் பார்க்கும் போது அழியாத 'பேரின்பம்' ஒன்று உண்டு என்ற உணர்வு பெற்று அதைப் பெறுவதற்கான முயற்சியையும் மேற்கொள்ளலாம் என்று கருதியே வேதம் எல்லோர் நலத்திற்காகவும் வேண்டி விரிவாக அமைந்திருக்கிறது. 'குழந்தையின் நோய்க்கு மருந்தே பரிகாரம்' என்றறியும் தாய் கசப்பின் காரணமாகத் குழந்தை உட்கொள்ள மறுக்கும் என்பதை உணர்ந்து மருந்தைச் சர்க்கரையில் மறைத்துக் கொடுக்கிறாள் அல்லவா? அது போலவே வேதமும், தமக்கு நிலையான நன்மை இன்னது' என்று உணர்ந்து கொள்ளமாட்டாமல் விபரீத ஞானத்தால் கெட்டலைவோர்களையும் உய்விக்க வேண்டி மருந்து போல் சாரமான தர்மத்தை சர்க்கரைபோல் மனதைக் கவரும் காமிய கருமங்களோடு சேர்த்துக் சொல்லுகிறது.

அர்ஜுனா! முக்குணங்களில் இழிவான ராஜஸமும், தாமஸமும் இன்றிச்சுத்த சத்துவகுண முடையவனாக நீ ஆகவேண்டும். ஆனால் ஆசையற்றவனாவாய் அவ்வாறானவனுக்கு வேதத்தில் கொள்ளவேண்டிய பகுதி எவ்வளவு? என்று கண்ணன் மேலும் கூறுவது.

எங்கு நிறைவுநீர் எழில்தடத்து யாவர்க்கும்
இங்கு மருவுபயன் எவ்வளவாம்-அங்கனைத்து
வேதத்தும் அந்தணற்கு வேண்டுபயன் அவ்வளவாம்
போதத்துக்கு ஈடாப் புணர்ந்து

(இ-ள்) எங்கு நிறை நீர்-நாலா பக்கங்களிலும் நிறைந்த நீரையுடைய எழில் தடத்து இங்கு - அழகிய தடாகத்தில் மருவு பயன் எவ்வளவாம் - தாகம் தீரவோ, நீராடவோ பெற வேண்டிய அளவு எவ்வளவோ, அங்கு அனைத்து-அங்கு போலவே வேதத்தும் - வேதத்திலேயும் போதத்துக்கு ஈடாபுணர்ந்து-ஞானத்துக்குத் தகுதியாகப் பெற்று, அந்தணற்கு வேண்டு பயன் - பிரும்ம ஞானிக்கு அடைய வேண்டிய பிரயோசனம், அவ்வளவாம் - அந்த அளவிலேதான்.

யாவாநர்த[2] உத[3]பாநே ஸர்வதஸ்ஸம்பலுதோதகே[3]
தாவாந் ஸர்வேஷு வேதே[3]ஷு ப்[3]ராஹ்மணஸ்ய விஜாநத:

(இ–ள்) ஸர்வத:– முழுதும் ஸம்பலுதோதகே – நிறைந்த நீருடைய உவபாநே–கிணற்று நீரில், யாவாநர்த்த:– (தாகம் எடுத்தவனுக்கு) எவ்வளவு பிரயோசனமோ (அவ்வளவே) ஸர்வேஷு வேதேஷு – எல்லா வேதங்களிலும், விஜாநத:– (மோக்ஷ ஆசையுடைய) ஞானியான, ப்ராம்மணஸ்ய – பிரும்ம ஞான நிஷ்டனுக்கு (பீரிதி உண்டாகிறது)

தாகவிடாய் கொண்டு நீர் தேடி அயையும் ஒருவன் எல்லாப் பக்கங்களிலும் நீர் நிறைந்த தடாகத்தைக் காண்கிறான். நீர்ப்பெருக்கைக் கண்டு இவ்வளவு நீரையும் எப்படிக்குடிப்பது? அது முடியாத காரியம் ஆயிற்றே. என்ன செய்யலாம்? என்று கவலை கொள்வது போலவே இருக்கிறது ஒருவன் வேதந்தின் பரப்பைக் கண்டு ஏங்குவது தாகம்தீர எவ்வளவு நீர் வேண்டும்? அந்த அளவு தடாகத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்து தனக்கு வேண்டியதைப் பருகித் தாகம் தீர்ந்து போக வேண்டியது தானே. தடாக நீர் முழுதும் அவனுக்கு வேண்டுமா? பிறருக்காகவும் அது உபயோகமாயிருக்கிறது என்பதை மறந்து அவன் ஏன் கவலை கொள்ள வேண்டும்?

அதுபோலவே மோக்ஷத்தில் இச்சையுடைய ஞானியும் பல்வேறு குணங்களையுடைய அதிகாரிகளின் இச்சைகளுக்கு ஏற்றபடி உபயோகமாகும் பொருட்டு வேதம் விரிவாக இருக்கிறது. 'பந்த நிவர்த்திக்குரிய ஸாரமான தர்மத்தை நாம் கொள்வோம்' என்று அப்பகுதியையே கிரகித்துக் கவலை கொள்ளாது தான் பெறவேண்டிய பலனைப்பெற்று மகிழ்வான்.

இச்சுலோகத்திற்கு இக்கருத்திற்குச் சேர மற்றொருவகையாகப் பொருள் செய்து கொள்வதும் உண்டு. ஒரே தன்மையான நீர் கிணற்றிலும் இருக்கிறது,–தடாகத்திலும் இருக்கிறது நதியிலும் இருக்கிறது. ஸ்நாநத்திற்கு உபயோகமான நீர் பரந்த கடலிலும் இருக்கிறது. ஸ்நானபானத்திற்கு, கொஞ்சம் நீருள்ள கிணற்றில் எவ்வளவு பயன் உள்ளதோ அவ்வளவுதான் நாலாபக்கங்களிலிருந்தும் வந்து சேருகின்ற அதிக நீருள்ள தடாகத்தாலும், அவ்வாறே நதியாலும், கடலாலும்.

நீர் கிணற்றிலும் ஆற்றிலும் தடாகத்திலும் கடலிலும் இருப்பது போல, வேத ஸாரம் கர்ம காண்டத்திலும் உபநிஷத்ரூபமான ஞான காண்டத்திலும் இருக்கிறது. முடிவான சாரார்ந்த ரூபமான தர்மத்தைப்பற்ற வேண்டியதே ஞானியின் கடமையாதலின் அவனுக்கு வேதத்தில், பந்த நிவர்த்திக்காகக் கொள்ள வேண்டிய பகுதி ஒரு

சிறிதளவே அதை அவன் வேதத்திலிருந்து கிரகித்தாலும், உபநிஷத்திலிந்து கிரகித்தாலும், 'தத்வமஸி' என்பது போன்ற மகா வாக்கியங்களிலிருந்து கிரகித்தாலும் அளவு ஒன்றே.

ஆகவே வேதம் பரந்திருந்தாலும் அர்ஜுனா! ஜீவாத்மா தனது நிலையான நலனுக்காகக் கொள்ள வேண்டிய சாரமான பகுதி அளவில் சிறியதாய் இருப்பதால் கலக்கத்திற்கே இடமில்லை! அடுத்தபடியாக ஜீவாத்மாவின் உரிமையின் எல்லையைத் தெரிந்து கொள்' என்று மேலும் சொல்லானார்.

16. யோகமே சிறந்தது

வேதம் பல கர்மாக்களைச் சொல்லும். செய்தால் இன்னபலன் கிட்டும் என்பதையும் தெரிவிக்கும் அப்பலன்களைக் கொடுப்பவனோ ஈச்வரன் கர்மாவைச் செய்கின்றவனுக்கோ தனது நன்மைக்கிடமாக எந்தப் பலனைப்பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதே நன்கு தெரியாது. எந்தப் பலன் நன்மை செய்யும்? எந்தப் பலன் தீமையைத் தனக்கு உண்டாக்கும்? என்ற விவேகம் ஒருவனுக்குச் சரியாக அமைந்திருந்தால் தானே உரிய பலனைக் கொடுப்பவனிடம் வேணடத் தெரியும் ஒரு பலனைக் கோரி ஒருவனிடம் சென்றாலும் கொடுப்பவன் சென்றவனை மதிப்பதில்லை ஏழைக்கும் யாரிடம் எதைக் கேட்கவேண்டும் என்பதும் நன்கு தெரிவதில்லை. குபேரன் ஒரு ஏழையைக் கண்டு மனமிரங்கி உனக்கு வேண்டியதைக்கேள்' என்றான். அப்பொழுது ஏழைக்குத் தன் கிராமத்தில் தவிடுவிலை ஏறிப்போய் தன்னுடைய காளைக்கன்றிற்குத் தவிடு வாங்குவதில் இருந்த கஷ்டம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே 'குருணித் தவிடு கொடு' என்று குபேரணைக் கேட்டானாம்.இது கற்பனைக் கதையானாலும் பலன் கருதிக் காமியகருமங்களைச் செய்யும் உலகினரின் மனோநிலையை உள்ளபடி எடுத்துக் காட்டும் கண்ணாடி என்றே சொல்லாம்.

தவிட்டுப் பஞ்சம் போனால், புல்லுப் பஞ்சம். அதுபோனால் பருத்திக் கொட்டைப் பஞ்சம் என்று மாறி மாறிப் புதுப் பஞ்சம் வரும். எல்லாவற்றையும் ஒரேடியாக ஒழித்துக் கட்டவேண்டிய பெரியபலன் ஒன்றைக் குபேரனிடம் பெறமுடியும் என்பதை அறியமாட்டாத ஏழையின் நிலைதான் ஜீவாத்மாக்களின் நிலையும். ஒருவன் தேகாரோக்கியத்தை வேண்டுவான். மற்றொருவன் செல்வத்தை வேண்டுவான். மற்றொருவன் பதவியை மற்றவன் சுவர்க்கத்தை. இவற்றில் எதுவும்

நிலையான திருப்தியை உண்டாக்கப் போவதில்லை. ஒன்றைவிட்டு ஒன்றையோ கிடைத்ததைச் சேர்த்து மற்றையதையோ பற்றவே தூண்டும். அதனால் பிறப்பு இறப்பாகிற பந்தம் வலுவடைந்து கொண்டே போகும், குழந்தைக்கு நன்மை எது? தீமை எது? என்பது தாய்க்கே நன்கு தெரிவது போல் ஜீவாத்மாவுக்கு உரிய பலன்களின் விஷயம் அவற்றைக் கொடுக்கும் ஈச்வரனுகே நன்கு தெரியும். ‘அதைத்தா, இதைத்தா’ என்று தாயை நச்சரிக்காமல் அடங்கி இருக்கவேண்டிய உத்தமக் குழந்தையைப் போலவே ஜீவாத்மாவும் தனக்குரிய வரம்பில் இருக்கவேண்டும் அர்ஜுனா!அவ்வரம்பை தெரிந்து கொள்.

கருமத்தே உன்தன் அதிகாரம் கண்டாய்
வரும்அப் பயனில் அணு மன்னாது-ஒருமித்து
மற்றதனுக்கு ஏதுவாமன்னேல்; கருமம்அலா
வெற்றமைவில் வேண்டா விருப்பு.

(இ-ள்) கருமத்தே உன்தன் அதிகாரம் கண்டாய் கருமம் செய்வதில் மாத்திரம் உனக்கு அதிகாரம் இருக்கிறது எனத் தெரிந்துகொள்; வரும் அப்பயனில் அணுபன்னாது – உண்டாகும் அந்தப் பலனில் சிறிதளவும் (சம்பந்தம்) பொருந்தாது; அதனுக்கு ஒருமித்து– கருமத்திற்கும் அதன் பலனுக்கும் சேர்ந்து ஏதுவா மன்னேல்– காரணமாக ஆகாதே; கருமம் அலா வெற்றமைவில்–கருமம் செய்யாது சோம்பி இருப்பதில் விருப்பு வேண்டா–(உனக்கு) விருப்பம் கூடாது.

கர்மண்யே வாதிகாரஸ்தே மாபலேஷு கதாசந
மாகர்ம பல ஹேதுர்பூர்மா தே ஸங்கோஸ்த்வ கர்மணி.

(இ-ள்) தே–உனக்கு, கர்மணி ஏவ–கருமம் செய்வதில் மாத்திரமே அதிகாரம் (இருக்கிறது). பலேஷு–பலன்களில் கதாசந– ஒருக்காலும், மா–வேண்டாம், கர்மபல ஹேது:– கருமத்துக்கும் பலத்துக்கும் காரணமாக, மாபூ:–ஆகாதே. அகர்மணி–கருமம் செய்யாமலிருப்பதில், தே ஸங்க:– உனக்குஸம்பந்தம்மாஸ்து– வேண்டாம். ஜீவாத்மாவின் உரிமையை அல்லது ஓரளவில் அதன் ஸ்வரூபத்தைச் சொல்ல வந்த இந்தச் சுலோகத்தில் நான்கு விஷயங்கள் அடங்கி இருக்கின்றன. (1)ஜீவாத்மா கருமம் செய்வதற்கு மாத்திரம் அதிகாரம் உடையது. (2)எப்பொழுதும் பலன்களில் அதிகாரமற்றது (3) ஸ்வரூபத்தைப் பார்த்தால் கருமம் பலன், இரண்டிற்கும் காரணமாக அருகதை இல்லாதது. (4) கருமம் செய்யாமல் இருக்கவும் தகாதது.

இச்சுலோகத்திற்கு ராகவேந்திரரும், ராமாநுஜரும் விரிவுரை தந்துள்ளார்கள். அவற்றின் ஸாரத்தையும் இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

(ராக) ஜீவனுக்குக் கருமம் செய்தில் அதிகாரம் உண்டென்றதைக் கொண்டு பலன் அடைவதிலும் அதிகாரம் உண்டென்று நினைக்கக் கூடாது. செய்யும் கருமத்திற்குப் பலன் வழங்குவது பகவானின் இஷ்டத்தைப் பொறுத்தே இருக்கிறது. ஞானி பலத்தில் ஆசையில்லாதவனாய் மோக்ஷ தசையில் அதிக ஆனந்தம் உண்டாகும்பொருட்டுச் செய்ய வேண்டிய சத் கருமங்களை எந்த ஜீவனும் செய்யாது விடத்தகுந்தவனல்லன். ஜீவன் தான் பலனையடைச் சுதந்திரன் என்று எண்ணாமல் பகவானை எஜமான் என்றும் தன்னைத் தாஸன் என்றும் எண்ணவேண்டும். தாஸன் என்று தன்னை எண்ணிப் பகவானோடு ஐக்கிய பாவனையை அறவே விட்டு ஈசுவர ஆராதனை ரூபமாகவே ஜீவன் கருமங்களைச் செய்ய வேண்டும்.

(ரா) ஜீவாத்மா பலனில் ஆசையில்லாமலும் தன்னைக் கர்த்தா என்று எண்ணி அகங்கார, அபிமானங்களுக்கு ஆளாகாமலும் ஈசுவராதீனமாகக் கருமத்தைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் அக்கருமத்திற்கு வேதத்தில் கூறப்படும் பலனை அடையாமல் மோக்ஷத்தை அடையலாம். ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைப் பார்த்தால் அதற்குப் பொருத்தமாக அவசியம் ஈசுவராதீனமாகக் கருமம் செய்ய வேண்டியவனாகிறான். அதனால் ஜீவாத்மாவுக்குக் கருமத்தைச் செய்யாமல் விடுவதற்கும் அதிகாரமில்லை.

பலனைத்தரும் சக்தியோ கருமத்திற்கு இல்லை. அதில் ஆசை வைப்பதோ ஜீவாத்மாவிற்குத் தகாது. அதற்காகக் கருமத்தைச் செய்யாது விடுவதும் கூடாது. என்றால் எல்லோரும் கருமத்தைச் செய்துதான் ஆகவேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது அவசியம் கொள்ளவேண்டிய மனோபாவமே யோகம் என்று அடுத்தபடியாக சொல்லப்படுகிறது.

பேறு இழவில் ஒத்தமைத்துப் பேணு நசை
துறந்து தேறிவரும் யோகத்துச் சேர்ந்து நீ-ஆறி
அமைந்து இத்தகைவில் ஆம்கருமம் ஏந்துக நீ யோகம்தான்
ஒத்தல் எனஉரைப்பர் ஓர்ந்து.

(இ-ள்) நீ–, பேறு இழவில்–(பல) ஸித்தியிலும் அஸித்தியிலும் ஒத்து அமைத்து–(மனதைச்) சமமாகச் செய்து, பேறுநசை துறந்து– பழகிய ஆசையை விட்டு. தேறி வரும் யோகத்துச் சேர்ந்து–தெளிவோடு வரும் யோக நிஷ்டையைப் பெற்று, இத்தகைவிலாம் கருமம்– இவ்விதமான கருமத்தை, நீ ஏந்துக–நீ மேற்கொள்வாயாக, யோகம்தான்–யோகம் என்பது, ஒத்தல் என–ஸமமாயிருத்தன் என்று, ஓர்ந்து உரைப்பர்–(பெரியோர்) அறிந்து சொல்லுவர்.

யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய
ஸித்த்ய ஸித்த்யோஸ் ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே.

(இ-ள்) தனஞ்ஜய–அர்ஜுனா! ஸங்கம் த்யக்தவா – பற்றை விட்டு, ஸித்ய ஸித்யோ:– பல ஸித்தியிலும் அஸித்தியிலும். ஸமோ பூத்வா ஸமமாயிருந்து, யோகஸ்த:– யோக நிஷ்டனாய் கர்மாணிகுரு – கருமங்களைச் செய்; ஸமத்வம்–ஸமமாயிருப்பதே. யோக: உச்யதே– யோகமாகச் சொல்லப்படுகிறது.

சில வார்த்தைகள் தம் ஓசையினால் கேட்போருக்குப் பயத்தை உண்டுபணணும். ஸாமானியரால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத மிகச் சிக்கலான பொருளை விவகரிக்கும் விஷயம் என்று ஓசையினால் மருளவும் பண்ணும். ஆப்பரேஷன் என்னும் ஆங்கில வார்த்தை தனது ஓசையினால் நோயாளியைத் திகில் அடையப் பண்ணி வந்ததாம். அதைக் கேட்ட மாத்திரத்திலேயே கூரிய கத்தி முள், கத்தரி, ரத்தம் முதலியவற்றை நோயாளி எதிரே தோற்றுவித்து, வீணான பயத்தால் மரணத்தை அதுவே உண்டாக்குகிறது' என்று ரண சிகிச்சைக்கு அப்பெயரையே மாற்றிவிட வேண்டும் என்று ஒரு மனோதத்வ சாஸ்திரி சொன்னாராம். அவ்வாறே யோகம் என்பதும் சாமானியரால் விளக்கிக் கொள்ள முடியாததும், பயிலவே முடியாததுமான ஒரு பெரிய சாஸ்திரம். ஒன்றிரண்டு பிரசங்கங்களில் அதைத் தெரிந்து கொள்ளவே முடியாது என்று எல்லோரும் நினைக்கிற ஒரு வார்த்தையாகவே கீதை தோன்றிய இந்நாட்டிலும் இருந்து வருகிறது.

ஆனால் கீதையில் கண்ணன் யோகத்தை எல்லோரும் வெகு எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாகவே சொல்லுகிறார். எல்லோரும் நிலையான நன்மையைப் பெற விரும்பினால், பற்றுதற்கு உரிய ஸாதனம் யோகம் அன்றி வேறு இல்லை என்கிறார். ஸித்தியை அடையினும் அடையாவிடினும் ஸமமாய் (மனச் சலனமின்றி) இருப்பதே யோகம்.

என்று இதைவிடத்தெளிவாய்ச் சுருக்கமாய்க் கூறமுடியுமா?இதைக் கண்டு தெளிந்து வாழ்விலே பயின்ற பெரியோர் பலர் இந்நாட்டில் இருந்தனர். அவர்களே யோகிகள் என்று கொண்டாடப்படுகின்றனர். நம்முடனே வாழ்ந்து மறைந்த மஹாத்மாவின் பெருமைக்கும் காரணமாயிருந்ததும் இந்த யோகமே. இந்த யோகத்தை மஹாத்மா தான் பயின்று யோகியாக மாத்திரம் இருந்துவிடவில்லை தன்னை அண்டினவர்களும் பயிலவேண்டும் என்று பிரார்த்தனைக் கூட்டங்களில் இப்பகுதியை அடிக்கடி உபதேசிக்கவும் செய்தார்.

இச்சுலோகத்தில் வரும் 'ஸித்ய ஸித்யோ:' என்ற தொடருக்கு கீதார்த்த தீபிகையில் 'பலனாகிய ஞானஸித்தியை அடைந்தாலும், அடையாவிட்டாலும்' எனப் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. அது அறிவுடையோர் சிந்தனைக்குரியது. 'கருமத்தை யோகபாவனையோடு தான் செய்யவேண்டும்' என்றாலும் அதில்லாமலே பலனில் இச்சையோடு பெரும்பாலோர் கருமங்களைச் செய்கிறார்களே ஏன்? என்று அர்ஜூனன் ஆலோசித்தான் அப்பொழுது கண்ணன் சொல்கிறார்

தக்கருமம் புத்தியோ கத்தில் தனஞ்ஜயனே
அக்கருமம் தூர அவரங் சயனே காண்-ஒக்கவரும்
புத்திக்கே நிற்கும் புகல்விரும்பு புல்லியர்காண்
அத்தித்தே செய்யும் அவர்.

(இ-ள்) தனஞ்சயனே! – அர்ஜூனா, தக்கருமம் புத்தியோகத்தில்–ஸமநிலை வாய்ந்த புத்தியோகத்தோடு வரும் கருமங்களைவிட, அக்கருமம் –அந்தக் காமிய கருமமானது, தூர அவரம் காண்–மிகவும் இழிவானதெனத் தெரிந்துகொள்; ஒக்கவரும் புத்திக்கே நிற்கும் புகல்–தகுதியாக வரும் யோகத்திலே நிலைக்கும் உபாயத்தை, விரும்பு–(அடைய) விரும்பு. அத்திக்கே செய்யும் அவர்–(காமிய பலனின்) ஆசை கொண்டு கருமம் செய்பவர். புல்லியர்காண்–(ஸம்ஸாரத்திற்காளாகி) இழிந்தவராவர் என்று அறி.

தூ3ரேண ஹ்யவரம் கர்ம பு3த்3தி4 யோகா3த் த4னஞ்ஜய
பு3த்3தௌ4 சரமணன்விச்ச2 க்ருபணா ப2லஹேதவ:

(இ-ள்) தநஞ்ஜய – அர்ஜூனா!, புத்தியோகாத்–ஸமத்வ புத்தியுடன் கூடிய கருமத்தைக் காட்டிலும், கர்ம–(காமிய) கர்மமானது, தூரோண ஹ்யவரம் – மிகவும் இழிவானது, அத:–ஆகையால், புத்தௌ–ஸமபுத்தியோடு கூடிய யோகத்தில், சரணமந்விச்ச–(புகல்)

உபாயத்தை விரும்பு, பலஹேதவ:-பலத்துக்குக் காரணமானவர்கள்; க்ருபணா:(ஸம்ஸாரிகளாகி) இழிவந்தவராவார்.

ஸமத்வ புத்தியோடு செய்யப்படும் கருமம் துன்பத்திற்கிடமான பந்தத்தைப் போக்கி மோக்ஷத்தைத் தருகிறது. பலனில் இச்சைகொண்டு செய்யப்படும் காமியக் கர்மமோ பந்தத்தை மேலும் உண்டாக்கி இழிவான ஸம்ஸார நிலையில் தள்ளித் துன்பத்தை மேலும் மேலும் தருகிறது. ஆகவே காமிய கருமம் பலர் செய்யினும் மிக இழிவானது. அர்ஜூனா! இவ்வுண்மையை உணர்ந்த நீ நிஷ்காமகருமயோகத்தையே அடை' என்பது உபதேசம்.

இச்சுலோகத்தில் வரும் (1)'க்ருபணா:' என்ற சொல் பாடலில் புல்லியர்' என்று பொருள் கொள்ளப்பட்டது. (2) 'புத்தௌ சரணமந் விச்ச' என்ற தொடல் பாட்டில் 'புத்திக்கே நிற்கும் புகல் விரும்பு' என்று கொள்ளப்பட்டது. இதுபற்றி உரையாசிரியர்கள் வெவ்வேறான அபிப்பிராயம் கொண்டுள்ளனர். அதுவும் அறிவுடையோர் தாமே சிந்திக்க வேண்டியது (1) க்ருபணா: சங்கரரும் ராமாநுஜரும் 'பிறப்பு இறப்பாகிற' துக்கத்தை அடைவார்கள் என்று பொருள் கூறினர். ராகவேந்திரர் 'ஈசுவர ஐக்கிய ஞானத்தை விரும்புவோர் அந்தகாரத்தில் செல்வார்கள்' என்றார். (2) புத்தௌ சரணமந்விச்ச:- (சங்) பரமார்த்த ஞானத்தைப் புகலாக அடைவாயாக, (ராமா) 'காமிய கருமம் பந்தத்திற்குக் காரணம்; நிஷ்காம கருமம் மோக்ஷத்திற்குக் காரணம் என்னும் அறிவை அடைவாய்.

17. யோகத்தில் ஆத்ம ஞானமும் பெறலாம்

நோயாளி ஒருவன் பலரிடம்போய் வைத்தியம் செய்து கொண்டான். ஒரு வைத்தியர் உள்ளுக்கு மருந்துகள் கொடுத்தார். ஒருவர் பல ஊசிகள் போட்டுப் பார்த்தார். மற்றொரு வைத்தியர் நவரக்கிளி முறை சிகிச்சையைச் செய்து பார்த்தார். நோய் எதிலும் குணமாகவில்லை. பல பிரபல வைத்தியர்களாலும் குணப்படுத்த முடியாது போனதால் நோயாளி தனக்கு வந்தது மிகப் பெரிய நோயாகவிருக்க வேண்டுமென்று நினைத்து ஏங்க ஆரம்பித்தான். அப்பொழுது கொடிய நோய்களை எல்லாம் விசித்திரமான முறையில் வெகு துரிதமாகக் குணப்படுத்தி வந்த ஒரு பிரபல சந்நியாசியைச்

சந்தித்ததான். அவரிடம் தன் நோயைத் தெரிவித்த போது சந்நியாசி ஒரு பஸ்பத்தை, பொட்டலங்களாக மடித்துக் கொடுத்து வெந்நீரில் கலந்து சாப்பிடச் சொன்னார். நோயாளி பொட்டலத்தைப் பிரித்து மோந்து பார்த்தான். "சீ! எங்க வீட்டுக் கொல்லையிலிருக்கும் வேப்பம் பட்டைத் தூள். இதையா பெரிய மருந்து என்று கொடுத்துவிட்டார் சந்நியாசி" என்று அலட்சியமாகச் சொல்லிச் சாப்பிடாமல் வைத்து விட்டான்.

இதே வித மனோபாவம்தான் உலகில் பலருக்கு இருக்கிறது. பிரசங்கம் மிகத் தெளிவாக இருந்து விட்டால் பிரமாத விஷயமாயிருக்கும் என்று நினைத்தேன். சீ! இவ்வளவுதானா! எனக்குக்கூடப் புரிகிறதே' என்று அலட்சியமாகப் பேசுவதுதானே கேட்போரின் இயல்பு. பலரால் மிகப் பிரமாதமாக எண்ணப்படும் யோகத்தைக் கண்ணன் வெகு சுருக்கமாகவும் தெளிவாகவும் அர்ஜுனனுக்குச் சொல்லிவிட்டார். "சித்தியை அடைந்தாலும் அடையாவிட்டாலும் அதில் சமபாவனையோடிருப்பது யோகம்" என்று யோக லட்சணம் சூத்திரம் போல் சுருக்கமாக விருப்பதோடு எவரும் அறிந்து கொள்ளும்படி மிகத் தெளிவாகவும் இருந்தால் 'யோகம் என்பது இததானா? இவ்வளவுதானா? இதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது?" என்று அலட்சிய பாவம் அர்ஜுனனுக்கு ஏற்படலாமல்லவா? அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு யோகத்தால் உண்டாகும் நன்மைகளையும் அதன் சிறப்பையும் பற்றிக் கண்ணன் அடுத்தபடியாகச் செல்லுகிறார்.

இந்நிலையில் புத்தியுடன் ஏய்ந்தார் இருமைவினை
தந்நிலையை இங்கே தவிர்வர்காண்-நன்னிலையான்
மெய்கருதி யோகத்து மேவுதிநீ யோகங்காண்
செய்கருமத் தாகும் சிறப்பு.

(இ—ள்) இந்நிலையில் (சமபுத்தியோடு கூடிய) இந்த விதத்தில் புத்தி உடன் ஏய்ந்தார்—புத்தியோடு கூடியவர். இருமைவினை தன்நிலையை—புண்ணியம் பாவம் இரண்டையும், இங்கே — இப்பிறப்பிலேயே (இவ்வுலகத்திலேயே), தவிர்வர்காண்—துறந்துவிடுவார் என்று தெரிந்துகொள், நல் நிலையான் மெய் கருதி—(ஆகையால்) சரியான முறையில் தத்துவத்தை எண்ணி, நீ யோகத்து மேவுதி—நீ யோகத்தில் பொருந்து, யோகம்—யோகம் என்பது செய் கருமத்து ஆகும்

சிறப்பு–செய்யப்படும் கருமங்களிலுள்ள சாமர்த்தியம் என்று, காண்–தெரிந்துகொள்.

3 3 4 4 3

புத்தியுக்தோ ஜஹாதீஹ உ_பே ஸுக்ருத துஷ்க்ருதே

3 3

தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு கௌசலம்.

(இ–ள்) புத்தி யுக்த:– புத்தியுடன் கூடியவன் இஹ–இப்பிறப்பில் ஸுக்ருத துஷ்க்ருதே உபே–புண்ணியம் பாபம் இரண்டையும், ஜஹாதி – விடுகிறான் தஸ்மாத – ஆகையால் யோகாய–(முன் சொல்லப்பட்ட சமபுத்தி) யோகத்துக்காக யுஜயஸ்வ – முயற்சிபண்ணு யோக:– யோகம் என்பது கர்மஸு – கருமங்களில் (கொள்ளப்படும்) கௌசலம் – ஸாமர்த்தியம் (ஆகும்).

உலகில் தொன்று தொட்டுப் பல மதங்களும் சித்தாந்தங்களும் இருந்து வருகின்றன. அவையாவும் மோட்சநிலையை வெவ்வெறுவகையாகப் பேசியபோதிலும் உயிர்களுக்கு அந்நிலையில் பூரண விடுதலை உண்டென்பதை ஒப்புக்கொள்ளவே செய்கின்றன. அவ்விடுதலைக்கு மாறான நிலை பந்தம் (கட்டு) பந்தத்தைச் செய்தவை மேலும் மேலும் செய்து தருபவை புண்ணிய பாபங்கள், அல்பகாலமிருக்கும் சுகமாகிய பலனை அனுபவிப்பதற்காகப் புண்ணியம் பிறவிப் பந்தத்தைத் தரும் அவ்வாறே துக்கமாகிய பலனை அனுபவிக்கப் பாபமும், பிறவியைத்தரும் சுகத்தைப் பலர் விரும்புகிறார்கள். துக்கத்தை வெறுக்கிறார்கள். ஆனால் இரண்டிற்கும் முறையே காரணமான புண்ணிய பாபங்கள் ஒரே விதமாகப் பந்தத்தையே செய்கின்றன. அதனால் ஞானிகள் புண்ணிய பாபங்கள் இரண்டையும் உயிரைக் கட்டும் விலங்குகளாகவே மதிக்கிறார்கள். புண்ணியத்தைப் பொன் விலங்கு என்று சொல்லாம். பாபத்தை இரும்புவிலங்கு என்று சொல்லலாம். தோற்றமாகிற நிறத்தில் வேறுபட்டு, கட்டும் தொழிலில் ஒரேவிதமாயிருக்கிற இரு விலங்குகளைப் போன்று இரு வினைகளும் இருக்கின்றன.

செய்யும் கருமத்தால் புண்ணியமோ பாபமோ உயிருக்கு வந்தே தீரும் . எது வந்தாலும் பந்தமாகிற பிறவி திரும்பத்திரும்ப உண்டாகும். எனவே பந்தத்திற்குக் காரணமான புண்ணிய பாவங்களைப்போல் கொடிது வேறெதுவுமில்லை. முக்தியாகிய (விடுதலையாகிய) பேரின்பத்தைப்பெற அவற்றை விலக்கவேண்டியது மிக அவசியமாகிறது. அவை விலகினால் அன்றி அழியாத பலனாகிற முக்தி விடுதலை மோட்சம் அல்லது பந்த நிவர்த்தி உயிருக்கு உண்டாகாது. இந்த யோக ஸாதனத்தால் பந்தத்திற்குக் காரணமான இரு

வினைகளையும் விலக்கிவிடலாம் என்றால் பலன் தருவதில் இதைப் போல் சிறந்தது ஒன்று உண்டோ? என்று அர்ஜுனனைக் கேள்விகேட்டுப் பெருமையைத் தெரிவிப்பது போலவே அமைந்திருக்கிறது.

சுலோகத்திலும் பாட்டிலும் 'கருமங்களிலுள்ள சாமர்த்தியம் யோகம்' என்று சொல்லப்படுகிறது. இதில் 'சாமர்த்தியம்' (கௌசலம்) என்பதற்கு ஓர் உரை ஆசிரியர் அழகாக வியாக்கியானம் எழுதுகிறார். "பந்தத்தைச் செய்வது கருமங்களின் சுபாவமா யிருக்கிறது. அவற்றைச் செய்தே ஆகவேண்டிய ஜீவாத்மாக்கள் பந்தக்திற்காளாகாதிருக்க வேண்டுமானால் கருமங்களைச் செய்யும்போது பலனில் இச்சையில்லாமல் செய்யவேண்டும். ஈசுவரார்ப்பண புத்தியோடும் செய்யவேண்டும். அவ்வாறு செய்து கருமங்களை மோட்சத்திற்கச் சாதனம் ஆக்கிக் கொள்வதே சாமர்த்தியம் ஆகும்.யோகத்தால் உண்டாகும் மற்றொரு நன்மையை அடுத்தபடியாகச் சொல்கிறார்.

எவ்வளவில் நின்மோகத்திற் கிலக்கமாம் இதனை
இவ்வகையே புந்தி எழக்கடக்கும் - அவ்வளவில்
கேதம் மருவுதிநீ கேட்டதிலும் கேட்பதிலும்
மேதம் மிகும்பயனும் என்று.

(இ–ள்) எவ்வளவில் –எப்பொழுது, நின் மோகத்திற்கு இலக்கமாம் இதனை உன்னை மோகமாகிய பாவத்திற்கு உள்ளாக்கும் இவ்வாசையை இவ்வகையே புந்தி எழக்கடக்கும் – இந்த யோகமுறையால் அறிவு தாண்டுமோ, அவ்வளவில் – அப்பொழுது, நீ – கேட்டதிலும் கேட்புதிலும் – இதுவரை கேட்டும் இனிமேலும் கேட்கப் போவதாயிருக்கிற உலக விஷயங்களில், மேதம்மிகும் பயனாம் என்று – துன்பத்தைப் பெருக்கம் பலனே (அவற்றால்வரும்) என்று உணர்ந்து, கேதம் மருவதி – (அவற்றில் நீ) வைராக்கியத்தை அடைவாய்.

யதா[3]தே மோஹ கலிலம் பு[3]த்[3]தி[4]ர் வ்யதிதரிஷ்யதி ததா[3]
க[3]ந்தாஸி நிர்வேதம்[3] ச்ரோதவ்யஸ்ய ச்ருதஸ்யச

(இ–ள்) யதா–எப்பொழுது தே– உனக்கு புத்தி:–புத்தியானது மோஹகலிலம்–மோஹம் என்னும் தோஷத்தை, வ்யதிதரிஷ்யதி– தாண்டுகிறதோ, ததா–அப்பொழுது, ச்ருதஸ்ய – (உலக விஷயமாக) கேட்டதிலும், ச்ரோதஸ்யச–கேட்கப் போகிறதிலும், நிர்வேதம்– வைராக்கியத்தை கந்தாஸி–அடைவாய்.

இந்திரியங்கள் யாவும் புறப்பொருள்களையே கண்டும் கேட்டும் தொட்டும், நுகர்ந்தும் சுவைத்தும், சுலபமாய் உணரக்கூடிய வகையில் அமைந்திருப்பதால் மனத்தைப் புற(உலக) விஷயங்களிலே இழுக்கின்றன அவற்றில் ஆசையையும் உண்டாக்கி விடுகின்றன. அவ்வாசையின் பலன் துக்கமாகவே முடிகிறது. அத்துக்கத்தைத் தவிர்ப்பதற்கு மனம் ஆசையை விட வேண்டும். ஆசை நீங்கப் புற விஷயங்களில் வைராக்யம் பிறக்க வேண்டும். அகப்பொருளை (தன்னை)க் காணமாட்டாமல், புறப் பொருள்களையே கண்டு உணர்பவனுக்கு வைராக்கியம் தோன்றுவது மிக அரிதான காரியமாகும். பெற அரிதான வைராக்கியத்தையும், காரியசித்தி அடைந்தாலும் அடையாவிட்டாலும், சமமாயிருந்து கருமங்களைச் செய்யும் யோகத்தால் அடையலாம் என்று மற்றுமோர் நன்மை இதனால் சொல்லப்பட்டது யோகத்தால் வரும் பிறிதோர் நன்மையை மேலும் சொல்லுகிறார்.

ஓதுமென்பால் கேள்வி உற்றமைந்த புந்தி உயிர்
மீது சமாதிக்கண் மிகச் சலியாப்-போதில் நீ
அந்தி யோகத்து உணர்வை மன்உறுதி ஆங்கதுகாண்
புந்தி யோகத்தின் புணர்ப்பு

(இ–ள்) ஓதும் என்பால் – பலவற்றைச் சொல்லும் என்னிடம், கேள்வி உற்று அமைந்த புத்தி– கேட்பதனால் தெளிவு பெற்ற உன் புத்தி உயிர்மீது சமாதிக்கண் மிகச் சலியாப் போதில் – ஆத்மாவிடத்தில் நிலைபெற்று சிறிதும் சலனமற்ற நிலையில் அந்தி யோகத்து உணர்வை உறுதி – முடிவான ஆத்ம யோக ஞானத்தை அடைவாய். புந்தி யோகத்தின் புணர்ப்பு –(என்னால் இது வரை சொல்லப்பட்ட) சாங்கிய யோகத்தின் பயன் அது காண்– அதுவென்று தெரிந்துகொள்.

ச்ருதி விப்ரதி பந்நாதே யதா ஸ்தாஸ்யதீ நிச்சலா
ஸமாதா வசலா புத்தி: ததா யோகம் அவாப்ஸ்யஸி

(இ–ள்) ச்ருதி விப்ரதி பந்நா –(என்னிடத்தில்) கேட்பதனால் மிகவும் தெளிவுற்றதாய், அசலா–ஏக ரூபமாயிருக்கின்ற தே புத்தி:– உன் புத்தியானது ஸமாதௌ – ஸமாதியில், யதா நிச்சலா – எப்பொழுது அசைவின்றி, ஸ்தாஸ்யதி–நிலைக்கின்றதோ–யோகம்–ஆத்ம ஞானத்தை, அவாப்ஸ்யஸி–அடைவாய்.

ஆத்ம தரிசனம் பெறுவதை மிகக் கடினமான காரியமாக வேதாந்தங்கள் கூறுகின்றன. வேத மூலத்தை மனப்பாடம் செய்ய வேண்டும். அதன்பின் வேதப் பொருளையறிந்து விதித்த கர்மங்களைச் செய்து பாபத்தைப் போக்கி கொள்ள வேண்டும். பாபம் நசித்துப் பரம சுத்தனாய் இந்திரியங்களை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்திப் பிரணவத்தையே சொல்லி காணும் பொருள்களையெல்லாம் நெடுங்காலம் பகவத் ஸ்வரூபமாகத் தியானம் செய்ய வேண்டும். ஆத்ம தரிசனம் பண்ணுவதற்கு இப்படிப் படிப்படியாக விதிக்கப்பட்வற்றைச் செய்ய ஒரு ஆசார்யனை அடைந்து குருகுல வாசம் செய்து அவர் முன்னிலையிலே தியானம் பயில வேண்டும். இத்தனை முயற்சிகளும் பலிக்க பூர்வ ஜன்ம புண்ணியம் வேண்டும். இத்தனை காரியங்களும் முறையே நிறைவேறினால் அன்றிப் பெற முடியாத ஆத்ம ஞானத்தையும் இந்தச் சுலபமான யோகத்தால் பெறலாம் என்றால் இதைவிட உயர்ந்தது ஒன்று உண்டோ?

18. ஆமையை நிகர்ப்பவன் ஆத்ம ஞானி

'யோகம் வெகு சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய சாதனம் பிற சாதனங்களால் பெறுவதற்கு அரிதான ஆத்ம ஞானத்தையும் அதனால் அடையலாம்' என்று கண்ணன் சொன்னபோது அர்ஜுனனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. கண்ணன் இதுவரை சொல்லி வந்த யோகத்தைக கைகொண்ட ஒருவனுக்கு உயர்ந்த பலனாகிய ஆத்மஞானம் கிட்டியது அல்லது கிட்டவில்லை என்பதை எவ்வாறு சோதிக்க முடியும்? ஆத்ம ஞானியின் தன்மையை அறிந்தால்தானே யோகத்தால் அப்பலன் கிடைத்தது கிடைக்கவில்லை என்று அறியலாம்? என்று ஆலோசனைக்குள்ளான அர்ஜுனன் "கண்ணா! ஆத்ம ஞானத்தால் நிலைத்த புத்தியையுடையவன் எவ்வாறிருப்பான்? உலகில் எப்படி நடந்து கொள்வான்?" என்று கேட்டான். அக்கேள்விகளுக்கு விடையாகக் கண்ணன் ஞானத்தால் நிலைத்த அறிவுடையவன் (ஸ்த்திதப் பிரஜ்ஞன்) தன்மையை விவரித்தார்.

துன்பத்தில் என்றும் துளங்கா மனத்தனாய்
இன்பத்திடை ஆசை இல்லவனாய்ப்-புன்பற்றில்
அன்பு பயம்வெகுளி அற்றவனே ஆங்குணர்வின்
வன்பு பெறுமுனியா மற்று

(இ—ள்) துன்பத்தில் – கஷ்டங்களில், என்றும் துளங்கா மனத்தனாய்—எப்பொழுதும் சலியாத மனமுடையவனாய், இன்பத்திடை ஆசை இல்லாதவனாய்—சுகங்களில் ஆசை அற்றவனாய், புண்பற்றில் – இழிந்த ஆசையால் வரும், அன்பு பயம் வெகுளி அற்றவனே – அன்பு பயம் கோபம் இல்லாதவனே, உணர்வின் அன்பு, பெறு – நிலைத்த ஞானம் பெற்ற முனியாம் – முனியாகச் சொல்லப்படுகிறான். (ஆங்கு, மற்று, அசைச் சொற்கள்)

துக்கேஷு அநுத்விக்ந மநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ :
வீத ராக பயக்ரோத: ஸ்திரதீ முநிருச்யதே:

(இ—ள்) துக்கேஷு – துக்கங்களில், அநுத்விக்ந மநா:— கலங்காத மனமுடையவனாய், ஸுகேஷு – இன்பங்களில், விகதஸப்ருஹ:– ஆசையற்று, வீதராக பயக்ரோத:– அன்பு, பயம், கோபம் இல்லதவனாய், முநி–(இருக்கும்) முநி ஸ்திரதீ: உச்சயதே – நிலைத்த ஞானியாகச் சொல்லப்படுகிறான்.

'முனி என்பதற்கு ஆத்மத்யான முள்ளவன் என்று ராமாநுஜர் உரை கூறியிருக்கிறார். நீரில் கை வைத்தால் குளிரும் நெருப்பில் கை வைத்தால் சுடும் குளிர்ச்சியையும், சூட்டையும் அந்தந்தச் செயலுக்குரிய பலன் என்கிறோம். அவ்வாறே லாப நஷ்டங்களை வியாபாரத் தொழிலுக்குரிய பலன்கள் என்போம். பலன்களில் இச்சை இல்லாமல் கடமை என்றுணர்ந்து, யோக பாவம் பூண்டு, கருமத்தைச் செய்பவனுக்கு அக்கருமத்திற்கனுகுணமாகச் சுக துக்கங்கள் இவ்வாழ்வில் வரலாம் சுகத்திற்கு விருப்பமும், துக்கத்திற்கு மனக்கலக்கமும் ஏற்பட்டால் ஞானத்திற்குச் சலனம் உண்டாகும். அவ்வாறே உலக விஷயத்தில் ஏற்படும் ஆசையில் பிறக்கும் அன்பு, பயம், கோபம் காரணமாகவும் ஞானத்திற்குச் சலனம் ஏற்படும். ஞானம் அல்லது புத்திக்கு நிலையான தன்மை ஏற்படாமல் தடை செய்பவை யாவும் இன்றிருப்பவனே நிலைத்த ஞானமுடைய முனி என்பது இதன் மூலம் சொல்லப்படுகிறது. மேற்கொண்ட கருமத்திற்குச் சம்பந்தமில்லாத பலன்களும் பலருக்கு உண்டாகின்றன. அவை சுக துக்கத்திற்கோ, விருப்பு வெறுப்பிற்கோ விஷயமாயிருக்கலாம் சமூகத்தொண்டு, தேசத்தொண்டு செய்பவனுக்கு கசை அடியும் சிறைச்சாலையும் கிடைக்கலாம். அவமானம் வரலாம். அபாரமான கியாதி ஏற்பட்டு

அதனால் முன்னே தன்னை மதியாதவர் களிடமிருந்து சன்மானங்களும் பாராட்டுக்களும் கிடைக்கலாம். அவற்றை நேரடியாக, எடுத்த காரியத்திற்குரிய பலன்களாக எப்படிச் சொல்லமுடியும்? அக்காலங்ளில் நிலைத்த ஞானமுடையவன் எவ்வாறிருப்பான்? என்பதைக் கண்ணன் அடுத்த சுலோகத்தில் சொல்லுகிறார்.

எங்கு மருவுநசை ஏதும் அறத்துறந்து
தங்கு நலந்தீங்க தானணைந்தே - அங்கங்கு
முந்தும் உகப்பும் முதிர்வெறுப்பும் அற்றர்க்கு
வந்து நிலையாம் மதி.

(இ–ள்) எங்கு மருவு நசை – எல்லா வஸ்துக்களிலும் பொருந்திய ஆசையை, ஏதும் அறத்துறந்து – கொஞ்சமும் இல்லாமல் விட்டு, தங்கு நலம் தீங்கு அவற்றிலுள்ள நன்மை தீமைகளை, தான் அணைந்து – தான் அடைந்து, அங்கு அங்கு – அவ்விடங்களில், முந்தும் உகப்பும் – எதிர்கொண்டு சந்தோஷித்தாலும், முதிர் வெறுப்பும் – (விலக்க வேண்டும் என்று) – மிக்க வெறுப்பும், அற்றார்க்கு இல்லாதவர்க்கு, மதி வந்து நிலையாம் – ஞானம் சேர்ந்து நிலையாகவிருக்கும்.

யஸ்ஸர்வத்ர அநபி4ஸ்நேஹ: தத்தத்ப்ராப்ய சுபா4சுப4ம்
நாபி4நந்த3தி நத்3வேஷ்டி தஸ்யய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி2தா.

(இ–ள்) ய:– எவன், ஸர்வத்ர – எல்லா வஸ்துக்களிலும், அநபிஸ் நேஹ:– அபிமானம் இல்லாதவனே தக்தத் – அவ்வவற்றால் வரும் இஷ்ட அநிஷ்டங்களை, ப்ராப்ய – அடைந்து, நாபி நந்தநி – சந்தோஷிக்கப்பட்டானோ, நத்வேஷ்டி – வெறுப்புக் கொள்ள மாட்டானோ, தஸ்ய – அவனுக்கு பரஜ்ஞா – ஞானமான துப்ரதிஷ்டிதா– நிலைபெற்றதாம்.

அழுக்கும் கந்தலும் நிறைந்த ஆடையைத் தாறுமாறாகக் கட்டிக் கொண்டிருந்த ஞானியொருவன் மற்றொரு ஞானியிடம் சென்று 'ஞானி எப்படி இருப்பான்?' என்று கேட்டான். அதற்க விடையாக ஞானியை அறிய நான்கு லக்ஷணங்கள் சொன்னானாம்.

(1) கொக்கைப்போல் – தண்ணீர்க் கரையில் வாடி வதங்கியது போல் கொக்கு அசைவற்றிருக்கும் ஓடி விளையாடும் சிறிய மீன்களை எல்லாம் விடுத்து சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பெரிய மீன் வந்த போது கொத்திப் பிடிக்கும் அது போல் ஞானி அற்ப கருமங்களையும் அற்ப பலன்களையும் விடுத்து எக்கருமத்தையும் யோகபாவத்துடனே

செய்து மிகப்பெரிய பலனாகிய பந்தநிவர்த்தியாகிய மோட்சத்தையே பெறுவான். (2) கோழியைப்போல் – பல பொருள்கள் நிறைந்த குப்பையைக் கிளறும் கோழி அசத்தை விலக்கிச் சத்தாகிய ஆகாரத்தையே பொறுக்கி உண்ணும். ஞானியும் அவ்வாறே பலவற்றைக் கூறும் வேதத்திலோ சாஸ்திரத்திலோ அஸாரமானவற்றை விலக்கி ஸாரமானவற்றைக் கிரகிப்பான் (3) உப்பைப்போல்:– நீரில் இட்ட உப்புதன் உருவத்தை அழித்து தண்ணீர் போலாகிப் பிறருக்கு ருசியைக் கொடுக்கிறதுபோல ஞானி தன் உடலை விட்டாயினும் பிறருக்கே இன்பத்தைத் தருவான். (4) உம்மைப் போல் என்று நான்காவது லட்சணம் சொல்லி அதன் பொருளை விளக்காமல் மௌனமாக இருந்தான். அதன் பொருளை விளக்கச்சொன்னபோது கேள்வி கேட்ட ஞானியை அவ்வூரில் வந்தவர்களுக்கெல்லாம் சமாராதனை (விருந்து) செய்து கொண்டிருந்த ஒரு தனிகனைப் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளச்சொன்னான்.

ஞானி வேகமாக ஓடி அப்பொழுது சமாராதனை நடத்திக்கொண்டிருந்த தனிகனிடம் தன் சந்கேத்தைக் கேட்டான். 'பந்தியில் போய்ச் சாப்பிடு', பிறகு சொல்கிறேன் என்று வீட்டிற்குள்ளே ஞானியை அனுப்பினான். எல்லாப் பந்திகளிலிருந்தும் அந்தஸ்தில்லை எனத் தள்ளப்பட்டு, ஞானி இடமில்லாமல் ஸமாராதனை நடக்கும் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். சாப்பாடு முடிந்ததும் பிற்பட்டு வந்தவர்களுக்காக மறுபடி இலைகள் வைத்துப் பரிமாறப்பட்டது. ஞானி மறுபடி சாப்பிட உள்ளே நுழைந்தான். முன்னைப்போலவே ஞானியை வந்திருந்தவர்கள் எல்லோரும் தங்கள் பந்தியில் சேர்க்காமல், வெளியே தள்ளிவிட்டார்கள். சமாராதனை செய்யும் தனிகன் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். சாப்பிட இடம் கிடைக்காததால் ஞானியைக் கொல்லைப்புறத்திலிருந்த மாட்டுத் தொழுவத்தில் குப்பை கூளத்திற்கு நடுவே உட்கார வைத்து ஆகாரத்தைப் பரிமாறச் சொன்னான். ஞானி வருத்தமோ கோபமோ கொள்ளாமல் வயிறு நிரம்பச் சாப்பிட்டான். அவன் செயலாலும், முகபாவத்தாலும் அவமானமாக உணர்ந்ததாகவே தெரியவில்லை. சாப்பாடு முடிந்ததும் தனிகனிடம் போய் ஞானியின் லட்சணம் கேட்டான். தனிகன் மானம் அவமானம் என்ற பிரித்துப்பாராட்டாமல் எல்லாவற்றையும் ஸமமாகப் பாவிக்கும் உம்மைப்போல்' ஞானி இருப்பான் என்றானாம்.

தென்னாப்பிரிக்காவில் மஹாத்மாவை கோச் வண்டியிலிருந்தும் ரயில் வண்டியிலிருந்தும் அகாரணமாய் வெளியில் தள்ளி அவர் சாமான்களைத் தூர எறிந்தார்கள். அக்காலங்களில் தன்னை அவமானம் செய்தாகக் கருதி வருத்தமோ கோபமோ வெறுப்போ காட்டியிருந்தால் நிலையான ஞானம் ஏற்பட்டிருக்குமா? எவ்வளவு சிந்தித்துப் பார்த்தாலும் இவ்வாழ்வில் ஒருவன் மேற்கொண்டு செய்கிற கருமத்திற்கு உரிய பலன் என்று கருதமுடியாத படியான, அவமானங்கள், நன்மை தீமைகள் உண்டாகலாம். அத்தருணத்தில் விருப்பு வெறுப்புக் கொள்ளாமல் மனதைச் சமநிலையில் வைத்திருப்பவனுக்கே ஞானம் நிலையாயிருக்கும் என்பது இதன் மூலம் கூறப்படுகிறது.

மனதின் சமநிலையைக் குலைக்கும் உலக விஷயங்களைத் தாமாகவே வந்து, இந்திரியங்களைக் தாக்கி, அவற்றின் மூலம் மனதில்சென்று கோபம், காமம், விருப்பு, வெறுப்பு முதலியவற்றை உண்டாக்கினால் என்ன செய்வது? விஷய சம்பந்தமில்லாமலே வளர்க்கப்பட்ட ருச்யச்ருங்கரின் காதைத் தங்கள் கானத்தாலும் கண்களைத் தமது ரூபத்தாலும் தாஸிகள்கவர்ந்து சமநிலையைக் குலைத்துவிட வில்லையா? இந்திரியங்களைக் கவரும் விஷயங்களின் நடுவில் இந்திரியங்களைப் பெற்ற ஞானி சமநிலை கெடாது எப்படி இருக்க முடியும்? என்று ஆலோசிக்கும் அர்ஜுனனுக்குக் கண்ணன் மேலும் சமாதானம் கூறுகிறார்.

அங்கங்கள் ஆமை அகத்தடக்கு மாறுபோல்
இங்கைம் பொறிகள் இயல்பனைத்தும் - பொங்கைம்
புலனின்று அகத்தடக்கும் போதில் தனக்கு
வலன்நின்ற ஏற்குமே வந்து.

(இ-ள்) ஆமை - ஆமையானது, அங்கங்கள் - தன் அவயங்களை, அகத்து அடக்கும் ஆறுபோல் - தன்னுள்ளே இழுத்துக்கொள்ளும் செயல் போல, இங்கு ஐம்பொறிகள், இயல்பனைத்தும் - (பூதசரீரத்தோடு வாழும்) இவ்வுலகில் பஞ்சேந்திரியங்களின் தன்மைகளை எல்லாம், பொங்கு ஐம்புலன் நின்று அகத்து அடக்கம் போதில் கிளறும் சப்தாதி விஷயங்களினின்றும் தன்னுள்ளே இழுக்கும் பொழுது, தனக்கு-அவனுக்கு, நின்ற வலன் - ஸ்திரமான ஞானவலிமை, வந்து ஏற்கும் - வந்துகிட்டும்.

யதா[3] ஸம்ஹரதே சாயம் கூர்மோ[3]ங்கா நீவ ஸர்வச:
இந்த்[3]ரியாணி இந்த்[3]ரியார்[2] தே[4]ப்ய: தஸ்யப்ரஜ்ஞ ப்ரதிஷ்டிதா.

(இ–ள்) யதா அயம்–எப்பொழுது இவன் இந்திரியாணி–இந்திரியங்களை கூர்ம–ஆமையானது. அங்காநீவ–அவயங்களை (இழுத்துக் கொள்வது) போல் இந்த்ரியார்த் தேப்ய;–(சப்தாதி) விஷயங்களினின்றும், ஸம்ஸாதே–இழுக்கிறானோ, ததா–அப்பொழுது தஸ்ய–அவனுடைய, ப்ரக்ஞ–ஞானம் ப்ரதிஷ்டிதா–நிலைபெற்றது.

இந்திரியங்களைக் கிளறும் விஷயங்களின் நடுவில் அவற்றால் தாக்குண்டு சமநிலை கெடாமல் வாழ்வது துர்லபம்தான்.ஆனால் யோகி, ஆமை அவயங்களை இழுத்துக்கொள்வது போல் இந்திரியங்களை நிலையான விஷயங்களில் போகும்படி வெளியேவிடாமல் தன்னுள்ளே இழுத்துக் கொள்வான். அப்பொழுது நிலையான ஞானம் சலனமற்றே இருக்கும்.

ஞானிக்கு ஆமையை உதாரணமாகக் காட்டியதற்கு ஸ்ரீதரர் தமது உரையில் ஒரு காரணம் சொல்லுகிறார். அது–ஆமை தனக்கு ஆபத்தை உண்டுபண்ணும் விரோதி நெருங்குவது தெரிந்ததும் தன் அவயங்களை வருத்தமின்றிச் சுலபமாய் உள்ளே இழுத்துக்கொள்ளும்.அவ்வவாறே ஞானியும் அவசியம் நேரும்போது உடனே இந்திரியங்களை சுலபமாய்த் தன்னுளே இழுத்துச் சுவாதீனப்படுத்துவான். ஆகவே இந்திரியங்களைச் சுவாதீனப் படுத்துவது ஞானிக்குச் சுலபமாகவும் விரைவாகவும் நடக்கும் என்பதைக் காட்டவே அங்ஙனம் தெரிவிக்கப்பட்டது.

19. பகைவன் யார்?

ஒருவன் வளர்த்து வந்த நாயுடனே எப்பொழுதும் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தான். நாள்தவறாமல் கவனமாக ஆகாரம் கொடுத்து அதை அடிக்கடி தழுவி முத்தமிடுவதும் வழக்கமாகி விட்டது. நாயில்லாமல் வெளிச் செல்வதே கிடையாது. எப்பொழுதாவது சென்றுவிட்டால், நாயைப் பற்றிய ஞாபகமாகவே அவனுக்கு இருக்கும். இவ்வாறு நாயுடனே காலங் கழித்து வந்தவனுக்குத் தன் பொழுது

பயனில்லாமல் வீணாக நாயுடனே கழிகிறது! அதனால் நாயைத் தன்னை விட்டு அடியோடு அகற்றிவிட வேண்டும்' என்ற சங்கல்பம் ஒரு நாள் திடீரென்று உண்டாயிற்று. உடனே நாயை வீட்டை விட்டு அடித்துத் துரத்திவிட்டான். துரத்தினாலும் நாய் அடிக்கடி அவன் வீட்டு வாசலையே நெருங்கிக்கொண்டிருந்தது. தன்னை வளர்த்த எஜமானன் வெளியில் செல்லும்பொழுதெல்லாம், தன்னைத் துரத்திய பிறகும், சில நாட்கள் அவனைப் பின் தொடரவே செய்தது. எல்லோருடைய நாய்களும் அப்படித்தான் செய்யும். அந்த நாயின் ஸ்தானத்தில்தான் நம்முடைய ஆசை இருக்கிறது. நாம் விட்டாலும் நெடு நாட்களாக (ஏன் அநேக ஜன்மங்கள்) நாம் அதைச் சுராட்டி வளர்த்திருப்பதால் அது நம்மை லேசில் விடுமா? என்று ராம கிருஷ்ணபரமஹம்சர் ஆசையைவிட முயன்றும், உடனே முடியாமல் வருந்தின சிஷ்யனுக்குப் பதில் சொன்னாராம்.

அவ்வாறே எல்லாவற்றிலும் ஆசையை அடியோடு துறந்திருக்கும் ஞானியிடத்திலும் ஆசை, தானே அணுகாதிருப்பதில்லை. அவனை ஆசை அணுகினால் அதற்கு இடங்கொடாது எவ்வாறு அகற்றிக்கொள்ளலாம்? என்பதைக் கண்ணன் அடுத்தபடியாகச் சொல்லுகிறார்.

துய்யாது தான்துறந்தான் துய்த்தபொருள் விட்டாலும்
மெய்யாரும் சங்கம் விடாதிருக்கும்-பெய்யவே
சென்று பரமாகும் சீருயிரைக் கண்டக்கால்
நின்றதுவும் நீங்கும் நெகிழ்ந்து.

(இ-ள்) துய்யாது துறந்தான்-(விஷயங்களை) அனுபவியாது துறந்தஞானி துய்த்த பொருள்தான் விட்டாலும்-முன்னே அனுபவித்த விஷயங்களைத்தான் கைவிட்டாலும் மெய் ஆரும் சங்கம் விடாது இருக்கும்-ரஸம் நிறைந்த அவ்விச்சைதான் அவனைவிடாது பற்றி இருக்கும். பெய்யவே சென்று-நெருங்கிப்போய். பரம் ஆகும் சீர் உயிரை-மேன்மையான சிறந்த ஆத்மஸ்வ ரூபத்தை, கண்டக்கால்-பார்த்தால், நின்றதுவும்-எஞ்சி நின்ற ஆசையும், நெகிழ்ந்து-(நாளடைவில்) வலிகுன்றி நீங்கும்-அகன்றுவிடும்.

விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந:[3]
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம்[3]த்ருஷ்ட்வா நிவர்த்ததே

(இ-ள்) நிரா ஹாரஸ்ய - (இந்திரியங்களுக்கு) ஆகாரமான விஷயங்களைத் துறந்த தேஹிந:- புருஷனுக்கு ரஸவர்ஜம் - ஆசை நீங்கலாக விஷயா:- சப்தாதி விஷயங்கள், விரிவர்த்தந்தே நிவர்த்தியாகின்றன. அஸ்ய - இந்த ஞானிக்கு ரஸோபி - அந்த ஆசையும் பரம்த்ருஷ்வா - ஆத்மஸ்வரூபத்தைக் கண்டு, நிவர்த்தந்தே - நீங்குகின்றது.

பலனில் இச்சையை விட்டு சுகதுக்கம், வெற்றி தோல்வி, லாப நஷ்டம் இவற்றைச் சமமாக எண்ணிக் கருமத்தைச் செய்யும்யோகி ஆசைக்கிடமான பொருள், போகம், அதிகாரங்களை வேண்டாமென்று துறப்பான். அவன் துறந்தாலும் அவை பற்றி வரும் ஆசை அந்த ஜன்மத்திலும் கழிந்த பல ஜன்மங்களிலும் அவனோடு கூடவே இருந்ததால், அது அவனை விடாது, அதை அவனே வளர்த்து அணைத்து அணைத்துப் பழகி இருக்கிருனதலால் பூர்வ வாசனையால் அவனைவிடாது அண்டவே செய்யும். ஆத்ம தரிசனம் பெற்றால்தான் அடியோடு அகலும். அகற்றப் பார்த்தாலும் அடியோடு நீங்காமல் ஆத்மஸ்வரூபம் கிட்டும்வரை அடிக்கடி அண்டிக் கொண்டே இருக்கும். இந்திரியங்களின் மூலமாக அவன் மனதைப் பலவந்தமாய் இழுத்துக் கலங்கச் செய்யும்.

ஒவ்வொரு ஜீவாத்மாவும் தனக்கு அந்நியமாகப் பாவிக்க வேண்டிய கொடிய விரோதி ஆசை. தன்னை அண்டவொட்டாமல் வெகு தொலைவில் விலகியிருக்க வேண்டிய விரோதியும் ஆசையே அக்கொடிய விரோதி மாயமாய்த் தனக்குப் பெருங்கேடுகள் விளைவித்து வருவதை அறியாமல் அவற்றை அனுகூலங்களாகவும், செய்யும் விரோதியை அப்த நண்டனாகவும் எண்ணிக்கூடவே வைத்தது அன்பும் ஆதரவும் காட்டி நீண்ட காலம் பரிபாலித்த பின்பு ஒரு ஜீவாத்மா திடீரென்று 'ஆசையை விரோதி' என்றுணர்ந்து விலக்கப் பார்த்தால் சுலபமாக முடியுமா? ஆசையை விலக்குவதையே மோக்ஷத்திற்கு ஸாதனமாகப் புத்தர் உபதேசித்தார். அதையே மோக்ஷம் என்று நம்மாழ்வார் மிக அழுத்தமான வார்த்தைகளில் "அற்றது பற்று எனில், உற்ற வீடு உயிர்" என்று வெளியிட்டார். மேலும் மேலும் பிறப்பை உண்டாக்குவது! 'ஆசையாகிய வித்தே' என்று திருவள்ளுவர்.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப்பிறப்பு ஈனும் வித்து.

(அவா – ஆசை எஞ்ஞான்றும் எப்பொழுதும் தவா–கெடாத) என்ற குறளில் வெளியிட்டார். ஒவ்வொருவரிடமும் அகத்திலே குடி கொண்டிருக்கும் கொடிய விரோதியாகிய ஆசையை மோக்ஷ இச்சையுடையவர் அவசியம் அடியோடு அகற்ற வேண்டும் என்று அநேகமாக உலகில் எல்லா மதங்களும் சொல்லுகின்றன. ஆனால் ஆசையை அகற்றுவது 'மனித சக்திக்கே அதீதமான காரியம்' என்ற மலைப்பையே உண்டாக்குகிறது. பலருக்கு அவ்விதம் மலைக்க வேண்டாதபடிக் கண்ணன் கீதையில் ஆசையை அகற்ற அதிசுலபமானவழியொன்றைக் காட்டியிருக்கிறார். பலனில் இச்சையின்றிக் கருமம் செய்தால், ஆத்ம ஸ்வருப ஞானம் ஏற்படும். 'ஏற்பட்டால் விலக்க முடியாமல் விஷயங்கள் பற்றிவரும் ஆசை தன்னிடையே அகன்று திரும்பிவராது அடியோடு போய்விடும்' என்கிறார். இதை இந்தியாவிற்கு மட்டுமின்றி, உலகத்திலிருக்கும் எல்லா மதத்தினருக்கும் பொதுவாக 'கண்ணன் காட்டிய வழி' என்று சொல்வது சிறிதும் மிகையாகாது. ஆசையைக் கொடியநோய் என்று அறிந்து கொண்டுவிட்டால் அதை அகற்றத்தக்க ஔஷதத்தைக கண்ணன் ஒவ்வொரு ஜீவனுக்கும் கீதை மூலம் கொடுத்துவிட்டார். அடுத்தபடியாக, அக்கொடிய விரோதியாகிய நோய் எப்படி உண்டாகி, படிப்படியாக விருத்தியடைந்து, ஒருவனைக் கெடுக்கிறது என்பதைக் தெளிவாக விளக்குகிறார்.

புன்பொருளை உள்ளும் புமானுக்கு அதிற்சங்கம்
பின்பதனால் காமமதில்பின்வெகுளி - என்பதனால்
மோகமதில் பொன்றும் மிருதியதில் புத்திஅழி
வாகுமதில் தான்நசிக்கு மாங்கு.

(இ–ள்) புன்பொருளை உள்ளும் புமானுக்கு – இந்திரியங்களுக்கு ஆகாரமாகிற சப்தாதி) அற்ப விஷயங்களைச் சிந்திக்கின்ற புருஷனுக்கு அதில் சங்கம் – அவற்றில் பற்று (உண்டாகிறது) பின் பதனால் காமம் – பிறகு பற்றினால் ஆசை (உண்டாகிறது) பின் அதில் வெகுளி – பிறகு அதில் கோபம் (உண்டாகிறது) என்பதனால் மோகம் – கோபத்தின் அறிவின்மை (உண்டாகிறது) அதில் மிருதியொன்றும் – அதனால் ஞாபகம் கெடும். அதில் புத்தி அழிவாகும் – அதனால் புத்தி நாசம் உண்டாகும். அதில் தான் நசிக்கும் – அதனால் தானே கெட்டழிவான்.

த்யாயதோ விஷயாந் பும்ஸா ஸங்க தேஷூப ஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோபி ஜாயதே
க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம:
ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்திநாச: புத்திநாசாத் ப்ரணச்யதி.

(இ–ள்) விஷயாந் (சப்தாதி, விஷயங்களை த்யாயத:– சிந்திக்கின்ற பும்ஸ – புருஷனுக்கு தேஷு–அவற்றில், ஸங்க ஜாயதே – பற்று உண்டாகிறது. ஸங்காத் – அப்பற்றினால், காம:– ஆசை ஸஞ்ஜாயதே – உண்டாகின்றது, காமாத – ஆசையினால் கரோத – கோபம் அபிஜாயதே உண்டாகிறது. க்ரோதாத் கோபத்தினால் ஸம்மோஹ – அவ்விவேகம் பவதி – உண்டாகிறது. ஸம்மோஹாத் – அவ்விவேகத்தால், ஸ்மருதி விபரம – நினைவு கழிதல் (உண்டாகிறது) ஸ்மருதி பரமசாத் – நினைவு கழுவுதலினால் புத்தி நாச:– புத்திகேடு (உண்டாகிறது) புத்தி நசசாத் – புத்தி நாசத்தால், ப்ரணச்யதி – எல்லாங் கெடுகிறான்.

ஜீவாத்மாக்களுக்குப் பந்தத்தைக் கொடுக்கும் ஆசையை அநேக விதமான கேடுகளைத் தோற்றுவிக்கும் 'வேர்' என்றும், 'வித்து' என்றும் உருவகம் செய்து பல பெரியோர்கள் பேசி இருக்கின்றனர். கீதா சாஸ்திரத்தை வெளியிட்ட கமலக் கண்ணனோ அவ்வாசையும் பிரிதொன்றை ஆதாரமாகப்பற்றியே தோன்றியிருப்பதையும் நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். நினைவின்மை, மோஹம், கோபம் முதலிய தீய குணங்களைக் கொண்டு ஆசையை வேராகவோ வித்தாகவோ சொல்லலாம். ஆனால் கர்ம யோகத்தை மேற்கொள்ளும் யோகிகள் ஆத்ம ஸ்வரூபம் கிட்டுவதற்கு முன் ஆசையால் கெடாதிருக்க அதன் வரலாற்றை மேலும் ஆழ்ந்து அறிய வேண்டும். அவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு கண்ணன் இவ்விரண்டு சுலோகங்களில் வேண்டிய விவரங்களோடு ஆசையின் முன்னோர்களையும், பின்னோர்களையும் பற்றிச் சுருக்கமாகத் தெளிவாக வெளியிட்டிருப்பதை ஒவ்வொருவரும் தம் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டே உணரலாம்.

தகாத பொருளை அடிக்கடி நினைத்தால் அந்நினைவின் காரணமாக அப்பொருளில் பிரியமுண்டாகிறது. பிரியத்தை வளரவிட்டால் அதைத்தான் பெற வேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. ஆசையினால் பெறமுடியாவிட்டாலும், பெற்றபின் இழக்க நேர்ந்தாலும்,

இழக்க வேண்டி வருமோ என்று தோன்றினாலும், கோபம் தோன்றுகிறது. கோபத்தினால், தனக்குரியது எது? உரிமையற்றது எது? வேண்டியவர் யார்? வேண்டாதவர் யார்? நன்மை செய்வது எது? தீமை செய்வது எது? என்று தெளிவாய் அறிந்து கொள்ளமாட்டாத அவ்விவேகம் பிறக்கிறது. அதனால் மறதி ஏற்படுகிறது. மறதியால் மறதியால் புத்தி கெடுகிறது. புத்திக் கேட்டிலிருந்து எல்லாக் கேடுகளுக்கும உறைவிடமான பந்தம் (பிறப்பாகிற கட்டு) அல்லது நரகம் ஜீவாத்மாவுக்கு உண்டாகிறது. இதனால் பிராப்தமான அல்லது உரிய பொருளை விட்டுப் பிறவற்றை அடிக்கடி சிந்தித்தலே ஜீவாத்மாவின் கேட்டிற்கு மூலகாரணமாயிருப்பது வெளியாகிறது. ஒவ்வொருவரும் தியானம் அல்லது சிந்தனைக்கு அபராப்தமான தமக்கு உரிமையில்லாதவற்றை விஷயக்காமலிருந்தால், பேராசைக்கும் அதன் விளைவுகளான பெருங்கேட்டிற்கும், உலகிலே இடமில்லாமல் போகும். மஹாத்மா விரும்பியபடி திருப்தியும், சமாதானமும் சுபிக்ஷமும் கொண்ட ராமராஜ்யம் தோன்றும். சரித்திரத்தில் நன்மை செய்தவர்கள்என்றும், தீமை செய்தவர்கள் என்றும் எத்தனையோ அரச பரம்பரைகளைப் படிக்கிறோம். ஆனால் ஜீவ வர்க்கத்திற்கே கேடு செய்து வருகின்ற ஆத்ம விரோதி பரம்பரையைப்பற்றிப் படிக்கிறோமா?ஆலோசனைக்குத் தான் கொண்டு வருகிறோமா? கண்ணன் கீதையில் வெளியிட்ட ஜீவாத்மா விரோதியின் வம்சாவளி அடியிற்கண்டபடி நன்றாக எழுதப்பட்டு ஒவ்வொருவர் வீட்டிலும் சுவரில் கண்காணத் தொங்கினால் நம்மை நல்வழிப்படுத்தி, ராம ராஜ்யத்திற்கு ஏற்ற பிரஜைகளாக ஏன் மாற்றாது?

விரோதி பரம்பரை:– விஷய சிந்தனை பிரியம் ஆசை. கோபம், அவிவேகம் நினைவின்மை, புத்திக்கேடு, பெருங்கேடு.

20. உலகின் இரவு யோகியின் பகல்

'தகாத விஷயங்களைச் சிந்திப்பதிலிருந்து அவற்றில் பிரியம் உண்டாகின்றது. அதுபடியாகத் தன் வம்சத்தை விருத்தியாக்கிக் கொண்டே வந்து ஜீவாத்மாவினால் எளிதில் விலக்க முடியாத பெருங்கேடாய்ப் பெருகி விடுகிறது என்று கண்ணன் ஜீவாத்மாவின் விரோதி பரம்பரையின் தன்மையை எடுத்துக் காட்டினார் அல்லவா? அதை ஊன்றிக் கவனித்தால் விஷய சிந்தனைக்கிடம் கொடுப்பதும்

இடம் கொடாதிருப்பதும் ஒருவன் (ஜீவாத்மா) வசமே இருப்பது நன்கு தெரிய வரும். அதுவே (சிந்தனையே) பெருங்கேட்டிற்கு அஸ்திவாரமாயிருப்பதால், துன்பத்திற்குப் பொறுப்பாளி பகவான் என்றோ, விரோதியை உண்டாக்குபவன் பரம்பொருள் என்றோ வாதம்செய்து சோம்பி இருப்பதிற்திடமில்லை. இக்கருத்தைக் காலஞ்சென்ற தேசீயகவி

நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி

அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை

என்று அழுத்தமாக அழகாக வெளியிட்டார். ஜீவாத்மாவே பொறுப்பாளியாயிருப்பதால், ஒவ்வொருவரும் தம் மனத்தைத் தகாத விஷய சிந்தனையில் செலுத்தாதிருக்கவேண்டும். அத்தைகய சிந்தனையைத் தூண்டும் சம்பவங்களைக் நிகழ்ச்சிகளைக் கூடியவரை விலக்க வேண்டும். தகாத சிந்தனையைத் துண்டுபவைகளாய் விலக்கமுடியாமல் வரும் சம்பவங்கள் பலருக்குப் பலவிதமாய் நேரலாம். அக்காலங்களில் மனம், விஷயங்களில் பிரவேசிக்கின்ற இந்திரியங்களைப் பின்பற்றிச் சென்று விடவும் செய்யலாம். தவறான முறையில் போருள் சம்பாதிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. வியாபாரி அவ்வழிகளில் பொருள் தேடவேண்டாமென்று, கனவிலும் சிந்திக்காதிருக்கலாம். அரசாங்க அதிகாரியும் அவ்வாறே சிந்தியாதிருக்கலாம். அரசாங்கச் சட்டத்திற்கு விரோதமாக, ஒருவன் தனக்குரிய அளவிற்குமேல் ஒரு சாமானைப் பெறவேண்டுமென்று வியாபாரியிடமோ அதிகாரியிடமோ போய் மிகுந்த பணத்தைக் காட்டித் தகாத விஷய சிந்தனையைத் தூண்டலாம். சிந்தனையில்,இறங்கினால் பிரியம்,அதிலிருந்து ஆசை என்று படிப்படியாகப் பெருங்கேடுவரை பெருகிவிடும். அத்தகைய தூண்டுதல்கள் ஏற்படும் காலங்களிலும் மனம் விஷயங்களைப் பற்றிச் செல்லும் இந்திரியங்கள் வழிச் செல்லாதிருக்க வேண்டும். மனம் இந்திரியங்களைப் பின்பற்றினாலும் விவேகம் மனதைப் பின்பற்றாமல் அடக்கித் தன் சுவாதீனத்தில் வைத்திருக்கப் பழக்கப்பட்டிருக்க வேண்டும். அடிக்கடி தியானத்தில் ஈடுபடுபவனுக்கே இந்திரியங்களைப் பின்பற்றும் மனத்தினால், விவேகத்தை இழக்காமல் மனதைத் தன் சுவாதீனத்தில் அடக்கிவைக்க முடியும். ஆத்மதியானம் செய்ய முடியாதவர்கள் எல்லோரும்,பிரதிதினமும் கால்மணி அல்லது அரைமணி நேரமாவது விழித்திருக்கும் காலத்தில், தகாத விஷயசிந்தனை தவிர்த்து, தக்கதில் மனதை நிறுத்தவேண்டும்.

தியானம் ஒழுங்குபடப் பிரார்த்தனையும் துணை செய்யும். ஆராதனை அல்லது பூஜையும் நியமமாகச் செய்யப்படின், தியானத்திற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்.

தியானத்தாலோ, யோகத்தாலோ இந்திரிய சுவாதீனம் ஏற்பட்டாலொழிய ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்படுவதற்கில்லை. அதில்லாமல், ஆத்மத்யானம் இல்லை. ஆத்மத்யானம் அற்றவனுக்கு ஆத்மாவிடம் மனம் நிற்பதில்லை. அவனுக்கு மெய்யான சுகம் என்பதில்லை. கடலில் செல்லும் கப்பலை இழுக்கும் காற்றுப்போல் விஷயங்கள் இந்திரியங்களைஇழுக்கின்றன.இந்திரியங்கள், மனைதை இழுக்கின்றன. அம்மனம் விவேகத்தை இழுத்துச்செல்கிறது. ஆதலால், விஷயங்களினின்றும் விடுவிக்கப்பட்ட இந்திரியங்களையுடையவனுக்கே ஞானம் நிலைத்திருக்கிறது. அத்தகைய ஞானயோகிக்கு, இரவும் பகலும் உலகினரைப்போல் சூரியனைப் பொறுத்து ஏற்படுவதில்லை என்ற அடுத்தபடியாகச் சொல்கிறார்.

யாது உலகர்க்கு இருள்இரவாம் ஆங்குணர்ந்து
போதம் மருவும் புலன்வென்றான்-ஏதில்
உணர்வுறுவர் ஈங்கிவர்கள் உற்றுணர்ந்த யோகிக்கு
இணர்இல்லா தாகும் இருண்டு.

(இ-ள்) உலகர்க்கு-உலகிலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும், யாது இருள் இரவாம்-எது எந்த (ப்ரும்ம நிஷ்டை) இருள் நிறைந்த இரவோ (இரவு போன்றதோ) ஆங்கு-அதில் (அந்த ப்ரும்ம நிஷ்டையில்) புலன் வென்றான்-இந்திரியங்களை அடக்கிய யோகி போதம் மருவும்-உணர்வுபெற்று விழித்திருப்பன்.ஏதில் இவர்கள் உணர்வு உறுவர்-எப்பொழுது உலகினர் உணர்வுடன் விழித்திருப்பார்கள். ஈங்கு-அப்பொழுதில், உற்று உணர்ந்த, யோகிக்கு - ஆத்மஸ்வரூபம் கிட்டித் தெளிந்த யோகிக்கு இணர் இல்லாது இருண்டு ஆகும்-சுடர்(ஒளி) இல்லாமல் இருண்ட இரவு போன்றதாகும்.

யா நிசா ஸர்வ பூதா[4]நாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ[3]
யஸ்யாம்[3] ஜாகர்தி[4] பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:

(இ-ள்) யா-எந்த ப்ரும்ம நிஷ்டையானது (ஆத்ம ஞானமானம்) ஸர்வ பூத்நாம்-எல்லாப் பிராணிகளுக்கும். நிசா-இரவோ தஸ்யாம்-அதில் ஸம்யமீ-யோகி ஜாகர்(த்)தி-விழித்திருக்கிறான், யஸ்யாம்-எந்த (சப்தாதி விஷய புத்தியோடு கூடிய) காலத்தில், ஸர்வாணிபூதா நி-

எல்லாப் பிராணிகளும், ஜாகரதி–விழித்திருக்கின்றனவோ, ஸா–அது பச்யத:முநே; ஆத்ம தரிசனம்பெற்ற யோகிக்கு, நிசா–இரவு (இரவுபோல்).

அர்ஜுனன் ஆத்மஞானி எவ்விதம் இருப்பான்? என்று கேட்ட கேள்விக்கு விடையாகக் கண்ணன் இவ்வளவு தூரம் சொல்லிவந்து, கடைசியில் இப்பகுதியில், ஆத்மக்ஞானம் பெறாமல் அஞ்ஞான தசையில் இருக்கும் சாமானியரால் அறிந்துகொள்ள முடியாத நிலையிலே, ஞானயோகி இருப்பதாகச் சொலுகிறார். ஆத்மாவிடம் நிலைத்த புத்தியையுடைய யோகியின் பேச்சும், நடையும் வியவகாரமும் உலகினரைப்பொத்து மிருக்கலாம். அது யோகியின் சமாதிநிலையைச் சிறிதும் பாதிக்காது. யோகியின் சமாதிநிலை அல்லது பிரும்ம நிஷ்டை உலகினருக்கு இருள்போன்றது. அதைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் இருக்கும் அஞ்ஞான தசையில் இருந்தபடியே, பிரும்ம நிஷ்டையின் தன்மையைத் தெரிந்துகொள்ளவும் முடியாது. மனதைக் கொண்டுஇந்திரியங்களால் விஷயங்களைக் கிரகித்து உணருவதே உலகினருக்கு ஞானதசை, பகல். ஞானிக்கு ஆத்மாவில் லயித்த புத்தியோடு கூடிய ப்ரும்ம நிஷ்டையே ஞானதசை:பகல். ஒருவரின் பகல் மற்றவருக்கு அதனால் இரவாகவே இருக்கும். ஞானியும் ஒரு காலத்தில உலகினரைப்போல் அஞ்ஞான தசையில் இருந்தவன்தான் என்றாலும், ஆத்மக்ஞானம் கிட்டியபின் அவன் மனம் உலக விஷயங்களில் பிரவேசியாது. ஆத்மக்ஞானம் இன்றிச் சென்ற காலங்கள் எல்லாம் இரவாகவும், ஞானம் கிட்டிய காலம் முதலே மெய்யான பகல் வந்ததாகவும் தோன்றும். இதை அனுபவத்தால் உணர்ந்த பெரியோர் வாக்கினால் அறியலாம்.

கடல் நீரால் நிறைந்து இருக்கிறது, நிலையான இருப்புடையது. எவ்வளவு நதிகள் வந்து சேர்ந்தாலும் அதன் நிலை பாதிக்கப்படுவதில்லை.

அவ்வாறே, ஆத்மக்ஞானத்தால் திருப்தியடைந்த ப்ரும்ம நிஷ்டனை ஸகல உலக விஷயங்களும் போய்ச் சேரலாம். ஆசையும், அகங்காரமும் அற்ற அந்த ஞானயோகியை அவை பாதிப்பதில்லை. ஆத்ம சாந்தி குலைவதில்லை. அத்தகையவனே மோக்ஷத்தை அடைகிறான்என்று சொல்வி அர்ஜுனன் மனதில் பதியவைப்பதற்காகக் கண்ணன் ஞான நிஷ்டையைப் பெருமையாகவும், சுருக்கமாகவும் மறுபடி ஒரு சுலோகத்தில் கூறுகிறார்.

இதுகாண் பிரமம் எனும்இவ்வுயிரின் தன்மை
இதுகாண் பெறின்மயக்கம் எய்தான்-இதுதன்னில்
அந்தகா லத்துஅமர்ந்தும் பிரமா னந்தமெனும்
சந்தமாம் தன்மை பெறும்.

(இ-ள்) இ உயிரின் பிரமம் எனும் தன்மை–இந்த உயிரினுடைய ப்ரும்மஞான நிஷ்டை, இதுகாண்–இதுவரை சொல்லப்பட்டது. இது காணப்பெறின்–இப்பிரும்மஞான நிஷ்டையை அடைந்தால், மயக்கம் எய்தான்–(ஒருவன் மறுபடி) ஸம்ஸார மோஹத்தை அடையமாட்டான். இது தன்னில்–இந்த நிஷ்டையில் அந்த காலத்து அமர்ந்தும்–(மரண) அந்த காலத்தில் (சிறிது நேரம்) இருந்த போதிலும் சந்தமாம் பிரம்மானந்தம் எனும் தன்மை பெறும்–(உயிர்) சிறந்ததான ப்ரும்ம நிர்வாணம் என்ற நிலையைப் பெறும்.

ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி: பார்த நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி
ஸ்தித்வாஸ்யா மந்தகாலேபி ப்ரஹ்ம நிர்வாண ம்ருச்சதி.

இச்சுலோகத்திற்குப் பல பெரியயோர்கள் விரிவாக உரை எழுதியுள்ளார்கள். (ஸ்ரீதரர்) ஏற்கனவே சொல்லிய ஞான நிஷ்டையை, பின்னும் சிறப்பாகச் சொல்வதற்காக, அதை இந்தச் சுலோகத்தில் சுருக்கிக் கூறுகிறார். பரிசுத்தமான அந்தக் கரணங்களோடு கூடிய புருஷன் பரமேச்சவர ஆராதனத்தாலே ப்ரும்மக்ஞான நிஷ்டையை அடைந்தால், மறுபடி ஸம்ஸார மோகத்தை அடைந்து பிறப்பதில்லை. மரணகாலத்தில் கூட க்ஷண நேரமாவது இந்நிஷ்டையில் இருப்பவன், பிரும்மத்தின் லயமடைகிறான் என்றால் இளமைப் பருவத்திலிருந்தே பிரும்ம நிஷ்டையிலிருப்பவன் ப்ரும்ம நிர்வாணம் அடைகிறான் என்று சொல்ல வேண்டியது அவசியமா?

மரணாந்த காலத்தில், சிறிது நேரம் ப்ரும்ம நிஷ்டையிலிருந்து மோக்ஷம் அடையலாம் என்பதற்கு, பாகவதத்தில் சொல்லப்பட்ட ராஜ ரிஷியான கட்டுவாங்கனை உரையாசிரியர் திருஷ்டாந்தமாகக் காட்டுகிறார். இவ்வரசன் தேவர்களால் தனது மரண காலத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டான். மரண சமயத்தில் சிறிது நேரம் இந்நிஷ்டையிலிருந்து முக்தியை அடைந்தான். இது புராண உலகில் பிரசித்தமான கதை.

இச்சுலோகத்தில் வந்த அந்த காலே என்ற தொடரைத் தமிழ்ப் பாடலில் அப்படியே எழுதிவிட்டார். இத்தெ ருக்கு (ச) (ஸ்ரீ) (ராமா) ஆகிய

உரையாசிரியர்கள் மரண காலத்தில் என்று பொருள் கூறியிருக்கின்றனர். இச்சுலோகத்திற்கு உரை எழுதுவதுபோலவே கண்ணனிடம் ஒரு பதிகமே பாடிவிட்டார். சங்கரர் முதலிய உரையாசிரியர்கள் கொண்ட பொருளின் பொருத்தம் ஒரு பாடலைமட்டும் படிக்கும்போதே தெரியவரும்.

ஆசைவாய் சென்ற சிந்தையாகி
அன்னை அத்தன் என்புத்திரர்,பூமி
வாசவார் குழலாள் என்று மயங்கி
மாளும் எல்லைக்கண்,வாய் திறவாதே
கேசவா !புருடோத்தமா ! என்றும்
கேழல் ஆகிய கேடிலீ ! என்றும்
பேசுவார் அவர் எய்தும் பெருமை
பேசுவான் புகில் நம்பரம் அன்றே

(அத்தன்–தந்தை வாசவார் குழலாள்–வாசனை ஊட்டிய நீண்ட குழலுடையப்பெண், அதாவது மனைவி, மாளும் எல்லைக்கண்– மரண காலத்தில் கேழல் ஆகிய கேடிலீ–வராகவதாரம் செய்த கேடில்லாதவனே. நம் பரம் அன்றே–நம் சொல்லுக்கும் அடங்காது அப்பாற்பட்டது.

த்வைதபரமாக வியாக்கினம் செய்த ராகவேந்திர ஸ்வாமிகள் அந்த காலே என்பதற்கு வேறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். ஜனன கால முதற்கொண்டே மரண காலம் வரையில் பிரம்மஞான நிஷ்டையில் இருந்தால்தான் மோக்ஷம் ஸித்திக்கும்!

ஸாங்க்ய யோகம் என்னும் பெயருடைய கீதை இரண்டாவது அத்யாயம் இச்சுலோகத்தோடு முடிவடைகிறது. ஒவ்வொரு அத்யாத்திலும் பல பொருள்களைக் கண்ணன் சொல்லியிருக்கிறார். ஒரேபொருளைப் பலவிதங்களிலும் தெரிவித்திருக்கிறார். படிப்போருக்கு தாங்களே அவற்றையெல்லாம் ஒரு சேரத்தொகுத்து மனதில் வைப்பது கஷ்டமாயிருக்கும் என்பதை வெகு காலத்திற்கு முன்னே பல பெரியோர் அறிந்துகொண்டனர். பரோபகாரமாக வேண்டி ஒவ்வொரு அத்யாயத்தின் சாரத்தையும் சுருக்கி வெளியிட்டனர். பாத்ம புராணம் ஒவ்வோர் அத்யாய பலனையும் கதையாகத் தெரிவித்த ஸாரத்தையும் பலனையும் பிறகு காண்போம்.

21. சாரமும் பலனும்

இருப்பவனைப்பற்றியும் இறப்பவனைப்பற்றியும் அறிவுடையோர் கவலை கொள்ளமாட்டார்கள். இருப்பும், இறப்பும் காணும் உடலைப் பாதித்தாலும் காணாத உயிரை எந்த அளவிலும் பாதிப்பதில்லை.

உயிரும் உடலும்!

ஒரே உடலுக்கு, இளமை, யௌவனம், கிழத்தனம் என்ற பல பருவங்கள் வருவதுபோல உயிருக்குப் பற்பல மாறுதல்கள் தோன்றும். தோன்றியவை அழியும். ஒருவன் கிழிந்த வஸ்திரத்தைக்களைந்து புதிய வஸ்திரத்தை அணிந்து கொள்வது போல் உயிர் பழைய சரீரத்தை விட்டுப் பிரிந்து புதிய சரீரத்தைப் பெறுகிறது. தோற்றமும் மறைவும்; வளர்தலும் தேய்தலும்; பிறப்பும் இறப்பும் ஆகிய விகாரங்களெல்லாம் உடலுக்கே உரியவை. உடலுக்கே அவை சுபாவங்கள். ஆகையால் விலக்க முடியாதவை.

உயிருக்கோ அவ்விகாரங்கள் எவையும் இல்லை.உயிர் நித்யமானது. அழிவற்றது, அசைவற்றது, எங்குமுள்ளது, எக்காலத்துமுள்ளது, பஞ்ச பூதங்களாலும், ஆயுதங்களாலும் வேறு எவற்றாலும் அழியாதது. விகாரமடையாதது. உண்டாகவோ,பிறக்கவோ செய்யதாதது; ஆகையால் அழியவோ, இறக்கவோ போவதில்லை. தோன்றிது மறையும், பிறந்தது இறக்கும். அஞ்ஞானத்தால் உயிரே இறப்பதாக நினைப்பவனும், பிறந்ததெல்லாம் இறந்தே தீரும் ஆதலால், கவலைகொள்ள இடமே இல்லை.

சுய தர்மம் விடத்தகாதது

க்ஷத்தியரினுக்கு யுத்தம் சுய தர்மம். அவனைச் சுவர்க்கத்திற்கு அனுப்பும் வாயில். தானாக வந்த போரைக் கைவிடும் க்ஷத்திரியன், அதனால் கீர்த்தியை இழப்பான். பழி பாவத்திற்கு ஆளாவான். மரணத்திலும் அப்பழி கொடியது. போரைக் கைவிட்டால், பயந்து பின் வாங்கிதாகப் பலர் தூற்றுவர். ராஜ்யமுமின்றி, இம்மையில் அப்பழிக்கிடமாக வாழ நேரும். சுய தர்மத்தைக்கைவிட்ட பாவத்தால், மறுமையில் நரகத்தில் அழுந்த வேண்டும். போரை மேற்கொண்டால் வெற்றிகிட்டி, இம்மையில் ராஜ்ய சுகம்கிட்டலாம். மறுமையிலும் சுவர்க்கம், இன்பம், புண்ணியம் காரணமாகக் கிடைக்கும் போரில் இறந்தாலும் புண்ணியத்தால் மறுமையில் சுவர்க்கப் பேறு கிடைக்கும்.

பாப, புண்ணியம் இரண்டும் பந்தத்தையே தருகின்றன. ஆதலால் கருமத்தை விடாமல், பந்தத்திற்கு ஆளாகாதிருக்க வேண்டும்.

பலனில் இச்சை விடத்தக்கது

வேதம் கடல் அல்லது தடாகம் போன்றது. அதன் ஸாரமாகிய உபநிஷத் கிணறு போன்றது. வேதம் கூறும் கரும பலன்களில் ஆசை வைக்காமல் ஸித்தி அடையனும், அடையாதிருப்பினும் ஸமமாக எண்ணிக் கருமத்தைச் செய்தால் பந்தம் செய்யும் பாப புண்ணியம் இரண்டிற்கும் ஆளாகாதிருக்கலாம். பந்த நிவர்த்தியை அடையலாம். பல திறப்பட்டவர்கள் நன்மை கருதி விரிவாகவிருக்கும் வேதத்தைக் கண்டு கலங்காமல் அதன் நோக்கத்தையும் ஸாரத்தையும் தெளிவாகக் கூறும் உபநிஷத்தால் இப்பொருளை கிரகிக்கலாம். பலனில் ஆசையின்றிக் கர்மாவைச் செய்வதே யோகம். இந்த யோகத்தால் ஆத்மக் ஞானமும் கிட்டும்.

ஞானியின் தன்மை

ஆத்மக்ஞானியின் ஆசைகளை அறவே ஒழித்திருப்பான். சுக துக்கங்களில் முறையே விருப்பு, வெறுப்புக் கொள்ளமாட்டான். அவயவங்களைத் தன்னுள்ளே அடக்கிக்கொள்ளும் ஆமைபோல், விஷயங்கள் கிட்டினாலும் ஞானி தன் இந்திரியங்களை அவற்றில் புகவொட்டாது தன்னுள்ளே அடக்கிக்கொள்வான். இந்திரியங்களைத் தன் வசப்படுத்தியவனுக்கே ஞானம் நிலைத்திருக்கும். மோட்சம் கிட்டும். ஆனால் ஆத்ம ஸ்வரூபம் கிட்டும்வரை, காற்று கப்பலை இழுப்பதுபோல், இந்திரியங்களை அனுசரித்துப் போகும் மனம் ஒருவன் விவேகத்தை இழுக்கும்.

சாந்தி குலைவதேன்?

தகாத விஷயங்களைச் சிந்திப்திலிருந்து அவற்றில் பற்று உண்டாகிறது. அதனால் காமம்,கோபம்,மோஹம்,நினைவு மறைதல், சாந்தி, நாசம் முதலியன முறையே உண்டாகின்றன. மனம் ஏகாக்ரப் படாதவனுக்கு சாந்தியும் இல்லை. சுகமும் இல்லை. கடலில் சேரும் நதிகள்போல் எவனைச் சேரும் விஷய ஆசைகள் அடியோடு மடிகின்றனவோ, அவனே ஞானி. ஞானயோகி. அந்நிலையே ப்ரும்ம நிர்வாணம். அதைப்பெற அஹங்கார, மமகாரங்களாகிற, மோஹத்தை விடவேண்டும். ஆத்மக்ஞானம் அடைந்தவன் மறுபடி பிறப்பதில்லை.

இவ்வத்யாயப் பொருளை இன்னும் சுருக்கமாக்கிச் சிந்தையில் தரிக்கும் வண்ணம், வேதாந்த தேசிகர் என்னும் பெரியார் நாலுவரிகள் கொண்ட ஒரு அழகிய தமிழ்ப் பாட்டில் வெளியிடுகிறார்.

***உடலம் அழிந்திடும்; உள்ளுயிர் ஒன்று அழியாது எனைப்போல்;
விடுமதிபற்று; வடாதது அடைத்த கிரிசைகளே;
கடுக உனக்கு உயிர்காட்டு நினைவு அதனால் உளதாம்;
விடு மயல்; என்று விசயனைத் தேற்றினன் வித்தகனே.***

(இ-ள்) உடலம் அழிந்திடும்- தேகம் அழியும், உள் உயிர் ஒன்று எனைப்போல் அழியாது-சூட்சுமான ஒப்பற்ற ஜீவாத்மா (பகவானாகிய) என்னைப்போல் என்றும் அழியாது, விடாதது அடைத்த கிரிசைகள்-(அவரவர்க்குரிய) நித்திய கர்மர்க்களைவிடத்தக்கதல்ல. விடுமது பற்று-அவற்றின் பலனின் ஆசையே விடவேண்டியது. அதனால்-நிஷ் காம்ய கருமத்தால் உனக்கு-உனக்கு, கடுகு-விரைவில், உயிர் காட்டு நினைவு உள்ளதாம்-ஆத்மஸ்வரூபக்ஞானம் உண்டாகும். மயல் விடு-அக்ஞானத்தை விட்டுவிடு, என்று-என்று உபதேசித்து, வித்தகன்-பகவான், விசயனைத்தேற்றினன்-அர்ஜுனனைத் தெளிவுபெறச் செய்தான்.

பலன் கூறும் கதை

தக்ஷிண தேசத்தில் புரந்தரம் என்ற நகரத்தில் தேசவர்மா என்ற பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் சாஸ்திர ஞானத்தில் தேர்ந்து தனக்குரிய தர்மங்களை விடாது அனுஷ்டித்து வந்தான். தேவ பூஜை, அதிதி பூஜை, ரிஷிகடன், பிதுர்க்கடன் இவற்றைக் குறைவில்லாமல் செய்தும் அவன் மனதிற்குச் சாந்தி உண்டாகவில்லை. மோட்சமடைவதற்கான ஞானத்தைப் பெறும் பொருட்டு, ஞானிகள், யோகிகள், முனிவர்களை அடிக்கடி வரவழைத்து ஆராதித்தும் வந்தான்.

ஒருநாள் ஆத்மஸ்வரூவம் கிட்டப்பெற்ற ஜீவன் முக்தரை சந்தித்தான். அவர் முகத்தில் அபூர்வமான ஒளியும், சாந்தியும் நிலவுவதக் காணப் பிராமணனுக்கு ஆச்சரியமாயிருந்தது. உலக விவகாரங்களில் ஈடுபட்ட போதிலும் அவர் மனம் சமாதியிலமர்வது தேவ சர்மாவுக்கு நன்கு விளங்கிற்று. அவரை நன்கு பூஜித்துவிட்டு சர்மா மிக்க வணக்கத்தோடு தன் சிந்தையை அடக்க ஒரு உபாயம் கூறும்படி ஜீவன் முக்தரை வேண்டினான். அதற்கு யோகி மித்ரவான் என்ற பெயருடைய ஆடுமேய்ப்போனின் இருப்பிடத்தைச் சொல்லி அவனைப்போய்க் கேட்டுத்தெரிந்து கொள்ளச் சொன்னார். சர்மா உடனே அவ்வாட்டிடையனைத் தேடிச் சென்று கடைசியாக அவனை ஒரு வனத்தில் த்யானம் செய்து கொண்டிருக்கக் கண்டார். சர்மா அவனை வணங்கித்தான் வந்த காரியத்தைத் தெரிவித்தபோது ஆட்டிடையன் சொல்லலானான்.

கோதவரி தீரத்தில் ப்ரதிஷ்டானம் என்ற பட்டணத்தில் துர்தமனன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் அந்நாட்டரசன் அளித்த தானங்கள் பலவற்றைப் பெற்று ஜீவித்தான். தானம் பெறுவது பாபத்தொழிலாகயைால் அவன் இறந்த பின் கர்மாவிற்குரிய நரகங்களை அனுபவித்துப் பின் ஒர் வேட குலத்திலே பிறந்தான். நீசப்பெண் ஒருத்தியை விவாகம் செய்து வாழ்ந்தான். வயிறு வளர்க்க வகை இன்றி அவன் கஷ்டப்படுவதைப்பார்த்த அவன் மனைவி விபசாரத் தொழிலைக் கைக்கொண்டு பொருள் தேட ஆரம்பித்தாள். நாளடைவில் கொழுத்திருந்த ஒரு சண்டாள விடலையைக்காதலனாக அடைந்தாள். அவன் மூலமாக அவளுக்கு ஒர பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தை, தக்க பருவம் அடைந்த போது, தன் மகள் என்று கூடப் பாராமல் விவாகம் செய்து கொண்டான்.

இப்பாதகங்களுக்கெல்லாம் இடங்கொடுத்த அப்பெண்ணின் தாயும் ஒருநாள் திடீரென இறந்து டாகிநீ என்னும் பூதமாகப் பிறந்தாள். பூதமாயிருந்து தன் முதல் புருஷனாகிற வேடனை உயிரோடு உண்டு விட்டாள். பூதமாயிருந்த அச்சண்டாளியும் வேடனும் யமலோகம் சென்று பல நரகங்களை அனுபவித்தனர். மறுபடி வேடன் சிறுத்தையாகவும் சண்டாளி ஆடாகவும் மறுஜன்மம் எடுத்தனர். அச்சிறுத்தை ஒரு நாள் ஆட்டைத் துரத்திற்று. அப்போது ஆட்டு மந்தையோடு நானும் (ஆட்டிடையன்) பயந்து ஓடினேன். இந்த இடத்திற்கு வந்துதும் ஆடு ஓட்டத்தை நிறுத்தி நின்றது. சிறுத்தையைப் பார்ததுத் திரும்பி விருந்தாளியை உபசரிப்பதுபோல் என்னைச் சாப்பிட்டு உன் பசியை ஆற்றிக்கொள் என்று வேண்டிக்கொண்டது. சிறுத்தையோ பிற பிராணியைக் கொன்று தின்று உடலை வளர்ப்பது பாபச்செயல் அல்லவா? என்று தர்மம் கூறியது. இச் சம்பாஷணையைக் கேட்டு ஆச்சர்யமடைந்துயிருந்த நான், பிராணிகாளயிருந்தும் நீங்கள் இருவரும் விரோதத்தையும், பயத்தையும் விட்டு இவ்விடத்திற்கு வந்ததும் மனிதரைப் போல் பேசக்காரணம் என்ன? என்று கேட்டேன். காரணம் சொல்ல முடியாமல் சிறுத்தையும் ஆடும் அங்கே அருகில் இருந்த ஒரு வானரத்தைக் கேட்கலாம் என்று சொல்ல, மூவரும் வானரத்தினிடம் சென்று அந்த க்ஷேத்திர மகிமையை என்னவென்று கேட்டோம். வானரம் சொல்வது:

இங்கு ப்ரும்மா ப்ரதிஷ்டை செய்த திரியம்பக லிங்கம் ஒன்று உண்டு. அதை ஸு கர்மா என்னும் அந்தணன் ஒழுங்காகப் பூஜித்து

வந்தான். லிங்கத்திற்கு நைவேத்தியம் செய்த கந்தமூல பலங்களையே அவன் சாப்பிடுவது வழக்கம். ஒருதினம் அவன் இருப்பிடத்திற்கு வந்த அதிதி ஸுகர்மாவின் நியம நிஷ்டையைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டவராய் அங்குள்ள கல்மீது கீதையின் இரண்டாம் அத்யாயத்தை எழுதி வைத்து அதைப் பாராயணம் பண்ணும்படிச் சொல்லிப்போனார். அன்று முதலே இவ்விடத்தில் இருப்பவருக்கும் வருபவருக்கும் இயற்கையாக அமைந்த பகைமை நீங்கி சாந்தியே பரவி இருக்கிறது. எங்களிடம் குரங்கு சொன்னது அநுபவத்தில் முற்றும் உண்மையாகவே இருக்கிறது. நீரும், இக்கீதை இரண்டாம் அத்யாயத்தைப் பாராயணம் செய்தால் மனச் சாந்தி உண்டாகும். என்று ஆட்டிடையன் சொன்னான். அவனை வணங்கித் தன்னிருப்பிடம் சென்று, தேவ சர்மா ஓர் ஆத்மக் ஞானியை அடுத்து இரண்டாம் அத்யாயத்தை உபதேசம் கேட்டான். அதன் பலனாக மோக்ஷத்தையும் அடைந்தான். (பாத்ம புராணத்திலுள்ளது.)

22.சந்தேகம் ஏன்?

அர்ஜுனனுக்குத் தோன்றிய சோக மோஹங்களைப் போக்கக் கண்ணன் இதுவரை உபதேசம் செய்தார் அல்லவா? அதைக்கேட்டுக்கொண்டே வந்த அர்ஜுனனுக்குப் புதிய சந்தேகம் ஒன்று உண்டாயிற்று. சந்தேகம் உண்டாகக் காரணம் இல்லாமல் இல்லை. பகவான் முதலில் 'பலனில் இச்சையில்லாமல் செய்யப்படும் நிஷ்காம கர்மம் கொள்ளத்தக்கது. பந்த நிவர்த்தியை உண்டாக்கித்தரும் நிஷ்காம கருமம், காமிய கருமத்தைவிட மிக உயர்ந்தது' என்று சொல்லி உபதேசத்தை நிறுத்திவிடவில்லை. மேலும் ஞானத்தைச் சொல்லவாரம்பித்து, ஞானம் பரமாத்மா விடத்தில் நிலையாக நிற்பதாகிற ப்ரும்ம ஞானநிஷ்டை மரண காலத்தில் சிறிது நேரம் உண்டானாலும் ஒரு புருஷன் மறுபடிப் பிறப்பதில்லை' என்று உபதேசத்தை நடுவே நிறுத்தினார். அதனால் நிஷ்காம கருமமும் முக்திக்குச் சாதனம். ஞானயோகமாகிற பிரும்ம நிஷ்டையும் முக்திக்குச் சாதனம். முக்தியாகிற உயர்ந்த லக்ஷியத்தை அடைய கர்மம், ஞானம் ஆகிய இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன. அவற்றில் க்ஷத்திரியன் கர்ம மார்க்கத்தில் சென்றால் ஜீவ ஹிம்ஸைக் கிடமானப் போரைச் செய்தாக வேண்டும். ஞானமார்க்கத்தில் ஜீவஹிம்ஸைக்கிடமில்லை.

போரைச் செய்யாமல் விட்டு, ஞானமார்க்கத்தைத்தான் ஏன் தழுவக்கூடாது? என்ற சந்தேகத்தால் அர்ஜுனன் கண்ணனை மேலும் கேட்கிறான்.

நாதா கருமத்தின் நன்றாகில் புத்தியினை
ஏதாக இக்கருமத்து ஏவுதி - சூதார்ந்த
உன்உரை என்உள்மயக்கும் ஒன்றுஉரைஎன் நன்றி எனத்
தன்உரைசெய்தான் விசயன் தான்.

(இ–ள்) நாதா – தலைவனே! புத்தியினை – ஞான நிஷ்டையை, கருமத்தின் நன்றாகில் – கருமத்தைவிடச் சிறந்தது என்பாயாகில், ஏதாக – எதற்காக இ கருமத்து – பயங்கரமும் ஹிம்ஸையும் நிறைந்த இந்த யுத்தத் தொழிலில், ஏவுதி – (என்னை) ஏவுகின்றாய்? சூது ஆர்ந்த சந்தேகம் நிறைந்த உன் உரை – உனது வார்த்தைகள், என் உள்மயக்கும் – என்மனதை மோஹிக்கச் செய்யும் என் நன்றி – எனக்கு மேன்மை தரும் பரம புருஷார்த்தத்தை(அடைய) ஒன்று உரை – ஒரே உபாயம் சொல்லு, என – என்று, விசயன் – அர்ஜுனன், தன் உரை செய்தான் – தன் வார்த்தைகளைத் தெரிவித்தான்.

3 3 4 3
ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்தி: ஜநார்தந
4
தத்கிம் கர்மணி கோரேமாம் நியோஜயஸி கேசவ
3 3 4
வ்யாமிச்ரேணைவ வாக்யேந புத்திம் மோஹயஸீவ மே
3 3
ததேகம் வத நிச்சித்ய யேந ச்ரேயோஹம் ஆப்நுயாம்.

(இ–ள்) ஜநார்(த்)தன – கிருஷ்ணா! கர்மண:– கர்மத்தைக் காட்டிலும், புத்தி – ஞானநிஷ்டையானது ஜ்யாயஸீ – சிரேஷ்டம் (என்று) தே மதாசேத் – உமது திருவுளமானால், கேசவ – கிருஷ்ணா! கோரே – பயங்கரமான, தத் கர்மணி – அந்தக் கருமத்தில் (யுத்தத்தில்), மாம் – என்னை, கிம் நியோ ஜயஸி – ஏன் பிரவர்த்திக்கம்படிச் செய்கிறாய்?

வ்யாமிச்ரேண ஏவ – கலப்பேயான சந்தேகத்திற்கே (இடமான) வாக்யேன – வாக்கியத்தினால், மே புத்திம் – என் மனதை, மோஹயஸி இவ – மோஹிக்கச் செய்கிறதாகக் காண்கிறது. தத் – ஆகையால் ஏந – எதனால், அஹம் – நான், ச்ரேய:– பரம புருஷார்த்தத்தை (முக்தியை), ஆப்நுயாம் – அடைவேன்? (அதை), நிச்சித்ய – நிச்சயித்துக்கொண்டு, ஏகம்வத – அதொன்றையே சொல்லும்.

'சூதார்ந்த உன் உரை என் உள் மயக்கும்' என்று அர்ஜுனன் சொன்னதின் காரணத்தைத் தெரிந்துகொள்ள கண்ணன் கர்ம

நிஷ்டையைப்பற்றியும் ஞான நிஷ்டையைப்பற்றியும் முன்னே சொன்ன வார்த்தைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

(1) கர்ம நிஷ்டை:

பலா பேக்ஷையில்லாமல் பகவதர்ப்பணமாகச் செய்யப்படும் கருமயோகத்தில் முயல்வது வீணாகாது. அதில் பாவத்திற்கும் இடமில்லை. அந்த நிஷ்காம கருமத்தின் சிறிய பாகமும், மிகப்பெரிய ஜனன மரண பயத்தைத் தவிர்க்கும், இடையேவிட்டாலும் பயனற்றுப் போகாது செய்தவரை மோக்ஷ சாதனமாகிய பெரிய பயனைத்தரும்.

(2) ஞான நிஷ்டை:-

இந்நிஷ்டையை அடைந்தவன் சம்சாரத்தை (பிறப்பை) அடைவதில்லை. இந்தப் பிரும்ம நிஷ்டையில் மரண காலத்தில் சிறிது நேரம் இருந்தாலும் முக்தியை அடைகிறான் என்று கர்மம் ஞானம் ஆகிய இரண்டையும் சமமான சிறப்புடைய ஸாதனங்கள் போலவும் இரண்டில் ஏதேனும் ஒன்றே பந்த நிவர்த்தியைத் தரவல்லது போலவும், கண்ணன் முன்னே தெரிவித்தார். தெரிவிக்கும்போதே நடுவே 'யுத்தத்தை மேற்கொள்' என்று அர்ஜுனனை அடிக்கடி ஞாபகப்படுத்தியும் வந்தார். 'கர்மம்,' ஞானம் இரண்டும் ஸமமான உபாயமானால் கண்ணன் ஏன் அடிக்கடி யுத்தம் செய்யத் தூண்டவேண்டும்.? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று அர்ஜுனன் கருதியதால் 'சூதார்ந்த உன் உரை என் உள் மயக்கும்' என்று சொன்னான்.

அன்றியும் கண்ணன் இதுவரை கர்ம நிஷ்டையைவிட ஞான நிஷ்டையே மேலானது என்று எங்குமே தன் வாக்கினால் தெரிவிக்கவில்லை என்றாலும் ஞானநிஷ்டை மேலானதாக இருக்குமோ என்று ஊகம் செய்யும்படியாகச் சில வார்த்தைகளைக் கண்ணன் பெய்திருக்கிறார். 'இந்திரியங்களைக்கொண்டு விஷயங்களைக் கிரகிக்காமல் அனுபவிக்காமல் ஒருவன் விட்டாலும் அவைப்பற்றி மனதில் வரும் இச்சை நிவர்த்தியாகாது. ஞானிக்கு இவ்விச்சையோகம் அல்லது தியானத்தால் பரமாத்மாவைக் கண்ட பின்பே நிவர்த்தியாகிறது' (அத் 2 சு59 பா55) என்று கண்ணன் கூறியதைக் கொண்டு ஆலோசித்துப் பார்த்தால், தானாகவந்து அண்டும் விஷய ஆசையை, ஞான நிஷ்டையிலிருந்து ப்ரும்ம, சாக்ஷாத்காரம் பெற்றால் ஒழிய ஒருவனால் விலக்கமுடியாது என்ற ஊகம் செய்ய இடம் உண்டாகிறது. அர்ஜுனன் இவ்வாறு ஊகம் செய்துகொண்டதால் தான் 'கர்மத்தைவிட ஞானம் சிறந்ததானால் என்னை ஏன் யுத்தம் செய்யத் தூண்டுகிறீர்?' என்று கண்ணனைக் கேட்டான்.

'யுத்தம் செய்: யுத்தத்திற்கு உற்சாகம் கொள்' என்று கண்ணன்அடிக்கடி கூறிவந்ததை நினைக்கும் பொழுது அர்ஜுனனால் 'ஞானமே மேலானது,'என்று தான் செய்து கொண் ஊக்கத்தைச் சரியானது என்று உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை கர்மா மேலானதாயிருக்குமோ?' என்ற எண்ணமும் தோன்றவாரம்பித்தது. ஆக நிஷ்காம கருமத்தை நினைக்கும்போது அதுவே மேலானது போலவும் ஞான நிஷ்டையை நினைக்கும்போது அதுவே மேலானது போலவும் அர்ஜுனனுக்குத் தோன்றவே அதனால் மயக்கமும் சந்தேகமும் உண்டாயின. இரண்டில் ஒன்றுதான் சிரேஷ்டமான உபாயமாயிருக்கும், என்று மயக்கத்தில் ஊகமும் மறுபடித் தோன்ற ஆரம்பித்தது. ஆனால் அது கர்மமா? ஞானமா? என்று அர்ஜுனனால் நிச்சயிக்க முடியவில்லை. அதனால் கண்ணனையே நிச்சயித்துத் தனக்கு மோக்ஷம் தரும் உபாயம் ஒன்றையே சொல்லும்படி அர்ஜுனன் வேண்டினான்.

அர்ஜுனனுக்குக் கண்ணன் சொல்லப்போகும் பதிலைப் படிப்பதற்கு முன் கீதா சாஸ்திர விஷயமாக நம் நாட்டில் நிலவிவரும் சில வெவ்வேறான அபிப்பிராயங்களின் சுருக்கத்தைத் தெரிந்துகொள்வது நலம். அது கீதையின் மூலத்தை ஆதாரமாகக்கொண்டு நாமே ஒரு முடிவான அபிப்பிராயத்திற்கு வரப்பெரிதும் துணையாயிருக்கும்.

1. கர்மவாதம்:–

யுத்தத்தை மேற்கொண்டு போர்களத்திற்கு வந்து எதிரிகளைப் பார்த்தபோது அர்ஜுனனுக்கு சோக மோஹங்கள் உண்டாயின. அதனால் ஸ்வதர்மமான யுத்தத்தைக் கைவிட்டு பரதர்மமான ஸன்யாஸத்தைக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. சோக மோஹத்தைப் போக்கவே கண்ணன் கீதையை உபதேசித்தார். அதில் கர்மத்தையும் ஞானத்தையும் பக்தியையும் மோக்ஷ ஸாதனங்களாகத் தெரிவித்தார். மூன்றும் உயிருக்கு மோக்ஷத்தை அடைவிப்பதால் அவற்றை மூன்று யோகங்களாக கூறினார். அவற்றுள் பலனை இச்சிக்காமல் ஈச்வரார்ப்பண புத்தியோடு செய்யப்படும் கர்மயோகம் பந்த நிவர்த்தியை உண்டாக்கும் என்றும் அதனால் ஞான பக்திகளும் ஸித்திக்கும் என்றும், எந்தவிதத்திலும் கர்மத்தைச் செய்யாது விடலாகாது என்றம் சொல்கிறார். மூன்றாம் அத்தியாய ஆரம்பத்தில் அர்ஜுனன் கர்மம், ஞானம் ஆகிய இரண்டில் ஒன்றை எனக்கு நிச்சயித்துக்கூறும் என்று கேட்டதற்குக் கண்ணன்

கர்மயோகத்தைச் சிறந்த ஸாதனம் என்றார். கீதோபதேசம் முடிந்ததும் அர்ஜுனன் யுத்தத்தைச் செய்தால் கர்மயோகத்தையே சிறந்தாக அங்கீகரித்து அவன் மேற்கொண்டது வெளிப்படை. இதனால் நிஷ்காம்ய கர்மமே சிறந்த மோக்ஷ ஸாதனம். அதையே யாவரும் மேற்கொள்ள வேணும் என்பதே கீதாஸாரம் என்பது கர்மவாதிகள் அபிப்பிராயம்.

2. ஞானவாதம்:-

கர்மாவினால் பந்த நிவர்த்தி உண்டாகாது, கர்மாவும் ஞானமும் சேர்ந்து மோக்ஷத்தைத் தரும் என்பதும் பொருந்தாது. ஞானம் ஒன்றினால்தான் மோக்ஷம் ஸித்திக்கும். கர்மம் சித்த சுத்தியைத்தான் தரும் ஸித்தி என்பதற்கு சித் சுத்தி என்றே பொருள் 'யுத்யஸ்வ' (சண்டைசெய்) என்று கண்ணன் அடிக்கடி கீதையில் கூறியது பாதி பந்தத்தை (தடையை)ப் போக்கவே தான் மோக்ஷத்திற்குச் சாதனமாகக் கண்ணன் ஞானத்தையே விதித்தார். அதையே மேலானதாகப் போற்றினார். மூன்றாவது அத்தியாய ஆரம்பத்தில் அர்ஜுனன் 'கர்மம் உயர்ந்ததா? ஞானம் உயர்ந்ததா?' என்று கேட்டதுபோல மேலெழுந்த வாரியாக (ஸ்தூலமாக)ப் பார்ப்போருக்குத் தோன்றும் 'ஞானம் வராமல் கர்மங்களை விட்டுப் பிறகு வேதாந்த விசாரத்தால் ஞானம் பெறுவது எனில் ஆசையின்றி கர்மாக்களை ஈச்வரார்ப்பணமாகச் செய்வது இவ்விரண்டில் எது உயர்ந்தது? ஒன்றையே நிச்சயித்துச் சொல்ல வேண்டும்,' என்றே அர்ஜுனன் கேட்டான் கண்ணன் இரண்டையும் போற்றி கர்மாவைச் செய்யாமல் விடுவதிலுள்ள கஷ்டங்களை நினைத்து நிஷகாம்ய கர்மயோகத்தைச் சிறந்த ஸாதனம் என்றார். இக் கர்மா சித்த சுத்தியையும், பின்னர் ஞானத்தையும் தந்தே மோக்ஷ ஸாதனமாகும் என்பது ஞானவாதிகள் அபிப்பிராயம்.

3. பக்திவாதம் :-

கர்மம், ஞானம் ஆகிய இரண்டில் ஒவ்வொன்றும் தனித்தனியாகவோ இரண்டும் சேர்ந்தோ மோக்ஷத்திற்கு ஸாதனம் ஆவதில்லை பக்தியே மோக்ஷ ஸாதனம் என்றே கீதையில் முடிவாகக் கூறப்படுகிறது. கர்மமும் ஞானமும் பக்தியை உண்டாக்கவே உதவியாயிருக்கும். 'என்னையே சரணமாக அடை, நானே உபாயம்' என்று கண்ணன் கீதையில் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார். அந்நினைவே முதிர்ந்த பக்தி நிலை. 'சரணாகதி' என்று சொல்லப் படுவதும் அதுதான். அச்சரணாகதியே மோக்ஷத்திற்கு இன்றியமையாத சாதனமாகக் கீதையில் சொல்லப்படுகிறது என்பது பக்திவாதிகளின் அபிப்பிராயம். கண்ணன் சொல்லும் பதிலைப் பின்னர் பார்ப்போம்.

23. கருமம் செய்யாத காலம் ஏது?

'கண்ணா! தங்கள் உபதேசத்தால் கர்மாவைவிட ஞானமே சிறந்தாகத் தோன்றுகிறது ஏன் என்னைச் கோரமான கர்மாவைச் செய்யத் தூண்டுகிறீர்? எனக்கு நன்மை தரவல்ல ஒரே உபாயத்தைச் சொல்லும்' என்று அர்ஜுனன் கேட்டான் அல்லவா? இது உபதேசம் பெறும் சிஷ்யனின் லக்ஷணத்தை எடுத்துக்காட்டுவதாகச் சொல்வதும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் குரு சொல்வது தவறு போலச் சிஷ்யனுக்குத் தோன்றலாம். தோன்றினால் அதை முற்றிலும் சரியாகவே நம்பிக் குருவைக் குற்றம்கூறித் தாக்க ஆரம்பிக்க கூடாது. 'தாங்கள் சொல்வது சரிபோல் என் புத்தியில் தோன்றவில்லை, மறுமுறை நன்றாக கூறுங்கள்' என்று சிஷ்யன் வினயமாகக் கேட்க வேண்டும் அதற்கு அர்ஜுனன் இங்கு கையாண்ட முறை எடுத்துக்காட்டாக விருக்கிறது.

அர்ஜுனன் இவ்வாறு வினயத்தோடு கேட்டதற்குக் கண்ணன் அளித்த பதிலே கீதையில் 'கர்ம யோகம்' என்ற பெயருடைய மூன்றாம் அத்தியாயமாகச் சொல்லப்படுகிறது. முந்திய இரண்டாம் அத்தியாத்தில் கண்ணன் கர்மம், ஞானம் ஆகிய இரண்டின் தத்துவத்தை (உண்மைத் தன்மையை)ச் சொன்னார். அதனால் அது 'ஸாங்க்ய யோகம்' எனப்பட்டது. அதைக்கேட்ட அர்ஜுனனுக்கு உண்டான சந்தேகத்தைப் போக்கவே கண்ணனால் இவ்வத்தியாயத்தில் கர்மயோகம் சொல்லப்படுகிறது. 'எல்லா வேத சாஸ்திரங்களிலும் சொல்லப்படும் ஞானயோகமும், கர்மயோகமும் இரண்டு, மூன்றாம் அத்தியாயங்கல் விரிவாக வருணிக்கப்படுகின்றன. கீதையில் மேலே வரப்போகும் அத்யாங்களை இதன் விரிவாகவே சொல்லலாம்.கீதையில் லட்சியார்த்தத்தை இவ்விரு அத்தியாயங்களின் உதவிக்கொண்டே அறிய வேண்டும்' என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர். அதனால் அர்ஜுனனுக்குக் கண்ணன் என்ன பதில் சொல்லுகிறார் என்பதை ஊன்றிக் கவனிப்போம்.

அண்ணல் அவன்கேட்க அதன் இயல்கள் அங்குரைத்தான்
எண்ணமரும் சாங்கியருக் கின்னறிவு - வண்ணநிகழ்
சீருடைய யோகியர்க்குச் செய்கருமம் முன்இரண்டும்
பேருலகில் சொன்னேன் பிரித்து.

(இ–ள்) அவன் கேட்க – அர்ஜுனன் கேட்க, அண்ணல் – கண்ணன் எண் அமரும் சாங்கியருக்கு – தியானம் பியிலும் சாங்கியருக்கு, இன்அறிவு – சிறந்த ஞானயோகமும் வண்ண நிகழ் சீர் உடைய யோகியருக்கு – குணம் விளங்கும் மேன்மை பொருந்திய கரும யோகிகளுக்கு செய் கருமம் – செய்யப்படும் (நிஷகாம்ய) கருமயோகமும், இரண்டும் (ஆகிய) இரண்டு நிஷ்டைகளும் பேர் உலகில் – பிரசித்தமான இவ்வுலகத்தில், முன் – முன்பு, பிரித்துச் சொன்னேன். வேறாகச் சொன்னேன்(என்று) அதன் இயல்கள் உரைத்தான்–அதன் தன்மைகளைப் பேசினான்.

லோகேஸ்மின்[3] த்விதா[4] நிஷ்டா[2] புராப்ரோக்தா மயானக[4]
ஜ்ஞாந் யோகேந ஸாங்க்யாநாம்[3] கர்மயோகேந[2] யோகிநாம்[3][3].

(இ–ன்) அநக – குற்றமற்றவனே! அஸ்மிந்லோகே – இந்த உலகித்தில், மயா–என்றால், புரா–முன்பு, ஸாங்க்யானாம் – சாங்கியர்களுக்கு, ஜ்ஞான யோகேந– ஞான யோகத்தாலும் யோகிநாம்–யோகியர்களுக்கு கர்மயோகேந–கர்ம யோகத்தாலும் (என்ற) த்விதாத நிஷ்டா – இரண்டுவிதமான நிஷ்டைகள், ப்ரோசதா – சொல்லப்பட்டன.

தத்துவத்தைக் கேள்வியாலும், விசாரத்தாலும் தெரிந்து கொள்ளலாம் அதை அநுபவத்தால் உணரப்பிரும்ம நிஷ்டைகைகூட வேண்டும். அந்நிஷ்டையை அடையப் பயில்வோரைச் சாங்கியர்கள் என்று சொல்லாம் அவர்கள் முயற்சியில் ஸித்தியடைவதற்காக ஞானயோகத்தைப் பூர்வத்தில் தான் வெளியிட்டதாகப் கண்ணன் கூறுகிறார். தங்களைக் கருவிகளாகவும், பகவானை இயக்குவிக்கும் கர்த்தாவாகவும் பாவித்துக் கருமங்களைச் செய்வோர் யோகிகள் அவர்களுக்குப் பந்த நிவர்த்தி உண்டாகும் பொருட்டு நிஷ்காம்ய கரும யோகம் தன்னால் சொல்லப்பட்டது என்கிறார்.

‘புரா’ என்று சுலோகத்தில் வந்த பதத்திற்கு ‘முன்பு’ என்று பொருள். பாடலில் முன் என்று கொள்ளப்பட்டது. சங்கரர் இச்சொல்லுக்கு ‘சிருஷ்டி காலத்தில்’ என்று உரை செசய்தார். ஸ்ரீதரர் ‘முந்திய அத்தியாயத்தில்’ என்று கொண்டார். படைப்புக் காலத்தில் பகவான் மரீசி முதலியவர்களுக்கு, பிரவிருத்தி தர்மமாகிய கர்மயோகத்தையும், ஸநகாதிகளுக்கு நிவ்ருத்தி தர்மமாகிய ஞான யோகத்தையும் உபதேசித்தார் என்பதைப் புராணங்களால் அறியலாம்.

இதனால் ஞான மார்க்கத்தைப் பற்றினால், கருமங்களைச் செய்யாது விட்டுவிடலாமே என்று இயற்கையாக ஒவ்வொருவருக்கும் தோன்றும். அத்தவறான தோற்றத்திற்கு இடங்கொடுத்துக் கருமங்களை விடாதிருக்கக் கண்ணன் அதன் நுட்பத்தை அடுத்தபடியாக விளக்குகிறார்.

இட்டத்தால் கன்மத்து இழியார் வினையொழியார்
விட்டத்தால் பேறதனை மேலடையார் - தொட்டொன்றைச்
செய்யார் இறைப்பொழுதும் நில்லார் செறிந்தியல்வர்
மெய்யார் குணத்தெவரு மிக்கு.

(இ–ள்) இட்டத்தால் – (தன்) இஷ்டத்தால் கண்மத்து இழியார் – கருமங்களை ஆரம்பியாதவர். வினை ஒழியார் – பந்த நிவர்த்தி அடைய மாட்டார். விட்டத்தால் – (கருமங்களை) விடுவதனால் மேல் பேறு அதனை அடையார் – மேலான மோக்ஷத்தைப் பெறமாட்டார். தொட்டு ஒன்றைச் செய்யார் – ஆரம்பித்து ஒரு கருமத்தையும் செய்யாதவர்களாய், இறை பொழுதும் நில்லார் – (எவரும்) க்ஷண காலம் கூட இருக்க மாட்டார், எவரும் – எல்லோரும், மெய்ஆர் குணத்து – (உடலில்) பிரகிருதியில் தோன்றிய குணங்களால், மிக்கு செறிந்து – நன்றாகக் கட்டப்பட்டு, இயல்வர் – (சுபாவமாகக் கருமங்கள்) செய்விக்கப்படுவர்.

நகர்மணாம் அநாரம்பா^{4}த் நைஷ்கர்ம்யம் புருஷோச்நுதே
நசஸந்ந்யஸநாத் ஏவ ஸித்^{3}தீ^{4}ம்
ஸமதீ^{4} க^{3}ச்^{1}ச^{2}தீ நஹிகச்சித் க்ஷணமபி ஜாது தீஷ்ட^{2}த்ய கர்மக்ருத்
கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வப்ரக்ருதிஜை^{3}ர் குணை:

(இ–ள்) புருஷ:– புருஷன், கர்மணாம் – கருமங்களை அநாரம்பாத் – ஆரம்பியாமல் போவதனால், நைஷ்கர்ம்யம் – பந்த நிவர்த்தியை, நதச் நுதே – அடைகிறதில்லை. ஸந்ந்யஸ நாத் ஏவ – (கருமங்களை) விட்டு விடுவதனாலேயே, ஸித்திம் – மோக்ஷ ஸித்தியை, நஸமதி கச்சதிச – அடையவும் மாட்டான்.

கச்சித்–எவனும், ஜாது–ஒருக்காலும், க்ஷணமபி–க்ஷண காலம் கூட, அகர்ம க்ருத் – கருமத்தைச் செய்யாதவனாய். நதிஷ்டதி ஹி– இருப்பதில்லை அன்றோ? ஹி – ஏன் என்றால் ஸர்வேபி – எல்லாப் புருஷர்களும் ப்ரக்ருதிஜை:– பிரகிருதியால் உண்டான குணை – குணங்களால். அவச:– பரவசராய்(கட்டப்பட்டு). கர்ம–கருமத்தை, கார்யதே – செய்விக்கப்படுகிறார்கள்.

'கருமங்களை, ஆரம்பியாதவன்' விடுதலை அடைகிறதில்லை என்று சுலோகத்தில் சொல்லப்படுகிறதல்லாவா? கருமங்கள் என்பதற்குச் சங்கரர் 'எல்லாப் பாபங்களையும் போக்கத்தக்கனவும் சித்த சுத்தியைத் தரத்தக்கனவும், ஞான நிஷ்டைக்குக் காரணமானவும் ஆகிய கருமங்கள் என்று உரை செய்தார் ஸ்ரீதரர் 'நிஷ்காம கருமங்கள்' என்றும் ராமாநுஜர் பலாபேக்ஷயின்றிப்பகவானது ஆராதன ரூப்மாயிருப்பதும், அநாதி காலம் சேர்ந்த பாபங்களைப் போக்குவதுமான கருமங்கள்' என்றும் வியாக்யானம் செய்தனர்.

ஸந்யாஸம் என்பதற்கு விடுதல் அல்லது துறத்தல் என்பது பொதுவான பொருள் பாடலில் ஸந்யாஸாத் என்பது விட்டத்தால்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்குச் சங்கரர் ஞானம் அடைவதற்கு முன்பே கருமத்தை விடுவதால்' என்றும், ராமாநுஜர் 'சாஸ்த்ரோக்தமான அனுஷ்டிக்கத் தகுந்த கருமத்தை விடுவதால்' என்றும் ஸ்ரீதரர் ஞானம் இல்லாமல் ஸந்யாஸம் செய்து கொள்ளுவதால்' என்றும் உரை கூறினார்.

'கேவலம் கருமா நுஷ்டானமில்லாமையாலோ, கருமத்தை விடுவதலோ மோக்ஷ ஸித்தி எவரும் அடைவதில்லை' என்று கண்ணன் சொன்னார் ஏன்? எப்படி? என்று கேள்வி பிறக்குமல்லவா? அதற்குக் கண்ணனே அடுத்த வந்த சுலோகத்தில் காரணம் சொல்லியிருக்கிறார்.

ஜீவாத்மா ஸங்கல்பப்படியே கருமங்கள் நடந்து வந்தால், அவற்றை ஒருவன் இஷ்டப்படிக் கொள்ளவோ, விடவோ செய்யலாம். பிரகிருதியின் காரியமாகிய உடல் உயிருக்கிருக்கும் போது அதில் பிறக்கும் குணங்கள் ஜீவனை வசப்படுத்திக்கொண்டே இருக்கும். குணங்களின் அதீனத்தில் இருப்பதால் யாரும் கருமம் செய்யாமல் இருக்கவும் முடியாது. ஜீவாத்மாவே கர்த்தாவாகவிருந்து, செய்யும் காரியங்களைத் தானே, தொடங்கவோ, விடவோ முடியும். குணங்களால் கருமங்கள் செய்விக்கப்படும்பொழுது கருவிஸ்தானத்தில் இருக்கம் புருஷன் எப்படி விடமுடியும்? புருஷன் கருமம் செய்யாமல் இருக்கும் காலம் எது?

மனம், வாக்கு, காயம்(உடல்) என்று மூன்று கரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் ஏதாவது ஒன்று எல்லாக் காலங்களிலும் தொழில்பட்டேயாக வேண்டும். வாக்கும், காயமும் தொழிலின்றி இருந்தாலும் மனம் அடங்கிச் சும்மா இராது. சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது 'என்பது பலர் அறிந்த அநுபவ உண்மை'.

திருப்பதிக் கோவிலில் முளைக்கும் புல், முள்ளை எடுப்பதற்காகப் பரதேசிகள் ஒரு பட்டை சாதம் பெற்று வந்தார்கள். அங்கிருந்த ஒரு துறவி 'தான் சும்மா இருப்பதற்காகத் தினம் இரண்டு பட்டை சாதம் வேண்டும்' என்று கேட்டான். கோயில் மணியக்காரர் கொடுக்கப்போன போது காளகஸ்தி மன்னன் தடுத்தான். துறவி அரசனை சும்மா இருந்து பாரும் முடியுமா என்று, அப்பொழுது அதன் கஷ்டம் தெரியும்? என்று சொன்னான். அரசன் இது கஷ்டமா? என்று கை,கால் முதலியவைகளை அடக்கினான். மனம் வெளியிற் சஞ்சரிக்க ஆரம்பித்தது. துறவி அரசனை ஏன் சும்மாவில்லை என்று கேட்டான். அதன் கஷ்டத்தை உணர்ந்த அரசன் தன்னிடமிருந்த கோயில் நிர்வாகத்தைத் துறவியிடம் விட்டான். அதுமுதல் மஹந்துவிடம் இருந்து வருகிறது என்பது சரித்திரப் பிரஸித்தமான கதை.

24. சிறந்தது கர்மமா ஞானமா?

ஒரு பெண் சோர நாயகனைச் சந்திப்பதற்காக வேகமாக நடந்து போய் கொண்டிருந்தாள். அவள் மனம் அவனிடத்தே நன்றாக லயித்திருந்ததால் புற நிகழ்ச்சிகளில் சிறிது கூடச் செல்லவில்லை. அவள் சென்று கொண்டிருந்த வழியில் கைகால்களை மடக்கிக் கண்களை இறுக மூடிக்கொண்டு நிஷ்டையில் இருப்பவர் போல ஒரு யோகி உட்கார்ந்திருந்தார். காதலனே ஞாபகமாக அவனைச் சந்திக்கச் செல்லும் வேகத்தில் அப்பெண், யோகியைத் தன் காலினால் இடறிக்கொண்டே போனாள். யோகி கண்ணை விழித்தார். தன்னைக் காலால் மிதித்த பெண் மீது கோபங் கொண்டார். அவளைக் தண்டிக்க வேணுமென்று ஆத்திரங் கொண்டார். அதற்குள், அப்பெண் நெடுந்தூரம் சென்று விட்டாள். காதலனைச் சந்தித்துவிட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பி வந்தாள். அப்பொழுது சுய உணர்வு நன்றாக இருந்ததால் முன்னே காலால் இடறிய யோகியைக் கண்டு வணங்கினாள். 'போகும் போது பகவத் தியானத்தில் இருந்த என்னை ஏன் காலால் மிதித்தாய்?' என்று யோகி ஆத்திரத்தோடு கேட்டார். சுவாமி! காதல் வெறியால் காதலனே நினைவாகப் போனபோது என்னென்ன செய்தேன், என்பதே எனக்கு ஞாபகத்தில் இல்லை. தாங்கள் தியானத்தில் இருந்ததாகச் சொல்லுகிறீர்களே. தங்கள் மனம் சரியாகப் பகவானிடத்தில் ஊன்றியிருந்தால், நான் மிதித்ததை எப்படி

அறிந்து கொள்ள முடியும்?' என்று பெண் பதில் கேட்ட போது யோகி நாணத்தால் தலை குனிந்தார், அலையும் மனதை நிறுத்திப் பிடிக்காமல், கர்மேந்திரியங்களை மாத்திரம் கட்டி என்ன பயன்? என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் நீதிக் கதைகளில் தெரிவித்தார்.

உண்மை ஞானி, தனது பகவத்தியானத்திற்கப் பங்கம் ஏற்படாமலே உலக காரியங்களையும் செய்து கொண்டிருப்பான். அது அவனுக்குச் சாத்தியமாகும் என்பதைக் கைவல்லிய நூலில் திருஷ்டாந்தத்தால் விளக்குகிறார்.

" .... ஆசை கொண்டு

நவமாகப் பரபுருஷன்தனைக் கூடி நயந்த சுகம்
அநுபவித்த நாரி நெஞ்சம்
தவமாக மனைத்தொழில்கள் செய்யும் போதும் தழுவி
அநுபவித்த சுகம் தனை விடாதே"

(நவமாக – புதிதாக, நாரி நெஞ்சம் – பெண்ணின் மனம், தவமாக – சிறப்பாக)

அந்நிலை எய்தப் பெறாதவர், கருமங்களைச் செய்யாமல் கைகால், வாய் முதலிய புற உறுப்புகளை மட்டும் உலகினர் காண அடக்கி விட்டால் மனம் அடங்குமா? தகாத விஷயங்களில் சஞ்சரிக்கவாரம்பிக்கும் அவர்கள் நிந்திக்கத் தகுந்தவர்களே என்பதைக் கண்ணன் எடுத்துச் சொல்லுகிறார்.

கருமக் கரணங்கள் கட்டித் தன்நெஞ்சில்
வருமப் பொருள்நினைந்து மன்னிப்- பெருமைவினை
கைம்மையினால் பாவிக்கும் கள்ளக் கருத்துடையான்
பொய்ம்மையினான் என்றே புகல்.

(இ–ள்) கருமக் கரணங்கள் கட்டி – கருமேந்திரியங்களை அடக்கி, தன் நெஞ்சில் வரும் – தன் மனதில் வரும். அப்பொருள் மன்னி நினைந்து – அவ்வைம்புல விஷயங்களை நன்றாக நினைந்து பெருமை வினை – பெருமைக்கிடமான ஞான நிஷ்டையை, கைம்மையினால் பாவிக்கும் – வஞ்சனையால் (தனக்குக் கை வந்தது போல) நடிக்கும், கள்ளக் கருத்துடையான் – கபட நோக்குடையவனை, பொய்ம்மையினான் என்றே புகல் – பொய்யாசாரக்காரன் என்றே சொல்லு.

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய:ஆஸ்தே மநஸா ஸ்மரன்
இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே

(இ—ள்) ய:—எவன், கர்மேந்த்ரி யாணி — கருமேந்திரியங்களை, ஸம்யம்ய—அடக்கி விமூடாத்மா—ஸ்வரூப ஞானமில்லாதவனாய், மநஸா—மனதினால் இந்த்ரியார்(த்) தாந் இந்திரிய விஷயங்களை, ஸ்மரந்—நினைத்துக்கொண்டு ஆஸ்தே—இருக்கிறானோ, ஸ:—அவன் மித்யாசார—பொய்யா சாரக்காரன் (என்று) உச்யதே—சொல்லப்படுகிறான்.

கர்மேந்திரியங்கள்—வாய் கை, கால் முதலியன. ஸ்வரூப ஞானம் ஸித்திக்கு முன்பு கருமேந்திரியங்களால் உரிய கர்மாக்கள் செய்வதை விட்டு, அவற்றை அடக்கிக் கொண்டிருப்பவனது மனம் விஷயங்களைப் பற்றாமல் அடங்கி நிற்பது மிகவும் துர்லபம். ஞானேந்திரியங்களின் மூலமாகப் பெரும்பாலும் மனம் விஷயங்களைப் பற்றி அதிகமாச் சஞ்சாரம் செய்யவே அது ஏதுவாகும் கண், காது, நாக்கு, மூக்கு த்வக் (உடல்) ஆகிய ஞானேந்திரியங்கள் அதிக பலமுள்ளவை.

விஷஸம்மந்தத்திற்கு அஞ்சி, ருச்யத்ருங்கர் வனத்தில் வாஸம் செய்தார். தாஸிகள் கானம் அவர் காதை இழுத்தது. ரூபம் கண்ணைக் கவர்ந்தது. வாஸனை மூக்கை இழுத்தது. பக்ஷ்யம் அவர் நாக்கில் ஜலம் ஊறச் செய்தது. தாஸிகள் ஸ்பர்சம் அவர் உடலை இழுத்தது. அதனால் மனம் சலித்து, அவருடைய ப்ரும்ம சர்ய விரதம் குலைந்தது உலகப் பிரஸித்தம். அப்படியிருக்கச் சாமானியர்கள் ஞானம் ஸித்திக்குமுன்பே, உரிய கர்மாக்களைச் செய்யாமல் விட்டு 'ஸந்யாஸத்தை (துறவறத்தை) மேற்கொண்டேன் என்றால் அவர் கதி என்னவாகும்?. கர்மாக்களைச் செய்யாமல் விடுவதால், ஞானம் ஸித்திப்பதற்கு அங்கமாகிய சித்தசுத்தியும் ஏற்படாமல் கேட்டிற்கே காரணமாகும் என்பது இச்சுலோகத்தால் மறைமுகமாகச் சொல்லப்பட்டது. இவ்வாறு தகாதது இன்னது என்பதைச் சொன்ன கண்ணன் அடுத்த படியாகத் தக்கது இன்னது எனச் சொல்லுகிறார்.

நெஞ்சால் புலனடக்கி நேர்கரும யோகத்தை
எஞ்சாது உழல்கரும இந்திரியத்தால்-துஞ்சாது
தான்தொடங்கி நன்றியலும் தன்மையுடன் தொத்தற்றான்
வான் தொடர்ந்த வண்புகழான் மற்று.

(இ—ள்) நெஞ்சால்—மனத்தால். புலன் அடக்கி—ஞானேந்திரியங்களை அடக்கி, எஞ்சாது உழல்—குறைவில்லாமல்

தொழிற்படும் (சுபாவமுடைய) கரும இந்திரியத்தால்-கருமேந்திரியங்களால் நேர் கரும யோகத்தை-சிறந்த (பலா பேக்ஷையில்லாத) கர்மயோகத்தை, தான் தொடங்கி நன்று இயலும் தன்மை உடன்-தான் ஆரம்பித்து நன்றாகச் செய்யும் சுபாவமுடையவனாய், தொத்து அற்றான்-பற்று அற்றவனே, வான் தொடர்ந்த வண்புகழான்-எங்கும் பரவிய மிக்க புகழுடையவன்.

யஸ்த்3விந்த்ரியாணி மனஸா நியம்யாரப்3 தேர் ஜுன காமேந்3த்ரியை: கர்மயோக3 மஸக்த: ஸவிசிஷ்யதே

(இ-ள்) அர்ஜுந-அர்ஜுந, ய:து-எந்தப் புருஷன், இந்திரியாணி-(ஞான) இந்திரியங்களை, மனஸா நியம்ய-மனதினால் அடக்கி, அஸக்த-பலத்தில் இச்சை இல்லாமல், கர்மேந்த்ரியை:-கர்மேந்திரியங்களால் கர்மயோகம்-கருமயோகத்தை ஆரபதே-தொடங்குகின்றானோ ஸ:- அவன் விசிஷ்யதே சிறந்தவனாகிறான்.

கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் ஆகிய இருவகை இந்திரியங்களும் அடங்கினால் அன்றி, மனம் அடங்கி ஒரு நிலைப்படாது. தொழிற்படுவதே கர்மேந்திரியங்களுக்குச் சுபாவம் ஆதலால் அவற்றைப் பலா பேக்ஷையின்றிச் செய்யும் உரிய கர்மாக்களில் ஈடுபடுத்தினால், ஞானேந்திரியங்களை அடக்கத் துணை செய்யும். ஞானேந்திரியங்கள் அடங்கினால் மனத்தின் ஸஞ்சாரம் நின்று மனமும் ஒரு வழிப்படும். உரிய கர்மாக்களைச் செய்யாமல் விட்டுக் கர்மேந்திரியங்களை அடக்கப்பார்ப்பவனுக்கு, மனம் ஞானேந்திரிய வாயிலாகச் சஞ்சரிக்க ஆரம்பிக்கும். நாளடைவில் பலவந்தமாக அடக்கப்பட்ட கர்மேந்திரியங்களும், தீய கருமங்களில் ஈடுபட ஆரம்பிக்கும். உரிய கருமங்களைச் செய்யாது விடுவதில் இத்தகைய அபாயம் இருந்துவருதால், பலாபேக்ஷயின்றி உரிய கர்மங்களைச் செய்துகொண்டே, மனதால் ஞானேந்திரியங்களை அடக்குபவனே சரியான மார்க்த்தைக் கடைப்பிடித்தவன் ஆகிறான். அதனால் அவனே சிறந்தவனுமாகிறான். பலாபேக்ஷையின்றிச் செய்யும் கருமத்தைச் சிலாகிக்க மற்றொரு காரணமும் உண்டு. அதைக் கண்ணன் வரும் சுலோகத்தில் தெரிவிக்கிறார்.

நின்றுநீ செய்உன் நியதக் கருமத்தை
என்றும்இது மற்றறிவில் ஏற்றமுடைத்து-உன்தன்
உடல் நடப்பும் ஓடாது ஒருகருமம் அற்றால்
அடல்அடர்த்த தோளாய் அறி

(இ–ள்) உன் நியதக் கருமத்தை–உனக்கு வகுத்த (நித்திய நைமித்திக) கருமத்தை, நீ நின்று செய்–நீ விடாமல் செய், என்றும் இது அறிவில் ஏற்றம் உடைத்து–எப்பொழுதும் (பலாபேக்ஷையற்ற) இக்கருமம் (கருமத்தை செய்யாமல் விடும்) ஞானத்தைப் பார்க்கிலும் மேன்மை உடையது. ஒரு கருமம் அற்றால்–சிறந்த கருமம் செய்யாது விட்டால் உன் தன்உடல் நடப்பும் ஒடாது–(ஞானம் பெறுதற்கு உபயோகமாக) உன் சரீர ரக்ஷணமும் ஸித்திக்காது (என்பதை) அடல் அடர்த்ததோளாய் –வலிமை மிகுந்த தோளுடைய அர்ஜுனா! அறி–அறிந்து கொள்.

நியதம் குரு கர்மத்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண:

சரீரயாத்ராபிச தே நப்ரஸித்த்யேத கர்மண:

(இ–ள்) த்வம்–நீ, நியதம் கர்ம–வகுத்த கர்மத்தை குரு–செய் ஹி–ஏன் என்றால், அகர்மண;–ஞான யோகத்தைக் காட்டிலும் கர்ம–(பலாபேக்ஷையற்ற கர்மயோகமே), ஜ்யாய–சிரேஷ்டம் கிம்ச–மேலும், அகர்மண: தே–கருமத்தை விட்ட உனக்கு, சரீர யாத்ராபி–தேஹ சம்ரக்ஷணமும், நப்ரஸித்யேத்–கை கூடாது.

ஞானம் அநுபவ ஸாத்தியமாகு முன்பு ஞான நிஷ்டையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டு, உரிய கர்மாக்களையும் செய்யாமல் பலர் விட்டு விடுகின்றனர். அவர்கள் கர்மாக்களை விடுவதால் தமது சரீரத்தையும் ரக்ஷித்துக் கொள்ளமாட்டாமல் சமூகத்திற்கே பெரிய பாரமாகின்றனர். ஞானமும் பெறாமல் சோம்பேறிகளாகித் தெரிந்தும் தெரியாமலும் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றவர்களாகிறார்கள். காவி உடையாலும், தலைமயிரை மழித்தாலாலும், ஜடை செய்தலாலும் துறவிகள் போலத் தோற்றமளிக்கும் சோம்பேறிக் கூட்டங்களுக்கு இந் நாட்டில் குறைவே இல்லை. அவர்கள் மனமும் அடங்காமல் உரிய கருமங்களை விட்டிருப்பதால் தங்கள் தேக யாத்திரை நடைபெறப் பிறரை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

பலாபேக்ஷயின்றிச் செய்யப்படும் கர்மயோகத்தில் ஒருவனுக்குத் தேக சம்ரக்ஷணமும் நடைபெறுவதால், அதற்குப் பிறரை எதிர்பார்த்துக் கருமங்களை விட்டுப் பயிலும் ஞான யோகத்தைவிட, அதுவே சிறந்தது. தேக ஸம்ரக்ஷணமும் ஸித்தியாகாமல், பெரும்பாலும் அபாயத்திற்கே ஏதுவாகின்ற ஞானமார்க்கத்தைவிடக், கர்மமார்க்கம் எல்லோருக்கும் சுலபமாயிருப்பதால் அதைச் சிறப்புடையதாகக் கண்ணன் கூறி அர்ஜுனனை நிஷ்காம்ய கர்மத்தையே கொள்ளத் தூண்டுகிறார். இத்தகைய கர்மத்தை, இல்லறத்திலிருந்தே எல்லோரும்

மேற்கொள்ளலாம், மேற்கொண்டால் அவ்வில்லறம் துறவறத்தினும் மேலானது என்று திருவள்ளுவரும் கீதையின் கருத்தை அழகாக வெளியிடுகிறார்.

"இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை".

என்னும் குறள் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

25. பிரபஞ்ச சுபிக்ஷமே பரஸ்பர உதவியில்தான்

'கருமங்களைச் செய்யாமலே விட்டு முயல்கின்ற ஞானயோகத்தைப் பார்க்கிலும், பலத்தில் ஆசையின்றிச் செய்யப்படும் கர்மயோகமே சிறந்தது என்பதைக் கண்ணன் காரணங்களோடு முன்னே தெளிவுபடுத்தினார் அல்லவா? அசிரத்தை,சோம்பல் அல்லது அஞ்ஞானம் காரணமாகக் கருமம் செய்ய விரும்பாத சிலர் முன்னே சொன்னதற்கு மேலே சில ஆக்ஷேபணைகள் சொல்லக்கூடும் என ஊகித்துக் கண்ணன் அவ்வாக்ஷேபணையைத்தானே எடுத்துக் காட்டுகிறார். அதற்குத்தானே சமாதானமும் தருகிறார். சாஸ்திர பரிபாஷையில் இதை 'பூர்வபக்ஷ சமாதானம்' என்று சொல்லுவது வழக்கம். வரும் சுலோகத்தை அதற்கு எடுத்துக் காட்டு என்றே சொல்லாம்.

ஐவகைய வேள்வியினுக்கு ஆகாக் கருமங்கள்
மெய்வகையே கட்டும் இகஉலகை-இவ்வாகையால்
ஆங்கதனுக் காக அமைந்துன் நசையை விடுத்
தீங்குஇதனை நின்றே இயற்று.

(இ-ள்) ஐவகைய வேள்வியினுக்கு ஆகா கருமங்கள்—ஐந்து வகையான யஜ்ஞங்களுக்கு அந்நியமான காமிய கருமங்கள் இக உலகை மெய்வகையே கட்டும்—இந்த உலகத்துயிர்களை உண்மையாகவே பந்தம் செய்யும் இவ்வகையால்—இவ்வாறிருப்பதால், உன் நசையை விடுத்து—(பலனுக்காக வரும்) உனது ஆசையை விட்டு, அதனுக்காக அமைந்து—விஷ்ணு ஆராதன ரூபமான யஜ்ஞ கர்மத்துக்கு இசைந்து, ஈங்கு—இப்பொழுது, இதனை நின்று இயற்று—இப்போரை விடாமல் செய்.

யக்ஞார்த்தாத் கர்மணோன்யத்ர லோகோயம் கர்மபந்தன:
தத்ர்த்தம் கர்ம கௌந்தேய முக்த ஸங்க: ஸமாசர

(இ-ள்) யக்ஞார்த்தாத்-விஷ்ணு வாராதன ரூபமான கர்மண:- கர்மத்திற்கு அந்யத்ர-வேறான காமிய கருமங்களில் அயம் லோக:- இந்த உலக உயிர்கள், கர்ம பந்தன:- கர்மத்தால் கட்டப்பட்டவராகின்றார்கள், கௌந்தேய-அர்ஜுனா! ததர்த்தம் கர்ம- அந்த விஷ்ணு ஆராதனமாகிற கர்மத்தை, முக்தஸங்க: பலத்தில் இச்சையைவிட்டு ஸமாசர-செய்.

இச்சுலோகத்திற்குச் சங்கரர் கூறும் உரை.-'கருமம் பந்திக்கும் சுபாவம் உடையதாகையால், அதைச் செய்யக்கூடாதென்று சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். அவ்வாக்ஷேபனைக்குப் பகவான் தெரிவிக்கும் சமாதானமாவது யாகம் என்பது விஷ்ணு யாகம் செய்தல் விஷ்ணு ஆராதனம் அதனால் யாகாதி கருமங்களைச் செய்து பலனைப் பகவதர்ப்பணம் செய்தால், அக்கருமங்கள் பந்த ஏது ஆகமாட்டா என்று இச்சுலோகத்தால் விவரித்தாகப் பொருள் கொள்ளவேண்டும்! ஸ்ரீதரரும் தனது உரையில் இதுவே பொருளாகச் சொல்லியிருக்கிறார்.

யக்ஞம், யாகம், வேள்வி என்பவை ஒரே பொருளைத் தரும்பல சொற்கள். யக்ஞம் என்பது விஷ்ணுவையே குறிப்பதாகப் பல வேதவாக்கியங்களும் இருக்கின்றன. அது பிதுர்யக்ஞம், தேவயக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பூதயக்ஞம், ப்ரும்மயக்ஞம் என ஐந்துவகைப்படும். இவ்வைந்தையும் இல்லறத்தில் (கிருஹஸ்தாச்ரமத்தில்) இருப்போர் செய்தே ஆகவேண்டிய தர்மங்களாகவும் கடமைகளாகவும் சொல்லலாம். க்ஷத்திரியனுக்குப் போர் செய்வது இவ்வைந்தில் ஒன்றாய் அடங்குவதால், கண்ணன் அர்ஜுனனைப் பலனில் இச்சையைவிட்டு இதனை நின்றே இயற்று' என்று சொல்லுகிறார்.

ஐவகை யக்ஞங்களையும் யாரும் செய்யாமல் விடக்கூடாத சிறந்த கருமங்களாகத் திருவள்ளுவரும் கூறுகிறார்.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை

(தென்புலத்தார்-பிதுர்க்கள், ஒக்கல்-சுற்றம், பூதம், தான்- தனக்கு (ப்ரும்மயக்ஞம்)

தமிழ்ப் பேசும் மக்களை வைதிக சமயத்துக்குப் புறம்பானவர்கள் என்று பிரசாரம் செய்து, நாட்டில் பிளவையுண்டாக்கப் பார்ப்போர் இப்பகுதியைப் படித்து ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

வேள்வி செய்வதாகிற கர்மா விஷ்ணு ஆராதனம் என்றும், வேறு கர்மாக்களைப் போல் பலனில் ஆசையை விட்டுச் செய்தால், பந்திக்கும் (கட்டும்) சுபாவம் அதற்கு இல்லை என்றும் சொன்ன கண்ணன் வேள்வியின் வரலாற்றை அடுத்த இரண்டு சுலோகங்களில் வெளியிடுகிறார்.

வேள்வியுடன் மானிடரை வேதா படைத்துமுனம்
கேள்வி அவர்க்குரைத்தான் கேண்மையுடன்-ஊழ்வினையாம்
இத்தாலே துய்பயன் உற்றிடுமின் உங்களுக்கிங்
கெத்தாலும் இன்பளிக்கும் ஈது

இவ்வேள்வியால் நீர் இறைஞ்சிடுமீன் வானோரை
அவ்வேள்வி யால்வரும் ஆக்கத்தால்-எவ்வாறும்
உம்மை அளிப்பர் ஒருவர்க் கொருவர்நீர்
இம்மை மறுமைஉறும் இங்கு.

(இ—ள்) வேதா—ப்ரும்மா, முனம்—முன்பு. வேள்வி உடன் மானிடரை படைத்து—வேள்வியோடு கூடிய பிரஜைகளைச் சிருஷ்டித்து கேண்மை உடன்—அன்புடன் கேள்வி அவர்க்கு உரைத்தான் (பின்வரும்) செய்தியை அவர்களுக்கு எடுத்துச் சொன்னான். ஊழ்வினையாம் இதுதாலே – முறையான கர்மாவாகிற இந்த யக்ஞங்களாலே துய்பயன் உற்றிடுமின் – அநுபவிக்கத்தகுந்த பலன்களை அடையுங்கள்; ஈது – இவ்வேள்வி, உங்களுக்கு எத்தாலும் இன்பு அளிக்கும் – உங்களுக்கு எல்லா வகைகளிலும் இன்பத்தைக் கொடுக்கும்.

நீர் – (ஜனங்களாகிற) நீங்கள், வானோரை வேள்வியால் இறைஞ்சிடுமின் – தேவர்களை யக்ஞங்களால் உண்டாகும் வளத்தினால், எவ்வாறும் உம்மை அளிப்பர் – எத்துறையிலும் உங்களை (தேவர்) காப்பாற்றுவார்கள்; இங்கு – இப் பிரபஞ்சத்தில், நீர் – (தேவர்களுங் மனிதர்களுமாகிற) நீங்கள், ஒருவர்க்கு ஒருவர் பரஸ்பரம் (உதவி) இம்மை மறுமை உறும் – இகத்திலும், பரத்திலும் நன்மை பெறுவீர்கள்.

ஸஹயக்ஞா: ப்ரஜா:ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதீ:
அநேந ப்ரஸவிஷ்யத்வ[4] மேஷவோ ஸ்த்விஷ்ட[4] காமதுக்
தே[3]வான் பா[4]வயதாநேந தே[3] தே[4]வா பாவயந்து வ:
பரஸ்பரம் பா[4]வயந்த ச்ரேய: பரம் அவாப்[2]ஸ்யத.

(இ–ள்) ப்ரஜாபதி:– ப்ரும்மா, புரா – முன்பு, ஸஹயக்ஞா:– யக்ஞங்களோடு கூடிய ப்ரஜா:– பிரஜைகளை, ஸ்ருஷ்டவா – படைத்து, அநேந – இந்த யக்ஞததால், ப்ரஸவிஷ்யத்வம் – விருத்தி அடையுங்கள், ஏஷ:– இது, வ:–உங்களுக்கு, இஷ்டகாமதுக் அஸ்து – இஷ்டமான பிரயோசனங்களைக் கொடுக்கட்டும், உவாச – (என்று) சொன்னார்.

அநேந – இந்த (யக்ருத்) தால், தேவாந் – தேவர்களை, பாவயத – ஆராதியுங்கள், தேதேவர்:– அந்த தேவர்கள், வ: பாவயந்து – உங்களைக் காப்பாற்றிக் கொண்டிருப்பார்களாக பரஸ்பரம் – ஒருவருக்கொருவர், பாவயந்த – உபகரித்துக்கொண்டு, ரேய: பரம்ச்ரேய :– மேலான க்ஷேமத்தை (முக்தியை), அவாப்ஸ்யத–அடையுங்கள்.

சிருஷ்டிக்கும் நிலையில் கடவுளுக்கு ப்ரஜாபதி என்று பெயர் . தமிழ்ப்பாட்டில் வந்த வேதா என்ற சொல்லும் பரமாத்வாகிற கடவுளையே குறிக்கும். படைப்புக் காலத்திலிருந்தே தேவரையும் மனிதரையும் ஒன்றாகப் பிணைத்திருக்கிற கடவுளின் தந்திரத்தைப் பக்தர்கள் மாத்திரம் இன்றி, அறிவுடையோர் எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மனிதர்கள் நற்கருமங்களாகிற யக்ஞங்களை (கடமைகளை)ச் சரிவர விடாமல் செய்தால்தான் தேவர்களுக்கு ஆகாரம், யக்ஞத்தால் சந்தோஷமடைந்த தேவர்கள் மழை அளித்தால்தான் மனிதர்களுக்கு ஜீவனம். மண்ணுலகில் யஜ்ஞம் முதலான தர்மங்கள் சரியாக நடைபெற விடில் விண்ணுலகில் பஞ்சம். விண்ணவர் மழையளிக்காவிடில் மண்ணவருக்குப் பஞ்சம் தேவரும் மனிதரும் பரஸ்பரம் க்ஷேமம் அடையலாம் அல்லது கேடு அடையலாம் என்ற நிலையில் பிணைந்திருப்பதைக் கண்ணன் இச்சுலோகங்களில் தெரிவிப்பதைப் பிரபஞ்ச தத்துவத்தில் ஒரு அம்சத்தை மட்டுமே உதாரணமாக எடுத்துக் காட்டியதாகவே கொள்ள வேண்டும்.

மனிதர்களும் மிருகங்களும் சுவாசித்து வெளிவிடும் காற்று, தாவர வர்க்கங்களுக்கு இன்றி அமையாத உதவியைச் செய்கிறது தாவரங்கள் தங்கள் வளர்ச்சிக்கும், ஜீவனத்திற்கும் அத்யாவசியமான கரிப்பொருளை நாம் வெளிவிட்ட கரிமலை வாயுவிலிருந்து பிரித்து எடுத்துக்கொண்டு நம் வாழ்க்கைக்கு ஜீவாதாரமான பிராணவாயுவை

மட்டும் தருகின்றன. விவசாயத்திற்காக நிலத்தை உழும் உழவனும், மண்ணில் மலிந்து கிடக்கும் மண்பூச்சிகளும், பரஸ்பர உதவியால் நன்மை அடைவதும், கண்ணுக்குப் புலப்படாத பல நுண்ணுயிர் இனங்களும் மனிதர்களும் பரஸ்பர உதவியால் சுபிக்ஷம் அடைந்து வருவதும் குழந்தைகளும் அறிந்துகொள்ளக்கூடிய மறுக்கமுடியாத விஞ்ஞான உண்மைகள்.

சீதோஷ்ண நிலைகளாலும், விளைபொருள்களாலும், வேறுபட்ட தேசங்களையும் அந்தந்த தேச மக்களின் கலை, தொழில், நாகரீக வேறுபாட்டையும் சிந்தித்துப் பார்த்தால் பரஸ்பர உதவியால் அனைவரும் சுபிக்ஷம் அடையவேண்டும் என்றே பகவான் கருதுவாகத் தோன்றும் பிரபஞ்ச வேற்றுமை. பரஸ்பர உதவியால் சுபிக்ஷம் அடைய வேண்டும் என்ற நோக்குடனேயே சிருஷ்டிக்கப்பட்டதன் மர்மத்தை யோகிகளும் ஞானிகளும் அனுபவத்தால் உணர்ந்தனர். உணர்ந்த நிலையில் அவர்களுக்கு யாருமே விரோதியாகத் தோன்றவில்லை. சிநேகபாவமும் எல்லாவற்றிலும் இயற்கையாகவே உண்டாயிற்று. கீதையைக் கற்றுக் தெளிந்து, வாழ்க்கையில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்த மஹாத்மாவை யோகீஸ்ரர்களில் ஒருவராகவே சொல்லலாம். அவருக்கும் தேசம், பாஷை, மதம் முதலிய வேறுபாட்டால் யாருமே அந்நியராகத் தோன்றவில்லை. பிரபஞ்ச சுபிக்ஷம், பரஸ்பர உதவியால்தான் வரும். ஈச்வரனின் ஆக்ஞை என்பதை உணர்ந்து அதற்கேற்ப வாழ்ந்தார். பிறரை அவ்வாறே வாழத் தூண்டவும் செய்தார். பிரபஞ்ச சுபிக்ஷம் பரஸ்பர உதவியில்தான் வரும் என்ற கீதையின் உண்மையை விஞ்ஞான உண்மையை எல்லோரும் அறிந்து அதற்கேற்ப வாழ்ந்தால் உலகிலேயே மஹாத்மா விரும்பிய ராமராஜ்யம் ஏன் தோன்றாது?

26. எதை உண்ண வேண்டும்?

உண்ணவேண்டிய தக்க உணவு எது? என்று கேட்டால் விஞ்ஞானிகள் ஏ முதல் டி வரையுள்ள விட்டமின் சத்துக்கள் எது, எதில் எந்த, அளவில் அடங்கி இருக்கின்றன, தொழில் வாரியாகச் சரீரத்துக்குத் தேவையான உஷ்ணம் பெற ஒவ்வொரு தேசத்தாரும் சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தவாறு எந்தெந்த உணவை எத்தனை அவுன்ஸ் உட்கொள்ள வேண்டும் என்று பஞ்சாங்கம் போல ஒரு புள்ளி விவரமே தந்துவிடுவார்கள்.

தென்னாட்டு ஸநாதனிகளைக் கேட்டால் ராஜஸ, தாமஸ குணங்களை விருத்தி செய்யும் வெங்காயம், முள்ளங்கி, முருங்கைகாய், உருளைக்கிழங்கு, பீர்க்கு முதலிய கறிகாய்களையும், மாமிச உணவையும் விலக்கி ஸாத்வீக குணத்தை விருத்தி செய்யும் ஆகாரங்களையே உட்கொள்ள வேண்டும் என்பார்கள்.

வைத்தியர்களைக் கேட்டால் பழக்கப்பட்ட உணவு எதுவானாலும் அதைச் சாப்பிடலாம். அதை உரிய அளவிற்கு அதிகப்படாமலும் குறையாமலும் பார்த்துக்கொண்டால் போதும், உணவு அதிகப்படுவதும் குறைவதும் தான் எல்லா நோய்களுக்கம் மூல காரணம்.

'மிகினும் குறையினும் நோய் செய்யும்

என்று திருவள்ளுவர் பாஷையிலேயே பதில் சொல்லிவிடுவார்கள்.

இப்படிப் பலவிதமாகச் சொல்லப்பட்ட முறைகளில் ஒன்றையாவது நாம் எல்லோரும் ஒரே விதமாக அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது என்பது முடியாத காரியம். கீதோபதேசம் செய்த கமலக்கண்ணனோ எந்த உணவை உட்கொள்ள வேண்டும் என்பதில் எல்லோரும் ஒரே விதமான சுலபமாய் அனுஷ்டிக்கத்தக்க ஒரு முறையை வெளியிடுகிறார்.

அன்னபெரு வேள்வியால் ஆங்கிறைஞ்சப் பட்டமரர்
மன்ன பெரியவளம் மற்றளிப்பர் - இன்னே
அவர்தந்த போகம் அவர்க்களியாது உண்பான்
கவர்கின்றான் கள்வனே காண்.

(இ-ள்) மன்ன – தலைவா அன்ன பெரு வேள்வியால், அத்தகைய சிறந்த யாகங்களால், இறைஞ்சப்பட்டு – ஆராதிக்கப்பட்டு, அமரர் – தேவர் பெரிய வளம் அளிப்பர் – மிகுந்த போகத்தைக் கொடுப்பார்கள் இன்னே – இங்கே அவர் தந்த போகம் – தேவர்கள் கொடுத்த உணவை அவர்க்கு அளியாது(கொடுத்த)–அவர்களுக்கு அர்ப்பணம் பண்ணாது. உண்பான்–(தானே) சாப்பிடுகின்றவன் – கவர்கின்றான் கள்வனே – (பிறர்க்குரியதை) அபகரிக்கின்ற திருடனே என்று, காண் – அறிந்து கொள்.

இஷ்டான் போ^{4}கான் ஹி வோ தே^{3}வா தா^{3}ஸ்யந்தேய
க்ஞுபா^{4}விதா:
தை^{3}ர்த்தா னப்ரதாயைப்^{4}யோ யோ பு^{4}ங்க்தே ஸ்தேன ஏவஸ:

(இ-ள்) யக்ஞபாவிதா:- யக்ஞத்தால் ஆராதிக்கப்பட்ட, தேவா:- தேவர்கள், வ:- உங்களுடைய இஷ்டாந் - இஷ்டமான போகாந் - போகங்களை, தாஸ்யந்தே - கொடுப்பார்கள். தை:- தத்தாந் - அவர்களால் கொடுக்கப்பட்டவைகளை ஏபய:அப்ரதாய - இவர்களுக்கு அளிக்காமல், ய: புங்க்தே - எவன் புசிக்கிறானோ, ஸ: ஸ்தேந ஏவ - அவன் திருடனேயாவான்.

யாகம் செய்வது கடவுள் ஆராதனம் ஆகும். ஆகையால் ஐந்து வகையான யாகங்களும், அதன் அங்கமான கர்மங்களும் பலனில் இச்சை இல்லாமல் செய்யப்பட்டால் பந்த ஏது ஆகமாட்டார். தேவர்களும் மனிதர்களும் பரஸ்பர உதவியால், சுபிக்ஷம் அடையும்பொருட்டு ஈச்வரன் பூர்வத்தில் யாகத்தோடுகூடிய பிரஜைகளைப் படைத்தார். ஆகையால் வேள்வியாகிய கருமத்தைச் செய்யாது விடுகின்றவன், அனர்த்தத்தை விளைவித்துக் கொண்டு மேலும் மேலும் பந்தத்திற்கு ஆளாகிறான். எனவே யோகநிஷ்டை, ஞான நிஷ்டை, பக்தி நிஷ்டை இவற்றில் எதைப் பயின்றாலும் எல்லோரும் மனுஷ்ய யக்ஞம் (விருந்தோம்பல்) உள்பட எல்லாவித வேள்விகளையும் தமக்குரிய கடமையாகச் செய்தேயாக வேண்டும் என்று கர்மாவில் அதிகாரி பேதமில்லாமல் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக விதித்திருப்பதைக் கண்ணன் முன்னே தெரிவித்தார்.

பந்த நிவர்த்தியைத் தரும் மேற் சொன்ன கருமங்களைச் செய்ய உடலும், அதன் உறுப்புகளும் தொழிற்பட வேண்டும். தொழிலுக்கு இன்றியமையாத தனு கரணங்கள் உணவினால் போஷிக்கப்பட்டால் அன்றி வேதம் ஓதுதல், ஓமம் வளர்ததல், விருந்தோம்பல் (பரோபகாரம்), நீர்க்கடன் செய்தல் முதலான யாகங்களைக் குறைவில்லாமல் செய்ய முடியாது. உணவு வகைகளோ, யாகத்தால் ஆராதிக்கப்பட்ட தேவர்கள் விரும்பி அளிக்கும் மழை வளத்தால் விருத்தியடையவேண்டும் என்றிருப்பதால், மிருகபக்ஷிகளுக்கில்லாத பகுத்தறிவைப் பெற்றிருக்கிற மனிதன், உண்ணும் விஷயத்தில் மிருகத்தையும், பக்ஷியையும்போல் இருக்கக் கூடாது. தனக்கு உணவுமுதலிய வளங்களைத் தந்து உதவும் தேவர்கள் விஷயமாகச் செலுத்தவேண்டிய நன்றியை மறத்தலாகாது. செய்நன்றி மறப்பது பரிகாரம் இல்லாத பாதகமாகக் கருதப்படுகிறது.

"*உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு*" (குறள்)

தேவர்கள் தந்தவளமே மனிதவர்க்கத்திற்குத்தினே தினே உணவாகி வருவதால் உண்ணும் விஷயத்தில் செலுத்தவேண்டிய 'நன்றி

என்று சொல்லாமல் கடமை' என்று குறிப்பதே சரியான முறையாகும். நாள் தவறாமல் உண்பதனால் இக்கடமையையும் நாள் தவறாமல் செய்தாக வேண்டும். உண்பதற்கு முன் பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுவதே எல்லோரும் ஒரேவிதமாகத் தவறாமல் செய்ய வேண்டிய கடமை. அவ்வாறு செய்யாமற்தானே சாப்பிடும் மனிதன் மிருகத்திற்கு இல்லாத பகுத்தறிவு பெற்றிருப்பதால் பிறர் பொருளை அபகரிக்கும் திருடனே ஆகிறான். அத்திருடனும் உணவைப் புசித்துத்தன்னுடனே வளர்த்துக் கொள்வதாக மகிழ்ச்சிகொள்ளலாம். ஆனால் அவன் உண்மையில் உணவையா உண்கிறான்? பின் எதை உண்கிறான் என்று மேலும் கண்ணன் சொல்கிறார்.

வேள்வியினின் மிக்கதனை உண்பார் விடப்படுவர்
ஊழ் வினைகளின் தொடர்ச்சி உள்நின்றும்-கேள்வியிலாத்
தன்உடம்புக் காகச் சமைத்துண்பார் பாவத்தை
முன்உடனே உண்பார் முயன்று.

(இ—ள்) வேள்வியின் மிக்கதனை—யாகத்தில் (ஈச்வர ஆராதனமான) மீதியை உண்பார்—புசிப்பவர்கள், ஊழ் வினைகளின் தொடர்ச்சியுள் நின்றும்—ஜன்மாந்தர பாவங்களின் தொடர்பிலிருந்து விடப்படுவர்—விடுதலை அடைவார்கள். கேள்விஇலாதன் உடம்புக்காக சமைத்து—அறிவில்லாத (ஜடப்பொருளாகிய) தன் தேகத்திற்காகவே பாகம்செய்து உண்பார்—சாப்பிடுகின்றவர், முயன்று—முயற்சிசெய்து பாவத்தை—பாவத்தையே முன் உடனே உண்பார்—மிகவிரைவாகப் புசிக்கின்றவராவார்.

யக்ஞ சிஷ்டா சின: ஸ்ஸந்தா முச்யந்தே ஸர்வகில்பிஷை:
புஞ்ஜதேதே த்வகம் புஞ்ஜதே பாபா யே பசந்த்யாத்ம காரணாத்.

(இ—ள்) யஜ்ஞ சிஷ்டாசிந:— (ஈச்வர ஆராதனமான) யாகத்தில் மீதியைப் புசிப்பவர்களான, ஸந்த:—அறிஞர்கள் ஸர்வ கில்பிஷை:— எல்லாப் பாபங்களினின்றும், முந்யந்தே—விடுபடுகிறார்கள். யேத— எவர்கள் ஆத்ம காரணாத்—தமக்காவே பசந்தி—பாகம் செய்கிறார்களோ, தேபாபா:— அந்தப் பாபிகள், அகம்—பாபத்தை, புஞ்ஜதே—புசிக்கிறார்கள்.

யாகத்தில் மீதியைப் புசிப்பவர்கள் என்ற வாக்கியத்தில் வரும் மீதியை என்ற சொல்லுக்கு உரையாசிரியர்கள் வெவ்வேறான பொருள்

கூறியிருக்கின்றனர். சங்:—தேவ யஜ்ஞ மிச்சாந்நம். ராமா:—பகவானுக்கு நிவேதனமான பிரஸாத சேஷம். ராகவேந்திரர்:—விஷ்ணுவுக்கும் மற்றத் தெய்வங்களுக்கும், நிவேதனமான அன்னம், ஸ்ரீதரர்:— வைசுவதேவ முதலிய யக்ஞத்தில் மீதமான அன்னம்.

எந்த இஷ்ட தேவதையை ஆராதித்தாலும் அதை எவற்றிற்கும் அந்தராத்மாவாயிருக்கும் நானே பெறுகிறேன். பிரீதியை அடைந்து, நானே பலனைக் கொடுக்கிறேன் என்று கண்ணன் கீதையில் மேல் வரும் அத்யாயங்களில் கூறியிருக்கிறார். யாகம் செய்வதே 'விஷ்ணு ஆராதனம்' என்று வேதவாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு சங்கரர் முதலிய உரை ஆசிரியர்களும், விளக்க உரைதந்துள்ளனர். இதனால் உரை ஆசிரியர்களுக்குள் வேற்றுமையிருப்பதாகக் கொள்வதற்கில்லை. அவரவர்களுக்கு இஷ்டமான தெய்வத்திற்கு நிவேதனம் செய்த மீதமே எல்லோரும் உண்ணத்தக்க உணவு' என்று ஏகமாக வெளியிடும் ஒற்றுமையான அபிப்பிராயமே உரையில் வெளிப்படை.

தெய்வம் அளித்த உணவை தெய்வத்திற்கு நிவேதனம் (நைவேத்தியம்) செய்யாமல் தானே, சாப்பிடுகின்றவன் திருடன் ஆகிறான். அச்செய்கையால் அந்த க்ஷணத்திலிருந்தே பாபத்திற்காளாகிறான். ஆதலால், உணவையுண்டாலும் உண்மையில் பாபத்தையே புசிக்கிறான்.

நிவேதனம் என்பது ஒப்புவித்தல் அல்லது சொல்லல் என்றே பொருள்படுகிறது. உயிர்களுக்குப் பரமாத்மா உணவு முதலிய வளங்களைத் தந்து உதவுவதற்கு உரிய நன்றியைத் தெரிவித்தலே நைவேத்தியத்தில் அடங்கிய தத்துவமாகும். நன்றியைச் சில மதத்தினர் வாய்ச்சொல்லினால் மாத்திரம் பிரார்த்தனையில் தெரிவிக்கின்றனர். விக்கிரக ஆராதனையைப் பக்திக்கு ஏற்ற சாதனமாகக்கொண்ட ஹிந்து மதத்தில் நன்றியைச் செய்கையாலும் தெரிவிக்கும் ஸம்பிரதாயம் இருந்து வருகிறது.

கடவுள் உண்கிறாரா? படைக்கும் உணவைப் பெற்றுக்கொள்ளாமலிருக்கும்பொழுது, பாலும் நெய்யும் கலந்த உணவைச் சிலையின்முன் ஏன் இட்டுக் காலத்தையும் பணத்தையும் வீணாக்கவேண்டும்? என்று பிரசாரம் செய்வதில் சிலர்

முனைந்திருக்கின்றனர். வேதமோ, கீதையோ, வேறு எந்த நூலோ கடவுள் பக்தன் நிவேதனம் செய்வதை உண்பதாகச் சொல்லவேயில்லை. நிவேதனச் செய்கையால் பிரீதி அடைகிறார் என்றே சொல்லுகின்றன.

இந்தியாவில் தந்தை வாசம் செய்கிறான். அவன் மைந்தன் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருக்கிறான். மைந்தன் படிக்க டாலர் நாணயம் பொருள் தேவையாயிருக்கிறது. தந்தையால் டாலர் அனுப்ப முடியுமா? முடியாது. என்ன செய்கிறான். தந்தை இந்திய நாணயமான ரூபாயைப் போஸ்டாபீஸில் கட்டிவிடுகிறான். அதனால் அமெரிக்காவிலிருக்கும் மகனுக்குத் தேவையான டாலர் நாணயம் கிடைத்து விடுகிறது. மனிதன் அறிவுத் திறமையால் ஏற்பாடான உலகில் இச்சம்பவம் நிகழ்வது தற்குறி யொருவனுக்கு நம்பமுடியாத ஆச்சரியமாகத்தானே இருக்கும்? விஞ்ஞானிகளால் இதுவரை ஒரு சதவிகிதம் கூட அறியப்படாத விசித்திரம் பிரபஞ்சத்தில் நமக்கு விளங்காதது எல்லாம் பொய்யாய் விடுமா?

கடவுளுக்கு நிவேதனமான உணவே எல்லோரும் உண்ணத்தக்கது. என்றதைக் கண்ணன் சகல மதத்தினருக்கும் பொதுவாக காட்டிய வழி என்று ஏன் சொல்லாகாது?

27. பிரபஞ்ச சக்கரம்

ஒருவன் ஒரு யோக்கீஸ்வரரிடம் போய்த் தனக்கு ஞானோபதேசம் செய்யும்படி வேண்டினான். யோகி உடனே உபதேசம் செய்யவில்லை. வந்தவனை 'உன்னைவிடத் தாழ்ந்த ஒன்றை எடுத்துவா' என்ற ஏவினார். மரம், மட்டை, ஓடு, புழுதி, மண் இவற்றை ஒவ்வொனறாகக் கொண்டுபோய் யோகியிடம் வைத்தான். யோகி அவற்றில் எதையும் கொண்டு வந்தவனைவிடத் தாழ்ந்ததாக ஒப்புக்கொள்ள வில்லை. உபதேசம் பெற வந்தவன், பல நாட்கள் ஆலோசனை செய்து கடைசியாக 'பிரபஞ்சத்தில் தன்னைவிடத் தாழ்ந்த வஸ்து மலம் தான் என்ற முடிவுக்கு வந்து அதை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு போகப் பிரயத்தனப்பட்டான் அப்பொழுது மலமே பேசுவதுபோல ஒரு அசிரீரவாக்கு உண்டாயிற்று, 'பாவி! உன்னைவிட நான் எப்படித் தாழ்ந்தவனாவேன்? ஒருகாலத்தில் பகவானுக்கு நைவேத்தியம் பண்ணத்தக்க சிறந்த உணவுருபத்தில் இருந்தேன்.

உன்கும்பியில் (வயிற்றில்) போய் உன்சம்பந்தம் காரணமாக இவ்வாறேனேன். இப்படி எப்பொழுதும் இருப்பேனா! பயிருக்கு உரமாகிக் கூடிய சீக்கிரம் பகவந் நைவேத்தியத்திற்கு யோக்கியமான பரிசுத்த உணவாக மாறுவேன். உன்னிலும் இழிவாக நீ நினைப்பதற்கு உன் சம்பந்தமே காரணமாயிருக்க நீ எப்படி என்னை விட உயர்ந்தவனாவாய்?' என்ற வார்த்தைகளைக் கேட்டு வெட்கித் தலை குனிந்தான். யோகியிடம் சென்று 'என்னைவிடத் தாழ்ந்த வஸ்து இப்பிரபஞ்சத்தில் எதுவும் இல்லை' என்று ஒப்புக் கொண்ட போது 'இவ்வுணர்வே ஞான நிலை' என்று யோகி உபதேசித்தாக, ராமகிருஷ்ணர் பரமஹம்சர் தமது கதைகள் ஒன்றில் கூறுகிறார். இப்படி ஒன்றே, வேறான பலவாக மாறிப் பின்னர் முந்திய ஒன்றாக வருவதும், மறுபடி வேறான பலவாக மாறுவதும் இடைவிடாமல் நிகழ்கிற பிரபஞ்சத்தன்மையை சக்ரம் என்றே சொல்லலாம். அதை நினைத்தாலும் எவனும் தன்னைச் சரீரத்தை இட்டு உயர்ந்தவன் என்றும், பிறரையும், பிறவற்றையும் தாழ்ந்தவை என்றும் நினைத்து அகங்காரம் கொள்வதற்கில்லை. தன்னைத் தாழ்வாக மதித்து நைச்சியம் கொள்வதே ஸ்வரூபம் உணர்ந்தாரின் நிலை என்பதை பக்தர்களும் ஞானிகளும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

கடவுளுக்கு நிவேதனம் செய்ததையே உண்ண வேண்டும் என்று எல்லோருக்கும் பொதுவாக ஒரே வழியைக் காட்டின கண்ணபிரான் பிரபஞ்சத்தின் தன்மை சக்கரமாகவே இருப்பதை வேறொரு வகையால் எடுத்துக்காட்டி அச்சக்கரத்தில் அடங்கி ஜீவாத்மாக்களின் கடமையை இப்பகுதியில் விளக்குகிறார்.

அன்னத்தால் பூதங்கள் உண்டாகும் அன்னம்தான்
மின்னத்தாழ் மாரியால் 'மிக்கு இயலும் - மன்னத்தான்
மாரியது வேள்வியால் வந்தியலும் அவ்வேள்வி
காரியம் தாலாகும் காண்

(இ–ள்) அன்னத்தால் பூதங்கள் உண்டாகும் – உணவினால் (பிராணிகளின்) சரீரங்கள் உண்டாகும் அன்னம்தான் மின்னத்தாழ் மாரியால்மிக்கு இயலும் – உணவோ மின்னலொடு பொழிகின்ற மழை காரணமாக நிறைய உண்டாகும்; மாரி அது தான் மன்ன வேள்வியால் வந்து இயலும் – அம்மழையோ மிகுதியாக யக்ஞம் காரணமாக உண்டாகும்' அவ்வேள்வி காரியமதால் ஆகும் – அந்த யாகம் கருமத்தால் உண்டாகம், காண் – (என்று) அறிந்து கொள்.

அன்னாத் ப⁴வந்தி பூ⁴தானி பர்ஜந்யாத் அன்னஸம்ப⁴வ:
யக்ஞாத் ப⁴வதி பர்ஜந்யா: யக்ஞ: கர்ம ஸமுத்³ ப⁴வ;

(இ–ள்) அன்னாத் பவந்தி பூதாநி – அன்னத்திலிருந்து சரீரங்கள் உண்டாகின்றன. பர்ஜந்யாத் அன்ன சம்பவ – மேகத்திலிருந்து (மழையால் நெல் முதலிய) உணவு உண்டாகின்றது: பர்ஜநய: யஜ்ஞாத் பவதி – மேகம் யாகத்தால் உண்டாகின்றது: யஜ்ஞ : கர்ம ஸமுத்பவ:– யாகமோ கர்மத்தில் (செய்கையில்) நின்றும் உண்டாகின்றது.

யாகத்தில் ருக், யஜுஸ், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களில் சொல்லியபடி ஒவ்வொன்றையும் செய்ய வேதத்திற்கு 4 பேர் வீதம் 12 பேர்களும், அவற்றைக் கவனித்துத் திருத்த மூன்று வேதங்களையும் அறிந்த வேறு நாலு பேர்களும் யாகத்தைச் செய்யும் கர்த்தாவும், கர்த்தாவின் மனைவியும், ஆக 18பேர்களும் உரிய கருமங்களைச் செய்தாலே யாகம் முற்றுப் பெறும். அதனால் வேள்வி காரியமதால் ஆகும் எனப்பட்டது. யாகம், பூஜை முதலிய சத்காரியங்களுக்கும், பிற தொழில்களுக்கும் மழையே ஆதாரம் என்பதை

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு
ஏரின் உழார் உழவர் புயல் என்னும்
வாரி வளம் குன்றிக் கால்

(வானம் – மழை, புயல் – மேகம், வாரி – மழை, குன்றிக்கால் – குறைந்தால்)

கருமங்களுக்கு மழை இன்றியமையாதது என்று தெரிவித்த கண்ணன் அதற்கு ஆதாரம் இன்னதென மற்றொரு வகையால் விளக்குகிறார்.

இக்கருமம் காயம் எனச்சேர் பிரமத்தாம்
அக்கருமம் சீவனால் ஆங்கதுவாம் சிக்கெனவே
எங்கு நிகழ்உடலாம் இப்பிரமம் வேள்வியிலே
தங்கு நிலை அமரும் தான்

(இ–ள்) இக் கருமம் – இந்தக் கருமமானது (செயல்) காயம் எனச் சேர் பிரமத்து ஆம் – சரீரம் என்பதில் ஆதியாக உடைய பிரகிருதியிலிருந்து உண்டாகும். அக்கருமம் – அந்தக் கருமத்திற்கிடமான சரீரம், சீவனால் அதுவாம் – ஜீவனைப் பற்றியே

உண்டாகும். சிக்கெனவே எங்கு நிகழ் உடலாம் இ பிரமம் – நெருக்கமாக எங்கும் உண்டாகிற தேகமாகிற இப்பிரமம், வேள்வியிலே தங்கு நிலை அமரும் – யஜ்ஞத்தையே ஆதராமாக்கொண்டு நிலை பெற்றிருக்கும்.

கர்ம ப்3ரஹ்மோத்3ப4வம் வித்3தீ4 ப்3ரஹ்ம அக்ஷ ஸமுத்3ப4வம்
தஸ்மாத் ஸர்வக3தம் ப்3ரஹ்ம நித்யம் யக்ஞே ப்ரதிஷ்டி2தம்

(இ–ள்) கர்ம – கர்மமானது ப்ரும்ம உத்பவம் – (பிரகிருதியின் பரிணமமான) சரீரத்தால் உண்டானதென்று, வித்தி – அறி ப்ரும்ம – சரீரமானது அக்ஷர ஸமுத்பவம் – ஜீவனிடமுண்டானது தஸ்மாத் – ஆகையால், ஸர்வகதம் ப்ரும்ம – எல்லாவற்றிக்கும் ஸாதனமான (பிரகிருதியின் பரிணாமமான) சரீரம், யஜ்ஜேப்ரதிஷ்டிதம் – யஜ்ஞத்தையே ஆதாரமாக உடையது.

சரீரம் இல்லாமல், கர்மம் ஏதுவும் செய்யமுடியாது. மூலப்பிரகிருதியின் விகாரமாகிய பூதங்கள் அவற்றின் சேர்க்கை அல்லது பரிமணாமத்தால் வரும் தேகம் எப்பொழுதும் ஜீவனை அண்டியே இருக்கிறது. ஜீவனோடு கூடிய சரீரமே கர்மத்திற்கு யோக்கியமாய் இருக்கும். அதனால் கருமங்களைச் செய்யமுடியும். தேக உழைப்பினால் செய்யப்படுகின்ற யாகாதி, சத்கருமங்களினால் மழை உண்டாகிறது. மழையினால் தானியங்களாகிற உணவுப் பொருள்கள் உண்டாகின்றன. உணவுப் பொருளைக்கொண்டு சரீரங்கள் உண்டாகின்றன, வளர்க்கின்றன, சரீரங்களினால் கருமங்கள்; அவற்றிலிருந்து வேள்வி; அதிலிருந்து பின்னும் மழை என்று பிரபஞ்சம் மாறிமாறிச் சக்கரம்போல் இயங்கி வருகிறது என்பது இதனால் விளங்குகிறது.

இச்சுலோகத்திற்குச் சங்கரரால் பதப்பொருளே வேறு விதமாகச் செய்யப்பட்டிருக்கிறது அது:– 'கருமம் வேதத்தால் உண்டாகிறது; வேதம் ப்ரும்மத்தினிடமிருந்து உண்டாகிறது; எங்கும் வியாபித்திருக்கின்ற ப்ரும்மம் யாகத்தில் நிலைத்திருக்கின்றது' 'இவ்வாறு கொண்டதற்கு ப்ரும்ம சப்தத்திற்கு வேதம்' என்றும் 'அக்ஷரம்' என்பதற்கு எழுத்து அல்லது ஒங்காரம் என்றும் பதப்பொருள் செய்ததே. காரணம், ப்ரும்மம் என்பதற்கு பிரகிருதியின் விகாரமான சரீரம் என்றும், 'அக்ஷரம்' என்பதற்கு 'ஜீவன்' என்றும் ஏனையோர் அர்த்தம் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு ஒன்றிக்கொன்று காரண காரியமாய் சக்கரம்போல் அமைந்திருக்கும் பிரபஞ்சத்தின் தன்மையை அனுசரித்து வாழ்கின்றவனே உய்வான். அனுசரியாது தனக்குத் தோன்றியபடி தாறுமாறாக நடப்பவன், தன் வாழ்வை வீணாக்கிக் கொள்கிறான். என்பதை அழுத்தமாக மேலே தெரிவிக்கிறார்.

இப்படியே ஈங்கமைந்த சக்கிரத்தை எவன்தான்
மெய்ப்படியே தான் சென்று மேவலுறான் - எப்படியும்
பாவி உயிராகிப் பழுதே படர்பொறிப்பட்டு
ஆவி சுமப்பான் அவன்.

(இ-ள்) இப்படியே ஈங்கு அமைந்த சக்கரத்தை – இவ்விதம் இப்பிரபஞ்சத்தில் பொருந்தியிருக்கிற 'சக்கரத்தை எவன்தான் சென்று மெய்ப்படியே சென்று மேவல் உறான் – எவன் உண்மையாக அனுசரியாமல் இருக்கின்றானோ அவன், எப்படியும்–எப்படியும் பாவி உயிராகி – எல்லா வகைகளிலும பாவியாகி, படர் பொறியப்பட்டு – (இழுத்துச் செல்லும்) இந்திரியங்களுக்கு அடிமையாகி பழுதே ஆவி சுமப்பான் – வியர்த்தமாக உயிரைச் சுமந்து ஜீவிப்பான்.

மோகம்[4] பார்தஸ[3] ஜீவதி

(இ-ள்) பார்த்த – அர்ஜுனா! ஸ:– (சக்கிரத்தை அனுசரியாத) அவன் மோகம் ஜீவதி – வியர்த்தமாய் ஜீவிக்கிறான்.

ஞானிகள் உள்பட அனைவரும் பிரபஞ்ச சக்கரத்தை அநுசரித்து நடக்க வேண்டியதே கடமை என்று இதனால் சொல்லப்பட்டது.

28. ஞானிக்கும் கருமம் வேண்டாம்.

'உடலிருந்து கருமம்; கருமத்திலிருந்து யாகம்; யாகத்திலிருந்து மழை, மழையிலிருந்து நெல் முதலிய உணவு; உணவிலிருந்து உடல், அதிலிருந்து மறுபடி கருமம் என்று மாறி மாறி வருவது பிரபஞ்சத்தின் தன்மை. சக்கரம் போல் உண்டாக்கப்பட்டிருக்கும் இத்தகைய பிரபஞ்சத்தின் தன்மையை அனுசரியாமலிருக்கின்ற பாபி வியர்த்தமாக ஜீவிக்கிறான்' என்று கண்ணன் முன்னமே சொன்னாரல்லவா? அதைக் கேட்டுக்கொண்டிருந்த அர்ஜுனனுக்கு ஞானியைப்பற்றிக் கண்ணன் இரண்டாவது அத்தியாத்தில் கூறிய விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்தன.

பின் கண்டபடி ஆலோசிக்க ஆரம்பித்தான். 'பிரபஞ்ச சக்கரத்தை அனுசரித்துப் போவது என்பது உரிய கருமங்களை விடாமல் செய்வது, கருமமோ பிரகிருதியின் விகாரமான தேகத்திலிருந்து உண்டாகிறது. தேகத்திற்கும், மனத்திற்கும், புத்திக்கும் அந்நியமான அழிவற்ற ஆத்மாநி என்று தன்னை உணர்ந்த ஞானி தேகத்திலிருந்து பிறக்கும் கருமங்களை ஏன் செய்ய வேண்டும்? அவற்றால் அவனுக்கு என்ன பிரயோசனம் உண்டாகும்? என்று அர்ஜுனன் சிந்தித்துக் கொண்டிருந்தது கண்ணனுக்குத் தெரிந்தது. அர்ஜுனன் கருத்தோடு உடன்பட்டே, ஞானிக்குக் கருமத்தோடு உள்ள சம்பந்தைக் கண்ணன் தெரிவிக்கலானார்.

தன் விரும்பித் தன்உகந்து தன்னமைந்த ஞானிக்குப்
பின் விரும்பிச் செய்கருமம் பெற்றில்லை - முன் விரும்பிச்
செய்தத்தால் ஒன்றில்லை செய்யாத்ததா இல்லை
வையத்துஆதும் பயன்இல் மற்று.

(இ—ள்) தன் விரும்பி – ஆத்மாவாகிய தன்னிடம் பிரியம் கொண்டு, தன் உகந்து – ஆத்மாவாகிய தன்னிடம் சந்தோஷம் அடைந்து, தன் அமைந்த – தன் ஆத்மாவிடம் திருப்தி அடைந்திருக்கிற, ஞானிக்கு – பின்விரும்பிச் செய் கருமம் பெற்றில்லை – மேலும் விரும்பிச் செய்யவேண்டியதாய் அமைந்த கருமம் எதுவும் இல்லை, முன் விரும்பிச் செய்தத்தால் (அந்த ஞானிக்கு) முன்னே பிரியமாய்ச் செய்த கருமங்களால், ஒன்று இல்லை – யாதொரு பயனும் இல்லை, செய்யாத்ததால் இல்லை – செய்யாததினால் கேடும் இல்லை, வையத்து பயன் ஆதும் இல் – பிரபஞ்ச முழுவதிலும் (அடையவேண்டிய) பலன் (எங்கும்) எதுவும் இல்லை.

யஸ்த்வாத்ம ரதி ரேவஸ்யாத் ஆத்மத்ருப்தச்ச மாநவ:
ஆத்மந்யேவச ஸந்துஷ்ட ஸ்தஸ்ய கார்யம் நவித்யதே.[2]
நைவதஸ் க்ருதேனார்த்தோ: நாக்ருதே நேஹகச்சந[2]
நசாஸ்ய ஸர்வபூதேஷு கச்சிதர்த வ்யபாச்ரய:[4] [3] [4]

(இ—ள்) யஸ்து மாநவ:– எந்த எந்த மனிதன், ஆத்மரதிரேவ – ஆத்மாவிட ரமித்துக்கொண்டும், ஆத்ம த்ருப்த:–ஆத்மாவில் தானே திருப்தி அடைந்தும், ஆத்மந்யேவ ஸந்துஷ்டச்ச – ஆத்மாவிடம்

சந்தோஷ முற்றவனாயும், ஸ்யாத் – ஆவனோ, தஸ்ய – அவனுக்கு, கார்யம் – செய்ய வேண்டியதான, நவித்யதே – ஸாதனம் (எதுவும்) இல்லை. தஸ்ய – அவனுக்கு, க்ருதே நகர்மணா – செய்யப்பட்ட கருமத்தால், அர்த்த – பிரயோசனம், ந ஏவ –(எதுவும்) இல்லை; அக்ருதேந – செய்யப்படாததினால், கச்சந – யாதொரு, அதர்த்தச்ச ந – கேடும் இல்லை, இஹ – இங்கு, அஸ்ய – அவனுக்கு, ஸர்வ பூதேஷு – சகல பூதங்களிலும், அர்த்தவ்ய பாச்ரய:– பிரயோஜீனத்திற்காகப் பற்ற வேண்டியதாய், கச்சித் அபி நச –யாதொன்றும் இல்லை.

'நான், நீ, அவன், தான் என்றெல்லாம் விவரிக்கப்படுகின்றவன், தேகம், மனம், புத்தி முதலியவற்றிக்கு அந்நியமான ஆத்மா, அது விகாரம், தோற்றம், மறைவு, அழிவு இவற்றை எய்தாமல் நிலையாய் எங்கும் பரந்த வஸ்து என்பதை அநுபவத்தால் உணர்ந்தவன் ஞானி, அவனுக்குத் தேகத்துடன் யாதொரு சம்பந்தமும் இல்லை. கருமங்கள் தேகத்திலிருந்து பிறக்கின்றன. தேகத்தால் செய்யப்படுகின்றன. தேகம் எதைச் செய்தாலும், செய்யாதிருந்தாலும் இது ஞானியைப் பாதிக்காது. தேக சம்பந்தம் அல்லது பந்தத்தைப் போக்குவதற்காக வேண்டிய நிஷ்காமிய கருமம் செய்வதால், ஏற்கனவே பந்த நிவர்த்தி அடைந்திருக்கின்ற ஞானிக்கு யாதொரு பயனும் புதிதாக உண்டாகாது. பந்த நிவர்த்தி அடைந்தவன் மறுபடி பந்தத்திற்காளாவதில்லை, ஆதலால் காமியகருமம் செய்தாலும், தீவினையாகிற பந்தம் உண்டாகாது. ஞானியின் விஷயத்தில் நிஷ்காம்ய கருமம், காம்ய கருமம் இவற்றில் எது செய்யப்பட்டாலும் செய்யாமல் விடப்பட்டாலும் நன்மை, தீமை இரண்டில் எதுவும் அதனால் ஞானிக்கு உண்டாகப்போவதில்லை. ஆத்மாவில் லயித்த ஆத்மத்ருப்த ஞானிக்கு உலகில் எந்த தேவதையையும் ஆசிரயித்துப் பெறவேண்டியதும் இல்லை. 'தன் விரும்பித் தன் உகந்து தன்னமைந்த நிலையே பேரின்பம் அல்லது மோக்ஷம் ஆகிறது. அதை அடைந்த ஞானிக்கு உடலை விடுவதும் வைத்திருப்பதும் அவன் ஆதீனத்திலேயே இருக்கிறபடியால் அவன் ஜீவன் முக்தனாகிறான்.

இந்நிலை தேகம் இருக்கும் போதே ஞானானுபவத்தால் வரக்கூடும் என்பதைத் திருவள்ளுவர் அங்கீகரிக்கிறார்.

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்

(ஆரா இயற்கை அவா – திருப்தி உண்டாகாத தன்மை வாய்ந்த ஆசை: பேரா இயற்கை – மாறாத நிலையாகிய சக்தி)

நம்மாழ்வரும் இந்நிலை உடலுடனே வரும் என்பதை

.... *பசையற்றால் அன்றே அப்போதே விடும் அதுவே வீடு வீடாமே.*

என்று அழுத்தமாக உறுதியோடு தெரிவிக்கிறார்.

'உடல் செய்யும் கருமங்களால் ஒருவன் ஓரளவிற்குப் பாதிக்கப்படாமலிருக்கலாம்' என்பதை நம் சொந்த அனுபவத்தைக் கொண்டே அறியலாம். கனாவும் இல்லாமல், நல்ல நித்திரை செய்கின்றவன் சில சமயத்தில் படுத்த படுக்கையை விட்டு எங்கெங்கோ உருண்டு போய்விடுகிறான். அவன் உடல் செய்யும் காரியம் அவனுக்குத் தெரியாமல் இருப்பதோடு அவனைக் கொஞ்சமும் பாதிப்பதில்லை. தூங்க வேண்டும் என்று மெத்தையும் தலையணையும் இட்ட படுக்கையில் படுக்கிறான். தூங்கின சிறிது நேரத்திற்கெல்லாம் குப்பையும் புழுதியும் நிறைந்த கரடுமுரடான தரையில் உருண்டு வந்து மெத்தையும் தலையணையும் இல்லாமல் கீழே கிடந்து உறங்குகிறான். உறங்கும் நேரத்தில் மெத்தை தலையணையால் சுகமும் அவனுக்கு உண்டாகுவதில்லை. கரடு முரடான தரையினாலும், அதில் நிறைந்த குப்பை புழுதியினாலும், அவனுக்கு உறங்கும்போது துன்பமும் உண்டாவதில்லை. சுகமான உறக்கத்தில் லயித்திருக்கும்போது உடல் மெத்தையில் கிடந்தாலும், புழுதியில் புரண்டாலும் ஒருவனுக்கு அதனால் சுகமோ கஷ்டமோ எப்படி உண்டாவதில்லையோ, அதோ போல் ஆத்ம ஞானிக்கு (சமாதியில் இருக்கப் பழகிப்போன யோகிக்கு) உடலின் நிகழ்ச்சியால் (கருமத்தால்) கஷ்டமோ, சுகமோ உண்டாகாமலிருக்க ஏன் முடியாது? இரண்டொரு நிமிஷங்களுக்கு மேல் பிராண வாயுவின்றி நாம் ஜீவிக்கமுடியாது. நாள் கணக்காகவும், மாதக் கணக்காகவும் சமாதி நிலையில் இருக்கம் போது பிராண வாயுவில்லாமல் பூமிக்குள்ளே தம்மை மண்ணால் மறைத்து வாழவல்ல யோகிகள் பலர் இன்னும் இருக்கிறார்கள். சமாதி நிலையில் இருக்கும் போது நெருப்பை உடலில் வைத்துப் பரீக்ஷை பண்ணிப் பார்த்தவர்கள் உண்டு. நெருப்பின் சூடு சமாதி நிலையில் இருப்பவர்களைப் பாதிப்பதில்லை. எந்தவிதமான

உணர்ச்சியும், நீரினாலோ, நெருப்பினலோ, சுத்திகொண்டு உடலை இலேசாகப் சோதிப்பதாலோ சமாதி நிலையிருக்கும் யோகியர்க்கு உண்டாவதில்லை என்று பரீக்ஷை பண்ணிப் பார்த்தவர்கள் பலர் சொல்லுகிறார்கள்.

'இந்த ஜீவன் முக்தி நிலைவந்ததாகப் பாவனை செய்து கொண்டும் வந்துவிடும் என்று நம்பியும், உரிய தருமங்களைச் செய்யாது விடக்கூடாது' என்பதற்காகக் கண்ணன் மறுபடியும் அர்ஜுனனைக் கருமம் செய்ய ஏவுகிறார்.

ஆதலினால் பற்றற்று அமர் இயற்பாய் நின்கருமம்
நீதகவு தன்னுடனே நின்றியல்வாய் - மீதததனை
பற்றற்று இயன்றான் பரமாம் உயிரினையே
பெற்று அத்தை நின்று உய்யும் பின்.

(இ-ள்) ஆதலினால் - (ஞானிக்கு) அவ்வாறாதலினால், நீ - (அந்நிலை எய்தாத) நீ, பற்று அற்று - பலனில் இச்சை இல்லாதவனாய், இயற்பாய் அமர் - எப்பொழுதும் வேண்டிய சுயதர்மமான போராகிய, நின் கருமம் - உனக்குரிய கருமத்தை, தகவு தன்னுடனே நின்று இயல்வாய் - நன்றாக நிதானத்துடன் செய்வாயாக, மீது அதனை பற்று அற்று இயன்றான் - மேலான சுயதர்மத்தை பலாபேக்ஷையின்றிச் செய்பவன், பரமாம் உயிரினையே பெற்று - பரமாத்மா அடைந்து, பின் நின்று உய்யும் - பின் நிலையாக வாழ்வான்.

தஸ்மாத் அஸக்த: ஸததம் கார்யம் கர்மஸமாசர
அஸக்தோ ஹ்யாசரந் கர்ம பரமாப்நோதி புருஷ:

(இ-ள்) தஸ்மாத் - ஆகையால், அஸக்த :- பலனில் பற்றில்லாமல், ஸததம் கார்யம் - எப்போதும் செய்ய வேண்டிய, கர்மஸமார - கருமத்தைச் செய், அஸக்த :- பற்றில்லாதவனாய், கர்ம ஆசரந் -கருமம் செய்யும், புருஷ:- புருஷன், பரம் -பரமாத்மாவை (உத்தமமானதை) , ஆப்நோதி - அடைகிறான்.

'ஆத்மக்ஞானி எய்தும்பலனை நீயும் பெறலாம். அதற்கு உன் சுய தர்மமாகிய உரிய கருமத்தைப் பலா பேக்ஷையின்றி, நன்கு செய்வதே சாதனமாகும்' என்று அர்ஜுனனைப் போருக்கு உற்சாகப்படுத்திய கண்ணன் 'ஞானியும் கூடக் கருமம் செய்யாமல் இருப்பதில்லை' என்று சொல்ல வாரம்பித்தார். ஏன்? அடுத்த இதழில் பார்ப்போம்.

29. ஞானி கருமம் செய்வது பிறருக்காகவே

'ஞானானுபவத்தால் முதிர்ந்த ஞானிக்குப் பிரபஞ்சத்தில் எவரிடமிருந்தும் பெறவேண்டியது எதுவும் இல்லை. பிறருக்கு வெவ்வேறாகத் தோன்றுகின்றவற்றை, ஞானி தனக்குக் கிட்டிய ஸர்வாத்ம பாவம் காரணமாகச் சமமாகவே எண்ணுகிறான். சமமாகவே அனுபவிக்கிறான். அவனுக்கு, உரிய கர்மங்களைச் செய்வதாலும், செய்யாமல் விடுவதாலும் புண்ணியமோ பாவமோ எந்த விதமான பலனும் உண்டாவதில்லை. செய்வதும் விடுவதும் ஞானிக்கு ஒன்று தான்' என்று கண்ணன் சொல்லியதைக் கேட்ட அர்ஜுனன் 'இத்தகைய ஞான நிலையை அடைந்தவர் எவரேனும் உலகத்தில் இருந்துண்டா? கருமத்தைச் செய்வதும், செய்யாமல் விடுவதும் அத்தகைய ஞானிக்கு ஒன்றானால், முதிர்ந்த ஞான நிலையை அடைந்து இதற்கு முன்னே உலகில் இருந்தவர், கரும விஷயத்தில் எவ்வாறு நடந்து கொண்டனர்?' என்று ஆலோகிக்க ஆரம்பித்தான்.

அதை அறிந்த கண்ணன், முதிர்ந்த ஞானத்தால் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஜனகனை எடுத்துக்காட்டாக வைத்து மேலும் உபதேசிக்கிறார்.

முன்னம் சனகாதி யோகியரும் மூண்டு இயன்ற
அன்ன கருமத்தால் ஆனபயன் - மன்னினர்காண்
இந்த உலகம் இசைவகையும் பார்த்து இயலாய்
அந்த உயர்கருமம் ஆய்ந்து.

(இ-ன்) முன்னம் சனகாதி யோகியரும் - முன்னே ஜனகர் முதலான யோகியர்கள், மூண்டு இயன்ற அன்ன கருமத்தால் - பிரவர்த்தித்துத் தக்கதான நிஷ்காம கருமத்தாலே, ஆனபயன் மன்னினர்காண் - பிராப்தமான மோக்ஷஸித்தியை அடைந்தார்கள் என்று அறி: இந்த உலகம் இசை வகையும் பார்த்து - இவ்வுலக ஜனங்கள் (நல்வழியில்) ஒன்றுபடும் தன்மையை உத்தே சித்து, அந்த உயர்கருமம் ஆய்ந்து - அந்த உயர் மேலான நிஷ்காம கருமத்தின் (அவசியத்தை) ஆராய்ந்து மேற்கொள்வாயாக.

கர்மணைவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய:
லோகஸங்க்ரஹமே வாபி ஸம்பச்யந் கர்(த்) துமர் ஹஸி

(இ–ன்) ஜனகாதய:– ஜநகர் முதலானோர், கர்மணைவ – கர்ம யோகத்தாலே, ஸம்ஸித்தம் – மோக்ஷ ஸித்தியை, ஆஸ்திதா :– அடைந்தார்கள், ஹி – அல்லவா? லோக ஸங்க்ரஹம் – ஜநங்களுக்கு (தர்மப்பிரவர்த்தியில்) உதவுவதை, ஸம்பச்யந் அபி – (தன் கடமையாகப்) பார்த்தாவது, கர்த்து மேவ அர்ஹஸி – கருமம் செய்யத் தக்கவனாகிறாய்.

பகவானுக்குக் கருமம் செய்து ஆக வேண்டியது எதுவும் இல்லை. அவருக்கொப்பாகக் கருமம் செய்து பெற வேண்டிய பயன் எதுவும் இல்லாத ஞான யோகிகள் பலர் முன் காலத்தில் இருந்தனர். அவர்கள் அனைவரிலும் ஞான அனுஷ்டானத்தால் மிக்ககியாதி பெற்றவர் ஜனகன். இவர் பிரசித்தியைத் தெரிவிக்கும் பல கதைகளுண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் தமது உபதேச நூலில் ஒன்றைத் தெரிவிக்கிறார்.

அரண்மனையில் ஒரு நாள் துருவாஸ முனிவர் ஜனகரைக் கண்ட போது ஜனகர் கால்களின் அடியின் ஒரு பாத்திரத்தில் சந்தனமும் மற்றொன்றில் நெருப்பும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைச் கண்ட துருவாஸர் ஆச்சரியமடைந்து ஜனகரை அவற்றிற்குக் காரணம் கேட்டார். ஜனகர் உடனே காரணம் சொல்லாமல் துருவாஸரை ஒரு அறைக்குள் சாப்பாட்டிற்கு அழைத்துச் சென்றார். இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தனர். ஜனகர் நிமிர்ந்து உயர உற்றுக் கவனித்து விட்டு, மறுபடி முன்போலவே தன் தலையைக் குனிந்து சாப்பிடப் போனார். அதைக் கவனித்த முனிவரும் உயரப்பார்த்தார்.

துருவாஸர் தலைக்கு நேரே கனமான கூரிய வாள் ஒன்று மயிரிழையில் கட்டப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. 'அது தன் தலையின் மீது அறுந்து விழுந்துவிடுமோ' என்ற பயத்தால் துருவாஸர் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. இலையில் பரிமாறியதைச் சாப்பிடாமல் உடல் பதற, நாக்குக்குழற 'இது என்ன விபரீதம்!' என்று ஜனகரிடம் மேலே தொங்கிய வாளைச்சுட்டிக் காட்டினார். ஜனகர் என்ன சொல்லியும் முனிவருக்குப் பயம் நீங்கவில்லை. இலையைவிட்டு

நகர்ந்து போய்விட்டார். அப்பொழுது துருவாஸருக்கு உபதேசம் செய்தார். 'சுகத்தை விரும்பி அடைவதற்கான முயற்சி; துக்கத்தை வெறுத்து விலக்குவதற்கான முயற்சி இரண்டையும் ஒன்று போல் கைவிட வேண்டும். சுகத்திற்கிடமானவற்றையும், துக்கத்திற்கிடமானவற்றையும் சமமாகவே பாவிக்க வேண்டும். இந்த உண்மையைத் தெரிவிப்பதற்காகத் தான் எனது காலடியில் சந்தனமும் நெருப்பும் வைக்கப்பட்டிருந்தன. சமபாவனையை மனப்பயிற்சி, தேகப்பயிற்சி' இரண்டாலும் பெற வேண்டும் என்று ஜனகர் தெரிவித்தாராம்.

முனிவர்களுக்கு உபதேசம் செய்யும்படியான முதிர்ந்த ஞான அனுபவத்தால் சிறந்த ஜனகாதியர் ஆத்மத்ருப்தி அடைந்தவர்கள். 'மரண காலத்தில் க்ஷண நேரம் இத்தகைய ப்ரும்ம நிஷ்டையில்இருந்தாலும் மறுபடி ஒருவன் பிறப்பதில்லை' என்று இரண்டாம் அத்யாய முடிவில் கண்ணன் சொல்லியிருப்பதால், இக வாழ்க்கையிலேயே ப்ரும்ம நிஷ்டை, கைகூடப்பெற்ற ஜனகாதியருக்குப் பிறப்பும் பிறப்பிற்குப் காரணமான மோகமும் எதனாலும் உண்டாக முடியாது 'பந்த நிவர்த்தியை ஏற்கனவே அடைந்திருக்கின்ற ஜனகாதியரும் கர்மத்தால் மோட்சஸித்தியை அடைந்தனர்' என்று கண்ணன் கூறியதற்குச் சந்தர்ப்பத்தைக் கொண்டே தக்க பொருள் கொள்ள வேண்டும்.

ப்ரும்மஞான நிஷ்டனுக்குக் கருமம் செய்வதும், செய்யாமல் விடுவதும் ஒன்றேதான். இரண்டும் அவனைப் பாதிக்கப்போவதில்லை என்று சொல்லிப் பின்னரே அத்தகைய ஞானி வர்க்கத்தில் சிறந்த ஜனகாதியரும் கருமத்தாலே ஸித்தி அடைந்தனர் அல்லவா? என வருகிறது. இப்பகுதியைக் கொண்டு 'நிஷ்காம கருமம் தான் மோட்ச சாதனம். ஞானமும், பக்தியும் மோட்சத்திற்கு நிஷ்காமகருமத்தின் உதவியின்றி ஸாதனங்களாகமாட்டா' என்று சொல்வது சந்தர்ப்பத்திற்கு சேராது.

'ஞானத்தால் ஏற்கனவே பந்த நிவர்த்தியடைந்து கருமம் செய்து எதையும் பெற வேண்டாத ஜனகாதியரும் கருமங்களைச் செய்தனர். ஏற்கனவே கைவரப் பெற்றிருந்த பந்த நிவர்த்தியாகிய மோட்சமும் முடிவில் பெற்றனர்' என்பதே பொருத்தமான பொருள். 'கருமத்தால்'

என்பதில் ஈற்றில்வரும் வேற்றுமை உருவை வடமொழி, தென்மொழி இரண்டிலும் இலக்கண ஆசிரியர்கள் அனுமதித்திருக்கிற வேற்றுமை மயக்கமாகக் கொண்டு உரைசெய்வதே நடுநிலைமை கடவாதார்க்கு அழகும் கடமையாகும். அவ்வாறு செய்வதுதான் பின்வரும் சுலோகங்களுக்கும் சிறந்த உரையாசிரியர்களின் கருத்துக்கும் முரண்படாதிருக்கும்.

'பரமஞானியாகிய ஜனகரே கர்மங்களை விடாமல் செய்ததால் நீயும் உலகத்தின் நன்மைக்காக நிஷ்காமிய கருமத்தைச் செய்ய ஜனகாதியரையே பின்பற்று' என்பது கண்ணன் கூறியதின் சாரம் ஜனகாதியர் போன்ற ஞானிகளின் எதற்காகக் கருமம் செய்வார்கள் என்பதை அடுத்தபடியாகச் சொல்லுகிறார்.

மேலொருவன் செய்த மிகுகருமம் தான்எதுவென்று
ஏலும் அதில்மற்றிங்கு இயல்சனமும் - சாலஅவன்
யாதைத்தான் அங்கம் எனஇயலும் இவ்வுலகம்
ஆதைப்பின் செல்லும் அமர்ந்து

(இ—ள்) மேல் ஒருவன் செய்த மிகு கருமம் – பெரியவன் ஒருவன் செய்துவந்த சிறந்த கருமம், எது என்று – எது என்பதைத் தெரிந்து, இங்கு இயல் சனமும் – இவ் வுலகிலுள்ள பிற ஜனங்களும், அதில் ஏலும் – அந்தக் கருமத்தையே செய்வார்கள், அவன் – அந்த மேலோன், சால யாதை தன் அங்கம் என இயலும் – எதைக் தனக்கு மிகுதியான பிரமாணமாகக் கொண்டு நடக்கிறானோ, ஆதை – அதையே, இ உலகம் – இவ்வுலகத்திலுள்ள பிற ஜனங்கள், அமர்ந்து பின் செல்லும் – விரும்பிப் பின் பற்றுவார்கள்.

யத்[3]யதா[3]சரதி ச்ரேஷ்ட: தத்தத் ஏவ இதரோ ஜந:
ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்த த[3]நுவர்(த்)ததே.

(இ—ள்) ச்ரேஷ்ட:– பிரஸித்தமானவன், யத் யத்கர்ம – எந்தெந்தக் கர்மத்தை, ஆசாரதி – செய்கிறானோ, தத்தத் ஏவ – அவ் வவற்றையே, இதர: ஜந:– பிற ஜனங்களும், (ஆசரதி,) செய்கிறது. ஸ:– அந்தச் சிரேஷ்டன், யத் ப்ரமாணம் குருதேச – எதைப்பிரமாணமாகச் செய்கிறானோ, தத் ஏவ–அதையே பிரமாணமாக, லோக:– பிற ஜனங்களும், அநுவர்த்ததே – அநுசரிக்கிறார்கள்.

உலகம், ஞான அனுஷ்டானத்தால் மேம்பட்டுப் பிரபலமடைந்தவர் களையே பிரமாணமாகக் கொள்ளுகிறது. பின் பற்றவும் செய்கிறது.

மஹாத்மாவுக்கு சர்க்காவினால் நூல் நூற்றுத் தனக்காக ஆக வேண்டியது எதுவும் இல்லை. நூல் நூற்கும் நேரங்களில் மிக மிக அவசியமாகக் கவனிக்க வேண்டிய அலுவல்கள் பல மஹாத்மாவுக்கு இருக்கத்தான் செய்தன. அவற்றை உத்தேசித்துத்தானே நூல் நூற்காமல் இருந்திருந்தால் இந்தியாவில் பல அறிஞர்களும் பாமரர்களும் இந்த அளவிற்குச் சர்க்காவில் நூல் நூற்பதை மேற்கொண்டிருப்பார்களா?

கண்ணன் மேலும் சொல்கிறார் 'பார்த்த! (ஸர்வேச்வரனாகவும், சர்வக்ஞனாகவும், தேவமனுஷ்ய ரூபங்களாய், அவதாரம் செய்பவனாயும் அடைய வேண்டுவது ஒன்றில்லாதவனாயுமுள்ள) எனக்குச்செய்ய வேண்டிய கருமம் எதுவும் இல்லை. அவ்வாறாயினும் நான் கருமம் செய்து கொண்டே இருக்கிறேன். நான் கருமம் செய்யாதுபோனால் மனிதர்கள் சகல விதத்திலும் என் மார்க்கத்தையே தழுவார்களல்லவா? நான் கருமம் செய்யாதிருந்தால் உலக ஜனங்கள் கரும லோபத்தால் கெட்டுப்போவார்கள் நானும் இந்த உலக ஜனங்களைக் கெடுத்தவன் ஆவேன். ஆகையால் ஞானிகளும் கர்மம் செய்வார்கள்.

நசையுடையார் செய்கைபோல் ஞானி நசையின்றி
இசை உலகுக் காக இயல்வான்

(இ-ள்) நசை உடையார் செய்கைபோல் - (ஆத்மக் ஞானமில்லாதவர்கள்) பலனில் ஆசையுடையவராய் கருமம் செய்வது போல், ஞானி - ஞானியும், நசை இன்றி - பலத்தில் ஆசை இல்லாமல், இசை உலகுக்காக இயல்வான்- உலக ஜனங்களின் நன்மைக்காகச் செய்வான்.

ஸக்தா: கர்மண்ய வித்^{3}வாந் ஸோ: யதா^{2} குர்வந்தி பா^{4}ரத
குர்யாத்^{3} வித்வாந் ஸ்த^{2}தா ஸக்தா^{2}: சிகீர்ஷு*ர் லோக^{3}
ஸங்^{3}க்ரஹம்

(இ-ள்) அவித்வாந் ஸ :- ஞான மில்லாதவர்கள், கர்மணி- கருமத்தில், ஸக்தாஸ்ஸந்த: பற்றுள்ளவர்களாய், யதா குர்வந்தி - எப்படிச் செய்கிறார்களோ, த தா-அப்படியே, வித்வாந் - ஞானியும், அஸக்த:- பற்றில்லாதவனாய், லோக ஸங்க்ரஹம் - உலகத்திற்கு நன்மை, சிகீர்ஷு:- செய்யக்கோரினவனாய், குர்யாத் - (கர்மத்தைச்) செய்யக்கடவன்.

ஞானஸ்வரூபனான பகவான் அவதாரங்களில் பிறர் நன்மைக்காகக் கருமம் செய்வது போல் ஞானிகளும் பிறருக்காகவே கருமம் செய்வார்கள். அக்கருமம் ஜனகாதியர் போல்வார்க்கு மோட்ச ஸாதனமாகாது.

30. கருமத்தில் ஞானியின் மனோபாவம்

சாமானிய ஜனங்கள் கியாதிபெற்ற தலைவர் அல்லது பெரியோரின் அனுஷ்டானத்தையே பின்பற்றுகிறார்கள். அதனால் ஞானி தனக்கு ஆகவேண்டியது கருமத்தால் எதுவும் இல்லை என்றாலும் பிறருக்குக் கலகம் உண்டாகமலிருக்கவாவது கருமங்களைச் செய்ய வேண்டும். நோயாளிக்கு ருசியான உணவுகளைக் கைவிட்டுப்பத்தியம் இருப்பது கஷ்டமாகவிருக்கும். பத்தியம் நோய் நிவாரணத்திற்கு அவசியம் தான் என்றாலும் ஆரோக்கியமுடைய ஒருவன் நோயாளியின் எதிரே போய் ருசியான பட்சணங்களைச் சாப்பிட்டுக்கொண்டே இருந்தால் நோயாளிக்கு நாக்கில் ஜலம் ஊறாதா? நோயாளியின் மனத்தில் தின்பண்டத்தில் ஆசையைப் பெருக்கி நாளடைவில் அவன் பத்தியத்தையே கெடுத்துவிடாதா?

நற்கருமம் செய்வதில் ஏற்படும் சரீர உழைப்புக்குச் சோம்பி ஞானமில்லாதவர்களில் சிலர் தாங்களாகவே கருமத்தைவிடப் பார்ப்பார்கள். ஞானி கருமம் செய்வது அவர்களைக் கருமம் செய்யத் தூண்ட உதவியாக இருக்கும். ஞானி கருமம் செய்யாமலிருப்பது அவர்கள் கருமத்தைவிட்டுக் கெட்டுபோவதற்குத் தூண்டுதலாயிருக்கும். பாமர ஜனங்களின் இத்தகைய சுபாவத்தை அறிந்த ஞானி பிறருக்காகப் பயன் எண்ணாமல் கருமம் செய்வான்.

ஆகத் தமக்காகக் கருமம் செய்யும் சாமானியர், பிறருக்காகக் கருமம் செய்யும் ஞானி; எனக் கருமம் செய்வோரை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவ்விருசாராருக்கும் கருமம் செய்வதில் கொள்ளும் மனோபாவத்தால் மற்றொரு வேற்றுமையும் உண்டு என்பதைக் கண்ணன் வரும் பாடலால் தெரிவிக்கிறார்.

மெய்கருமம் தன்குணத்தான் மேவிவரும்: வேறு அறியான்
'இக்கருமம் யான் செய்தேன்

ஏயகுணம் வேறுஅறிவான் 'இக்குணங்கள் தன்னில்தான்

ஆயஎன உன்னும் நசை அற்று.

(இ–ள்) மெய்தன் குணத்தால் – பிரகிருதியி (உடலி)னது குணங்களால், கருமம் மேவி வரும் – கருமங்கள் தழுவிச் செய்யப்படும்; வேறு அறியான் – விவேகம் இல்லாதவன், இ கருமம் யான் செய்தேன் என்றிருக்கும் – இந்தக் கருமத்தை நானே செய்தேன் என அஹங்காரம் கொண்டிருப்பான், அ கருமத்து ஏய குணம் வேறு அறிவான் – அந்தக் கருமம் அதற்கு ஆதாரமான குணம் இவற்றின் விபாகத்தை (பிரிவை) உள்ளபடி அறிந்தவன், நசை அற்று – (கருமங்களில் அகங்காரத்திற் கிடமான) பற்றுதல் இல்லாதவனாய், 'இ குணங்கள் தன்னில்தான் ஆய' என – 'இக்குணங்களிலிருந்து தான் கருமங்கள் பிறக்கின்றன' என்று உன்னும் – நினைப்பான்.

ப்ரக்ருதே: க்ரியமாணானி கு^{3}ணை: கர்மாணி ஸர்வச:

அஹம்கார விமூட^{4} ாத்மா கர்(த்)தாஹம் இதி மந்யதே

தத்வ வித்து மஹா பா^{3}ஹோ கு^{3}ணகர்ம விபா^{4}க^{3}யோ:

கு^{3}ணா கு^{3}ணேஷு வர்(த்)தந்தே இதிமத்வா நஸஜ்ஜதே

(இ–ள்) அகம்கார விமூடாத்மா – அஹம்காரத்தால் ஸ்வரூபம் தெரியாத மூடன், ப்ருக்ருதே:– பிரகிருதியினது, குணை:– குணங்களால், க்ரியமாணாநி – செய்யப்படுகின்ற, ஸர்வச: கர்மாணி – எல்லாக் கருமங்களையும், அஹம்கர்த்தா இதி – 'நானே செய்கிறேன்' என்று, மந்யதே – நினைக்கிறோன்.

மஹாபாஹோ! – பெருந் தோள்களையுடையவனே! குண கர்மவிபாகயோ; – குணகர்மங்களுடைய பிரிவுகளின், தத்வ வித்து – உண்மை அறிந்தவனோ, குணா: குணேஷு வர்த்தந்தே – குணங்கள் கர்மங்களில் பிரவர்த்திக்கின்றன. இதி மத்வா – என்று நினைத்து ந ஸஜ்ஜதே – (பற்று) அபிமானம் வைப்பதில்லை. சரீரத்திற்கு மூல காரணமான பொருளை 'பிரகிருதி' என்று வேதத்தை ஆதாரமாகக் கொண்டு வேதாந்திகள் விவகரிக்கிறார்கள். இது மூலப்பிரகிருதி என்றும் சொல்லப்படுகிறது. இதையே மாயை என்று சொல்வோரும் உண்டு. பிரகிருதி என்னும் சொல் சரீரத்தையும் குறிக்கும். சுலோகத்தில் 'ப்ரக்ருதே' என்ற சொல் அதனால்தான் பாடலில் 'மெய்' என்று கொள்ளப்பட்டது.

ஸத்துவம், ராஜஸம், தாமஸம் ஆகிய குணங்கள் பிரகிருதியில் உண்டாகின்றன. குணங்களுக்கேற்பக் கருமங்கள் நிகழ்கின்றன.

உடலுக்கும் அதிற் பிறக்கும் குணங்களுக்கும் அந்நியமான தன்னை (ஆத்மதத்துவத்தை) உணர்ந்த ஞானி 'மாயையின் குணங்களே செயலுக்குக் காரணம். தான் எதையும் செய்வதில்லை' என்று தெரிந்து கொள்ளுகிறான். அதனால் தன்னைச் செயலுக்குக் கர்த்தா என்று நினைத்து அகங்காரம் கொள்வதில்லை குணம் கர்மம் இவற்றின் விபாகத்தை (பிரிவை) அறியாத அவிவேகியோ கருமத்தைத்தானே செய்வதாக நினைத்த அகங்காரம் கொள்ளுகிறான்.

ரயில் ஓடுகிறது. அதில் குழந்தைகளும், பெரியோர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஓடும் செய்கை குழந்தை, முதியவர் ஆகிய இரு சாராரிடமும் இல்லை. ஆனால் அறிவு முற்றாத குழந்தை தான் ஓடுவதாக நினைப்பதுபோல் குண கர்ம விபாகம் அறியாத அஞ்ஞானிகள் கருமத்திற்குத் தங்களைக் கர்த்தாவாக நினைத்து அகங்காரப்படுகிறார்கள்.

'குண கர்ம விபாகமறிந்தவன்' என்பதற்கு உரையாசிரியர்கள் வெவ்வேறான பொருள் தருகிறார்கள்:-

ஸ்ரீதரர்:- 'முக்குணங்கள் தனதல்ல; குணங்களால் பிறக்கும் கருமமும் தனதல்ல. ஆத்மாவாகிய தான் குணமும் அல்லன்: கருமமும் அல்லன்: கருமங்களைச் செய்பவனமல்லன். குணங்கள் கருமங்கள் என்பவற்றிற்குத்தான் வேறானவன் என்று உணர்ந்தவனே குண கர்ம விபாவங்களைத் தெரிந்தவன்!

ராகவேந்திரர்:- 'பகவானின் இச்சை ஸங்கல்பம் முதலிய குணங்களுக்கும், பிரகிருதியினது ஸத்வம், ராஜஸம், தாமஸம் ஆகிய குணங்களுக்குள்ள வேற்றுமை: பிரகிருதியின் விகாரமான தேகம், இந்திரியம், மனம் இவற்றிற்குள்ள பேதம்; பகவத் சிருஷ்டி முதலிய கருமங்களுக்கும். பகவானுக்கு அதீனனாகவேயிருக்கிற ஜீவகோடிகளால் செய்யப்படும் கருமங்களுக்கும் உள்ள பேதம்; இவற்றை உள்ளபடித் தெரிந்து கொண்டவனே, குண கர்ம விபாகம் அறிந்தவனாகிறான். அவ்வாறு அறிந்தவன், பகவத் இச்சாதி குணங்கள் ஜீவ சுபாவ கருமங்களிலும், இந்திரியங்கள் பகவத் இச்சானுசாரமாய் (பகவத் ஸங்கல்பத்தை அநுஸரித்து) சப்தாதி விஷயங்களிலும் பிரவர்த்திக்கின்றன என்பதை எல்லாச் செயல்களிலும் உணர்கிறான். அதனால் கர்மங்களில் அபிமானம் வைப்பதுமில்லை; தான் செய்வதாக அகங்காரம் கொள்வதுமில்லை!

உலகில பலர் பிரகிருதியின் குணத்தால் பிரமித்தாயினும் கர்மம் செய்கின்றார்கள். அத்தகைய கர்மாதிகாரிகள் தேகத்தையும்

குணத்தையும் தமதாக எண்ணுகிறார்கள். அதனால் கர்ம பலனில் ஆசை கொண்டு கருமத்தைச் செய்கிறார்கள். தாமே கருமம் செய்வதாக அகங்காரப்படுகிறார்கள். கருமம் செய்வதில் அவர்கள் கொண்டிருக்கும் மனோபாவம் தவறாக விருந்தாலும் நாளடைவில் அது மாறலாம். அவ்வாறின்றி அவர்கள் கருமத்தையே அடியோடு செய்யாமல் விட்டுவிட்டால் பெருங்கேட்டிற்கு ஆளாவார்கள்

நன்றாய் அறிந்த அனுபவ ஞானி தன்னைப் பின்பற்றக்கூடிய அவர்களைக் கலங்கவைக்ககூடாது கேட்டிற்கு ஆளாகவிடக் கூடாது. மந்தமதிகளின் நன்மைக்காகவாவது கருமங்களை விடாமல் 'செய்ய வேண்டும் அர்ஜுனா! அத்தகைய ஞானியே பிறருக்காகக் கருமம் செய்ய வேண்டியிருக்கும் பொழுது நீ உரிய கர்மாவைச் செய்யாமலிருக்க லாமா? உன் சுயதர்மமான யுத்தத்தைச் செய். எந்தவித மனோபாவத்துடன் நீ செய்ய வேண்டும் என்பதை மறுபடியும் சொல்கிறேன் கேள்.

என்னிடையே இக்கருமம் எல்லாம் இனிதுஇருத்தி
நின்னிடையின் மிக்கமர்ந்த நெஞ்சினால் - மன்னியபேர்
ஆசையுடன் நீமமதை அற்றுஇங்கு அமர்முயல்வாய்
ஆசையுடன் உள்வெதுப்பற்று ஆர்ந்து.

(இ-ள்) இ கருமம் எல்லாம் – இக்கருமங்கள் எல்லாவற்றையும், என்னிடையே இனிது இருத்தி – என்னிடத்தில் பூர்ணமாக ஒப்பித்து, நின்இடையின் மிக்கு அமர்ந்த நெஞ்சினால் – நின் ஆத்மாவிடமே நன்றாகப் பொருந்தின மனத்தோடு, மன்னியபேர் ஆசையுடன் மமதை அற்று – பலனில் உண்டாகும் பேர் ஆசையும் எனது என்ற மமகாரமும் இல்லாமல், ஆசையுடன் உள்வெதுப்பு அற்று – 'நான்' என்னும் அஹங்காரத்தோடு உள்ளத்தாபம் (வருத்தம்) இல்லாமல், நீ ஆர்ந்து இங்கு அமர்முயல்வாய் – நீ உற்சாகத்துடன் இங்கு போரை மேற்கொள்வாயாக.

மயி ஸர்வாணி கர்மாணி ஸந்யஸ்ய அத்[4]யாத்ம சேதஸா
நிராசீர் நிர்மமோ பூ[4]த்வா யுத்[4]யஸ்வ விகதஜ்[3]வா

(இ-ள்) ஸர்வாணி கர்மாணி – எல்லாக் கருமங்களையும், மயி ஸந்யஸ்ய – என்னிடத்தில் ஒப்பித்து (விட்டு) ஆத்யாத்ம சேதஸா – ஆத்மாவையே நாடிய மனதோடு. நிராசீ:– (பலத்தில்) ஆசையற்றவனாய், நிர்மம:– மமகாரமற்றவனாய், விகதஜ்வர: பூதவா – தாபத்தை (துக்கத்தை) விட்டவனாய், யுத்யஸ்வ – யுத்தம் செய்.

'மயி ஸந்யஸ்ய' (என்னிடத்தில் ஒப்பித்து) என்னும் தொடருக்கு ராகவர் கூறும் உரை:- 'பகவானே என் ஹிருதயத்தில் இருந்து கொண்டு செய்கின்றான் என்னும் எண்ணத்துடன் ஒப்பித்து'

ராமாநுஜர் :- நான் பரமாத்மாவின் ஏவற்காரனாய் எல்லாக் கருமங்களையும் செய்து பரமாத்மாவிடம் ஒப்பிக்கக் கடமைப்பட்டவன் என்ற எண்ணத்துடன் ஒப்பித்து.

'கருமங்களைப் பயனெண்ணாமல் அகங்கார மமகாரமற்றவனாய் எல்லோரும் அவசியம் செய்யவேண்டும்' என்பதைக் கண்ணன் அர்ஜுனனுக்கு இதுவரைப் பலதடவை பலவகையாகச் சொல்லியிருக்கிறார். யுத்தம் செய்யத் தயாராகிவந்த அர்ஜுனனுக்குச் சோக மோகத்தால் கலக்கம் உண்டானபொழுது கலக்கத்தைப் போக்கித் தெளிவைத்தரவல்ல ஆசார்ய ஸ்தானத்தில் கண்ணன் சமீபத்தில் இருந்தார். அதனால் சந்தேகம் ஏற்பட்டபோதெல்லாம் அர்ஜுனனுக்குக் கேள்வி கேட்டுத் தெளிவுபெற முடிந்தது. எல்லோருக்கும் இது சாத்தியமாகுமா? கேள்விகேட்டுத் தெளிந்து கொள்வதற்குரிய ஆசாரியர்கள் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் கிடைப்பார்களா? கிடைக்க மாட்டார்கள். ஆதலால உலகில் அனைவரும் உய்ய மற்றொரு மார்க்கத்தையும் கண்ணன் அடுத்தபடியாகக் காட்டுகிறார்.

31. விச்வாஸத்தாலும் உய்யலாம்

நதிக்கரையில் யோகி ஒருவர் எப்பொழுதும் நிஷ்டையில் இருந்து கொண்டிருந்தார். அவ்வழியாக அடிக்கடி பால் தயிர் விற்கச் சென்று கொண்டிருந்த பெண் அவரைக் கவனித்தாள். யோகிக்கு ஆகாரம் கொடுப்பாரில்லையே என்று மனமிரங்கிப் பிரதிதினமும் பாலை ஒரு மண் பாத்திரத்தில் வைத்துச் சென்றாள். இப்படி பல மாதங்கள் கழிந்த பிறகு நதியில் வெள்ளம் பெருக ஆரம்பித்தது. பாலை வழக்கம் போல் யோகிக்கு நேரத்தில் கொண்டு சேர்க்க முடியாமல் பெண் ஒரு நாள் தாமதித்து வந்தாள். யோகி அவளை 'ஏன் இத்தனை தாமதம்?' என்று சினந்து கேட்டார். 'நான் இருந்த கரைக்கு ஓடம் வந்து சேரத் தாமதம்ஆய்விட்டது? இந்த வெள்ளத்தில் நான் எப்படிக் இறங்கி வரமுடியும்?' என்று பெண் சாந்தமாகப் பதில் சொன்னாள். யோகி 'ராம நாமத்தை சொல்லிக்கொண்டு இறங்கினால் தண்ணீர் தானே விலகி

விடுகிறது. ஓடம் செய்யும் உதவி நாமம் செய்யதா?' என்று மறுபடியும் பசிக்கோபத்தில் சொல்லி வைத்தார். பெண் 'அப்படியே ஆகட்டும்' என்று நமஸ்கரித்துப் போய்விட்டாள்.

மறுநாள் யோகிக்கு நேரத்தில் பால் வந்து சேர்ந்தது. வழக்கமாக வந்த பெண்ணை 'இன்று ஓடக்காரன் தாமதம் செய்யவில்லையா?' என்று கேட்டார். 'தாங்கள் நேற்று உபதேசித்த நாமத்தைச் சொல்லிக் கொண்டு வெள்ளத்தில் இறங்கினேன். சொன்னபடி ஜலம் விலகி விட்டது. ஓடக்காரனுக்காக நான் காக்கவில்லை' என்று பெண் பதில் சொன்னாள். யோகிக்கு ஆச்சரிய உண்டாயிற்று. ஆனால் அவள் சொன்னதை நம்பமுடியாமல் நாமத்தைச் சொல்லிக்கொண்டு அவளை முன்னே இறங்கச்சொல்லித் தான் பின்னே சென்றார். அவள் ...'ராம' என்று சொல்லிக்கொண்டே தைரியமாக வெள்ளத்தில் இறங்கி வேகமாக நடந்து கொண்டு போக ஜலம் விலகிற்று. அவளும் அக்கரை போய்விட்டாள். யோகி நாமத்தைச் சொல்லிக்கொண்டு இறங்கினாலும் பயத்தால் வஸ்திரம் நனைந்துவிடுமோ என்று அதை மேலே இழுத்துக் கொண்டே சிறிது சிறிதாக ஆழத்தில் இறங்கினார். ஜலம் மாரளவு கழுத்தளவாகக் கடைசியில் வெள்ளமே அவரை அடித்துக் கொண்டு போவதை மறு கரையில் சேர்ந்திருந்த பெண் பார்த்து 'ஐயோ எனக்கு உபதேசம் செய்த குருவை வெள்ளம் கொண்டு போகிறதே' என்று அலறினாள். யோகி என் உபதேசத்தில் நீ விச்வாஸம் கொண்டாய். அதனால் உய்ந்தாய். உபதேசித்தும் அதில் எனக்குப் பூரண விச்வாஸம் வராமல் அவநம்பிக்கையே கலந்து வந்தது. அதனால் தான் அழிந்தேன் என்றராம்.

இது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய நீதிக்கதைகளில் ஒன்று. அழியக்கூடிய தேகத்திற்க வந்த நோய்க்குப் பரிகாரம் வேண்டி வைத்தியரிடம் செல்லுகிறோம். அவர் தன் மருந்திலும் சிகிச்சையிலும் பரிபூர்ண நம்பிக்கை வைக்காமல் மனம் உளைந்து கொண்டிருந்தால் நோய் குணமாகாது என்று சொல்லிவிடுகிறார். உடல் நோயைத் தீர்க்கும் வைத்தியரிடம் அவ்வளவு நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியமானால் ஆத்மநோயைத் தீர்க்கும் ஆசார்யன் உபதேசத்தில் நம்பிக்கை இன்னும் தீவிரமாகவே இருக்க வேண்டும் என்பதை ஹிந்து மதம் அடுத்தடுத்துச் சொல்லுகிறது. ஏசு கிருஸ்துவும் இதையே வற்புறுத்தினார் என்பதை பைபிளால் நன்கு தெரிகிறது.

'ஆழ்வார்களுள் ஒருவர்' தன் நெஞ்சை (மனதை நோக்கி) எவ்வளவு பாவம் செய்தாலும் கருணாமூர்த்தி அதைக் குணமாகக் கொண்டு காப்பான். தேர்த்தட்டிலிருந்து கூறிய கீதோபதேசத்தையே நம்பி இரு' என்று உபதேசிக்கிறார்.

குன்றனைய குற்றம் செய்யினும் குணம்கொள்ளும்
இன்றுமுதல் ஆகஎன் நெஞ்சே! - என்றும்
புறன்உரையே ஆயினும் பொன்ஆழிக் கையான்
திறன்உரையே சிந்தித்து இரு.

(குன்று – சிறுமலை, பொன் ஆழிக்கையான் – கண்ணன், திறன் உரை – கீதை.)

பந்தத்தை உண்டாக்குவது ஆசை. ஆசையில் பிறக்கும் அகங்கார மமகாரங்களால் ஆத்மஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. ஆசையை அகற்றவும் ஆத்மாவாகிய தன் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளவும் அதுவே மோட்சமாகிற பலனைப் பெறவும் நிஷ்காம கருமமே ஏற்ற உபாயம். அதைப்போல் சிறந்தது வேறெதுவுமில்லை என்று அடிக்கடி நான் சொல்லிவந்த உண்மையை வாதம் செய்து உணர்ந்து கொள்வது என்பது எல்லோருக்கும் ஸாத்யமாகாது. நிஷ்காம கருமத்தைச் செய்பவர்களைப் போலவே அதை விச்வாஸத்தோடு நம்புகின்றவர்களும் விடுதலை அடைவார்கள் என்று கண்ணன் சொல்லுகிறார்.

ஏவர் விருப்போடு இழவின்றி என் மதத்தை
மேவி முயல்வார் விடப்படுவார்-

(இ–ள்) ஏவர் – எவர்கள், விருப்போடு – பிரியத்தோடு, இழவு இன்றி – (வருத்தம்) அசிரத்தை இல்லாதவர்களாய், என் மதத்தை – எனது இந்த ஸித்தாந்தத்தை, மேவி முயல்வார் – நம்பிக்கையோடு தழுவி அனுஷ்டிக்க முயல்பவர்களும், விடப்படுவார் – (பந்தத்தினின்றும்) விடுதலை பெறுவார்கள்.

யே மேமதம் இதம் நித்யம் அநுதிஷ்டந்தி மாநவா:[3][2]
ச்ரத்தாவந்தோ நஸூயந்தோ முச்யந்தே தேபி கர்மபி:[3][4][4]

(இ–ள்) யே – எந்த, மாநவா:– மனிதர்கள், இதம் – இந்த, மே மதம் – என் ஸித்தாந்தத்தை, நித்யம் – எப்போதும், அநுதிஷ்டந்தி – அனுஷ்டிக்கிறார்களோ, (யேச) – பின்னும் எவர்கள், ச்ரத்தா வந்த :–

விச்வாஸ முடையவர்களோ, (யேச) – பின்னும் எவர்கள், அநஸூயந்த:– (இதில்) த்தேவஷமற்றவர்களோ, தேஅபி – அவர்களும், கர்ம பி:– கருமங்களால், முச்யந்தே – விடுபடுகிறார்கள்.

'பலனில் இச்சைகொள்ளாமல் சகல கருமங்களையும் பரமாத்மாவிடம் ஒப்புவித்து அகங்காரம் மமகாரம் இரண்டும் இன்றிச் செய்வது' எனது மதம் என்று குறிக்கப்படுகிறது (1) இம் மதத்தை அப்படியே அனுஷ்டிப்பது (2) அது இயலாதவர் சித்தாந்தத்தில் பூரணவிச்வாஸம் கொண்டு அனுஷ்டிக்க முயவ்து. (3) சித்தாந்தத்தில் நம்பிக்கை பிறக்காதவர்கள் அதில் துவேஷ புத்தியாவது கொள்ளாதிருப்பது இம்மூன்றில் முந்தியதைக் கைக்கொண்டவர்கள் பந்த நிவர்த்தியடையவார்கள் என்று முன்னேயே பல இடங்களில் சொல்லப்பட்டது. அவர்களைப் போலவே பிந்திய இரண்டைக் கைக்கொண்டவர்களும் பந்தத்தினின்றும் விடுபடுவார்கள்.

தமிழ்ப்பாடலில் 'என் மதத்தை மேவி முயல்வார்' என்று வரும் தொடரில் இம் மூன்று வகுப்பாரும் அடங்கியிருப்பது உய்த்து உணரத்தக்கது. உதாரணமாக மஹாத்மாவின் அஹிம்ஸைக் கொள்கையை அரசியலில் செயலில் கடைப்பிடித்தவர்கள் ஒரு சிலர். அவ்வாறு அனுஷ்டானத்தில் மேற்கொள்ள முடியாத போதிலும் அதையே விடுதலைக்கு ஏற்ற உபாயம் என்று பரிபூரணமாய நம்பி இருந்தவர் சிலர். அதுவும் இல்லாதவர் சிலர். அதுவும் இல்லாதவர் 'அறிவும் அநுபவமும் நிறைந்த மஹான் சொல்வதைத்தப்பு என்று சொல்வதற்கு அற்பர்களாகிற நாமா தகுதியுடையவர்கள்' என்று துவேஷமோ அஸூயையோ கொள்ளாமல் இருந்தோர் சிலர். இம் மூன்று சாரரும் காயிகமாகவோ(அனுஷ்டான்னதாலோ) வாசிகமாகவோ, அஹிம்ஸா சிந்தாத்தைத் தழுவியர்களாகிறார்கள். இம் மூன்று சாராரும் மஹாத்மா விரும்பிய பலன் கிட்டுவதற்கு ஏதோ ஒரு அளவில் உதவி செய்தவர்களாகிறார்கள். அவ்வாறே கண்ணன் கீதையில் கூறிய கர்மயோக ஸித்தாந்தத்தை அனுஷ்டானத்தில் கொண்டவர்களைப் போலவே வாசீகமாகவோ மானஸீகமாகவோ தழுவியர்களும் உலக ஜனங்கள் நல்வழிப்பட ஒரு அளவில் உதவுவதால் அவர்களும் பந்த நிவர்த்தி பெறுவார்கள் என்று சொன்னார்.

பின் பந்த நிவர்த்திபெற்று உய்யமாட்டாதவரும் உண்டு என்பதை அடுத்த பாடலில் தெரிவிக்கிறார்.

.... *பாவத்தால்*

ஆங்கவர்கள் அல்லார் அறிவழிந்து மூடராய்த்
தீங்கமர்வர் என்றேதெரி.

(இ–ள்) அவர்கள் அல்லால் – (எனது ஸித்தாந்தத்தை) எந்தவிதத்திலும் தழுவாதவர், பாவத்தால் அறிவு அழிந்து–(தமது) பாவச் செய்கையால் அறிவு கெட்டு, மூடவராய்–மூடர்களாகி, தீங்கு அமர்வர் – அனத்தத்திற்கு ஆளாவார்கள், என்று தெரி – என்பதைத் தெரிந்து கொள்.

யே த்வேதத³ப்⁴யஸூயந்தோ நாநுதிஷ்ட²ந்தி மேமதம்
ஸர்வஜ்ஞாந விமூடா⁴ம் ஸ்தாந் வித்தி நஷ்டா நசேதஸ:

(இ–ள்) யே மா ந வ ா:– எந்த மனிதர்கள், இதம் மே மதம் – இந்த எனது சித்தாந்தத்தை, ந அநுதிஷ்டந்தி – அனுஷ்டிப்பதில்லையோ, யேசு – பின்னும் எவர்கள், அப்யஸூயந்த (இதில்) அஸூயை கொண்டவர்களாய், வர்த்தந்தே – இருக்கிறார்களோ, தாந்–அந்த, ஸர்வஜ்ஞான விமூடாந் – ஞானமே யில்லாத மூடர்களை, நஷ்டாந் – ஸத்தை இழந்த, அசேதஸ:– (சடப்பொருளுக்கு ஒப்பாகக்) கெட்டுப் போனவர்களாக, வித்தி – அறி.

சித்தாந்தத்தை அனுஷ்டிக்கவும் செய்யாமல் அதை துவேஷித்தும் பழித்தும் வாழ்பவர் 'அவர்கள் அல்லார்' என்ற தொடரால் குறிக்கப் பட்டனர். சுதந்திரப் போராட்டம் நம் தேசத்தில் நடந்து கொண்டிருந்த போது அதில் நேரடியாக ஈடுபடுவதைத் தவிர விவேகிகளுக்கு வேறு மார்க்கம் இல்லை என்று அறிவாளிகள் எடுத்துக்காட்டினர். சிலர் போராட்டத்தில் நேரடியாக ஈடுப்பட்டனர். பலர் அவர்களின் கொள்கைகளை ஒப்புக்கொண்டு அநுதாபம் காட்டினர்.

அவ்வாறும் செய்யாமல் சிலர் இயக்கத்தையே பழித்தனர். இயக்கத்தில் சேர்ந்தோரிடமும் அவர்கள் வகுத்த கொள்கைகளிலும் துவேஷம் பூண்டு, பலன்கிட்ட வொட்டாது எவ்வளவோ விதமான இடையூறுகளைச் செய்தனர். அதன் பலன் என்னவாகிறது? உயர்ந்த லட்சியமாகிய சுதந்திரம் வரத் தடை செய்வதவராகிறார்கள். அல்லது சுதந்திரம் வரத் தாமதம் செய்தவராகிறார்கள். அதனால் தமக்கும் தம் பின் சந்ததியாருக்கும் பெருங்கேட்டை விளைவித்தவராகிறார்கள்.

அவ்வாறே ஆஸுரப் பிரகிருதிகள் தாமஸ ராஜஸகுணங்களுக்கு அடிமையாகி சாமானிய பலன்களைப் பெறுவதில் ஆசை கொண்டு பந்த நிவர்த்தியைத் தெரிவிக்கும் வேதத்தினுடைய உத்தர (வேதாந்த)

பாகத்தை நம்புவதில்லை. உத்தரபாகத்தையும் அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் மஹான்களையும் பழிக்கிறார்கள். ஹிரண்யன், ராவணன் முதலாயினார் இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அத்தகையவர்கள் ஏற்கனவே தமக்கிருந்த கூறிய, அறிவையும் மழுங்கச் செய்து நாளடைவில் தாமும் பெருங்கேட்டிற்கு ஆளாகிறார்கள்.

'கீதையில் சொல்லப்படும் கர்மயோக சித்தாந்தத்தில் விச்வாஸமுடையவனாய் உய்ந்துபோதல் அல்லது அதுவும் இல்லாதவனாய் நசித்துப்போதல்; இவ்விரண்டைத் தவிர வேறு நடு வழி அல்லது குறுக்கு வழி இல்லை' என்பது இவ்விரண்டு சுலோகங்களால் உறுதியாகத் தெளிவாகச் சொல்லப்பட்டது.

32. மரணம் வரினும் சுயதர்மமே சிரேஷ்டம்

'பலனில் இச்சை கொள்ளாமல் பகவதர்ப்பணம் செய்து கர்மங்களை விடாமல் செய்ய வேண்டும்' என்பதே என் சித்தாந்தம். இதை எந்த விததத்திலாயினும் தழுவினவர்கள் அனைவரும் உய்யலாம். என்று கண்ணன் முன்னே சொன்னரல்லவா?

அக்கருமங்கள், ஸ்வதர்மம் என்றும் பரதர்மம் என்றும் ஒவ்வொருவருக்கும் இரண்டு விதமாயிருக்கும். பெற்றோரைப் பரிபாலிப்பது எல்லோருக்கும் ஸ்வதர்மம். கௌசிகன் அதைக் கைவிட்டுத் தனக்குப் பரதர்மமாகிய தவத்தை மேற்கொண்டான். தவம் செய்யும்போது தான் தன்தலையில் எச்சமிட்ட 'கொக்கை எரிக்கும் பலனே கிட்டியது தனக்குச் சுயதர்மமாகிய பதியின் பணிவிடையில் ஈடுபட்டிருந்த பதிவிருதையிடம் அவன் தவம் செல்லவில்லை. பெற்றோர் பரிபாலனத்தையும் வருணத்தையொட்டிச் செய்ய வேண்டிவந்த சுயதர்மமாகிற கசாப்புத் தொழிலையும்விடாமல் நடத்தி வந்த தர்ம வியாசனிடமே ஞானம்பெற்றான் என்பது லோகப் பிரசித்தமான வரலாறு.

ஒருவனுக்குப் பிறப்பினால் தனது முன்னோர்கள் பரம்பரையாகச் செய்து வந்த சில கர்மங்களையும் அவசியம் செய்ய வேண்டி வருகிறது. அக்கருமங்களும் சுய தர்மத்திலே சேரும் க்ஷத்திரியனுக்கு அவசியம் நேர்ந்த போது நாட்டையோ, தர்மத்தையோ காக்கப் போர் செய்வதும், பிரஜைகளைப் பரீபாலிப்பதும் பிறப்பினால் வருணத்தை யொட்டிவந்த

சுயதர்மமாகும். அவ்வாறே பிறப்பினால் வருணம் அல்லது பரம்பரையையொட்டி வரும் சுயதர்மங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாயிருக்கும். வேறாக விருக்கக் காரணம் இல்லாமல் இல்லை. அதையே வரும் சுலோகத்தால் கண்ணன் தெரிவிக்கிறார்.

தன்இயல்வுக் கீடாகத் தான்இயலும் பேரறிவு
மன்னியவன் ஆனவனும்; மற்றெவையும் - அந்நிலையே
தன்செய்தி ஆகுதலால் தான்விலக்க நூல்உரைப்பது
என்செய்வ தாகும் இசைந்து

(இ-ள்) பேர் அறிவு மன்னியவன் ஆனவனும் – மிக்க ஞானம் படைத்தவனும் கூட தன் இயல்வுக்கு ஈடாக– தனது (பழைய) பிரகிருதி வாஸனைக்குத் தக்கபடி தான் இயலும் – தான் (கருமத்தில்) பிரவர்த்திக்கிறான். மற்று எவையும் – (தேவர் மனிதர் முதலிய) பிற பூத சரீரங்கள் எல்லாம் அந்நிலையே – அவ்வாறே தன் செய்தி ஆகுதலால் – தனது கருமங்களில் (பிரவேசம்) ஆகி வருதால் தான் இசைந்து விலக்க – ஒருவன் (வாஸனையால் வருவதை) விரும்பி விலக்கிக்கொள்ள, நூல் உரைப்பது என் செய்வதாகும் சாஸ்திரம் சொல்லும் நிர்ப்பந்தம் என்ன (உதவி) செய்ய முடியும்? (முடியாது என்றபடி)

ஸத்ருசஞ்சேஷ்டதே ஸ்வஸ்ய: ப்ரக்ருதே ஜ்ஞானவாநபி
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி

(இ-ள்) ஜ்ஞானவாந்அபி–ஞானவான் ஆனபோதிலும்கூட ஸ்வஸ்யா:–தனது ப்ரக்ருதே:–(பழைய) பிரகிருதி வாசனைக்கு, ஸத்ருசம்–தக்கபடி, சேஷ்டதே–(கருமங்களில்)பிரவர்த்திக்கிறான். பூதாநி–(அவ்வாறே) தேவர் அசுரர், மனிதர் முதலிய எல்லாப் பிராணிகளும், யாந்தி...(பழைய பிரகிருதிவாஸனையையே),அனுஸரித்து நடக்கிறார்கள்,நிக்ர:–(சாஸ்திரத்தால் பண்ணப்படும்) நிர்ப்பந்தம் கிம்கரிஷ்யதி?–என்னசெய்ய முடியும்?

மனம் இந்திரியங்கள் இவற்றிற்கிடமான தேகம் பிரகிருதியையே மூலாதாரமாகக் கொண்டுள்ளது. தேகத்தை பிரக்ருதி என்ற சொல்லாலும் குறிப்பிடலாம். குணத்திற்கும் குணவேறுபாட்டிற்கும் காரணமாகவிருப்பது இச்சரீரமே.

மனித சரிரங்கள் எல்லாம் கால் கை கண் வாய் மூக்கு தலை முதலிய அவையங்களால் ஏகதேசம் ஒன்று போலவே மற்றொன்று

காணப்பட்டாலும் அவைகளுள் வேற்றுமையும் இருக்கிறது. நிறத்திலும் பரிமாணத்திலும் இருப்பதுபோலவே வளர்ச்சியிலும் வேற்றுமை இருக்கிறது. மாம் பழங்கள் எல்லாம் உருவத்தில் ஒன்றாகவிருந்தாலும் ஒரு ஜாதிப்பழம் புளிப்பாகவும் மற்றொரு ஜாதிப்பழம் தித்திப்பாகவும் ருசியில் வேற்றுமைப்படுகிறது. அதுபோலவே சரீரத்திற்குத் தகுந்தபடி மனிதனின் குணம், பிரியம், அறிவு வளர்ச்சி கருமம் (தொழில்) முதலியன வேறுபடுகின்றன.

பிறவியிலேயே சரீரம் காரணமாக மனித வர்க்கத்திலும் மிருக வர்க்கத்திலும் அமைந்திருக்கும் வேறுபாட்டை உலகில் எல்லா அறிவாளிகளும் ஒப்புக்கொள்ளவே செய்கிறார்கள். அதற்குக் காரணம் சொல்வதில் பாரம்பர்ய அளவோடு மேல்நாட்டினர் நின்றுவிடுகின்றனர். தகப்பன் பாட்டன் செய்துவந்த தொழிலை ஒருவன் வருத்தமின்றிச் சுலபமாகத் தெரிந்துகொள்கிறான். அந்தப் பரம்பரையில் தோன்றாத மற்றவனை விடத் திறமையாகவும் செம்மையாகவும் தொழிலைச் செய்கிறான். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா? ‘குலத்தளவே ஆகும் குணம்’ என்னும் முதுமொழி இந்த உண்மையை உணர்த்துகிறது. குலத்திற்குத் தகுந்த குணத்தைப் பெற்றிருக்கும் தேகம் குணத்திற்குத் தகுந்த கருமங்களில் தேகியை (தேகம் பெற்றிருப்பவனை) பிரவேசிக்கச் செய்யும்.

ஹிந்து, பௌத்த, ஜைன மதங்களில், தேகியை (ஜீவாத்மாவை) முந்தின பிறப்புக்களிலே செய்த கருமங்களும் தொடருகின்றன. பூர்வகர்ம வாஸனைக்கேற்ற தேகமும், அத்தேகம் அமைவதற்கு ஏற்ற பராம்பரியமும் ஒருவனுக்கு அமைகின்றன. ‘அத்தேகத்திற்கேற்பவே கருமங்களில் ஒருவன் பிரவேசிக்கிறான்’ என்று சொல்லப்படுகின்றன. இது நம்ப முடியாதபடி மேல் நாட்டினருக்கு விநோதமாயிருக்கும் என்று கொள்வதற்கில்லை தத்துவ ஆராய்ச்சியல் இறங்கிய அநேகம் மேல் நாட்டுக் கிறிஸ்துவர்கள் உயிருக்கு பல பிறப்புகளை உண்டு என்று நம்பாதபோனால் இப்பொழுது இருந்துவரும் பேதங்களுக்குச் சரியான காரணம் சொல்லவே முடியாது என்கின்றனர். காலஞ்சென்ற டாக்டர் ஆனிபெஸண்ட் அவர்கள் ‘தொடர்ச்சியான பல பிறப்புக்கள் உயிர்களுக்கண்டு’ என்ற உண்மையை உலகிற்கே பிரசாரம் செய்தார். ஆகையால் முற்பிறப்பு, பிற்பிறப்பு, பூர்வகர்மாவாஸனை என்று கீதையில் வருபவைகளை, கேவலம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கீழ்நாட்டுக் கொள்கை என்று யாருமே புறக்கணிப்பதற் கில்லை.

பிறப்பிலேயே பராம்பரியத்தால் ஏற்படும் பேதத்தையொட்டி ஒவ்வொருவருக்கும் ஸ்தர்மம் என்றும் பரதர்மம் (அந்நியதர்மம்) என்றும் வெவ்வேறாக அமைந்திருக்கின்றன. க்ஷத்திரிய பரம்பரையில் தோன்றியவனுக்குப் போர் செய்வதும், நாடு காத்தாலும் பிறப்பினால் வந்த சுயகர்மமும் விசேஷ தர்மமூமாகும். பாரம்பரியமும் பூர்வ கர்மசேஷமும் க்ஷத்திரியனுக்கு ஏற்பட்ட சுய தர்மத்தில் பிரவேசிக்கவே துணையாகவிருக்கும். அவன் தேகமும் பிரஜா பரிபாலனம், போர் முதலிய கர்மாக்களிலே செல்லவே அநுகூலமாயிருக்கும்.

அவ்வாறிருக்கும் பொழுது க்ஷந்திரியன் ஒருவன் தனக்குரியதல்லாத ஸந்யாஸ தர்மத்தை மேற்கொள்ளுகிறான். ஞானமார்க்கத்தில் செல்வதற்காக இந்திரியங்களையும் தன் மனதையும் சாஸ்திரத்தில் சொல்லிய முறைகளைப்பின்பற்றி, அடக்கி ஒரு நிலைப்படுத்தப் பார்க்கிறான். என்றாலும் சரீரம் பூர்வ கரும வாஸனைக்கேற்ற கர்மாவில் தான் இவனை இழுக்கம். ஒருவன் தன்னைப் பூர்வ கருமவாஸனைக்கேற்ற கர்மாவிலிருந்து விலக்கிக்கொள்ள சாஸ்திர நிர்பந்தம் துணைசெய்யமாட்டாது. ஆகையால் ஒவ்வொருவனும் ஸ்வதர்மத்தைச் செய்வதே இயற்கையும் சுலபமுமான மார்க்கம் என்று கண்ணன் இச்சுலோகத்தின் மூலம் சொன்னார்.

மூலத்தில்வந்த 'நிக்ரஹ:' என்னும் பதத்திற்குச் சங்கரர் 'சாஸ்திர நிஷே' தத்தால் (விலக்கால்)' என்று உரை செய்துள்ளார். பாடலில் 'நூல் உரைப்பது' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்திரியங்கள் விஷயத்தோடு சேரும்போது உண்டாகும் காமம் கோபமாகிய சத்துருக்களுக்கு வசமாகாமல் அறிவாளி தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும். உரிய கர்மங்களைச் செய்யாமல் விடுவது இதற்கு எந்த விதத்திலும் துணை செய்யாது. பங்கத்தையே விளைவிக்கும் மோகம் காரணமாக ஸ்வதர்மத்தைவிடப் பரதர்மமே சிரேஷ்டமாகச் சிலருக்குத் தோன்றலாம். அவ்வாறு நினைத்துப் பரதர்மத்தைப் பற்றக்கூடாது என்பதை அடுத்துவரும் சுலோகத்தால் தெரிவிக்கிறார்.

குறைந்திடிலும் தன்கருமம் குற்றமாம் மேலாம்
நிறைந்தியலும் மற்றையதில் நேரே - மறைந்துஇறந்து
தன்கருமத்தைச் செயினும் தான்நன்று: வேறான
வன்கருத்து அச்சம் வரும்.

(இ-ள்) குற்றமாம் தன் கருமம் குறைந்திடிலும் - குணமில்லாத தனது தர்மம் (அங்கங்கள்) குறைந்து இருந்தாலும், நேரே நிறைந்து இயலும் மற்றையதில் மேலாம் - செவ்வையாகச் செய்யப்படும் (அங்க) நிறைவுடைய பிறரது தர்மத்தைவிடச் சிரேஷ்டமாகும். தான் மறைந்து இறந்து - ஒருவன் கெட்டு இறந்து தன் கருமத்தைச் செய்யினும், நன்று - சிறந்தது வேறானவன் தன் தருமத்து - பிறரின் தருமத்தைச் செய்வதில், அச்சம் வரும்(நரக) பயம் உண்டாகும்.

ச்ரேயாங் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ:

(இ-ள்) ஸ்வதர்ம :- தன் கருமமான சுயதர்மம் விகுண: அபி - அங்கம் குறைந்திருந்தாலும் ஸ்வநுஷ்டிதாத் பரதர்மாத - நன்றாக அனுஷ்டிக்கப்படும் பிறரின் தருமத்தைக்காட்டிலும், ச்ரேயாந் - சிரேஷ்டமானது. ஸவதர்மே நிதநம் - சுயதர்மத்தில் மரணம் வரினும் ச்ரேய:- சிறந்தது, பரதர்ம :- பிறரின் தருமமோ, பயாவஹ:- பயத்தை உண்டாக்கக் கூடியது.

குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனை விதிப்பதும் சிறைவாசம் கொடுப்பதும் நீதிபதிகளுக்குக் கடமையும் தர்மமுமாகும். அக்கடமையைச் செலுத்துவது மன வேதனையைத் தந்து குறைவான தொழில்போல் தோன்றினாலும் நீதிபதி அதைச் செய்யாமல் பிறிதொன்றைப் பற்றக்கூடாது. தனது கடமையைச் செய்வதே மேல். பிறிதொன்றைச் செய்வது ஆபத்தையே விளைவிக்கும்.

"வேம்பு கசப்பாயிருந்தாலும் அதில் தோன்றிய புழு பிறிதொன்றை உண்ணாமல் அதையே உண்டு ஜீவிக்கும் அவ்வாறே ஸ்வதர்மம் குறைவாகத் தோன்றினாலும் அதைச் செய்வதே மேலாகும். மோகம் காரணமாகப் பரதர்மம் மேலானதாகத் தோன்றினாலும் அதைப்பற்றக்கூடாது பற்றினால் ஆபத்தையே தரும் ஸ்வதர்மத்தைச் செய்வதில் மரணம் வருவதாயிருந்தாலும் அதை விடாமல் செய்வதே சிரேஷ்டம். முடிவில் செய்தவனுக்கும் செய்பவனின் ஸமூகத்துக்கும் அதுவே நன்மை தரவல்லது.

33.வினாவும் விடையும்

தக்கது இது: தகாதது இது என்று ஒருவன் சாஸ்திரத்தாலோ விவேகத்தாலோ அறியலாம். அறிந்தாலும் கூட ஒருவன் தனக்குப் பாரம்பரியம் காரணமாகவும் பூர்வ கரும சேஷத்தாலும் வந்த உடலில், பிறக்கும் குணத்திற்கு அனுகுணமான கர்மத்தில் பிரவர்த்திப்பதிலிருந்து சுலபமாய் விடுபடமுடியாது. அதனால் வருணத்தையொட்டி விதித்த சுயதர்மத்தைப் பற்றுவதே பர தர்மத்தினும் சிரேஷ்டம் என்று கண்ணன் முன்னே சொன்னார்.

அதைக் கேட்ட அர்ஜுனன் தன் அனுபவத்தைக் கொண்டே ஆலோசித்தான். ஒரு சந்தேகம் தோன்றிற்று. உடனே ஒரு கேள்வி கேட்கிறான்.

பின்பு விசயன் 'பெருமானே பாவத்தை
அன்பிலனே லும்புருடன் ஆங்குஎத்தால்-வன்பதனில்
ஏவுற்றான் போல இயலும்
ஆ உற்றான் சொன்னான் அமைந்து.

(இ—ள்) பின்பு விசயன்—பிறகு அர்ஜுனன், பெருமானே—சுவாமீ!, புருடன்—ஒருவன் அன்பு இலனேலும்—விருப்பம் இல்லாதவனாயிருந்தாலும் பாவத்தை தீச் செயலை வண்பதனில் ஏவுற்றான்போல—பல வந்தமாக ஏவப்பட்டவன் போல, எத்தால்—என்ன காரணத்தால், இயலும்—செய்கிறான்? என—என்றுகேட்க, அவனுக்கு—ஆ உற்றான்—கோபாலன் அமைந்து சொன்னான்—நிதானமாக விடை சொன்னான்.

அத கேந ப்ரயுக்தோயம் பாபம் சரதி பூருஷ:
3
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாத் இவ நியோஜித:

(இ—ள்) வார்ஷ்ணேய—விருஷ்ணி வம்சத்தில் தோன்றிய கண்ணா! அத—பிறகு அயம் புருஷ—இந்தப் புருஷன், அநிச்சத் அபி—விரும்பாதிருந்தாலும் கூட, கேந—என்ன காரணத்தால் பலாத் ப்ரயுக்த: நியோஜித: இவ—பலவந்தமாக ஏவப்பட்டு நியமிக்கப்பட்டவன் போல, பாபம்—தீச் செயலை, சரதி—செய்கிறான்?

நல்ல பிரசங்கங்களைக் கேட்கும் போதும் புத்தகங்களில் நல்லதைப் படிக்கும்போதும் மேற்கொள்ள வேண்டிய நற்செயல்

இன்னதென்பதும் விலக்கவேண்டிய தீச் செயல் இன்னதென்பதும் நமக்கு உதயமாகின்றன. சில சமயங்களில் நம்மிடமுள்ள தீய பழக்கத்தினால் ஏற்படும் தீய விளைவுகளைப் பிரத்தியக்ஷமாகவும் காண்கிறோம். அச்சந்தர்ப்பங்களில் வைராக்கியம் பிறக்கிறது. பிரசவ வைராக்கியம் ஸ்மசான வைராக்யம் என்பவை ஆண் பெண் இருபாலாருக்கும் ஏற்படுகிறதென்பது உலகப் பிரசித்தம். வைராக்கியம் பிறக்கும்போது தீயது என்று தெரிகிறவற்றை அந்த க்ஷணம் முதலே விலக்கிவிடுவதாகச் சங்கல்பமும் செய்துவிடுகிறோம். ஆனால் எல்லோரும் நிறைவேற்றிவிடுகிறோமா?

மஹாத்மாவின் பிரசங்கம் கேட்டுத் தம்மிடமிருந்த தவறை எத்தனையோ பேர் உணர்ந்தனர் விலக்குவதாக உடனே சங்கல்பமும் செய்து கொண்டனர்.கடைசிவரை நிறைவேற்றினர் ஒரு சிலர்தான். சங்கல்பமும் செய்தும் நிறைவேற்ற முடியாதவர்கள் எல்லோரும் தீய வழியில் செல்ல விருப்பமில்லாதவர்கள்தான். இவ்வாறே துன்மார்க்கத்தை விட்டுச் சன்மார்க்கத்தைப்பற்ற மனப்பூர்வமாக விரும்புவோர் பலர் உண்டு.

விரும்பியும் சன்மார்க்கத்தைப் பற்ற முடியாமல், விரும்பாதிருந்தாலும் ஏதோ ஒன்றினால் பலவந்தப்பட்டுத்தப்பட்டது போல் துன்மார்க்கத்திலேயே பிரவேசித்துத் தீச்செயல்களைப் புரியும் அனுபவம் உலக மக்களில், பெரும்பாலோருக்கு புதிதல்ல. அர்ஜுனன் கண்ணணைக் கேட்டது எல்லோரும் பொதுவாக அனுபவத்தால் தமக்குள்ளேயும், அனுபவமும் அறிவும் முதிர்ந்த பெரியோர்களிடமும், கேட்கக்கூடிய வினாவேயாகும். காதல் சம்பந்தமாக இவ்விதம் தோன்றும் சந்தேகங்களை பத்திரிகைகளில் வினாவாக விடுத்து மனோதத்துவ நிபுணர்களிடமிருந்து விடை கோருவது இக்காலத்தில் சகஜமாகிவிட்டது. கண்ணன் கீதையில் என்ன விடையளிக்கிறார் என்று பார்க்கலாம்

காமம் இதுதான்கடுங்கோ பமும்ஆகி
தீமை நடுக்குணத்துச் சேர்ந்துதிக்கும்-ஆம்தெல்லாம்
வாரி உடன்புசிக்கு மாபாவம் ஆம்; இதனை
வைரி எனவே மதி !

(இ-ள்) காமம்தான் இது—ஆசையேதான் இதற்குக் காரணம்; கடும் கோபமும் ஆகி—மிக்க கோபமாகவும் மாறி தீமை நடுக்குணத்துச்

சேர்ந்து உதிக்கும்–தீங்கு தரும் ரஜோகுணத்தை அடுத்து உண்டாகும்; ஆமதெல்லாம் வாரி உடன் புசிக்கும் மாபாவம் ஆம்–அனுபவிக்கலாம். எல்லாவற்றையும் அள்ளி விரைவில் விழுங்கும் பெரும்பாவியும் ஆகும். இதனை வைரி என4வே மதி–இதைவிரோதி என்3றே4 அறிந்து கொள்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகு3ண4 ஸமுத்பவ:
மஹாசநோ மஹாபாப்மா வித்த்யேநம் இஹ வைரிணம்.

(இ–ள்) ஏஷ:– (நீ கேட்ட) இதற்கு (க்காரணம்) ரஜோகுண ஸமுத்பவ;– ரஜோகுணத்தால் உண்டான, காம ஏவ–காமமே. ஏஷ:– இதுதான், க்ரோத:கோபம் (ஆவதும்); மஹா அசந:–மிக்க ஆகாரம் கொள்ளும் மஹா பாப்மா–பெரிய பாவியும் (அது); ஏநம்–இந்த (ஆசையே) இஹ–ஞான விஷயமாகிற இங்கு. வைரிணம்–விரோதியாக, வித்தி–அறி.

விரும்பாவிடினும் ஏவப்பட்டவன் போல் ஒருவன் தீச்செயல் புரிவதற்குக் காரணம் கர்மமே. ஆசை எனப்படுவதும் இதுதான். இது அந்தரங்கமாகத் தூண்டும்போது தனக்குப் புறம்பான ஒன்று தன்னைப் பலவந்தமாகத் தீச்செயலில் புகுத்துவதுபோல எண்ணுகிறான். விஷயத்தில் ஆசைகொண்டு ஒன்றைப் பெறவோ அனுபவிக்கவோ செய்யும் கருமத்திற்குத் தடை ஏற்பட்டால் அக்கருமமே கோபமாக முடிகிறது. ஆசையால் செய்யப்படும் முயற்சிகளில் எவ்வளவு வெற்றிவந்தாலும் விரும்பியதெல்லாம் கிட்டினாலும் திருப்தி ஏற்படாமல் ஆசை அளவில் மேலும் மேலும் பெருகும். ஆகையால் இதையே ஒவ்வொருவரும் பிரதான விரோதியாக அறியவேண்டும்.

ஞானத்திற்குப்பரம சத்துருவான காமமும் அதில் பிறக்கும் கோபமும் நெருப்பை மறைக்கும் புகைபோலவும் கண்ணாடியை மறைக்கும் அழுக்குப்போலவும், கர்ப்பத்தை மறைக்கும் பை போலவும் அறிவை மறைக்கின்றன. எவ்வளவு அனுபவித்தாலும் தீராத ஆசை, இந்திரியங்கள் மனம் புத்தி இவற்றை இடமாகக் கொண்டு ஞானத்தை மறைத்து மனிதனை மோகிக்கச் செய்கின்றன.

ஆசையை அகற்ற முதலில் இந்திரியங்களை அடக்க வேண்டும். அதன்பின் மனத்தை முடிவாகப் புத்தியை என்று படிப்படியாகச் செல்லவேண்டும். இந்திரியங்களை அடக்குவதற்கு உரிய கருமங்களைப் பலனில் ஆசை இல்லாமல் செய்வதே ஏற்ற உபாயம் ஆசையை அடியோடு விடுவதற்கு அது அண்டிவரும் இடங்களின் வலுவையும் நன்றாய் அறிந்து கொள்ளவேண்டும்.

புலன்கள்மே லாம்என்பர் போதம் செறுக்க
வலங்கொள் மனம்அதன்மேல் மன்னும்-புலம்கிளரும்
புந்திஅதின் மேலாகும் புத்திதனில் காமம்தான்
குந்திசிறுவா! பரமாக் கொள்.

(இ-ள்) புலன்கள் மேலாம் என்பர்-இந்திரியங்களை (தேகத்தைக் காட்டிலும்) மேலான வலிமையுடையதாகச் சொல்லுவார்கள். போதம் செறுக்க வலம் கொள் மனம் அதன்மேல் மன்னும்-உணர்வைக்கெடுக்கும் வலிமைகொண்ட மனம் இந்திரியத்திற்கும் மேலாக இருக்கும்; புலம் கிளரும் புந்தி அதின்மேலாகும்-இந்திரியங்களை (அந்தரங்கமாக) தூண்டிவிடும் புத்தி மனத்தைவிட மேலானதாகும். குந்தி சிறுவா-குந்தி புத்திரனே! காமம்தான் பரமாக்கொள்-ஆசையையே (இவை எல்லாவற்றிற்கும்) மேலான வலுவுடையதாகத் தெரிந்துகொள்.

இந்த்ரியாணி[3] பராண்யாஹு: இந்த்ரியேப்ய:[3] பரம் மந:
மநஸஸ்து பரா[334] புத்தி: யோ புத்த்யே[334] பரதஸ்து ஸ:

(இ-ள்) இந்த்ரியாணி-புலன்களை, பராணி-பிரதானமாக, ஆஹு:-சொல்லுகின்றனர். இந்த்ரியேப்ய:-இந்திரியங்களைக் காட்டிலும், மந:- மனதைக், மநஸ:-மனத்தைக் காட்டிலும், புத்தி: -புத்தியை, பரா-மேலானதென்பார்கள்: ய:-எது, புத்யே:அபி-புத்தியைப் பார்க்கிலும், பரதத:மேலானது என்றாலோ, ஸ-அது.

சுலோக முடிவில் ‘அது’ என்னும் பொருளில் வந்த ‘ஸ: என்ற சொல்லைக் கொண்டு இதற்கு வெவ்வேறான உரைகள் செய்திருக்கின்றனர்.

சங்கரர்:- ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றினால் காமத்தை வெல்லலாம் என்பது இச்சுலோகத்தால் சொல்லப்பட்டது.

ராமானுஜர்:- ஞானத்தைப் பெறுவதற்கு முக்கிய விரோதி இந்திரியங்கள். அவற்றைவிட அதிக விரோதி மனம், அதைவிட அதிக விரோதி புத்தி, அதினினும் மேலான வலுவுடைய விரோதி காமம் என்பது இச்சுலோகத்தின் தாத்பரியம்.

ராகவேந்திரர்:- தேகத்தைக் காட்டிலும் இந்திரியங்கள் மேலானவை; இந்திரியங்களுக்கு அபிமான தேவதைகளான சந்திரன் குபேரன், சூரியன் முதலியோரைவிட விஷயாபிமானி தேவதைகளான ஸௌபர்ணி, வாருணி, பார்வதி இவர்கள் சிரேஷ்டமானவர்கள்.

இவர்களைக் காட்டிலும் புத்தி அபிமானி தேவதையான சரஸ்வதி சிரேஷ்டமானவள். இவளைக்காட்டிலும் மகா தத்துவ அபிமானியாகிய பிரும்மாகி சிரேஷ்டர். அவரைவிடப் பிரகிருதி அபிமானி தேவதையாகிய லக்ஷ்மி சிரேஷ்டமானவள். லக்ஷ்மியைவிட ஸகலகுண பரிபூர்ணரான விஷ்ணு சிரேஷ்டமானவர். இவருக்குப் பெரியவர் ஒருவருமில்லை. இவர்தான் அடையத்தகுந்தவர். (இதற்குக் கடோப நிஷத்வாக்யங்களை மேற்கொள்காட்டியிருக்கிறார்)

பலவந்தமாகத் தூண்டுவது போலிருப்பது காமமெனும் ஆசையே; அதை முறைப்படி வெல்வதே பந்த நிவர்த்திபெற ஏற்ற உபாயம் என்று கண்ணன் அர்ஜுனனுக்கு விடையளித்தார்.

34.ஸாரமும் பலனும்

'ஞானத்தை மறைக்கும் மிக வலிமையுடைய பகை காமம் அல்லது ஆசை. தீச்செயலில் ஒருவனைப் பலவந்தமாகப் புகுத்துவதாக உணரப்படும் சக்தி இவ்வாசையேதான், இந்தப் பகையைத்தான் எல்லோரும் சரியான உபாயத்தால் வெல்லவேண்டும்' என்று அர்ஜுனன் வினாவிற்குக் கண்ணன் விடையளித்தார் அல்லவா? அப்பகுதியோடு கர்மயோகம் எனப்படும் கீதை மூன்றாம் அத்யாயம் முடிவடைகிறது.

ஆதியில் ஞானயோகம் கர்மயோகம் என்ற இருவழிகள் முறையே ஞானிகளுக்கும் கர்மிகளுக்குமாகப் பகவானால் சொல்லப்பட்டன.

கருமங்களைச் செய்யாமல் விடுவதால் ஒருவன் பந்த நிவர்த்தி அடைய முடியாது. எல்லோரும் பிரகிருதியின் குணங்களால் கருமம் செய்யப் பலவந்தப்படுத்தப்படுகிறார்கள். அதனால் யாரும் எக்காலத்திலும் நிமிஷம் கூடக் கருமம் செய்யாமலிருப்பதில்லை. எனவே பலாபேக்ஷயின்றிப் பகவதர்ப்பணம் செய்து கருமத்தை விடாமல் செய்பவனே சிறந்தவன்.

அவ்வாறு செய்யாத காமிய கருமங்களே பந்திக்கும் கருமேந்திரியங்களை மாத்திரம் அடக்கி மனதால் விஷயங்களை நினைத்துக்கொண்டிருப்பவன் பொய்யாசாரமுடையவன்.

பரமன் தேவர்களை ஆராதிக்கும் பொருட்டுப் பிரஜைகளுக்கு யஜ்ஞத்தைக் கொடுத்தான். தேவர்களைக் கொண்டு தன் தானியங்கள் விருத்தியாவதற்கான மழையைப் பிரஜைகளுக்குக் கொடுக்கச் செய்தான். பரஸ்பர உதவியால் தேவரையும் மனிதரையும்

க்ஷேமமடையும்படி பரமன் பிணைத்துவிட்டிருக்கிறார். ஆகாரம் கொள்ளுவது பாபச்செயலாகும்.

பிரபஞ்சம் சக்கரம்போல் அமைந்திருக்கிறது. அதை அனுசரியாமல் இந்திரியம் போனவழிச் சென்று ஜீவிப்பவன் தன்னையே கெடுத்துக் கொள்கிறான்.

ஆத்ம ஸ்வரூபத்தில் லயித்த ஞானிக்குக் கர்மம் செய்யவேண்டிய அவசியமில்லை. என்றாலும் ஞானி தன்னைப் பார்த்துப் பிறர் கருமங்களைச் செய்யும் பொருட்டு, உலக நன்மையிலே கருத்துடையவனாய் விடாமல் கருமங்களைச் செய்து கொண்டேயிருப்பான். ஜனகன்முதலிய ஞானிகள் அவ்வாறே செய்தனர்.

ஞானி கருமங்களைத் தான் செய்வதாக நினைத்து அஹங்கரிக்கமாட்டான். பிரகிருதியில் (உடலில்) தோன்றும் குணங்களால கர்மா செய்யப்படுவதை நன்றாக அறிவான்.

மூடர்களைப் போல் கர்மாவைத் தான் செய்வதாக எண்ணி அஹங்கரியாமல் பரமாத்விடம் ஒப்பித்து, பரமாத்மாவின் ஏவற்காரணாய்ப் பரமாத்மாவிடம் ஒப்பிக்கவேண்டியவன் என்ற அறிவோடு பலாபேக்ஷையின்றி மமதையை விட்டுக் கர்மத்தைச் செய்யவேண்டும். அதுவே எல்லோரும் உய்வதற்கு உபாயம்.

இவ்வுபதேசத்தில் விசுவாமுள்ளவர்களும், துவேஷமில்லாத வர்களும் உபதேசத்தை அனுசரிப்பவர்களைப் போலவே பந்த நிவர்த்தி பெறுகிறார்கள். விசுவாசமில்லாதவர்களும் துவேஷிக்கின்றவர்களும் கெடுகிறார்கள்.

எல்லோரும் பூர்வ கர்மசேஷத்திற்குத் தகுந்தபடியே கருமங்களில் பிரவர்த்திக்கிறார்கள். அதனால் பிறர்தர்மத்தை அனுஷ்டிப்பதைவிட, சுயதர்மத்தை அனுஷ்டிப்பதே மேல். பயத்திற்கும் துன்பத்திற்கும் காரணமான பரதர்மத்தைவிட்டுச் சுயதர்மத்தில் ஈடுபட்டு இறப்பதும் கூடச் சிறந்தது.

விரும்பாதவர்களையும் பாபம் செய்யத் தூண்டுவதை ஆசை அல்லது காமம், நெருப்பை மறைக்கும் புகைபோல் ஞானத்தை மறைக்கும் விரோதி, இவ்வாசையே இந்திரியம், மனம், புத்தி இவை எல்லாவற்றையும்விட வலிமை பெற்ற விரோதி ஆசையாகையால் தக்க உபாயத்தால் அச்சத்துருவை விலக்க வேண்டும்.

இவ்வாறு சொல்லப்பட்ட கர்மயோக அத்தியாய ஸாரத்தை இன்னும் சுருக்கமாக்கி மனதில் பதிய வைக்க வேதாந்த தேசிகர் ஒரே பாடலில் தெரிவிக்கிறார்.

***சங்கம் தவிர்ந்து சகஞ்சதிர் பெற்ற தனஞ்சயனே !
பொங்கும் குணங்கள் புணர்ப் பனைத்தும் புக விட்டவற்றுள்
நங்கண் உரைத்த கிரிசை எல்லாம்எனவும் நவின்றார்
எங்கும் அறிவார்களே என்று நாதன் இயம்பினனே.***

(இ-ள்) சகம் சதிர் பெற்ற தனஞ்சயனே!-உலகில் அறியவல்ல அர்ஜுனா! சங்கம் தவிர்ந்து-பலனில் ஆசையைவிட்டு, பொங்கும் குணங்கள் புணர்ப்பு அனைத்தும்-கிளரு முக்குணங்களால் ஏற்படும் எல்லாச் செயல்களையும் அவற்றுள் நம் கண்புகவிட்டு-கர்த்தா தான் என (அஹங்காரம் கொள்ளாமல்) அக்குணங்களிலும் நம்மிடமும் (பகவானிடமும்) விட்டு விட்டு, எங்கும் அறிவார்கள்-ஞானிகள், நவின்றார் உரைத்த கிரிசை எல்லாம் என என்று-சாஸ்திர விதியாகக் கற்றோர் சொன்ன கர்மாக்களைச் செய்கிறார்கள் என்று, நாதன் இயம்பினன்-கண்ணன் (கர்ம யோகத்தில்) கூறினார்.

பலன் கூறும் கதை

கௌசிக வம்சத்தில் பிறந்த ஜடன் என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் ஜனஸ்தானப் பிரவேசத்தில் வாசம் செய்து கொண்டிருந்தான். அவன் ஒழுக்கம் ஜடன் என்ற பெயருக்குப் பொருத்தமாகவே இருந்தது.ஜாதிகுலத்திற்குரிய கல்வியும் ஆசாரமும் அவனிடம் கொஞ்சம் கூட இல்லை. வைச்யருக்குரிய வியாபாரத் தொழிலைச் செய்து ஜீவனம் செய்து வந்தான்.

ஒரு சமயம் வியாபாரத்தில் அவனுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுப் பொருளில்லாமல் தரித்திரம் மிகுந்தது. மேலும் வியாபாரம் செய்யக்கருதி யாகம் செய்த பெரியோர்களின் பொருளைக் கொள்ளையிட்டான். அப்பொருளைக்கொண்டு தூரதேசம் சென்று வியாபாரம் செய்தான். பொருள் பெருகிற்று. தன் மனைவி மக்களை மகிழ்விப்பதற்காகச் சம்பாதித்த பொருளுடன் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினான்.

வழிநடந்து வரும்போது சூரியன் அஸ்தமித்தான். பகலிலும் இருண்டிருக்கும் பயங்கரமான காட்டைக் கடக்கவேண்டி இருந்தது. அதில் வேதியன் அச்சமில்லாமல் சென்று கொண்டிருந்தபொழுது ஓர் கொள்ளைக்கூட்டத்தினர் அவனைத்தாக்கினர். ஈவு இரக்கமில்லாமல் வேதியனை ஹிம்ஸித்துக் கொன்று அவனிடமிருந்த பொருளைக் கவர்ந்து சென்றனர். வேதியனுக்குக் கொள்ளையால வந்தபொருள் கொள்ளையினாலே பறிபோயிற்று.

ஜடன் தனக்கு ஏற்பட்ட துர்மரணத்தால் பயங்கரமான ஓர்பேயானான். தாங்க முடியாத பசியும் தாகமும் அவனை வாட்ட ஆரம்பித்தன. அதனால் ஓரிடத்தில் நிலைத்து நிற்க முடியாமல் பல்வேறிடங்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.

ஜடனுக்கு, சன்மார்க்கத்தில் பற்றுடைய நற்புத்திரன் ஒருவன் இருந்தான். வியாபார நிமித்தம் போய் நீண்ட காலம் திரும்பிவராத தன் தந்தையை ஒவ்வொரு காடாகத் தேடிக்கொண்டு சென்றான். வனவாஸி ஒருவன் சொன்னதைக் கேட்டுத் தன் தந்தை, கள்வரால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கவேண்டும் என ஊகித்தான்.

தன் தந்தையை நற்கதிக்குச் சேர்க்க எண்ணி, காசிக்குச்சென்று ஈமக்கடன் செய்யத் தீர்மானித்தான். காசிக்குப் பிரயாணமாகும்பொழுது ஒரு நாள் ஒரு மரத்தடியே தங்க நேர்ந்தது. நித்திய கருமானுஷ்டங்களைச் செய்தபின் வழக்கப்படி அங்கேயே கீதை மூன்றாம் அத்யாயத்தைப் பாராயாணம் செய்தான்.

அவன் தந்தை கொல்லப்பட்ட இடம் அம்மரத்தடிதான். அங்கு துர்மரணத்தால் பேயுடல் கொண்டு அலைந்த ஜடன் காதில் பாராயண சப்தம் விழுந்தது. அவனுக்கிருந்த பேய்சரீரம் அகன்றது, திவ்ய சரீரமும் அமர விமானமும் ஜடனுக்குக் கிடைத்தன. பாராயணம் செய்த தன் புத்திரனைப்பார்த்து "மகனே! நீ காசி செல்ல வேண்டாம். எனக்கு நற்கதி அளிக்க உத்தேசித்த காரியம் நீ செய்த கீதா பாராயணத்தினாலே ஸித்தித்து விட்டது" என்று சொன்னான்.

ஜடனைப் பார்த்து அவன் புத்திரன், தான்மேலும் செய்யவேண்டியது ஏதேனும் உண்டோ என்று கேட்டதற்கு 'எனது மூதாதையர்கள் தாம்செய்த பாபத்தால் நரகத்தில் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அவர்களையும் மூன்றாவது அத்தியாயம் கீதா பாராயணம் செய்து வைகுண்டத்திற்கு அனுப்பு' என்று சொல்லி விட்டு ஜடன் விமானத்தின் மூலம் வைகுண்டம் சென்றான்.

ஜடனின் புத்திரன் தன்ஊர் திரும்பிவந்து தந்தை சொன்னபடியே 'தேவாலயத்தில் அமர்ந்து கர்மயோகத்யாத்தைப் பாராயணம் செய்தான். பாராயண பலத்தைத் தன் பித்ருக்களுக்குத் தானம் செய்தான்.

பலன் தானம் செய்யப்பட்டதும் விஷ்ணு தூதர் யமனிடம் சென்றனர். ஜடனது பித்ருக்களை வைகுண்டத்திற்கு அனுப்பிவிட உத்தரவைத் தெரிவித்தனர். திவ்ய தேகம் பெற்ற ஜடனது பித்ருக்களை மரியாதையாக அழைத்துப்போய் விஷ்ணுவிடம் உடனே சேர்ப்பித்து

யமதர்மராஜன் தன்னிருப்பிடம் சென்றான். (இக்கதை பாத்ம புராணத்திலுள்ளது).

35. யோக சரித்திரம்

கடந்த இரண்டு மூன்றாம் அத்யாயங்களில் கண்ணன் கர்மத்திலும் ஞானத்திலும் அடங்கியிருக்கின்ற யோக தத்துவத்தை எடுத்து விளக்கினார். ஞான விபாகயோகம், ஞானகர்ம ஸந்யாஸ யோகம், ஞானயோகம் என்று பலவிதமாகச் சொல்லப்படுகின்ற இந்நாலாம் அத்யாய ஆரம்பத்தில் யோகம் தோன்றி வளர்ந்து பரவிய வரலாற்றை அர்ஜுனனுக்குச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறார்.

ரஸாயனம், பௌதிகம், வேதாந்தம், தர்க்கம் முதலிய ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் சரித்திர வரலாறு உண்டல்லவா? அதுபோல் யோக சாஸ்திரத்திற்கும் உரிய சரித்திர வரலாறு கண்ணனால் மூன்று சுலோகங்களில் சொல்லப்படுகிறது.

இந்த யோகத்தை இரவிக்கு யான்உரைத்தேன்
வந்த அவன்மனுவுக் காங்குஉரைத்தான்-மைந்தனாம்
இக்குவாகுக்கு அவனும் ஏன்றுரைத்தான் இப்படியால்
தக்கு வாய்ந்து உற்றதுதான்.

(இ-ள்) யான்-நான், இந்த யோகத்தை-இந்த யோகத்தை, இரவிக்கு உரைத்தேன்-சூரியனுக்குச் சொன்னேன், அவன்-சூரியன், வந்தமனுவுக்கு உரைத்தான்-(அக்குலத்தே) உதித்த மனுவிற்கு உபதேசித்தான். அவனும்-அம்மனுவும், மைந்தனாம் இக்கு வாக்கு-புத்திரனாகிற இக்ஷ்வாகுவிற்கு, என்று உரைத்தான்-விரும்பி உபதேசித்தான். இப்படியால்-இந்த விதமாக, தக்கு வாய்ந்து உற்றது-(உலகில்) தகுதியாக வந்து சேர்ந்தது.

இமம் விவஸ்தே யோகம் ப்ரோக்தவாந் அஹம் அவ்யயம்
விவஸ்நாத் மநவே ப்ராஹ மநு:- இக்ஷ்வாகவே அப்ரவீத்.

(இ-ள்) அஹம்-நான், அவ்வயம்-நாசமில்லாத (பலனைக் கொடுத்தற்கேதுவான) இமம் யோகம்-இந்த யோகத்தை, விவஸ்தே-சூரியனுக்கு, ப்ரோக்த வாந்-உபதேசித்தேன். விவஸ்வாந்-சூரியன். மநவே-மனுவுக்கு, ப்ராஹ-உபதேசித்தார், மநு:-மனுவானவர். இக்ஷ்வாகவே-இக்ஷுவாகுவுக்கு, அப்ரவீத்-உபதேசித்தார்.

யோகம் உலகில் பரவியதற்கு முந்திய ஞான பரம்பரை இச்சுலோகத்தில் சொல்லப்படுகிறது. பகவான், பகவானிடமிருந்து சூர்யன், அவனிடமிருந்து மனு, மனுவிடமிருந்துட பூலோகத்தில் பரிபாலனம் பண்ணிய இக்ஷ்வாகு என்ற அரசனுக்கு உபதேசம் கிடைத்து உலகிலே வந்து சேர்ந்தது இந்த யோகம்.

சுலோகத்தில் வரும் இமம்யோகம் என்ற தொடர் தமிழ்ப்பாடலில் உள்ளபடியே 'இந்த யோகத்தை' என்று மொழி பெயர்க்கப்பட்டது. உரையாசிரியர்களில் சிலர், முந்திய மூன்றாம் அத்தியாத்தில் கூறிய கர்ம யோகத்தையே கண்ணன் இங்கு குறிப்பதாகப் பொருள் செய்திருக்கின்றனர். சிலர் நாலாம் அத்யாயத்தில் சொல்லப்பபோகும் ஞானயோகத்தையே கண்ணன் குறிப்பதாக உரைசெய்துள்ளனர்.

மதுசூதனன் சரஸ்வதியும் ராகவேந்திரரும் 'இந்தக் கரும யோகத்தை என்றே உரை செய்திருக்கின்றனர். ராமாநுஜர் கருத்தும் இதுவே என்பது அவர் இச்சுலோகத்திற்கு மொத்தமாக எழுதிய தாத்பரியத்தினால் நன்கு தெரியவரும்.

ராமாநுஜர்–உன்னைப்போர் புரியச் செய்யும் பொருட்டு இந்தக் கருமயோகத்தை உனக்கு நான் உபதேசித்தாக நினைக்காதே. மனவந்தரத்திற்கு முன்பே சூரியனுக்குக் கூறியிருக்கிறேன் (என்பது தாத்பரியம்)

ஆதியில் சூரியனுக்கு உபதேசித்த யோக சாஸ்திரம் இக்ஷ்வாகுவிற்கு வந்து ஒரே குலத்திற்குரிய தனமாய் நின்றுவிடவில்லை. பலரிடையே பரவியது.

இன்னே பரம்பரையால் ஏய்ந்ததனை ஈங்கறிவர்
முன்னே அரைச முனிவர்கள்-பின்னேபோய்க்
காலத்தி னான்மறைந்து கைகழிந்து விட்டதே
ஞாலத்தில் யோக நலம்.

(இ–ள்) இன்னே–இவ்வாறு, பரம்பரையால் ஏய்ந்ததனை–இப்பரம்பரையாகப் பொருந்தி வந்த யோகத்தை, ஈங்கு–இவ்வுலகில், முன்னே–முன் காலத்தில், அரைச முனிவர்கள்–ராஜரிஷிகள், அறிவர்–அறிந்தார்கள் பின்னேபோய்–பிறகு மேலும் பரவி, காலத்தினால்–நெடுங்காலமாய்விட்ட காரணத்தால், ஞாலத்தில்–பூலோகத்தில் யோகநலம்–யோக சாஸ்திரத்தின் பயன், மறைந்து கைகழிந்து விட்டது–(கொஞ்ச கொஞ்சமாக) மறைந்து இல்லாமல் போய்விட்டது.

ஏவம் பரம்பராப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது:

ஸ காலே நேஹ மஹதா யோகா நஷ்ட:பரந்தப

(இ—ள்) பரம்தப—பகைவரை வெல்வோய்! ஏவம்—இம்மாதிரி, பரம்பரா ப்ராப்தம்—பரம்பரையாய் வந்த, இமம்—இந்த யோகத்தை, ராஜர்ஷய:—ராஜரிஷிகள், விது:—அறிந்தார்கள், ஸ: யோக:—அத்தகைய யோக சாஸ்திரம், இஹ—இவ்வுலகத்தில், மஹதாகாலேந—நீண்ட காலத்தின் காரணத்தால், நஷ்ட:—இல்லாமல் போயிற்று.

சுலோகத்தில் வரும் 'ராஜர்ஷய:' என்ற தொடர்பாடலில் அரச முனிவர்கள் என்று உள்ளபடியே கொள்ளப்பட்டது. ராகவேந்திர சுவாமிகள் இதற்கு இரண்டுவிதமாகப் பொருள் கொண்டார் (1) ராஜாக்களும் ரிஷிகளும் (2) ராஜரிஷிகள்.

எதுவும் வளர்வதற்கும் தேய்வதற்கும், மறைவதற்கும் அழிவதற்கும் காரணமாய் இருப்பது காலமே, படைத்தல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களுமே காலத்தின் துணையின்றி நடைபெறமாட்டா. நெடுங் காலத்திற்குமுன்பே பகவானால் உபதேசித்து உலகில் பரப்பப்பட்ட யோகம் பிறகு இல்லாது மறைந்துவிட்டால் அதற்குக் காலத்தையன்றி வேறெதைத் தக்க காரணமாகச் சொல்ல முடியும்?

காலத்தால் மறைந்த யோகத்தை மறுபடிப் பகவான் அர்ஜுனனுக்கு ஏன் உபதேசிக்கவேண்டும்? என்று அடுத்து வரும் சுலோகத்தில் காரணம் தெரிவிக்கிறார்.

போதமிகும் இந்தப் புராதனமாம் யோகத்தை
ஏதம் அறஉனக்கிங்கு யானுரைத்தேன்-காதவமர்
பத்தனுமாய்த் தோழனுமாய்ப் பண்பால் மறைப்பொருளாம்
உத்தமம் ஈதென்றோர்ந்து உகந்து

(இ—ள்) காதல் அமர் பத்தனுமாய் —அன்பு பொருந்திய பக்தனாயும், தோழனுமாய்—நண்பனுமாய் (நீ எனக்கு) இருக்கிற பண்பால்—தன்மையால் ஈது—இது, மறைப்பொருளாம் உத்தமும் என்று,—ரஹஸ்யமும் உத்தமும் என்று, ஓர்ந்து உகந்து—ஆராய்ந்து மகிழ்ந்து போதம் மிகும் இந்தப் புராதனமாம் யோகத்தை—அறிவு பெருகும். இந்தப் பழமையான யோகத்தை ஏதம்அற—குறை நீங்க, உனக்கு இங்கு யான் உரைத்தேன்—உனக்கு இப்பொழுது நான் சொன்னேன்.

ஸ ஏவாயம் மயாதேத்ய யோக: ப்ரோக்த: புராதந:

பகதோஸி மே ஸகாசேதி ரஹஸ்யம் ஹ்யேதத் உத்தமம்.

(இ–ள்) ஸ:–அப்படிப்பட்ட, புராதன:–பழமையான, அயம் யோக: ஏவ–இந்த யோகமே, மே பக்த:–எனக்குப் பக்தனுமாய் ஸகாச–தோழனுமாய், அஸிஇதி–இருக்கிறாய் என்று, தே அத்ய–உனக்கு இப்பொழுது மயா பரோக்த:–என்னால் உபதேசிக்கப்பட்டது, ஏதத்–இது, உத்தமம் ரஹஸ்யம் ஹி–உத்தமும் ரஹஸ்யமுமன்றோ?

'கர்மத்தைச் செய்யாமல் விட்டு ஞானமார்க்கத்தைப் பயில்வதில், மனம் அடங்காது. தீயதில் பிரவேசித்தால் ஞானமும் ஸித்திக்காமல், செய்யாதுவிட்ட பாபமே வந்து சேரும். நிஷ்காம்ய கர்மயோகத்தில் அந்த ஆபத்திற்கு இடமில்லை. இடையே விட்டாலும் செய்தவரைப் பலன் அளிக்கவல்லது' என்று இரண்டாம் அத்தியாயத்தில் ஏற்கனவே கூறியதைக்கொண்டு இந்த யோகம் உத்தமம் எனச் சொல்லப்படுகிறது.

பந்தத்திற்குக் காரணமாகின்ற கர்மத்தைப் பலாபேக்ஷையில்லாமல் செய்து பந்த நிவர்த்திக்கு (முக்திக்கு)ச் சாதனமாக்குவது யோகம் என்றும் கருமங்களில் சாமர்த்தியம் என்றும் இரண்டாம் அத்தியாத்தில் சொல்லப்பட்டது. அதுவே இங்கு 'ரஹஸ்யம்' என்று குறிக்கப்படுகிறது பாடலில் 'மறைபொருள்' என்று கொள்ளப்பட்டது.

சிரேஷ்டமான ரஹஸ்யமான ஒன்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தகுதியும் காரணமும் வேண்டுமல்லவா? அதைக் காட்டவே கண்ணன் அர்ஜுனனுக்குத் தன்னிடமிருந்த பக்தியைத் தகுதியாகவும் சிநேகத்தைக் காரணமாகவும் காட்டினார்.

யோகவரலாற்றை இவ்விதம் சுருக்கமாக எடுத்துச் சொன்ன கண்ணன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த அர்ஜுனனுக்கு அதில் நம்பிக்கை உண்டாகவில்லை தன்னோடு சம காலத்திலேயே பிறந்து தனக்கு மைத்துன உறவினனாக வளர்ந்த கண்ணன் 'நெடுங்காலத்திற்கு முன்பே யோக சாஸ்திரத்தைச் சூரியனுக்கு உபதேசித்தேன்' என்று சொன்னால் அர்ஜுனனால் எப்படி நம்பமுடியும்? சந்தேகித்து மறுபடி கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

36. அவதாரம் பிறப்பல்ல

'பூர்வத்தில் யோகத்தைச் சூரியனுக்கு உபதேசித்தேன்' என்று கண்ணன் கூறியதைக்கேட்ட அர்ஜுனன் ஆலோசனைக்குள்ளானான். "நம்மோடு சமகாலத்தில் பிறந்த கண்ணன் மன்வந்தரத்தில் சூரியனுக்கு

எப்படி உபதேசித்திருக்க முடியும்?" என்று சந்தேகித்துக் கேள்வி கேட்கிறான்.

ஆங்கு விசயன்தான் 'ஆதித்தன் முன்பிறந்தான்
ஈங்குநீ பின் பிறந்தாய் எங்ஙனநான்-பாங்கினின்
முன்உரைசெய் வண்ணமிது முற்றுணர்வன் ?
தன்உரை செய்தான் பரமன்தான்.

(இ-ள்) ஆங்கு விசயன்தான்-அப்பொழுது அர்ஜுனன், ஆதித்தன் முன் பிறந்தான்-சூரியன் முன்னமே தோன்றினான், நீ இங்கு பின் பிறந்தாய்-நீயோ (சூரியனுக்குப்) பிறகு இவ்வுலகில் தோன்றினாய், பாங்கினின் முன் உரை செய் வண்ணம் இது-ஆதியிலே (யோகத்தை) நன்றாக உபதேசித்த இந்த வரலாற்றை எங்ஙனம் நான் முற்று உணர்வான்?-எங்ஙனம் நான் நன்கு தெரிந்து கொள்வது? என்று உரைக்க-என்று கேட்க, பரமன்தான்-பரமாத்வாகிய கண்ணன் தன் உரை செய்தான்-தனது பதிலைத் தெரிவித்தான்.

அபரம் [4]பவதோ ஜந்ம பரம் ஜந்ம [3]விவஸ்வத:
[2]கதம் ஏதத் விஜாநீயாம் த்வம் ஆதௌ ப்ரோக்தவாநிதி

(இ-ள்) பவத; ஜந்ம-உம்முடைய பிறப்பு. அபரம்-பிற்பட்டது. விவஸ்வத: ஜந்மது-சூரியனுடைய பிறப்போ, பரம்-முற்பட்டது; த்வம்-நீர் ஆதௌ-ஆதியில். ப்ரோக்தவாந் இதி-உபதேசித்தீர் என்ற ஏதத்-இந்த வரலாற்றை கதம்-எப்படி, விஜாநீயாம்-அறிவேன்?

கீதோபதேசம் கேட்ட அர்ஜுனைப்பற்றிப் பலவிதமான அபிப்ராயங்கள் இருந்துவருகின்றன. தத்துவ உணர்வு இல்லாதிருந்ததால் அர்ஜுனனுக்குப் போரில் தன்னை எதிர்த்து நின்ற உறவினர்களையும் ஆசார்யாகளையும் கண்டபோது மனத்தில் அடங்காத சோகம் பிறந்தது. அதனால் தனது கடமையாகிற போரைக் கைவிட்டுப் பரதர்மமாகிற துறவறத்தை மேற்கொள்வதே மேல் என்ற மோகம் தோன்றியது. தான் கொண்ட முடிவு சரிதானா? என்று தனக்குச் சாரதியாகவிருந்த கண்ணனைக் கேட்டபொழுது தத்துவம் உபதேசிக்கப்பட்டது. மைத்துனைரையும் தோழனாய் மனித ரூபத்தில் இருந்த சாரதி எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமான பரம்பொருளே என்பதும் பிரத்தியக்ஷமாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு கீதோபதேசமும், விச்வ ரூபதரிசனமும் பெற்ற அர்ஜுனன் அஞ்ஞானம் நீங்கித் தெளிவுபெற்று உய்ந்தான் என்பது ஒரு சாரார் அபிப்ராயம்.

உபதேசம் அர்ஜுனனுக்குப் பயன்படவில்லை. அதனால் அவனுக்கு அனுபவசாத்யமான உண்மை ஞானம் தோன்றவில்லை. தோன்றாத காரணத்தால், கீதோபதேசத்திற்குப்பின் நிகழ்ந்த தன் மைந்தன் தான் அபிமன்யுவின் மரணம் குறித்துப் பெரிதும் வருந்தினான். போர் செய்யப் பின்வாங்கிய அர்ஜுனனைத் தூண்டிப் போர் செய்யவைத்ததே உபதேசம் செய்த கண்ணன் அடைந்த பலன் ஆகும் என்பது மற்றொரு சாரார் அபிப்பிராயம்.

'கீதையில் வரும் ஆத்மதத்துவ பாகமும், யோக பரமான விஷயங்களும் அர்ஜுனனுக்குப் பயன்படமாட்டா என்பது கண்ணனுக்கு நன்கு தெரியும். தெரிந்தபோதிலும் உலகினர்க்குப் பயன்படவேண்டுமென்ற நோக்கத்துடனே அர்ஜுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு கண்ணன் உபநிஷத்ஸாரமான கருத்துக்களை கீதாரூபமாக வெளியிட்டார் என்று பின்னும் ஒரு சாரார் அபிப்பிராயப்படுகின்றனர்.

இவையன்றி ஒரு சாரார் 'அர்ஜுனன் தத்துவ ஞானம் ஏற்கனவே பெற்றிருந்தான். கண்ணனைப் பரமாத்மா என்றும் அறிந்திருந்தான். உலகினர் உய்யும்பொருட்டுக் கீதா சாஸ்திரத்தைக் கண்ணன் வாயிலாக வருவிருக்கும் பொருட்டே உறவினர்களைக் கண்டு சோகித்தவன்போலவும், கண்ணனைப் பரப்ரும்மம் என்று அறியாதவன் போலவும் பல கேள்விகளைக் கேட்டான்' என்று கூறுவர்.

இச்சுலோக உரையில் அர்ஜுனன் 'சூரியனுக்குப் பின்னே பிறந்த தாங்கள் சூரியனுக்கு உபதேசித்தாகச் சொல்வதை நான் எப்படி நம்புவது?' என்று கண்ணனைக் கேட்கும் கேள்விக்கு சங்கரர் கூறுவதும் உற்று நோக்கத்தக்கது.

(சங்)– அர்ஜுனன் கண்ணபிரானைப் பரப்பிரும்மம் என்று அறிந்திருந்தான். அறிந்திருந்தும் அவரைப் பரப்ரும்மம் என்று எல்லோரையும் அறியச் செய்வதற்காக இவ்விதம் வினாவினான்.

அடுத்து வரும் சுலோகங்களில் கண்ணன் அர்ஜுனன் கேள்விக்கு விடை அளிக்கிறார்.

என் பிறவி யானது இயம்பில் பலவாகும்
உன்பிறவி யானவையும் ஒக்கும் அவை - தன்படியை
யான்அறிவன் எல்லாம் இகல் விசயா ! இங்கு நீ
தான்அறியாய் அத்தகைமை தான்.

(இ–ள்) இகல் விசயா!– வலிமையுடைய அர்ஜுனா! என் பிறவி ஆனது இயம்பில்–என்னுடைய பிறவி சொல்லப் புகுந்தால் பலவாயிருக்கும், உன் பிறவி ஆனவையும் ஒக்கும்–உனது ஜந்மமும் அவ்வாறே (என்னதை) ஒத்துப் பலவாகும்!. அவை தன் படியை எல்லாம் யான் அறிவேன்–(ஏற்கனவே வந்த மேலும் வரப்போகும்) அப்பிறப்புகளின் தன்மைகள் முழுமையும் நான் அறிவேன்: அத்தகைமைதான் இங்கு நீ அறியாய்–அந்த (பிறப்புகளின்) தன்மையைப்பற்றி இப்பொழுது நீ அறிந்துகொள்ள முடியாதவனாயிருக்கிறாய் (தான்–அவன்)

ப[3]ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந
தாந்ய[3]ஹம் வேதஸ:வாணி த்வம் வேத்த பரந்[2]தப.

(இ–ள்) அர்ஜுந–அர்ஜுன! த்வா–உன்னைப் போல், மே– எனக்கும் ப்ஹூநி ஜந்மாநி–பல பிறவிகள் வ்யதீதாநி–கழிந்தன, பரம்தா–பார்த்தா! தாநிஸர்வாணி–அந்த ஜந்மங்கள் எல்லாவற்றையும், அஹம்வேத–நான் அறிவேன் த்வம்–நீ, ந வேத்த–அறியமாட்டாய்.

இச்சுலோகத்தால் பரமாத்மாவாகிய கடவுளுக்கும் ஜீவாத்மாகிய அர்ஜுனனைப்போல் பல பிறவிகள் உண்டென்பது சொல்லப்பட்டது. இதை ஜீவனுக்கும் கடவுளுக்கும் உள்ள ஒற்றுமை அல்லது ஸாம்யம் என்று சொல்லலாம். பல பிறவிகளுள்ள ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் வேற்றுமை உண்டென்பதும் இச்சுலோகத்தலேயே தெரிகிறது. தனக்குச் சென்று போன பிறப்புக்களைப் பற்றியும் வரப்போகும் பிறவிகளைப் பற்றியும் ஈச்வரனுக்குத் தெளிவான ஞானம் உண்டு. அர்ஜுனனைப்போல் பந்தத்தில் அகப்பட்ட ஜீவனுக்கு அவ்வித ஞானம் கிடையாது.

அர்ஜுனன் கேட்ட கேள்விக்குக் கண்ணன் தனக்குத் தெரிந்த பலஜந்மங்களைத் தான் ஏற்கனவே எடுத்ததாக மட்டும் பதில் கூறியிருந்தால் போதும். அவ்வாறு மட்டும் சொல்லாமல் அர்ஜுனனைப் போலத் தனக்கும் பல ஜன்மங்கள் கழிந்தன!. அவை தனக்குத் தெரியும். அர்ஜுனனுக்குத் தெரியாது என்றதனால் இப்பகுதியில் உய்த்துணர வேண்டிய பொருள் உண்டென்று துவைதசித்தாந்த உரையாசிரியராகிய ராகவேந்திரர் பின்வருமாறு கூறுகிறார்.

ராக:– அர்ஜுனன் வினவியதற்கேற்ப்ப் பகவான் தன் ஜன்மத்தைக் குறித்து மாத்திரம் விடை அருளியிருக்கவேண்டும். அவ்வாறு அருளாமல் அர்ஜுனன் ஜன்மத்தையும் சொல்லி "நான் அறிவேன்! நீ

அறிய மாட்டாய்" என்று அருளினார். இதன் நோக்கம் யாதென்றால் பரப்பிரும்மமாகிய நான் எல்லாவற்றையும் அறிவேன். "ஜீவனாகிய நீ அறியமாட்டாய்" என்றும் 'ஜீவன் வேறு. பரப்பிரும்மம் வேறு' என்றும் எல்லோருக்கும் எடுத்துக்காட்டுவதே

'நான் அறிவேன்' என்று கண்ணன் கூறியதற்குச் சங்கரர் கூறும் உரை:-தான் நித்திய, சுத்த, புத்த, முக்தத் தன்மை வாய்ந்தவனனாகையால்'எனது ஞானம் எதனாலும் எப்பொழுதும் மறைக்கப்படமாட்டாது. ஆகையால் 'நான் அறிவேன்'என்று அருளினான்.

ஜீவனைப் போல் பிறருக்கும் தனக்கும், ஜீவனுக்கும் உள்ள மற்றோர் வேற்றுமையைக் கண்ணன் மேலும் தெரிவிக்கிறார்.

மேவு பிறப்பு இல்லனுமாய் மெய்த்தன்மை குன்றனாய்
மூவுலகுக்கு எண்ணு முறை இறையாம்-தேவுடனே
என்னுடையா மூர்த்தியினை எய்தியே என்நினைவு
தன் இயல்வாலே பிறப்பன் சார்ந்து

(இ-ள்) மேவு பிறப்பு இல்லனுமாய்-பொருந்திய பிறப்பற்றவனாயும், மெய்த்தன்மை குன்றனாய்-ஸ்வரூப நாசமில்லாதவனாயும், மூஉலகுக்கு எண்ணுமுறை இறையாம்-மூன்றுலகிலுள்ள உயிர்கள் யாவும் நினைக்கின்ற முறையான ஈச்வரனாயும் (இருக்கின்ற) தேவுடனே-தெய்வத் தன்மையுடனே என்னுடைய மூர்த்தியினை எய்தியே-எனது சொந்தமான பிரகிருதியை பெற்றே (ஸ்வீகரித்தே)என் நினைவு தன் இயல்வாலே எனது சங்கல்பத்தாலேயே, சார்ந்து பிறப்பன்-இச்சித்து (நான்) அவதரிப்பேன்.

4

அஜோயிஸந் நவ்ய யாத்மா பூதாநாம் ஈச்வரோபிஸந்

4 2 4

ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா

(இ-ள்) அஜ: பிறப்பில்லாமல், அவ்யய ஆத்மாஸந்-நசிக்காத ஸ்வரூபடையனாயினும் பூதாநாம்-உயிர்களுக்கு, ஈச்வர:ஸந் அபி-ஈசனாயினும் ஸ்வாம்பரக்ருதிம்-சொந்தமான பிரகிருதியை, அதிஷ்டாய-அதிஷ்டித்து (அடைந்து) ஆத்ம மாயயா என்னுடைய ஸங்கல்பத்தால் ஸம்பவாமி-நான் அவதரிக்கிறேன்.

ஜீவன் தான் செய்த கர்மவசத்தால் பலவந்தமாகப் பிறப்பிக்கப்படுகிறான். அவ்வாறின்றிப் பரமாத்மா, தன் சங்கல்பத்தால் தன் இச்சையாலேயே ஸ்வதந்திரனாய் முக்குணங்களுக்கிடமாகாத தன்

பிரகிருதியைப் பெற்றே தன் ஸ்வரூபத்திற்குப் பாதகம் ஏற்படாமலே தானே பிறக்கிறார். அதனால் பரமாத்மாவின் தோற்றத்தை ஜீவனுக்குச் சொல்வது போலப் பிறப்பெனக்கூடாது அவதாரம் என்றே விவகரிக்க வேண்டும் என்பது குறிப்பு.

37. அவதார தத்துவம்

பகவானும் ஜீவனைப் போலவே அடிக்கடி பல்வேறு அவயவங்களுடைய உடலுடன் தோன்றுகிறார்; மறைகிறார். அவ்வாறு தான் தோன்றியதும் மேலும் தோன்றப்போவதும் பகவானுக்கு நன்கு தெரியும். ஜீவனுக்கோ முன்னே எப்பொழுது தோன்றினோம்? தோன்றிய காலங்களில் என்னென்ன செய்தோம்? மேலும் எப்பொழுது தோன்றி என்னென்ன செய்யப்போகிறோம்? என்பதுபற்றிய ஞானம் பந்தத்தில் இருக்கும்போது ஒரு சிறிதும்கூட கிடையாது. பந்த நிவர்த்தியடையாமல் தான் செய்த கருமம் காரணமாக அடிக்கடி பிறக்கும் ஜீவனுக்கு ஞானம் மறைக்கப்படுகிறது. பகவானின் ஞானமோ பிறவியின் காரணமாக மறைக்கப்படுவதில்லை. ஆகையால் பகவான் ஜீவன் ஆகிய இருவருக்கும் உடலுடன் உண்டாகும் தோற்றத்தைப் பிறப்பு என்ற ஒரே சொல்லால் குறிப்பிடுவது பொருத்தமில்லை: சரியுமில்லை. பகவான் உடலுடன் தோன்றி ஜீவனைப்போல் பலர் காண வாழ்ந்து மறைவதை அவதாரம் என்ற சொல்லால் விவகரிப்பதே சரி என்று கொள்ளுமாறு கண்ணன் ஏற்கனவே தெரிவித்தார் அல்லவா? அந்த அவதார தத்துவத்தை மேலும் மூன்று சுலோகங்களால் நன்கு விளக்குகிறார்.

அறம்தளரும் அக்காலம் எக்காலம் ஆங்கே
மறம்கிளர்ந்து பாவம் வளரும்-பிறங்கரசர்
வெந்நைத் தருவிக்கும் வில்விசயா! அக்காலத்து
என்னைப் பிறப்பிப்பன் யான்.

(இ-ள்) பிறங்கு அரசர் வெந்நை தருவிக்கும்-புகழ்பெற்ற பகையரசர் முதுகு காட்டி ஓடும்படிச் செய்யும் வில் விசயா-வில் ஏந்திய அர்ஜுனனே, அறம் தளரும் எக்காலம்-தருமத்திற்கு வாட்டம் எப்பொழுது உண்டாகும், அக்காலம் மறம் கிளர்ந்து பாவம் வளரும்-அப்பொழுது அதர்மத்திற்குக் கிளர்ச்சி உண்டாகிப் பாவம் அதிகரிக்கும், அக்காலத்து-அப்பொழுது யான் என்னைப் பிறப்பிப்பன்-நானே என்னைப் பிறப்பித்துக்கொள்கிறேன்.

3 3 4 3 4 4
யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத
4 2 4 3
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்

(இ—ள்) பாரத!—அர்ஜுனா, தர்மஸ்ய—தருமத்திற்கு யதா—எப்பொழுது, க்லாநி பவதி—வாட்டம் உண்டாகிறதோ, 'அதர்மஸ்ய—அதர்மத்திற்கு யதா—எப்பொழுது, அப்யுத்தர்நம் (பவதி) – கிளர்ச்சி உண்டாகின்றதோ, ததா—அப்பொழுது ஆத்மாநம்—என்னை அஹம்—நான் ஸ்ருஜாமி—அவதரிப்பிக்கிறேன்.

இருள் மிகுந்தால் ஒளி குறைவது போல் அதர்மம் பெருகினால் தர்மம் குறையும். இரண்டும் ஒரே காலமாதலால் 'அக்காலம்' எனப்பட்டது. பகவானின் அவதாரம் நிகழும் காலம் அதுவேயானாலும் அக்காலம் அவதாரத்திற்குக் காரணமாகமாட்டாது எனபதைக் காட்டச் சுலோகத்தில் சொல்லியபடியே பாடலிலும் 'என்னைப் பிறப்பிப்பன் என்றுமட்டும் சொல்லாமல்' என்னை யான் பிறப்பிப்பன்' என்று வியந்து கூறியது அறிவுடையோரும் ரஸிகரும் பாராட்டத்தக்கது.

'அஹம்' என்ற சொலலுக்குத் தமிழில் வந்த யான் என்பதைப்பொருள் என்று மாத்திரம் கொண்டால் போதாது. பொருள் மாத்திரமானார்'நான்' என்றே வரும் யான் என்பது ஒரு சொல். வியாக்கியானம் போல் சுலோகத்தின் சாரப்பொருளை மிக அதிக வேகத்துடன் எடுத்துரைக்கும் பண்பு சற்று சிந்தித்தால் நன்கு விளங்கும்.

ஜீவன் அடிக்கடி பிறப்பிக்கப்படுகிறது. அவ்வாறு பிறப்பதற்கு ஜீவன் செய்த கர்மமே காரணமாகிறது. கர்ம மடியாக ஜீவனைப் பிறக்கச் செய்கின்றவரும் பகவானே ஜீவனின் பிறப்பிற்குக் காரணமாகிற கர்மம் பகவானின் பிறப்பிற்குக் காரணமாகாது. பகவான் தானே விரும்பினாலன்றிப் பிரும்மாதிதேவர் யாராலும் அவரைப் பிறக்கச் செய்ய முடியாது என்பது தோன்ற புறக்காரணங்களை விலக்கிக் காட்டும் சக்தி யான் என்பதில் அடங்கியுள்ளது.

பகவானின் அவதாரத்தை சொல்லுமிடங்களில் கம்பர் 'தன்னைப் படைத்ததுவும் தானே' என்றும், திருமங்கை மன்னன் 'தன்னாலே தன்னுருவம் பயந்து'என்றும் கூறுவது இதையொட்டித்தான்.

பகவானின் பிறப்பிற்குக் காலமும் செய்விக்கும் கர்த்தாவும் சொல்லிய கண்ணன் அடுத்தபடியாக ஒரு காரணமும் காட்டுகிறார்.

நல்லார்கள் தம்மை நலம்புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்றுநெறி போக்கர்க்கும்-சொல்லாரும்
முந்தை அறநாட்ட உய்ததற்கு நான்பிறப்பன்
இந்தஉகம் தோறும் இசைந்து.

(இ-ள்) நல்லார்கள் தம்மை-தருமமார்க்கத்தில் செல்லும் ஸாதுக்களை, நலம்புரிந்து காத்தற்கும்-நன்மை செய்து காப்பற்றுவதற்கும், பொல்லாரை-அதர்மம் செய்யும் துஷ்டர்களை, பொன்று நெறிபோக்கர்க்கும்-அழிப்பதற்கும், உய்ததற்கு-(உயிர்களை) உய்யச் செய்யும் பொருட்டு, சொல் ஆரும் முந்தை அறம்நாட்ட-போற்றப்படும் பழைய தரும மார்க்கத்தை நிலை நிறுத்த, இந்த உகத்தோறும்-(அதர்மம் பெருகும்) இந்த யுகங்களில் எல்லாம், இசைந்து-விரும்பியே, நான் பிறப்பன்-நான் அவதரிக்கிறேன்.

பரித்ராணாய ஸாதூ4நாம் விநாசாயச து3ஷ்க்ருதாம்
த4ர்ம ஸம்ஸ்தா2பநார்தா2ய ஸம்ப4வாமி யுகே3 யுகே3

(இ-ள்) ஸாதூநாம் ஸாதுக்களின், பரித்ராணாய-ரக்ஷணத்தி (பாதுகாப்பி)ற்காகவும், துஷ்க்ருதாம் துஷ்டர்களின், விநாசயாச-அழிவுக்காகவும் தர்ம ஸம்ஸ்தாபானார்த்தாய-தருமத்தை நிலை நாட்டுவதற்காகவும் யுகே யுகே-யுகந்தோறும் (அந்தந்தக் காலத்தில்) ஸம்பவாமி-அவதரிக்கின்றேன்.

ஸாது ரக்ஷணம் அல்லது சிஷ்ட பரிபாலனத்திற்குத் துஷ்ட நிக்ரஹம் (பொல்லாரை அழித்தல்) அவசியமாகிறது. சிஷ்டபரிபாலனம் (நல்லாரைக்காப்பது) தர்மஸ்தாபனத்திற்கு அவசியமாகிறது. பகவானின் அவதாரத்தால் தீயோருக்கு அழிவு ஏற்பட்டாலும் அவ்வழியையே அவதாரத்திற்கு நோக்காவோ காரணமாகவோ கொள்ளக்கூடாதென்றே தர்ம ஸ்தாபனத்தைக் கண்ணன் முடிவில் வைத்துச் சொன்னார்.

தருமத்தை நிலைநாட்டியாக வேண்டிய நிர்பந்தமும் பகவானுக்கு இல்லை. அவன் ஸர்வ ஸ்வதந்திரன். அவனுக்கு அடைய வேண்டியது, ஆக வேண்டியது எதுவும் இல்லை என்றாலும் உயிர்களின் பொருட்டு உண்டாகும் கிருபை (கருணை) காரணமாகவே தன்னைப் பிறப்பித்துக் கொள்கிறான். என்பது தோன்றப் பாடலில் "இசைந்து" எனப்பட்டது.

உயிர்கள் கருமத்தினடியாகப் பிறப்பிக்கப்படுகிறார்கள். பகவான் உயிர்களை உய்விப்பதற்குக் கிருபையினடியாகத் தானே தன்னைப்

பிறப்பித்துக்கொள்கிறார். இவ்வவதார தத்துவத்தை உணர்ந்து பகவானை மனனம் பண்ணும் உயிர்களின் கருமப் பிறவியும் பந்தமும் இல்லாது போய்விடும். நமக்காகக் கிருபையினடியாக அவனுக்கு (பகவானுக்கு) வரும் பிறவிகள் வந்துகொண்டே தானிருக்கும். உயிர்களின் கருமப் பிறவியை அகற்றக் கிருபையினடியாக அவன் கொள்ளும் பிறவி எங்ஙனம் முடியும்?' என்று உரையாசிரியரில் ஒரு பக்தமணி ஹாஸ்யமாகக் கேட்கிறார்.

இவ்வவதார தத்துவத்தை உள்ளபடி உணர்வது ஒரு ஞானயோகமாகவும் மோக்ஷ ஸாதனமாகவும் சொல்லப்படுகிறது. இப்பகுதியில் கண்ணனே அதற்குப் பலனும் சொல்கிறார்.

என்பிறவி என்கருமம் இவ்வண்ணம் திவ்வியமென்று
அன்பினொடும் உண்மை அறிவுற்றான்-முன்பிறவி
ஏய்ந்தஉடல் வட்டே எதிர்ப்பிறவி ஏலாதே
ஆய்ந்தென்னையே எய்தும் அவன்.

(இ-ள்) என் பிறவி எனது பிறப்பும் என் கருமம்-எனது செய்கையும் இவ்வண்ணம்-இந்த விதமாக, திவ்வியம் என்று-மேலானது (அப்ராக்ருதமானது) என்று, அன்பினொடும் உண்மை அறிவுற்றான்-அன்போடு உள்ளபடி அறியப்பெற்றவன் (எவனோ) அவன்-முன் பிறவி ஏய்ந்த உடல் விட்டு-முன்னே பிறவிக்குரிய தேகம் நீங்கப்பெற்று, எதிர்ப்பிறவி ஏலாது-மறு பிறவி எடுக்க மாட்டான். ஆய்ந்து எனையே எய்தும் அறிந்து என்னையே அடைவான்.

ஜந்ம கர்மச^3 மே திவ்யம் ஏவம் யோ^3 வேத்தி தத்வத:
த்யக்த்வா தேஹம் புனர்ஜந்ம ந ஏதி மாம் ஏதிஸ: அர்ஜு"ந.

(இ-ள்) அர்ஜுனா! மே-என்னுடைய ஏவம்-இப்படிப்பட்ட, திவ்யம்-மேலான, ஜந்நம்-பிறப்பையும், கர்ம-செய்கையையும், தத்வத:-உள்ளபடியே ய: வேத்தி எவன் அறிகிறானோ ஸ:-அவன் தேஹம் த்யக்த்வா-சரீரத்தை விட்டு, புந: ஜந்ம-மறு பிறவியை, ந ஏதி-அடைகிறதில்லை. மாம் ஏதி-என்னையே அடைகிறான்.

'திவ்யம்' என்பதற்குச் சங்கரரும் ராமாநுஜரும் 'அப்பிரா கிருதமான' என்று உரை கூறியுள்ளனர். பிறக்கும் உயிாகளின் உடல் முக்குணங்களுக்கிடமான பிரகிருதியிலிருந்து தோன்றியிருக்கிறது. புரியும் செயல்களுக்கும் அதுவே மூலகாரணம். பகவானுக்கு அவதாரத்தில் தோன்றும் உடலுக்கும் அதில் பிறக்கும் செய்கைக்கும்

இப்பிரகிருதி காரணமாகாது எனத் தெரிவிக்கவே, 'திவ்யம்' என்பதற்கு 'அப்ராக்ருதமான'எனப் பொருள் கூறினர். முக்கணங்களுக் கிடமாகாமல் சுத்த சாத்வீகமயமான ஒன்றைக் கொண்டே பகவான்அவதாரலீலைகள் புரிகிறார் என்று ஞானிகளும் பக்தர்களும் ஏகமாகக் கூறுகின்றனர். அதனால் பகவானின் ஸ்வரூபம் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை என்பதை நம்மாழ்வார்,

"துயரில் சுடர் ஒளி தன்னுடைச் சோதி நின்ற வண்ணம் நிற்கவே துயரில் மலியும் மனிதர் பிறவியில் தோன்றிக் கண் காணவந்து" என்று அநுபவித்துக் கூறுகிறார். பக்தர்களைப்போலவே மகாத்மா கிருபையடியாக வந்த பகவானின் அவதாரங்களை உணர்ந்தறிவித்து உய்ந்தார். அதை ஹிந்துமதம் என்னும் நூலிலும் வெளியிட்டார்.

38. பகவானின் மின்சாரத் தன்மை

ஜீவனின் பிறப்பிற்கும் பகவானின் பிறப்பிற்கும் உள்ள வேற்றுமையை அறிவதும் அதனால் பகவானின் பிறப்பில் அடங்கிய பெருமையை உள்ளபடி உணர்ந்து பகவத் குணங்களில் ஈடுபட்டுத் தன்னையே மறந்திருப்பதும் ஒரு யோகமாகும். இதைச் சமாதிநிலை என்றுகூடச் சொல்லாம். சமாதிநிலையில் இருக்கும் யோகியர் புற உலக நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படாமல் இருப்பது போலவே, பகவானின் அவதார தத்துவத்தை அறிந்து அவன் குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்கும் பக்தர்களும் இருப்பார்கள். பகவானின் அவ்தார குணங்களில் மனம் ஆழ்ந்தவர் என்ற காரணத்தால் ஒரு சில பக்தர்கள் ஆழ்வார் எனப்பட்டனர்.

கிருஷ்ணாவதாரத்தில் வெளியானசீலகுணம் நம்மாழ்வாரின் நெஞ்சை அளவுகடந்து ஆகர்ஷித்தது. ஈடுபாட்டினாலும் பேசஆரம்பித்தார். "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று தன் ஈடுபாட்டை இரண்டு தொடர்களிலே வெளியிட்டார். மேலே பேசமுடியாமல் சமாதியிலிருப்பவர் போல் ஆறுமாதங்கள் மோகித்துக் கிடந்த பின்னரே, பெரிய பாரதம் கைசெய்து என்று பாட்டை மேலே தொடங்கினார்' என்று வைணவ குருபரம்பரை கூறுகிறது. இவ்வாறு அவதாரதத்துவ ஞானத்தால் 'என்னையே மனனம் செய்து முக்தி பெறுவோரும் உண்டு' என்பதை வரும் சுலோகத்தில் கண்ணன் தெரிவிக்கிறார்.

நேயம் பயம்வெகுளி நீக்கிஎன் தன்மையரே
ஆய திறத்தால்அடைந்துஎன்னைத் -தூய
அறிவாம் தவத்தால் அநேகர்என் தன்மை
செறிவார்கள் பூதராய்ச் சேர்ந்து.

(இ-ள்) நேயம் பயம் வெகுளி நீக்கி-ஆசை அச்சம் கோபம் என்பவைகளைவிட்டு என் தன்மையரே ஆய திறத்தால்-(விடாத நினைப்பினால்) எனது இயல்பைப் பெற்ற உபாயத்தால்,என்னை அடைந்து-என்னை உபாசித்து அநேகர்-பலர், தூய அறிவாம் தவத்தால்-சிறந்த ஞானமாகிய தவத்தினால், பூதராயச் சேர்ந்து-பரிசுத்தகர்ளாகி, என்தன்மை செறிவார்கள்-எனது சாயுஜ்ஜியத்தை அடைவார்கள்.

வீதராக பயக்ரோதா மந்மயா மாமுபாச்ரிதா:
பஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்பாவம் ஆகதா:

(இ-ள்) பஹவ:-அநேகர், வீதராக பயக்ரோதா:-காமம், பயம், கோபம் இவற்றைவிட்டு, மாம் உபாச்ரிதா:-என்னை உபாசிக்கின்றவர்களாய் நிறுத்தி, மன்மயா – மனதை என்னிடத்தில் நிறுத்தி, ஜ்ஞானதபஸா-ஞானமாகிய தவத்தினால் பூதா:-பரிசுத்தராகி, மத்பாவம் ஆகதா:-எனது சாயுஜ்ஜியத்தை அடைந்தார்கள்.

மந்மயா-மனத்தை என்னிடம் வைத்து-என் தன்மையரே ஆயஎன்று ஸ்லோகத்திலும் பாடலிலும் முறையே வரும் பகுதிக்கு வெவ்வெறான உரைகள் உண்டு. சங்:-தானே ஈச்வரன் என உணர்ந்தவர்களாயிருக்கிற

மதுசூதனசரஸ்வதி:-என்னைத் தவிரப் பிறபொருள்களில் நாட்டமில்லாமல்

ராக:-பகவனாகிய என்னையே ஸர்வோத்தமன் என்றும் எல்லா உலகங்களுக்கும் பிரதான காரணன் எனவும் உணர்ந்திருக்கிற

இச்சுலோகத்தில் வரும் மத்பாவம் என்ற தொடருக்குச் சாயுச்சியம் என்று பொருள்கொண்டு அதற்குச் சங்கரரும் ராகவேந்திரரும் பின்வருமாறு உரை எழுதுவதும் சிந்தனைக்குரியது.

சாயுச்சியம் – **சங்:**-மோக்ஷம், **ராக:**-நாராயணன் சமீபத்திலிருப்பது.

இவ்விதம் அவதாரதத்துவ ஞானமாகிற தவத்தால் அன்றி வேறுவகையாக என்னை உபாஸிக்கும் அதிகாரிகளும் உலகில் உண்டு என்பதை அடுத்தபடியாகத் தெரிவிக்கின்றார்.

என்னைஎவர் எவ்வாறு அடைந்தியல்வர் யானவரை
அன்னவகை யான்மிகவும் அன்புற்றே-பின்னடைது
காட்டுவன்மற்று ஆதலினால் என்நெறியைக் காதலினால்
நாட்டெவரும் பின்செல்வர் நன்கு.

(இ-ள்) என்னை எவர் எவ்வாறு அடைந்து இயல்வர்-என்னை எவர்கள் எவ்விதமாய் உபாசிக்கின்றார்களோ, அவரை யான் அன்னவகையான்-அவர்களை நான் அந்தவிதமாகவே, மிகவும் அன்புற்று பின்அடைந்து காட்டுவன்-மிக்க அன்போடு (அவர்களின்) பிற்போக்கையும் அனுசரித்து அனுக்கிரகம் செய்கிறேன். ஆதலினால்-ஆகையால், என்நெறியை-எனது மார்க்கத்தை காதலினால்-பிரியத்துடன் நாட்டு எவரும்-உலகினர் எல்லோரும், நன்கு பின் செல்வார்-நன்றாக அனுசரிக்கிறார்கள்.

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாந் ஸ்ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மாநு வர்(த்) தந்தே மநுஷ்யா: பார்த ஸர்வச:

(இ-ள்) பார்த்த-அர்ஜுனா!, யேயதா-எவர்கள் எப்படி மாம்ப்ரபத்யந்தே-என்னை உபாசிக்கிறார்களோ, ததாஏவ-அந்தவிதமாகவே தாந்-அவர்ளை, அஹம்-நான் பஜாமி-அருள் செய்கிறேன், மநுஷ்யா-மனிதர்கள், மமவர்தம-எனது மார்க்கத்தை, ஸர்வச:-எல்லா விதங்களாலும் அநுவர்த்தந்தே-அனுஸரிக்கிறார்கள்.

(யதா) எவ்விதமாய் என்பதற்கு ஸ்ரீதரர் கூறும் உரை:-பலனை விரும்பியாவது விரும்பாமலாவது, இந்திராதி தெய்வங்கள் சொரூபமாகவும் இருக்கிற என்னை அத்தெய்வங்களாகவாவது முழுமுதல் கடவுளாகாவாது உபாசித்தால் உபாசிப்பவர்களது விருப்பதை அநுசரித்து யானே அப்பலனைக் கொடுக்கின்றேன் என்பது தாத்பரியம்.

அல்ப மதியும் சக்தியும் வாய்ந்த மனிதர்கள் தங்களைப் பார்க்கிலும் அறிவும் சக்தியும் வாய்ந்த தேவதைகளில் ஒன்றை முழுமுதற் கடவுளாகப் பாவித்து உபாசிக்கிறார்கள். தேசந்தோறும் மதந்தோறும் முழுமுதற்கடவுளை வெவ்வேறு பெயர்களைச் சொல்லி உபாசிக்கிறார்கள். சில மதங்களில் முன்னோர் செய்த பழக்கப்படி முழுமுதல் கடவுளுக்கு வெவ்வேறான உருவங்களைக் கற்பித்து

வணங்குகிறார்கள். யார் எதை விரும்பித் தன்னை எந்த விதமாகப் பாவித்து உபாசித்தாலும் பலன் கிடைக்கும். அந்தப் பலனைக் கொடுத்து அனுக்கிரகம் செய்யும் கர்த்தா பரமாத்மாவே தான் என்பது, இதனால் சொல்லப்பட்டது.

பரமாத்மா எல்லாவற்றையும் இயக்குவிக்கும் மூலசக்தி மின்சார சக்தியை உதாரணமாகக் கொண்டு பரமாத்மா ஸ்வரூபத்தை ஓரளவு தெரிந்துகொள்ளலாம். ஒரு பித்தானை அமுக்கினால் மின்சார விளக்குகள் எரிகின்றன. மின்சார விசிறி சுழலகிறது. யந்திர சாலைகளிலுள்ள பெரிய சக்கரங்கள் சுற்றுகின்றன. மின்சார சக்தியின் இயக்கத்தைச் சிறிதும் அறியாத ஒருவன் பித்தானை அமுக்கிய உடனே விளக்கு எரிவதையும் வேறுவிதமாக அமுக்கியதும் விளக்கு அணைவதையும் பார்த்துப் பித்தானை மிகச் சக்தி வாய்ந்ததாக நினைப்பது இயல்பு. மின்சார சக்தி தேக்கிவைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து (பவர்ஹவுஸ்) சக்தி கம்பி வழியாக வராத காலங்களில் பித்தானும் பிற உறுப்புக்களும் விளக்கேற்றவோ, விசிறியைச் சுழற்வோ, சக்கரங்களைச் சுற்றவோ பயன்படாமல் போகின்றன. மின்சார சக்தியின் உதவியால் யாவும் திடீரென்று நின்றுபோய் விட்டாலும் வீதியிலும் எங்கும் வெளிச்சமில்லாமல் தவிக்கும் சந்தர்ப்பத்தை இக்காலத்தில் பலரும் அடிக்கடி அநுபவித்து வருகிறோம்.

எங்கும் பரந்த பரமாத்மாவின் சக்தி எல்லாவற்றிற்கும் மூலமும் ஆதியும் ஆயது. எல்லா இடங்களுக்கும் சக்தியைச் கொடுத்துக்கொண்டிருக்கும் மின்சார சக்தி நிலையம் போன்றது. இந்திராதி தேவர்கள் பரமாத்மாவின் சக்தி நிறைந்த பிரபஞ்சத்தில் மின்சாரப் பித்தானைப்போன்றவர்கள். அவர்களால் சுதந்திரமாக எதையும் செய்யமுடியாது. எதையும் வழங்க முடியாது. பரமாத்வாகிய நானே எந்த விதமான உபாஸகர்களுக்கும் பலனை அளிக்கிறேன் என்று கண்ணன் இங்கு எடுத்துச் சொல்கிறார். இச்சுலோகப் பொருளை ஒரு ஆழ்வார் தன் பாடலில் வைத்துக் கூறுவதும் உற்று நோக்கத்தக்கது.

நேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பன்
ஆரும் அறியார் அவன் பெருமை-ஓரும்
பொருள் முடிவும் இத்தனையே எத்தவம் செய் தார்க்கும்
அருள் முடிவது ஆழியான் பால்.

மின்சார சக்தி நிலையத்தை எல்லோரும் நினைக்கிறார்களா? பெரும்பாலோர் நினைப்பதும் இல்லை. அதன் தன்மையை அறிந்து கொள்வதும் இல்லை. உடனே காரியம் ஆகிவிடுகிதென்று தம் வீட்டிலுள்ள பித்தானையும் அளவு கருவி (மீட்டரை)யையுமே உபயோகிக்கிறார்கள். அதுபோலவே உலகினரில் பலர் பலனைப் பெறும் ஆசையால் எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக விருந்து இயக்கும் பகவானை நினையாமல் இந்திராதி தேவர்களையே ஆராதிக்கிறார்கள் என்று அடுத்த சுலோகத்தில் காரணத்தோடு சொல்லப்படுகிறது.

கருமபயன் காமித்தார் காமத்தால் இங்கே
ஒருமையுடன் தேவருடன் ஒன்றி-அருமையினால்
தாங்கி இறைஞ்சாநிற்பர் தாழாது உலகுதனில்
ஆங்கருமத்து ஆனபயன் ஆர்ந்து.

(இ-ள்) இங்கே-இவ்வுலகத்தில், கரும பயன் காமித்தார்-கருமத்திற்குப் பலனை விரும்புபவர் காமத்தால்-ஆசை காரணமாக, ஒருமையுடன் தேவருடன் ஒன்றி-ஒன்றுபட்ட மனத்தோடு (இந்திராதி) தேவரிடம் ஈடுபட்டு,அருமையினால் தாங்கி இறைஞ்சா நிற்பர்-சிரத்தையோடு (விரதங்களின் துன்பத்தைச்) சகித்துக்கொண்டு ஆராதித்துக் கொண்டிருப்பர், (ஏனெனில்) கருமத்து ஆனபயன் ஆர்ந்து-காமிய கர்மத்திற்குரிய பயன் மிகுந்து, உலககுதனில் தாழாது-உலகில் தாமதமின்றிக் கைகூடும்.

காங்க்ஷந்த:கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவ்தா:
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா

(இ-ள்) இஹ-உலகில் (உள்ளவர்), கர்மணாம்-கருமங்களின் ஸிதத்ம்-பலனை, காங்க்ஷந்த:-விரும்புகிறவர்களாய், தேவதா:-தேவர்களை, யஜந்தே-ஆராதனை செய்கிறார்கள்; ஹில்.....ஏனென்றால் மாநுஷேலோகே மனித உலகத்தில், கர்மாஜாஸித்தி:-(காமிய) கருமப்பயன் க்ஷிப்ரம் பவதி-விரைவில் கிடைக்கிறது.

இவ்வுலகிற்காக விரும்பப்படும் காமிய பலன்கள் சீக்கிரம் கிட்டுவதால் மனிதர்கள் பந்த நிவர்த்தியையும் அதைத் தரும் பகவானையும் தங்கள் கவனத்திற்கே விஷயமாக்குவதில்லை. அவசியம் வரும்வரை எல்லோரும் மின்சார நிலையத்தை நினைக்கிறார்களா? அதுபோலத்தான்.

39.கர்த்தர் கர்த்தாவாகமாட்டார்

உயிர்களுக்குக் கர்மாவிற்கு யோக்கியமான உடலைக் கொடுத்துப் படைப்புத் தொழிலைச் செய்பவன் பகவானே என்பதை எல்லா மதங்களும் ஒப்புக்கொள்கின்றன. அவ்வுடலால் ஒரு உயிர் கஷ்டம் அனுபவிக்கிறது. மற்றொன்று சுகத்தை அநுபவிக்கிறது. கஷ்டப்படுவோர் அதற்குப் பொறுப்பாளி கடவுளே என்று நினைத்து அவரை 'கருணையற்றவர் கொடியவர்' என்று கூட நிந்திக்கிறார்கள்.

பைபிளின் தமிழ்மொழி பெயர்ப்பில் கடவுள் கர்த்தர் என்றே சொல்லப்படுகிறார். குயவன், மண்ணிலிருந்து பானை செய்வதுபோல் பகவான் பிரகிருதியிலிருந்து சங்கல்பத்தால் தான் செய்தவற்றில் உயிாகளைப் பொருத்துகிறார். அதனால் நிமித்த காரணன் என்றும் தொழிலுக்குக் கர்த்தா என்றும் சொல்லப்படுகிறார்.

சிருஷ்டி கர்த்தா மாத்திரமல்ல 'என்னை யார் எப்பெயரால் எவ்விதமாக உபாசித்தாலும் பலன்கொடுத்து அவர்களை அவர்கள் விருப்பப்படிக் காக்கின்றவனும் நானே' என்றும் கண்ணன் முன்னே சொன்னார் அல்லவா? அதைக்கேட்ட அர்ஜுனனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. 'வருங்காலத்தில் தமது கேட்டிற்கே காரணமான தீய பலனைப் பிரார்த்திப்போரும் உண்டு. நற்பலனை வேண்டி உபாசிப்போரும் இருக்கலாம். அவரவர் விரும்பியதைக கொடுப்பவர் பகவானாகவே இருந்தால் உயிர்களின் வாழ்விற்கும் தாழ்விற்கும் பொறுப்பாளி அவரேயன்றோ?' என ஆலோசிக்க ஆரம்பித்தான்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும், தானே செய்தாலும், அவற்றிற்குக் கர்த்தா தானேயானபோதிலும் அவற்றால் தான் பாதிக்கப்படுவதில்லை என்பதைக் கண்ணன் வரும் சுலோகங்களில் விளக்குகிறார்.

வண்ணங்கள் நாலும் மருவுங் குணங்களுடன்
பண்ணுங் கருமம் பலவகையால்-எண்ணி
வகுத்தேயான் செய்திடினும் மற்றது செய்யேனா
மிகுத்தே எனை நீ வெறு

(இ-ள்) வண்ணங்கள் நாலும்-வர்ணங்கள் (ஜாதிகள்) நான்கையும், மருவும் குணங்களுடன்-பொருந்திய குணங்களோடு

பண்ணும் கருமம்—(உயிர்கள்) செய்யும் வினைகளை பலவகையால் எண்ணி—பலவிதமாக ஆலோசித்து யான் வகுத்தே செய்திடினும்—நானே வகுத்தபோதிலும், எனை அது செய்யேனா—என்னை அதைச் செய்யாதவனாகவும், மிகுத்தே—பூர்ணணாகவும் நீ வெறு—நீ மனதிற்கொள்.

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்[3] குணகர்ம[4] விபாகச:[3]
தஸ்ய கர்[3]த்[4]தாரமபி மாம் வித்தி அகர்(த்)தாரம் அவ்யயம்

(இ—ள்) சாதுர்வர்ண்யம்—நான்கு வருணங்களும், குண கர்ம விபாசச:—குண கர்மங்களின் பிரிவுக்குத்தாக படி மயா ஸ்ருஷ்டம்—என்னால் சிருஷ்டிக்கப்பட்டன. தஸ்ய—அதற்கு கர்த்தாரம் அபி—(நான்) கர்த்தவாயிருந்தாலும் அகர்த்தாரம்—கர்த்தா அல்லேன் என்றும், அவ்யயம்—நித்தியனாகவும் மாம்வித்தி—என்னை அறிவாயாக.

ஒரு ஆசிரியரிடம் படிப்பதற்காக நாற்பது மாணவர்கள் வந்தார்கள். அவ்வாசிரியர் மாணவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான பாடமும் பயிற்சியும் கொடுக்கவில்லை. எல்லோரும் அறிவில் விருத்தியடைந்து நன்மை பெற வேண்டுமென்று கருதினார். அதற்காக ஒவ்வொரு மாணவனுடைய திறமை, முந்திய அனுபவம், பிரியம் இவற்றைச் சோதித்தறிந்து மாணவர்களை ரக ரகமாகப் பிரித்து ஒவ்வொரு வகுப்பிற்கும் பிரத்தியேகமாகப் பாடமும் பயிற்சியும் கொடுத்தார். மாணவர்களை ரகரகமாகப் பிரிவு செய்ததற்கு ஆசிரியரை எந்த அளவில் கர்த்தா என்றும் பொறுப்பாளி என்றும் சொல்லலாமோ அந்த அளவில்தான் பகவானையும் சொல்லமுடியும்.

மாணவர்களில் அறிவு, திறமை, முந்திய அநுபவம் பிரியம் இவற்றால் வேற்றுமை இருப்பதுபோல் உயிர்களில் அனாதியாகச் செய்து வந்த கர்மங்கள் காரணமாக குணவேற்றுமை இருக்கிறது. அவ்வேற்றுமையை அறிந்து அதற்கேற்ப அவரவர் நன்மைக்கும் விருத்திக்கும் தகுந்தபடி விதி விலக்குகளையும் கர்மாக்களையும் காட்டிக் கொடுத்தார். கர்மா, உயிர், கடவுள் இவர்களைப்போல் ஆதி சொல்லமுடியாமல் அனாதியாதலால் கர்மாவையொட்டி வந்த குணம், அதனால் வந்த பிரிவு ஏற்கனவே இருப்பதால் அவற்றை அறிந்துகொண்ட பகவான் பாகுபாடு செய்ததற்குக் கர்த்தாவாக மாட்டார். பகவான் கர்த்தாவாகத் தோன்றினாலும் உண்மையில் கர்த்தாவாகமாட்டார் என்பது மற்றொரு காரணத்தாலும் விளங்கும்.

ஏதும் இழிசா எனைக்கருமம் என்று எனக்கிங்கு
ஓது பயன் ஆசை ஒன்றுஇலை என்று-ஈது உணர்ந்தே
என்னை மிகஅறிவான் யாவன் அவன் கண்டாய்
முன்னை வினை அகல்வான் முற்று

(இ-ள்) எனைக் கருமம் ஏதும் இழிசா என்று—என்னைக் கருமம் சிறிதுகூடப் பற்றமாட்டாது என்றும், எனக்கு ஓது பயன் ஆசை ஒன்று இலை என்று—எனக்குக் கருமங்களால் உண்டாவதாகச் சொல்லப்படும் பலனில் கொஞ்சங்கூட ஆசை இல்லை என்றும், யாவன் ஈது உணர்ந்து—எவன் இவ்வுண்மையைத் தெளிந்து என்னை மிக அறிவான்—என்னை நன்றாக அறிவானோ, அவன்—அவன் முன்னை வினை முற்று அகல்வான் கண்டாய்—முந்திச் செய்த கருமங்களினின்று முழுதும் விடுபடுவான் என அறிந்துகொள்.

நமாம் கர்மாணி லிம்பந்தி நமே கர்மபலே ஸ்ப்ருஹா
இதிமாம் யோபிஜாநாதி கர்மபிர்ந ஸ பத்யதே

(இ-ள்) கர்மாணி—கர்மங்கள், மாம்—என்னை ந லிம்பந்தி—ஒட்டுகிறதில்லை. மே—எனக்கு, கர்மபலே—கருமபலத்தில், ஸ்ப்ருஹா ந—இச்சை இல்லை, இதி—என்று, ய: மாம்—எவன் என்னை, அபிஜாநாதி—அறிகிறானோ, ஸ:—அவன், கர்மபி:—கருமங்களால், நபத்யதே—கட்டப்படுகிறதில்லை (பந்தத்திற்குள்ளாவதில்லை)

பகவான் முத்தொழில்களைச் செய்கிறார். ஆனாலும் அக்கருமங்கள் அவரை ஒட்டுவதில்லை. அதனால் அவர் பாதிக்கப்படுவதில்லை. கருமங்களைச் செய்பவன் அக்கருமங்களுக்குக் கர்த்தா என்று உலக விவகாரத்தில் சொல்லப்பட்டபோதிலும் பகவான் தான் செய்யும் கர்மங்களுக்குக் கர்த்தா ஆவதில்லை ஏன்? அதற்குக் காரணம் உலகனரைப்போல் பகவானுக்குக் கரும பலனில் ஆசை இல்லாதிருப்பதே என்று சுலோகத்திலும் பாடலிலும் சொல்லப்படுகிறது. இப்பகுதிக்கு மூன்று சித்தாந்தக்காரர்களும் விரிவான உரை எழுதியுள்ளனர்.

சங்:— அகங்காரமும் பலத்தில் இச்சையும் பகவானுக்கில்லையாதலால் கருமபலன் அவரை அடைவதில்லை. தானே பிரும்மம் என்றும் ஒரு கர்மத்திற்குத்தான் கர்த்தா அல்லன் என்றும் உணர்ந்து அகங்காரம், மமகாரம், ஆசை முதலியன இல்லாதிருப்பவனையும் கருமங்கள் கட்டுப்படுத்துவதில்லை.

ராமா:— உயிர்களின் பிராசீன கருமங்களுக்குத் தக்கபடி தேவன் மனிதன், மிருகம், பறவை முதலிய தேகங்களைக் கொடுத்துச் சிருஷ்டிக்கின்றேன். விரோதபாவத்தால் அவ்வாறு நான் சிருஷ்டி செய்வதில்லை. உயிர்களின் தேகத்திற்கு அவற்றின் பிராசீன கருமமே காரணமாதலால் பாகுபாடு செய்வதால் பட்சபாததோஷம் எனக்கு வராது. உயிர்களின் பிராசீன கருமத்திற்குத் தக்கபடியே அவற்றிற்கு வேண்டிய அநுபவப் பொருள்களையும் (போக்ய வஸ்துக்களையும்) நான் சிருஷ்டிக்கிறேன். இவ்வாறு நிமித்த காரணமாக மாத்திரம் நானிருப்பதால் பலன் என்னை அடைவதில்லை. இந்தவிதமாக என்னை அறிகின்றவன் தனது கரும யோகத்திற்கு விரோதியான பிராசீன கருமத்தால் பந்தப் படுவதில்லை என்பது தாத்பரியம்.

ராக:— ஜீவனைப்போல நான் பலத்தில் இச்சை கொண்டு கருமங்களைச் செய்வதில்லை. ஆகையால் கருமமாவது பலனாவது என்னைக் கட்டுவதில்லை. ஜீவகோடிகளின் பிராசீன கருமத்தைத் தழுவியே நான் சிருஷ்டி செய்கிறேன். ஆதலால் பல விநோத சிருஷ்டியைச் செய்த பட்சபாத தோஷம் என்னைச் சாராது. இவ்விதம் என்னை அறிந்துகொள்ளுகின்றவனுக்கே பந்தமில்லை என்றால் எனக்குப் பந்தம் எவ்வாறு வரும்? 'இவ்விதம் என்னை எவன் அறிந்து கொள்கின்றானோ' என்ற வாக்கியத்தால் கண்ணபிரான் பரமாத்மா என்றும், அறிகின்றவன் ஜீவன் என்றும் அறியப்படுகின்றவன் அந்தப் பரமாத்மா என்பதும் விளங்குகின்றன. இதனால் ஜீவன் வேறு, பரமாத்மா வேறு என்ற பேதம் உறுதி செய்யப்பட்டதாகிறது.

கருமம் செய்வதை மாத்திரம் கொண்டு, பகவானைக் கர்த்தா என்று சொல்லிவிடுவதற்கில்லை. உலகில் கருமம் செய்யும் சாமானியரின்நோக்குப் பகவானுக்கில்லை. அதனால் கருமத்தின் பாதகமும் அவருக்கில்லை.

தோற்றத்திற்குக் கர்த்தாவாக விருந்து உண்மையில் செய்யும் கருமத்திற்குத்தான் கர்த்தாவாகாமலிருக்கும் ஈச்வர ஸ்வரூபம் வியக்கத்தக்கது. இதையறிந்துகொள்வதே பந்த நிவர்த்தியாகிய பலனைத் தரும்.

மோட்சத்தில் இச்சைகொண்ட முன்னோர்களான ஞானிகளும் இவ்வுண்மையை உணர்ந்து கருமங்களை விடாமல் செய்தார்கள். அவற்றிற்குக் கர்த்தாவாகமலிருந்து பந்தத்திலிருந்து விடுபடவும் செய்தார்கள். ஆதலால் 'அர்ஜுனா! முன்னோர்களால் செய்யப்பட்ட

உனக்குரிய கர்மத்தை நீ செய்' என்று கண்ணன் உபதேசித்தார். அதைக்கேட்ட அர்ஜுனன் தொழிலைச் செய்து அதற்குப் பொறுப்பாகமலிருக்கும் விசித்திரத்தை நினைத்துச் சற்று தயங்கினான். அது சமயத்தில் கண்ணபிரான் கர்ம தத்துவத்தின் நயத்தை மேலும் சொல்ல வாரம்பித்தார்.

40. கர்ம தத்துவம்

'பகவான் குணகர்மங்களுக்குத் தக்கபடி தேகாதிகளைக் கொடுத்து, உயிர்களைப் படைக்கிறார். படைப்புத் தொழிலைச் செய்தபோதிலும் அதற்கு அவர் கர்த்தா ஆவதில்லை. தேகாதிகள் காரணமாக உயிர்களில் படைப்புத் தொழிலால் வரும் வேற்றுமைகளுக்கும் அவர் பொறுப்பாளியாகமாட்டார்' என்று காரணங்காட்டிக் கண்ணன் உபதேசித்தபோது, அர்ஜுனன் ஆலோசித்தான். 'தொழில் செய்தும் அதற்குப் பொறுப்பாளியாகாமல் கர்த்தாவுமாகமால், அதனால் பாதிக்கவும் படாமல் பகவான் இருக்கிறார்' என்று சொன்னது அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. அது எப்படி முடியும் என்பது அவனால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது.

அதையறிந்த கண்ணன் அர்ஜுனா! கர்மம் எப்படிப்பட்டது? அகர்மம் எப்படிப்பட்டது என்ற விஷயத்தில தெளிவாகத் தெரிந்து கொள்ள மாட்டாமல், பண்டிதர்கள்கூட மோகிக்கிறார்கள் நீ மோகிக்காமல் தெளிவாக அறிந்துகொள்வதற்குக் கர்மா கர்மங்களின் நுட்பத்தைச் சொல்கிறேன் கேள்.

இக் கருமத்துக்கும் இதில் விவிதம் ஆனதுக்கும்
அக்கருமம் அல்லா அறிவுக்கும்-மிக்க
அறிவுடைமை வேண்டும் அது உரைக்கல் ஆங்குப்
பிறிது உணர்வு தான் அரிதுபின்.

(இ-ள்) இக் கருமத்துக்கும்-இக்கருமத்தின் ஸ்வரூபம் தெரிந்துகொள்வதற்கும், இதில் விவிதம் ஆனதுக்கும்-இக்கருமங்களில் (விலக்கப்பட்டதும் மோட்சசாதனம் ஆகாது நித்திய நைமித்திக காமியமானதுமான) பல வகையான விகர்மத்தின் ஸ்வரூபம் தெரிந்துகொள்வதற்கும், அக்கருமம் அல்லா அறிவுக்கும்-அவ்விரண்டு மில்லாத அக்கர்மத்தின் ஸ்வரூப ஞானத்திற்கும், மிக்க அறிவுடைமை

வேண்டும்—அபாரமான புத்திசாலித்தனம் வேண்டும். அது உரைக்கில்—அக்கரும சூட்சுமத்தைப் பேசப்போனால், பிறிது உணர்வுதான்—வெவ்வேறாகப் பகுத்து அறிந்து கொள்வது, அரிது—மிகக் கஷ்டம்தான்.

3 3 4 3 3 4
கர்மணோஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யஞ்ச விகர்மண:
3 3 4 3 3
அகர்மணச்ச போத்தவ்யம் கஹநா கர்மணோ கதி:

(இ—ள்) ஹி—ஏனென்றால், கர்மண—கருமம், போத்தவ்யம்—அறியத்தக்கது, விகர்மண:—விகர்மமும், போத்தவ்யம்—அறிந்து கொள்ளத்தக்கது அகர்மணச்ச—அகர்மமும், போத்தவ்யம்—அறியத்தக்கது, கர்மண:—கதி—கருமத்தின் (ஸ்வரூபம்) தன்மை, கஹநா—அறிய அரிது.

இப்பகுதியில் கருமம் மூன்று வகையாகச் சொல்லப்படுகிறது. அவை:—(1) கருமம் (2) விகருமம் (3) அகருமம். மூன்றிற்கும் பொருள் செய்வதில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

கருமம்:— இதற்குச் சங்கரரும், ஸ்ரீதரரும், மதுசூதன சரஸ்வதியும், ராகவேந்திரரும், வேதோக்தமான சத்கருமம் என்று பொருள்கொண்டனர். ராமாநுஜர் முக்திக்குச் சாதனமான கருமங்கள் என்று உரை செய்தார்.

விகருமம்:— இதற்கு (ச) (ஸ்ரீ) (ம) (ராக) முதலியோர் வேதத்தால் செய்யக் கூடாது என்று விலக்கப்பட்ட நிஷித்த கருமம் என்று பொருள் செய்தனர். ராமாநுஜர், 'நித்திய நைமித்திக காமிய கருமங்களும் அவற்றைச் செய்வதற்காக வேண்டிச் செய்யப்படும் பொருளீட்டல்' முதலிய கருமங்களும் என்று உரை செய்தார்.

அகருமம்:— இதற்கு (ச) (ஸ்ரீ) (ம) (ராக) ஆகியோர் 'கருமத்தைச் செய்யாதிருத்தல்' என்று பொருள் கொண்டனர். ராமானுஜர் (ஆத்மா கருமம் செய்வதில்லையாதலால்) கருமத்தில் அடங்கியிருக்கின்ற அகர்த்தாவாகிய தனது ஆத்ம ஸ்வரூப ஞானம் என உரை கூறினார்.

உரையாசிரியர்கள் இவ்வாறு, தாம் கருமம், விகருமம், அகருமம் என்ற பதங்களுக்குப் பொருள் செய்த கொண்டதற்கேற்ப இதை அடுத்துவரும் பிரதான சுலோகத்திற்கும் விளக்கம் தந்துள்ளார்கள். அவர்கள் அனைவரும் நுட்பமான அறிவும் பாஷா ஞானமும் உடையவர்களாதலால், எதையும் விலக்காமல் முக்கியமான உரைகளை எல்லாம் நம் கவனத்திற்குக் கொண்டு வருவது சரியான முடிவுக்கு வரப் பெரிதும் துணை செய்யும்.

அடுத்தபடியாக் கண்ணன் கூறுவது:-

கன்மத்தில் ஞானத்தைக் காணும் அவன் எவன்தான்
கன்மத்தை ஞானத்தில் கண்டியல்வான்- நன்மைக்கே
தக்கபெரும் புத்தி சமைந்தான் அவன் அவனே
எக்கருமம் செய்தானும் இங்கு

(இ-ள்) எவன் தான்-யாவன் ஒருவன் கன்மத்தில் ஞானத்தைக் காணும் அவன்-கருமத்தில் அகருமத்தைப் பார்க்கக்கூடியவனோ ஞானத்தில் கன்மத்தைக் கண்டு இயல்வான்-அகருமத்தில் கருமத்தைப் பார்க்கக் கூடியவனோ, அவன்-நன்மைக்கே தக்க பெரும் புத்தி சமைந்தான்-க்ஷேமத்திற்கு உரிய பேர் அறிவு படைத்தவனாகிறான். இங்கு-இவ்வுலகில் அவனே எக்கருமம் செய்தானும்-அவனே சகல கருமங்களையும் செய்தவனும் ஆகிறான்.

கர்மண்ய கர்மய: பச்யேத் அகர்மணிச கர்மய:
3 3 4
ஸ புத்திமாந் மநுஷ்யேஷு ஸயுக்த: க்ருத்ஸ்ந கர்மக்ருத்

(இ-ள்) ய:-எவன், கர்மணி-கருமத்தில், அகர்ம-அகருமத்தை பச்யேத்-பார்க்கிறானோ ய-எவன் அகர்ம-அகருமத்தில், கர்மா-கருமத்தையும் பச்யேத்-பார்க்கிறானோ ஸ:-அவன் புத்திமாந்-புத்திசாலி, ஸ-அவன், மநுஷ்யேஷு-மனிதர்களுள், யுக்த:-(முக்திக்குத்) தகுதியுள்ளவன், (ஸ ஏவ)-அவனே, க்ருத்ஸ்ந கர்மக்ருத்-எல்லாக் கருமங்களையும் செய்தவன்.

'கருமம் செய்வதிலேயே ஞான யோகம் கருமயோகம் இரண்டையும் எவன் பாவிக்கின்றானோ அவனே ஞானியெனப் படுவான்' என்பதே ராமாநுஜர் இச்சுலோகத்திற்குக் கூறிய உரையில் சாரமாகும். சங்கரரும் ஸ்ரீதரரும் இச்சுலோகத்திற்கு வெளியிட்ட விரிவுரைகள் அறிவுடையோர் கவனத்திற்குரியவை.

சங்கரர்:- ஆத்மாவுக்குச் செய்வதும் செய்யாமல் இருப்பதும் ஆகிய கரும அகர்மங்கள் இரண்டும் இல்லை. ஆகையால் தேகம் மனம் இந்திரியங்கள் இவற்றின் செய்கையே கருமம் என்றும், அவற்றால் செய்யப்படாமை அகருமம் என்றும் சொல்லப்படும். விவேகம் இல்லாதவர்கள் கரும அகருமங்களை ஆத்மாவிடத்தில் ஏற்றி அகங்கார மமகாரம் காரணமாக 'நான் செய்கின்றேன். செய்யாமலிருக்கிறேன்' என்ற பாஷையில் வியவகரிக்கிறார்கள். அதனால் அவிவேகளுக்கு ஆத்மா கருமம் செய்வதுபோலக் காணப்படுகிறது. அவ்வாறு

போலியாகத் தோன்றினாலும் கருமம் செய்வது தேகாதிகளே என்றும் ஆத்மா கருமம் செய்வதே இல்லை என்றும் உண்மையை அறிகின்றவன் கருமத்தில் அகருமத்தைப் பாரக்கிறான்.

நதி ஜலத்தில் மரக்கலத்தில் (ஓடத்தில்) வேகமாய்ப் போகின்ற ஒருவன் நதிக்கரையிலுள்ள மரங்கள் வேகமாய்ப் போகும் செய்கை, ஓடத்தில் அமர்ந்திருக்கும் தன்னிடத்தில் இருக்கும்போது அதை உணராமல் போகும் செய்கையில்லாத மரங்களில், அச்செய்கையைப் பார்க்கிறான். அவ்விதமே அவிவேகிகள் தேகாதிகள் செய்யும் கருமத்தை ஆத்மாவே செய்வதாகப் பார்க்கிறார்கள். (உதாரணத்தில் குறிக்கப்பட்ட) மரங்களில் கருமம் இல்லாதிருப்பதைப் போல ஆத்மாவிலும் கருமம் இல்லை என்று பார்க்கின்றவன் கருமத்தில் அகருமத்தைக் காண்பவனாகிறான்.

கருமத்தைச் செய்யாமல் இருப்பதும் (தேகத்தில் பிறந்த) அகங்காரத்தின் குணமாயிருக்கும்பொழுது அவிவேகி அதைதான் செய்யவில்லை என்று வியவகரிக்கிறான். உதாரணமாக அக்கருமத்தை நான் செய்யாததனால் சௌக்கியமாயிருக்கிறேன் என்று அவிவேகி சொல்வது உலக இயல்பு. அந்தச் செய்யாமையாகிய அகருமத்தில் 'நான் அக்கருமத்தைச் செய்யாமையாலே, சௌக்கியமாயிருக்கிறேன் என்றும் அகங்காரத்தின் கருமம் இருக்கின்றபடியால், கருமம் செய்யாமையிலுங் கூடக் கருமம் அடங்கியிருக்கின்றது' என்பதை விவேகி அறிந்து கொள்கிறான். அதனால் அகருமத்தில் கருமத்தைப் பார்ப்பவனாகிறான்.
ஸ்ரீதரர்:– 'உயிர்கள் கருமத்தால் கட்டுப்படுகின்றன' என்பது வேத சாஸ்திரப் பிரமாணம். இதனால் கருமத்திற்குப் பந்தம் செய்வதே சுபாவமாயிருக்கிறது. பந்தம் செய்யும் சுபாவமுடைய கருமமே, பலனில் ஆசையில்லாமல், அகங்கார மமகாரங்களில்லாமல் பகவதரூபண புத்தியோடு ஒருவனால் செய்யப்பட்டால் பந்தத்தைச் செய்யாமல் பழைமையான பந்தங்களையும் போக்கி மோட்சமாகிய பலனைத் தரவல்லது. அவ்வாறு செய்பவன் பந்த ரூபமான கருமத்தில், பந்த நிவர்த்தியான அகருமத்தைப் பார்க்கிறான். அந்த ஞானிக்கு செய்கின்ற கருமமே அகருமம் ஆகின்றது.

விபரீத எண்ணங்காரணமாகவோ, சோம்பல் காரணமாகவோ செய்யவேண்டிய சத்கருமங்களைச் செய்யாதுவிட்டால் விடுவதே பாபத்தையும் பந்தத்தையும் உண்டு பண்ணும். ஆகவே கருமத்தைச் செய்யாது விடுவதாகிய அகருமத்திலும் பந்தத்தைக் கொடுப்பதாகிய

கருமம் அடங்கியிருக்கின்றது. இதை அறிந்து, கருமத்தை விடாது செய்யவேண்டும், என்று உணர்கின்ற விவேகி (ஞானி) "அகருமத்தில் கருமத்தைப் பார்க்கின்றான்"

கண்ணனே: 'கர்ம சூட்சுமத்தைப் பகுத்தறிந்துகொள்வது எல்லோருக்கும் எளிதல்ல'என்ற முகவுரையோடு கர்ம தத்துவத்தைப் பற்றி அர்ஜுனனுக்குச் சொல்ல ஆரம்பித்தார் என்றால் 'சாமானிய மக்கள் பாஷா ஞானத்தையும் தர்க்கத்தையும் உதவியாகக்கொண்டு வாதம்செய்து தம் கொள்கையேமேல்' என்று நிலை நிறுத்தப் பார்ப்பது வீண்கால விரயமாகும். உரையாசிரியர்கள் பலர் வேறுபட்டுக் கூறியவைகளை நம் சிந்தனைக்கு விஷயமாக்கி நாமே நமக்காக மட்டும் முடிவுசெய்து கீதையை முடிந்தவரை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதே மேல்.

41. யார் பகவான் தன்மையைப் பெறலாம்?

பகவான் இடைவிடாமல் கருமங்களைச் செய்கிறார். அவற்றை விளையாட்டாகச் செய்கிறார். அதனால் களைப்பை அடைவதில்லை என்ற உண்மையை பல அறிஞர்களும் பக்தர்களும் தோத்திரப் பாக்களில் வைத்துப் பேசி இருக்கின்றனர். கம்பரும் ராமாயண ஆரம்பத்தில் பகவானை 'அலகிலா விளையாட்டு உடையார்' என்றே புகழ்ந்தார்.

கீதையில் கண்ணன் கருமங்களைச் செய்தபோதிலும் பகவான் அவற்றிற்குக் கர்த்தா ஆவதில்லை. அவற்றால் பாதிக்கப்படுவதில்லை என்றார். அதுவே பகவத் ஸ்வரூபம் அல்லது தெய்வத்தன்மை என்று சொல்லப்படுகிறது. அந்த நுட்பத்தைத் தெரிவிக்க அர்ஜுனனுக்கு, கர்மம், விகர்மம், அகர்மம் ஆகிய மூன்றின் வேற்றுமையை விளக்கினார். கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பது ஞானம் என்று தெரிவித்தார்.

ஜீவனும் பகவானைப் போலவே கருமங்களைச் செய்துகொண்டு அவற்றிற்குக் கருத்தா ஆகாமல், இருக்க முடியும். அவ்வாறிப்பதே தெய்வத்தன்மை. அதை யார் யார் பெற முடியம்? என்பதை அடுத்து வரும் சுலோகங்களால் கண்ணன் விளக்குகிறார்.

எல்லா முயற்சியும் ஒன்று இச்சியாது ஓர்ந்து இயல
வல்லானைப் பண்டிதனாய் ஆய்ந்துரைப்பர்-நல்லார்
அறிவால் அவன்வினைகள் எல்லாம் அழிந்தே
பொறிவாயில் பஞ்செனவே போம்

(இ–ள்) எல்லா முயற்சியும்–எல்லாக் கருமங்களையும், ஒன்று இச்சியாது–(சங்கற்பம் இன்றி) ஒரு பலனை விரும்பாமல், ஓர்ந்து–(தான் கர்த்தா இல்லை என்பதை) ஆராய்ந்து இயல வல்லானை–செய்யக்கூடியவனை நல்லார்–மேலோர், பண்டிதனாய் ஆய்ந்து உரைப்பர்–ஞானி என்றே ஆராய்ந்து சொல்லுவார்கள். அவன் வினைகள் எல்லாம்–அந்த ஞானியின் கரும பலன்களாகிற (புண்ணிய பாவம்) யாவும் அறிவால்–ஞானத்தால், பொறி வாயில் பஞ்சு எனவே–நெருப்பில் அகப்பட்ட பஞ்சுபோலவே அழிந்தேபோம்–இல்லாமல் போய்விடும்.

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா4 காமஸங்கல்ப வர்ஜிதா:
ஜ்ஞாநாக்3நி த3க்3த4 கர்மாணம் தமாஹு: பண்டி3தம் பு3தா4:

(இ–ள்) யஸ்ய–எவனுக்கு, ஸர்வே ஸமாரம்பா:–எல்லாக் கருமங்களும், கர்ம ஸங்கல்ப வர்ஜிதா:–ஆசையும் சங்கல்பமும் அற்றவைகளோ, தம்–அவனை, புதா:–அறிந்தவர்கள், பண்டிதம்–வித்வான் என்றும், ஜ்ஞாநாக்னி தக்த கர்மாணம்–ஞானமென்னும் தீயினால் பொசுக்கப்பட்ட வினையுடையவன் என்றும், ஆஹு:–சொல்லுகிறார்கள்.

பகவான் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய கருமங்களை முடிவில்லாமல் செய்துகொண்டேயிருக்கிறார். செய்தாலும் அத்தொழிலால் அவர் பாதிக்கப்படுவதும் இல்லை. கருமங்களுக்குக் கர்த்தாவும் ஆவதில்லை. பலனில் ஆசையோ கருமத்தால் அடைய வேண்டியதாய் வேறு எதுவுமோ அவருக்கில்லாமல் இருப்பதே அதற்கு காரணம்.

அவ்வாறே ஜீவனம் பலாபேக்ஷையோ சங்கல்பமோ எதுவுமே இல்லாமல் கருமங்களைச் செய்தால் கரும பலன் ஜீவனை அடைவதில்லை. பலத்தில் இச்சையோடு முன்னே ஜீவன் செய்த கருமங்களால் உண்டான பாப புண்ணியமாகிய பந்தங்களும் நசித்துப்போகும் 'தேகாதி இந்திரியங்களால் செய்யப்படும் கருமத்திற்கு ஆத்மவே கருத்தாவல்ல ஈசுவரார்ப்பண புத்தியோடு செய்யப்படும்

எந்தக் கருமத்திற்கும் ஜீவன்பந்தப்படுத்தும் தன்மை கிடையாது'என்ற ஞானம் பஞ்சைப் பொசுக்கும் தீயைப் போன்றது. அந்த ஞானம்பிராப்தம், ஆகாமியம் சஞ்சிதம் ஆகிய மூவகை வினைகளையும் நசிக்கச் செய்யும் பிரகாசிக்கும் அக்கினியைப் போல் ஜீவாத்மா ஸ்வரூபத்தையும் ஜீவனுக்கு நன்கு தெரியச் செய்யும். அந்த நிலையையே தெய்வத்தன்மை என்று கூறலாம். 'அதை பல இச்சையில்லாமல் கருமம் செய்வோர் அடையலாம்' என்பது இச்சுலோகத்தால் சொல்லப்பட்டது.

கருமத்திற்குத் தன்னைப்போல் யார் அகர்த்தாவாக விருக்க முடியம் என்பதை மேலும் சொல்லுகிறார்.

கருமப் பயன்நசையைக் கைவிட்டே என்றும்
ஒருமித்து உகந்ததுபுறத்து ஒட்டாப் -பெருமையோன்
மெய்யார் கருமத்து மேலியன்றா னேலும்அவன்
செய்யான் அதொன்றும் செறிந்து

(இ-ள்) கருமப் பயன் நசையை-கருமபலனில் ஆசையை கைவிட்டே-அடியோடு நீக்கி என்றும் ஒருமித்து-எப்பொழுதும் ஆத்ம ஸ்வரூபத்தில் தியானமுள்ளவனாய்த் தனிமைப் பட்டு, உகந்து-(அதனால்) திருப்தி அடைந்து, புறந்து ஒட்டா-(சரீரம்,பதவி,பணம்போன்ற) வெளிப்பொருளை ஆதாரமாகக் கொள்ளாத பெருமையோன்-பெருமையையுடையவன், மெய்ஆர் கருமத்துமேல் செறிந்து இயன்றானேலும்-சிறப்புப் பொருந்திய கருமங்களில் நன்கு பிரவர்த்தித்தாலும், அவன்-அந்த மேலோன். அது ஒன்றும் செய்யான்-அக்கருமம் எதையும் செய்யும் கருத்தா ஆகமாட்டான்.

த்யக்த்வா கர்ம[2] பலா[3] ஸங்கம் நித்யத்ருப்தோ நிராச்ரய:
கர்மண்ய[4] பி ப்ரவ்ருத்தோபி நைவ கிஞ்சித் கரோதி ஸ:

(இ-ள்) ய:-எவன் ஒருவன், கர்ம பலா ஸங்கம்-கரும பலனில் பற்றை, த்யத்த்வா-விட்டு, நித்யத்ருப்த:- நித்தியமான (ஆத்மாவில்) திருப்தியுடையவானாய், நிராச்ரய:-(சரீரம் முதலிய) அந்நியமான பொருள்களில் ஒட்டாதவனோ, ஸ:-அவன், கர்மணி-கருமத்தில், அபிப்ரவ்ருத்த:-ஊற்றத்தோடு முயன்ற போதிலும், கிஞ்சித் அபி-கொஞ்சம் கூட, நகரோதிஏவ-செய்கிறவன் ஆவதே இல்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் வியாஸ முனிவர் கோபிகைகளோடு நடந்து போய் கொண்டிருந்தார். வழியில் கோபாலர்கள் கொடுத்த தயிர்

சாதத்தை கோபிகைப் பெண்களோடு தானும் வயிறு நிறைய உண்டார். மேலும் சிறிதுதூரம் சென்றதும் ஒரு நதி குறுக்கிட்டது. அதைக் கடக்க முடியாதபடி இருகரையும் புரண்டு வெள்ளமாக நீர் ஓடிக்கொண்டிருந்தது. என்னசெய்வதென்று தெரியாமல் கோபிகைகள் தயங்கினர்.

'நான் நித்ய உபவாஸியாய் இருப்பது உண்மையானால் தண்ணீர் விலகட்டும்' என்று வியாஸர் சபதம் கூறினார். உடனே வெள்ள நீர் எல்லோரும் நடந்து செல்வதற்குப் பாதை விட்டு விலகி நின்றதைக் கண்டு கோபிகைகள் ஆச்சரியமடைந்தனர். அப்பொழுது ஒரு பெண் 'முனிவரே! எங்களோடு சேர்ந்து கண்காணத் தயிர் சாதத்தை நீர் சாப்பிட்டீரே சபதம் செய்தது பொருத்தமா? நதிஜலம் எப்படி விலகிற்று? அதன் ரகஸியத்தை எங்களுக்குச் சொல்ல வேண்டும்' என்று வியாஸரைக் கேட்டாள். அப்பொழுது வியாஸர் 'தயிர் அன்னத்தைக் கிருஷ்ண பரமாத்மாவுக்கு அர்ப்பணம் செய்தேனேயொழிய நான் சாப்பிடவில்லை. அதனால் உபவாஸத்திற்கு எப்படிப் பங்கம் ஏற்படும்?' என்று பதில் சொன்னாராம். இதை ராமகிருஷ்ண பரமஹம்சர் நீதிஉபதேச கதைகளுள் ஒன்றாகச் சொல்லியிருக்கிறார்.

வியாஸர் அடைந்திருந்ததாகச் சொல்லப்படும் இந்நிலைதான் தெய்வநிலை. அந்நிலை வருவதற்குக் கருமபலனில் இச்சையொழிய வேண்டும். பொருளும் பதவியும் அதிகாரமும் தேகாதிகளும் தனக்கு எந்தவிதத்திலும் சம்பந்தமில்லாத புறம்பான (அந்நிய) வஸ்துக்களாகத் தோன்றவேண்டும். இந்நினைவு உணர்ச்சியோனால் ஆத்துமத்தியானம் உண்டாகும். ஆத்தும தியானம் கை வந்தவனுக்குத் தேகாதிகளில் பற்றுதல் அடியோடு ஒழிந்து போகும். நித்தியமான ஆத்ம வஸ்துவில் பரமைகாந்தியாய் ரமிக்கத் தெரிந்து அதிலே திருப்தியைக் கண்ட ஜீவன் ஆத்மாவாகிய தனக்குப்புறம்பான எதிலும் ஒட்டுவதில்லை. எதையும் ஆச்ரயிப்பதும் இல்லை. அந்நிலை எய்தியவன் உலகினர் காணத் தேகத்தால் எந்தக் கருமத்தைச் செய்தாலும் அக்கரும பலன் அவனை அடைவதில்லை. பகவானைப் போலவே அகர்த்தவாக விருக்கிறான்.

இந்நிலை எய்திய ஞானியின் தன்மையைப் பின்னும் ஒரு சுலோகத்தால் கண்ணன் விளக்குகிறார்.

பேறுஇழவில் ஒத்திருந்து பெற்றத்தால் உள்ளமைந்து
கூறும் இருதுயரில் கூடாதே-வேறொருவன்

தன்பால் பொறாமையிலான் தன்கருமம் செய்திடினும்
அன்பால் பிணிப்புண்ணான் அங்கு.

(இ-ள்) பேறு இழவில் ஒத்து இருந்து (உடலுக்கு வேண்டியவை) கிடைத்தபோதும் கிடையாமல் இழந்தபோதும் கிடையாமல் விருப்பு வெறுப்பின்றிச் சமமாயிருந்து, பெற்றத்தால் உள் அமைந்து-(விரும்பாமல் தானகவே) கிடைத்த ஆகாரத்தைக் கொண்டு திருப்தி அடைந்து கூறும் இரு துயரில் கூடதே-சொல்லப்படும் சுகதுக்கங்களைக் கடந்தவனாய், வேறு ஒருவன் தன்பால்-அந்நியரிடம் பொறாமையிலான்-பொறாமை கொள்ளாத ஞானி, தன் கருமம் செய்திடினும்-தனக்குரிய கருமங்களைச் செய்தாலும் அன்பால் பிணிப்புண்ணான்-கரும பந்தத்தால் கட்டப்படுகிறதில்லை.

யத்[3]ருச்[2]சா லா[3]ப ஸந்துஷ்டோ த்[3]வந்த்[3]வாதீதோ விமத்ஸர:
ஸமஸ்ஸித்[3]தா[4]வஸித்[3]தௌ[4] ச க்ருத்வாபி ந நிப[3]த்[4]யதே

(இ-ள்) யத்ருச்சா லாப ஸந்துஷ்ட-விரும்பாமல் கிடைத்த உணவு பதார்த்தத்தால் திருப்தி அடைந்தவனாயும், த்வந்த்வ அதீத:-சுக துக்கங்களைக் கடந்தவனாயும், விமத்ஸ்ர:-அசூயை அற்றவனாயும், ஸித்தௌ அஸித்தௌ ச-லாபத்திலும் நஷ்டத்திலும் ஸம:-ஸமமான புத்தியோடுமிருப்பவன் க்ருத்வாபி-கருமஞ் செய்தபோதிலும், நநிபத்யதே- (பந்தத்தால்) கட்டப்படுவதில்லை.

சுக துக்கம், லாப நஷ்டம் இவற்றைச் சமமாகப் பாவித்து ஆத்ம த்ருப்தி அடைந்து பலாபேக்ஷையில்லாமல் கருமம் செய்தால் பந்தம் உண்டாகாது. அவ்வாற செய்பவன் ப்ருமக்ஞானி. அத்தகைய ஞானிகள் யாகாதி கருமங்களை எப்படிச் செய்வார்கள்? என்ன மனோபாவத்தோடு செய்வார்கள்? என்பதைக் கண்ணன் மேலும் விவரிக்கப்போகிறார்.

42. ஞான ஸ்வரூப யாகம்

'பகவானைப் போலவே ஜீவனும் கர்த்தாவாகாமல் கருமங்களைச் செய்யலாம். அவ்வாறு செய்வதற்குக் கருமங்களில் அடங்கிய நுட்பமான தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். அவ்வறிவினால் கரும பலனில் அறவே இச்சையில்லாதவனாய் உள்ளதைக்கொண்டு திருப்தி அடையும் உயர்ந்த மனோபாவத்தோடு கருமங்களைச் செய்கின்றவன் பந்தத்திற்கு ஆளாகமாட்டான். கருமத்திற்குக் கர்த்தாவும்

ஆகமாட்டான். தெய்வத் தன்மையையும் பெறுவான் என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லவா?

அதைக்கேட்ட அர்ஜுனன் உண்பது, உடுப்பது, நடப்பது போர் செய்வது பொருள் தேடுவது பூஜை செய்வது பொய்பேசுவது திருடுவது யாகம் செய்வது எல்லாம் கருமங்கள் தானே. பந்த நிவர்த்தியை அடைய விரும்புவன் எந்தெந்தக் கருமங்களைப் பல இச்சையில்லாமல் செய்ய வேண்டும்? மோக்ஷத்தில் இச்சையுடைய யார் யார் எந்தெந்தக் கருமங்களை இத்தகைய மனோபாவத்தோடு செய்து முக்தி பெற்றனர்? என்று விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமே என்று ஆசைப்பட்டான். அதைக் குறிப்பாக அறிந்துகொண்ட கண்ணன் விவரம் சொல்லா வாரம்பித்தார்.

போன நசையினாய்ப் புன்புலனில் முத்தனாய்
ஞான நிலைகொண்ட நன்னெஞ்சாய்-ஆன தொழில்
வேள்வியினுக் காக விரும்பி முயல்வானுக்கு
ஊழ்வினை எல்லாம்போம் உடைந்து

(இ-ள்) போன நசையினாய்-ஆசை நீங்கினவனாய் புன் புலனில் முத்தனாய்-இழிவான இந்திரியங்களினின்றும் விடுபட்டவனாய் ஞானம் நிலைகொண்ட நல்நெஞ்சாய் ஞானத்தில் ஊன்றிய சிறந்த மனமுடையவனாய் ஆன தொழில்-செய்யப்படும் கருமங்களை வேள்வியினுக்காக விரும்பி முயல்வானுக்கு-யாகத்தின் (பகவான் பிரீதியின்) பொருட்டே விரும்பிச் செய்கின்றவனுக்கு ஊழ்வினை எல்லாம்-புண்ணிய பாபங்கள் யாவும் உடைந்து போம்-அழிந்து போகும்.

கதஸங்கஸ்ய[3] முக்தஸ்ய[3] ஜ்ஞாநாவஸ்தித[2] சேதஸ:
யஜ்ஞாயாசரத:[3] கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே.

(இ-ள்) ஜ்ஞாந அவஸ்தித சேதஸ-(ஆத்ம) ஞானத்தில் ஊன்றிய மனமுடையவனாய், கதஸங்கஸ்ய-விஷயத்தில் ஆசையற்று, முக்தஸ்ய-காமக்ரோதங்களை விட்டவனாய், யஜ்ஞாய ஆசரத-யாகத்தின் (ஈச்வரனின் பிரீதியின்)பொருட்டே செய்கின்றவனுடைய, கர்ம-(புண்ணிய பாபமாகிற) கருமம் ஸமக்ரம்-முழுவதும், ப்ரவிலீயதே-நசித்துப்போகும்.

யக்ஞம், யாகம் இரண்டும் ஒரே பொருளைத் தரும். வேறு பதங்கள், ஒரே தாதுவினடியாகப் பிறந்தவை. விஷ்ணு ஆராதனமே யக்ஞம் விஷ்ணுவே யக்ஞ ஸ்வரூபமாய் இருக்கிறார் என்று கூறும் வேத

வாக்கியங்கள் பலவிருக்கின்றன. ஆகவே 'ஆன தொழில் வேள்வியினுக்காக முயல்வான்' என்பது செய்யும் காரியங்களைக் கடவுள் ஆராதனமா (பூஜை)கவே செய்கின்றவன் என்று பொருள்படும்.

சிலர் பொருளாலும் தேகாரோக்கியத்தாலும் மிக்க வலிமையுடையவர்களாகவிருக்கலாம். அவை இரண்டும் குறைந்ததனால் சிலர் சக்திக் குறைவோடிருக்கலாம். எவ்விதம் இருப்பினும் தன்னால் செய்யக்கூடிய தொழில்களைப் பகவானுக்கு ஆராதனமாகப் பிரியத்தோடு செய்தால் போதும். அவ்வாறு செய்வதே பந்தங்களை ஒழிக்கும் என்று தோன்றப்பாடலில் 'ஆன தொழில்' எனச் சொல்லப்படுகிறது.

'யாகமே பகவானின் ஆராதன ரூபமானது. அதன் அங்கங்கள் யாவும் ஆராதனம். அதற்குச் சாதனமாக உபயோகிக்கப்படும் பொருள்கள் யாவும் பிரும்மம். அதற்காகச் செய்யப்படும் எல்லாக் கருமங்களும் பிரும்ம ஸ்வரூபம். அந்த யாகத்தால் அடையப்படும் பொருள் பணமும் பதவியும் போகமும் அதிகாரமும் அல்ல. அதுவும் பிரும்மமே என்ற இவ்வுண்மை உணர்ந்தவன் எவ்வாறு யாகம் செய்வான்? அவன் மனோபாவம் யாக கருமத்தைச் செய்யும்போது எவ்வாறிருக்கும்? அம்மனோ பாவமுடையவன். அதனால் பெறுவதயாது? என்ற விவரங்கள் அடுத்த படியாகச் சொல்லப்படுகின்றன.

செய்யும் தொழில்கண்மணம் சேரும் விதிஅதனில்
பெய்யும் அவியால் பெறும்தொழில்-மெய்யணைந்து
தான்பிரமம் என்று உன்னித்தன் பிரம கன்மத்தால்
வான்பிரமத் தன்மை உறும் வாய்ந்து.

(இ–ள்) செய்யும் தொழில்கள்–(யாகத்திற்கு அகங்கமாகச்) செய்யப்படும் கருமங்கள் மணம் சேரும் விதி அதனில்–சிறப்புப் பொருந்தியவிதிப்படி பெய்யும் அவியால் பெறும் தொழில்–(அக்கினியில்) போடும் அவிசு (நெய் எடுத்துவிட உபயோகிக்கப்படும் ஆப்பை) முதலியவற்றால் செய்யப்படும் கருமங்கள் மெய் அணைந்து–ஞானத்தோடு கூடிதான்–(கருமம் செய்யும் கருத்தாவாகிய) தான் பிரமம் என்று உன்னி–பிரம்மம் என்று நினைத்து, தன் பிரம கன்மத்தால்–தன்னால செய்யப்படும் பிரும்ம ஸ்வரூபமான யாகாதி கருமங்களால் வான் பிரமத்தன்மை–ஒருவன் மிகவுயர்ந்த பிரும்ம ஸ்வரூபத்தை அமைந்து உறும்–நன்றாக அடைவான்.

ப்[3]ரஹ்மார்(ப்)பணம் ப்[3]ரஹ்மஹவி ப்[3]ரஹ்மாக்[3]னௌ ப்[3]ரஹ்மணாஹுதம்

ப்[3]ரஹ்மைவ தேந க[3]ந்தவ்யம் ப்[3]ரஹ்ம கர்ம ஸமாதி[4]நா

(இ-ள்) ப்ரம்மார்ப்பணம்-பிரம ஸ்வரூப ஸ்ருக் முதலியவற்றையுடைய, ப்ரம்பஹவி:-பிரம ஸ்வரூபமான அவிஸ்ஸானது பிரமஸ்வரூபமான, கர்த்தாவால் ப்ரம்ம அக்நௌ-பிரம்மஸ்வரூபமான அக்கினியில் ஹுதம்-ஓமம் பண்ணப்பட்டது இதி-என்று ப்ரம்ம கர்ம் ஸமாதிநா-பிரமஸ்வரூபமே யாக கர்மம் என்ற நினைவுள்ள தேந-(ஒருவனால்) அவனால், ப்ரம்ம ஏவ-ப்ரம்மஸ்வரூபமான ஆத்மாவே, கந்தவ்யம்-அடையத்தக்கதாகும்.

பலனில் இச்சையில்லாமல் கருமங்களைச் செய்யும்போது நான் எனது என்ற நினைவினால் அஹங்கார மமகாரங்கள் வளரலாம். அவை தோன்றினாலே செய்கின்ற கருமம் தனக்குச் சுபாவமான பந்தத்தைச் செய்யும். ஞானியும் கருமத்தைச் செய்கிறான். ஆனல் கருமம் செய்யும் ஒவ்வொரு கட்டத்திலும்,

"கருமமும் கரும பலனுமாகிய காரணன் தன்னை
திருமணி வண்ணனைச்
செங்கண்மாலினைத் தேவபிரானை" – (நம்மாழ்வார்)

என்ற உணர்வுடனேயே இருக்கிறான்.

வேதாந்தத்தில் ப்ரமகீட நியாயம் என்று ஒன்று சொல்வதுண்டு. வண்டு (ப்ரமரம்) புழுவைத் (கீடத்தைத்) தன்னிருப்பிடத்திலே கொண்டு போய் வைக்கும். பார்த்தபோதெல்லாம் புழுவை அடிக்கடி கொட்டும். அதன்மீது ஊதும். இச்செயல்களால் ஏற்படும் துன்பம் காரணமாகப் புழு எப்பொழுதும் வண்டையே நினைத்து அஞ்சும். வண்டே நினைவாக எப்பொழுதும் இருப்பதால் புழு நாளடைவில் வண்டாகவே மாறிவிடும் என்பதையே இந்நியாயம் விளக்குகிறது.

புழுவினைத் தன் மயமாக்கும் வண்டைப்போன்றது ப்ரும்மக்ஞானம். இரும்பில் திரட்டி எடுக்கப்படும் அழுக்கிற்கு கிட்டம் என்று பெயர். அது தன்னோடு சேர்ந்த மாணிக்கத்தின் ஒளியை அடியோடு தின்று உருவழித்துவிடும். அதன் சம்பந்தத்தால் மாணிக்கம் தனக்குச் சுபாவமான ஒளி குன்றுவதுபோல் அஞ்ஞானம் காரணமாக ஜீவாத்மாவின் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. அதனால் மாணிக்கத்தின் ஒளியை விழுங்கும் கிட்டம் போன்றதாக அக்ஞானம் வேதாந்திகளால் சொல்லப்படுகிறது.

விவேகம் முதிர்ந்தவன் யாகத்தின் ஒவ்வொரு செயலிலும் அதற்காக உபயோகிக்கப்படும் ஒவ்வொருவஸ்துவிலும் ப்ரும்மத்தையே நினைக்கிறான். ப்ரும்மத்தையே காண்கிறான். அதனால் ப்ருமத்தையே அடைகிறான். இம்மனோபாவமே கர்மயோகம், ஞானானுபவம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இந்த யோகி யாகத்தை மேலும் எவ்வாறு செய்வான் என்பதை அடுத்த சுலோகத்திலும் கண்ணன் விவரிக்கிறார்.

வேறுசில யோகியர்கள் மேலான தேவரிடைக்
கூறுபடும் எச்சம் குறித்துஇயல்வர்-ஈறில்
பிரமமாம் அங்கிப் பிறர்எச்சம் உய்ப்பார்
உரமத்தால் எச்சவுறுப்பு உற்று

(இ-ள்) வேறு சில யோகியர்கள்-மற்றும் சில கரும நிஷ்டர்கள், மேலான தேவரிடை கூறுபடும் எச்சம்-சிறந்த தெய்வங்களை உத்தேசித்தே அங்கங்களோடு கூடிய யாகத்தை குறித்து இயல்வர்-செவ்வையாகச் செய்வார்கள். பிறர்-மற்றும் சில ஞான நிஷ்டர்கள்உரம் அத்தால் எச்ச உறுப்பு உற்று-ஞானத்தினால் யாகத்திற்கு வேண்டிய உபகாரணங்களைப்பெற்று, ஈறு இல் பிரமமாம் அங்கி-முடிவுற்ற பிரமமான அக்கினியில் எச்சம் உய்ப்பார்-(ஜீவாத்மாவாகிற தன்னை அவிஸ்ஸாக அதில் இட்டு) யாகத்தை (பாவனா சக்தியால்) செய்து அநுபவிப்பார்கள்.

தைவம் ஏவ அபரே யஜ்ஞம் யோகி ந: பர்யு பாஸதே
ப்ரஹ்மாக்நா வபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோப ஜுஹ்வதி.

(இ-ள்) அபரே யோகிந:-சில கரும நிஷ்டர்கள் தைவம் ஏவ-(தமக்காவன்றித்) தெய்வங்களின் பொருட்டே யஜ்ஞம் பர்யுபாஸதே-யாகத்தைச் செவ்வையாகச் செய்கிறார்கள். அபரே-(ஞான நிஷ்டர்களான) வேறுசிலர் யக்ஞம் -(தம்மை) யக்ஞத்திற்கு அவிஸாக யக்ஞனே ஏவ-யாகத்தின் உபகாரணமான ஸ்ருகாதியால் ப்ரம்ம அக்நௌ-பிரம ஸ்வரூபமான அக்கினியில், உபஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள்.

ஞான நிஷ்டன் யாக கருமத்தை மற்றவர்களைப் போலச் செய்தாலும் அவனுக்கு அக்னி பிரமமாகவும் அவிஸு ஜீவாத்மாகவுமே இருக்கும். இது ஞானத்தால் அனுபவ சாத்தியமாகும் என்பதைக் காட்டவே பாடலில் ‘உரம் அத்தால்’ எனப்பட்டது.

43. எவை யாகமாகும்?

'யாகம் அதன் அங்கங்கள் அதற்கு வேண்டிய சாதனங்கள், அதைச் செய்வோன், அடைவது எல்லாம் பிரும்மம்' என்ற பாவனையோடு யாகாததி கருமங்களைச் செய்கின்றவன் பந்த நிவர்த்தி அடைந்து தெய்வத்தன்மை பெறுகிறான் என்று கண்ணன் சொல்லியபோது அர்ஜுனன் சிந்திக்க வாரம்பித்தான்.

யாகம் செய்யத் திரவியம் வேண்டும். தீவிர முயற்சியால் உபகரணங்கள் யாவும் திரட்டப்படவேண்டும், அவற்றை முறையே உபயோகிக்கத் தெரிய வேண்டும். பிறர் உதவி கிடைத்தபோதிலும் உரிய மந்திரங்களைச் செவ்வனே சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். ஸ்நானம், உபவாஸம் முதலிய விரதங்களைக் கடுமையாகத் தவறின்றி அனுஷ்டிப்பதற்குத் தேகாரோக்கியம் வேண்டும். இவை எல்லாம் ஒருங்கே அமையப் பெறாதவர் எப்படி யாகம் செய்ய முடியும்? செய்யாதிருந்தால் பந்த நிவர்த்தி பெறுவதற்கு வேறு மார்க்கம் இல்லையா? என்று ஆலோசனை செய்தான்.

அதை அறிந்து கொண்ட கண்ணன் 'மந்திரங்களைச் சொல்லி நெய்யையும், சமித்தையும் அக்கினியில் பெய்வது, பொருளையும் அன்னத்தையும் விரும்பி வந்தவர்களுக்கு ஏராளமாகப் பொருள் வழங்குவது, அன்னமிடுவது, அவற்றால் திருப்தி செய்வது இதைதான் யாகமாகும் என்று நினைக்க வேண்டாம். எந்தக் கருமத்தைச் செய்தாலும் செய்யும்போது கொள்ளும் மனோபாவத்தைப் பொறுத்தே அது யாகமாகிறது. பரிசுத்தமான கர்மாவாகிறது என்பதை அர்ஜுனனுக்கு விளக்கிக் காட்டப் பெரியோர் செய்யும் பல்வேறு கருமங்களும் யாகமாகின்றன' என்று உதாரணமாகச் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறார்.

அறிபொறியை ஆன்றமைதாலம் அனலில் பெய்வர்
பிறிதுசிலர் ஓமம் எனப் பேணிப் -பொறி அனல்வாய்
வந்தியலும் ஐம்பயனை வாரியுடன் ஓமிப்பர்
செந்தொழிலில் நின்றார் சிலர்

(இ-ள்) பிறிது சிலர்-(திரவியத்தால் வேள்வி செய்யாத) வேறு சிலர், அறி பொறியை-(எல்லோராலும்) தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற

காது முதலிய ஞானேந்திரியங்களை, ஓமம் எனப் பேணி-ஓமகுண்டமாகப் பாவித்து **ஆன்று அமைதலாம் அனலில்பெய்வர்**-(மனதை) நிலையாக அடக்குவது **என்கிற அக்கினியில்** இடுவார்கள் செந்தொழிலில் நின்றார் சிலர்-நற்கருமங்களில் ஈடுபட்ட யோகிகளில் சிலர், வந்து இயலும் ஐ பயனை-தானாக வந்து சேரும் சப்தம் ஸ்பர்சம் முதலிய ஐந்து விஷயங்களை, வாரி உடன்-அள்ளி (மனத்தில் புகவொட்டாமல்) உடனே, பொறி அனல்வாய்-(கர்ம) இந்திரியங்கள் என்னும் அக்னியில், ஓமிப்பர்-ஓமம் செய்வார்கள்.

ச்ரோத்ராதீ^{3} இந்த்^{3}ரியாண்யந்யே ஸம்யமாக்^{3}நிஷு ஜுஹ்வதி
சப்^{3}தா^{3}தீந் விஷயா நந்யே^{3} இந்த்^{3}ரியாக்^{3}நிஷு ஜுஹ்வதி.

(இ-ள்) அந்யே-(பின்னும்) வேறு சிலர், ச்ரோத்ராதீநி-காது முதலிய இந்த்ரியாணி-இந்திரியங்களை, ஸம்யம் அக்நிஷு-அடக்குதல் என்கிற அக்னியில் ஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள்,அந்யே-(பின்னும்) வேறு சிலர், சப்தாதீந் விஷயாந்-சப்தாதி விஷயங்களை, இநத்ரிய அக்னிஷு-இந்திரியங்களென்னும் அக்கினியில், ஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள்.

சில யோகிகள் காது கண் முதலிய இந்த்ரியங்களை விஷயங்களில் பிரவேசியாமல் தடுத்து, மனதினால் அடக்கி விடுகிறாகள். அவர்களுக்கு அதுவே யாகமாகிறது. அந்த யாகத்தைச் செய்யத் திரவியம் தேட வேண்டியதில்லை. மன வடக்கமே யாகாக்கினி இந்திரியங்களை அதில் பெய்யப்படும் அவிஸு

மனைதை அடக்கியிருந்தாலும் அதனால் இந்திரியங்களை உலக விஷயங்களில் பிரவேசிக்க வொட்டாமல்தடுத்துக்கொண்டிருந்தாலும் விஷயங்கள் தானாகவே வந்து ஒருவனுடைய இந்திரியங்களைத் தாக்கவும் செய்யலாம். விஷயங்களில் பற்றில்லாமல் மனவடக்கம் பெற்றவராகவே ருச்யச்ருங்கர் தாஸிகள் கானம் அவரைத் தேடி அடைந்து காதை இழுத்தது. ரூபம் கண்ணைக் கவர்ந்தது. தாஸிகள் கொண்டு போயிருந்த பக்ஷணங்களின் வாஸனையும், சுவையும் முனிவரின் மூக்கையும் நாக்கையும் கவர்ந்தன. தாஸியரின் ஸ்பர்சம் அவர் உடலையே இழுத்தது.

இவ்வாறு தானாகத் தேடி வரும் விஷயங்களைச் சில யோகியர் இந்திரியங்களுக்கப்பால் செல்ல விடாமல் நிறுத்திவிடுகிறார்கள். மனதை விஷயங்கள் அடைந்தாலொழிய அவற்றால் யோகியைப் பாதிக்க இயலா. இந்திரியங்கள் விஷயங்களை அநுபவித்தாலும் மனம்

பாதிக்கப்படுவதில்லை. அவ்வாறிருப்பவனும் யாகம் செய்தவனாகிறான். அவனுக்கு இந்திரியங்கள் அக்கினியாகவும், அவற்றைத் தாக்கும் உலக விஷயங்கள் அக்னியில் பெய்யப்படும் அவிஸாகவும் ஆகின்றன.

ராகவேந்திர ஸ்வாமிகள் இப்பகுதிக்கு யோகி விஷயங்களை அநுபவித்தாலும், தான் அநுபவித்துக் கொண்டிருக்கிற விஷயங்களை, ஈசுவர ஆராதனமாகவே நினைப்பான். அவ்வாறு நினைப்பதே ஓமமாகும் என்று உரை கூறியுள்ளனர்.

செய்யப்படும் வேறு எந்தக் கருமத்தையும் யாகமாக ஆக்கலாம் என்பதைக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

எல்லாப் புலன்இ யல்வும் பிராணனால்
செல்லா இயலும் செயலனைத்தும்-சொல்லாரும்
உள்அமைந்த யோகஅனல் உய்ப்பர் சிலர்உணர்வில்
கொள்வது மேல்விளக்கிற் கொண்டு

(இ-ள்) சிலர்-சில யோகியர்கள், எல்லாப் புலன் இயல்வும்-எல்லா இந்திரியங்களின் கருமங்களையும், செல்லா பிராணனால் இயலும்-(உடலிலிருந்து வெளியே) போகாத பிராணன் முதலிய பத்து வாயுக்களினால் ஏற்படும், செயல் அனைத்தும்-எல்லா வியாபாரங்களையும், சொல் ஆரும்-புகழ்பெற்ற, உணர்வில்கொள்வது மேல் விளக்கில் கொண்டு-ஞானத்தில் பொருத்துவதாகிற மேலான தீபத்தின் உதவியால், உள் அமைந்த யோக அனல்-மனதை அடக்குதல் ஆகிற யோகம் என்ற அக்கினியில், உய்ப்பர்-இடுவார்கள் (ஓமம் செய்வார்கள்)

ஸர்வா ணீந்த்ரிய[3] கர்மாணி ப்ராண கர்மாணி சாபரே
ஆத்ம ஸம்யம[3] யோகாக்நௌ[3] ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே[3]

(இ-ள்) அபரே யோகிந:-வேறு சில யோகியர்கள் ஸர்வாணி இந்த்ரிய கர்மாணி-எல்லா இந்த்ரியங்களின் செயல்களையும், ப்ராண கர்மாணிச-பிராணினின் கருமங்களையும், ஜ்ஞாநதீபிதே-ஞானத்தால் ஜொலிக்கின்ற ஆத்ம ஸம்யம யோகம் அக்நௌ-மனதை அடக்குவதென்னும் யோகத்தீயில், ஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள்.

பத்து வாயுக்களும் அவற்றின் செய்கைகளும் ஸ்ரீதரர் வியாக்கியானத்தில் பின் கண்டவாறு சொல்லப்படுகின்றன:-

1. **பிராணன்:-** உடம்பிலிருந்து ஞானேந்திரியங்களின் வழியாகச் சில பாகம் போவதும் வருவதுமாயிருப்பது.

2. அபானன்:– அபானத்தின் வழியாகச் சிறிது பாகம் போவதும் வருவமாயிருப்பது.

3. வியானன்:– உடம்பு முழுதும் பரவிக் கொண்டிருப்பது இதன் உதவியால்தான் ரத்தம் உடல் முழுதும் பரவுகிறது.

4. உதானன்:– நாபி முதல் கபாலம் வரை போவதும் வருவதுமாய் இருப்பது.

5. சமானன்:– ஆகாராதிகளை ஜீரணிக்கச் செய்கிறது. அவற்றின் சத்தை சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்த்து, அசத்தை மலஜல ரூபமாய் வெளிப்படுத்துகிறது.

6. நாகன்:– வாந்தி செய்விக்கிறது.

7. கூர்மன்:– கண்களை மலரச் செய்கிறது.

8. கிருகான்:– தும்மலை உண்டாகுக்கிறது.

9. தேவதத்தன்:– கொட்டாவியை உண்டாக்குகிறது.

10. தனஞ்சயன்:– பிராணன் (இறந்து) போன பின்பு உடம்பிலேயே இருப்பது.

இந்திரியங்களின் செயல்களையெல்லாம் யாகமாகச் செய்யலாம். உலகில் ஞானம் வரப்பெற்ற பெரியோர் செய்யும் வேறு பல கர்மங்களும் அந்த யாகத்திலேயே அடங்கும்.

அதையறிந்து சிலர் பொருள் ஈதலையே யாகமாகச் செய்கின்றனர். சிலர் யோகத்தையே யாகமாகச் செய்கின்றனர். யாகமாகக் கருதிச் சில ஞானிகள் வேத சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்கின்றனர். சிலர் அந்நோக்குண்டனேயே அர்த்தவிசாரஞ் செய்கின்றனர். இவர்கள் எல்லோரும் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் எத்தொழிலைச் செய்தாலும் கடினமான விரதங்களையும் மேற்கொள்ளுகிறார்கள்.

'சோற்றை யுண்டான்' என்று சொன்னால் கறியை உண்டான். குழம்பையும் சாப்பிட்டான் என்று உபலக்ஷணமாகக் கொள்வதுபோல் தேச பக்தியாலும் கலையின்பினாலும் பிரதிப்பயனை விரும்பாமல் செய்யப்படும் பல்வேறு தொண்டுகளையும் கண்ணன் கீதையில் எடுத்துச் சொன்ன தூய்மையான யாகங்களிலே அடக்கிக் கொள்ளலாம்.

44. பிராணாயாமம் ஒரு யாகம்

திரவியத்தையும் தேகவலிமையையும் பெற்றவர்கள்தான் யாகம் செய்ய முடியும் என்பதில்லை.எல்லோருமே தாங்கள் செய்யக்கூடிய பல செயல்களை யாகமாக்கலாம். பல பெரியோர் பொருள் வழங்குவதையும் வேதபாராயணம் செய்வதையும், வேதாந்த விசாரம் செய்வதையும் யாகமாகச் செய்கின்றனர். சிலர் யோகத்தையும் யாகமாகச் செய்கின்றனர் என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லவா?

யோகம் பல அங்கங்களையுடையது. எட்டு அங்கங்கள் என்று சொல்லப் படுகின்றன. அக்காரணத்தாலேயே அஷ்டாங்க யோகம் எனப் பெயர் பெற்றது. பொதுவாக ஆகாரம் உட்கொள்ளுதல் மதாநுஷ்டானம் உடலை நிறுத்தும் நிலை, இந்திரியங்கள் சுவாஸம் மனம், தியானம் அகக்காட்சி இவற்றையெல்லாம் கட்டுப்பாடாகச் செய்வதே யோகஅங்கங்கள் ஆகும். யோகியர் அநுஷ்டிக்கும் விரதங்கள் என்று இவற்றையே சொல்லாம்.

இவ்விரதங்கள் யாவும் யாகமாகவே அநுஷ்டிக்கப்படலாம் என்பதை விளக்க சுவாஸக் கட்டுப்பாட்டைக் கண்ணன் வரும் சுலோகத்தில் உதாரணமாகக் காட்டுகிறார்.

மற்றும் பிராணாயாமத்து இயல்வார் வாயுகதி
உற்றுத் தகைந்தங்கு உடனாக்கச்-செற்றுப்
பிராணன் அபானனிடைப் பெய்தல் அபானன்
பிராணனில் உய்த்துஓமிப்பர் பேர்த்து
உண்ணா ஆவர்நியதம் ஒல்லைப் பிராணனவை
திண்ணார அங்கவற்றில் சேர்விப்பர்

(இ-ள்) மற்றும் பிராணாயமத்து இயல்வார்-மேலும் பிராணாயமத்தைச் செய்கின்றவர்களாகிய வேறுசிலர், வாயுகதி-பிராணன், அபானன் என்ற வாயுக்களின் நடைகளை உற்று தகைந்து -நன்கு தடுத்து அங்கு உடன் ஆக்க-உடலில் இரண்டு வாயுக்களையும் ஒன்றுபடுத்தும் பொருட்டு செற்று பிராணன் அபானனிடை பெய்தல்-செறிந்த பிராண வாயுவை அபானவாயுவில் சேர்த்தல். அபானன் பிராணனில் உய்த்து-அபானனைப் பிராணனில் சேர்த்தல் (ஆகியவற்றை யாகமாக) ஓமிப்பர்-ஓமம் செய்வார்கள். பேர்த்து அவர்-

பின்னும் அவர்கள், நியதம் உண்ணா—நியதமான ஆகாரத்தை உண்டு ஒல்லை—பழமையான, பிராணன் அவை—நன்றாக அங்கு அவற்றில்—அப்பிராணன்களிலேயே. சேர்விப்பர்—சேர்ப்பதாகிய ஒமத்தைச் செய்வாாகள்.

ப்ராணாபாந கதீருத்வா[3] ப்ராணாயாமாபராயணா:[4]
அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேம் பாதம் ததாபரே[2]
அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி

(இ—ள்) அபரே—பின்னும் சிலர், ப்ரானாமாந கதீருத்வா—பிராண அபான வாயுக்களின் நடைகளைத் தடுத்து, ப்ராணாயாம பராயாணா:—பிராணாயாமத்திற்கு உரிய நிஷ்டையுற்றவராய், அபாநே—அபானத்தின் ப்ராணம்—பிராணனை ஜுஹ்வதி—ஒமம் செய்கிறார்கள். ததா—அப்படியே அபரே—பின்னும் சிலர், ப்ராணே—பிராணனில், அபானம்—அபானத்தை (ஜுஹ்வதி) —ஒமம் செய்கின்றனர்.அபரே—வேறு சிலர், நியதா ஹாரா:—மிதமான ஆகாரம் செய்து கொண்டு, ப்ராணே(ஷ்வேவ) பிராணன்களிலேயே, ப்ராணாந்—பிராணன்களை ஜுஹ்வதி—ஒமம் செய்கிறார்கள்.

ஸ்ரீதரர் மிதமான ஆகாரம் என்பதற்குப் பின்வருமாறு உரை எழுதி உள்ளார்—

'வயிற்றை அன்னாதிகளால் பாதியும் ஜலத்தால் கால் பங்கும் நிரப்பி, எஞ்சிய கால்பங்கு வயிற்றை வாயு சஞ்சரிக்கும்படி விடுவது! பிராண வாயுவை அபான வாயுவில் ஹோமம் செய்தல் என்பது இரண்டையும் ஒன்றாக கலக்கும்படிச் செய்வதாகும். இச்செய்கையை யாகமாக்கும்பொழுது அபானம் அக்கினியாகவும் பிராணன் அவிஸ்ஸாகவும் ஆகின்றன. நாபிக்குக் கீழே சஞ்சரிக்கும் அபானத்தோடு நாபிக்கு மேலே சஞ்சரிக்கும் பிராணனைக் கீழே கொண்டு வந்து கலக்கச் செய்ய வேண்டுமானால், சுவாஸத்தை உள்ளிழுக்க வேண்டும். அவ்வாறு உள்ளிழுப்பது பிராணாயமத்தில் பூரகம் என்று சொல்லப்படுகிறது.

அபான வாயுவைப் பிராணவாயுவில் ஹோமஞ் செய்வது என்பதும் இரண்டையும் ஒன்றாகக் கலக்கும்படி விடுவதேயாகும். இச்செய்கை யாகமாகும்பொழுது பிராணன் அக்கினியாகவும் அபானன் அக்கினியில் இடும் அவிஸாகவும் ஆகின்றன. கீழே சஞ்சரிக்கும் அபானனை மேலே கொண்டுவந்து பிராணனோடு கலக்கச் செய்ய வேண்டுமானால்

'சுவாஸத்தை வெளிவிட வேண்டும்'. அவ்வாறு வெளி விடுவது பிராணாயாமத்தில் ரேசகம் எனப்படுகிறது.

பிராண வாயுவை பிராண வாயுவில், ஹோமம் செய்தல் என்பது வாயுக்கள் வெளிச்செல்லும் வழியையும், உள்ளே வரும் வழியையும் தடுத்து பிராணனை பிராணனிலேயே நிற்கச் செய்வதாகும். இச்செய்கை யாகமாகும்பொழுது பிராணனே அக்கினியாகவும் அவிஸ்ஸாகவும் ஆகிறது. இச்செய்கை நிகழ வெளிக் காற்றை உள் இழுக்காமலும் உள் காற்றை வெளிவிடாமலும் ஏற்கனவே உள்ளிழுத்த பிராண வாயுவை நிறுத்தி வைக்க வேண்டும். பிராணாயாமத்தில் அவ்வாறு செய்வது 'கும்பகம்' என்று சொல்லப்படுகிறது.

'யாகமாகச் செய்யலாம்; அதனால் பந்த நிவர்த்தியும் பெறலாம்' என்பதற்கு இதுவரை பல கருமங்களை எடுத்துக் காட்டிய கண்ணன், யாகத்தின் அவசியத்தை முடிவாக மற்றும் சில வார்த்தைகளில் தெரிவிக்கிறார்.

"இவ்வத்தியாயம் சுலோகம் 25-முதல் இதுவரையிலும் கரும யோகம் பல விதங்களாயிருக்கும் என்றருளினான்" என்ற ராமாநுஜர் இச்சந்தர்ப்பத்தே எழுதிய உரையும் சிந்திக்கத் தக்கது.

எல்லாரும் எச்சம் அதையறிவர் எச்சத்தால்
-எண்ணார்ந்த
பொல்லா வினைஒழியப் போந்து.
ஆங்கெச்ச மிச்ச மமுதூண் விரும்பும் அவர்
ஓங்கு பிரமத்தை உற்றணைவர்-பாங்காக
இவ்வுலகமில் எச்சம் இல்லார்க்கு மேலாகும்
அவ்வுலகம் எத்தால் உண்டாம் ?

(இ-ள்) எண் ஆர்ந்த எல்லாரும்-(பிரும்ம விஷயமான) சிந்தனை மிகுந்த இவர்கள் அனைவரும், எச்சம் அதை அறிவர்-யாக நிஷ்டையை அறிந்திருக்கிறார்கள். எச்சத்தால் பொல்லாவினை ஒழியப் போந்து-(செய்யும்) யக்ஞங்களால் பாவம் நீங்கப் பெற்று, எச்ச மிச்சம் அமுது ஊண் விரும்பும் அவர்-யக்ஞத்தில் மிகுந்ததை அமிர்தத்துக்கு ஒப்பாக (எண்ணி)ப் புசிக்க விரும்புவோர், ஓங்கு பிரமத்தை-மேலான பிரமத்தை, உற்று அணைவர்-அடைவார்கள், பாங்காக எச்சம் இல்லார்க்கு-முறையாக யக்ஞம் செய்யாதவர்க்கு, இவ்வுலகம் இல் - இந்த உலகத்தில் தர்மம் முதலிய (பேறு) புருஷார்த்தங்களில்லை, மேலாகும்

அந்த உலகம் எத்தால் உண்டாம்? மேலான அந்த முக்தி உலகம் எப்படி உண்டாகும்? (உண்டாகாது)

ஸர்வேப்யேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபித கல்மஷா:[3]

யஜ்ஞசிஷ்டாம் ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம்[4][3]

நாயம் லோகோஸ்த்ய யஜ்ஞஸ்ய குதோந்ய: குருஸத்தம

(இ-ள்) ஏதே-இவர்கள் ஸர்வே அபி-எல்லாரும் யஜ்ஞ வித-யக்ஞ நிஷ்டையுடையவர்களாய், யஜ்ஞக்ஷபித கல்மஷா:-யக்ஞங்களால் போக்கப்பட்ட பாபங்களுடையவராய் யஜ்ஞசிஷ்ட அம்ருதபுஜ-யக்ஞத்தில் மிகுந்த (அன்னம் முதலிய) அமுதத்தை உண்பவர்களாய், ஸநாதநம் ப்ரஹ்ம-சாசுவதமான பிரும்மத்தை, யாந்தி-அடைகின்றனர். குரு ஸத்தமா!-அர்ஜுனா! அயஜ்ஞஸ்ய-யக்ஞமில்லாதவனுக்கு அயம் லோக: நாஸ்தி-இகலோகத்தில் சுவர்க்காதிரூபமான புருஷார்த்தம் கிடையாது. அந்ய:-(இதற்குப்) புறம்பான மோக்ஷம், குத:-எப்படி உண்டாகும்?

மேற்கூறிய பல கருமங்களையும் அவற்றிற்கு உபலட்சணமாகக் கொள்ளக் கூடிய வேறு கருமங்களையும் அறிந்து ஏதாவது ஒன்றைப் பகவதாராதனமாகச் செய்வதே யாகம் அல்லது யக்ஞம் அதைச் செய்யாது 'உண்கின்றவன் மிருகத்திற் கொப்பாகி இகத்திலும் பரத்திலும் நன்மை எய்துவதில்லை.

செய்யும் கருமத்தைவிட அதைச் செய்வோன் கொள்ளும் மனோபாவமே பிரதானமாகிறது. ஒரு யோகி தன் அவயவங்களை நற்கருமங்களிலே ஈடுபடுத்தினார். சரீரத்தால் அவர் செய்துவந்த நிய நிஷ்டைகளுக்குக் குறைவேயில்லை. ஆனால் அவர் மனம் தனக்கு எதிர்க் குடிசையிலே வசித்த விபசாரியின் தோஷங்களையே நோக்கிப் பரிதவித்துக் கொண்டு இருந்தது. தீய காரியங்களை உடலால் செய்துவந்த விபசாரியின் மனமோ 'சன்மார்க்கத்தை விட்டுப் பிழைக்க வேறு வழி தெரியாமல் பாவம் செய்கிறோமே என்று வருந்திக் கொண்டிருந்தது. இருவரும் ஒருநாள் இறந்தனர். மறு உலகில் தர்மராஜன் விபசாரியின் உயிரை மரியாதை செய்து உத்தமலோகம் அனுப்பி, யோகியைத் தண்டிக்க வந்தான். யோகி கலங்கினபோது தர்மராஜன் அவருக்கு உன் உடல் நற்கருமம் செய்தது. உன் மனம் விபசாரியின் குற்றத்தை நினைத்துக் கொண்டிருந்தது. அவள் உடல் தீக்கருமம் செய்தது. மனமோ குற்றத்தை உணர்ந்து பகவத்தியானத்தில் ஈடுபட்டது. அவளே உம்மை விடமேல்" என்று பதில் சொன்னானாம். (இது பரமஹம்ஸர் கதைகளுள் ஒன்று).

45. ஞான யக்ஞமே சிரேஷ்டம்

கருமங்கள் பல, அவற்றைச் செய்யும்போது கொள்ளும் மனோபாவத்தால் யாகங்களாகின்றன. அவை இன்னின்ன என்று சிலவற்றை எடுத்துச் சொன்னதற்குக் கண்ணன் வேதத்தை ஆதாரங்காட்டுகிறார்.

'வேதத்தில் சொல்லப்படும் உண்மைகள் அனாதி; நித்தியமானவை பக்தர்களாலும் ஞானிகளாலும் வேதத்தில் அடங்கியவை யாவும் அநுபவ உண்மைகள் என்றே ஒப்புக் கொள்ளப்பட்டவை. ஒவ்வொரு வரும் வேதம் சொல்வது சரிதானா? என்று ஒவ்வொரு அம்சத்திலும் அறியச் சோதனை செய்துகொண்டே காலத்தை வீணாக்க வேண்டியதில்லை. யாகமாகச் செய்யக்கூடிய கருமங்கள் மிகப் பல அவற்றில் சிலவற்றைத் தான் உனக்குச் சொன்னேன். அவை மிகப் பலவாகப் பல விவரங்களுடன் வேதத்தில் காணப்படுகின்றன என்று மேலும் சொல்லுகிறார்.

இன்னே பலவகையால் எச்சம் பிரமத்து
முன்னே பரந்த முகஞ்செய்தே-அன்னவை
தான்கருமத் தானவெனச் சார்ந்தறிநீ ஆங்குனக்கு
வான் கருது முத்திவரு மற்று.

(இ-ள்) இன்னே-இவ்விதம், எச்சம் பல வகையால்-யாகம் பல விதங்களால் முன்னே பிரமத்து முகம்-ஏற்கனவே வேதத்தினுடைய முகத்தில், பரந்த செய்தே-விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்னவைதான்-அப்படிப்பட்டவைகள் கருமத்து ஆன என-கருமங்களால் உண்டானவை என்பதை சார்ந்து-அனுஷ்டானத்தில் பொருந்தி, நீ அறி-நீ தெரிந்து கொள். ஆங்கு அப்பொழுது உனக்கு, வான் கருது முக்தி வரும்-மேலாக எண்ணப்படும் மோக்ஷம் உண்டாகும்.

ஏவம் ப[3]ஹு[4] விதா யஞ்ஞா விததா ப்[3]ரஹ்மணோ முகே[2]
கர்மாஜாந் வித்[3]தி[4]தாந் ஸர்வாந் ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே.

(இ-ள்) ஏவம்-இப்படிப்பட்ட, பஹுவிதா:-பலவிதங்களான, யஜ்ஞா:-யக்ஞங்கள், ப்ரம்மண:- வேதத்தினுடைய முகே-முகத்தில் விததா:-விவரிக்கப்பட்டன, தாந்ஸர்வாந்-அவைகள் எல்லாம். கர்மஜாந்-கருமங்களால் ஆனவை என்று வித்தி-அறி ஏவம்-இந்தப்

பிரகாரம் ஜ்ஞாத்வா—அறிந்து (அனுஷ்டித்து), விமோக்ஷ்யஸே—ஸம்ஸார பந்தத்தினின்று விடுபடுவாய்

'இவ்விதம் அறி அறிந்தால் கருமம் தொடராது' என்று சுலோகத்திலும் பாடலிலும் சொல்லப்படுகிறதால்லவா? அப்பகுதிக்குச் சற்று விரிவாக உரை செய்யப்பட்டிருக்கிறது.

சங்கரர்:— யாக முதலிய கருமங்கள் ஆத்மாவைச் சேர்ந்ததல்ல. மனம், வாக்கு, காயம் (உடல்) இவற்றின் செய்கை என்று தெளிந்து, ஆத்ம ஞான நிஷ்டையிலிருந்தால் கருமத்தால் வரும் பந்தம் தொடராது எனச் சொல்லப்பட்டது.

ராமானுஜர்:—'பல வகையான கரும யோகங்கள் ஆத்ம ஸ்வரூப நிச்சயம் (ஞானம்) பெறுவதற்குக் காரணங்களாயிருக்கின்றன. முன்னே சொல்லப்பட்ட கரும யோகங்கள் யாவும் நாள்தோறும் அனுஷ்டிக்கப்படுகின்ற நித்திய நைமித்திக கருமங்களால் உண்டாயின என்பதை அறிந்துகொள். அவ்வாறு அறிந்து அனுஷ்டித்து வந்தால் பந்த நிவர்த்தி பெறுவாய் என்று தாத்பரியம்.

கருமத்தைச் செய்யும்போது 'நான் செய்கிறேன்' எனது பொருளைக்கொண்டு செய்கிறேன் என்று வரும் அகங்காரம் (அகப்பற்று) மமகாரம் (புறப்பற்று) இரண்டையும் விலக்கிப் பகவதர்ப்பணமாக ஒன்றிலும் ஒட்டாதவனாய்ச் செய்ய வேண்டும். அவ்விதம் செய்வது எக்கருமம்மாயிருந்தாலும் முக்திக்குச் சாதனமாகும் என்று கண்ணன் ஏற்கனவே பலமுறை சொல்லியிருக்கிறார். அதுவே யாகமும் ஆகும் என்று இப்பகுதியில் சொன்னார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த அர்ஜுனனுக்கு ஏராளமான பொருளைச் செலவிட்டு அன்னதானம் சுவர்ண தானம் முதலிய செய்து பலரை வருவித்து விரிவாகப் பலர் காணச் செய்யும் யாகம்போலாகுமா? ஒருவன் தனியாகத்தான் செய்யும் கருமத்தை யாகம் ஆக்குவது? என்று ஆலோசனை உண்டாயிற்று. அரசர்களுக்குப் பலர் காண ஒருகாரியத்தை ஆடம்பரத்துடன் விரிவாகச் செய்வதுதானே உயர்வாகத் தோன்றும்! அதை அறிந்து கொண்ட கண்ணன், யாகத்தில் அடங்கிய ஞானபாகத்தின் மேன்மையைச் சொல்லுகிறார்.

பொருள்மயமாம் எச்சத்தில் போதமிகும்-எல்லாம்
தெருள்மயமாம் எச்சம் தெளிதாம்-கருமம்எல்லாம்
ஞானத்து வந்து முடிந்தே நலம்பயக்கும்
மானத்தைப் பார்த்தான் மதித்து

(இ–ள்) பொருள் மயமாம் எச்சத்தில்–திரவிய (பண) மிகுதியால் செய்யப்படும் யாகத்தைவிட தெருள் மயமாம் எச்சம் எல்லாம்–ஞான மயமான யாகங்கள் யாவும், போதம்–(சொரூப) உணர்வு காரணமாக மிகும்–மேலானதாகும். மானத்தை மதித்து–மோக்ஷத்தையே கருதி, பார்த்தான்–(நல்ல வழியைக்) கண்டு கொண்டவனுடைய தெளிதாம் கருமம் எல்லாம்–தெளிவிற்கு இடமான கருமங்கள் யாவும், ஞானத்து வந்து முடிந்து–(ஆத்ம) ஞானத்திலே சேர்ந்து மறைந்து நலம் பயக்கும்–முக்தியைக் கொடுக்கும்.

ச்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞாந யஜ்ஞ: பரந்தப
ஸர்வம் கர்மாகிலம் பார்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே

(இ–ள்) பரந்தப!–அர்ஜுனா! த்ரவ்யமயாத்–மிகுந்த பொருளால் செய்யப்படும், யக்ஞாத்–யக்ஞத்தைக் காட்டிலும், க்ஞாந யக்ஞ–ஞானமயமான யக்ஞம் ச்ரேயாந்–சிரேஷ்டம், பார்(த்)த–அர்ஜுனா; ஸர்வம்–பலவிதங்களாயிருக்கிற அகிலம் கர்ம–எல்லாக் கருமங்களும்,ஜ்ஞாநே–ஆத்ம ஞானத்தில், பரிஸமாப்யதே–(பலன்களோடு) நன்றாக அடங்கியிருக்கின்றன.

இச்சுலோகத்திற்கு ராமாநுஜர் எழுதிய விரிவுரை சிந்தனைக்குரியது. ராமாநுஜர்–பொருள் முதலியவற்றைக் கொண்டு செய்யப்படும் (கருமமாகிய) யாகத்தில் ஞானம் அடங்கியிருக்கிறது. யக்ஞ ரூபமான ஒவ்வொரு கருமத்திலும் ஒரு பகுதி கருமமாயும், மற்றொரு பகுதி ஞானமாயும் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் அடங்கியுள்ள கருமபாகத்தை விட ஞானபாகமே சிரேஷ்டமானது. ஏ அர்ஜுனா! எல்லாக் கருமங்களும் அவற்றிற்கு உபயோகமான சகல பதார்த்தங்களும் ஞானத்தில் அடங்கியிருக்கின்றன என்றால், இப்படிக் கருமம் செய்து வருவதால் அந்தக் கருமமே (நாளடைவில்) ஞானகாரமாய்விடும் என்பது தாத்பரியம்.

திரவியத்தைக் கொண்டு செய்யும் யாகத்தில், செய்வோனுக்குக் கண்ணன் கூறிய மனோபாவம் இல்லாமல் அகங்கார மமகாரத்துடன் கருமங்கள் நிகழ்ந்து வந்தால், அந்த யாகம் மிகத் தாழ்ந்ததாகும். திரவியமில்லாமல் செய்யப்படும் யாகத்தில் செய்வோனுக்குக் கண்ணன் இதுவரை கூறிய உயர்ந்த மனோபாவம் இருக்குமானால் அதுவே சிறந்ததாகும் பொருளைக் கொண்டு ஞானமின்றிச் செய்யும் யாகத்தைவிட பொருளில்லாவிடினும் ஞானதோடு செய்யும் யாகமே சிரேஷ்டம். யாகத்தில் செய்யும் கருமத்தைவிட மிக முக்கியமானது

ஞானமே (மனோபாவமே) அந்த ஞானம் ஒன்றினாலேயே முழுப்பலனும் கிட்டிவிடும். அதனால் எல்லாக்கருமங்களும் ஞானத்திலே அடங்கியிருக்கின்றன எனப்பட்டது.

பூசலார் என்ற பெயருடைய அன்பர் கடவுளுக்கு ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்கு வேண்டிய பொருள் தன்னிடம் இல்லை என்று பின்வாங்கவில்லை. தன் மனத்தினால் கோயிலுக்கு மதில் அமைத்தார். பின்னர் உள்மண்டபம், பிராகாரம் மடைப்பளி முதலியன அமைத்துக் கடவுள் விக்கிரகத்தையும் மனத்திலே சிருஷ்டித்து அமைத்தார். தன் மானஸீகக் கோயிலுக்குக் கும்பாபிஷேக நாளும் தன்னுள்ளே குறிப்பிட்டு விட்டார்.

அதற்கு முன் காடவ அரசன் ஏராளமான பொருள் செலவுசெய்து பகவானுக்காக ஒரு கல்கோயில் எடுத்திருந்தான். அக்கோயில் கும்பாபிஷேகத்திற்கு, பூசலார் குறித்த நாளையே தானும் கொண்டிருந்தான். ஆனால், அந்நாள் வருவதற்கு முந்திய இரவே பகவான் காடவ அரசன் கனவில் தோன்றி "நீ குறித்த நாளில் உன் ஆலயத்திற்கு நான் வரமுடியாது. அதே தினம் நின்றவூரில் பூசலார் எனக்கென இயற்றிய ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. நான் அங்கு போக வேண்டும். நீ வேறொரு நாளில் பிரதிஷ்டையை நடத்து"என்று சொல்லி மறைந்தார். அரசன் நின்றவூர் சென்று பூசலார் இயற்றியது மானஸீகக் கோயில் என்று அவர் பெருமையை நேரில் போய் அறிந்தான் என்பது புராண வரலாறு. இதனால் மனத்தூய்மை அல்லது ஞானமின்றிக் கேவலம் கருமமே உருவாகப் பொருள்கொண்டு செய்யப்படும் யாகம் விரும்பத்தக்கதல்ல. பொருளில்லாமல் யாகம் செய்யப்பட்டாலும் அது ஞானத்தோடிருந்தால் சிரேஷ்டமாகும் என்பதே இங்கு கண்ணன் குறிப்பிடுவதாகும்.

46. ஞானம் எதனால் வரும்?

திரவியத்தைக் கொண்டு யாகம் செய்யலாம். திரவியமில்லாதவர்களும் தாம் செய்யும் நற் கருமங்களை மானஸீக யாகமாக்கலாம், எல்லா விதமான யாகங்களிலும் கரும பாகத்தைவிட ஞானபாகமே பிரதானமானது. சிறந்தது. யாகத்தில் எவ்வளவு திரவியத்தைச் செலவிட்டாலும் எவ்வளவு சாதனப் பொருள்களை உபயோகித்தாலும் ஞானபாகம் சரியாக அமையாவிட்டால் அதனால்

முக்தியாகிய உயர்ந்த பலன் உண்டாகமாட்டாது. பந்தமே அதிகரிக்கும் என்று முன்னே சொல்லப்பட்டது.

அந்த ஞானம் எல்லோருக்கும் சாமானியமாக வந்துவிடாது. சொல்லளவில் தெரிந்துகொள்வது, பிறர் மறுக்க முடியாதபடி ஆதாரங்காட்டி ஒரு உண்மையை வாது செய்து ஊர்ஜிதம் செய்வது மாத்திரம் ஒன்றைப் பற்றிய உண்மையான ஞானமாகாது. நன்றாக உணர்ந்து அதைச் செய்கையில் கொணர்ந்து அநுபவமாக்குவதே பூரண ஞானமாகும்.

அத்தகைய 'ஞானம் சாதாரண சம்பாஷணையினாலோ பிரசங்கம் போலப் பிறர் சொல்லுவதைக் கேட்பதனாலோ வந்துவிடாது. அதைப் பெறுபவற்கு முயற்சி வேண்டும். பக்தியும் சிரத்தையும் ஆர்வமும் வேண்டும் என்பதைக் கண்ணன் அர்ஜுனனுக்கு மேலும் இரண்டு சுலோகங்களால் எடுத்துக் கூறுகிறார்.

அந்த அறிவை அறிநீ அடிவணங்கிச்
சிந்தையுடன்கேட்டுச் சேவித்தே-முந்தறிவை
ஒத்துப தேசிப்பர் உனக்குணர்ந் தோராய்த்
தத்துவத்தைக் கண்டிருப்பார் தாம்
யாததனை இங்கறிந்தால் இவ்வண்ண மோகியாய்
யாததனால் உன்னிடத்தும் என்னிடத்தும்-ஏதமறப்
பூதங்க ளெல்லாம் பொருந்துநெறி காண்டிநீ
ஆதங் கறிவென் பதம்

(இ-ள்) உணர்ந்தோராய்-அறிந்தவர்களாய், தத்துவத்தைக் கண்டிருப்பர், தாம்-ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்த்திருப்பவர்களாகிய பெரியோர் முந்து அறிவை-முன்னே சொல்லப்பட்ட ஞானத்தை உனக்கு ஒத்து உபதேசிப்பர்-உனக்குப் பிரியத்தோடு உபதேசம் செய்வார்கள், நீ அடிவணங்கி-நீ அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்கியும், சிந்தையுடன் கேட்டு-சிரத்தையோடு பலபடியாகக் கேட்டும் சேவித்தே-பல பணிவிடைகளால் (அவர்களைப்) போற்றியும் அந்த அறிவை-அந்த ஆத்ம ஞானத்தை அறி-தெரிந்து கொள்.

யாது அதனை-எந்த ஞானத்தை இங்கு அறிந்தால்-இப்பொழுது அறிந்துகொண்டால் இவ்வண்ணம் மோகியாய்-இந்த விதமான மோகத்தை அடைய மாட்டாயோ, யாது அதனால்-எந்த ஞானத்தால், உன்னிடத்தும் என்னிடத்தும்-உன்னிடத்தும் என்னிடத்தும், ஏதம் அற-

துன்பம் ஒழிய, பூதங்கள் எல்லாம் பொருந்து நெறி—எல்லா ஜீவராசிகளையும் ஒரே மாதிரியாக (சமமாக) விருக்கும் நிலையை நீகாண்டி—(ஆசாரிய சேவையால்) நீ தெரிந்து கொள்வாயோ, அது அறிவு என்பதம்—(ஒன்றாக அல்லது சமமாகப் பார்க்கும்) அதுவே ஞானம் என்பதின் அடையாளம்.

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ் ஞாநிந: தத்வதர்சிந:
யத் ஜ்ஞாத்வா ந புனர்மோஹம் ஏவம் யாஸ்யஸி பாண்டவ
யே ந பூதாந்ய சேஷேண த்ரக்ஷ்யஸி ஆத்மநி அதோ மயி

(இ—ள்) தத்—அந்த ஆத்ம ஞானத்தை ப்ரணிபாதேந—வணக்கத்தாலும், பரிப்ரச்நேந—பலவிதமான கேள்விகளாலும், ஸேவயா(ச)—பணிவிடைகளாலும் வித்தி—அறி, தத்வ தர்சிந:—தத்துவம் அறிந்த, ஜ்ஞாநிந:—பண்டிதர்கள், தே—உனக்கு, ஜ்ஞாநம்—ஆத்மஞானத்தை, உபதேக்ஷ்யந்தி—உபதேசிப்பார்கள்.

பாண்டவ—அர்ஜுனா! யத்ஜ்ஞாத்வா—எந்தஞானத்தை அறிந்துபுந:—மறுபடியும், ஏவம்—இம்மாதிரி, மோஹம்—அஞ்ஞானத்தை, நயாஸ்யஸி—அடையமாட்டாயோ, யேந—எந்த (ஞானத்தால்) பூதாநி அசேஷேண—பிராணிகள் (ஜீவன்கள்) எல்லாவற்றையும், ஆத்மநி—உன்னிடத்திலும், அத—முடிவில், மயி—என்னிடத்திலும்,த்ரக்ஷ்யஸி—பார்ப்பாயோ (அதை நமஸ்காரத்தாலும் கேள்வியினாலும் ஆசார்ய சேவையாலும் அறி என்று முன் சுலோகத்துடன் இணைத்துப் பொருள் கொள்க)

உபதேசம் என்பது சொல்லளவில் அடங்கிவிடவில்லை. பிறருக்கு நன்மை பயப்பது எது என்பதை சொல்லைவிடத் தெளிவாக அனுஷ்டானத்தால் (ஒழுக்கத்தால்) உபதேசிக்கலாம். உபதேசம் ஒருவனுக்குப் பயனுடையதாக ஆவதென்பது பெரும்பாலும் அவன் உபதேசம் பெறும் சந்தர்ப்பத்தையே பொறுத்திருக்கிறது. ஞான பாகத்தைப் பெரியோர் எப்பொழுதும் தன்னை யண்டிவரும் சிஷ்யன் குறிப்பிடும் நேரத்திலெல்லாம் உபதேசிப்பதில்லை. உபதேசம் பெறுவோனின் விச்வாஸத்தையும் பக்குவத்தையும் ஏற்ற காலத்தையும் அறிந்து கொண்டே உபதேசிக்கிறார்கள். உபதேசத்தை வாய்மொழியாக வெளியிடுவதும் உண்டு. செய்கையாலும் வெளியிடுவதும் உண்டு. சிஷ்யனைத் தன்னோடு கூடவே வசிக்கச் செய்து தன் ஒழுக்கத்தைக் கண்டு ஊகிக்கச் செய்வதும் உண்டு. ஆசார்யன் சிஷ்யனைத்

தன்கண்ணால் உற்றுநோக்கித் தன் மனதில் உள்ளதை ஊகிக்கச் செய்வதும் உபதேசமாகக் கருதப்படுகிறது. இதை நயன (கண்) தீக்ஷை என்று சொல்கிறார்கள்.

தாடகா வனத்தில் வெய்யிலின் கொடுமை தாங்கமாட்டாமல் ராமன் விசுவாமித்திரர் முனிவரை வன விருத்தாந்தத்தைச் சொல்லும்படிக் கேட்டார். அச்சந்தர்ப்பத்தில் முனிவர் அரசகுமாரர் இருவருக்கும் மந்திரோபதேசம் செய்யக் கருதினார். ஆனால் வாய்மொழியாக உபதேசிக்கவில்லை. இரு மைந்தர்களையும் உற்று நோக்கினார். இருவரும் அப்பொழுது முனிவர் பாதத்தருகே வந்து வணங்கி நின்றனர். முனிவர் தான் உபதேசிக்க விரும்பிய மந்திரங்களைத்தன் மனத்தில் நினைக்கவே ராமலக்ஷ்மணர்கள் அந்த மந்திரங்களை உணர்ந்தனர். இவ்வுபதேச முறையைக் கம்பர்

நோக்கினன் அவர்முகம் நோக்க நோக்குடைக்
கோக்குமரரும் அடிகுறுக நான்முகன்
ஆக்கிய விஞ்சைகள் இரண்டும் அவ்வழி
ஊக்கினன் அவை அவர் உள்ளத்து உன்னினார்.

(நோக்குடைய–குறிப்பறியும் தன்மை உடைய, கோகுமரர்–அரச குமாரர், விஞ்சை–பலை அதிபலை என்னும் வித்தை அவழி–அப்பொழுது ஊக்கினன்–நினைப்பால் உபதேசித்தார். உன்னினார்–சிந்தித்தார்) என்ற பாடலில் எடுத்துரைத்தார்.

ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ஸர் விவேகானந்தருக்குத் தன் கையை அவர் மார்பிலே வைத்து உண்மையை உணரச் செய்தார் என்று சொல்வதுண்டு. அவ்வாறாயின் அது ஸ்பர்சதீக்ஷை (உபதேசம்) ஆகும். உபதேசம் வாய்மொழியில் மட்டும் அடங்காமல் இவ்வாறு பலவகைப்பட்டிருப்பதால் ஆத்ம ஞானத்தைக் கேள்வியால் மட்டும் தெரிந்துகொள்ள முடியாது. பாதசேவை பணிவிடைகள் முதலியவற்றைக் குறைவில்லாமல் செய்து ஆசாரியனைப் போற்றியே தெரிந்துகொள்ள வேண்டும். தனது பக்குவத்தையும் விசுவாஸத்தையும் ஆசாரியன் அறிந்து உவந்து உபதேசிக்கும் காலம் வரைக் காத்திருக்க வேண்டும். அவ்வாறின்றி ஏட்டைப் படித்தோ பக்குவமும் விச்வாஸமும் இல்லாமல் பிரசங்கம் கேட்டோ எல்லோரும் ஆத்ம ஞானத்தை அநுபவ சாத்யமாகப் பெற்றுவிட முடியாது என்பதைக் கண்ணன் முதல் சுலோகத்தால் தெரிவித்தார்.

இரண்டாவது சுலோகத்திற்கு அத்வைத பரமாக ஸ்ரீதரரும் விசிஷ்டாத்வைத பரமாக ராமாநுஜரும் கூறிய உரைச் சுருக்கம் நமது சிந்தனைக்குரியது.

(ஸ்ரீ) சகல உயிர்களையும் உன்னிடத்தில் அபேதமாய் (வேற்றுமையில்லாமல்) பார்ப்பாய் பிறகு உன்னையும் என்னிடத்தில் அபேதமாய்க் காண்பாய் (அஞ்ஞானத்தால் உயிர்களுக்கு பிரும்மமே பல்வேறு உயிர்களாகவும் பிரும்மத்திலிருந்து தாம் வேறாகவும் தோற்றும் ஞானம் வந்த போது அந்தப் பேத உணர்வு நீங்கி உயிருக்குத்தான் உள்பட எல்லாம் பிரும்மமாகவேயிருக்கும் என்பது அத்வைத சித்தாந்தம்)

(ரா) இதுவரைச் சொல்லி வந்தபடி நீ கருமயோகத்தை அனுஷ்டித்து வந்தால் நாளடைவில் யோக சித்தியுண்டாகும். சித்தியுண்டாகும் காலத்தில் பெரியோர்களை யடைந்து சேவை செய்தால் உனக்கு அவர்களிடமிருந்து ஞானோபதேசம் கிடைக்கும்.

அந்த ஞானத்தை அடைந்தால் தேகத்தில் தனது என்ற அபிமானமும் அதனால் வரும் மமதை முதலிய மோகமும் உன்னை யடையமாட்டா. அந்த ஞானத்தால் தேவன் மனிதன், மிருகம் பறவை என்ற பல்வேறு சரீரங்களைப் பெற்றிருக்கிற எல்லா உயிர்களையும் உன்னிடத்தில் பார்ப்பாய் என்பதற்கு (தேகத்திற்கு மூலமான) பிரகிருதியினின்று நீங்கிய ஜீவாத்மா சொரூபம் யாவும் ஒரு தன்மையாய் உன்னுடைய ஜீவாத்ம சொரூபம்போல் ஞான வடிவாய் இருக்கப்பார்ப்பாய் என்று பொருள். 'என்னிடத்தில் காண்பாய்' என்பதற்கு ஞானத்தால் பிரகிருதியிலிருந்து விடுபட்ட எல்லா ஜீவ சொரூபத்தையும் எனது (பகவானது) சொரூபத்திற்குச் சமம் என்று காண்பாய்' என்று பொருள்.

இப்பொருளைக் கொள்ள ஆதாரமாக வரப்போகும் 5, 14–ஆம் அத்தியாயங்களிலிருந்து சுலோகங்களை ராமாநுஜர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

கண்ணன் அர்ஜுனனை "நீ பிரும்மம் ஆவாய்" என்றோ அல்லது "பிருமத்திற்குச் சமமாக ஞானத்தால் ஆவாய்" என்றோ எந்த அர்த்தத்தில் சொல்லியிருந்த போதிலும் அர்ஜுனனுக்கு அதைக் கேட்டபோது அதிக மலைப்பே உண்டாய்விட்டது. ஒவ்வொரு ஜீவனும் செய்கிற பாபமும் ஏற்கனவே பல பிறப்புகளில் செய்திருக்கிற பாபமும் அளவற்றவை. அவற்றிற்குரிய பலனை அநுபவிக்கவே பல பிறவிகள்

எடுத்தாக வேண்டும். அதிலும் கொலை மிகப் பாதகமான தொழில் அதை மகாபாதகமான தொழில் என்று சொல்லாம். அதை வமிச பரம்பரையாகச் செய்து பாவத்தை மூட்டை கட்டிய நான் பாவக் கடலிலிருந்து மீள முடியுமா? என்று ஆலோசித்தான். அதையறிந்து கண்ணன் அழகாகச் சமாதானம் கூறினார்.

47. ஞானத்திற்குத் தடை ஏது?

யோகத்தைச் சொல்ல ஆரம்பித்த போதே கண்ணன் 'அர்ஜுனா! எனக்கும் உனக்கும் இதுவரைப் பல பிறவிகள் சென்று போயின. அவை யாவும் இன்னின்ன என்று எனக்குத் தெரியும். ஆனால் உனக்கு எதுவும் தெரியாது' (அத் 4 சு 5) என்று பகவானாகிய தனக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள வேற்றுமையைத் தெரிவித்தார் அல்லவா?

அதனால், 'ஸர்வமும் பிரும்மம் என்ற நினைவைப் பிரதானமாகக் கொண்டு செய்யப்படும் கருமங்களால் ஜீவனின் பாவங்கள் எல்லாம் நசிக்கும்' என்ற உபதேசத்தைக் கேட்ட அர்ஜுனனுக்கு, கடந்து போன எண்ணிறந்த பிறவிகளில் தான் செய்திருக்கக்கூடும். பாவங்களைப் பற்றிய எண்ணம் உண்டாயிற்று. ஜீவனுக்குப் பிறவி எப்பொழுது தொடங்கியது? என்று சொல்ல முடியாதபடி அனாதியாக விருந்து வருகிறது. ஒரு பிறவியில் செய்த பாவம் மறுபிறவிக்குக் காரணமாகிறது. அப்பாவம் மேலும் பாவத்தையே செய்யத் தூண்டவும் செய்கிறது. அவ்வாறு தான் பல பிறவிகளில் செய்த பாவங்கள் மலைபோல் திரண்டிருக்க வேண்டும். ஸர்வமும் பிரும்மம் என்ற ஒரே பாவனையினால் மகத்தான பாவங்களிலிருந்து தன்னால் எப்படி உடனே விடுபட முடியுமா? என்று சந்தேகம் உண்டாயிற்று. அதையறிந்து கொண்ட கண்ணன் அர்ஜுனனின் சந்தேகத்தைப் போக்கப் பின் வருமாறு சொல்லுகிறார்.

பாவிகள் எல்லாரினு நீபாவத்தை மிக்குஇயன்று
மேவுதி ஆகிலுமிம் மெய்யுணர்வாம்-தாவிவரும்
தெப்பத்தை மேற்கொண்டு தீவினையாம் வெங்கடலைத்
தப்பக் கடபுதிநீ தான்

(இ-ள்) பாவிகள் எல்லாரினும்-(தீவினைசெய்த) பாதகர்கள் எல்லாரையும்விட, நீ பாவத்தை மிக்கு இயன்று-நீ பாவத்தை

மிகுதியாகச் செய்து மேவுதி ஆகிலும்–(அதன் பயனை அநுபவிக்கத்) தகுதி உடையவனாயிருந்தாலும் இம் மெய்யுணர்வாம்–(எல்லாம் பிரமம் என்ற) இந்த ஞான அநுபவத்தாலான, தெப்பத்தை மேற்கொண்டு– ஓடத்தை உதவியாகக் கொண்டு, தாவிவரும்–அடுத்தடுத்து வரும் தீவினையாம் வெம் கடலை–பாவமாகிற கொடிய சமுத்திரத்தை நீ தப்பக் கடப்புதி–(உறுதியாக) நீ விடுபட்டுத் தாண்டிவிடுவாய்.

அபிசேதஸி[3] பாபேப்ய:[4] ஸர்வேப்ய:[4] பாபக்ருத்தம:

ஸர்வம் ஜ்ஞாநப்லவேந ஏவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி

(இ–ள்) த்வம்–நீ ஸர்வேப்ய: பாபேப்ய:–எல்லாப் பாவிகளினும் பாபாக்ருத்தம:–அதிகப் பாவியாக அஸிசேத் அபி–இருந்தாயாகிலும் ஸர்வம் வர்ஜிநம் எல்லாப் பாபத்தையும், ஜ்ஞாநபலேவேந எவ–(ஆத்ம) ஞானம் என்னும் ஓடத்தாலேயே, ஸந்தரிஷ்யஸி–நன்கு தாண்டி விடுவாய்

மூலச் சுலோகத்தில் ஞானம் ஓடமாகச் சொல்லப்பட்டது. பாவத்தைக் கடலாகச் சொல்லாமல் ஊகிக்க வைத்ததால் அது ஏக தேச உருவகம். தமிழ்ப் பாலில் ஓடமாகிய ஞானத்திற்கேற்பப் பாவத்தையும் கடலாகக் கூறி மூலத்தை நன்கு விளங்க வைத்தது பாராட்டத்தக்கது.

துன்பத்திலிருந்து தப்புவதற்கு ஞானத்தைத் தவிர வேறு உபாயங்கள் இருப்பதாக உலகில் பலர்நினைக்கலாம். அவை சிறிது காலத்திற்குத்தான் பயன்படுமேயொழிய நிலையாகத் துன்பமின்றியிருக்கத் துணை செய்யா, மனஞ் சஞ்சலத்தால் தவிக்கும் ஒருவன் அதன் மூலகாரணத்தை அகற்றமுடியாமல் மதுபானம் செய்து சஞ்சலத்தை மறைத்து அதினின்றும் தான் தப்பப் பார்க்கிறான். எவ்வளவு நேரம் அம்முறையால் தப்பியிருக்க முடியும்? மதுவின் போதையிருக்கும் சிறிது நேரம் கழிந்ததும் சஞ்சலம் மறுபடி வந்துவிடும். மதுவினால் நாளடைவில் உண்டாகும் கேடுகளும் அவனைப் பாதிக்கும் துன்ப நிவர்த்திக்காக மேற்கொள்ளப்படும் உபாயங்களில் ஞானம் தவிர மற்றவை சிறிதுகால அளவிற்கே மதுவைப்போல துணை செய்யும். மது நாளடையில் உண்போனுக்கு வேறு கேடுகளைத் தருவதுபோல் ஞானமொழிந்த வேறு உபாயங்களையும் வேறான புதிய பந்தங்களையும் உயிருக்கு உண்டாக்கும்.

ஞானம் ஒன்றே உயிர்கள் பாவத்திலிருந்து தப்பவும் அவை மறுபடி தம்மை அணுகாமல் காத்துக் கொள்ளவும் துணை செய்யவல்லது என்பதைக் காட்டவே பாடலில் தப்பக்கப்புதி என்று விரித்துச்

சொல்லப்பட்டது. மேலும் ஒரு சுலோகத்தால் கண்ணன் ஞானத்தின் வலிமையையும் பெருமையையும் கூறுகிறார்.

அங்கிவிற கெல்லாம் எரிப்பதுபோல் அவ்வறிவு
பொங்கிவரும் கன்மம் பொடியாக்கும்-இங்கில்லை
மெய்யறிவில் தூயதுதான் மிக்கவதும் யோகிதான்
பையஎய்தும் நெஞ்சிற் பயின்று

(இ-ள்) அங்கி-நெருப்பானது, விறகு எல்லாம்-எல்லா விறகுகளையும், எரிப்பதுபோல்-எரித்துச் சாம்பலாக்குவது போலவே, அ அறிவு-அந்த (ப்ரும்ம) ஞானம், பொங்கிவரு கன்மம் பொடியாக்கும்-அதிகரித்துக் கொண்டே போகும் கரும பலன்களை அழித்துவிடும், இங்கு-இவ்வுலகத்தில், மெய் அறிவில்-தத்துவ ஞானத்தைப்போல தூயதுதான் இல்லை-பரிசுத்தமான வஸ்து வேறு இல்லை யோகிதான்-யோகஸித்தி பெற்றவன் மிக்க அதும்-மேன்மையான அந்த ஞானத்தையும், நெஞ்சில் பயின்று-மனத்தால் பழகி, பைய எய்தும்-நாளடைவில் அடைவான்.

2 4 3 4 3 4
யதைதாம்ஸி ஸமித்தோக்நி: பஸ்மஸாத்குருதேர்ஜுந!
3 2
ஜ்ஞாநாக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா
3 3
நஹிஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரம் இஹ வித்யதே
3 3 4 3
தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேந ஆத்மநி விந்ததி.

(இ-ள்) அர்ஜுந-அர்ஜுந!, யதா-எப்படி, ஸமித்த: அக்நி:-நன்றாய்ப் பிரகாசிக்கின்ற நெருப்பானது ஏதாம்ஸி-கட்டைகளை பஸ்மஸாத் குருதே-சாம்பலாய்ச் செய்கின்றதோ ததா-அப்படியே ஜ்ஞாந அக்நி:-ஞானத்தீயானது ஸர்வகர்மாணி-எல்லாக் கருமங்களையும் பஸ்மஸாத் ருதே-பொடியாகச் செய்யும்.

இஹ-இப் பிரபஞ்சத்தில் ஜ்ஞாநேந ஸத்ருசம்-ஞானத்தோடு சமமாய் (எண்ணத்தக்க) பவித்ரம் ந வித்யதேஹி-பரிசுத்தமான வஸ்து இல்லை அல்லவா? தத்-அந்த ஞானத்தை யோக ஸம்ஸித்த:-யோக ஸித்தி பெற்றவன் காலேந-காலக் கிராமத்தில் (நாளடைவில்) ஆத்மநி-தன்னில், ஸ்வயம் -தான், விந்ததி-அடைகிறான்.

ஞானம் திடமாய்த் தெளிவாய் ஒருவனுக்கு வாய்த்துவிட்டால் அவன் முன்னே செய்த கருமங்களின் மிகுதியை நினைத்துச் சிறிதும் மலைக்க வேண்டியதில்லை. அந்த (ப்ரும்ம) ஞானம் நன்கு கொழுந்துவிட்டெரியும் அக்னியைப் போன்றது. நெருப்பை அண்டின

கட்டைகள் அளவில் எவ்வளவு மிகுதியாருந்தாலென்ன? அவற்றை நன்கு எரித்துச் சாம்பலாக்கி அழித்துக்கொண்டே அக்கினியும் பிரகாசத்தில் மிகுந்து விளங்கும். அதுபோல் முன் செய்த வினைகளால், ஒருவனுடைய ஆத்ம ஞானம் குன்றாது. அவற்றையே அழித்தொழிக்கும் வலிமை வாய்ந்தது.

உலகில் ஞானத்தைத் தவிர உயர்ந்த வஸ்துக்களாக எண்ணப்படும் வேறு சிலவும் உண்டு. உணவு பதார்த்தங்களை உயர்ந்ததாகச் சொல்லலாம். பகவானின் நிவேதனத்திற்கு உபயோகப்படுவதால் பரிசுத்தமமானவை என்றும் சொல்லாம். ஆனால் அவை தேகத்தின் உறுப்பாகிய வயிற்றினுள் சென்றதும் தேக சம்பந்தத்தால் மிக இழிந்ததாகின்றன. இவ்வாறே உலகில் உயர்ந்ததாகவும் சுத்தமாகவும் சொல்லப்டுகின்ற வஸ்துக்களெல்லாம் பிறவற்றோடு சம்பந்தப்பட்டு தாழ்ந்ததாகவும் அசுத்தமாகவும் மாறிவிடுகின்றன.

ஞானமோ பிற வஸ்துக்களின் சம்பந்தத்தால் தன் பெருமை குறையாமல் பிற வஸ்துக்களை அழிக்கவோ உயர்த்தவோ செய்வதால், அதைப்போல் பரிசுத்தமான உலகில் வேறில்லை என்று கண்ணனால் சொல்லப்பட்டது. இஞ்ஞானம் கண்ணன் கூறிய விதிப்படிக் கருமங்களைச் செய்துவருகிற யோகிக்கு நாளடைவில் சித்திக்கிறது. அந்த ஞானத்தைப்பெற்றுப் பந்த நிவர்த்தி அடைய விரும்புவோர் குரு உபதேசத்தில் நம்பிக்கை கொள்ளவேண்டும். ஞானமடைதலில் முயற்சி கொள்ள வேண்டும். இந்திரியங்களை அடக்கவேண்டும்.

பொருள்களின் உருவத்தை எப்படியிருக்குமென்று பார்க்கமுடியாமல் இருளில் கிடந்து ஒருவன் தவிக்கிறான். அவ்வாறே தவித்த மற்றொருவன் வெளிச்சத்திற்குச் செல்லும் பாதையைக் கண்டுகொண்டு ஒளியின் உதவியால் உண்மைத் தன்மையைக் கண்டனுபவித்துவிட்டான். அவன் பெற்ற ஒளி அனுபவத்தை இருளில் கிடந்து உழல்பவனால் உணரமுடியுமா? உணர முடியாத நிலையில் ஒளியைப் பெற அவனுக்கு முயற்சி வேண்டும். ஒளியைக் காணும் வரையில் காணாதவனுக்குக் கண்டவன் சொல்லும் வழியைப் பின்பற்றுவதில் நம்பிக்கையும் விச்வாஸமும் வேண்டும். அவையன்றி ஒளியைப்பெற வேறு தடைகளும் இருக்கக்கூடும். அதுபோல் ஞானத்தைப்பெற வேறு தடைகறும் குறுக்கிடுவதுண்டு. அவை இன்னின்னவென்று அறிந்து விலக்க வேண்டுமென்பதைக் கண்ணன் மேலும் உபதேசிக்கிறார்.

அறியானாய் ஆதரவும் அற்றே மயக்கம்
செறிவான் வினாசத்தைச் சேரும்-பொறிவாயில்
வந்திலாது இம்மை மறுமையுடன் இன்பந்தான்
சந்தேகப் பட்டான் தனக்கு.

(இ-ள்) அறியானால்-அறிவில்லாதவனாய், ஆதரவும் அற்றே-விச்வாஸமும் இல்லாமல், மயக்கம் செறிவான்-(உபதேச விஷயத்தில்) சந்தேகமும் பொருந்தியவன் விநாசத்தை சேரும்-பெருங்கேட்டை அடைவான், சந்தேகப்பட்டான் தனக்கு-சந்தேகமுற்றவனுக்கு இம்மை மறுமையு-இகலோகத்திலும் பரலோகத்திலும, இன்பம்தான்-இன்பமானது பொறிவாயில்-(அவன் நம்பிய) இந்திரியங்கள் மூலமாக, வந்திலாது-வந்து விடாது.

அஜ்ஞச்சா ச்ரத்த[34] தாநச்ச[4] ஸம்சயாத்மா விநச்யதி
நாயம் லோகேஸ்தி நபரோ ந ஸுகம் ஸம்சயாத்மந[2]:

(இ-ள்) அஜ்ஞச்ச-ஞானமற்றவனாயும், அச்ரத்த தாநச்ச-விசுவாஸ மற்றவனாகவும் ஸம்சயஆத்மா - சந்தேகமான மனம், அமைந்தவனாகவும் (இருப்பான்) விநச்யதி-கெட்டுப் போகிறான்; ஸம்சய ஆத்மந:-சந்தேகமுள்ள மனம் படைத்தவனுக்கு, அயம் லோக:-இந்த உலகமும், ந அஸ்தி-இல்லை, பர:-ந (அஸ்தி)-பரலோகமுமில்லை ஸுகம்-(முக்தியாகிய) சுகமும், நாஸ்தி-இல்லை.

பலன் உண்டாகுமோ மாட்டாதோ என்று நினைப்பது சந்தேகம். அச்சந்தேகத்தால் உபதேசத்தை விச்வாஸத்தோடு மேற்கொள்ள முடியாமல் போகும் அனுஷ்டானமில்லையேல் பலன் கிட்டாதுபோய்விடும். ஆகையால் அர்ஜுனா! நீ சந்தேகத்திற்கு இடம் கொடாமல் நான் உபதேசித்தபடிக் கருமத்தைபலனில் ஆசையில்லாமல் செய்ய முற்படு என்று கண்ணன் ஞான யோகாத்தியாயத்தை முடிக்கிறார்.

48. ஸாரமும் பலனும்

ஞானயோகம் என்று சொல்லபபடும் கீதை நான்காம் அத்தியாயத்தில் பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டன. அர்ஜுனனின் கேள்விக்கும் நினைப்பிற்கும் சந்தேகத்திற்கும் தகுந்தபடிக் கண்ணன் புதிய பொருள்களையும், ஏற்கனவே முந்திய அத்தியாயங்களில் சொன்னவற்றைத் தெளிவுபடுத்துவதற்காக உவமையும் உதாரணமும் காட்டிப் புதிய முறைகளில் தொகுத்து மனதில் வைக்கலாம்.

யோகத்தைப் பகவான் ஆதியில் சூரியனுக்கு உபதேசித்தார். அவ்வுபதேசம் மநுவிற்கும், மநுவிடமிருந்து இக்ஷ்வாகுவிற்கும், அவரிடமிருந்து ராஜரிஷிகளுக்குமாக உலகில் பரவி நீண்டகாலமான பின்பு மறைந்த போயிற்று. அந்தயோகமே அர்ஜுனனுக்குக் கண்ணனால் சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

பகவானுக்கும் ஜீவனுக்கும் கணக்கற்ற ஜன்மங்கள் வந்துபோயின. அவற்றைப் பகவான் அறிவார். ஜீவன் அறியமாட்டான். ஜீவன் தான் செய்த கருமவினைகளால் பந்தப்பட்டு சுதந்திரம் அற்றவனாய் பிறப்பிக்கப்படுகிறான். பகவான் தனது ஸர்வ சுதந்திரத்திற்குப் பங்கம் விளையாமல் தன்னைத்தானே பிறப்பித்துக் கொள்கிறார்.

பகவான் தன்னைப் பிறப்பித்துக் கொள்வதற்கு ஜீவகோடிகள் விஷயமாக அவருக்கு உண்டாகும் கருணையே காரணமாகும். தர்மம் குறைந்து அதர்மம் ஓங்கும்போதெல்லாம் சாதுக்களைக் காக்கவும் துஷ்டர்களைத் தண்டிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும், ஒவ்வோர் யுகத்திலும் தோன்றுகிறார். கர்மசம்பந்தமில்லாமல் சங்கல்பமாத்திரத்தால் தன்னைப் பிறர் காணத் தானே தோன்றும் பகவானின் தோற்றத்தை ஜீவனின் பிறப்போடு ஒப்பிடலாகாது. வேற்றுமை தெரிய அவதாரம் என்றே வியவகரிக்க வேண்டும்.

அவதாரதத்துவ உணர்வு சிறந்த ஞானமாகும். அந்த ஞானத்தால் ஜீவகோடிகள் பிறப்பு நீங்கித் தெய்வத் தன்மையை அடைகிறார்கள்.

பகவான் தன்னை உபாசிப்பதற்குத் தகுந்த விதமாய் அனுக்கிரகம் செய்கிறார். மனித உலகில் கருமங்கள் விரைவில் பலனைத் தருகின்றன. அதனால் பெரும்பாலோர் சாமானிய பலன்களை விரும்பியே தேவதைகளை ஆராதிக்கின்றனர்.

படிப்பில் முன்னேற்றுவிக்க வேண்டி ஒரு ஆசிரியர் தன்னிடம் வந்த பல மாணவர்களை ரகவாரியாகப் பிரிக்கிறார். பிரிவினைக்குத் தகுந்தவாறு பாடப் பயிற்சி அளிக்கிறார். அதனால் ஆசிரியருக்கு ஆகவேண்டிய எதுவுமில்லை. பிரிவினை (தன்னை மாணவர் அண்டுவதற்கு முன் பெற்ற கல்வியைப் பொறுத்து) ஏற்கனவே இருந்துவந்ததால் அதற்கு ஆசிரியர் எந்த வகையிலும் பொறுப்பாளியல்ல.

அவ்வாறே நான்கு வருணங்களும் அவரவர் (முற்பிறவிகளில் செய்த) கர்மாவிற்கும் அதனால் தொடர்ந்த குணத்திற்கும் ஏற்ப

பாகுபாடு செய்து பகவானால் படைக்கப்பட்டன. அப்பாகுபாட்டிற்குப் பகவான் கர்த்தா போலத் தோன்றிய போதிலும் உண்மையில் கர்தாவாவதில்லை. பகவானைக் கருமங்கள் அடைவதில்லை என்றும், கரும பலத்தில் பற்று அற்றவரென்றும் தெரிந்து கொள்ளுகின்றவன் கரும பந்தத்தினின்றும் விடுபடுகின்றான்.

மோக்ஷத்தில் மாத்திரம் இச்சை வைத்தால் பெரியோர்களாலும் கருமங்கள் கடமை என்று செய்யப்பட்டன. கருமங்கள் பண்டிதர்களையும் மோகிக்க வைக்கும் அளவிற்குச் சூட்சுமம் வாய்ந்திருப்பதால் அதன் சொரூபத்தை உள்ளபடி உணர வேண்டும்.

நான் கர்மாவைச் செய்யவில்லை' என்று சொல்லிக் கை கால்களை அசைக்காமல் இருப்பவன் கர்மபந்தத்திற்கு ஆளாகலாம். செய்யவில்லை என்ற ஸங்கல்பம் நான் செய்யவில்லை' என்று அகங்காரத்தால் வருகின்ற கர்த்ருத்வம் இரண்டும் சேர்ந்து கர்மாவாகிப் பந்தத்தைக் கொடுக்கும். ஒருவன் யாதொரு பற்றுமில்லாமல் கர்மாவைக் கடமையெனச் செய்தால் அது பந்தத்தைக் கொடாது. அதனால் அவன் செய்யும் கர்மாவே அகர்மாவாகும். ஆகையால் கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் காண்கின்றவனே விவேகி. மனச்சமாதானம் எய்திய யோகி சிறந்த ஞானி.

தேகாத்ம விவேகம் பெற்ற அந்தஞானி எக்கருமங்களைச் செய்தபோதிலும் கர்த்தாவாவதில்லை. அத்தகைய பெரியோர் கர்மாவில் ஈடுபட்ட ஒவ்வொன்றையும் பிரும்மமாகவே கருகிறார்கள்.

அவர்கள் செய்யும் யக்ஞங்கள் பல வகையாகவிருக்கலாம். சிலர் தவத்தை யக்ஞமாகச் செய்வர். திரவிய தானத்தைச் சிலர் யக்ஞமாகக் கருதச் செய்வர். யோகத்தையும், வேதாத் தியானத்தையும் யக்ஞமாகச் செய்வதும் உண்டு. ப்ரும்ம பாவனையினாலே செய்யப்படும் எந்தவிதமான யாகத்தைச் செய்தாலும் பந்த நிவர்த்தியை அடையலாம். சிரத்தையோடு ஆசார்யனை அடைந்து பணிவுடன் தொண்டு செய்த யோக சூட்சுமத்தை உபதேசம் பெறவேண்டும். உபதேசஞானத்தால் ஒருவன் தன்னிடம் எல்லாப் பிரபஞ்சங்களையும் தன்னைப் பகவானிடத்தில் காணலாம்.

ஆகவே ஞானம் பரம பரிசுத்தமானது. அதைப்போல் மேன்மையுடையது எதுவுமில்லை. பகவதர்ப்பணமான பலனின் ஆசையில்லாமல் செய்யும் கர்மயோகத்தால் அந்த ஞானத்தை காலக் கிரமத்திலே ஒருவன் பெறலாம்.

இந்த ஞான யோக சாரத்தை வேதாந்த தேசிகர் இன்னும் சுருக்கமாக ஒரு பாடலில் தெரிவிக்கிறார்.

பிறவாமை தந்திடத்தானே பிறக்கும் பெருமைகளும்
துறவாக் கிரிசைகள் துர்மதிதன்னால் துலங்குகையும்
இறவா உயிர்நிலையும் கண்டிடும் உலகின் நிலையும்
மறைவாழி மாயவனே எனக்கின்று அறிவித்தான்

(இ-ள்) பிறவாமை தந்திட-உயிர்களுக்குப் பிறப்பில்லாத மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக தானே பிறக்கும் பெருமைகளும்-பகவான் தன் சங்கல்பத்தால்தான் எடுக்கும் அவதாரத்தின் மேன்மைகளும், துறவாக் கிரிசைகள்-விடாமல் செய்ய வேண்டிய கருமங்களும் துர்மதி தன்னால் துலங்குகையும்-(அக்கருமத்தால்) தாழ்ந்த அறிவு பிரகாசமடைவதும், இறவா உயிர் நிலையும்- அழியாத உயிர்த் தன்மையும், கண்டிடும் உலக நிலையும் காண்கின்ற உலக நிலையும், மறைவாழி மாயவன்-வேதத்தில் சொன்ன மாயா காரியங்களைச் செய்த கண்ணன், எனக்கு இன்று அறிவித்தான்-எனக்கு (இவ்வத்தியாத்தால்) இப்பொழுது விளங்க வைத்தான்.

பலனைக் கூறும் கதை

வாரணாஸி எனப்படும் காசிநகரில் பரதர் எனும் யோகி விச்வேச்வரது ஆலயத்தில் வசித்து வந்தார். கீதை நாலாம் அத்தியாயத்தை மிகுந்த பக்தியோடு படிப்பது அவரது வழக்கம். ஒரு நாள் வனத்தில் வசிக்கும் தேவதைகளைத் தரிசிப்பதற்காகத் தற்செயலாகச் சென்றார். அங்கு இரண்டு இலந்த மரங்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு நன்றாக வளர்ந்திருந்தன. பரதயோகி அவற்றின் அடிநிழலில் சிறிதுநேரம் படுத்திருந்து களைப்பாறிச்சென்றார்.அதிலிருந்து சில நாட்களில் மரங்கள் இரண்டும் இலை உதிர்ந்து பட்டுப் போய்விட்டன.

அம்மரங்களின் உயிர்களிரண்டும் ஒரு அந்தணன் இல்லத்தில் இரண்டு பெண்களாகப் பிறந்து வளர்ந்தன. ஏழுவருஷங்கள் சென்றபின் ஒருநாள் அவ்வழியாகவந்த பரதயோகியை அப்பெண்கள் இருவரும் கண்டனர். அன்புடன் அவரை வரவேற்று உபசாரம் செய்து சுவாமி! தேவரீர் கிருபையினால் நாங்கள் மரமாயிருந்த பிறப்பைவிட்டு இம் மனிதவுடலைப் பெற்றோம்' என்று யோகியைக் கொண்டாடினர்.

பரதயோகி அவர்களை 'நீங்கள் யார்? எப்போது மரமாயிருந்து எப்படி விடுபட்டீர்கள்?' என்று கேட்டபோது பெண்கள் இருவரும் தம் விருத்தாந்தத்தைக்கூற வாரம்பித்தனர்.

கோதாவரி பாயும் பிரதேசத்தில் சிந்ந பாபம் என்ற பெயருடைய ஒரு புண்ய தீர்த்தக் கட்டம் உண்டு. அவ்விடத்தில் ஸத்ய தபஸ் என்ற முனிவர் கடுந்தவம் புரிந்துகொண்டிருந்தார். கோடையில் பஞ்சாக்நியின் நடுவிலும் குளிர்காலத்தில் நீரிலும் இருந்து தவம் செய்வார். அவருடைய தவத்தின் மேன்மையால் மரங்கள் பழுத்து வளைந்து அவர்மீது குடைபோல நின்றன. கொடிய மிருகங்கள் அவர் இருந்த இடத்தில் ஒன்றிற்கொன்று பகைமையைவிட்டு அன்போடு வாழ்ந்தன.

இந்திரன் தனக்கு ஆபத்து வருமோ எனறு பயந்து அவர் தவத்தைக் கலைக்க எண்ணினான். தவத்திற்குத் தடையுண்டாகும் பொருட்டு அப்ஸரஸுகளாயிருந்த எங்களை முனிவரிடம் ஏவினான். நாங்கள் மோஹன உருவம் தாங்கி முனிவர் முன் சென்று ஆடிப்பாடி அவர் தவத்தைக் கலைக்கப் பார்த்தோம். அதையுணர்ந்த முனிவர் எங்கள் மீது கடுங்கோபங்கொண்டு கங்கைக்கரையில் இரு மரங்களாகப் போகும்படி எங்களைச் சபித்தார்.

இந்திரனுக்குப் பராதீனர்களாய் அவன் உத்தரவுப்படி நடந்து கொண்ட எங்கள் இருவரையும் மன்னித்துச் சாபம் விமோசனம் செய்தருள வேண்டிப் பிரார்த்தித்தோம். முனிவர் அதைக் கேட்டு மனமிரங்கினார்.பரதயோகி என்பவர் கீதை நான்காம் அத்தியாய மகிமையால் உங்கள் சாபம் நீங்கிப் போகும் என்று பதில் அளித்தார். சாபத்தால் இருமரங்களாயிருந்த நாங்கள் அவர் சொன்ன படியே கீதை 4-ஆம் அத்யாயம் பாராயணம் செய்து மேன்மையடைந்த தாங்கள் மரத்தின் கீழ் வந்து தங்கிய கிருபையால் சாபவிமோசனம் பெற்றோம். அதுமட்டுமின்றி ஸாதுக்கள் குலத்திலே உயர்ந்ததாகிய மானிடப் பிறவியையும் அடைந்தோம். முந்திய பிறப்பின் நினைவையும் பெற்றோம். இதோடு கொடிய ஸம்ஸாரபந்ததத்தினின்றும் விடுபட்டோம் என்றும் தெரிந்து கொண்டோம் என்று கூறித் தம் வரலாற்றை முடித்தனர்.

பரத யோகி கீதை 4-ஆம் அத்யாய மகிமையை அறிந்து ஆச்சரியமடைந்தவராய் கன்யைகள் செய்த பூஜையைப் பெற்றுத் தமதிடம் சென்றார்.

(இக்கதை பாத்மத்திலுள்ளது)

49. துறப்பதினும் கருமம் செய்வதே மேல்

போர்க்களத்தில் பந்து மித்திரரைக் கண்டபோது தோன்றிய சோக மோகத்தால் அர்ஜுனன் போர் செய்யப் பின் வாங்கினான். அப்பொழுது கண்ணன் அர்ஜுனனுக்குத் தத்துவத்தை யுணர்த்தும் பொருட்டுச் சாங்கிய யோகத்தால் ஞானத்தின் பெருமையைக் கூறினார். ப்ரும்மக் ஞான நிஷ்டையில் ஒரு நிமிஷமாயினும் நிலையாக நிற்பவனுக்குப் பந்தங்கள் யாவும் நிவர்த்தியாகி மறுபடி வருவதேயில்லை என்றும் தெரிவித்தார்.

'ஞானம் அவ்விதம் சிரேஷ்டமாயிருக்கக் கருமத்தை ஏன் செய்ய வேண்டும்' என்று அர்ஜுனன் கேட்டான். அப்பொழுது ஜீவனால் கருமமின்றி யிருக்க முடியாத தன்மையை எடுத்து விளக்கினார். ஞானியாய் இருந்தபோதிலும் உலக நன்மைக்காகப் பலனில் இச்சையில்லாமல் பகவதர்ப்பணமாகச் சனகாதியரைப் போல் செய்தே தீரவேண்டிய அவசியத்தைக் கரும யோகாத்தியாயத்தில் வற்புறுத்தினார்.

அக்கருமங்களை அகப்பற்று புறப்பற்றில்லாமல் யாகமாகச் செய்யவேண்டும். யாகத்தில் கரும பாகத்தை விட ஞானபாகமே மேலானது. செய்வோன் கொள்ளும் ஞான பாகத்தில் கருமங்களும் அவற்றிற்கு உபயோகமான பொருள்களும் அடங்கிவிடுகின்றன. ஞானம், ஜீவனால் பல பிறவிகளில் சேர்க்கப்பட்ட கரும பந்தங்கள் அளவில் மலைபோலிருந்தாலும், அக்னியைப் போல் எரித்துச் சாம்பலாக்க வல்லது. அதைப் பெரியோர்களைச் சார்ந்து பக்திவிச்வாஸத்துடன் சேவை செய்து பெறலாம். அந்த ஞானத்தை அடைந்தால் கருமங்கள் பந்தம் செய்யமாட்டா. ஆகையால் அர்ஜுனா! ஞானத்தால் உன் சந்தேகத்தைப் போக்கிகொண்டு கருமத்தை அனுஷ்டானம் செய்ய எழு என்று கண்ணன் ஞானயோகாத்யாயத்தை முடித்தார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த அர்ஜுனனுக்கு மறுபடியும் சந்தேகம் தோன்றியது. ஞானமே பந்தங்களை விலக்கி முக்தி தரவல்லது சிரேஷ்டமானது என்றால் கருமாகிய போரை ஏன் செய்யவேண்டும்! கண்ணன் முடிவில் அதை ஏன் தூண்ட வேண்டும்? என்ற ஆலோசனையின் காரணமாக அர்ஜுனன் கண்ணனைப் பின்னும் கேட்கிறான்.

கருமம் விடுமறிவும், கண்ண !அதன் பின்னும்
ஒருமையுடன் யோகும் உரைத்தி-இருமையிலும்
ஒன்றுரைப்பாய் என்றுரைத்தான் பார்த்தன் உயரிறையை
நின்றுரையா நிச்சயத்தை நேர்ந்து

(இ—ள்) கண்ண!—கிருஷ்ணா! கருமம் விடும் அறிவும்—கருமங்களை விடுதலாகிய ஞானத்தையும், அதன் பின்னும்—அதற்குப் பிறகு ஒருமையுடன் யோகும்—ஒரே மாதிரியாகக் கரும யோகத்தையும், உரைத்தி—மேன்மையாகப் பேசுகிறாய், இருமையிலும்—(கருமத்தை) விடுவது பற்றுவது என்ற இவ்விரண்டிலும், நின்றுரையா நிச்சயத்தை நேர்ந்து—சிறந்ததான நிச்சயமானதைத் தேர்ந்து, ஒன்று உரைப்பாய்—ஒன்றையே எனக்குச் சொல்லுவாயாக என்று பார்த்தன் உரைத்தான்—என அர்ஜுனன் கேட்டான்.

ஸந்யாஸம் கர்மாணாம் க்ருஷ்ண புநர் யோக[3]ஞ்ச சம்ஸஸி
யச்ச[2]ரேய ஏதயோ ரேகம் தந்மே ப்[3]ரூஹி ஸு நிச்சிதம்

(இ—ள்) க்ருஷ்ண—கிருஷ்ணா! புந:—மறுபடியும், கர்மணாம்—கருமங்களின் ஸந்யாஸம்—விடுதல் என்கிற ஞானத்தையும், யோகம் ச—கரும யோகத்தையும், சம்ஸஸி—புகழ்னென்றீர், ஏதயோ:—இரண்டிற்குளே ச்ரேய:—மேலானதாக, யத் ஏகம் அஸ்தி—யாது ஒன்று உண்டோ, தத்—அதை மே—எனக்கு, ஸுநிச்சிதம் ப்ருஹி—நன்கு நிச்சயிக்கப்பட்ட தாகச் சொல்வீர்.

கண்ணன் கருமயோகத்தைச் சிறப்பாகக் கொண்டாடினார். பின்னர் 'உலகில் ஞானத்துக்குச் சமானமாய்ப் பரிசுத்தமாயது வேறொன்றில்லை' (அத் 4 சு 38) என்று ஞானத்தையும் கொண்டாடினார். ஆனால் கருமத்தைச் செய்யாது அடியோடு விட்டு விடுவதை எங்கும் கொண்டாடவில்லை. செய்யாமல் விடுவது ஸ்வரூபத் தியாகம். செய்து கொண்டே பலனை வேண்டாமென்று விடுவது பலத்தியாகம்.

பலத்தியாகத்தை யோகம் என்றும், செய்வோனாகிய ஜீவன் அக்கருமத்தைச் செய்யும் கர்த்தா தான் அல்ல என்று உணர்ந்துகொள்வதை அதில் அடங்கிய ஞானம் என்றும் கொள்ள வேண்டும்.ட இவ்விரண்டையுமே கண்ணன், சமமாகப் பாராட்டினார். அவ்விரண்டில் ஒவ்வொன்றுமே மோக்ஷம் தரவல்லதாயிருக்க ஏதாவது ஒன்றைத் தான் மேற்கொண்டால் போதுமே என்ற அர்ஜுனனுக்குத்

தோன்றியது. ஆகையால் இரண்டில் சிரேஷ்டமான ஒன்றையே எனக்குக் கூறும் என்று அர்ஜுனன் கேட்கிறான்.

'கருமங்களை விடுதல்' என்பதற்குக் கரும சந்நியாஸம் அதாவது கருமத்தைச் செய்யாமல் எல்லா வகைகளாலும் அடியோடு விட்டுவிடுவது' என்று இப்பகுதிக்குப் பொருள் கொள்வதுமுண்டு. அர்ஜுனன் கேள்விக்குப் பொருத்தமான பொருளைக் கண்ணன் கூறும் பதிலிலிருந்து இயைந்தபடி ஊகித்துக்கொள்க.

இக்கரும யோகம்அது விட்டுணர்வாம் இவ்விரண்டும்
தக்கநலம் சாதிக்கும் சாதனமாம்-அக்கருமம்
விட்டியல் தன்னில் மிகநன்று அதன்செயலில்
பட்டியலு மாறு பயின்று

(இ-ள்) இ கரும யோகம்—இந்தக் கரும யோகம், அதுவிட்டு உணர்வாம்—கருமத்தை விடுதல் என்கிற ஞானயோகம் ஆகிய இ இரண்டும்—இந்த இரண்டும் மார்க்கங்களும் தக்க நலம் சாதிக்கும்—புருஷார்த்தமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல, சாதனமாம்—உபாயங்களாகும். அ கருமம் விட்டு இயல் தன்னில்—அக்கருமத்தை விடும் (ஸந்யாஸ ரூபமான) யோகத்தைக் காட்டிலும், அதன் செயலில் பயின்று பட்டு இயலும் ஆறு—அக்கருமத்தில் பொருந்தி ஒன்றுபடும் கரும யோக மார்க்கமே, மிக நன்று—மிகச் சிறந்தது.

ஸந்யாஸ: கர்மயோகச்ச நி:ச்ரேயஸகரா[3] வுபௌ[4]
தயோஸ்து கர்மஸந்யாஸாத் கர்ம யோகோ[3] விசிஷ்யதே

(இ-ள்) ஸந்யாஸ:—கருமங்களை விடுதல் என்கிற ஞான யோகமும், கர்ம யோகச்ச—கர்ம யோகமும், உபௌ—(ஆகிய) இரண்டும், நி:ச்ரேயஸ கரௌ—மோக்ஷ சாதனமானவைகள், தயோ: மத்யே—அவற்றின் இடையில், கர்ம ஸந்யாஸாத்—கர்மத்தை விடுவதைக் காட்டிலும், கர்மயோ: து—கர்மயோகமே விசிஷ்யதே—சிறப்புப் பொருந்தியது.

இப் பகுதியில் கூறிய விடுவதும் பற்றுவதுமாகிய கருமம் பலாபேக்ஷையின்றிப் பகவதர்ப்பணமாகச் செய்யப்படும் கருமமாகும். முக்தி தருவது அதுவேயாதலின் விடுவதைக் காமிய கருமமாகக் கொள்ளலாகாது. முற்றத் துறப்பதற்குரிய ஞானநிலை அநேகருக்கு வருவதில்லை வருவதும் துர்லபம். வந்ததாகப் பாவித்துக் கருமங்களை அறவே விடும் ஸந்யாஸத்தை மேற்கொள்வதில் யோகம் ஞானம்

இரண்டும் வராமல் போகும் அபாயமும் உண்டு. அதை நினைத்துப் பார்த்தால் பலர் நன்மையை மனத்தே கொண்டு எல்லோரும் மேற்கொள்ளத்தக்க நிஷ்காம கருமயோகத்தையே மேல் என்று சொல்லவேண்டும் என்பதைக் கண்ணன் கூறியதன் தாத்பரியமாகக் கொள்ளலாம்.

இயல்பினால் இல் வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல் வாருள் எல்லாம் தலை

(இயல்பினால்–கருமங்களை விடாமல் செய்தற்குரிய நிலையோடு முயல்வாருள்–பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தைப் பெற முயற்சி செய்கின்ற இல்லறத்தார் துறவறத்தாருள்)

முற்றத் துறந்தற்குரிய அடையாளங்களைக் கொண்டு ஸந்யாசி ஆகாமல் ஆசை, துவேஷம், சுக துக்கம் அற்றவனாயிருக்கும் எவனும் ஸந்நியாசி ஆகிறான். அவன் முற்றற் துறத்தலாகிய பிரயாசமில்லாமலே பந்த நிவர்த்தி பெறுகிறான் என்று உபதேசித்துக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

சாங்கியமும் யோகமதும் தான்அறியார் வேறென்பார்
ஆங்கதனை நன்கறிவார் அஃதுரையார்–ஆங்கவற்றில்
ஒன்றுதனில் நின்றும் உடனியல்வார் அவ்விரண்டில்
நின்றபயன் எல்லாம் நேரும்.

(இ–ள்) சாங்கியமும் யோகம் அதும் தான் அறியார்–ஞானத்தையும் கருமயோகத்தையும் அறிந்து கொள்ளாதவர்கள், வேறு என்பார்–அவற்றை ஒவ்வொன்றும் வெவ்வேறானனது என்று சொல்லுவார்கள். நன்கு அறிவார்–அவற்றை நன்கு அறிந்து கொண்டவர் அஃது உரையார் அவ்வாறு சொல்லமாட்டார்கள். அவற்றில்–ஞானம் கருமம் ஆகிய இரண்டு யோகங்களில் ஒன்றுதனில் நின்றும் உடன் இயல்வார் ஏதாவது ஒன்றைப்பற்றி நன்றாக அனுஷ்டித்தவர். இரண்டில் நின்றபயன் எல்லாம்–இரண்டினாலும் வருகின்ற பிரயோசனத்தை முழுதும், நேரும்–அடைவார்கள்?

2 3 2 3 3 3 3
ஸாங்க்யயோ கௌ ப்ருதக் பாலா: ப்ரவதந்தி நபண்டிதா:
2 4 3 2
ஏகம் அப்யாஸ்தித ஸ்ஸம்யக் உபயோ: விந்ததே பலம்

(இ–ள்) பாலா:–அஞ்ஞானமுடையவர் ஸாங்க்ய யோகௌ ஞானம் கர்மம் ஆகிய யோகங்களை ப்ருதக்–தனிப்பட்டவைகளாக

ப்ரவதந்தி–சொல்லுகிறார்கள், பண்டிதா:–பண்டிதர்களோ, ந–சொல்லமாட்டார்கள். உபயோ, இவ்விரண்டிலும் ஏகம் ஆஸ்தித:அபி–ஒன்றை அனுஷ்டித்தாலும் ஸம்யக் பலம்–இரண்டின்பலனை, விந்ததே–அடைகிறான்.

கருமயோகத்தைச் சரியாக அனுஷ்டிப்பவன் ஞானம் வராமல் தப்பமுடியாது. ஞானயோகத்தைச் சரியாக அனுஷ்டிப்பவன் உலக சம்ரக்ஷணார்த்தமாக பலனில் இச்சையில்லாமல் பகவதர்ப்பணமாக ஏதாவது கருமம் செய்யாமல் தப்புவதில்லை. அதனால் ஒரே பலன் இருவருக்கும் கிடைக்கும்.

50. கர்மயோகம் ஞானத்தினும் எவ்வாறு சிறந்தது?

அர்ஜுனன் கேள்விக்குப் பதிலாகக் கண்ணன் மிகத்தெளிவான வார்த்தைகளில் வெவ்வேறு விதமாகப் பொருள் செய்ய முடியாத படி 'கருமத்தை விடுதலினும் (கர்ம ஸந்யாஸத்தினும்) கருமம் செய்வதே சிரேஷ்டம்' என்று சொன்னார். 'அவை இரண்டில் எந்த ஒன்றைச் செவ்வையாய் அனுஷ்டித்தாலும் இரண்டில் பலனையும் அடையலாம்' என்று மேலும் சொல்லியபோதிலும் கீதை கருமத்திலே நோக்குடையது எனச் சொல்லுபவர்கள் இப்பகுதியைக் கண்டு அளவு கடந்து குதூகலம் அடைகிறார்கள். கருமத்திற்குள்ள பிராதான்யம் ஞானத்திற்குக் கிடையாதென்பது இப்பகுதியால் நன்கு வெளிப்பட்டு விட்டதென்கிறனர்.

கீதை ஞானத்திலே நோக்குடையதெனக் கருதும் ஞானவாதிகள் 'ஞானத்தைவிடத் தாழ்வான கருமத்திற்குச் சந்தர்ப்பத்தையும் கேள்வியைக் கேட்ட அர்ஜுனனையும் கருதிக் கண்ணன் ஏற்றம் சொன்னாரேயொழிய நோக்கம் அதுவல்ல'என்று இப்பகுதியில் அளவு கடந்து வாதிக்கின்றனர்.

இரு சாராரும் தாம்கொண்ட கருத்திற்கேற்பக் கீதையின் அத்தியாய முடிவிலும் பொருள் செய்து தமது கொள்கையே நிலை நாட்டப்பட்டுவிட்டதாக சொல்லிக்கொள்ளுகின்றனர். கீதையில் ஞானத்தை மேன்மையாகவும் மோக்ஷ சாதனமாகவும் சொல்லும் பகுதிகள் இருக்கின்றன. அவ்வாறே கருமத்தைச் சிறப்பாகவும் மோக்ஷசாதனமாகவும் கூறும் பகுதிகளும் இருக்கின்றன. ஆனால்

ஞானவாதிகள் கருமத்திற்குக் கண்ணன் கூறிய மேன்மையையும் மோக்ஷத்திற்கு உபாயமாகும் தன்மையையும் உள்ளபடியே ஒப்புக் கொள்ள மனமில்லாமல் வேறு காரணம் கற்பித்துக் கூறுகின்றனர். அவ்வாறே கருமவாதிகள் ஞானத்திற்குக் கூறிய மேன்மைகளையும் உபாயத்வத்தையும் ஒப்புக்கொள்ள மனமில்லாமல் அப் பகுதிகளுக்கு வேறு பொருளும் காரணமும் கற்பித்துக் கூறுகின்றனர்.

கண்ணன் ஞான கர்மங்கள் இரண்டையும் சமமாகவே சொல்லுகிறார் என்பது நடு நிலைமையுடன் பார்ப்போருக்கு நன்கு விளங்கும். ஞானத்தைத் தந்தை என்றும், கருமத்தைத் தாய் என்றும் கொள்ளலாம். கருமத்தைத் தந்தை என்றும், ஞானத்தைத் தாய் என்று மாற்றிக் கொண்டாலும் அவற்றில் ஏற்றத் தாழ்வு உண்டாவதற்கில்லை. தந்தையின்றித் தாயைப் பெறமுடியாது. தாயின்றித் தந்தையைப் பெறவும் முடியாது. இரண்டும் சமமாய் மோக்ஷத்திற்கு உபாயங்களாய் இருக்கும்பொழுது கண்ணன் இவ்வத்தியாய ஆரம்பத்தில் கருமத்தை மற்றையதைவிடச் சிறந்தது என்று அர்ஜுனனுக்குச் சொல்லிவிட்டார் அல்லவா? அவ்வாறு சொல்லியதற்குக் கண்ணனே வரும் சுலோகங்களில் தக்க காரணங்களைக் காட்டுகிறார். அவற்றை ஊன்றிக் கவனித்தால், கர்மவாதிகள் 'தங்கள் வாதமே வென்றது' என்று குதூகலம் கொள்வதற்கோ, ஞானவாதிகள் தங்கள் வாதத்திற்கு 'இவ்வத்தியாயாத்தின் 2-வது சுலோகத்தால் பலவீனம் வந்துவிடுமோ?' என்று மனம் தளர்வதற்கோ சிறிதும் இடமில்லை என்பது நன்கு புலனாகும்.

அறிவாறாம் சாங்கியருக்கு ஆகுபயன் கன்மச்
செறிவாராம் யோகியர்க்குச் சேரும்-நெறியாலே
ஒன்றெனவே சாங்கியமும் யோகமதும் உன்னினவன்
நன்றெனவே கண்டான் நலம்.

(இ-ள்) அறிவு ஆறாம்-ஞான மார்க்கத்தைக்கொண்ட, சாங்கியருக்கு ஆகுபயன்-சாங்கியர்களுக்கு உண்டாகின்ற பிரயோசனம், கன்மச்செறிவாராம் யோகியர்க்கு-நிஷ்காம கருமத்தில் பொருந்திய யோகிகளுக்கு, சேரும்-கிடைக்கும், நெறியாலே-(ஆகையால்) முறையாகவே, சாங்கியமும் யோகமதும்-ஞானத்தையும் கருமத்தையும், ஒன்று எனவே உன்னனிவன்-ஒன்றே என்று அறிந்துகொண்டவன், நலம் நன்று என கண்டான்-உண்மையைத் தெளிவாக அறிந்து கொண்டவனாகிறான்.

யத் ஸாங்க்[2]யை: ப்ராய்யதே ஸ்[2]தாநம் தத்[3]யோகை[3]ரபி க[3]ம்யதே

ஏகம் ஸாங்க்[2]யாச யோகஞ்ச ய:பச்யதி ஸபச்யதி

(இ–ள்) ஸாங்க்யை:–ஞான நிஷ்டர்களால், யத் ஸ்தாநம்–எந்த இடம் ப்ராய்யதே–அடையப்படுகின்றதோ, தத்–அது, யோகைரபி–கரும யோகிகளாலும், கம்யதே–அடையப்படும்; ஸாங்க்யஞ்ச–ஞான யோகத்தையும், ஏகம்–ஒன்றாக, ய: பச்யதி–எவன் பார்க்கிறானோ, ஸ;–அவனே, பச்யதி–(உண்மையயைக்) காண்கிறான்.

கருமத்தை ஞானத்தினும் சிறந்ததாக முன்னே கூறியதற்குப் பிரதான காரணத்தைத் தெரிவிப்பதற்கு முன்பு, இரண்டையும் ஒரு அம்சத்தால் ஒன்றாகக் கருதுதற்கு இடமிருப்பதை இச் சுலோகத்தால் விளக்குகிறார். 'ஞானி அடையும் பலனையே கருமயோகி அடைகிறான். ஞானத்தையும் கருமத்தையும் ஒன்றாகவே தெரிந்து கொள்கின்றவன் அறிவாளி' என்பது சுலோகார்த்தம்.

'ஏகம் ய: பச்யதி என்ற மூலத்தையும், அதற்குச் சரியான மொழிபெயர்ப்பானஒன்று எனவே உன்னினவன்' என்றபாடல் பகுதியையும் ஊன்றிக் கவனித்தால் பல பொருள்கள் விளங்கும்.

'ஒரே பலனைத் தருவதால் இரண்டையும் சமமாகவே தெரிந்துகொள்பவன்' என்பது மேலாகத் தோன்றும் பொருள். கரும யோகத்தைச் செவ்வையாய் அனுஷ்டிக்கின்றவன் ஞானம் பெறாதிருப்பதில்லை. அனுஷ்டிக்கும் காலத்திலேயே யோகிக்கு ஞானானுபவமும் கலந்தேதான்வரும். 'தேகமுள்ளவரை எக்காலத்திலும் நிமிஷங்கள் கூட ஒருவனும் கருமம் செய்யாமல் இருப்பதில்லை' (அத் 3 சு.5) என்று முன்னே கூறியபடி ஞானியும் தேகமுள்ளவரை ஏதாவது கருமம் செய்யாதிருப்பதில்லை. அக்கருமத்திற் ஞானி எத்தகைய பலனையும் எதிர் பார்ப்பதில்லை. தேகாத்மா விவேகம் ஞானிக்கு நன்கு வரப்பெற்றிருப்பதால் அக்கருமத்திற்குக் கர்த்தாவாவதுமில்லை. அதனால் கரும பந்தம் அவனைத் தொடர்வதுமில்லை. ஆகவே ஞானமார்க்கத்தைச் செவ்வையாய் மேற்கொண்டவனிடம் நிஷ்காம்ய கருமயோகம் இல்லாதிருப்பதில்லை. எனவே ஞானமில்லாமல் கருமத்தையோ, கருமயோகமில்லாமல் ஞானத்தையோ அனுஷ்டிக்க முடியாதர்கையால், ஞான கருமத்தை வெவ்வெறாகக் கருதாமல் 'ஒன்றாகவே உணர்கின்றவன்' என்ற பொருள், தொடரில் நன்கு விளங்கும். 'ஜனகன்' இதற்கு எடுத்துக்காட்டு. அவனிடத்தில் யோகமும் இருந்தது. ஞானமும் இருந்தது. கீதை (அத் 3 சு 20) ஜனகனைக் கரும

யோகத்தால் சித்தியடைந்தவனாகச் சொன்னபோதிலும் அவன் பெற்றிருந்த ஞானத்தின் மேன்மையை விளக்கும் கதைகளும் பலவுண்டு. நிற்க இச்சுலோகத்திற்குச் சங்கரர் கூறிய விரிவுரையும் நம் சிந்தனைக்குரியது.

சங்கரர்:— கரும யோகம் சிரேஷ்டம் என்று முன்னே சொன்னார். இப்போது ஞானயோகம் கருமயோகம் இரண்டும் ஒன்றென்றும் ஒரே பலனையுடையனவென்றும் கூறுகிறார். இது எவ்வாறு பொருந்தும் எனில்—கரும யோகம் ஞானத்தை உண்டாக்கி முடிவில் மோக்ஷத்தைக் கொடுக்கிறது. ஞானமும் மோக்ஷத்தைத்தான் கொடுக்கின்றது. முடிவான பலன் இரண்டிற்கும் ஒன்றேயாகையால் இரண்டையும் ஒன்றெனக் கூறுவது பொருந்தும். ஞானயோகத்தைவிடக் கருமயோகம் ஒருபடி தாழ்ந்ததாக விருக்கும்போது கரும யோகத்தைச் சிரேஷ்டம் எனப் பாராட்டலாமோ எனில்—கரும சந்நியாசம் மேலா? கருமம் மேலா? என்று அர்ஜுனன் கேள்வி கேட்டபடியாலும் அப்பொழுது அர்ஜுனன் கருமாதிகாரியயிருந்தாலும் அர்ஜுனனைக் கருதி 'அவனுக்குக் கருமம் சிரேஷ்டம்' என்று சொன்னார். உண்மையில் ஞானயோகமே சிரேஷ்டம். கருமத்தைச் சிரேஷ்டம் என்றதற்குக் காரணங்களைக் கண்ணன் அடுத்தபடியாகக் கூறுகிறார்.

ஏலும் துறவறிவு இங்குஎய்தரிது ஆகும்முனே
கோலும்யோ கக்கருமம் கூடாமல்-மேலும்தான்
உற்றான் இயோகம் உயர்முனிவன் தாழாமல்
பெற்றான் பிரமஉயிர்ப் பேறு

(இ—ள்) முனே கோலும் யோக கருமம் கூடாமல்—முன்னே சொலலுப்பட்ட நிஷ்காமிய கரும யோகமில்லாமல், ஏலும் துறவு அறிவு—செவ்வையாகத் துறத்தாலாகிற (ஸந்யாஸமாகிற) ஞான யோகத்தை, இங்கு எய்த அரிது ஆகும்—இவ்வுலகில் அடைவது கஷ்டம் (துர்லபம்) ஆகும், மேலும்தான்—அன்றியும், இ யோகம் உற்றான் உயர் முனிவன்—இக் கருமயோகத்தில் பொருந்தியதனால் மேன்மையடையும் மன்னசீலன், பிரம உயிர்ப் பேறு—பிரமத்தை அடைவதாகிய ஜீவனுக்குரிய புருஷார்த்தத்தை, தாழாமல் பெற்றான்—தாமதமின்றி அடைந்தவானாகிறான்.

ஸந்யாஸஸ்து மஹாபாஹோ து:க்ம் ஆப்தும் அயோக்த:
யோகயுக்தோ முநிர் ப்ரஹ்மா நசிரேணாதி கச்சதி

(இ-ள்) மஹா பாஹோ-பெரிய தோள்களையுடைய அர்ஜுனா: அயோகத:-கரும யோகமின்றி, ஸந்யாஸஸ்து-ஞானயோகமானது, ஆப்தும்-அடைவதற்கு, துக்கம்-கஷ்டமாயிருக்கிறது, யோக யுக்த:-கருமயோகத்தில் பொருந்தியவனாய், முநி:-(ஆத்மாவை) மனனஞ்செய்பவன், நசிரேண-தாமதமில்லாமல், ப்ரம்ம-பிரம்மத்தை, அதிகச்சதி-அடைகின்றான்.

கருமயோகத்தை ஞானயோகத்தினும் சிறப்பாகச் சொன்னதற்குக் காரணங்கள் இரண்டு. அவை:-(1) கருமயோகம் பயிலாமல் ஞானத்தை அநுபவ சாத்யமாகப் பெற முயன்றால் ஞானம் சித்திப்பது மிகக் கஷ்டமாகும். தேகமும் இந்திரியமும் மனனும் புத்தியும் தானல்ல என்பதை வாயினால் சொல்லிவிட்டால் பந்தத்தினின்று விடுபட்டுவிட முடியாது. அதை உணரவேண்டும். வாழ்க்கையில் அநுபவிக்கவும் வேண்டும். 'எல்லாம் வாஸுதேவமயம்', 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்' என்ற பாவனை வரப் பல பிறப்புகளில் கருமம் செய்திருக்க வேண்டும். அதன் பயனாகவே 'எல்லாம் வாஸுதேவன்' என்ற உணர்வு வரும். அவ்வாறு இருக்கும் மஹாத்மா துர்லபம்' என்று கீதையில் (7-ம் அத். சு 19-ல்) பகவானே சொல்லுகிறார்.

(2) கருமயோகிக்குக் காலக்கிரமத்தில் ஞானம் முதிர்ந்து அனுபவமாகும்பொழுது முன்செய்த கருமங்கள் தன்னிடையே அவனை விட்டுப்போகும். யோகி விஷயத்தில் 'கருமத்தை விட்டவிட்டான்' என்று வியவகாரம் செய்வது பொருத்தமாகாது. கோபிகைகள் கண்ணனை நினைத்துத் தங்கள் பர்த்தாக்களுக்கும் பெற்றோர்களுக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைக் கைவிட்டார்கள் என்பதைப்போல் பொருந்தாத வியவகாரமாகும். பெற்றோர்கள் பெண்களின் தலையில் தயிர்ச் சட்டியை வைத்து விற்றுவர வெளியே அனுப்பினால் பெண்களுக்குத் தலையில் சட்டியிருப்பதாகவே தெரிவதில்லை. கோவிந்தனாகவே மனதில் படுகிறது. 'தயிர் வேணுமோ' என்று சொல்லமாட்டாமல் 'கோவிந்தன் வேண்டுமோ' என்றே சொல்லமுடிகிறது. இத்தகைய மனோபாவம் ஞானத்தால் ஒருவனுக்கு வரும்போது தன் முயற்சியின்றி' 'கர்மஸந்யாஸம்'தானே வரும். ஞானாநுபவத்தின் மெய்ப்பாடான (புறச்சின்னமாகிய) கர்மஸந்நியாஸத்தைப் பக்குவமில்லாமல் அதிகாரிகள் மேற்கொண்டால் ஞானமும் ஸித்திக்காமல் ஞானம் கைகூடச் செய்யும் நிஷ்காம்ய கருமமுமில்லாமல் அவர்களின் வாழ்நாள்

வீணாகக் கழிந்துபோகும். ஒரேவிதமான மோட்ச பலனைத் தருவதில் கருமம், ஞானம் இரண்டும் சமமாயினும் அவற்றைப் பற்றுதற்குரிய அதிகாரிகள் பெரும்பாலோருடைய நலனை நோக்கும் பொழுது கருமமே சிறந்தது. கருமயோகம் தவறாமல் பலனையளிக்கிறது. அபாயத்திற்கிடமில்லாமல் உரிய பலனை விரைவாகவும் தருகிறது. ஆகையால் சிரேஷ்டம்.

செவ்வையாய் அனுஷ்டிக்கப்பட்டால் இரண்டும் ஒரே பலனைக் காலத்தில் தரும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் 'ஞானம் கருமம் இரண்டின் தன்னைமயை நோக்குமிடத்து ஏற்றத் தாழ்வு கொள்வதற்கு இடமில்லை' என்பதை கருமவாதிகளும் ஞானவாதிகளும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். கருமத்திற்கு உயர்வு கூறியது அதை அனுஷ்டிக்க உரிய அதிகாரிகளின் (பிரஜைகளின்) நன்மையையும் நிலைமையையும் நோக்கியே என்பதை மறந்துவிடக்கூடாது.

51. யோகி தாமரை; கருமம் நீர்

'கரும யோகம் ஞானயோகம் இரண்டும் ஒரே விதமான மோக்ஷ பலனைக் கொடுக்கத் தக்கவை. என்றாலும் அவற்றைப் பயில்வதற்குரிய பெரும்பாலோரின் (அதிகாரிகளின்) நலனை நோக்குமிடத்து ஞானத்தை விடக் கருமமே சிறந்தது. ஞானம் முதிர்ந்து அனுபவமாகும் காலத்தில் ஒருவனுக்குத் தன்முயற்சியின்றி இயல்பாகவே வரும் பரமார்த்த சந்நியாசம் கருமயோகமில்லதாவனுக்கு அடைவதற்குத் துர்லபமாயிருக்கிறது. கரும யோகத்தை மேற்கொள்ளும் மனன சீலம் பிரும்மத்தை அடைதலாகிற பலனைச் சீக்கிரம் பெறுகிறான்' என்று கண்ணன் முன்னே சொன்னாரல்லவா?
'கரும யோகம் மோக்ஷ பலன் கிட்டும் வரைப் படிப்படியாக எவ்வாறு உதவி செய்கிறது?' என்பதை வரும் சுலோகத்தால் தெரிவிக்கிறார்.

ஒன்றியோ கத்தால் உளம்தெளிந்து தன்வசமாய்
வென்றுபுலன் எவ்வுயிரு மேவினனாய்-நின்றவன்
எல்லாக் கருமம் இயற்றிலும் அப்பயன்கள்
செல்லா அவனிடையில் சேர்ந்து.

(இ-ள்) ஒன்றிய யோகத்தால்-(கரும யோகி தான்) மேற்கொண்டிருக்கும் கருமயோகம் காரணமாய், உளம் தெளிந்து-மனம் பரிசுத்தமாகி, தன் வசமாய்-அம்மனத்தைத் தனக்குச்

சுவாதுனமாக்கினவனாய், புலன் வென்று–இந்திரியங்களை ஜயித்தவனாய், எவ்வியிரும் மேவியனாய்–எல்லா உயிர்களிலும் பொருந்தினவனாய், நின்ற அவன்–நிற்கின்ற அந்த யோகி, எல்லாக் கரும இயற்றிலும்–எல்லா வித கருமங்களைச் செய்தாலும், அப்பயன்கள்–பந்தத்தை உண்டாக்குமியல் பினதான பலன்கள், அவன் இடையில்–அந்த யோகியிடம், சேர்ந்துசெல்லா–யாவும் ஒட்டமாட்டா.

யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய:

ஸர்வபூதாத்ம பூதாத்மா குர்வந்நபி நலிப்யதே.

(இ–ள்) யோக யுக்த:–(கரும) யோகநிஷ்டனாய், விசுத்த ஆத்மா–பரிசுத்தமான மனமுள்ளவனாய், விஜிதி ஆத்மா:–ஜயிக்கப்பட்ட மனமுள்ளவனாய், ஜிதஇந்த்ரிய:–ஜயிக்கப்பட்ட இந்திரியங்களை உடையவனாய், ஸர்வபூத ஆத்மபூத ஆத்மா–எல்லாப் பிராணிகளிடத்திலுமிருக்கிற பரமாத்மாவின் ஞானமுள்ளவனுமாகிய புருஷன், குர்வந் அபி–கருமங்களைச் செய்துவந்தபோதிலும், நலிப்யதே–(கருமபந்தம் அவனைச்) சார்வதில்லை.

கரும யோகத்திலமர்ந்தவனுக்கு மனம் பரிசுத்தமடையும். அதனால் அவன் மனம் அவனது சுவாதீனத்தில் வரும். மனம் சுவாதீனப்பட்டால் இந்திரியங்களை ஜயிக்கமுடியும். இந்திரியங்களை ஜயிக்கும்போது ஞானப் பிரகாசம் உண்டாகும். அதனால் எல்லாப் பிராணிகளின் ஜீவன்களிலும் சமமாயிருக்கும் அந்தராத்மாவை அறிகிறான். அந்நிலை வந்த போது கருமங்களைச் செய்தபோதிலும் கரும பந்தங்கள் அவனைச் சாரவில்லை, என்று கரும யோகத்தால் உண்டாகும் சித்திகளை இச்சுலோகம் படிப்படியாக உணர்த்துகிறது. சுலோகத்தில் வரும் 'ஸர்வ பூதாத்ம பூதாத்மா' (ஸகல பூதங்களிலுமுள்ள ஆத்மாவை 'எவ்வுயிருமேவினனாய் என்ற தொடருக்குப் பல உரைகள் உண்டு.

ராகவேந்திரர்:–'பிரமன் தொடங்கிப் பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் ஈசுவரன் எவனோ அவனே தனக்கும் ஈசுவரன் என்றறறிகிறான் யோகி' என உரை செய்தார்.

ராமாநுஜர்:–'ஞான ஸ்வருபத்தால் ஆத்மாக்கள் எல்லோரும் சமானமானவர்கள் என்று அறிகின்ற யோகி' எனக் கூறினார்.

சங்கரர் ஏகாத்ம வாதியாதலால் 'எல்லாப் பிராணிகளின் ஆத்மாவைத் தானேயாகவே யறிகின்ற யோகி' என விரிவுரை செய்யாமலே பதப் பொருளையே ஆதாரமாகக் கொண்டார்.

'ஒரே. ரூபமும் அளவும் எடையும் கொண்ட பொற்குடங்கள் எண்ணிக்கையில் பலவாய் வஸ்து பேதம் கொண்டிருப்பது போல் ஞான தசையிலும் ஆத்மாக்கள் பலவாய் ஞானாகாரத்தில் (ஞானஸ்வரூபத்தில்) பேதமில்லாமல் வஸ்து பேதத்தோடு (பொருள் வேறுபாட்டோடு கூடியே இருக்கும்' என்பது ராமாநுஜர் வெளியிட்ட விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் கொள்கையாகும். ஆகவே அவர் கண்டவுரை அதற்குச் சேரவே செல்லுகிறது.

'ஞானம் முதிர்ந்த மோக்ஷ தசையிலும் ஆத்மாக்களுக்குள் ஸ்வரூப பேதம் உண்டு' என்பது த்வைத சித்தாந்தக் கொள்கை. எவ்வளவு போஷித்து வளர்ந்தாலும் வித்துக்களுக்கு அவற்றின் ஜாதிக்கேற்ப வளரும் சக்தி ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறான எல்லைக் குட்பட்டே இருக்கிறது. எவ்வளவு உரம் கொடுத்துச் சரியாகப் பக்குவம் செய்தபோதிலும் பாதிரி மாங்கன்றின் பலனும் நீலன் ஜாதி மரங்கன்றின் பலனும் ஒன்றுபோலிருக்க முடியாது. அவ்வாறே ஜாதி மாடுகள் வளர்ப்பிலும் குழந்தைகளின் பராமரிப்பிலும் ஆகாரத்தை முறையாகக் கொடுக்க முடிந்த போதிலும் வேற்றுமையையே பலனில் காண்கிறோம். ஆசிரியரும் சீரான உழைப்பும் கவனமுள்ள பல மாணவர்களிடையே தேர்ச்சியில் இவ்விதமான வேற்றுமையைக் காண்கிறார். சிறிய பாத்திரம் ஒன்றும் பெரிய ஒன்றும் நீரினால் நிறைந்திருக்கலாம். நிறைவினால் மேற்கொண்டு நீரை ஏற்காது என்ற அம்சத்தில் இரண்டு பாத்திரங்களையும் ஒன்று என்று சொல்லலாம். ஆனால் தன்னிடத்தே கொண்டிருக்கும் நீரின் அளவில் இரண்டு பாத்திரங்களுக்குமுள்ள வேற்றுமையை மறந்துவிடுவதற்கில்லை.

அவ்வாறே மோக்ஷதசையில் ஆத்மாக்கள் தத்தமக்கே உரிய மேலான ஆனந்தத்தைப் பெற்றிருந்த போதிலும் ஆனந்த அளவில் பேதம் அவற்றிற்குள் உண்டு என்பது த்வைத சித்தாந்தம். இப்படியே ஒவ்வொரு அம்சத்திலும். எனவே ராகவேந்திரர் உரை அவர் கொண்ட சித்தாந்தத்திற்கு ஏற்பவே இச்சுலோகத்திற்கும் செல்லுகிறது.

'கருமங்களைச் செய்யினும் கரும பந்தம் யோகியைச் சார்வதில்லை' என்று கண்ணன் முன்னே சொன்னார். அடுத்த இரண்டு சுலோகங்களில் அக்கருமங்களில் சிலவற்றைச் சொல்லி அவை நிகழும்போது யோகி எவ்வாறிருக்கிறான்? என்பதைத் தெரிவிக்கிறார்.

காட்சிமுதல் ஐந்தின் கதிகண் துயில்உயிர்த்தல்
மாட்சிஉரை மற்றவையும் வன்புலன்கள்-ஆட்சியினில்

தன்பயனில் செல்லுமெனத் தான்மதித்து யானியலேன்
என்பதறி வான்யோகி இங்கு

(இ-ள்) காட்சி முதல் ஐந்தின் கதி-தத்வம் தெரிந்த கருமயோகி காண்டல், கேட்டல், தொடுதல், முகர்தல், உண்ணுதல் முதலிய ஐவகை இந்திரியங்களின் தொழில்களையும், கண் துயில் உயிர்த்தல்-கண் உறங்குதல் விழித்தல் முதலிய தொழில்களையும் மாட்சி உரை மற்றவையும் - சிறப்பாகப் பேசுதல் முதலிய மற்ற தொழில்களையும் செய்யும் போது வன்புலன்கள் ஆட்சியினில் தன் பயனில் செல்லும் என-வலிமையுடைய இந்திரியங்கள் தமது அதீனத்திலுள்ள தமக்குரிய விஷயங்களில் பிரவேசிக்கின்றன என்று தான் மதித்து-தானே நிச்சயித்து, இங்கு-இப்பிரபஞ்சத்தில், யான் இயலேன்-நான் செய்யவில்லை என்று யோகி அறிவான்-என்பதைக் கருமயோகி அறிந்து கொள்கிறான்.

நைவ கிஞ்சித் கரோமீதி யுக்தோ மந்யேத தத்வவித்
பச்யந் ச்ருண்வந் ஸ்ப்ருசந் ஜி[3]க்ரந் அச்நந் க[3]ச்[2]சந் ஸ்வபந் ச்வஸந்
ப்ரலபந் விஸ்ருஜந் க்[3]ருஷ்ணந் உந்மிஷந் நிமிஷந் நபி
இந்[3]த்ரியாணி இந்[3]த்ரியார்[4]தேஷு வர்தந்தே இதி [4]தாரயந்

(இ-ள்) தத்வவித்-ஆத்மஸ்வரூபமறிந்த காமயோகி, யுக்த:-(கர்ம)நிஷ்டனாய், பச்யந்-பார்க்கும்பொழுதும், ச்ருண்வந்-கேட்கும்பொழுதும், ஸ்ப்ருசந்-பரிசிக்கும் பொழுதும், ஜிகரந்-முகரும் பொழுதும், அச்நந்-புசிக்கும் பொழுதும், கச்சந்-நடக்கும் பொழுதும், ஸ்வபந் - தூங்கும் பொழுதும், ச்வஸந்-மூச்சுவிடும் பொழுதும், விஸ்ருஜந்-(மலசலம்) விடும்பொழுதும், க்ருண்ஹந்-எடுக்கும்பொழுதும், உந்மிஷந்-கண்திறக்கும் பொழுதும், நிமிஷந்அபி-கண்களை மூடும் பொழுதும் இந்த்ரிய ஆ(த்)தேஷு-தங்கள் தங்களுக்குரிய இந்திரிய விஷயங்களில், இந்த்ரியாணி-அந்தந்த இந்திரியங்கள் வர்(த்) தந்தே-பிரவர்த்திக்கின்றன, இதி-என்று, தாரயந்-நிச்சயித்தவனாய், கிஞ்சித்-சிறிதும், நைவகரோமி-நான் செய்வதேயில்லை, இதி-என்று, மநயேத-நினைக்கிறான்.

இந்திரியங்களோடு கூடிய தேகம் ஓடும் ரயிலுக்குச் சமானமானது. ரயில் ஓடும் பொழுது பக்கங்களில் அசையாமல் நிலையாய் நிற்கும் மரங்கள் அசைந்து ஓடுவதாய்த் தோன்றும், தேகம் கருமத்தைச் செய்யும் போது ஞானமில்லாதவன் தானே செய்வதாக

நினைப்பான். தேகம் இந்திரியம் மனம் புத்தி இவற்றிற்கு அந்நியமான ஆத்மாவாகத் தன்னை உணர்ந்தஞானி தேகேந்திரியங்களால் கருமங்கள் நிகழும் பொழுது அவற்றிற்கு கர்த்தா தானல்ல என்பதை நன்றாக அறிகிறான்.

சுலோகத்திலும் பாடலிலும் மூன்று காலங்களுக்கும் பொதுவாக உணர்த்துவதற்காக நிகழ்காலத்தாலேயே கருமங்கள் விவரிக்கப்பட்டன. 'அக்கரும பலன்கள் தேகியை என்ன செய்யும்?' என்று மேலும் கூறுகிறார்.

காதல் அதுவிட்டுக் கருமம் பிரமமெனும்
மூதுடலில் தானமைத்து முற்றியல்வான்-தீதான
பாவத்தின் மன்னான் பதுமத் திலைநீரின்
மேவப் படாததுபோன் மிக்கு

(இ-ள்) காதல் அதுவிட்டு-பலனில் ஆசையைவிட்டு, கருமம்-கருமத்தை, பிரமம் எனும் மூது உடலில் தான் அமைத்து-பிரமம் என்று சொல்லப்படுகிற (தேகத்திற்கு மூலமான) பழமையான பிரகிருதியில் வைத்து, முற்று இயல்வான்-முழுதையும் செய்பவன், 'பதுமத்து இலை-தாமரை இலையானது, மிக்கு நீரின்-மிகுதியான நீரிலும், மேவப்படாததுபோல்-(அதனோடு) சம்பந்தப்படாதிருப்பதுபோல், தீதான பாவத்தின் மன்னான்-கொடிய பாப (புண்ணிய) பலத்தை அடையமாட்டான்.

3 4 3
ப்ரஹ்மண்யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதியா
3 4
லிப்யதே ந ஸ பாபேந பத்ம பத்ரம் இவாம்பஸா

(இ-ள்) ய:-எவன், கர்மாணி-எல்லாக் கருமங்களையும், ப்ரம்மணி-பிரகிருதியில், ஆகாய-வைத்து, ஸங்கம்-பலாபேக்ஷையை, த்யக்த்வா-விட்டு, கரோதி-கருமங்களைச் செய்கிறனோ, ஸ:-அவன் அம்பஸா-ஜலத்தால், பத்ம பத்ரம் இவ-தாமரையிலையைப்போல், பாபபேந-பாபத்தோடு, நலிப்யதே-ஒட்டுதலில்லை.

அகப்பற்று புறப்பற்று இல்லாமல் பலனில் ஆசையை விட்டுக் கருமயோகி கருமம் செய்கிறான். கருமத்திற்குரிய புண்ணிய பாப பலன் அவனை ஒட்டுவதில்லை. தாமரை இலையில் நீர்போல் கருமபலன் அவனை ஒட்டுவதில்லை. யோகி தாமரை; கருமம் நீர் போன்றது' நீர் போன்ற கருமத்திற்கு எல்லோரையும் பாதிக்கும் சக்தி கிடையாது. யோகி அதற்கு விலக்கு.

52. ஒன்பது வாயில்களுள்ள நகரம்

'உலகில் பலர் செய்யும் கருமங்கள் கரும யோகியிடமும் நிகழ்கின்றன. ஆனால், அவற்றை யோகிதான் செய்வதாக நினைப்பதில்லை. தனக்குச் சம்பந்தமில்லாத இந்திரியங்களே சப்தாதி விஷயங்களில் புகுந்து ஈடுபட்டிருக்கின்றன என்பதை உறுதியாக உணர்ந்திருக்கிறான். அதனால் கருமத்தால் உண்டாகும் பந்தங்கள் அவனைப் பாதிப்பதில்லை. யோகியும் அவனிடம் நிகழும் கருமங்களும் தாமரையும் நீரும் போலத் தொடர்பில்லாமல் இருக்கின்றன!' என்று கண்ணன் ஏற்கனவே தெரிவித்தார்.

அப்பொழுது அர்ஜுனன் சிந்தனைக்குள்ளானான். சிறப்பாகச் சொல்லப்படும் நிஷ்காமிய கருமத்திற்கும் அதைச் செய்யும் யோகிக்கும் சம்பந்தமில்லை. அதனால் அவனுக்கு எந்தவிதப் பயனுமில்லை என்றால் ஒருவன் அதை ஏன் செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதை அறிந்தகொண்ட கண்ணன் யோகிகள் எதன் பொருட்டுக் கருமம் செய்கிறார்கள் என்பதை வரும் சுலோகத்தால் தெரிவிக்கிறார்.

காயத்தால் நெஞ்சால் கருத்தமரும் புத்தியால்
மாயத்துச் சேரா அரும்புலனால்-நேயத்து
நீக்கத் துடன்கரும நின்றியல்வர் யோகியர்கள்
ஊக்கத்து உளம்தெளிவை உற்று.

(இ-ள்) யோகியர்கள்–கரும யோகிகள், ஊக்கத்து–வலிமையுயை, உளம் தெளிவை உற்று–மனச் சுத்தி பெறும் பொருட்டு, நேயத்து நீக்கத்துடன்–(கரும பலனின்) ஆசையை விட்டவனாய், காயத்தால்–உடலாலும், நெஞ்சால்–மனதினாலும், கருத்து அரும் புத்தியால்–எண்ணங்கள் சேரும் புத்தியினாலும், மாயத்துச் சேராஅரும் புலனால்–மயக்கம் தரும் விஷயங்களில் புகாமல் சுத்தமாயிருக்கும் அரிய இந்திரியங்களாலும், கருமம் நின்று இயல்வா–கருமங்களை விடாமல் செய்வார்கள்.

காயேந மநஸா பு[3][4]த்யா கேவலை ரிந்த்ரியை ரபி
யோகி[3]ந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்ம சு[3][4]த்தயே

(இ—ள்) யோகிந:—கருமயோகிகள் ஸங்கம் த்யக்த்வா—பலாபேக்ஷையை விட்டு, ஆத்ம சுத்தயே—மனதின் சுத்திக்காக, காயேந....சரீரத்தாலும் மனஸா—மனதினாலும் புத்யா—புத்தியினாலும், கேவலை:—சுத்தமான, இந்த்ரியை: அபி—இந்திரியங்களாலும், கர்ம—கர்மத்தை, குர்வந்தி—செய்கிறார்கள்.

யோகியின் தேகமும் அதன் கரணங்களும் மாத்திரம் கருமத்தில் ஈடுபட்டிருக்கும் என்பதில்லை. புறக்கரணங்களைப் போல் அகக்கரணங்களும் கருமம் செய்யும் மனத்திற்கும் தொழிலுண்டு. புத்திக்கும் தொழிலுண்டு.

சுவாமி தரிசனத்திற்கென்று பலர் கோயிலுக்குச் செல்லுகிறார்கள். கண்களால் விக்கிரகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஏதாவது இனிய கானமோ உரத்த சப்தமோ உண்டானால், செவி தரிசனத்திற்குச் சென்றவனின் மனத்தையும் கவனத்தையும் வேறு மார்க்கத்தில் இழுத்துவிடுகிறது. தரிசன காலத்தில் சிறிது பொழுதுகூட மனம் விக்கிரகத்தில் லயித்து ஒருமைநிலை ஏற்படாதபடி இந்திரியங்கள் பிணங்கி வெவ்வெறு வழியில் செல்கின்றன. அவ்வாறில்லாமல் யோகியின் மனம் புத்தியின் ஆதீனத்திலும், இந்திரியங்களோடு கூடிய உடல் மனத்தின் வசப்பட்டும் இருப்பதால், மனம் குறித்த வழியே நின்று ஒவ்வொரு இந்திரியமும் வேலை செய்யும். மற்றவர்கள் மனத்தை இழுத்துச் செல்வதுபோல் இந்திரியங்கள் யோகியின் மனத்தை இழுத்துச் செல்லா என்பதைக் காட்டவே பாடலில் மூலத்தையொட்டி 'மாயத்துச் சேரா அரும்புலன்' (கேவலைரிந்த்ரியை:) என்று சொல்லப்பட்டது.

ஸ்ரீதரர் உரை:— உடலால் செய்யும் கருமங்கள் நீராட்டம் (ஸ்நானம்) முதலியவை; மனத்தால் செய்பவை தியானம் முதலியன; புத்தியால் செய்யும் கருமங்கள் தத்துவ நிச்சயம் போன்றவை; இந்திரியங்களால் செய்பவை சிரவண கீர்த்தனாதிகள் (நல் விஷயங்களைக் கேட்டலும் சொல்லுதலும்)

சங்கரர்:—ஆத்ம சுத்யே—மனம் பிரும்மக்ஞானத்தால் பரிசுத்தப் படும் பொருட்டு.

யோகிக்குக் கருமங்களால் மனச் சுத்தி உண்டாகிறது. இப்பலனிலிருந்து மற்றொரு பலன் உண்டாகிறதென்று மேலே சொல்லுகிறார்.

ஏற்றமிகும் யோகி இயல்கருமப் பேறுவிடுத்து
ஆற்ற நிலைமை அடைந்தியலும்-ஊற்றமில்லாக்
காமத்தான் அந்தக் கருமப்பலன் நசையால்
தாமத்தால் கட்டுண்ணும் தான்.

(இ—ள்) ஏற்றம் மிகும் யோகி—பெருமை மிகுந்த யோகி, கருமம் இயல் பேறுவிடுத்து—கருமத்திற்குரிய பலங்களில் ஆசையை விட்டு, ஆற்ற நிலைமை—நிலையான தன்மையை (மோட்சத்தை) அடைந்து இயலும்—பெற்றவனாகிறான், ஊற்றம் இல்லா காமத்தான்—(யோகத்தில் மனம்) பற்றாத காமியகருமி, கருமபலன் நசையால்—கரும பலனில் ஆசை காரணமாக, தாமத்தால்—கரும் பலனாகிற கயிற்றால் கட்டுண்ணும்—கட்டப்படுவான் (ஸம்ஸாரத்திலழுந்துவான்)

யுக்த: கர்மப[2]லம் த்யக்த்வா சாந்திம் ஆப்நோதி நைஷ்டி[2]கீம்
அயுக்த: காமகாரேண ப[2]லே ஸக்தோ[3 4] நிபத்யதே

(இ—ள்) யுக்த:— யோகியானவன், கர்ம பலம் த்யக்த்வா—கரும பலங்களில் ஆசையைவிட்டு நைஷ்டிகீம்—நிலையான சாந்திம்—சாந்த நிலைமையை, ஆப்நோதி—அடைகிறான், அயுக்த—காமிய கருமி, பலே காம காரேண—பலனில் கொண்ட ஆசையால், ஸக்த:— பற்றுடையவனாய், நிபத்யதே—கட்டப்படுகிறான்.

ராமாநுஜர் 'சாந்தி' (ஆற்ற நிலைமை) என்பதற்கு 'ஆத்மாநுபவம்' என்று உரை எழுதியுள்ளார்.

புத்தியால் நிச்சயம் செய்யப்பட்ட தத்துவத்திற்கு ஏற்ப மனம் தியானத்திலீடுபடவேண்டும். அத்தியானம் வெற்றிகரமாகக் கை கூடுவதற்கேற்ற முறையில் தனுகரணங்கள் நீராட்டம், பூஜை, ஆகாரம் கொள்ளல், சிரவணம், கீர்த்தனம் முதலிய கருமங்களில் ஈடுபடவேண்டும். பலத்தில் இச்சையில்லாமல் இம்முறையில் கருமங்கள் நிகழ்ந்தால், உடலால் மனத்திற்குச் சுத்தமும், மனச்சுத்தத்தால், மனதைத் தன் வழியிலே செலுத்தி வந்த புத்திக்குத் தத்துவ நிச்சயம் அனுபவ உண்மையாகவும் ஆகும். அந்த ஞானம் நிலையாகவிருப்பதால், அதில் வரும் ஆத்மாநுபவமும் மாறாது நிலைத்து ஆனந்தமயமாயிருக்கும். அந்நிலையையே சாந்தி நிலை என்றும் மோக்ஷநிலை என்றும் விவகரிக்கிறார்கள்.

இதைக்கேட்டபோது அர்ஜுனனுக்கு 'தேகேந்திரியங்கள், மனம், புத்தி எல்லாம் தொழிற்பட்டிருக்கும்போது யோகியால் அவற்றில்

சம்பந்தப்படாமலிருக்க முடியுமா? கருமங்கள் நடக்கும்போது வரும் சுகதுக்கங்களால் பாதிக்கப்படாமலிருக்க முடியுமா? சுக துக்கங் காரணமாக வரும் விருப்பு வெறுப்புக்களுக்கு ஆளாகாமல் தப்பமுடியுமா? என்ற சிந்தனைகள் உண்டாயின. அதையறிந்துகொண்ட கண்ணன் 'கருமயோகிக்கு முடியும்' என்று அடுத்த சுலோகத்தால் சமாதானம் சொல்லுகிறார்:

ஒன்பதெனும் வாசல் உடையபுரம் ஆம்உடலில்
தன்பயிலும் செய்தியெனத் தானியலான்-என்பதனால்
ஏதும் இயலான் இயற்றான் சுகமிருக்கும்
ஓதுபுலன் வென்றோன் உற்று.

(இ-ள்) ஓது புலன் வென்றோன்-சொல்லப்படும் இன்திரியங்களை ஜயித்தவன், ஒன்பது எனும் வாசல் உடையபுரம் ஆம் உடலில்-ஒன்பது துவாரங்களோடு கூடிய பட்டணமாகச் சொல்லத் தக்க தேகத்தில், ஏதும் உற்று-எல்லாக் கருமங்களையும் மனதால் விட்டு, தன் பயிலும் செய்தி என-தேகம் செய்யும் கருமம் என்றெண்ணி, தான் இயலான்-தான் சம்பந்தப்படமாட்டான், என்பதனால்-என்ற காரணத்தால் (யோகி) இயலான் இயற்றான்-(தான்)செய்யாமலும் (ஒன்றைச்)செய்விக்காமலும் ஆனவனாய், சுகம் இருக்கும்-ஆனந்தமாக விருக்கிறான்.

ஸர்வ கர்மாணி மநஸா ஸந்யஸ்யாஸ்தே ஸுகம் வசீ[2]
நவத்வாரே[3] *புரே தேஹீ*[3] *நைவ குர்வந் நகாரயந்*

(இ-ள்) வசீ தேஹு-இந்திரிய ஜயமுள்ள புருஷன், மனஸா-மனதினால், ஸர்வ கர்மாணி-எல்லாக் கருமங்களையும், நவத்வாரே-ஒன்பது துவாரங்கள் பெற்ற, புரே-பட்டனத்தில் (உடம்பில்)ஸந்யஸ்ய-விட்டு, நைவ குர்வந்-(தான்) செய்யாமலும், நகாரயந் - செய்விக்காமலும், ஸுகம் ஆஸ்தே-சுகமாகவிருக்கிறான்.

இந்திரிய ஜயமுடைய யோகிக்குத் தன்னைப் பாதிக்காமல் எந்தக் கருமத்தையும் செய்ய முடியும். இந்திரியங்களுக்கு வசப்பட்டு அவற்றின் வழியே செல்லுவோருக்கு யோகியின் செயல் நேரில் காணும்போது வியப்பை உண்டாக்கும். காணாவிடில் நம்ப முடியாமலிருக்கும்.

சமாதி நிலையில் இருக்கும்யோகி புற நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படுவதில்லை. அவன் உடலில் நெருப்பை வைத்துப் புண்படுத்தினாலும், அவன் உடலை, குழியில் தள்ளி மண்ணால்

மூடினாலும் யோகி எந்தவித வேதனையும் அடைவதில்லை; பாதிக்கப்படுவதில்லை என்பதை நேரில் கண்டு வியந்தோர் பலர் இருக்கின்றனர்.

புத்தியின்கீழ் மனதையும், மனத்தின்கீழ் தேகேந்திரியங்களையும் கொண்டு வந்த யோகிக்கு தேகத்தைத் தானாகவோ தன்னதாகவோ எண்ண இடமில்லை.

யோகிக்கு ஒன்பது வாயில்களையுடைய நகரம் போலவே தன் தேகம் தோன்றும். நகரத்தில் எல்லாரிலும் மேம்பட்டிருக்கும் தலைவன் அங்கு நடக்கும் காரியங்களில் தான் சம்பந்தப்படாமலிருக்கலாம். தான் சம்பந்தப்படாமல் மனதால் நவத்வாரங்களையுடைய தேகத்தில் கருமங்களை விட்டு, தான் இயற்றுதல் கர்த்தாவாகவோ ஏவுதல் கர்த்தாவாகவோ இல்லாத யோகி ஆனந்தத்தையே அனுபவிக்கிறான். இது இந்திரியங்களை வென்ற அளவிற்கு இயலும் என்பது தாத்பர்யம்.

பகவானிடம் பக்திபூண்ட யோகி ஒருவர் தேகத்தைப் பட்டினமாகவே பாவித்துக் கூறுவதைக் காணலாம்.

..........நோய்காள் காலம்பெற உய்யப் போமின்
மெய்க்கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்றுபட்டினங் காப்பே

—பெரியாழ்வார்.

53. ஞானம்

கரும யோகி பலா பேக்ஷையில்லாமல் கருமம் செய்கிறான். அவன் உடலால் செய்யும் நீராட்டம் வணக்கம் முதலியனவும் மனத்தால் செய்யுத் தியானமும், புத்தியால் செய்யும் தத்துவ நிச்சயமும் இந்திரியங்களால் செய்யும் சிரவண கீர்த்தனாதிகளும் யோகிக்கு மனச்சுத்தி உண்டாக உதவியாகின்றன. அப்பொழுது இந்திரியம் மனத்திற்கும் மனம் புத்திக்கும் சுவாதீனப்பட்டு வருகின்றன. அந்நிலையில் ஸ்வரூப (தன்) உணர்வு உண்டாகிறது. தேகேந்திரியங்கள் தனக்கு அந்நியமாகத் தோற்றுகின்றன. அப்பொழுது எல்லாக் கருமங்களையும் யோகியால் பட்டினம் போன்றிருக்கிற தேகத்தில் மனதால்விட்டு அக்கருமங்களுக்குத்தான் இயற்றுதல் கர்த்தாவாகவோ ஏவுதல் கர்த்தாவாகவோ ஆகாதிருக்க முடிகிறது. நிகழும் கருமங்களால் எந்த

விதத்திலும் பாதிக்கப்படாமலிருக்கிறான் என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லவா?

அந்த யோகியின் தன்மையே ஞான நிலையாகும். அந்த ஞானத்தை அடைந்திருக்கிறவனிடமிருந்து பிரித்து அதன் தன்மையை அறிய முடியாது. மாணிக்கத்தின் ஒளியைப் பொருளிலிருந்து பிரிக்க முடியுமா? பொருளோடு சேர்ந்திருக்கும்போது தானே ஒளியின் தன்மையை அறியவோ உணரவோ முடிகிறது. ஆகவே, ஞானத்தின் இயல்பை ஞானியைக் கொண்டு கண்ணன் வரும் மூன்று சுலோகங்களால் விளக்குகிறார்.

கத்தாவா கும்தன்மை கன்மங்கள் ஆங்கவற்றில்
ஒத்தாம் பலன்சேர் உலகுக்குத்-தத்துவமா
நின்றவுயிர் தான்செய்யான் நேர்நடக்கு மாறிதுதான்
ஒன்றியமுன் வாதனையால் உற்று

(இ-ள்) தத்துவமா நின்ற உயிர்-தன்னியல்போடு இருக்கிற ஆத்மா, உலகுக்கு-ஜனங்களுக்கு, கத்தவாகும் தன்மை-கர்த்ருத்வத்தையும் கன்மங்கள்-கருமங்களையும், அவற்றில் சேர் ஒத்தாம் பலன்-அக் கருமங்களில் சேர்ந்திருக்கிற உரிய (ஒத்தாகிய) பலன்களையும், தான் செய்யான்-தானே உண்டுபண்ணுகிறதில்லை. முன் ஒன்றிய வாதனையால் உற்று-அனாதியாகப் பொருந்திய பிரகிருதி வாசனை காரணமாகப் பொருந்தி, இது நேர் நடக்கும் ஆறு-கருமம் முறையே நிகழும் தன்மையது.

ந கர்த்ருத்வம் நகர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு:[4]
ந கர்ம பலஸம்யோகம்[2] ஸ்வபாவஸ்[3]து[4] ப்ரவர்ததே

(இ-ள்) ப்ரபு:-ஆத்மா, லோகஸ்ய-ஜனங்களுக்கு, காத்ருத்வம்-கர்த்ருவத்தையாவது, கர்மாணி-கருமங்களையாவது, ந ஸ்ருஸதி-உண்டாக்குவதில்லை;கர்ம பல ஸம்யோகம்-கரும பல சம்பந்தத்தையும், நஸ்ருஜதி-உண்டுபண்ணுகிறதில்லை ஸ்வபர்வ:து-பிரகிருதி வாஸனை, ப்ரவர்த்ததே-(கருமத்தில்) பிரவாத்திக்கின்றது.

'ப்ரபு:' என்பதற்குச் சங்கரார் 'ஆத்மா அல்லது தேகி' என்று உரை எழுதியுள்ளார். தாதுவை (பகுதியை)க் கொண்டு பொருள் செய்தால் 'எவராலும் உண்டாக்கப்படாதவன்' என்று கொள்ளலாம். உண்டாகும் வஸ்து அழியும். அழிவது எதுவோ அது மறுபடி தோன்றும் வஸ்துவின் தோற்ற அழிவது விகாரம் என்று சொல்வதுண்டு. இதையே

தான் மித்யை என்றும் பொய் என்றும் அஸத் என்றும் கொள்வோருண்டு. தான் உண்டாவதற்கோ இருப்பதற்கோ பிறிதொரு காரணமில்லாமல் தனக்குத் தானே காரணமாய் தோற்ற அழிவாகிய விகாரமின்றி நிலையாய் முக்காலத்திலும் ஒரேமாதிரியாய் இருக்கும்பொருளே சத்தாகும். உண்மைப் பொருளாகும். அதைத் திருவள்ளுவர் 'மெய்ப்பொருள்' என்றும் 'செம்பொருள்' என்றும் வியவகரிக்கிறார்.

மூலத்தில் 'ப்ரபு' எனப்படும் சொல், கீதை வெண்பாவில் 'தத்துவமா நின்றவுயிர்' என்று விரித்துச் சொல்லப்பட்டது. பிரபு சப்தத்திற்கு விரிவுரை போன்ற இம்மொழி பெயர்ப்பு த்வைத, அத்வைத, விவிஷ்டாத்வைத சித்தாந்தங்கள் மூன்றில் எதற்கும் பாதகமில்லாமல் பொதுப் படையாக அமைந்தது பாராட்டத்தக்கது.

ப்ரபு சப்தத்திற்குச் சங்கரர் ஆத்மா என்று கூறிய பொருள் எல்லா சித்தாந்திகளுக்கும் உடன்பாடுதான். ஆனால், சுலோகார்த்தத்தை அத்வைத சித்தாந்திகள் கிரகிப்பதுபோலப் பிறர் கிரகிப்பதில்லை. தத்வக்ஞானம் அல்லது ஸ்வரூபக்ஞானத்தைப் பற்றிச் சிந்தாந்திகள் கொண்டிருக்கும் வேறுபாடான கொள்கையே இதற்குக் காரணம். இச்சுலோகத்தின் வெவ்வேறான பொருள்களை புரிந்துகொள்ள ஞானத்தைப் பற்றிய இரு சாராரின் கொள்கைகளை நன்கு தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. மேலே வரும் அத்தியாயப் பொருள்களையும் முன்னுக்குப் பின் முரணில்லாமல் இருசாராரின் 'அபிப் பிராயப்படித் தெரிந்துகொள்ளவும் உதவியாயிருக்கும்.

அத்வைத பரமான ஞானம்:– தத்வம் ஒன்று அதுவே ஆத்மா, வேதத்திலும் கீதையிலும் சத் என்றும்அக்ஷரம் என்றும் விவகரிக்கப்படுவது அவ்வாத்மாவேதான். அவ்வாத்மா பலவல்ல; ஒன்றேதான். ப்ருமம்மம், பரமாத்மா என்ற வார்த்தைகளெல்லாம் இவ்வாத்மாவையே குறிக்கின்றன. அப் பிரும்மம் குணமில்லாதது. ஜகத்தில் நிகழும் எந்தவித நிகழ்ச்சிகளுக்குமோ கர்ததாவுமல்ல; போக்தாவுமல்ல. எங்கும் நிறைந்த அகண்ட 'வஸ்து ஞானஸ்வரூபமானது. அந்த ஞானம் குணமல்ல. ப்ருமத்தினின்றும் வேறல்ல. ஞானமே ப்ரும்மம்.

ப்ரும்மத்தைத் தவிர மற்றவை யாவும் அஸத்தியம் அல்லது மித்யை. உலகம், உலகத்திலுள்ள பல்வேறு ஜீவன்கள் காலங்கள் யாவும் பொய்த் தோற்றங்கள் அப் பொய்த் தோற்றங்களை உண்மையென

நம்பித் தன்னைஅகண்டாகாரமான ஆத்மாவினின்றும் வேறாகவே பாவித்துவந்த பேதக்ஞானத்தால் பந்தத்திற்களாவன ஜீவன் ஸத்யமான ப்ரும்மமாகவே—தன்னை உணருவதே மோக்ஷம் அல்லது பந்த நிவர்த்தி பேதக்ஞானம் (வேறாக உணர்வது) பந்தத்தைத் தரும் அபேதக்ஞானம் (தன்னை ப்ரும்மமாகவே தெரிந்து கொள்வது) பந்த நிவ்ருத்தி அல்லது மோக்ஷமாகும்.

பிரபஞ்சமும் அதன் நிகழ்ச்சிகளும் கனவு நிகழ்ச்சிகள் போன்றவை. கனவு காணும் காலத்தில் அவை உண்மை. கனவு நிலை நீங்கிய போதுதான் அவை பொய்யாகின்றன. அதேபோல் வியவகார தசையில் பிரபஞ்சம், பல்வேறு ஜீவகோடிகள் அவர்களில் ஒருவரான ஈச்வரன் அவர் நிமித்தக் காரணமாக (குயவன் மண்பானை செய்ய ஆகின்றதுபோன்ற காரணம்) இருந்து ஜீவர்கள்களின் கர்மாதீனமாக நடை பெறும் படைப்பு, காப்பு, அழிப்பு அதனால் ஜீவன்கள் அடையும் பல்வேறு தேகங்கள், பிறப்பு, இறப்பு சுகதுக்கம் முதலியன உண்மையே. பேதக்ஞானம் நீங்கியபோது அத்தனையும் பொய்யாகும். தானான பிரும்மம் ஒன்றே பாரமார்த்திக தசையில் சத்தியமாக முடியும்.

பழுதையில் பாம்பு தோன்றுவது போல் ப்ரும்மத்தில் மாயை அல்லது அவித்தை காரணமாகப் பிரபஞ்சம் தோன்றுகிறது. ஈச்வரனுட்பட எல்லா ஜீவன்களும் அத்தோற்த்தில் அடக்கம். மாயை அனாதியாயினும் அஸத்யமாதலால் ப்ரும்மம் ஒன்றே ஸத்யம். அதற்கு வேறான ஜீவனாகத் தன்னைப் பாவிப்பதை விட்டு நானே பிரும்மம் (அஹம் ப்ரும்மாஸ்மி) என்றுணருவதே ஞானம். மோக்ஷம்.

த்வைத விசிஷ்டாத்வைதபரமான ஞானம்:— தத்வம் மூன்று சித்து, அசித்து, ஈச்வரன் ஆகிய மூன்றும் உண்மை. சித்தே, ஜீவன் ஆத்மா, ஜீவாத்மா சேதனன் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அவை பல; கணக்கற்றவை. ஜீவாத்மா நித்தியன் முக்தன் பத்தன் என்று பலவகைப்படும். ஒரு காலத்திலுமே பந்தப்படாமல் மோக்ஷத்திலேயே இருப்பவன் நித்தியன். பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தியை அடைந்தவன் முக்தன். விடுபடாமல் பந்தத்திலிருப்பவன் பத்தன். ஜீவாத்மா வஸ்து பரிபாணத்தால் அணுவிலும் அணுகாவிருந்தாலும் முக்தி தசையில் ஞானத்தால் எங்கும் வியாபித்தவன். அனாதியான கருமத்தால் ஜீவாத்மா பந்தப்பட்டு சேற்றில் அழுந்தும் மாணிக்கம் ஒளி மழுங்குவதுபோல், ஞானம் குன்றி மேலும் மேலும் பிறப்பிறப்பாகிய

சுகதுக்கங்களோடு கூடிய சம்ஸாரத்திற்கு ஆளாகிறான். வளர்தல் அழிதல், தோன்றல், மறைதல் சிறுத்தல் பருத்தல் முதலிய விகாரங்களில்லாமல் ஞானமே தர்மமாக (குணமாக) வுடையது ஜீவாத்மா.

அசித்து என்பது பிரகிருதி என்றும் மூலப் பிரகிருதி என்றும் சொல்லப்படும். மஹான் அஹங்காரம், பிருதிவி அப்பு, தேயு வாயு ஆகாசம் முதலிய பூதங்கள், கர்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள், விஷயங்கள், மனம் ஆகிய 24 தத்துவங்களுக்குப் பிறப்பிடமாய் மூலமாயிருப்பது முக்குணங்களுக்கு மிடமாயிருப்பது. தோன்றல் மறைதல் வளர்தல் குறைதல் முதலிய விகாரங்களையடைந்த போதிலும் பல்வேறு தேகங்களாகவும் பிரபஞ்சமாகவும் வியாபித்திருந்த போதிலும் அவற்றிற்கு மூலாதாரமான பிரகிருதி ஒரு உண்மையான தத்துவம்.

ஈச்வரன் என்பது பரமாத்மா. ப்ரும்மம், அந்தராத்மா என்பவை ஈச்வரனைக் குறிக்கும். ஈச்வரன் ப்ரும்மத்தினின்று வேறுபட்டவனல்லன். ப்ரும்மம் ஈச்வரனுக்கு வேறுபட்டதல்ல. இரண்டும் ஒன்றே. ப்ருமம் என்று சொல்லப்படுகிற ஈச்வரனுக்குச் சத்வகுணங்கள் உண்டு. அவன் ஆனந்த மயன்; ஞான மயன்; கிருபாமயன்; சர்வ சக்தன்; சகுணப்பிரும்மமான ஈச்வரனுக்கு அப்பாற்பட்ட நிர்க்குணப் பிரும்மம் என்று கிடையாது. ஈச்வரனே எங்கும் ஸ்வரூபத்தாலும் ஞானத்தாலும் வியாபித்திருக்கிறான். ஸர்வ சுதந்திரனாய் ஸர்வ சக்தனாயிருக்கிறான். எல்லா ஜீவாத்மாக்களையும் பிரகிருதி பிரபஞ்சத்தையும் தனக்குச் சரீரமாகக் கொண்டிருக்கிறான். தான் சரீரியாக விருக்கிறான். பிரபஞ்சத்திற்கு உபாதான காரணமாகவும் (மண், குடமாவதற்குக் காரணமாயிருப்பதுபோல்) நிமித்த காரணமாகவும் (குயவன், குடத்திற்குக் காரணமாவது போல்) ஸஹகாரி காரணமாகவும் (குடம் செய்யத் தண்ட சக்கரம்போல்) ஈச்வரன் இருக்கிறான்.

தேகத்தின் அவயவம் ஒவ்வொன்றும் தேகத்தையுடைய தேகிக்குக் கீழ்ப்பட்டு தேகிக்காகவே உழைக்கிறது. அதேபோல் ஜீவாத்மாக்கள் தங்களைத் தேகமாகக்கொண்டு உள்ளும் புறமும் வியாபித்திருக்கும் ஈச்வர பராதீனாகளாகத் தங்களை அறிந்து கொள்ளவேண்டும். ஈச்வரனுக்காவே எதையும் செய்யவேண்டிய தம் கடமையை அறியவேண்டும். ஈச்வரனே தங்களுக்குத் தலைவன் அல்லது சேஷி. தாங்கள் தாஸபூதா அல்லது சேஷபூதா அல்லது

பாதந்திரா, ஈச்வரனால் கருமத்தைச் செய்விக்கப்படும் கருவியே தாங்கள் என்று அறிந்து பலனில் இச்சையில்லாமல் ஈச்வரார்ப்பணமாகக் கருமம் செய்யவேண்டிய தம் கடமையை உணரவேண்டும். அவ்வுணர்வே ஞானம்; மோக்ஷசாதனம்.

த்வைதத்தில் ஈச்வரனுக்கு நிமித்த காரணத்வம்மட்டும் சொல்வதும், சரீர சரீரபாவம் ஈச்வரனுக்கு வேதத்தில் சொன்னது உபசாரம் என்பதும் சிறிது வித்தியாசம்.

ஆகவே, இச்சுலோகத்திற்கு அத்வைத ரீதியாகப் பின்கண்ட பொருள் கிடைக்கும். 'ஆத்மா கருமங்களைச் செய்வதில்லை; செய்விப்பதில்லை. கருமங்களை உண்டுபண்ணுவதில்லை; உண்டு பண்ணச் செய்வதில்லை. கரும பலனைத்தான் அடைவதில்லை; பிறரை அடைவிப்பதுமில்லை. ஆதலால், படைத்தல், அளித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களுக்கும் ஆத்மா அல்லது பிரும்மம் கர்ததாவாகவோ போக்தாவாகவோ இல்லை, பிரகிருதி அல்லது மாயையே கர்ம கர்ததாவும் போக்தாவும் (அனுபவிப்பனும்) ஆகிறது. ஜீவன் அக்ஞானத்தால் பிரகிருதி விகாரமாகிய அந்தக்கரணத்தின் சுக துக்கங்களை (பழுதையில் பாம்பைக் காண்பது போல்) ஆத்மாவிடத்தில் ஆரோபணம் செய்துகொள்கிறான்.

மற்றையோர் பின்வருமாறு பொருள் கொள்கின்றனர். 'கருமத்திற்குக் காரணம் ஜீவன் மாத்திரமல்ல. சரீரம், இந்திரியங்கள், பிராணாபானாதி செய்கை, ஈச்வரன் ஆகிய மற்ற நான்கு காரணங்களுண்டு என்று 18அத்.சு14-ல் சொல்லப்பட்டது. அதற்கேற்ப 'ஜீவாத்மா தானே கருமம் செய்யவோ செய்விக்கவோ இயலாது. பிரகிருதி வாசனையால் ஈச்வர பரதந்திரனாகவே செய்கிறான். தானே செய்வதாக ஜீவாத்மா நினைப்பது அக்ஞானம். அஹங்கார மமகாரத்தை விருத்தி செய்து பந்தத்தையே தரும். ஈச்வர பராதீனனாகச் செய்கிறோம் என்ற உணர்வு ஞானம் ஸ்வரூபக்ஞானம் என்பதும் அதுவே. அது பக்தியை உண்டுபண்ணி மோக்ஷத்தைத் தரும் என்பது சித்தாந்தம்.

கீதையில் மேல்வரும் சுலோகங்களுக்கு இதை அடிப்படையாகக் கொண்டே வெவ்வேறான பொருள் சித்தாந்தத்தை அனுசரித்துக் கொள்ளலாம்.

54. ஞானம் திரும்ப வராத ஸ்தானத்தைத் தரும்

ஆத்மா கர்த்தாவுமில்லை; போக்தாவுமில்லை. பிறரைக் கர்மம் செய்யத் தூண்டிக் கர்த்தாவாக்குவதில்லை; கரும பலனை அனுபவிக்கச் செய்வது போக்தா வாக்குவதுமில்லை' என்று கண்ணன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த அர்ஜுனனுக்குப் 'புண்ணிய பாவம் யாரைச் சாரும்?' என்ற சந்தேகம் உண்டாயிற்று.

'பிரகிருதி தனது சுபாவத்தால் கருமத்தில் பிரவர்த்தித்தால் அதன் பலனாகிய புண்ணியபாபத்தை அவற்றால் வரும் சுக துக்கத்தை அனுபவிக்க வேண்டியது யார்? உலகில் ஒருவன் குற்றம் செய்திருக்க அதற்குரிய தண்டனையைக் குற்றம் செய்யாத மற்றொருவன் சில சமயம் அடைவதுண்டல்லவா? அதுபோல் பிரகிருதி விகாரமாகிய உடலும் அதன் உறுப்புக்களும் செய்யும் கருமத்தின் பலன் சைதந்யம் (ஞானம்) இல்லாத உடலைப் பாதித்தாலும் அதனால் ஏற்படும் சுகதுக்கானுபவங்களை உடல் அநுபவிக்காது. அப்படியானால் ஞானமுடைய ஆத்மா, தானே புண்ணிய பாவ கலனை அடையவேண்டும்' என்ற எண்ணம் அர்ஜுனனுக்கு உண்டாயிற்று. அதையறிந்துகொண்ட கண்ணன் பின்வரும் சமாதானத்தைச் சொல்லுகிறார்.

ஆங்கொருவன் தீவினையும் நல்வினையும் பெரியோன்
பாங்கினில் தான்வாங்கும் பண்பிலனால்-ஈங்கறிவு
மாய வினையான் மறைந்தன்று மோகத்தில்
ஆய உயிர்கள் அவை

(இ-ள்) பெரியோன்-ஆத்மா, ஒருவன் தீவினையும் நல்வினையும்-ஒருவனுடைய பாவத்தையும் புண்ணியத்தையும், பாங்கினில் தான்வாங்கும் பண்பு இலன்-முறையே தான் கிரகிக்கும் சுபாவம் இல்லாதவன்; ஈங்கு அறிவு-பந்தம் நிறைந்த இகத்தில் ஆத்மக்ஞானமானது மாயவினையான்-அக்ஞான ரூபமான காமாதிகளால், மறைந்தன்று-மறைக்ப்பட்டுள்ளது, உயிர்கள் அவை-அதனால் ஜீவர்கள் யாரும், மோகத்தில் ஆய-மோஹத்தை அடைந்திருக்கின்றனர்.

நா த[3]த்தே கஸ்யசித் பாபம் நசைவ ஸுக்ருதம் விபு[4]:

அஜ்ஞாநே நாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:

(இ–ள்) விபு:–எங்கும் வியாபித்திருக்கிற ஆத்மா, கஸ்யசித் பாபம்–ஒருவனுடைய பாபத்தையும், நா தத்தே–கொண்டு போவதில்லை, சுக்ருதம்–புண்ணியத்தையும், நசைவ ஆ தத்தே–கிரகிப்பதேயில்லை, ஜ்ஞானம்–ஆத்ம்ஸ்வரூபக்ஞானம், அக்ஞாநேந–அக்ஞானத்தால், ஆவ்ருதம்–மூடப்பட்டிருக்கிறது, தேந–அதனால், ஜந்தவ:–ஜீவர்கள், முஹ்யந்தி–மோஹத்தை அடைகிறார்கள்.

எங்கும் வியாபித்திருக்கிற ஆத்மா தேகம், மனம், இந்திரியம், புத்தி இவற்றிற்கு அப்பாற்பட்டவன். எதையும் செய்வதில்லை. செய்விப்பதுமில்லை. செய்வது செய்விப்பதாகிய கருமங்கள் பிரகிருதி அல்லது பிரகிருதியின் விகாரமாகிய உடல், இந்திரியம், மனம், புத்தி இவற்றின் காரியங்களே. அப்படியானால் கர்மங்களால் வரும் சுக துக்கங்களை தேகம்தானே அநுபவிக்கவேண்டும். அந்த அநுபவத்தில் தேகத்திற்கோ தேக உறுப்புகளுக்கோ தவிர வேறு யாருக்கும் பங்கிருக்க, சம்பந்தமிருக்க நியாமில்லை. இருந்தபோதிலும் உலகினர் 'இத்தேகத்தால், நான் கஷ்டப்படுகிறேன்; மன நிம்மதியில்லாமையால் நான் வருந்துகிறேன்; என் துர்ப்புத்தி என்னைத் துன்மார்க்கத்திலே கொண்டு போவதால் நான் துக்கத்திற்கே ஆளாகிக் கொண்டிருக்கிறேன்" என்றே வியவகரிக்கிறார்கள். இவ்வாறு பேசி வருவதால், கரும பலனை அனுபவிப்பது தேகத்திற்கும் அதன் விகாரமாகிய இந்திரியம் மனம் புத்தி இவற்றிற்குப் புறம்பான ஆத்மாவாகத்தானே இருக்கவேண்டும். ஆகவே நான் அனுபவிக்கிறேன்' என்று சொல்வதில் 'நான்' என்பது ஆத்மாவையே குறிக்கும். அதனால் சுக துக்கத்தை, புண்ணிய பாபத்தை ஆத்மாவே கிரகிக்கிறது என்று ஞானமில்லாதவர் நினைக்கிறார்கள். ஆகாயத்தில் சலனமற்றிருக்கும் சந்திரனின் பிரதி பிம்பம் கிணற்று நீரில் தோன்றும் போது, கிணற்று நீரின் அசைவால் தானும் அசைவதாகத் தோன்றும். அதனால் பிம்பமாகிய மூலப் பொருளாகிய சந்திரனே அசைவதாகக் கொள்வோருண்டு. அவ்வாறே மாயையால் அந்தக்கரணத்தில் பிரதிபலிக்கும் ஆத்மா அல்லது பிரும்மமே ஜீவன் அல்லது ஜீவாத்மா அக்ஞானிகள் நான் என்று பாவிப்பது பொய்யான பிரதிபிம்பம்போன்ற ஜீவாத்மாவையே. பழுதையில் பாம்பு போல் கற்பனை அல்லது ஆரோபிதமான ஜீவாத்மா நானல்ல, 'ப்ரும்மமே நான்' என்று

உணர்ந்தவன் கருமத்தைப் போக்கும் பலனையோ அடைவதில்லை. ஆத்மாவே நான் என்ற ஆத்ம ஸ்வரூபக் ஞானம் மூடப்பட்டிருப்பதால் ஜீவகோடிகள் மோஹம் காரணமாக விபரீதமாகப் பாவிக்கிறார்கள். இது இச்சுலோகத்திற்கு அத்வைதிகள் கொள்ளக்கூடிய பொருள், பிற சித்தாந்திகள் வேறு விதமாகக் கொள்கிறார்கள்.

விபு:– எங்கும் இருப்பவன் பந்த நிவர்த்திபெற்ற ஜீவாத்மாவுக்கு ஞானம் எங்கும் வியாபித்திருக்கும் ஞானமே ஆத்மா அல்லது ஜீவாத்மாவுக்கு இயல்பாதலால் 'விபு'; என்பது அவனையே குறிக்கும். ஸ்வரூபக்ஞானம் பெற்று முக்தி பெறாத ஆத்மாவே கரும பலனாகிய புண்ணிய பாவங்களை அனுபவிக்கிறான். பரமாத்வாகிய பகவானுக்கு அந்நியமாகத் தன்னை சுதந்திரம் உடையவனாக பாவிக்காமல், பகவானுக்கு பரதந்த்ரனாகத் தன்னை அறிந்து கொண்ட ஞானி புண்ணிய பாபங்களைக் கிரகிப்பதில்லை. (த்வைதம்) பகவானே தனக்கு அந்தராத்மா; பகவானே தேகி; ஜீவாத்மாகிய தான் பகவானால் இயக்கப்படும் தேகம்; ஆதனால் பகவானுக்கே பரதந்த்ரன் (உடலுறுப்புப் போல் கீழ்ப்பட்டவன்) என்ற உண்மையை அனுபவித்துணர்ந்த ஞானி கருமபலனாகிய பாவ புண்ணியங்களை அடைவதில்லை. மற்றவர்கள் அகங்கார மமகாரத்தோடு கூடிய அக்ஞான மோஹத்தால் ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாமல் தம்மைப் பரமாத்மாவோடு சம்பந்தமில்லாத சுதந்திரகளாக வேறுபடுத்தி உணர்கிறார்கள். அதனால் புண்ணிய பாவத்தைக் கிரகிக்கிறார்கள் (விசிஷ்டாத்வைதம்)

அடுத்த சுலோகத்தால் கண்ணன் ஞானத்தின் தன்மையைச் சொல்லுகிறார்.

அந்த மயர்வை அறிவால் நசிப்பித்துச்
சிந்தை தெளிந்து சிறப்புடையோர்-தந்தமது
பேரறிவு தானே பகலவனில் பீடுடைத்தாய்
நேரறிவு காட்டு நிறத்து.

(இ–ள்) அந்த மயர்வை–அந்த அக்ஞானத்தை, அறிவால் நசிப்பித்து–ஞானத்தால் நாசம் செய்து, சிந்தை தெளிந்த–மனம் (மோஹம் கலக்கம் இவைகள் நீங்கப்பெற்றுத்) தெளிவடைந்த, சிறப்புடையோர் தம் தமது–மேன்மைபெற்ற பெரியோரது, பேர அறிவுதான்–பரம க்ஞானமானது, பகலவனில்–சூரியன் போல, பீடு உடைத்தாய்–பெருமை உடையதாய், நேர் அறிவு காட்டு நிறத்து– எல்லாவற்றையும் நன்றாகப் பிரகாசப்படுத்தும் தன்மை வாய்ந்தது.

ஜ்ஞாநேந்து தத்[3]ஜ்ஞானம் யேஷாம் நாசிதம் ஆத்மநா

தேஷாம் ஆதித்யவத் ஜ்[3]ஞானம் ப்ரகாசயதி தத்பரம்

(இ–ள்) யேஷாம்து–எவர்களுக்கானால்; ஆத்மந: ஜ்ஞாநேந– ஆத்ம ஞானத்தால், தத் அக்ஞானம்–அந்த அக்ஞானம், நாசிதம்–நாசம் செய்யப்பட்டதோ, தேஷாம்–அவர்களுக்கு, தத்–(இயல்பான) அந்த, பரம ஞானம்–சிறந்தஞானம், ஆதித்யவந்த–சூரியன்போல. ப்ரகாச்யதி– (எல்லாவற்றையும்) பிரகாசிக்கச் செய்கின்றது.

சூரியன் வந்ததும் இருட்டு நீங்கி விடுகிறது. இருட்டின் காரணமாகப் பழுதையில் தோன்றிய பொய்யான பாம்பைப் போக்கிப் பழுதையைச் சூரியன் உள்ளபடியே பிரகாசிக்கச் செய்கின்றது. அதேபோல் சிறந்த ஞானம் வந்ததும் அக்ஞானம் நசித்து விடுகிறது.அக்ஞானம் காரணமாகப் பிரபஞ்சம் என்றும் ஜீவன் என்றும் வேறாகத் தோன்றிய பேதம் நீங்கித் தானும் பிறவும் எல்லாம் ஒரே ப்ரும்மமாகப் பிரகாசிக்கும் என்பது இச்சுலோகத்திற்கு அத்வைதார்த்தம்.

அக்ஞான தசையில் ஜீவாத்மா ஒளி குன்றிய மாணிக்கம் போன்றிருக்கும். அப்பொழுது தன்னை ஸ்வதந்திரனாகப் பாவிக்கும். ஞான தசையில் ஜீவாத்மா தன்னை ஈச்வர பரதந்த்ரனாக ஈச்வர அதீனத்தில் அவனுக்குத் தாஸபூதனாகத் தெரிந்து கொள்கிறான். காலதேச வர்த்தமானத்தால் தடைப்படாத (எங்கும் பரந்த) விபுத்வக் ஞானம் ஜீவாத்மாவுக்குக் கிட்டியபோது அவனுக்கு அது எல்லா வஸ்துக்களையும் ஈச்வர பரதந்த்ரமாகவே பிரகாசிக்கச் செய்கிறது என்பது இச்சுலோகத்திற்கு ஏனையோர் கொள்ளும் பொருள்.

இத்தகைய ஞானம் எதைக் கொடுக்கும் என்பதைக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

அப்புந்தி அந்தமனம் அந்நிலைமை அப்பயனாம்
இப்புந்தி யால்வினையை ஈடழித்தோர்-மெய்ப்புந்தி
மீளா வகையுடைய மெய்பயனை நண்ணுவரே
மாளா உயிரின் வழி

(இ–ள்) அப்புந்தி– அவ்வாத்மஸ்வரூபத்தில் புத்தியுடையவர் களாய், அந்த மனம்–அவ்வாத்மாவில்ட மனம் வைத்தவர்களாய், அ நிலைமை–அவ்வாத்மாவில் நிஷ்டையுடையவர்களாய், அ பயனாம்– அதையே ப்ரமமப் பிரயோசனமாகக் கொண்டவர்களாய், இ புந்தியால் வினையை ஈடழித்தோர்–இந்தவிதமான ஞானத்தால் பாபங்களைப்

போக்கிக் கொண்டவர்கள், மெய் புந்தி—பிரும்மக் ஞானத்தால், மாளா உயிரின்—அழிவற்ற உயிருக்குரிய, மீளா வகையுடைய—திரும்பி வர மாட்டாத இயல்புடைய, வழி—இட—(ஸ்தான) மாகிய, மெய்யபயனை—மோக்ஷத்தை, நண்ணுவர்—அடைவார்கள்.

தத்புத்தய ஸ்ததாத்மாந: தந்நிஷ்டாஸ்தத் பராயணா:
கச்சந்த்ய புநராவ்ருத்திம் ஜ்ஞாந நிர்தூத கல்மஷா:

(இ—ள்) தத் புத்தய:— ஆத்மா விடத்திலே புத்தியுள்ளவர்களாயும், தத் ஆத்மாந:—ஆத்மாவில் மனமுள்ளவர்களாயும், தந்நிஷ்டா:—ஆத்மாவில் நிஷ்டையுடையவர்களாயும் தத்பராயணா:—அதையே பரமப் பிரயோசனமமென்று கருதுகின்றவர்களுமாகிய ஞானிகள், க்ஞான நிர்த்தூத கல்மஷா:— ஞானத்தால் பாபத்தை போக்கடிக்கபட்டவர்களாய், அபுநராவ்ருத்திம்—மறுபடிப் பிரகிருதிக்குத் திரும்பாத நிலையை, கச்சந்தி—அடைகின்றார்கள்.

ஞானம் பரம புருஷார்த்தமாகிய மோஷத்தைக் கொடுக்கும். அப்பதவி அல்லது ஸ்தானத்தைப் பெற்றவன் மறுபடி பிறப்பு. இறப்பு, சுகதுக்கங்கள் நிறைந்த ஸம்ஸாரத்திற்குத் திரும்புவதில்லை.

அத்வைத சித்தாந்த ரீதியில் மோக்ஷம் என்பது ஒரு புதிய உலகத்தில் போய்ச் சேர்வதல்ல 'தான் வேறான ஜீவன்' என்ற பேதக்ஞானம் நீங்கித் தன்னை ப்ரும்மமாக உணர்ந்துகொள்வதே மோக்ஷம்.

த்வைத, விசிஷ்டாத்வைத சித்தாந்திகளால் மோக்ஷம் ஒரு ஸ்தானமாகக் கொள்ளப்படுகிறது. சுத்த சாத்விகமயமான அப்ராக்ருத வஸ்துவாலாகிய உலகம் என்று அவஸ்துகள் மோக்ஷ லோகத்தைச் சொல்கிறார்கள். அத்வைத சித்தாந்திகள் அவ்வித உலகத்தையும் பிரகிருதி அல்லது மாயையில் அடங்கியதே என்கின்றனர்.

உண்மை எவ்வாறாயினும் மோக்ஷம் அடைந்தவன் திரும்புவதில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். வேதமும் 'நச புனராவர்த்ததே' என்ற வாக்கியத்தால் இவ்வுண்மையை வெளியிடுகிறது. பெரியாழ்வாரும் இவ்வுண்மையை இரண்டடிகளில் அழகாக வெளியிடுகிறார்.

வாயினால் நமோ நாராணாவென்று மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிப் போயினால் பின்னை யித்திசைக்கு என்றும் பிணைக்கொடுக்கிலும் போதவொட்டாரே.

(மத்தகத்திடை—தலையில், போயினால்—மாண்டு மோக்ஷம் போனால்)

55. ஞானியின் உலகம்

"அஞ்ஞானத்தால் விவேகம் மூடப்பட்டிருக்கும்பொழுது ஒருவனுக்குக் காண்பவை. கேட்பவை நினைப்பவையெல்லாம் ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாத வெவ்வேறு பொருள்களாகவே தோன்றும். இருட்டில் மாறுபட்டு ஒன்றிற்கு சம்பந்தமில்லாததுபோல் வெவ்வேறாகவும் பொய்யாகவும், கற்பனையாகவும் தோன்றிய பொருள்கள் சூரியப் பிரகாசத்தில் உண்மைத் தன்மையோடு விளங்குகின்றன. அவ்வாறே ஒருவனுக்கு ஞானம் கிட்டியபோது எல்லாம் ப்ரும்ம ஸ்வரூமாகப் பிரகாசிக்கின்றன. அந்த ஞானத்தை அடைந்தவர் பிறப் பிறப்பு சுகதுக்கம் முதலியவற்றிற்கிடமில்லாத அப்பிராக்கிருத ஸ்தானத்தை (மோக்ஷத்தை)ப் பெறுகிறார்கள். பெற்றவர் மோஹம் காரணமாக வரும் சம்சாரத்தை (பிறப்பை) மீண்டும் அடைகிறதில்லை" என்று கண்ணன் சொன்னாரல்லவா?

கண்ணன் கூறிய அவ்வாறான மோக்ஷத்தை ஞானிகள் அடைகிற வரையிலும் அவர்களுக்குத் தேகமிருக்கும். தேக முள்ளவரையில் ஊண் உறக்கம் முதலிய காரியங்கள் அக்ஞானிகளுக்குப் போலவே ஞானிகளுக்கும் குறைந்த அளவிலாவது நிகழ்ந்துதான் ஆகவேண்டும். நிகழ்ந்தால் அக்ஞானிகளுக்குப் பேதமாக (வேறாக)த் தோற்றும் உலகம் ஞானிகளுக்கு எவ்வாறு தோன்றும்? என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுவது இயல்பு. அத்தகைய சந்தேகம் அர்ஜுனனுக்கு எழுந்தபோது அதைப் போக்குவதற்காகக் கண்ணன் ஞானிக்குத் தோன்றும் உலகின் தன்மையை மூன்று சுலோகங்களால் விளக்குகிறார்.

ஆன்றுணர்ந்த அந்தணன் ஆஅத்திநாய் நீசன் எனத்
தோன்றுடலந் தோறும் துவக்கமைந்தங்-கேன்ற உயிர்
ஒக்க நிகழும் உணர்வோர் எனமறையில்
தக்க அறிவுடையோர் தாம்

(இ-ள்) ஆன்றுணர்ந்த அந்தணன்-கல்வியும், வினயமும் நிறைந்த பிராமணன், ஆ-பசு, அத்தி-யானை, நாய்-நாய், நீசன்-சண்டாளன், எனத் தோன்றும் உடலம் தோறும்-எனத் தோன்றுகின்ற தேகங்களிலெல்லாம், துவக்கு அமைந்து-வேறுபாடு கொண்டதுபோல்

பொருந்தி, அங்கு என்ற உயிர்—அங்கங்கே இருக்கும் உயிர்கள், ஒக்க நிகழும்—ஒன்றாகவே (சமமாகவே) இருக்கிறது என்று, உணர்வோர்—பார்ப்போர், மறையில் தக்க அறிவுடையோர் தாம்—வேதத்தில் சொல்லப்பட்ட சிறந்த ஞானிகளே, என—எனப்படுகின்றனர்.

வி^{3}த்யா விநய ஸம்பந்நே ப்^{3}ராஹ்மணே க^{3}வி ஹஸ்திநி
சுநீ சைவ ச்வபாகேச பண்டி^{3}தா ஸ்ஸம த^{2}ர்சிந:

(இ—ள்) பண்டிதா:—ஞானிகள், வித்யா விநய ஸம்பந்தேந ப்ராம்மணே—வித்தையும் விநயமும் நிறைந்த பிராமணனிடத்திலும், கவி—பசுவினிடத்திலும், ஹஸ்திநி—யானையினிடத்தும், சுநீச ஏவ—நாயினிடத்திலும், ச்வபாகேச—சண்டாளனிடத்தும் (உள்ள ஆத்ம ஸ்வரூபத்தில்) ஸமதர்சிந:—ஸமமாய்ப் பார்ப்பார்கள்.

அக்ஞானிகளுக்கு உயர்திணைப் பிராணிகளிலும், அஃறிணைப் பிராணிகளிலும் சில உயர்ந்தவை போலவும் சில தாழ்ந்தவைபோலவும் தேக வேற்றுமை காரணமாகத் தோன்றுவதைக் கொண்டு, ஒவ்வொரு திணையிலும் உயர்ந்தது, தாழ்ந்தது, உயர்வு தாழ்வில்லாது என மூன்றையும் கூறினார் எனப் பொருள் கொள்வோருண்டு. அவர்கள் வித்யா விநய ஸம்பந்நன், அந்தணன், சண்டாளன், பசு, யானை, நாய் என ஆறு பிராணிகளைக் கூறியதாகக் கொள்வர்.

ப்ரும்மம் எனப்படுகிற ஆத்மா ஒன்றேயாதலால் அதுவே அந்தக் கரணத்தில் பிரதிபலித்து பல்வேறு சரீரங்களிலுள்ள பல வெவ்வேறான ஜீவன்களாகத் தோற்றுகின்றது. ஆகாசம் ஒன்றாயிருந்தாலும் அதுவே குடத்திலும் வீட்டிலும் வெளியிலும் ஆக வெவ்வேறு இடங்களில் இருப்பதால் வெவ்வேறு பெயர்கள் பெறுகின்றன. குடமும் வீடும் அழியும் போது வெவ்வேறு பெயருக்கு இடமில்லாமல் ஆகாசம் ஒன்றாகவேயிருக்கிறது. அதே போல் சரீர பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகின்ற ஜீவர்களை ஞானி ஒரேவிதமான பிரும்மம் அல்லது ஆத்மாவாகப் பார்க்கிறான். ஆத்மா ஒன்றே யாதலால் அதுவே வேற்றுமையின்றிச் சமமாய் எங்கும் நிறைந்திருப்பதால் ஞானி அக்ஞானிகளின் த்வைத (வேற்றுமை நிறைந்த) உலகையும் உயிர்களையும் சமமாய் காண்கிறான். இது இச்சுலோகத்தின் அத்வைதார்த்தம்.

பிராணிகள் தேகத்தால் வேறுபட்டுத் தோன்றினாலும், தேகங்களில் இருக்கும் பல ஜீவாத்மாக்கள் தம் இயற்கை ஸ்வரூபத்தால் ஒரேமாதிரியானவை. ஜீவாத்மாவிலிருக்கிற பரமாத்மாவும் எல்லா

ஜீவன்களிலும் சமமாக நிறைந்திருக்கிறார். ஆகவே, ஞானியால் பிறரால் சரீர பேதங் காரணமாக வேறாகப் பாவிக்கப்படும் பிராணிகள் சமமாகவே பார்க்கப்படுகின்றன என்பது மற்றையோர் கொள்ளும் பொருள்.

எல்லாவற்றையும் சமமாகவே அறிந்துகொள்ள மாட்டாதவருடைய ஞானம் மிக இழிவானது என்பதைத் திருமழிசைப்பிரான் ஒரு வெண்பாவில்

தேவராய் நிற்கும் அத் தேவும்அத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்-யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமால்என்று ஓராதார்
கற்கின்றது எல்லாம் கடை.

(அத்தேவு–கடவுள் அல்லது பிரும்மம், முதுபுணர்ப்பு–பழமையான கூட்டு, நெடுமால்–கடவுள், ஓராதார்–உணராதவர், கடை–இழிவு) தெளிவாக விளக்குகிறார்.

இப்பிறவிச் சங்கம் இவரால் வெலப்பட்டது
ஒப்பில் எவர்க்குமனம் ஒத்தமைந்தது-அப்படியாத்
தீதிலா ஒத்தஉயிர் சீர்ஆர் பிரமத்துள்
மீதுதான் நிற்குமவர் மிக்கு.

(இ–ள்) எவர்க்கு–எந்தப் புருஷனுக்கு, மனம்–மனமானது, ஒப்பில்–சமத்வத்தில், ஒத்து அமைந்தது–பொருந்தி நிலைத்திருக்குமோ, இவரால்–இத்தகையோர்களால், இப்பிறவிச் சங்கம் வெல்லப்பட்டது–ஸம்ஸாரத்தின் தொடர்பு அறுக்கப்பட்டதாகும், அப்படியா–அவ்வாறு, தீதுஇலா உயிர்–நிர்த்தோஷமான ஆத்மா, ஒத்த–சமமாயிருக்கிறதாகையால், அவர்–அந்த ஞானிகள், சீர் ஆர் பிரமத்துள் மீதுதான்–சிறந்த பிரமத்தினிடத்திலேயே. மிக்கு நிற்கும்–நன்கு நிலைத்திருப்பார்கள்.

இஹைவ தைர்ஜிதஸ்ஸர்கோ[3] யேஷாம்ஸாம்யே ஸ்தி[2]தம்மந:
நிர்[3]தோஷம் ஹிஸமம் ப்ர[3]ஹ்ம தஸ்மாத் ப்ர[3]ஹ்மணிதே ஸ்திதா:

(இ–ள்) யேஷாம்–எவர்களுடைய, மந:–மனமானது, ஸாம்யே–ஸமத்வத்தில், ஸ்திதம்–இருக்குமோ, தை:–அவர்களாலே, இஹைவ–இவ்வுலகத்திலேயே, ஸர்க:–ஸம்ஸாரமானது, ஜித:–ஜயிக்கப்பட்டாதாகிறது, ஹி–யாதொரு காரணத்தால், நிர்தோஷம்–

பிரகிருதி சம்பந்தமற்ற, ப்ரம்ம—பிரும்மானதுஸமம்—(எங்கும்) ஸமமானதோ, தஸ்மாத்—அதனால். தே—அந்த ஞானிகள், ப்ரம்மணி ஸ்திதி:—பிரும்த்திடம் இருப்பவர்கள்.

சர்வமும் ஒரே விதமாய், ப்ரும்மமயமாய் இருப்பதை உறுதியாய் உணர்ந்தவன் இவ்வுலகில் தேகத்தோடிருக்கும்பொழுதே ஜனன மரணத்திற்கிடமான சம்சாரத்தைமேற்கொண்டு வராதபடி அறுத்தெறிந்து விடுகிறான். எல்லாவற்றையும் பிரும்மமாகக் காண்பதால் தன்னையும் ப்ரும்மமாக உணர்ந்து ஞானி பேத உலகில் இருந்தபோதிலும் பேதத்திற்கே இடமில்லாத ப்ரும்மத்திலே மானஸீகமாக வஸிக்கிறான். இது அத்வைதம்.

பரமாத்மா எல்லா ஜீவன்களிலும் அந்தராத்மாவாய் (உயிருக்குயிராய்) இருப்பதுபோலத் தனக்கும் அந்தராத்மாவாய் தன்னில் கலந்திருப்பதை உணர்ந்த ஞானி தன்னைப் போலவே பிற உயிர்களையும் ஈச்வர பரதந்திரர்களாகவே பார்க்கிறான். ஈச்வர சம்பந்தத்தைவிட்டுப் பார்க்கும்போது யாரிடமும் த்வேஷம் உண்டாவதில்லை ஸம பாவனையே மனத்தில் நிலைக்கிறது. அவ்வாறு நிலைக்கப்பெற்ற ஞானி உடலிருக்கும் போதே மேற்கொண்டு பந்தம் வராமல் செய்துகொள்ளுகிறான். பிரும்மம் எல்லாவற்றையும் சமமாய்த் தரித்துக் கொண்டிருப்பது போல் ஞானி எப்பொழுதும் பிரும்மத்தை ஆச்ரயித்து (பற்றி)ப் பிரும்மத்தினிடமே இருக்கிறான். உயிர் உடலைத் தரித்துக்கொண்டும், உடல் உயிரைப் பற்றிக்கொண்டும் இருப்பதுபோல் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இருக்கிறார்கள் என்று இதற்கு வேறு சித்தாந்தங்களில் திருஷ்டாந்தம் காட்டப்படுகிறது.

ஞானியின் மனம் தானாக, உலக நிகழ்ச்சிகளால் வரும் இன்பதுன்பங்களை விரும்பவோ வெறுக்கவோ செய்வதில்லை; என்றாலும் அவை தாமாக வரும்போது ஞானியின் உள்ள நெகிழ்ச்சிகள் எவ்வாறிருக்கும் என்பதை அடுத்த சுலோகத்தில் காட்டுகிறார்.

இன்பமது பெற்றுகவான் இன்னாத துள்நடுங்கான்
தன்படியில் புந்தி தனைநிறுத்தி-முன்பயிலு
மோகம் ஒழிந்தின்றயை முற்றுமறிந்து இவ்வுயுரின்
போகமதில் நின்றமைந்தான் பூண்டு

(இ—ள்) தன் படியில் புந்திதனை நிறுத்தி—ஆத்மாவில் புத்தியை நிறுத்தி, முன் பயிலும் மோகம் ஒழிந்து—(தேகாபிமானமாகிற), முன்

செய்யப்பட்ட மோகத்தை நீக்கினவனாய், இறையை முற்றும் அறிந்து–ப்ரும்ம ஸ்வரூபம் முழுவதையும் அறிந்துகொண்டு இ உயிரின்போகம் பூண்டு இவ்வாத்மானந்த அநுபவத்தை மேற்கொண்டு அதில் நின்று. அமைந்தான்–அதிலேயே நிலையாகப்பொருந்திய ஞானி, இன்பமது பெற்று உகவான்–இன்பத்திற்கிடமான இஷ்ட வஸ்து கிடைக்கும் போது சந்தோஷப்படுவதில்லை, இன்னாதது–துன்பத்திற்கிடமாய் வெறுக்கக்கூடிய கிடைக்கும்போது, உள்நடுங்கான்–பயந்து வருத்தப்படுதில்லை.

3
நப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம்
2 3 3 4 4 3 3 2 2
ஸ்திரபுத்தி ரஸம் மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்தித:

(இ–ள்) ஸ்திரபுத்தி:–ஆத்மாவில் நிலைத்த புத்தியுடையவனாயும், அஸம் மூட:–மோஹமற்றவனாயும், ப்ரஹ்மவித்–ப்ரும்ம ஸ்வரூபத்தை அறிந்தவனாயும், ப்ரஹ்மணி ஸ்தித:–ப்ரும்ம நிஷ்டையில் நிலைத்தவனாயுமிருக்கிற புமாந்–புருஷன், ப்ரியம் ப்ராப்ய–இஷ்டத்தை அடைந்து, நப்ரஹ்ருஷ்யேத்–மகிழ்வதில்லை, அப்ரியம் ப்ராப்ய–பிரதி கூலத்தை அடைந்து, நோத்விஜேத்–(பயந்து) வருந்துவதில்லை.

கோடையில் வீசும் தென்றல் காற்று உடலில் படும்போது மனம் சந்தோஷத்தை அடைகிறது. குளிர்காலத்தில் கோரமாய் வீசும் வாடைக் காற்று உடம்பில் படும்போது வேதனையால் மனம் வருந்துகிறது! ஜுரம் வருமோ?' என்று பயந்து அவ்வாடைக் காற்றை உடலில் படாது விலக்கப் பார்ப்பது எல்லோருக்கும் சகஜம். அவ்வாறே இனிய கானத்தை (பாட்டைக்) கேட்டுச் சந்தோஷமும், கொடிய அழுகைக் குரலைக்கேட்டு வெறுப்பும் கொள்ளுகிறார்கள். ஞானியோ இந்திரியங்கள் மூலமாகத் தன்னை வந்தடையும் பிரிய அப்பிரியங்களில், விருப்பு வெறுப்போ இன்ப துன்பமோ கொள்ளாமல் சமநிலையிலேயே இருக்கிறான்.

56. எதை எப்பொழுது அடக்க வேண்டும்?

ஞானி இழிவாகக் கருதப்படும் நாயையையும் உயர்வாகக் கருதப்படும். பசுவையும் நாயை உண்ணும் சண்டாளனையும் நல்விஷயங்களைத் தியானம்செய்து பணிவுடனிருக்கும் அந்தணனையும் சமமாய்ப் பார்க்கிறான். எங்கும் சமமாயிருக்கிற ப்ரும்மக்ஞானத்தால் ஸம தர்சனம் பெற்ற யோகி, இவ்வுலகில் இருக்கும் காலத்தில் விஷய

சுகமோ துக்கமோ தன்னை வந்தடையும்போது மனம் பாகமடையாமல் சம நிலையிலேயே இருக்கிறான். ஆக யோகத்தால் (நிஷ்காம்ய கர்மத்தால்) ஸமதர்சனமும் ஸமதர்சனத்தால் ஸம நிலையும் வரப்பெற்றவன் மறுபடிப் பிறப்பதில்லை திரும்பி வராத முக்தியை அடைகிறான் என்று கண்ணன் முன்னே சொன்னதைக் கேட்ட அர்ஜுனனுக்கு ஸமதர்சமும் ஸமநிலையும் வந்தால் மோட்சம் கிட்டிவிடுமே. மோட்சத்திற்கு முந்திய அவ்விரண்டு நிலைகளையும் பெறுவது சுலபம்தானே. ஸமநிலை சற்றுக் கஷ்டமாமக விருந்தாலும் அதற்கு முந்திய ஸமதர்சநநிலை வந்தால் ஸம நிலையும் தானே வந்துவிடுமே அவ்வாறாயின் மோட்சமடைவது எல்லோருக்கும் சுலபம்தானே என்று நினைக்கவாரம்பித்தான்.

அதையறிந்த கண்ணன் ஸம தர்சனம் வருவதற்கு உலகமும் உலக விஷயமான பற்றும் அடியோடு ஒழியவேண்டியதன் அவசியத்தை அடுத்தபடியாக அர்ஜுனனுக்கு அறிவிக்கிறார்.

புறம்பயிலும் தொத்தற்ற புந்தியனாய் உள்ள
சிறந்தஉயிர் இன்பமெவன் சேரும்-துறந்தஅவன்
சேரும் பிரமத்தில் சிந்தையனாய் அந்தமிலாது
ஆரும் சுகமடையும் ஆங்கு.

(இ-ள்) புறம் பயிலும் தொத்து அற்ற-(ஆத்மாவுக்கு) வேறான உலகம் தேகம் சம்பந்தமான விஷயங்களில் பற்றாத, புந்தியனாய்-மனமுடையவனாய், உள்ளே சிறந்த உயிர் இன்பம்-தனக்குள்ளே சிறப்பாயிருக்கிற ஆத்ம சுகத்தை, எவன் சேரும்-எவன் அடைகிறானோ, துறந்த அவன்-எல்லாவற்றையும் நீக்கின அவன், சேரும் பிரமத்தில் சிந்தையனாய்-தன்னிலிருக்கும் ப்ரும்மத்திலே மனம் பொருந்தியவனாய், அந்தம் இலாது ஆரும் சுகம் அடையும்-அழிவில்லாமல் நிறைந்த ஆனந்தத்தை (மோக்ஷத்தை) அடைவான்.

[3]பாஹ்ய ஸ்பர்சேஷ்வஸக்தாத்மா விந்தத்யாத்மநி யத்ஸுகம்[3] [2]
ஸ [3]ப்ரஹ்மயோக [3]யுக்தாத்மா ஸுக [2]மக்ஷய மச்நுதே

(இ-ள்) ய:-எவன், பாஹ்ய ஸ்பாசேஷு-ஆத்மாவுக்கு வேறான விஷயாநுபவங்களில், ஆஸக்த ஆத்மா-பற்றாத மனமுடையவனாய், ஆத்மநி (ஏவ)-ஆத்மாவில்தானே, ஸுகம் விந்ததி-சுகத்தை அடைகிறானோ, ஸ:-அவன், ப்ரம்மயோக யுக்த ஆத்மா-ப்ரும்ம

த்யானத்துடன் கூடிய மனமுடையவனாய், அக்ஷயம் ஸுகம்–அழியாத சுகத்தை (மோக்ஷத்தை), அச்நுதே–பெறுகிறான்.

'ஆத்மநி' என்னும் பதத்திற்கு ராமாநுஜர் 'ஆத்மஸ்வரூபத்தில்' என்று பொருள் செய்திருக்கிறார். எனவே அச்சம்பிரதாயப்படி பகவானுக்கே தாஸபூதனாய் பரதந்த்ரனாயிருக்கும். ஆத்ம குணங்களில் ஈடுபட்டு ரமிப்பவன், ஸர்வஸ்வாமியாய் ஸர்வ சக்தனாய் ஸாவக்ஞனாயிருக்கும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்து தியானிக்கமுடியும். அப்பரமாத் மத்யானம் அழியாத பேரின்பத்தைத் தரும்' என்று பொருள்படும்.

ஒரு சிலர் பதங்களை வருவித்து இச்சுலோகத்தை இரண்டு வாக்கியங்களாகக் கொண்டு பொருள் செய்கின்றனர். அது பின்வருமாறு:–'உலகப் பொருள்களில் ஆசையில்லாத மனமுடையவன் அந்தக்கரணத்தில் எந்த சுகமுண்டோ அந்தச் சுகத்தை அடைகின்றான். பிரமத் தியானத்தில் மனமுடையவன் அழிவில்லாத மோக்ஷானந்தத்தைப் பெறுகிறான். முன் சொன்னது ஆத்மாநுபவமாகிய கைவல்யானந்தம். பின் சொன்னது பரமாத்வோடிருந்து அநுபவிக்கும் பேரானந்தம். இதனால் பந்த நிவர்த்தி அல்லது மோக்ஷம் இரண்டு வகைப்படும் எனக் காட்டப்பட்டது' என்பர்.

ஒரு சாரார் மோக்ஷத்தில் பல்வேறு நிலைகளைக் கூறியபோதிலும் அவர்கள் உள்பட எல்லா சித்தாந்திகளும் மறுபடி பிறப்பில்லாத ஸ்தானத்தையே (நிலையையே) மோக்ஷம் என்று ஒப்புக் கொள்கிறார்கள். அதைப்பெறுவதற்கு ஆசையை அடியோடு அகற்ற வேண்டியது அவசியம் என்றும் எல்லா சித்தாந்திகளும் ஒப்புக் கொள்கின்றனர். எல்லா மதங்களிலும் அதிகமாகப் புத்த மதம் அதை அடிக்கடி ஞாபகப்படுத்துகிறது. ஸமதர்சனமோ, சமநிலையோ, மோக்ஷமோ வருவதற்கு ஆசையொழிய வேண்டியதன் அவசியம் இச்சுலோகத்தின் நன்கு காட்டப்படுவதை எல்லோரும் ஏகமனதாக ஒப்புக் கொண்டோயாக வேண்டும்.

'பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்

என்று குறளிலும் இதன் ஸாரம் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.

இதைக் கேட்ட அர்ஜுனனுக்கு பற்றை விடுவது சுலபமா? பற்றை அகற்றுதற்கு ஏதாயினும் உபாயம் இருக்குமா?என்ற ஆலோசனை உண்டாயிற்று. அப்பொழுது கண்ணன் ஒரு உபாயம் கூறுகிறார்.

புலன்சேர் பொறியில்வரும் போகங்கள் துன்பக்
குலம்சேரும் காரணமாம் கோளால்-நலம்சேர்ந்து
நிற்பதுவும் இல்லை நிறைஞான வான்அவற்றில்
அற்பம்உகப் பெய்தான் அமர்ந்து.

(இ–ள்) புலன்சேர்ந்து–உலக விஷயங்களில் சேர்ந்து, பொறியில் வரும் இந்திரியங்கள் மூலமாக வரும், போகங்கள் அநுபவங்கள், துன்பக் குலம் சேரும் காரணமாம்–துன்பம் மிகுதியாக வருவதற்குக் காரணமாகவிருக்கும். கோளால் நலம் சேர்ந்து–தீமையோடு (போலியான) இன்பம் கூடி, நிற்பதுவும் இல்லை–(அது) அழியாமல் நிலைத்திருப்பதுமில்லை,நிறை ஞானவான்–நிறைந்த ஞானமுடையவன், அவற்றில்–(அதனால்) போலியான உலக இன்பங்களில், அமர்ந்து–பொருந்தி, அற்பம் உகப்பு எய்தான்–கொஞ்சம் கூட ரமிக்கமாட்டான்.

4 3 3 2
யேஹிஸம்ஸ்பர்சஜா போகா து:கயோநய ஏவதே
3 3 4
ஆத்யந்தவந்த; கௌந்தேய நதேஷு ரமதே புத:

(இ–ள்) ஸம்ஸ்பர்சஜா–(விஷயத்துக்கும் இந்திரியத்துக்குமள்ள) ஸம்பந்தத்தாலுண்டான, யேஹி போகா:–எந்தப் போகங்களோ, தே–அவை, ஆத்யந்தவந்த; ஸந்தி–உற்பத்தி நாசங்களுள்ளவைகாயிருக்கின்றன; துக்கயோ நய:–துக்கத்திற்குக் காரணமாயுமிருக்கின்றன; அத:–ஆகையால். கௌந்தேய–குந்தி புத்திரனே! தேஷு–அவைகளில், புத:–ஞானமுடைய விவேகி, ந ரமதே–ரமிக்கமாட்டான்.

ஆத்மாவுக்குக் புறம்பான விஷய போகங்கள் அனுபவ காலத்தில் இன்பம் தருவது போல் தோன்றினாலும் முடிவில் துன்பத்தையே தருகின்றன; அவற்றைப் பெறுவதற்கு வேண்டிய, பொருள், பதவி இவற்றைத் தேடுவதும் தேடியவற்றைக் காப்பாற்றுவதும் காப்பாற்றியதை இழக்க நேரிடுவதும், துன்பமே. ஆகத் தேகம், தேகத்தைப்பற்றி வரும் விஷயங்கள் யாவும் துன்பத்தையே விளைவிக்கின்றன என்பதை ஒருவன் தானே அடிக்கடி சொல்வதும் பிறர் சொல்லக் கேட்பதும் எவ்விதப் பிரயோசனத்தையும் அளியாது. விஷயபோகங்கள் துன்பமாய் முடிவதையும் துன்பத்திற்கே காரணமாயிருப்பதையும் அறிய வேண்டும். உணரவும் வேண்டும், உண்மையை உணர்ந்தால் விஷயங்களில்

ஆசையுண்டாகாது. அவ்வுண்மை உணர்வு புறம்பான விஷயங்களில் பற்றை விடுவதற்கு உபாய (ஸாதன) மாயிருக்கும் என்பது இச்சுலோகத்தாற் சுட்டிச் சொல்லப்பட்டது.

'பற்று அனாதி வாஸனையால் வருகிறது' என்று சொன்னாலும் விஷய ஸம்பந்தமில்லாமல் வருவதில்லை. புறம்பான விஷயங்களால் ஆசையும் கோபமும் அவை காரணமாக, மனத்துடிப்பும் ஒருவனுக்கு உண்டாகின்றன. அம் மனத்துடிப்பைக் காலத்திலே அடக்கவேண்டும் என்பதை அடுத்தபடியாகத் தெரிவிக்கிறார்.

காயம் கழிப்பதற்கு முன்னில்இக் காலத்தே
மாயம் தருகாமம் வல்வெகுளி-யாயவிவை
வேகத்தைத் தானடக்க வல்லான் அவன்யோகி
போகத்தைத் தானடையும் போய்.

(இ–ள்) காயம் கழிப்பதற்கு முன்னில்–சரீரத்தை விடுவதற்கு முன்பு; இக் காலத்தை–(அரிதாய்க் கிடைத்திருக்கும்) இம் மானிடப் பிறவியின்போதே, மாயம் தரு–மயக்கத்தைக் கொடுக்கின்ற, காமம் வல் வெகுளியாய இவை வேகத்தைத் தான்–ஆசை கொடிய கோபம் இவற்றால் வரும் மனத்துடிப்பை அடக்க வல்லான் அவன்–அடக்கும் சாமர்த்தியம் வாய்ந்த ஒருவனே, யோகி–ஆத்மாநுபவத்திற்குத் தக்கவன்; போகத்தைத்தான் போய் அடையும்–மோட்சத்தை அவன் பெறுவான்.

சக்நோதீஹைவ யஸ்ஸோடு4ம் ப்ராக்சரீர2வி மோக்ஷணாத்
காம3க்ரோதோ3த்3ப4வம் வேக3ம் ஸயுக்த ஸ்ஸஸுகீ2 நர:

(இ–ள்) ய: நர:–எந்த மனிதன், சரீர விமோட்சணாத்–சரீரத்தை விடுவதற்கு ப்ராக்–முன்னே, இஹ ஏவ–இங்கேயே, கீமக்ரோத உத்பவம்–காமத்தாலும் கோபத்தாலும் உண்டான, வேகம்–வேகத்தை, ஸோடும்–தாங்கி அடக்க, சக்நோதி–சமர்த்தனாகிறானோ, ஸ:–அவன், யுக்த:–ஆத்மா நுபவத்திற்கு–யோக்கியன்; ஸ:–அவனே ஸுகி–ஸுகத்தை அடைபவன்.

இச் சுலோகத்தில் 'சரீரத்தை விடுவதற்கு முன்பு' என்ற பொருளில் வரும் தொடரை, யொட்டிப் பெரியோர்கள் பல உரைகள் செய்திருக்கின்றனர்.

ஸ்ரீதரர்:– உயிர் நீங்கியதற்குப் பிறகு பெண்கள் தழுவலாலும், மைந்தன் உடலை நெருப்பிட்டுச் சுடுவதாலும் மனோ விகாரம் அடையாமல்

இருப்பதுபோலவே உயிர் இருக்கும் பொழுதும் சுகதுக்காதிகளால் விகாரமடையலிருக்க வேண்டும் என்பது தாத்பரியம்.

சங்கரர்:- தனக்குப் பிரியமானதைக் கேட்பதாலும் பார்ப்பதாலும் உண்டாகும் பிரியமே ஆசை. தனக்கு விரோதமானதைப் பார்த்தல் கேட்டல் நினைத்தல் முதலியவற்றால் உண்டாகும் வெறுப்பே. கோபம். மனத்துடிப்பு. ஆசையால் உண்டாவது. கோபத்தால் உண்டாவது என விருவகைப்படும். அவற்றுள் அவற்றால் உண்டாகும் மனத்துடிப்பால் பகை கண்கள் மலர்தல் கண்ணீர் வார்தல், புன்முறுவல் முதலியன பிறக்கும். வெகுளியால் உண்டாகும் மனத்துடிப்பால் உடலில் பதைப்பு, வேர்வை, உதடு தூக்கல், கண் சிவத்தல், வாய் குழறல் முதலியன பிறக்கும். காமக் குரோதங்களால் உண்டாகும் இவ்வித மனத்துடிப்பை விவேகத்தைக் கொண்டு அடக்குவதே சகிப்பாகும்.

மதுசூதனர், ராகவேந்திரர் கூறுவதின் ஸாரம்:—பசு பக்ஷி முதலிய தேகங்களைப் பெற்றோ காமக் குரோதிகளை அடக்கமுடியாது. ஆகையால் மனித தேகமிருக்கும் போதே அவற்றை அடக் வேண்டுமென்பது இச்சுலோகத்தால் சொல்லப்பட்டது.

உலகப் பொருள்களால் இந்திரியங்கள் மூலமாக வரும் இன்பங்கள் போலி என்றும், தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை என்றும் அதனால் விரும்பத்தக்கதல்லவென்றும் உணர வேண்டும் என்று முன்னே சொன்னார். அதற்கேற்ப அவ்வின்ப விழைவு காரணமாக காமம், கோபம் என்று இரண்டு வகையாக வரும் மனத்துடிப்பை விவேகத்தைக் கொண்டு அரிய மானிடப் பிறப்பிலேயே வயோதிகம் வருமுன்னே அடக்க வேண்டுமென்று அங்கே கண்ணன் தெரிவித்தாதாகக் கொள்ளலாம்.

57. முமுக்ஷுவின் தன்மை

மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு முமுக்ஷு என்று பெயர். நிஷ்காம்ய கருமயோகத்தால் ப்ரும்மக்ஞானம் அல்லது ஸ்வரூபக்ஞானம் வரும். அதனால் சமதர்சனமும் சம நிலையும் உண்டாகும். அப்பொழுது உலக (விஷய) இன்பங்களில் பற்றில்லாமலும், அவை தாமாக வந்தடையும் காலத்தில் பாதகமடையாமலுமிருக்கின்றவன் தியானத்தில் மட்டும் இன்பம் காணுவான். இடையறாமல் அப்பேரின்பத்தைப் பெறுவதில் மட்டுமே நாட்டம் கொண்டு உலகில் உடல் போகும் வரையில்

மற்றவர்களைப்போல் வாழ்ந்துகொண்டிருப்பான் அவனையே வேதாந்திகள் முமுக்ஷு என்று வியவகரிக்கிறார்கள். ஊன்றிக் கவனிப்போர்க்கு அத்வைதிகளால் 'ஜீவன் முக்தன்' என்று சொல்லப்படுவோனும் விசிஷ்டாத்வைதிகளால் 'பரமை காந்தி' என்று சொல்லப்படுவோனும் இவனே என்பது நன்கு விளங்கும். வைணவ சம்பிரதாயத்தில் இவனை 'ப்ரபந்நன்' என்ற மற்றொரு வார்த்தையாலும் விவரிக்கிறார்கள். வார்த்தைகள் வெவ்வேறாயிருப்பதால் அர்த்தத்தில் சிறிது வித்தியாசமும் இருக்கலாம். ஞானியின் வெவ்வேறு நிலைகளைக் குறிக்கும் வார்த்தைகள் என்று கொள்ள வேண்டும். முதல் நிலையை அடைந்தவன் பின்வரும் நிலைகளை கீதையில் ஏற்கனவே கூறியபடி அடைந்தே தீருவான். ஆதலால் முமுக்ஷு, ஜீவன் முக்தன்,பரமைகாந்தி ப்ரபந்நன் எல்லாம் ஒரு அதிகாரியையே குறிப்பதாகக் கொள்ளலாம். அவனுடைய தன்மையைக் கண்ணன் வரும் சுலோகங்களால் வெளியிடுகிறார்.

இவ்வாறு காம வெகுளி அடக்கிமதி
வெவ்வாறு தாமனத்தை வென்றோருக்கு-எவ்வாறு
மீளாது துய்க்கும் மிகுபிரம ஆனந்தம்
நீளாகும் என்று நிகழ்ந்து

(இ-ள்) இவ்வாறு-இந்த விதம், காம வெகுளி அடக்கி ஆசையையும் கோபத்தையும் அடக்கி மதி-ஆத்ம தத்துவ ஞானத்தால், வெவ்வாறு தாம்மனத்தை வென்றோருக்கு-கொடிய மார்க்கத்தில் செல்லும் மனத்தை ஜயித்த புருஷனுக்கு, எவ்வாறும்-எல்லாவிதங்களாலும், மீள்ாது துய்க்கும் மிகுபிரம ஆனந்தம்-திரும்பி வராது அனுபவிக்கும் மேலான பிரமானந்தம் (மோக்ஷம்) என்று நிகழ்ந்தது-எப்பொழுதும் இருந்துகொண்டே, நீள் ஆகும்-பெருகுவதாகும்.

காமக்ரோத[3] வியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம்
அபிதோ[4] ப்ரஹ்ம[3] நிர்வாணம் வர்ததே விஜிதாத்மநாம்

(இ-ள்) காமக்ரோத வியுக்தாநாம்-அவா வெகுளியினின்று விடுபட்டவர்களாய், யதீநாம்-யோகாப்பியாசமுடையவர்களாய், யத சேதஸாம்-அடக்கியமனமுடையவராய், விஜித ஆத்மநாம்-(ஞானத்தால்) வென்ற மனமுடையவர்களான, புருஷாணாம்-புருஷர்களுக்கு, ப்ரும்ம நிர்வாணம்-ப்ரும்மானந்தம் (மோக்ஷம்), அபித: வர்த்ததே-எங்கும் இருக்கின்றது.

சுலோகத்தில் வந்த 'அபித;' என்னும் பதம் பாடலில் 'எவ்வாறும்' என்று மொழிபெயர்க்கப்பட்டது. சங்கரா 'கைக்குள்ளேயே' என்று உரைகொண்டார். அதாவது 'காமக்குரோதங்களை வென்றவனுக்குப் பிரும்மானந்தம் அவன் கைக்குள்ளேயே இருக்கிறது' என்பது பொருள்.

கீதார்த்த தீபிகையில் 'அபித:' என்பதற்கு (தேகத்தோடு இருக்கும் போதும் தேகம்போன பின்பும் ஆக) இருபக்கத்திலும் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் பிறர் 'நாலாபக்கங்களிலும், அதாவது எங்கும்' என்றே பொருள் கொண்டு இச்சுலோகார்த்தத்திற்கு மேற்கோள் காட்டுவதும் உண்டு.

பத்தறுத்த சிந்தையயோடு நின்றுபாசம் விட்டவர்க்கு
எத்திறத்தும் இன்பமிங்கு மங்குமெங்கும் ஆகுமே

(பத்து அறுத்த–ஆசையைவிட்ட, எத்திறத்தும்–எல்லாவகைகளிலும்) என்று திருமழிசைப் பிரான் கூறிய பாடல் இச்சுலோகார்த்தமே என்று சிலர் கொள்வர்.

'சமாதியில் நிலைத்த ஞானமுடையவனது லக்ஷணம் எப்படிப்பட்டது?' என்று அர்ஜுனன் கேள்வி கேட்டதற்குக் கண்ணன் கூறிய பதில் இரண்டாம் அத்தியாய முடிவில் சொல்லப்பட்டது! 'உலக விஷயங்களில் ஞானி எவ்வாறிருப்பான்? எவ்விதம் நடந்துகொள்வான்?' என்பதை மட்டும் முன்னே தெரிவித்த கண்ணன் இப்பகுதியில் ஞானி எங்கிருந்தாலும் எப்பொழுதும் முக்தனே என்பதை உறுதியாகவும் தெளிவாகவும் காட்டுகிறார்.

புறப்பற்றை நீக்கிப் புருவத்துள் கண்ணால்
சிறந்தொக்க மூக்கிருகால் செல்ல-நிறுத்த மனப்
புந்தியான் வென்ற பயவெகுளி யானவனே
சிந்தையான் முத்தன் சிறந்து.

(இ–ள்) புறப்பற்றை–புறம்புண்டான விஷயா நுபவத்தை, நீக்கி–விலக்கி, புருவத்துள்–புருவங்களின் நடுவில், கண் சிறந்து ஒக்க–கண்ணின் பார்வை நன்கு பொருந்த, மூக்கு இருகால் செல்ல நிறுத்து–மூக்கில் சஞ்சரிக்கும் பிராணாபான வாயுக்களை சம கதியாகச் செல்லச் செய்து, (நிறுத்து) மனப் புந்தியான்–(தன் அதீனத்தில் அடக்கிய) மனமும்புத்தியும் உடையவனாய், வென்ற பயம் வெகுளி ஆனவனே–பயத்தையும் கோபத்தையும் வெற்றி கொண்டவனே, சிந்தையான்–

எப்பொழுதும் மனனம் செய்துகொண்டே, சிறந்து முத்தன்–சிறப்புற்று முக்தனாகவேயிருக்கிறான்.

3 3 4
ஸ்பர்சாங் க்ருத்வா பஹிர் பாஹ்யாங் சக்ஷுச்சைவாந்தரே ப்ருவோ:
4
ப்ராணாபானௌ ஸமௌக்ருத்வா நாஸாப்யந்தர சாரிணௌ
3 2 3 4
யதேந்த்ரிய மநோபுத்தீ: முநிர் மோக்ஷபராயண:
3 2 4 4 3
விகதேச்சா பயக்ரோதோ ய ஸ்ஸதா முக்த ஏவஸ:

(இ–ள்) ய:–எவன், பாஷ்யாந்–புறம்புண்டான, ஸ்பர்சாந்–விஷயாநுபவங்களை, பஹிக்ருத்வா–வெளியே விலக்கி, சக்ஷு;சைவ–கண்பார்வையும், ப்ருவோ:அந்தரே–புருவங்களின் நடுவில், கருத்வா–நிறுத்தி, யத இந்த்ரிய மநோபுத்தி:–(தன்னால்) நியமிக்கப்பட்ட இந்த்ரியங்களும் மனமும் உடையவனாய், விகத இச்சா பயக்ரோத;–இச்சை. பயம், கோபம் இவற்றைப் போக்கியவனாய், மோக்ஷ பாராயண:–மோக்ஷமே பிரயோசனமாக நினைப்பவனாய், முநி:–ஆத்மத்ஞான முடையவனோ, ஸ:–அவன், ஸதா–எப்பொழுதும், முக்த:–ஏவ–முக்தனே.

காமக்ரோதங்களை வென்று சமநிலை அடைந்தவன் யோகி. அதனால் சமதர்சனம் பெற்றவன் ஞானி. அவன் ஆத்மாவிற்குப் புறம்பான விஷயங்களில் ரமிக்காமல் ஆத்ம த்யானத்திலே ரமிக்கிறான். உடலை விட்டு அடையும் மோக்ஷத்திலே இச்சைகொண்டிருக்கிறான். மோக்ஷத்தையே எதிர் பார்த்துக்கொண்டுமிருக்கிறான். அவனே முமுக்ஷு என்று சொல்லப்படுகிறான். அவனை முக்தன் (மோக்ஷமடைந்தவன்) என்று சொல்லலாமோ எனில், அவன் வீடு பெறுவது உறுதியாதலாலும், உலகில் உடலுடனிருக்கும்போது மற்றையோரைப் பார்க்கிலும் அதிகமான பேரானந்தத்தை அனுபவிக்கின்றான். ஆதலாலும், அவ்வாறு கூறலாம். இவ்வகையாக வருவதற்கு, சாஸ்திரங்களில் ‘அரசனாகப் போகின்றவனை முன்னமே அரசன் என்று சொல்லி அவனும் அரசு பெற்றாற்போல்’ என்று திருஷ்டாந்தமும் காட்டப்படுகிறது.

‘கரும யோகம், ஞானயோகம், இவற்றில் எனக்கு எதுசிரேஷ்டமோ அந்த ஒன்றை மட்டும் அருளும்’ என்று அர்ஜுனன் கேட்டதற்கு இதுவரை அநேக சுலோகங்களில் பதில் சொல்லி வந்தார். சொல்லி வந்த விஷயங்களில் அர்ஜுனனுக்கு விச்வாஸம் ஏற்படுவதற்காகக் கண்ணன் இவ்வத்யாய முடிவிலும் தன் அவதார மஹிமையைக் கடைசிச் சுலோகத்தால் வெளியிடுகிறார்.

வேள்வி தவங்கொள்வோனாய் மிக்கனைத்தும் என்வசமா
ஆள்வினையன் ஆகி அனைத்துலகு-நீளுற்ற
எல்லா உயிர்க்கும் உறவாம் எனையறிந்த
நல்லான் பெறும் சாந்தி நன்கு.

(இ-ள்) வேள்வி தவம் கொள்வோனாய்-யாகம் தவம் இவற்றின் பலன்களை அனுபவிக்கின்றவனாயயும், மிக்கனைத்தும் என்வசமா- மிகுந்த எல்லாவற்றையும் என் ஆதீனத்தில் கொண்டவனாயும், அனைத்து உலகும் ஆள்வினையன் ஆகி-மேல் கீழ் நடு ஆகிய எல்லாவுலகங்களையும் ஆள்கின்றவனுமாகி, நீள் உற்ற எல்லா உயிர்க்கும்-உறவாம் எனை-எண்ணிக்கையற்ற ஜீவப் பிராணிகளுக் கொல்லாம் கருணையோடு கூடி அதனால் உறவாயிருக்கிற என்னை, அறிந்த நல்லான்-அறிந்துகொண்ட ஞானி, சாந்தி-பரமானந்தமாகிய மோக்ஷத்தை, நன்கு பெறும்-பூரணமாய் அடைகிறான்.

போக்தாரம் யஜ்ஞ தபஸாம் ஸர்வலோக மஹேச்வரம்
ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாம் ஜ்ஞாத்வாமாம் சாந்தி ம்ருச்சதி

(யோகீ)-யோகி, மாம்-என்னை, ஸர்வலோக மஹேச்வரம்-எல்லா உலகங்களுக்குமான பெரிய ஆண்டவனாகவும், ஸர்வ பூதாநாம்- எல்லாப் பிராணிகளுக்கும், ஸுஹ்ருதம்-அன்புடையவனாயும், யக்ஞ தபஸாம்-வேள்விக்கும் தவத்திற்கும், போக்தாரம்(உரிய பலனைப் பெறும் கொடுக்கும்) போக்தாவாகவும், ஜ்ஞாத்வா-அறிந்து, சாந்திம்- பரமானந்தத்தை, ருச்சதி-அடைகிறான்.

'ஸுஹ்ருதம் என்பது பாடலில் 'உறவாம்' என்று கொள்ளப்பட்டது. சங்கரர் 'ஜீவாகாருண்யமுடையவனாய்' என்று உரை செய்திருக்கிறார்.

உபதேசங் கேட்கும் அர்ஜுனனுக்கு உபதேசிக்கும் கண்ணனிடத்தில் 'இவன் மனிதன்தானே; நமக்குச் சாரதிதானே' என்ற அலட்சிய மனப்பான்மை உண்டாகி, அதனால் உபதேசத்தில் விச்வாஸக் குறைவு ஏற்படாதிருப்பதற்காக, கண்ணன் தன் சௌலப்யகுணமும் பரத்வமும் தோன்ற இங்கும் அவதார ரஹஸ்யத்தை எடுத்துரைத்தார். பகவந் நிஷ்டையைச் சொல்லப்போகும் அடுத்த ஆறாம் அத்தியாயத்திற்கு இச் சுலோகம் தோற்றுவாயாக அமைந்தது ரஸிகர்களால் பாராட்டத்தக்கது.

58. ஸாரமும் பலனும்

கருமங்களைச் செய்யாமலே விடுவது; பலனில் ஆசையில்லாமல் கருமங்களைப் பகவதருப்பணமாகச் செய்வது ஆகிய இரண்டில் எது சிறந்ததோ அந்த ஒன்றை மட்டும் தனக்குச் சொல்லும்படி அர்ஜுனன் கேட்டான். 'தான் செய்வதாக மேற்கொண்ட சுயதர்மமாகிய போர்க் கருமத்தைச் செய்யாமலே விட்டுவிடவேண்டும்' என்ற எண்ணமே அர்ஜுனனை இவ்வாறு கேட்கத் தூண்டியது என்பதைக் கண்ணன் அறிந்து கொண்டார். ஆகவே அதற்கேற்ப, கருமத்தைச் செய்யாமலே விடுவதால் அர்ஜுனன் போல்வாருக்கு ஏற்படும் விளைவுகள் நன்கு தோன்றும் படி கரும யோகத்தினால், மோக்ஷத்தில் இச்சை உள்ளவனுக்கு உரிய பலன்கள் யாவும் கிட்டும்' என்று கண்ணன் இதுவரைக் கூறினார்.

கருமத்தைச் செய்யாமலே விடுவது கர்ம ஸந்நியாசம். அதைத்தான் ஏன் பற்றக்கூடாது என்ற நினைப்பினால் அர்ஜுனன் கேட்ட கேள்விக்குக் கண்ணன் விரிவாக விடையளித்து கீதை ஐந்தாம் அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. அதனால் அது கர்ம ஸந்யாஸ யோகம் எனப் பெயர் பெற்றது. இவ்த்யாயாத்தில் பல்வேறு விஷயங்கள் விரவி வருகின்றன.

கர்ம யோகம் ஞானயோகம் இரண்டும் மோக்ஷங் கொடுக்கத் தக்கவை. அவற்றில் கரும யோகமே மிகச் சிறந்தது.

விருப்பு வெறுப்பு இல்லாதவனே நித்ய ஸந்யாஸி. அவன் பந்தத்திலிருந்து சுலபமாய் விடுபடுகிறான்.

விவேகமில்லாதவர்களே 'கர்மா வேறு; ஞானம் வேறு; ஒவ்வொன்றிற்கும் பலன் வெவ்வேறு' என்று கூறுகிறார்கள். இரண்டில் ஒன்றைச் செவ்வையாய் அனுஷ்டித்தால் இரண்டின் பலன்களையும் பெறலாம்.

ஞான நிஷ்டர்களான ஸந்நியஸிகளால் அடையப்படும் உயர்ந்த ஸ்தானம் கரும யோகிகளாலும் அடையப்படுகிறது. ஞான கருமங்களிரண்டும் தாய் தந்தை போன்றவை. ஒன்றின் ஸம்பந்தமில்லாமல் மற்றொன்றைப் பெறுவதென்பதில்லை.

ஆனால் ஸந்யாஸத்தை முதலில் கைக் கொள்வது மிகவும் கஷ்டம், கர்ம யோகத்தில் இறங்கியவன் விரைவில் மோக்ஷமடைந்து விடுகிறான்.

பலனைப் பகவதருப்பணம் செய்து கருமத்தைச் செய்யும் யோகிக்கு, மனச் சுத்தி உண்டாகிறது. அதனால் பரமாத்மத்யானம் கிட்டுகிறது.

அவன் கண்ணால் பார்த்தாலும் காதால் கேட்டாலும் நாவால் உண்டாலும் காலால் நடந்தாலும் வேறு அவயவங்களால் இந்திரியங்களால் எதைச் செய்தாலும் அக் கருமங்களில் சம்பந்தம் சிறிதுமில்லாதவனாயிருக்கிறான். தன்னைத் தேகாதிகளுக்கு அந்நியமாகத் தெரிந்து கொண்டபடியால், 'கருமங்களைத் தேகேந்திரியங்களே செய்கின்றன' என்பதை உறுதியாக வுணர்ந்து, 'நான் செய்கிறேன்' என்ற அஹங்காரத்திற்கு இடங்கொடாமல் தாமரை இலையில் ஒட்டாத ஜலம் போலப் புண்ணிய பாவங்களுக்காளாகாமலிருக்கிறான்.

கருமயோகி பலாபக்ஷேயைவிட்டு (பற்றில்லாமல்) மனச் சுத்தியின் பொருட்டுக் கர்மாவைச் செய்து சாந்தி அடைகின்றான். இந்திரியங்கள் மனம் முதலியவைகளைத் தன் சுவாதீனத்திலே கொண்டுவந்த யோகி சகல கருமங்களையும், ஒன்பதுவாயில்களையுடைய பட்டணம் போன்றிருக்கின்ற தேகத்திலே மனத்தால் விட்டு, தான் ஒன்றைச் செய்யாமலும் செய்விக்காமலுமிருக்கிறான்.

செய்வதும் செய்விப்பதும் பிரகிருதியின் (மாயையின்) காரியமாயிருக்க அக்ஞானத்தால் மனிதர்கள் தாம் செய்வதாக மோஹிக்கிறார்கள். அக்ஞான மழிந்தால் ஞானம் சூரியனைப் போல் பிரும்ம ஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கும்.

அதை அடைய எப்பொழுதும் பகவானிடத்திலே மனதைச் செலுத்தவேண்டும். ஆத்ம நிஷ்டையில் ஈடுபடவேண்டும். சதா அதில் ஈடுபடும் தன்மை வாய்ந்தவர் ஞானத்தால் பாவத்தை நிவர்த்தித்துக் கொண்டு முக்தியைப் பெறுவர்.

ஞானி கல்வியும் வினயமும் நிறைந்த அந்தணனிடத்திலும் நீசனிடத்திலும் நாயினிடத்திலும் யானையிடத்திலும் ஆத்மாவைச் சமமாகவே காண்கிறான். இவ்வாறு சமதர்சனம் பெற்ற ஞானி இன்பதுன்பங்களில் ஒரே விதமாயிருந்து கொள்ளும் சம நிலையை அடைகிறான்.

விஷயங்களால் உண்டாகும் போகங்கள் துக்கத்திற்குக் காரணமானவை தோன்றி அழியும் தன்மை வாய்ந்தவை. அவ்வின்பங்கள் யோகியின் மனத்தைக் கவர்வதில்லை. அவா வெகுளி

காரணமாக உண்டாகும் மனத்துடிப்பை சகிக்கப் பழகிச் சரீரமுள்ளபோதே அடக்கி விடுகிறவன் சமாதானமும் சுகமும் பெறுகிறான்.

புறம்பான விஷயங்களைத் தள்ளி, தனக்குள் தானே ரமித்து, தனது ஜோதிஸ்ஸைத் தானே கண்டு, எல்லாப் பாபங்களையும் போக்கித் தன் இரு புருவங்களுக்கிடையே பிராணனை நிறுத்தி, பிராணாபானன்களை மூக்கு நடுவே சமமாகச் சஞ்சரிக்கச் செய்து பரமாத்மவையே தியானம் செய்வோர் எப்பொழுதும் முக்தராகவே யிருக்கின்றனர்.

சகல லோகங்களுக்கும் பிராணிகளுக்கும் ரக்ஷகனாயும் உபகாரியாயுமிருக்கின்ற பகவானின் அவதார மஹிமையை அறிவது இதைப் பெறச் சாதனமாகும்.

இவ்வத்தியாயப் பொருளை இன்னும் சுருக்கமாகத் தொகுத்து மனதில் வைக்கும்படி வேதாந்த தேசிகர் ஒரே பாடலில் வெளியிட்டிருக்கிறார்.

கண்டதெளிதாங் கருமம் முயிர் காட்டக் கடுகு தலும்
மண்டியதன்படி யின்மனங் கொள்ளும் வரிசைகளும்
கண்டறியா வுயிரைக் காணலுற்ற நினைவுகளும்
வண்டுவரீசனியம் பினன் வாசவன் மைந்தனுக்கே

வண்துவரீசன்–துவாரகா நாதனாகிய கண்ணன், வாஸவன் மைந்தனுக்கு–இந்திரனின் புதல்வனாகிய அர்ஜுனனுக்கு, கருமம் உயிர்காட்ட கடுகுதலும் கண்டு எளிதாம்–பகவதாரதாதன ரூபமான நிஷ்காம்ய கருமம் ஞானமார்க்கத்தைவிடச் சீக்கிரமாக ஆத்மதரிசனத்திற்கு உபயோகமாகிறதென்றும் மண்டி அதன்படி மனம் கொள்ளும் வரிசைகளும்–அக்கருமத்தைச் செய்யும் போது 'யான் செய்யவில்லை' என்று எப்படி அகங்காரமின்றி நினைப்பதென்றும் கண்டறியா உயிரைக்காணலுற்ற நினைவுகளும்–காணாத ஆத்ம ஸ்வரூபத்தைக் காண எப்படித் தியானம் செய்யவேண்டும் என்றும், இயம்பினன்–சொன்னார்.

பலனைக் கூறும் கதை

மத்தர தேசத்தில் புருகுத்ஸபுரம் என்ற பெருடைய நகரம் ஒன்றிருந்தது. அங்கு பிங்களன் என்ற அந்தணன் வஸித்து வந்தான். அவன் தன் ஜாதிகுலத்திற்குரிய தர்மத்தையும் தொழிலையும் செய்யாமல்

அடியோடு விட்டு, சங்கீதம் பயின்று பொழுது போக்கி வந்தான். அதில் மிகுந்த தேர்ச்சியும் புகழும்பெற்று அரசசபைகளில் கச்சேரிகள் செய்யும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி உண்டாயின. அதனால் அரசர்களுடைய நன்மதிப்பைப் பெற்று ஏராளமாகப் பொருள் சம்பாதித்தான்.

கருமத்தால் நீசகுலத்திலே தோன்றியிருந்த ஒருபெண்ணை அழகிற் சிறந்தவள் என மோகங்கொண்டு விவாகம் செய்துகொண்டான். அரசர்களிடம் தனக்கு மேலும் மேலும் பெருகிவந்த செல்வாக்கைக் கொண்டு பல குலப்பெண்களின் கற்பை அழித்தான். அவன் விவாகம் செய்து கொண்ட மனைவி அருணையென்னும் பெயருள்ளவள். இவனை விரும்பவில்லை. பரபுருஷர்களிடம் ஆசை கொண்டாள். அதைத் தெரிந்து கொண்ட பிங்களன் தன் மனைவியைத் தடுத்து ஹிம்சைசெய்ய ஆரம்பித்தான்.

கணவனை முடிப்பதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருந்த அருணை, ஒருநாள் பிங்களன் குடிவெறியில் மெய் மறந்து உறங்கும் போது தன் சோரநாயகனின் உதவியால் அவனைக்கொன்று பூமியில் புதைத்துவிட்டாள். சிறிதுகாலமானபின் அருணையும் பகந்தரம் என்ற நோயினால் மிகவும் வருந்தி மாண்டாள்.

பிங்களனும் அருணையும் யமலோகம் சென்று பற்பல நரகங்களை அனுபவித்தபின் ஒரு காட்டில் முறையே கழுகாகவும் கிளியாகவும் பிறந்து வாழ்ந்தனர். கழுகு ஒருநாள் கிளியைப் பார்த்தபோது பூர்வ ஜன்மப் பகை தோன்றியது. மிகுந்த ஆத்திரம்கொண்டு மூக்கால் கிளியைக் கொத்திக் கொத்தித் துரத்தியது. கிளி தனக்குப் பலமில்லாமலும் ஹிம்ஸையைப் தாங்கமுடியாமலும் பல இடங்களுக்கு ஒடி ஒளியப் பார்த்தது. கழுகு மேலும் துரத்திக் கொண்டே விடாமல் பின் தொடரவே, கிளி பறக்கமுடியாமல் நிலத்தில் ஓரிடத்தில் விழுந்துவிட்டது. விழுந்த இடத்துப்பக்கத்தில் ஓர் மண்டை ஓட்டில் தங்கியிருந்த நீர் கிளியின் உடலில் பட்டது.

அதே சமயத்தில் கிளியைத் துரத்தும் கழுகைக் கண்டோர் அதன்மீது கல்லால் அடிக்க, கழுகும் மண்டை ஓட்டருகே விழுந்து உயிரை விட்டது. இரண்டு உயிர்களையும் யமதூதர் ஏக காலத்தில் எடுத்து யமனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தனர். இரு உயிர்களையும் கண்டு யமதர்மராஜன் சற்று ஆலோசனை செய்து 'நீங்கள் விரும்பிய உலகம் செல்லாம்' என்றான். இதைக் கேட்டு ஆச்சர்யமடைந்து பிங்களன் அருணை என்ற பெயருடனிருந்த இரு உயிர்களும் 'எங்கள்

பாபம் எப்படி அகன்றது, நல்லுலகத்தைப் பெற நாங்கள் என்ன புண்யம் செய்தோம்? என்று கேட்டனர்.

தர்மராஜன் அதற்கு 'கங்காதீரத்தில் வடு' என்ற பெருடைய ஞானியான அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் எப்பொழுதும் கீதை ஐந்தாம் அத்தியாயத்தை ஜபம் செய்துகொண்டேயிருப்பான். பிராரத கர்மம் ஒழிந்ததும் தன் உடலை உலகில் நீத்து அந்தணன் மோக்ஷமடைந்தான். அவனது மண்டையோட்டில் தங்கிய ஜலம் இறக்கும் போது உங்கள் உடல் மீது பட்டதால் உங்கள் பாபங்கள் பறந்தோடின. அளவில்லாத புண்யம் உண்டாயிற்று' என்று பதில் சொன்னான். அப்பொழுதே அருகில் ஒரு விமானம் வர அதில் ஏறி இருவரும் வைகுண்டம் சென்றனர்.

கீதை ஐந்தாம் அத்யாயத்தைப் பாராயணம் செய்தவரின் மண்டையோட்டில் இருந்த ஜலத்திற்கு இவ்வளவு சக்தியும் மகிமையுமானால் அத்தியாயத்தின் பெருமை அளவிடற்கரிது.

(இவ்வாலாறு பாத்ம புராணத்திலுள்ளது.)

59. இரண்டு ஸாதனங்கள்

கீதை இரண்டாம் அத்தியாயம் சுலோகம் 49-ல் கண்ணன் யோகத்தை ஒரு சிறு குறிப்பாக வெளியிட்டார். ப்ரும்ம சாக்ஷாத்காரத்தைப் பெறக் காரணமாயிருக்கும் அதை இரண்டு ஸாதனங்களாகப் பிரித்துச் சொல்லலாம். பலனில் ஆசையில்லாமல் பகவதர்ப்பணமாகக் கடமைகளைச் செய்யும் கர்மயோகம்; ப்ரும்மத்தை அறிவதற்கு அசைவின்றி மனத்தை ஒரேநிலையில் நிறுத்துதலாகிய தியானயோகம் ஆகிய இரு ஸாதனங்களும் இது வரை சொல்லப்பட்டன. கண்ணன் கர்மயோகத்தின் தன்மையை 2-ம் அத்தியாய முடிவில் சுருக்கமாகவும் 3-ம் அத்யாயத்தில் விரிவாகவும் விளக்கினார். கர்மயோகாநுஷ்டத்தால் உண்டாகும் தியான யோகம் அல்லது ஸமாதியோகத்தின் தன்மையை கடந்த 5-ம் அத்தியாயம் சுலோகம் 27-ல் சுருக்கமாய் குறிப்பிட்டார். அதையே 6-ம் அத்தியாயத்தில் விவரங்களுடன் தெளிவாய் விளக்குகிறார். மனதைச் சுவாதீனப்படுத்திப் பகவந்நிஷ்டையில் நிறுத்தும் மார்க்கத்தை உணர்த்துவதால் இவ்வத்தியாயம் ஆத்ம ஸம்யமயோகம் எனப்பெயர் பெற்றது.

எல்லாவற்றையும் விட்டிருந்தலாகிய ஸந்நியாஸ நிலை தியானத்திற்கு ஏற்றதாயிருப்பதால் அத்தியாய ஆரம்பத்தில் கண்ணன் ஸந்நியாஸத்தின் தன்மையைச் சுருக்கமாக வெளியிடுகிறார்.

கர்மபலன் நண்ணாது காரியமென் றுன்னியஅத்
தன்மையனே தூய்வனதில் சார்ந்தியல்வான்-நன்மையமர்
ஞானியவன் யோகியவன் அல்லங்கி யிற்கிரிசை
தானிகழான் என்றும் சமைந்து.

(இ-ள்) கன்ம பலன் நண்ணாது-கருமத்திற்குப் பலனை விரும்பாமல், காரியம் என்று உன்னிய-தான் செய்யவேண்டியதான கடமை என்று நினைக்கின்ற அதன்மையன்-அத்தகைய சுபாவமுடையவனாய் தூய்வன் அதில் சார்ந்து இயல்வான்-பரிசுத்த மனத்தோடு கருமங்களைச் செய்கின்ற, அவன் அவனே ஞானி-ஸந்நியாஸி ஆகிறான். அவன்-அவனே, யோகி (கரும) யோகியும் ஆகிறான் என்றும் சமைந்து-எப்பொழுதும் மனம் பொருந்தி அங்கியில் கிரிசைதான் நிகழான் அக்கினையையும் கருமத்தையும் விட்டவன், அல்லன்-சந்நியாசியும் யோகியும் அல்லன்.

அநாச்ரிதா:கர்மபலம் கார்யம் கர்ம கரோதிய:
ஸ ஸந்யாஸீ ச யோகீச நநிரக்நிர் நசாக்ரிய:

(இ-ள்) ய:-எவன், கர்ம பலம்-கருமத்தின் பலனை, அநாச்ரித:-விரும்பாமல், கார்யம்-செய்யவேண்டியதான, கர்ம கர்மத்தை, கரோதி-செய்கிறானோ, ஸ:-அவனே ஸந்யாஸீச-சந்யாசியும் ஆகிறான். யோகீச-(கர்ம) யோகியும் ஆகிறான், நிரக்நி;ந-அக்கினியை விட்டவன் (சந்யாசி) அல்லன், அக்ரிய: ச-கர்மம் செய்யாதவன் (யோகி) அல்லன். பிரதானமாகத் துறக்க வேண்டியவை ஆசையும் அதிலிருந்து பிறக்கும், கோபமும் ஆகும். அவற்றை விடாமல் சந்யாச ஆசிரமத்திற்குப் புறச்சின்னமாக அக்னி காரியத்தை விடுவதால் மட்டும் பயனில்லை. அவாவை விட்டவனுக்குப் புறச்சின்னங்கள் இருப்பதும் இல்லாததும் ஒன்றே. அவற்றால் அவனுக்கு உயர்வு தாழ்வாகிற எவ்விதப் பயனும் உண்டாவதில்லை. குற்றங்களை ஒழிப்பதே பிரதானம். அவை நீங்கியபோது தலைமயிரைக் களைதலும் ஜடையாக வளர்த்தலும் ஆகிய வெளிவேஷம் துறவிக்கு அவசியமில்லை என்று திருவள்ளுவரும் கூறுகிறார்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்

பழித்தது ஒழித்து விடின்

(மழித்தல்–தலையை மொட்டையடித்தல், நீட்டல்–சடையாக்குதல்)

பற்றை விடுவதையே பிரதானமாகவுடையது ஸந்நியாசத்தின் தன்மை என்பது இதனால் வெளியாகிறது. இச் சுலோகத்திற்குச் சங்கரரும் ராகவேந்திரரும் எழுதிய வெவ்வேறான உரை நம் சிந்தனைக்குரியது.

சங்கரர்:–'அக்கினியையும் கிரியைகளையும் விட்டு உலகில் பிரசித்தி பெற்றிருக்கின்ற சந்நியாசி ஆசிரமத்தை நிஷேத்திக்கும் (விலக்கும்) பொருட்டு இவ்வாறு கண்ணன் சொன்னதாகக் கொள்ளலாகாது. பலாபேக்ஷையை விட்டு ஈசுவரார்ப்பணமாகக் கருமம் செய்யும் யோகியும் கூட, சந்நியாசிதான் என்பதே இதன் தாத்பரியம்'.

ராகவேந்திரர்:– 'வருணத்திற்கும், ஆசிரமத்திற்கும் உரிய கடமை, கடமைகளைப் பலனில் ஆசையில்லாமல் ஈசுவரார்ப்பணமாகச் செய்பவனிடத்தில் சந்யாசத்தின் தன்மையும் யோகத்தின் தன்மையும் சேர்ந்தேயிருக்கின்றன. அவனே தியானத்திற்குத் தகுதியுடையவன். இச் சுலோகத்தின் பிந்தியவாக்கியத்தால் அக்னியையும், அக்கினிஹோத்ரம் முதலிய கருமங்களையும் விட்டவனே தியானத்திற்குத் தகுதியுடையவன்' என்ற சாங்கியைக் கொள்கை மறுக்கப்படுகிறது. இப்பகுதியில் அக்கினியையும், கருமத்தையும், விட்டவன் சந்நியாசியும், யோகியும், ஆகான் எனப்படுவதால் கிருஹஸ்தன் சந்நியாசி ஆகும் பொழுது அக்கினியையும் அக்கினி கர்மாவையும் அடியோடு விடவேண்டியது இல்லை. மாற்றிக் கொள்ள வேண்டும் என்றாயிற்று. எந்த ஆசிரமத்திலிருந்த போதிலும் ஒருவன் சந்நியாசியாகவும், யோகியாகவுமிருக்கலாம்'.

ஸந்நியாஸி, யோகி என்ற வெவ்வேறான வார்த்தைகளைக் கொண்டு அர்ஜுனன் ஸந்யாஸத்தையும், யோகத்தையும், வெவ்வேறான நிலைகள் என்று தவறாகக் கிரகிக்காமலிருக்கும் பொருட்டுக் கண்ணன் மேலும் விளக்குகிறார்.

கூரறிவு சேர்துறவென் றெத்தைக் குறித்துரைப்பர்

பாரறிவில் யோகமதாம் பாண்டவனே-தூரநசை

விட்டியலா தானொருவன் மெய்கரும யோகியெனப்

பட்டியல மாட்டான் பயின்று.

(இ–ள்) பாண்வனே!– அர்ஜுனா!, கூர் அறிவு சேர் துறவு என்று எத்தைக் குறித்து உரைப்பர்–சூட்சுமமான ஞானத்தோடு சேர்ந்த சந்நியாசம் என்று எதைக் குறித்துச் சொல்லுகிறார்களோ, அதாம் அறிவில் யோகம் பார்–அதையே அறிவோடு கூடிய யோகம் எனத் தெரிந்த கொள். தூர நசை விட்டு இயலாதான் ஒருவன்–அடியோடு ஆசையை விட்டொழிக்காத ஒருவன், பயின்று மெய் கரும யோகி எனப்பட்டு இயல மாட்டான்–சாதாரணமாக உண்மையான யோகி என்று சொல்லப்படுவதில்லை.

யம் ஸந்யாஸ இதி ப்ராஹு: யோகம் தம் வித்தி பாண்டவ
நஹ்ய ஸந்யஸ்த ஸங்கல்போ யோகீ பவதி கச்சந.

(இ–ள்) ஹே பாண்டவ–ஹே அர்ஜுனா! யம்–எதை, ஸந்யாஸ:இதி–ஸந்நியாஸமென்று ப்ராஹு:–சொல்லுகிறார்களோ, தம் யோகம்–அதை யோகமாக வித்தி–அறிந்து கொள், ஹி–ஏனென்றால் கச்சந–யோகீ–எந்த யோகியும், அஸந்யஸ்த ஸங்கல்ப:–விடப்படாத ஸங்கல்பத்தோடு (பற்றை விடாதவனாய்), ந பவதி–இருப்பதில்லை.

பற்றை விடுவது ஸந்யாஸத்திற்கும் அவசியம் யோகத்திற்கும் அவசியம். அதை விட்டவனே இரண்டும் ஆகிறான். விடாதவன் ஸந்நியாஸிகவோ யோகியாகவே ஆவதில்லை. ஆக ஒருவனுக்கு இரண்டும் ஸித்திப்பது; அல்லது ஒன்றுமே ஸித்திக்காமலிருப்பது என்பதைத் தவிர ஒருவன் ஸந்நியாஸியாகி யோகியில்லை என்றிருப்பதும், யோகியாகி ஸந்நியாஸி இல்லை என்றிருப்பதும் இல்லை.

சங்கரர்:–'பரமார்த்த சந்நியாசியையும் நிஷ்காம கரும யோகியையும், ஒரு தன்மையாய்க் கூறலாமோ எனில் பலாபேக்ஷையை விட்ட விஷயத்தில் சந்நியாசியும் யோகியும் ஒரு தன்மையர் ஆதலால் கூறலாம்.

'கர்ம யோகம் முடிவான லட்சியம் சித்திக்கும் வரையில் அனுஷ்டிக்கப்படவேண்டுமா?' என்ற கேள்விக்குக் கண்ணன் அடுத்தபடியாகச் சமாதானம் கூறுகிறார்.

ஞானயோகத் தின்நயந்துஅற வேண்டுமுனிக்
கானயோகக் கருமமா முதலாம்-மேல் நலஞ்சேர்
மிக்கமர்ந்தே யோகத்தின் மேலாம் அவனுக்கே
தக்கமுதல் ஆகும் சமம்.

(இ–ள்) ஞான யோகத்தின் நயந்து அறவேண்டு முனிக்கு–ஞான யோகத்தை விரும்பி முழுதும்வேண்டுகின்ற யோகிக்கு, ஆன கருமாம் யோகம் முதலாம்–செய்யப்படும் கரும யோகம் ஸாதனமாகின்றது; மேல நலம் சேர யோகத்தின் மிக்கு அமர்ந்து மேலாம் அவனுக்கே–மிக்க நன்மை சேர்ந்த ஞானயோகம் சித்தித்து அந்நிலையில் மேம்பட்ட ஒருவனுக்கே, சமம்–(கருமத்தை விடுவதாகிற) நிவ்ருத்தி மார்க்கம், தக்கமுதல் ஆகும்–(ஆத்ம ஸ்வரூபத்தை அனுபவிக்கச்) சிறந்த ஸாதனமாகும்.

ஆருருக்ஷோர் முநேர்யோ[3]கம் கர்ம காரணம் முச்யதே
யோகா[3]ரூ[4]டஸ்ய தஸ்யைவ சம: காரண முச்யதே

(இ–ள்) யோகம்–ஞான யோகத்தை, ஆருருக்ஷோ:–அடைய விரும்பிய, முநே;–முனிக்கு, கர்ம–கர்ம யோகமே, காரணம்–ஸாதனம் என்று, உச்யதே–சொல்லப்படுகிறது, யோகா ரூடஸ்ய தஸ்யஏவ–ஞானம், பூர்ணமாய்க் கிட்டிய அவனுக்கே, சம:–கர்மங்களை விடுதல், காரணம் உச்யதே–ஸாதனமாகச் சொல்லப்படுகிறது.

கருமயோகம், கருமத்தை விடுதலாகிய ஸந்நியாசம் அல்லது நிவ்ருத்தி தர்மம் இரண்டும் ஸாதனங்கள்தான். அவற்றைப் பலனளிக்கும் ஸாதனமாக்கிக் கொள்வது என்பது மேற்கொள்வோரின் நிலையைப் பொறுத்த விஷயம் என்று இதனால் தெரிவித்தார்.

60. தோழனும் பகைவனும் ஒன்றே

கருமம், யோகம், ப்ரவ்ருத்தி மார்க்கம் அல்லது ப்ரவருத்தி தர்மம் இவைகளை ஒரே பொருளைக் குறிக்கும் பல வார்த்தைகள் என்று தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறே ஞானம்,ஸந்நியாஸம், நிவ்ருத்தி மார்க்கம் அல்லது நிவ்ருத்தி தர்மம் முதலியவைகளும் ஒன்றையே குறிக்கும் பலவார்த்தைகள் யோகம்,ஸந்யாஸம் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றில் பயின்று ஸித்தியடைந்தவன் யோகியும் ஸந்யாஸியும் ஆகிறான். ஸந்யாஸம் வேறுபோல் தோன்றினாலும் அதுவும் யோகத்திலே அடங்கியிருக்கிறது. யோகமும் ஸந்யாஸமும் லக்ஷியத்தின் (ஸாத்யத்தின்) வேறான அம்சங்களைப் பெறச் சாதனங்களாகின்றன என்று முன்னே சொன்னதற்கேற்ப வரும் சுலோகத்தால் யோகம் சித்தித்தவன் அல்லது யோகாரூடனின் தன்மைகளைத் தொடுத்துக் கண்ணன் சொல்லுகிறார்.

கோலும் புலன்பொருளில் கூட்டும் கருமத்தில்
ஏலு நசையறுத்தான் எப்பொழுது-மேலுயர்ந்தே
எப்பொருளின் சங்கற்பம் விட்டேறும் யோகியென
அப்பொழுதே பேருடையன் ஆம்

(இ-ள்) எப்பொழுது- எந்நேரத்தில் புலன் பொருளில்-இந்திரிய விஷயங்களிலும், கூட்டுக்கருமத்தில்-தேககேந்திரியங்களால் செய்யப்படும் கருமங்களிலும், ஏலு நசை அறுத்தான்-பொருந்திவரும் இச்சையை விட்டவனாய், மேல் உயர்ந்தே-மிகவும் உயர்ந்து (மேம்பட்டு), எப்பொருளின் சங்கற்பம் விட்டேறும்-எல்லாப் பொருள்கள் விஷயமாகவும் வரும் (பெறவேண்டும், பெறவேண்டாம் என்ற) கோரிக்கைகளைத் துறப்பானோ, அப்பொழுதே-யோகி என பேருடையான் ஆம் யோகசித்தி அடைந்தவன் அல்லது யோகாரூடன் என்று பேர் பெறுகிறான்.

யதா[3]ஹி நேந்த்ரியார்த[3] தே[2]ஷு நகர்மஸ்வனுஷஜ்ஜதே
ஸர்வஸங்கல்ப ஸந்ந்யாஸீ யோகா[3]ரூட[4] ஸ்ததோ[3]ச்யதே.

(இ-ள்) யதா (ய:)-எப்பொழுது (எவன்), இந்த்ரிய அர்த்தேஷு- இந்திரிய விஷயங்களிலும், கர்மஸு-கர்மங்களிலும் ந அநுஷஜ்யதே- (மனம்)பற்றவில்லையோ ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ - எல்லாவித ஸங்கல்பங்களையும் துறந்த, ததாஹி-அப்பொழுதுதான், ஸர்வஸங்கல்ப ஸந்யாஸீ-எல்லாவித ஸங்கல்பங்களையும் துறந்த, யோக ஆரூட:- யோக ஸித்தி அடைந்தவன் என்று, உச்சயதே-சொல்லப்படுகிறான்.

கருமங்களைச் செய்யாமல் விட்டவன் யோகியும் அல்ல; சந்நியாசியும் அல்ல என்று இவ்வத்தியாய ஆரம்ப சுலோகத்தில் தெரிவித்தார். கருமங்களில் பற்றை அடியோடு விட்டிருப்பதை யோகியின் தன்மைகளில் ஒன்றாக இச்சுலோகாரம்பத்தில் சொல்லியிருப்பது முந்தியதோடு முரண்படுவதுபோல் தோன்றும் அதற்குச் சமாதானம் இச்சுலோகத்தின் பிற்பகுதியில் ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ (எப்பொருளின் சங்கற்பம் விட்டேறும்) என்ற தொடரில் சொல்லப்படுகிறது.

கருமப் பற்றினின்று விடுபட்டவன் (பற்றைவிட்டவன்) செய்யும் கருமங்களைத்தானே சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கக்கொண்டதாக அகங்காரம் கொள்வதில்லை. கடமை அல்லது ஈசுவர ஆக்ஞை என்றும் தேகேந்திரியங்கள் (கருவிகளாக) அவற்றால் கருமங்கள்

நடைபெறுகின்றன என்று எண்ணுகிறான். மனதில் உண்டாகும் எண்ணம், பற்று, கோரிக்கை எல்லாம் பகவானது அதீனமாய் நிகழ்கின்றன அல்லது பிரகிருதியால் நிகழ்கின்றன என்ற ஞானத்தால் விஷயங்களினின்றும் கருமங்களினின்றும், பிரயத்தனம் (முயற்சி) எடுத்துக்கொள்ளாமலே சம்பந்தமும் பற்றுமில்லாமல் விடுபட்டிருப்பது யோக ஸித்தியடைந்தவனின் இயல்பு என்பது இதனால் சொல்லப்பட்டது. யோகாரம்பத்தில் இருப்பவனுக்கு விஷயம் கருமம் முதலியவற்றினின்று விடுபட்டிருக்க முயற்சி வேண்டும். யோக முடிவில் இருப்பவனிடத்தில் அவ்வித முயுற்சியிராது இயல்பாகவே)சுபாவமாகவே) விடுபட்டிருப்பது அவனுக்கு லக்ஷணமாகும். அவனே யோகரூடன் எனப்படுகிறான். (யோகரூடன்–சம்பூர்ணமான யோகத்தையுடையவன்)

பற்றை விட்டுக்கடமை என்று கர்மத்தைச் செய்வதால் தியானத்திற்குத் தகுதி உண்டாகிறது என்று முன்னே கண்ணன் சொன்னாரல்லவா? இப்பொழுது அத்தியானத்தைச் சிதறாத பெரு முயற்சியுடன் பயில வேண்டுமென்றார்.

தன்னைத் தன்நெஞ்சாலே தானெடுப்பான் தன்நெஞ்சால்
தன்னைத் தளர்விக்கத் தானியலான்-என்னவெனில்
தன்னுடைய நெஞ்சு தனக்குறவு தன்நெஞ்சே
தன்னுடைய வான்பகையாம் தான்.

(இ–ள்) தன்னை (ஒருவன்) தன்னை தன் நெஞ்சாலே–தன்னுடைய மனதைக் கொண்டு, தான் எடுப்பான்–தானே கரையேற்றிக் கொள்ளவேண்டும்; தன் நெஞ்சால்–தன் மனதினால் தன்னைத் தளர்விக்க தான் ,யலான்–தன்னை வீழ்த்திக் கொள்ளலாகாது; என்ன எனில்–என்ன காரணம் என்றால் தனக்கு–ஜீவனுக்கு, தன்னுடைய நெஞ்சுஉறவு–தன்னுடைய மனத் துணையாகும்; தன் நெஞ்சே–தனது மனமே, தன்னுடைய வான் பகையாம்–தனக்குப் பெரிய பகையாகவும் ஆகிறது.

உ[3]த்த[4]ரேத் ஆத்மநாத்மாநம் நாத்மாநமவஸாத[3]யேத்
ஆத்மைவ ஹ்யாத்மநோ ப[3]ந்து[3]: ஆத்மைவ ரிபுராத்மந:

(இ–ள்) ஆத்மநா–மனதினால், ஆத்மா நம்–தன்னை (ஆத்மாவைக்) உத்தரேத்–கரையேற்றவேண்டும், ஆத்மாநம்–தன்னை, நவாவஸதயேத்–தாழச் செய்யலாகாது, ஹி–ஏனெனில், ஆத்மந:– தனக்கு, ஆத்மா ஏவ–மனதே, பந்து:–உறவாகிறது, ஆத்மந:– (ஆத்மாவுக்கு) தனக்கு, ஆத்மா ஏவ–மனதே, ரிபு:–பகையுமாகிறது.

தோழனும் பகைவனும் ஒன்றே

மனமே ஒருவனுக்கு உதவும் தோழனும், கெடுக்கும் பகையும் ஆகிறது. ஆகையால் ஒருவன் அதைக்கொண்டே உய்ந்தாக வேண்டும் என்று சொன்னார். அடுத்தபடியாக எந்த நிலையிலிருக்கும் மனம் துணையாகிறது? எந்தவித மனம் பகையாகிறது என்பதை விளக்குகிறார்.

எவன்தன்னால் தன்நெஞ்சம் என்று வெலப்பட்டது
அவன்தனக்கு அந்நெஞ்சம் உறவாகும்-எவன்தன்னால்
ஆன்ற நெஞ்சு இல்லாதவனுக் காங்கது மாறேயியலும்
ஏன்ற பகைவன் போல் இங்கு

(இ—ள்) எவன் தன்னால்—எவன் ஒருவனால், தன் நெஞ்சம் ஏன்று வெல்லப்பட்டது—தனது மனம் ஜயிக்கப்பட முடிந்ததோ, அவன் தனக்கு அ நெஞ்சம் உறவாகும்—அவனுக்கு அம்மனது தோழமை பூண்டிருக்கும், எவன் தன்னால் ஆன்ற நெஞ்சு இல்லாதவனுக்கு—எவனால் மனம் வெல்லப்படாமலிருக்கிறதோ அவனுக்கு அது—அம்மனமானது, இங்கு ஏன்ற பகைவன் போல்—இவ்வுலகில் பொருந்திய மற்றப் பகைவர்களைப் போலவே, மாறே இயலும்—மாறுபட்டுக் கேடு செய்துகொண்டே இருக்கும்.

3 4
பந்து ராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்ம நாஜித:
அநாத்ம நஸ்து சத்ருத்வே வர்தேதாத்மைவ சத்ருவத்

(இ—ள்) யேந—எவனால், ஆத்மாநா ஏவ—தன்னாலேயே, ஆத்மாஜித:— மனம் ஜயிக்கப்பட்டதோ, தஸ்ய ஆத்மந:—அவன் ஆத்மாவுக்கு ஆத்மா பந்த:—மனமே பந்துவாகும், அநாத்மாந: து—மனத்தை ஜயிக்காதவனுக்கோ, ஆத்மா ஏவ—மனமே, சத்ருவத்—பகைவனைப் போல, சந்தருத்வே—பகையின் தன்மை வாய்ந்தே, வர்(த்)தேத—இருக்கும்.

மேலே வந்த இரண்டு சுலோகங்களிலும் ஆத்ம பதம் மனம் என்ற பொருளிலும் தான் அல்லது ஒருவன் என்ற பொருளிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது அதல்லாமல் ஜீவன் அல்லது ஆத்மா என்றும் சித்தாந்தங்களுக்கேற்பப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஒருவன் மேன்மையடையத் தியானம் அவசியம் வேண்டும். வேறு வழியில் ஒருவனை இழுக்காமல் பரமாத்மாவை இடைவிடாமல் நிைப்பதற்கு மனம் சாதகமாயிருப்பதே தோழமையாகும். அவ்வாறில்லாமல் தடையாக விருப்பது பகைமையாகும். இதனால்

ஒருவன் தியான யோகம் பயில ஆரம்பிக்குமுன் மனதைப் பூரணமாய்த் தன் ஆதினத்தில் கொண்டுவர வேண்டும் என்பது சொல்லப்பட்டது.

இவ்விரண்டு சுலோகங்களுக்கும் வேறுவகையில் அடியில் கண்டவாறு பொருள் செய்து கொள்ளும் சித்தாந்திகளும் உண்டு. அது:–

(சு 5) பகவானின் அனுக்கிரகத்தால் ஒருவன் தன் ஜீவாத்மாவை மேன்மைப்படுத்திதக்கொள்ள வேண்டும்; தாழ்த்திக் கொள்ளக்கூடாது. பகவான் ஒருவனே ஜீவாத்மாவின் தோழன்; அவரே ஜீவாத்மாவின் பகைவன்.

(சு 6) எவன் ஒருவனால் பக்தியைக் கொண்டு பரமாத்மா வெல்லப்படுகிறாரோ அவனுக்கே பரமாத்மா (பகவான்) உறவாகிறார். பக்தியைக் கொண்டு வெல்லப்படாதவனுக்குப் பகவான் விரோதியைப் போலவே அத்தன்மை வாய்ந்தவராக விருக்கிறார்.

அவர்கள் ஆத்மன் என்பதற்கு 'பரமாத்மா' என்றும் 'ஆத்மாநா' என்பதற்கு விவேகம் என்றும் பொருள்கொண்டதே இவ்வாறு உரை செய்ததற்குக் காரணமாகும்.

61. யோகாரூடன்

ஒருவனுக்கு மனமே பந்து; மனமே விரோதி. ஒன்று மனத்தைக் கொண்டு ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும்; அல்லது தன்னைக் கெடுத்துக்கொண்டு தாழவேண்டும். உயர்வதற்கு மனத்தை வென்று பந்துவாக்கிக் கொள்ளவேண்டும் என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லாவா?

பந்துவான மனம் ஒருவனுக்கு எவ்வித உதவி செய்கிறது? எவ்வாறு அவனை உயர்த்துகிறது? என்பது அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது.

சீதம் அழல்இன்பம் துன்பம் சிறப்பிகழ்வின்
மீதமைவு சேர்ந்துமிக வென்றுமனம்-போதம்
திகழ்ந்தவன் நெஞ்சில் தெளிவுறவே நிற்கு
நிகழ்ந்து உயிர்பரமா நேர்ந்து.

(இ–ள்) சீதம் அழல்–குளிர்ச்சி வெப்பம் இவற்றிலும் இன்பம். துன்பம், சுக துக்கங்களிலும், சிறப்பு இகழ்வின்மீது–மான

அவமானங்களிலும், அமைவு சேர்ந்து–(சமமாய்ப் பாவித்து) அடக்கம் பொருந்தியவனாய், மனம் மிகவென்று–மனத்தை நன்றாக ஜயித்து, போதம்–திகழ்ந்த அவன் ஞானம் பிரகாசிக்கின்ற ஒருவனுடைய, நெஞ்சில்–மனத்தில், பரமா உயிர்–சிறந்த ஆத்மாவின் நிஷ்டை தெளிவுறவே நிகழ்ந்து நன்றாக நடந்துகொண்டே, நேர்ந்து நிற்கும்–சாச்வதமாக நிலைத்திருக்கும்.

ஜிதாத்ந: ப்ரசாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:
2 3 2 2
சீதோஷ்ண ஸுகது: கேஷு ததா மாநவமாநயோ:

(இ–ள்) சீத உஷ்ண ஸுகதுக்கேஷு–குளிர்ச்சி, வெப்பம், இன்பம், துன்பம் இவைகளில் ததா–அவ்வாறே, மாந அவமாநயோ:–மான அவமானங்களிலும், ஜித ஆத்மந: ஜயித்த மனமுடையவனாய், ப்ரசாந்தஸ்ய–அடங்கிச் சமமாய் இருக்கிறவனுடைய (மனதில்) ஆத்மாபரம் ஸமாஹித;– ஆத்ம நிஷ்டை நிலையாக இருந்து கொண்டிருக்கும்.

'மனம் மிகவென்று'(ஜிதாத்மான:)' என்ற தொடருக்கு 'ஆழ்ந்த பக்தியால் பகவத் ஸ்வரூபத்தை உணர்ந்து என்று பொருள் கொள்வோரும் உண்டு. அமைவு சேர்ந்து(ப்ரசாந்தஸ்ய)' என்பதற்கு 'தன் முயற்சி இன்றி மனதை சீதோஷ்ணம், சுகதுக்கம், மானவமாநம் ஆகிய இந்திரியத்திற்கு விஷயமாகிற உலகப் பொருள்களின்று விலக்கித் திருப்பும் நிலை'என்று கொள்ளலாம்.

'உயிர் பரமா தெளிவுறவே நிற்கும் (பரமாத்மா ஸமாஹித:) என்பதற்கு சங்கரரும் ஸ்ரீதரரும் கூறியதின் ஸாரா;மசம்:–இத்தன்மை வாய்ந்தவனது ஹிருதயத்தில் பராமாத்மாவானவர் பிரகாசித்துக்கொண்டேயிருக்கிறார்!

இத்தகையவனையே யோகத்தின் உச்சத்தை எட்டியவன் என்றும் யோகத்தின் நலன்களைப் பூரணமாய் அடைந்தவன் என்றும் சொல்லாம். அவனே யோகாரூடன் என்று சொல்லப்படுகிறான். இவ்வத்தியாயம் நான்காவது சுலோகத்தில், யோகாரூடனுடைய தன்மைகளைக் கண்ணன் ஏற்கனவே குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். அவற்றையே அடுத்து வரும் இரண்டு சுலோகங்களால் மேலும் விளக்குகிறார்.

ஞான விவேகத்து நன்குகந்தார் தன்மயானாய்
யான புலன்வென்று அமர்யோகி-தானோட்டில்

கல்கனகத் தொத்தியல்வான் காட்சியானால் தக்கானென் றெற்கமறும் சொல்சேரும் உற்று

(இ–ள்) ஞான விவேகத்து–ஞான விக்ஞானங்களைப் பெற்று, நன்கு உகந்தார்–நன்கு திருப்தியடைந்தவனாயும் தன்மயனாய்–(விகாரமின்றி) ஞான வடிவமான ஆத்மாவில் நிலைத்தவனாயும், ஆன புலன் வென்று அமரயோகிதான் தேகத்தாலான இந்திரியங்களை ஜயித்து, யோகத்தில் பொருந்தியதான் ஓடு கல் கனகத்தில்–மண், கல், பொன் என்பனவற்றில் ஒத்து இயல்வான் சம்மான நினைப்புடையவன், காட்சியினால் உற்று–யோகத்தில் சித்துபெற்று, ஒற்கம் அறும்–குறைவில்லாத தக்கான் என சொல் சேரும் யோகாரூடன் என்ற பெயரைப் பெறுகிறான்.

ஜ்ஞான விக்ஞான த்ருப்தாத்மா கூடஸ்தோ[2] விஜிதேந்த்ரிய:[3] யுக்த இத்யுச்யதே[3] யோகீ ஸமலோஷ்டாச்ம காஞ்சந:

(இ–ள்) ஞான விக்ஞான த்ருப்த ஆத்மா–ஸ்வரூபஞானத்தாலும், விசேஷ ஞானத்தாலும் திருப்தியடைந்தமனத்தனாய், கூட ஸ்த: (ஞானமே வடிவமான) ஆத்மாவிலிருப்பவனாய், விஜிதேந்த்ரிய:– இந்த்ரியங்களை ஜயித்தவனாய், ஸமலோஷ்ட அச்ம்காஞ்சந:–மண், கல், பொன் என்பவனற்றில் ஸம பாவனையுடவனான, யோகீ– யோகியானவன், யுக்தஇதி–யோகாரூடன் (தக்கவன்) என்று, உச்யதே– சொல்லப்படுகிறான்.

'பகவத் ஸ்வரூபத்தை யறிவது ஞானம், அது பகவத் விஷயமான சிரவண (கேட்டால்) மனனாதி (தியானம் முதலியவை)களால் உண்டாகிறது. விக்ஞானம் என்பது பகவானின் மகிமைகளை விசேஷமாயறிவது: அல்லது சிரவணாதிகளால் ஏற்படும் ஞானத்தின் மூலமாகக் கிட்டும் பகவத் தரிசனம்', என்று ஞான விக்ஞானங்களுக்கு உரை செய்வோருண்டு விக்ஞானம் என்பது பாடலில் விவேகம் என்று பாடம் கொள்ளப்பட்டது.

ராகவேந்திரர் 'பகவானை வேதங்களைக்கொண்டு சர்வோத்தமன் என்று அறிவதும், பகவான் மகிமைகளை வேதங்களால் அறிவதும் முறையே ஞானம், விக்ஞானம் எனப்படும் என்கிறார்.

ராமாநுஜர்:–ஞானமென்பது ஆத்ம சொரூப ஞானம், விக்ஞானமாவது எல்லாக் கிரியைகளையும் நடத்துவது பிரகிருதியே அன்றி ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை என்று அறிவது.

மண் முதலிய சகல வஸ்துக்களையும் அவற்றின் சுபாவப்படி அறிவது என்றும், அவ்வாறு அறியும் ஞானம் ஐந்து என்றும், அவை பேதக்ஞானங்கள் என்றும் த்வைத சித்தாந்தத்தில் சொல்லப்படுகின்றன. அவ்வைந்து விதபேத ஞானங்களும் மோக்ஷ ஏதுவாகின்றன.

பேதங்களாவன(1) ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ளபேதம் (வேற்றுமை) (2) ஜீவன்களுக்குள்ளிருக்கும் பரஸ்பரபேதம் (3) ஜீவனுக்கும் ஜடத்துக்கும் (பிரகிருதிக்கும்) உள்ளபேதம் (4) ஜடபரஸ்பரபேதம் (5) ஜடஈசுவரபேதம்.

மண், கல், பொன் இவற்றின் ஸ்வபாவத்தை உள்ளபடி அறிதல் என்று இக் கீதாச் சுலோகத்தில் சொல்லியது ஜடபர ஸ்பரபேதத்தில் சேரும்.

மண்ணை மண்ணாகவும், பொன்னைப் பொன்னாகவும், அவ்விதமே மற்றுமுள்ள ஜடவஸ்துக்களை அவற்றின் சுபாவப்படி யறிதலே சமமான ஞானம்; அவ்வாறின்றி மண்ணைக் கல்லாகவும், கல்லைப் பொன்னாகவும் வேறுபட உணர்வது விபரீதஞானம்.

உயர்ந்தது, தாழ்ந்தது இரண்டையும் சமமாய் எண்ணவேண்டும் என்ற நோக்கத்தோடு கண்ணன் இச்சுலோகத்தை வெளியிட்டாரோ அல்லது மேற்கூறிய சித்தாந்தத்திற்குகிணங்க வெளியிட்டாரோ அதை அவரவர் சிந்தித்துத்தான் பொருந்துமாறு உணரவேண்டும்.

வெட்ப தட்பங்களையும், சுகதுக்கங்களையும் வேற்றுமையின்றிச் சமமாய்ப் பாவிக்க ஞானியான ஜனகர் சில பயிற்சிகளை மேற்கொண்டிருந்தார் என்று புராணக்கதைகளுண்டு. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் சவரனையும் (பவுனையும்) ஓட்டையும் (சமமாகப் பாவித்து) ஒன்றாகக் கங்கையில் எறிந்தார்' என்று அவர் சிஷ்யர்கள் இன்றளவும் சொல்லிவருகின்றனர்.

யோகாரூடனின் வேறு தன்மைகளை மேலும் கூறுகிறார்.

நன்னெஞ்சன் தோழன் பகைவன் நயப்பறியான்
பன்னு நடுவோன் பழிவெறுப்போன்-தன்னளவில்
உற்றார் உயர்கருமர் பாவிகளால் ஒத்தமனம்
பெற்றான் மிகத்தக்கான் பின்

நல் நெஞ்சன்–(தனக்கு) நன்மை விரும்புவோன், தோழன்–மித்திரன், பகைவன்–விரோதி நயப்பு அறியான்–(தன்னிடம் விருப்பு வெறுப்பில்லாத) உதாஸீனன், பன்னு நடுவோன்–சொல்லப்படும்

மத்தியஸ்தன்; பழி பெறுப்போன்–பழிக்கத்தக்க துவேஷமுடையவன், தன் அளவில் உற்றா–தனது அளவற்ற பந்துக்கள், உயர்கருமர்–சாதுக்கள், பாவிகளால்–பாவி முதலிய எல்லாரிடமும்; ஒத்த மனம் பெற்றான்–சமமான மனோ நிலையை அடைந்தவன், மிக தக்கான்–சிறந்த யோகாரூடன் ஆகிறான்.

3 4 2 3 3 4

ஸுஹ்ருன் மித்ரார்யுதாஸீன மத்யஸ்த த்வேஷ்ய பந்துஷு

4 3 4

ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர் விசிஷ்யதே

(இ–ள்) ஸுஹ்ருத்–ஸுஹ்ருத்து, அரி–அனர்த்தம் விரும்புவோர், மித்ர–ஸமவயாதன தோழா, உதாஸீந–உறவு, பகை யிரண்டுக்கும் காரணமில்லாமையால் இரண்டுமற்றவர். மத்யஸ்த–சுபாவமாகவே இரண்டும் அற்றவர், த்வேஷ்ய–சுபாவமாகவே பகைப்பவர், பந்துஷு–உறவினர் இவர்களிடமும், ஸாதுஷு அபி–ஸாதுக்களிடமும், பாபேஷுச – பாபிகளிடத்தும், ஸமபுத்தி:–ஸம புத்தியுடையவன், விசிஷ்யதே–விசேஷ அதிகாரியாகச் சொல்லப்படுகிறான்.

இவ்விரு சுலோகங்களில் சொல்லப்பட்டவை யோகாரூடன் தன்மைகள்.

62. தியானம்

மனதைக் கொண்டே ஒருவன் உயர்வடையவேண்டும். அதற்கு மனதை, நண்பன் அல்லது பந்துவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதைக் கண்ணன் (சு 5,6–ல்) முன்னே குறிப்பிட்டது தியான யோகத்திற்குத் தோற்றுவாயாகும். தியானம் செய்யவேண்டிய முறையைப் பற்றி இங்கு விவரங்களுடன் கண்ணன் சில சுலோகங்களில் விளக்குகிறார்.

தானேயிருந்து தனியிடத்துத் தன்சிந்தைக்
கானா மனமடக்கி ஆசையற்றுத்-தானேய்ந்த
எத்துவக்கு மற்ற எழில்யோகி தன்னையென்றுந்
தத்துவத்திற் சார்விப்பான் தான்.

(இ–ள்) தனியிடத்து–ஏகாந்தமான இடத்தில், தானே இருந்து–தனியாயிருந்துகொண்டு, தன் சிந்தைக்கு ஆன மனம் அடக்கி–தன் தியானத்திற்கு ஏற்ப மனத்தை அடக்கி, ஆசைஅற்று–(எல்லாவித) ஆசைகளையும் ஒழித்து, தான் ஏய்ந்த எத்துவக்கும் அற்ற–தனக்கு வரும் (பொருள்களில்) எவ்வித சம்பந்தமும் இல்லாமல், எழில்யோகி–சிறந்த யோகி, தன்னை என்றும்–தன்னை (தியானம் செய்யும்)

பொழுதெல்லாம் தத்துவத்தில் சார்விப்பான்–உண்மைப் பொருளில் நிறுத்தட்டும்.

யோகீ யு[3]ஞ்ஜீத ஸததமாத்மானம்[3] ர[2]ஹஸி ஸ்தித:

ஏகாகீ யதசித்தாத்மா நிராசீரபரிக்ரஹ:

(இ–ள்) யோகீ–யோக நிஷ்டையுடையவன், ஸததம்–(நாள்தோறும் யோக காலத்தில்) எப்போதும், ரஹஸி–ஏகாந்த இடத்தில், ஏகாகீ ஸ்தித–தனியாக இருந்துகொண்டு,யத சித்த ஆத்மா–அடக்கப்பட்ட சித்தமும் மனமும் உடையவனாய், நிராசீ:–ஆசையை விட்டவனாய், அபரிக்ரஹ;– (தனக்கென) எதையும் பெற்றுக்கொள்ளாதவனாய், ஆத்மாநம்–தன்னை (மனதை), யுஞ்ஜீத–(தியானத்தில்) நிறுத்தக்கடவன்.

'யோகி என்பது ஞான சாதனத்தைப் பயில்பவனைக் குறிக்கும், பிறர் வராத ஏகாந்த இடமும், தன்னுடன் பிறர் யாருமின்றி ஏகாந்தமாயிருப்பதும், தியானத்திற்கு மனம் ஒரு நிலைப்படச் சாதகமாயிருக்கும். தன்னிடம் இல்லாததை வேண்டுமென விரும்புவது, கிடைக்கும் என நம்புவது, அதன் காரணமாக ஒரு பொருளை எதிர் பார்ப்பது எல்லாம் ஆசையின் வகைகளாகும் மனம் சலனமின்றித் தியானத்தில் நிலைக்க எல்லாப் பொருள்களாலும் வரும் ஆசையிலிருந்தும் யோகி நீங்கியிருக்க வேண்டும். இவ்வுண்மை,

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (குறள்)

என்ற அடிகளில் குறிக்கப்படுகிறது.

தியானம் பயிலும் யோகிக்கு முடிவாக ஒரு அடைமொழி (விசேஷணம்)'அபரிக்ரஹ:' (தான் ஏய்ந்த எத்துவக்கும் அற்ற) என்று கொடுக்கப்பட்டிருப்பது உற்றுக் கவனிக்கத்தக்கது.

தியானம் பயிலும் யோகியின் சரீர தாரணத்திற்கென்று இல்லறத்தார் அளவு பட்டும், அளவுபடாமல் மிகுதியாகவும் பல பொருள்களைத் தாங்களே கொண்டுபோய்க் கொடுக்கநேரலாம். அப்பொருள்களை யோகி தனக்கென்று ஏற்றுக்கொண்டு தன்னதாகப் பாவித்து அகங்கார மமகார உணர்ச்சிக்கு இடங்கொடுக்கக்கூடாது. கொடுத்தால் எலியை விரட்டப் பூனைவாங்கி வளர்த்த சந்நியாசியின் கதையாய், முந்திய முயற்சிகள் யாவும் வீணாகும்' என்பது இதனால் குறிப்பாக எச்சரிக்கப்பட்டது.

அடுத்து வரும் சுலோகங்களில் தியானத்திற்கு அத்தியாவசியமாக வேண்டிய அசைவின்றி (சலனமின்றி) யிருக்கும் மனதைப் பெறுவதற்குச் சாதகமான பல வேறு நிலைகளைக் கண்ணன் தெரிவிக்கிறார்.

தூயநிலத் தோக்கம்தாழ் வற்றதுகில் தோலதுமேல்
ஆய'துகீ ழாக்குசமாம் ஆசனத்து-மேயதன்
புத்திஒரு மித்துப் புலனடக்கி யோகத்தைச்
சுத்திபெறச் செய்வான் தொடர்ந்து

(இ-ள்) தூய நிலத்து-பரிசுத்தமான இடத்தில், ஒக்கம் தாழ்வு அற்ற-அதிக உயரமும் அதிகத் தாழ்வுமில்லாமல், துகில் அதுமேல் தோல் கீழாக் குசம் ஆயதாம்-வஸ்திரம் அதன்மீது மான்தோல் இரண்டிற்கும் கீழ்ப்போடப்பட்ட தர்ப்பத்தோடு ஆக்கப்பட்ட, ஆசனத்து மேய்-ஆசனத்தில் நன்கு இருந்து, அதன் புத்தி ஒருமித்து-அங்கு தன் மனத்தை ஒன்றிலேயே நிறுத்தி, புலன் அடக்கி-இந்திரியங்களின் செய்கைகளை அடக்கி சுத்திபெற-மனச் சுத்தியை அடைவதற்காக,தொடர்ந்து யோகத்தைச் செய்வான்-விடாமல் யோகத்தைச் செய்ய வேண்டும்.

சு[3]செள தேசே ப்ரதிஷ்[2]டாப்ய ஸ்[2]தீரம் ஆஸனம் ஆத்மந:
நாத்யுச் ச்[2]ரிதம் நாதி நீசம் சைலாஜிந குசோத்தரம்
தத்ரைகாக்[3]ரம் மந: க்ருத்வா யத சித்தேந்[3]த்ரிய: க்ரிய:
உபவிச்யாஸநே யுஞ்ஜ்யாத் யோக மாத்ம விசு[3]த்[4]தயே.

(இ-ள்) சுசெள தேசே-பரிசுத்தமான இடத்தில் ஆத்மந:-தனக்கு, ஸ்திரம் நிலையானதும், நாதி உச்சரிதம்-அதிக உயரமில்லாததும், நாதி நீசம்-அதிகத் தாழ்வில்லாததும், சைலாஜிந குசஉத்தரம்-துணி,மான்தோல், தர்ப்பம் இவைகள் போர்த்ததுமான, ஆஸனம்,-ஆஸனத்தை,ப்ரதிஷ்டாப்ய ஸ்தாபித்து, தத்ர-அதில் (இருந்து), மந:-மனத்தை, ஏகாக்ரம் க்ருத்வா-ஒன்றையே நாடியதாகச் செய்து, யதசித்த இந்த்ரியக்ரிய:-அடக்கப்பட்ட சித்தம், இந்திரியம் இவற்றின் வியாபாரங்களையுடையவனாய் ஆஸநெ-ஆஸனத்தில் உபவிச்ய-அமர்ந்து, அத்ம விசுத்தயே-மனச் சுத்தியின் பொருட்டு, யோகம் யுஞ்ஜ்யாத்-யோகத்தைச் செய்யவேண்டும்.

'ஆத்ம விசுத்தயே (சுத்திபெற)" என்று முடிவில் பொதுப்படையாகச் சொன்னதற்கு இரண்டு விதமாகப் பொருள்

கொள்ளலாம். (1) மனதை இந்திரியங்களால் உண்டாகும், ஆசைகளினின்றும் விலக்கித் தியானத்திற்குத் தகுதியாகப் பரிசுத்தமாக்கும் பொருட்டு (2) சம்சார பந்தங்களினின்றும் விலகித் தன்னைப் பரிசுத்தம் செய்துகொள்ளும் பொருட்டு இங்கு 'ஆத்ம' பதத்திற்கு மனம் அல்லது ஜீவோத்மா' என்று ஏற்றபடிப் பொருள் செய்து கொள்ளவேண்டும். இரு பொருள்களுக்கிடமாய் மூலம் இருப்பதை நோக்கிப் பாடலில் பொது வாக 'சுத்தி பெற' என்று கொண்டது பாராட்டத் தக்கது.

யோகம் என்பதற்கு அடுத்துவரும் சுலோகங்களைக் கொண்டு இங்கு 'தியானம் ' என்றே பொருள் கொள்ள வேண்டும்.

உடல் இருக்க வேண்டிய நிலையையும், தியானத்திற்கு எதை விஷயமாக்க வேண்டும் என்பதையும் அடுத்தபடியாகத் தெரிவிக்கிறார்.

தன்காயம் சென்னிகளம் தாங்கிச் சலியாமல்
முன்காண மூக்கைக்கண் மொய்த்திசைப்-பின்காணா
தாறியஞ் சாதே அறத்துரனாய் நெஞ்சடக்கித்
தேறிஎன் பால்விருப்பான் சேர்ந்து

(இ-ள்) தன் காயம் சென்னிகளம்-(யோகி) தன்னுடைய உடம்பு, தலை கழுத்து ஆகியவற்றை, சலியாமல் தாங்கி-அசையாமல் சமமாய் வைத்து நிலையாகவிருந்து, முன் மூக்கை கண்காண-மூக்கு நுனியைக் கண்ணால் பார்த்துக்கொண்டு, பின் மொய்த்த திசை காணாது-பிறகு எந்தத் திக்குகளையும் பாராமல், ஆறி-மனச் சமாதானமடைந்தவனாய், அஞ்சாதே-(ஸம்ஸாரிகமான உபத்திரவங்களுக்குப்) பயப்படாமல், அறத்து உரனாய்-பிரும்மத்தை நாடும் விரதத்தில் உறுதியுள்ளவனாய், நெஞ்சு அடக்கி-மனத்தை விஷயங்களில் செல்லாமல் திருப்பி, என் தேறி-என்னையே நம்பினவாய், என்பால் சேர்ந்து-மனதை என்னிடம் வைத்து, விருப்பான்-தியானபரனாய் விரும்பியிருப்பான்.

ஸமம்காய ஸிரோக்3ரீவம் தா4ரயன்ன சலம் ஸ்தி2ர:
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்3ரம் ஸ்வம்தி3சச்சாந் நவலோகய
ப்ரசாந்தாத்மா விக3தபீ4:ர் ப்3ரஹ்மசாரிவ்ரதே ஸ்தி2த:
மனஸ்ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர:

(இ-ள்) காய சிரோக்ரீவம்-உடல், தலை, கழுத்து இவைகளை, ஸமம்-சமமாகவும், அசலம்-அசையாமலும், ஸ்திரம்-உறுதியாகவும், தாரயந்-நிறுத்திக்கொண்டு, ஸ்வம் நாஸிகாக்ரம்-தன்னுடைய மூக்கு

நுனியை, ஸம்ப்ரேக்ஷ்ய—பார்த்துக் கொண்டு, திச: ச—திசைகளையும், அநவலோகயந்—பாராதிருப்பவனாய் ப்ரசாந்த ஆத்மா—அடங்கிய மனத்தோடு, விகதபீ:—பயமற்றவனாய், பிரம்ம சாரிவ்ரேசே—பிரும்மத்தை நாடுகிற விரதத்தில், ஸ்தித:—நிலைத்திருப்பினவாய், மந:ஸம்யம்ய—மனதை (உலக விஷயங்களிலிருந்து) திருப்பினவனாய், மத் சித்த:—என்னை நினைப்பவனாய், மத் பர:—என்னையே ஆசிரயித்திருப்பவனாய், யுக்த:—தியானஞ் செய்கின்றவனாய், ஆஸீத—இருக்க வேண்டும்.

உடல் கழுத்து தலை இவற்றை வளையாமல், நிலையாய் வைத்திருப்பதும், கண்களால் பல திசைகளைப் பாராமல், மூக்கு நுனியை பார்த்திருப்பதும், தேகத்தைப் பொறுத்து ஏற்படும் புற நிலைகள். தியானம் வெற்றிபெற இந்நிலைகள் சாதகமாகவிருப்பதால், இவற்றை அநுசரித்தே தொடங்க வேண்டும் எனப்பட்டது.

பொருள் சித்திக்கோ, அதிகார சித்திக்கோ, வேண்டித் தியானம் செய்வோர் தியானத்திற்கு விஷயமாகப் பிறதெய்வங்களைத் தேர்ந்து எடுத்துக் கொண்டாலும், மோக்ஷத்தில் இச்சையுடையவர் தியானத்திற்குப் பரமாத்மாவையே விஷயமாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வுண்மையைத் தெரிவிக்கவே 'மத் சித்த: மத் பர:' (என்பால் விருப்பான்) என்ற தொடர்கள் வந்தன. அவதாரங்களைச் செய்து பற்றுவதற்குச் சுலபனாய் சாரதியாய் எதிரே இருக்கும் கிருஷ்ணனாகிய தானே பரமாத்மா, 'அந்நிலையே தியானத்திற்கு ஏற்ற விஷயம்' என்பதை கீதையில் அநேக அத்தியாயங்களில் அடுத்தடுத்துச் சுட்டிக் காட்டுகிறார். எல்லா உரையாசிரியர்களும், அதை அபிப்பிராய பேதமின்றி நன்கு விளக்கிக் காட்டியுருமிருக்கிறார்கள்.

63. உணவும் உறக்கமும்

ஏகாந்தமான இடம், தர்ப்பையும் மான்தோலும் இட்ட ஆசனம் உடலை அசைவின்றி வைத்திருப்பது. கண் பார்வையைப் பல திக்குகளில் திருப்பாமல் மூக்கின் நுனியையே பார்ப்பது ஆகியவை மனதை ஒரு நிலைப்படுத்துவதற்குச் சாதகங்களாக விருக்கும். பிற பொருள்களில் செலுத்தாமல் மனதை அடக்கிப் பகவானிடத்திலே நிறுத்த வேண்டும். அதுவே தியானம் என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லவா? அத்தியானத்தின் பலனை ஒரு சுலோகத்தில் மேலும் தெரிவிக்கிறார்.

இன்னேநெஞ் சென்நாளும் என்னிடையில் சேர்யோகி
தன்னேர் மனமாக்கித் தானிறுத்தி-மனனேர்ந்த
ஆனந்த மேலா யமர்சாந்தி என்னிடையில்
தானந்த மற்றடையும் தான்.

(இ-ள்) இன்னே நெஞ்சு எந்நாளும்-இவ்வாறு மனத்தை எப்பொழுதும், என் இடையில் சேர்யோகி-என்னிடம் வைத்திருக்கிற யோகியானவன், தன்னேர் மனம் ஆக்கி-தன் அதீனத்தில அடங்கியதாக மனதைச் செய்து, தான் நிறுத்தி,-தன் ஸ்வரூபத்தில் நிறுத்தி என் இடையில்,-என்னிடத்தில் இருப்பதாகிய மன் நேர்ந்த-நிலைபெற்ற. ஆனந்த மேலாய் அமர்சாந்தி-இன்பத்தோடு சிறப்பாகப் பொருந்திய சாந்தியை, தான் அந்தம் அன்று அடையும்-அவன் முடிவில்லாமல் பெறுவான்.

யுஞ்ஜந்நேவம் ஸதா[3]த்மாநம் யோகீ நியதமாநஸ:
சாந்திம் நிர்வாணபரமாம் மத்[2]ஸம்[4]ஸ்[3]தாமதி[2] கச்சதி

(இ-ள்) ஏவம் ஸதா-இவ்வாறு எப்போதும், ஆத்மாநம் யுஞ்சந்-மனதை (என்னிடம்) நிறுத்திய, நியதமாநஸ:-தன் கட்டுப்பாட்டில் அடக்கிய மனமுள்ள, யோகீ - யோகியானவன், மத்ஸம்ஸ்தாம்-என்னிடத்தில் நிலைத்தலாகிற, நிர்வாண பரமாம்-ஆனந்தத்தின் எல்லையான, சாந்திம்-சாந்தியை, அதி கச்சதி-அடைகிறான்.

இச்சுலோகத்திற்கு த்வைத சித்தாந்திகள் 'அத்தகைய யோகி ஜீவன் முக்தன் ஆவதுடன் அழியாத முக்தியையுப் அடைகிறான்', என்று தாத்பரியங் கொள்ளுகின்றனர்.

ராமானுஜசித்தாந்தக்காரர் 'யோகி பகவானிடத்தில் இருக்கும் பதவியைப் பெறுகிறான்' எனக் கொண்டனர்.

இரண்டு சுலோகங்களில் தியானம் பயில்வோன் உணவு சம்பந்தமாகவும் உறக்கம் சம்பந்தமாகவும் அனுசரிக்க வேண்டிய விதிவிலக்குகளைக் கண்ணன் தெரிவிக்கிறார்.

உண்ணுமவ னுக்குமிக உண்ணாத வனுக்குங்
கண்ணுறங்கு வோற்கும் கடிந்தோற்கும்-எண்ணுங்கால்
மண்ணாளும் வேந்தனே மாயோக் மிவ்வோர்க்கு
நண்ணாது காண நயந்து.

(இ-ள்) மண்ணாளும் வேந்தனே!-பூமியை ஆளும் அரசனாகிய அர்ஜுனா, மிக உண்ணும் அவனுக்கும்-அதிகமாய்ச் சாப்பிடுகின்றவனுக்கும், உண்ணாதவனுக்கும்-உணவேயில்லாத திருப்பவனுக்கும், கண்ணுறங்குவோர்க்கும்-அதிகம் தூங்குகின்றவர் களுக்கும், கடிந்தோற்கும்-தூக்கத்தை அடியோடு விட்டவனுக்கும், எண்ணுங்கால் - ஆராய்ந்து பார்த்தால், இவ்வோர்க்கு-இத்தகையோர்களுக்கு மா யோகம்-மேலான தியான யோகம், நண்ணாது சித்திக்காது (என்று) நயந்து காணு-நன்கு அறிந்துகொள்.

நாத்யச்ந தஸ்து யோகாஸ்தி நசை காந்த மநச் நத:

நசாதிஸ்வப்ந சீலஸ்ய ஜாக்ரதோ நைவசார்ஜுந

(இ-ள்) அர்ஜுந-அர்ஜுனா! அதி அச்நத: அதிகமாய் உண்பவனுக்கு, யோக நாஸ்தி-யோகம் இல்லை, ஏகாந்தம் அநச்நத:ச கொஞ்சங்கூட உண்ணாவதவனுக்கும், ந-இல்லை, அதிஸ்வப்ந சீலஸ்யச-அதிகத் தூக்கமுள்ளவனுக்கும், ந-இல்லை, ஜாக்ரத:-(தூக்கமின்றி) விழித்துக் கொண்டேயிருப்பவனுக்கும், நஏவ-(யோகம் சித்திப்பதே) இல்லை.

மிகுதியாக உண்பவனுக்கு யோகம் சித்திக்காது. அவ்வாறே இன்பமும் உண்டாகாது. ஆனால் துன்பமும் மாத்திரம் உண்டு. தேகாரோக்கியம் கெட்டு அதனால் வரும் நோய் காரணமாக உண்டாகும் துன்பமே எஞ்சி நிற்கும். இவ்வுண்மையைச் சுருக்கி விளக்கும் திருக்குறள் சிந்திக்கத் தக்கது.

இழிவுஅறிவுந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

(இழிவு-அளவு, கழிபேர் இரை-மிகுந்த உணவு.)

தக்க உணவியற்றி தன்கருமத் துண் முயற்றி
தக்க துயிலுணர்த்தி தானமர்ந்த-தக்கவனுக்
கெவ்வாறும் யோகம் இருந்துயரை நீக்கியே
அவ்வாறு வந்தியலும் ஆங்கு

(இ-ள்) தக்க உணவு இயற்றி-மிதமான ஆகாரத்தைக் கொண்டு (மிதமாகச்) சஞ்சரித்து, தன் கருமத்துள் முயற்றி தனக்குரிய அவசியமான கருமங்களை மட்டும் செய்து, தக்க துயில் உணர்த்திதான்

அமர்ந்த—மிதமான தூக்கம் விழிப்பைப் கொண்டிருக்கிற, தக்கவனுக்கு— சிறந்த ஒருவனுக்கு, எவ்வாறும்—எந்த விதத்திலும், இரும் துயரை நீக்கியே—பெரும் துன்பத்தைப் போக்குவதாகிய, யோகம்—தியான யோகமானது, அவ்வாறு வந்து இயலும்—அது தன்படியே கைகூடும்.

யுக்தாஹார விஹாரஸ்ய யுக்த சேஷ்டஸ்ய கர்மஸு
3 4 3 4 3 2
யுக்தஸ்வப் நாவ போதஸ்ய யோகா பவதி து: கஹா

(இ—ள்) யுக்த ஆஹார விஹாரஸ்ய—மிதமான ஆகாரமும், ஸஞ்சாரமும் உடையவனும், காமஸு—கர்மங்களில், யுக்த சேஷ்டஸ்ய— மிதமாக ஈடுபடுபவனும், யுக்தஸ்வப்ந அவபோதஸ்ய—மிதமான தூக்கமும் விழிப்புமுள்ளவனும் ஆனவனுக்கு. துக்கஹா—துன்பத்தைப் போக்கடிக்கிற யோக: பவதி—யோகம் சித்திக்கும்.

இவ்விரண்டு சுலோகங்களிலும், உணவு உறக்க சம்பந்தமாகச் சொல்லப்பட்ட விதிவிலக்குகள் பலஹீனர்களான சாமான்ய அதிகாரிகளுக்கே ஏற்பட்டவை. அவர்கள் பெரும்பாலோராகையால் யோகம் பயிலப்புகும்போது இவைகளையறிந்து அனுசரிப்பது நலம் என்றும் மனத்தைக் கட்டுப்படுத்த ஓரளவு துணைசெய்யும் என்றும் சொல்லப்பட்டன. உணவு' மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார். உணவுகாரணமாக உடல் நோய் வாய்ப்பட்டால் மனத்தில் வெறுப்பும் கோபமும் உண்டாகும். அப்பொழுது மனம் ஒருமைப்பட வழியில்லாதுபோகும்.

அவ்வாறே அதிக உறக்கமும், உறக்கமே இன்மையும் உடல் நலத்தைக் கெடுத்து நோய்க்கு ஒருவனை ஆளாக்குகிறது. அதனால் சாமானியர் துயில், உணர்வு இரண்டிலும் ஒரு நியதியைப் பின்பற்றவேண்டும்.

எதையும் பொறுத்துக்கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்தவர்கள் உணவேயின்றிச் சுத்த உபவாஸமாயிருந்தாலும், உறக்கமேயின்றி விழித்துக் கொண்டிருந்தாலும், அவற்றால் அவர்களின் உடல் நலமோ மன நலமோ ஒரு சிறிதும் பாதிக்கப்படுவதில்லை. அவ்வாறு பாதிக்கப்படாமல் யோக சித்தி அடைந்தவனின் நிலை எவ்வாறிருக்கும்? என்று கேட்கலாம்.

64. சித்திபெற்ற யோக நிலை

தியான யோகத்தைச் செவ்வனே பயில மனம் துணையாகவிருக்க வேண்டும். மனதைப் பிறபொருள்களில் செல்லாமல் ஆத்மாவிலே

ஒன்றியிருக்கச் செய்ய, தனிமையும் ஏகாந்தமான இடமும் மான்தோல், தர்ப்பம் முதலிய விரித்த ஆஸனமும், கண்பார்வையை மூக்கு நுனியில் செலுத்துவதும் ஆகிய புற நிலைகள் உதவியாயிருக்கும்.அவ்வாறே மிதமான உறக்கமும், மிதமான உணவும் யோகப் பயிற்சிக்குச் சாதகமாயிருக்கும் என்று கண்ணன் முன்னே சொன்னாரல்லவா?

இப்பொழுது முறைப்படி ஆரம்பிக்கப்பட்டு, நன்றாகப் பயிலப்பட்டுப் பின் ஸித்திபெற்ற (கைவரப்பெற்ற) யோகத்தின் தன்மை எவ்வாறிருக்கும் என்பதை பல சுலோகங்களால் விளக்குகிறார்:

எப்போதும் நெஞ்சம் இனிய உயிர்தன்னில்
தப்பாது பூண்டு தனிநிற்கும்-அப்போது
காம மனைத்தில் கழிந்த நசை யோகியெனும்
நாமம் உடையான் நன்கு

(இ-ள்) எப்போது-எப்பொழுது,நெஞ்சம்-மனமானது, இனிய உயிர் தன்னில்-சிறந்த ஆத்மாவினிடத்தில், தப்பாது பூண்டு தனி நிற்கும்-தவறாமல் (சுவாதீனப்பட்டு) பற்றி நிலைத்து நிற்குமோ, (எப்போது) காமம் அனைத்தில் நசை கழிந்த-எப்பொழுது பிரியத்திற்கிடமான எல்லா வஸ்துக்களிலும் விருப்பங்கள் அற்றிருக்குமோ, அப்போது-அத்தருணத்திலே, யோகி எனும் நாமம் நன்கு உடையான்-யோகி என்ற பெயரைத் தகுதியாகப் பெறுகிறான்.

யதா[3] விநியதம் சித்தம் ஆத்மந்யேவா வதிஷ்டதே[2]
நிஸ்ப்ருஹஸ்[4] ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே[3] ததா

(இ-ள்) யதா-எப்பொழுது, சித்தம்-மனமானது, விநியதம்-அடக்கப்பட்டதாய், ஆத்மநி ஏவ-ஆத்மாவிலேயே, அவதிஷ்டதே-நிற்குமோ, ஸர்வகாமேப்ய:-(எப்பொழுது) பிரியத்திற்கிடமான எல்லாப் பொருள்களிலும் நிஸ்ப்ருஹ:-நசையற்றிருக்குமோ ததா-அப்பொழுது, யுக்த:இச் உச்யதே-(யோகி எனத்) தக்கவன் என்று சொல்லப்படுகிறான்.

'ஆத்மந்யேவ'என்பதற்கு 'தன்னுடைய ஆத்மஸ்வரூபத்திலேயே' என்று சங்கரர் பொருள்கொண்டார். 'பரமாத்மாவாகிய பகவானிடத்திலேயே' எனப் பிறர் உரை செய்து கொண்டனர்.பகவானை ஆத்மாவாகிய தன்னினும் வேறுபட்டவர் என்று கொள்ளும் பேத சித்தாந்ததமே அதற்குக் காரணம்.

யோகப் பயிற்சி முடிந்திருக்கும் போது அதைப் பயின்றவனின்

நிலை எவ்வாறிருக்கும் என்பதைக் கண்ணன் அடுத்தபடியாகத் தெரிவிக்கிறார்.

வாயு இலாதிடத்து மன்னும் விளக்கதுதான்
ஏயு சலனமறும் எவ்வாறு-தூயமன
நன்மையினிற் சேர்ந்தியலு நல்யோகிதன்
தன்மையினுக் கொப்பதுவே தான்.

(இ–ள்) வாயு இலாத இடத்து–(வீசும்) காற்று இல்லாத இடத்தில், மன்னும்–பொருந்திய, விளக்கது–தீபமானது, எவ்வாறு சலனமறும் ஏயும்–எவ்விதம் அசைவின்றியிருக்கும், நல்யோகி தூயமணம்–(அவ்வாறே) பயிற்சி முற்றின சிறந்த யோகியின் பரிசுத்தமான மனம். நன்மையினில் சேர்ந்து இயலும்–ஆத்மாவில் (சலியாமல்) நிலையாகப் பொருந்தியிருக்கும்; யோகிதன் தன்மையினுக்கு–ஆத்ம யோகம் பயின்றவனுடைய தன்மைக்கு, அதுவே தான் அவ்விதத் தீபமே, ஒப்பு–உவமையாகும்.

யதா[2]தீ[3]போ நிவாதஸ்தோ[2] நேங்கதே[3] ஸோபமா ஸ்ம்ருதா
யோகி[3]நோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மந:

(இ–ள்) நிவாதஸ்த: தீப:–காற்றில்லாதவிடத்துள்ள தீபம், யதாந இங்கதே–எப்படிச் சலிக்கிறதில்லையோ, ஸா–அது (அத்தீபம்), யத சித்தஸ்ய–சுவாதீனமான மனத்தையுடைய, ஆத்மாநீயோகம்–ஆத்மாவில் தியானத்தை, யுஞ்ஜதே–செய்கின்ற, யோகிந:–யோகியினுடைய, ஆத்மந:– மனத்திற்கு உபமா ஸ்ம்ருதா–உவமையாக எண்ணப்படுகிறது.

'யதசித்தஸ்ய' (சுவாதீனமான மனம்) என்பது பாடலில் "தூய மனம் என்று கொள்ளப்பட்டது. உலகப் பொருள்களில் மனம் இழுக்கப்படாமல் அதைக் குறித்த இடத்தில் நிறுத்தி, நிறுத்துவதே சுவாதீன மனத்திற்கு இலக்கணமாகும்.

யோகத்தை அடையப் பயிற்சி செய்பவனுக்கும், அதற்கான பயிற்சி முற்றி யோகம் கை வந்தவனுக்கும் வேற்றுமையுண்டு. பயிற்சி முற்றி, அதனால் கைகூடிய யோகத்தின் நிலை எவ்வாறிருக்கும் என்பதைக் கண்ணன் யோகியின் தன்மையைக் கொண்டு அடுத்துவரும் சுலோகங்களில் விவரிக்கிறார்.

நெஞ்சுதான் ஏதில் நிருத்தமாம் யோகத்தால்
எஞ்சலிலா தென்றும் இனிதமரும்-நெஞ்சமாம்
ஏதின் மனத்தாலே இனிய உயிர்கண்டு
மீததனில் தானுகக்கு மிக்கு

புலம்கடந்து யோகத்துப் புந்தியினால் தோன்று
நிலங்கடந்த இன்ப நுகர்வோன்-நலம் கலந்த
புன்மையில் ஆனந்தப் புணர்ப்பெய்தி நின்றவெவவன்
தன்மையினின் றும்சலியா தான்

யாதொன்றைப் பெற்றால் அதனில் வேறோர்
பேறு மீதென்று பின்றான் மிகமதியான்-போதமுடன்
மிக்க கதிநின்றான் மிகுதுன்ப மேலிடினும்
தக்கவதிற் பின்சலியான் தான்

யோகமென்று பேராம் வியோக மதுதுன்ப
மாக வுறும்யோகம் அஃதறிவான்-யோகமது
தீங்கின்றி நின்ற திசைப்பற்ற நெஞ்சினால்
பாங்கொன்றி ஒன்றைப் படும்

(இ-ள்) நிருத்தமாம் நெஞ்சு தான்-(விஷயங்களிலிருந்து) திருப்பப்பட்ட மனமானது யோகத்தால்-யோகம் செய்வதால், ஏதின் எதில், எஞ்சல் இலாது-குறைவில்லாது, என்றும் இனிதருமம்-எப்பொழுதும் நன்றாக மிக்குமோ ஏதின்-எதில், நெஞ்சமாம்-மனதானது, மனத்தாலே மனவடக்கதாலே, இனிய உயிர்கண்டு-சிறந்த ஆத்மாவைப் பார்த்துக்கொண்டு, அதனின்மீது தான் மிக்கு உகக்கும்-அதில் அதிகமாக இன்புற்றிருக்குமோ,

யோகத்து-யோகத்தால், புலங்கடந்து-இந்திரியங்களுக் கெட்டாமல், புந்தியினால் தோன்றும்-புத்தியால் மாத்திரம் தெரிந்து கொள்ளக்கூடிய நிலம் கடந்த இன்ப நுகர்வோர்-எல்லையற்ற ஆனந்தாநுபவமோ, நலம் கலந்த-நன்மை பொருந்திய புன்மைஇல்-துன்பம் கலவாத, ஆனந்தப் புணர்ப்பு எய்தி-ஆனந்தத்தோடுகூடிய நிலையைப் பெற்று, நின்ற எவன் நிலைத்த எவன், தன்மையினின்றும் சலியாதான்-அந்நிலையினின்றும் சலிக்கவே மாட்டானோ,

யாதொன்றைப் பெற்றால்–எதை அடைந்தால், அதனில் வேறு ஓர் பேறு–அதிலிருந்து வேறுபட்ட மற்றொரு லாபத்தை, மீது என்று பின்றான் மி மதியான்–மேலொன்று பிற்படாமலும் மதியாமலும், போதமுடன்மிக்கு அதில் நின்றான்–அறிவுடன் அதில் நிலையாக நிற்கும் (எவன்) மிகு துன்பமேலிடினும்–மிக்க துன்பம் வந்தாலும் தக்க அதில் பின்சலியான்–(தான்) பொருந்திய யோகத்திலிருந்து பிறகு சலிக்கமாட்டானோ (அது)

யோகம் என்று பேராம்–யோகம் எனப் பெயர்பெறும். அஃது–அதை துன்பமது வியோகமாக உறும்யோகம்–துன்ப சம்பந்தம் அற்றதாகப் பொருந்திய யோகம் என்பதாக அறிவான்–அறியவேண்டும், யோகம் அது–அந்த யோகமானது, தீங்கு இன்றி நின்ற–குற்றமில்லாமலிருக்கிற, திசைப்பற்ற கலக்கமற்ற நெஞ்சினால்–மனத்தோடு, பாங்கொன்றி ஒன்றப்படும்–பாங்காக மேற்கொள்ளத்தக்கது.

யத்ரோ பரமதே சித்த3ம் நிருத்3த4ம் யோக3 ஸேவயா

யத்ர சைவாத்ம நாத்மாநம் பச்யந்நாத்ம நீ துஷ்யதீ

ஸுகமாத்யந்திகம் யத்தத்3 பு3த்3தி4க்3ராஹ்யம் அதீந்த்ரியம்

வேத்தி யத்ர நசைவதாயம் ஸ்தீ2தஸ சலதீ தத்வத:

யம் லப்3த்4வா சாபரம் லாப4ம் மந்தே நாதி4கம் தத:

யஸ்மிந் ஸ்தி2தோ ந து3:கே2ந கு2ருணாபி விசால்யதே

தம்வி3த்3யா து3:க2 ஸம்யோக வியோக3ம் யோக3 ஸம் தம்

ஸ நிச்சயேந யோக்தவ்யோ யோகோ3 நிர்விண்ண சேதஸா

(இ–ள்) யோகம் செய்வதால் விஷயங்களினின்று மீட்கப்பட்ட மனம் எந்த யோகத்தில் நிற்குமோ எதில் இருக்கின்றவன் மனத்தால் ஆத்மாவைப் பார்த்து உவப்படைகின்றனோ, எதில் ஸ்திரமாயிருக்கின்ற இத்தகைய யோகி புலன்களுக்குத் தெரியாததும் புத்தியால் அறியத் தக்கதும் அளவிறந்தும் எல்லையிலாததுமான ஆனந்தத்தை அறிகின்றனோ, எந்த அனுபவத்தினின்றும் பிரிதலே இல்லையோ, எந்த (ஆத்ம) லாபத்தை–அடைந்தால் வேறொன்றை அதைக்காட்டிலும் அதிக லாபமுடையதாகக் கருதுவதில்லையோ, எந்த யோகத்தில் இருப்பவன் அதிகத் துன்பத்தாலும்கூடச் சலிப்பிக்கப்படுவதில்லையோ எல்லாத் துன்பங்களையும் போக்கும் அதை யோகம் என்னும் பெயருடையதாக

அறிய வேண்டும்.உறுதி கொண்ட சலிக்காத மனமுடையவனால் அவ்வித யோகம் அடையத் தகுந்தது.

இதனால் ஸித்திபெற்ற யோகத்தின் தன்மை தனக்கு வந்தவிட்டதா என்பதைப் பயில்வோர் மேற்கூறியவற்றைக் கொண்டு தாமே அறிய வேண்டும். பிறரால் அறியலாகாது.

65. உபாயமும் பலமும்

'யோகம் பயில்வதற்குத் தக்க இடம், தகுந்த ஆசம் உடல், தலை கழுத்து முதலியவற்றை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்ற உணவு, உறக்கம் ஆகியவைகளைத் துணையாகக் கொண்டு மனத்தைப் பரமாத்மாவிடம் அசையாது ஒரு நிலைப்படுத்த வேண்டும். அப்பொழுது யோகியின் மனம் காற்றில்லாத விடத்திலுள்ள அசையாத் தீபம் போன்றிருக்கும். அவ்வாறு ஸித்தி பெற்ற யோக நிலையில் பரமாத்மாவைக் கண்டு உவக்கிறான். அவ்வெல்லையிற்ற ஆனந்தத்தை அநுபவிக்கப் புகுந்தபின் வேறொன்றை அதிகப் பயனுடையதாக ஒருவன் நினைப்பதில்லை.ஸித்திபெற்ற அந்த யோகநிலையில் தேகம்பற்றி வரும் அதிகத் துன்பத்தாலும் யோகி சலிப்பிக்கப்படுகிறதில்லை என்றெல்லாம் கண்ணன் சொல்லிக்கொண்டு வந்த போது அர்ஜுனனுக்கு ஒளியையும் ஒலியையும், வாயுவையும்விட வேகமாகப் பரந்துசெல்லும் மனத்தை எப்படிச் சலியாமல்ஒன்றிலேயே நிறுத்த முடியும்? ஏற்கனவே கண்ணால் பார்த்ததும் காதால் கேட்டதும் பொதுவாக அநுபவித்தும் அனுபவிக்க வேண்டும் என்பதுமான கோடிக்கணக்கான நினைவுகள் மனத்திலே இருக்கும்போது ஒருவனால் மனத்தை ஒன்றிலேயே எப்படி நிறுத்த முடியும்?' என்ற ஆலோசனை உண்டாயிற்று. அதையறிந்து கொண்ட கண்ணன், மனத்தைச் சுவாதீனம் செய்வதற்கு ஒருபாயம் வரும் சுலோகங்களில் சொல்கிறார்.

தன்னிலாம் காமங்கள் தானெல்லாம் நெஞ்சால்விட்
டன்ன புலனனைத்தும் ஆன்றடக்கி-மன்னுநிலைப்
புந்தியினின் மெள்ளமனம் பூண்டாங் குயிர்மன்னச்
சிந்தியான் வேறொன்றுஞ் சேர்ந்து

(இ-ள்) தன்னில் ஆம் காங்கள்-தன் சங்கற்பத்தால் உண்டாகின்ற காமங்கள் (ஆசைகள்), எல்லாம்-முழுவதையும் விட்டு-

முற்றத்துறந்து, நெஞ்சால்—மனத்தால் அன்ன அவ்வாறே புலன் அனைத்தும்—இந்திரியங்களைச் சகல விஷயங்களின்றும் ஆன்று அடக்கி—(மீட்டு) நன்றாகச் சுவாதீனஞ்செய்து, மன்னுநிலை புந்தியின் மிகவும் நிலையான புத்தியைக் கொண்டு, மெள்ள—(படிப்படியாக) மெதுவாக மனம்—மனத்தை, உயிர் மன்னப் பூண்டு—பரமாத்மாவிடத்தில் நிலைத்திருக்கச்செய்து, வேறு ஒன்றும் பற்றியும், சிந்தியான்—நினைக்காதவனாயிருக்கவேண்டும்.

ஸங்கல்ப ப்ரப[4]வாந் காமாந் ஸ்த்யக்த்வா ஸர்வாந் அசேஷத:
மநஸே[3]வேந்த்[3]ரிய க்ராமம் விநியம்ய ஸமம் தத:
சனைச்சனை ருபரமேத் புத்[2]த்[3]யா[4] த்[4]ருதி க்[3]ருஹீதயா
ஆத்ம ஸம்ஸ்[2]தம் மந:க்ருத்வா நகிஞ்சித் அபி சிந்தயேத்

(இ—ள்) ஸங்கல்ப ப்ரவாந்—கோரிக்கையால் உண்டாகும், காமந்—விஷய ஆசைகள் ஸர்வாந்—எல்லாவற்றையும், அசேஷந: த்யக்த்வா—முழுவதும்விட்டு. இந்திரியக்ராம்—புலன்களின் கூட்டத்தை, ஸமந்தகத: எப்புறத்திலிருந்தும் மநஸா ஏவ—மனதாலேயே, விநியம்ய—அடக்கி, சநை: சநை;—மெள்ள மெள்ள, த்ருதி க்ருஹீதயா—(சலனமின்றி) நிலையான தன்மை அடைந்த, புத்யா—புத்தியினாலே உபரமேத்—(எல்லாவற்றினின்றும்) நீங்கிக கடவன், மந:—மனத்தை ஆத்ம ஸம்ஸ்தம்—ஆத்மாவில் நிலைக்க. க்ருத்வா—செய்து,கிஞ்சிக் அபி—சிறிதொன்றையும், நசிந்தயேத்—சிந்திக்காமலிருக்கவேண்டும்.

இப்பகுதியில் வந்துள்ள இருவகையான ஆசைகளைப் பற்றி ராமாநுஜர் விரிவாக உரை எழுதியுள்ளார். அதுபின் வருமாறு:

ராமா:—"காமங்கள் சங்கற்பத்தாலுண்டாவது, ஸ்பர்சத்தால் உண்டாவது என இரண்டு வகைப்படும். சங்கற்பத்தால் வருவதாவது 'இன்ன காரியத்தைச் செய்தால் இன்னவிதமான பலனைப் பெறலாம், என்று மனத்தில் உண்டாகும் தோற்றம் அல்லது மனதில் வரும் நினைப்பு, ஸ்பாசத்தால் வருவதாவது 'ஞானேந்திரிய கருமேந்திரியங்கள்' விஷயங்களில் சம்பந்தப்படுவது இதனால் உண்டாவன வெட்ப தட்பங்கள் (சீதோஷ்ணாதிகள்) காமங்கள் இவ்விரண்டு விதங்களாலேயே உண்டாகின்றன.முன்னையதை அடியோடு முழுதும் விடவேண்டும். பின்னையதை முற்றும் விடாது அசாத்தியமானபடியால், அதன் மூலமாயுண்டாகும் இன்ப துன்பங்களைவிட வேண்டும்.

ஒன்றை அடையும் பொருட்டு ஒரு காரியத்தைச் செய்ய மனதில் தீர்மானம் செய்வது சங்கல்பமாகும். வயோதிகப்பருவத்தில் தன்னை ரக்ஷிக்கும் பொருட்டுத் தன் மகனைக் கல்விபயிற்றித் தனிகன் ஆக்கவேண்டுமென்று தீர்மானிப்பதுபோன்ற பல அதற்கு உதாரணங்கள். மனதைப் பரமாத்மாவிடத்தில் ஒரு நிலைப்படுத்துவதற்கு இதுவே மேற்கொள்ள வேண்டிய முதல் உபாயம். விஷயங்களில் தாமும் சென்று, மனதையும் தம் வழியே இழுக்கும் இந்திரியங்களை அடக்க மனது ஒன்றினாலேயே தான் முடியும் என்பதைக் காட்ட 'மநஸா ஏவ (மனதாலேயே) என்று சொல்லப்பட்டது. இந்திரியங்களைப் பின்பற்றி விஷயங்களில் செல்லும் மனம் ஒருவனுக்குப் பகை என்று முன்னமே சொல்லப்பட்டது. அம்மனமே ஒருவன் கடைத்தேறுவதற்குத் துணையாக வேண்டும் என்று முன்னே இவ் வத்தியாயத்தில் சொன்னதற்கேற்ப, இந்திரியங்களை அடக்க மனதைத் தவிர வேறு இல்லை. அதனால் அதைக் கொண்டே அடக்க வேண்டும்'என்றார்.

இந்திரியங்களை விஷயங்களினின்று திருப்புவது கஷ்டம்தான் என்றாலும், மன வலிமையால் இந்திரியங்கள் உலக விஷயங்களிலிருந்து சிறிது சிறிதாகத் திருப்பப்படும்பொழுதே, புத்தியின் உதவியால் மனதைப் பரமாத்ம ஸ்வரூபத்தில் படிப்படியாக நிறுத்தப் பிரயாசைப்படவேண்டும். மனம் பரமாத்ம ஸ்வரூபத்தில் மெல்ல மெல்ல நிற்க வாரம்பிக்கும்போது, அந்நிய விஷயங்களை அறவே நினைக்காமல் மறக்க வேண்டும்' என்ற பொருள் சநை:(மெள்ள)' என்ற சொல்லால் கிடைக்கிறது. இம்முறையில் தியானம் பயிலும்போது மனம் ஒன்றிலே நிலைக்காவிட்டால் செய்ய வேண்டியது என்ன?என்பதையும், தியானம் வெற்றிபெற்றால் உண்டாகும் பலனையும் அடுத்தபடியாகச் சொல்லுகிறார்.

நில்லா துழல்நெஞ்சு நீங்கும் எவை மேலவற்றில்
செல்லாமைத் தன்வசத்தைச் சேர்விப்பான்-நல்யோகி
ஆறினான் தீங்குசெருக் கற்றுப் பிரமவுயிர்
தேறினான் இன்பமிகச் சேர்ந்து

(இ-ள்) நில்லாது உழல் நெஞ்சு-நிலையற்றதும் சஞ்சல சுபாவமுள்ளதுமான மனம் எவைமேல் நீங்கும்-எப்பொருளைப்பற்றி

(எண்ணி)த் தன்னைவிட்டுச் செல்லுமோ அவற்றில்–அந்தந்தப் பொருளில், செல்லாமை போகாதபடி மீட்டு, தன் வசத்தைச் சேர்விப்பான்–தனது ஆத்ம ஸ்வரூபத்தில் நிற்கச் செய்பவன், நல் யோகி–சிறந்த யோகியாய், ஆறினான்–சாந்தி பெற்றவனாய், தீங்கு செருக்கு அற்று–பாபமும், ராஜஸகுணமும் நீங்கப்பெற்று, இன்பம் மிகச் சேர்ந்து பேரின்பம் பெற்று, பிரம உயிர் .தேறினான்–ப்ரும்மத்தில் தெளிந்து நிலைக்கிறான்.

யதோ யதோ நிச்சரதி மநச்சஞ்சலம் அஸ்திரம்[2]
ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வசம்நயேத்
ப்ரசாந்த மநஸம் ஹ்யேநம்[3] யோகிநம் ஸுக[2] முத்தமம்
உபைதி சாந்த[3] ரஜஸம் ப்ரஹ்ம[4] பூதம் அகல்மஷம்

(இ–ள்) சஞ்சலம்–சஞ்சலத்தன்மையும், அஸ்திரம்–(அதனால்) நிலைக்காத தன்மையும் உடைய, மந:–மனமானது யத:யத:–எங்கெங்கு, நிச்சரதி–சஞ்சரிக்கின்றதோ, தத: தத:–அந்தந்த விஷயங்களிலிருந்து. ஏதத்–இம்மனதை, நியம்ய–(மீட்டு) அடக்கி, ஆத்மநி ஏவ–(தன்னிடமே) ஆத்மஸ்வரூபத்திலேயே வசம் நயேத்–வசப்படுத்தவேண்டும்.

ப்ரசாந்த மநஸம்–அசையாத மனமுடையவனாய, அகல்மஷம்–கலக்கமற்று, சாந்தா ரஜஸம்–ரஜோகுணம் நீங்கி, பரஹ்ம பூதம்–ப்ரும்மத்தில் நிலைத்த ஏநம்யோகிநம்–இந்த யோகியை, உத்தமம் ஸுகம்–மேலான ஆனந்தம், உபைதிஹி–அடைகிறதென்பது பிரஸித்தம்.

தியானம் பயிலும்போது, மனம் ஆத்மாவில் நிலை பெறாமல், வேறொரு பொருள் மீது செல்லுமானால், மனத்தை புத்தியைக்கொண்டு அதிலிருந்து இழுத்துக் கட்டுப்படுத்த வேண்டும். பல பொருள்களின் மீது செல்லமானால் ஒவ்வொன்றிலிருந்தும் மனதைப் படிப்படியாக இழுத்துத் தன் அதீனத்தில்கொண்டு வர வேண்டும். ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றி, ஆக எல்லாப் பொருள்களிலும் சஞ்சரிப்பது மனதிற்கு இயல்பாதலைக் காட்டவே நிச்சரதி (உழல்) என்று குறிக்கப்பட்டது.

ஒவ்வொரு பொருளாக எண்ணிச் சஞ்சரிக்கின்ற மனத்தை விவேகத்தால் இழுத்து அடக்கித் தானாக உலகப் பொருள்களைப் பின் பற்றிச் செல்லமுடியாத நிலை வந்துவிட்டால் ரஜோகுணம் நீங்கிவிடும். காமம், கோபம் பிற தீமைகள் எல்லாம் தோன்றுவதற்கு ரஜோகுணமே மூலமாதலால், அது நீங்கியபோது சாந்தமும் தெளிவும் பிறக்கும்,

அந்நிலையில் மனம் ப்ரும்மத்திலே ஒன்றி (லயித்து) நின்ற தீவினை யகலப்பெற்று யோகி பேரானந்தம் பெற்றிருப்பான். அழியாத பேரின்பமே தியானத்திற்குரிய பலனாகும்.

66. பேரின்ப பலம்

தான் தெரிந்துகொண்டதொன்றைத் தெரியாதவனுக்கு விளக்கிக் காட்டுவதற்காக உபமானம் காட்டிப் பேசுவது உலகில் சர்வ சாதாரணம் பெரும்பாலும் உபமானம் இருவருக்கும் தெரிந்த ஒன்றாகவே இருப்பது வழக்கம். ஆனால், சொல்வோனுக்கும், கேட்போனுக்கும் தெரியாத ஒன்றை இருவரும் தெரிந்து அநுபவித்ததுபோலப் பாவித்து உபமானம் சொல்வதும் வழக்கில் இல்லாமலில்லை. பெண்ணின் அழகை நேரில் கண்டநுபவித்தன் காணாத தன் நண்பனுக்கு 'அவள் ரதிபோலிருப்பாள்'. 'அவள் ரதியேதான்' என்றெல்லாம் சொல்வது இந்த ரகத்தைச் சேர்ந்ததாகும். இதைவிட அடிக்கடி எல்லோரும் உபயோகிக்கும் இந்த ரகத்தைச் சேர்ந்த உபமானம் பிரும்மானந்தம் ஆகும்.

நல்ல விருந்துண்டவன் 'உணவுப் பொருள்களும் அவை பரிமாறப்பட்ட முறையும், உபசாரமும், தன் மனதிற்குப் பிரியமாயிருந்துவிட்டால் 'எல்லாம் பிரும்மானந்தமாயிருந்தது' என்கிறான். உயர்ந்த சங்கீதக் கச்சேரியை அநுபவித்தவன் பிரும்மானந்தமாயிருந்ததாகச் சொல்கிறான். ஆனால் இந்த உவமையைச் சொல்கிறவன், கேட்கிறவன் ஆகிய இரு சாராரும் பிரும்மானந்தம் எவ்வாறிருக்கும்' என்று அறிந்தவர்களில்லை. உபமானமாகச் சொல்லும் பொருள், எப்பொழுதும் உபமேயத்தை (உவமிக்கப்படும் பொருளை)க் காட்டிலும் உயர்ந்ததாகவிருக்க வேண்டும் என்ற விதி உண்டு. அதைப் பின்பற்றியே எல்லோராலும் பல நூற்றாண்டுகளாக, மிக மிக உயர்ந்ததாகவும் அதைவிட உயர்ந்தது வேறு எதுவுமில்லை என்றதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆனந்தமாகிய பிரும்மானந்தத்தைச் சொல்லிவருகிறோம். அது தமிழில் பேரின்பம் என்று சொல்லப்படுகிறது. அப்பேரின்ப பலம் தியான யோகத்தால் கிட்டும் என்று கண்ணன் முன்னே சொன்னார். அப்பலம் ஒருவனுடைய வலிய முயற்சியின் பலனாக வருகிறதா ? என்ற கேள்வி பிறக்குமல்லவா? அதற்குக் கண்ணன் வரும் சுலோகத்தில் விடையளிக்கிறார்.

இவ்வண்ண மேதன்னை யோகத்தி லேவிடுத்துத்
தெவ்வண்ண வல்வினைகள் செற்றென்று-மெய்வண்ண
யோகி பிரமத் தணைந்தீறி லின்பத்தான்
ஆகியுறு வானெளிதே யாங்கு.

(இ-ள்) இவ்வண்ணம்-இவ்வாறு, தன்னை-தன் மனத்தை, யோகத்திலே விடுத்து யோகத்தில் நிறுத்தி, தெவ்வண்ணவல் வினைகள் செற்று-விரோதத் தன்மை வாய்ந்த தீவினைகளை (பாவத்தை) நீக்கி மெய்வண்ண யோகி-உண்மையான இயல்புடைய யோகி, என்று எப்பொழுதும், பிரமத்து அணைந்து-பிரும்மத்தினிடம் பொருந்தி, எளிதே-சுலபமாக (பிரயாசமில்லமால்) ஈறில் இன்பத்தான் ஆகி உறுவான்-முடிவில்லாத ப்ரும்மானந்த நிலையைப் பெறுவான்.

யுஞ்ஜந்நேவம் ஸதா^{3}த்மாநம் யோகீ^{3} வி^{3}கதகல்மஷ:
ஸுகே^{2}ந ப்^{3}ரஹ்ம ஸம்ஸ்பர்சம் அத்யந்தம் ஸுக^{2}மச்னுதே.

(இ-ள்) ஏவம் ஸதா-இவ்வாறு எப்போதும், ஆத்மாநம்-ஆத்மாவை (தன்னை) யுஞ்ஜந்-தியானத்தில் நிறுத்தியிருக்கிற யோகீ-யோகியானவன், விகத கல்மஷ-பாபங்களற்றவனாய், ப்ரம்ம ஸம்ஸ்பர்சம்-பிரும்மாநுபவரூபமான, அத்யந்தம் ஸுகதம்-பேரானந்தத்தை, ஸுகேந-(பிரயாசமில்லாமல்) சுலபமாக, அச்நுதே அடைகிறான்.

'விகத கல்மஷ:' என்ற தொடர் பாடலில் 'வல்வினைகள் செற்று' என்று கொள்ளப்பட்டது. இதற்கு ராகத்வேஷங்க (விருப்பு வெறுப்பு) ளினின்று நீங்கி என்றும் பொருள் கொள்வதுண்டு.

'ப்ரும்ம ஸம்ஸ்பர்சம்' (பிரமத்து அணைந்து) என்ற தொடருக்கு 'பிரும்மத்தோடு சேர்ந்திருத்தாலாகிய' எனப் பொருள் கிடைக்கும். ஆனால் வேத சாராமான உப நிஷத்துக்களில் வரும் பேத வாக்கியங்களைப் பிரதானமாகக் கொண்ட பேதவாதிகள் பின்வருமாறு பொருள் செய்து கொள்வர்:

"அஞ்ஞான நிலையில் பிரும்மத்திற்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் அகங்கார மமகாரத்தால் (அகப்பற்று புறப்பற்றால்) தோன்றிய ராகத்வேஷாதிகளால் (விருப்பு வெறுப்புகளால் உயிருக்கு மறைக்கப்பட்டிருந்தது. அதனால் உயிருக்குப் பிரும்ம ஸ்வரூபமும் தெரியாமல் மறைந்திருந்தது. தியான யோக பலனாகத் திரைபோலிருந்த அம்மறைவு விலகியது. அப்பொழுது வரும் ப்ரும்ம தாசனமாகிய

அந்நிலையே, இங்கு பிரும்மத்தோடு சேர்ந்திருத்தலாகிய பேரானந்தம் என்று வியவகரிக்கப்படுகிறது"

பேரானந்தம் அல்லது ப்ரும்மானந்தம் எனப்படும் முடிவான நிலை, யோக சித்தியுடையவனுக்கு முயற்சியின் பயனாகவன்றிச் சுலபமாகக் கிடைக்கிறது என்பதே இச் சுலோகத்தின் கருத்து. யோகப் பயிற்சியில் சித்தி பெறுவதற்குத் தன் முயற்சி தேவையாயிருக்கிறது. ஆனால், யோக சித்தியின் பலனாகிய ப்ரும்மானந்தத்திற்கத் தன் முயற்சி தேவையில்லை என்பது இச் சுலோகத்தில் வெளிப்படை.

அப்பிரும்மானந்தம் எத்தகையது என்பது மேலும் விவரிக்கப்படுகிறது.

எல்லா உயிரும் தனதுதுயிர்போல் தன்னுயிர்தான்
எல்லா உயிர்போல் எனக்காணும்-சொல்லார்ந்த
யோகம்சேர் நன்னெஞ்சன் எவ்விடத்தும் ஒத்துயிர்கள்
ஏகம் சேர் வண்ணமறிந் தேய்ந்து.

(இ-ள்) சொல் ஆர்ந்த-சிறப்புப் பொருந்திய, யோகம் சேர் நல்நெஞ்சன்-தியான யோகத்திலே பொருந்திய பரிசுத்த மனமுடைய யோகி, எவ்விடத்தும்-எல்லர்விடங்களிலும், நிறைந்த உயிர்கள்-உயிர்கள் ஒத்து ஸமமாக, ஏகம் சேர் வண்ணம் அறிந்து ஒன்றாகவே சேர்ந்திருக்கிற தன்மையை அறிந்து ஏய்ந்து-(அந்தச் சமதர்சன ஞானத்திலே) பொருந்தியவனாய் எல்லா உயிரும் தனது உயிர்போல் என தன் உயிரானது எல்லா உயிர்களில் இருப்பது போலவும், காணும்-பார்ப்பான்.

ஸர்வ பூ[4]தஸ்[2]த் மாத்மாநம் ஸர்வபூ[4]தாநி சாத்மநி
ஈக்ஷதே யோக[3] யுக்தாத்மா ஸர்வத்[3]ர் ஸமதர்சந:

(இ-ள்) யோக யுக்த ஆத்மா-யோகத்தில் பொருந்திய மனமுடையவன். ஸர்வத்ர-எல்லாவிடத்தும் ஸமதர்சந:-சமமான பார்வையுடையவனாய் ஆத்மாநம்-(பகவானை ஆத்மாவை அல்லது) தன்னை, ஸர்வ பூதஸ்தம்-எல்லாப் பிராணிகளிடம் இருப்பதாகவும் ஸர்வ பூதாநி-எல்லாப் (உயிர்) பிராணிகளையும் ஆத்ம நிச (ஆத்மாவில், பகவானிடத்தில் அல்லது) தன்னிடத்திலிருப்பதாகவும், ஈக்ஷதே-பார்க்கிறான்.

இச்சுலோகத்திற்கு மூன்று சித்தாந்தக்காரர்களும் வெவ்வேறாக உரை கொண்டிருக்கிறார்கள்.

சங்கரர்:– "எல்லாப் பூதங்களிலு (பிராணிகளிலு) முள்ள ஆத்மாதானே என்றும், தன்னிடத்தில் சகல பூதங்களைச் சமமாகவும் என்றதனால் ஆத்மா ஒன்றே என்பதாகவும், பார்க்கின்றவனே யோகி என்பது இதன் கருத்து".

மத்வரும் ராகவேந்திரரும்:– "பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் பிரும்மம் ஒரேவிதமாக விருப்பதாகவும், எல்லாப் பொருள்களும் பிரும்மத்தினிடம் இருப்பதாகவும் அறிகின்றவன் யோகி என்பது இதன் தாத்பரியம்".

ராமாநுஜர்:– 'பிரகிருதி விமுக்தமான (பிரகிருதியினின்று விடுபட்ட) மற்றைய ஜீவன்களின் ஸ்வரூபம் பிரகிருதியினின்று நீங்கிய தனது ஜீவ ஸ்வரூபத்திற்குச் சமமானது என்பதாகவும், பிரகிருதிவிமுக்தமான மற்ற பார்க்கின்றவன் யோகி, பிரகிருதியின் காரியமாகிய ராகத்வேஷாதிகளிலிருந்தும், அதனால் வரும் அகங்கார மமகாராதிகளிலிருந்து, நீங்கிய யோகி தனது சொரூபத்தைப் பார்க்கும்போது, மற்றவர்களும் பிரகிருதி விமுக்தர்களானால், தனக்குச் சமானமாகவேயிருப்பதை நிச்சயமாக அறிந்து கொள்கின்றவன் என்பது இதன் தாத்பரியம்".

அன்றியும் இச்சுலோகத்தாலும், முந்திய சுலோகத்தாலும், யோகி இவ்வுலகில் உடலுடன் கூடியிருக்கும் போதே பேரின்பம் பெறுகிறான் என்றும், அப்பேரின்ப நிலையில் சமதர்சனம் பெற்றிருக்கிறான் என்றும் அறிகிறோம்.

அடுத்தபடியாகச் சமதர்சனத்தின் முக்கியத்வம் சொல்லப்படுகிறது.

என் தன்மையால் உயிர்களெங்கும் எனைக்கண்டு அவற்றைத்
தன் தன்மையால் என்பால்தான் காண்பான்-சிந்தையினில்
நான்தோன்றா வாறில்லை நன்குணர்ந்தான் என்னிடையில்
தான்தோன்றா வாறில்லை தான்.

(இ–ள்) உயிர்கள் எங்கும்–எல்லாவுயிர்களிலும் என் தன்மை– என் ஸ்வரூபத்தோடு கூடிய, எனைக் கண்டு–என்னைப் பார்த்து, அவற்றை–அவ்வுயிர்களையெல்லாம் தன் தன்மை–தனது ஸ்வரூபத்தோடேயே இருக்கிற என்பால்தன், பார்க்கின்ற யோகிக்கு, சிந்தையினின்–மனத்தில், நான் தோன்றாவாறு இல்லை–நான் தோன்றாமலிருப்பதேயில்லை. என்னிடையில்தான் தோன்றா ஆறு

இல்லை—என்னிடம் அவன்(அந்த யோகி) எப்பொழுதும் தோன்றாமல் போவதுமில்லை.

யோமாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம்ச மயிபச்யதி

தஸ்யாஹம் நப்ரணச்யாமி ஸசமே நப்ரச்யதி

(இ—ள்) ய:—எவன், மாம்—என்னை, ஸர்வத்ர பச்யதி எங்கும் எல்லாவற்றிலும் பார்க்கிறானோ, ஸர்வம்—எல்லாவற்றையும், மயி பச்யதி என்னில் பார்க்கிறானோ, கஸ்ய—அவனுக்கு, அஹம் நான், நப்ரணச்யாமி—காணாமற் போவதில்லை. ஸசமே—அவனும் எனக்கு நப்ரணச்யதி காணமாற் போவதில்லை.

இச்சுலோகத்திற்கு உரை சொல்வதில் மூன்று சித்தாந்தங்களுள்ளும் பேதம் உண்டு. அவை வருமாறு:—

ராகவேந்திரர்:—என்னிடத்தில் சகல பூதங்களையும், சகல பூதங்களில் என்னையும் பார்க்கின்றவனது யோக ஷேமங்களுக்கு நான் பாத்தியப்படாமல் போவதில்லை. அவனும் எனக்குப் பக்தனாகமற் போவதில்லை.

ராமாநுஜர்:— பிரகிருதியினின்று விடுபட்ட, எல்லா உயிர்களின் சொரூபங்களுக்குச் சமமான சொரூபத்தையுடையவனாக என்னை எவன் பார்க்கிறானோ அந்த ஆத்ம தரிசனமுள்ள யோகிக்கு நான் பிரத்தியக்ஷமாகவேயிருக்கிறேன். அவனும் எனக்குப் பிரத்தியக்ஷமாகவேயிருக்கிறான்.

சங்கரர்:— நான் அவனுக்கும், அவன் எனக்கும் காணமாற் போவதில்லை என்றதனால் 'நானே அவன்; அவனே நான்'என்று ஒன்றாகின்றோம் என்பதே கருத்து.

உரைகொள்வதில் சித்தாந்த மாறுபாடுகள் இருந்தபோதிலும், பேரின்பம் என்றபலன் சமதர்சனத்தில் அடங்கியது என்பதும் அப்பலனை யோகாஸாதனத்தால், உடலுடனே 'இத்தரைமீதினிலே இந்த நாளிலே' எனப் பாரதியார் சொன்னபடிப் பெறலாகும் என்பதும் இச்சுலோகத்தில் வெளிப்படை.

67. ஸம பாவனை

ப்ரும்மானந்தம், மோக்ஷானந்தம், பேரின்பம் எல்லாம் ஒன்றையே குறிக்கும். அந்நிலையை எவராலும் பூத உடலுடன் பெற்று அநுபவிக்க முடியாது; இறந்த பின்தான் அடையமுடியும்' என்று சொல்வது

'பேயுரையாம், என்று ஊதேடா சங்கு என்று பாடி இவ்வுடலுடனே இத்தரை மீதினிலே ப்ரும்மானந்தம் பெறலாம்'என்றும் பாரதியார் கவி பாடிவைத்தார். அது கீதையில் கூறப்பட்ட உண்மையேதான் என்பதை முற்பகுதியில் உணர்ந்தோம்.

தியானயோக, ஸாதனத்தால் மனதைப் ப்ரும்மத்திலே நிறுத்தியவன் எங்கும் எல்லாப் பிராணிகளிடத்திலும் ப்ரும்மத்தைச் சமமாகக் காண்கிறான். ப்ரும்மத்தில் தன்னையும் பார்க்கிறான் தன்னில் ப்ரும்மத்தையும் காண்கிறான் என்று கண்ணன் முன்னே சொன்னாரல்லவா? அவ்வாறு காண்பதே ஸமதர்சனம் அதுவே பூதஉடலுடன் அனுபவிக்கக் கூடிய பேரின்பத்திற்கிடமாயிருக்கிறது. அதை அநுபவிக்கும் நிலையிலே யோகியர் பேசும் வார்த்தைகளே அடியில்வரும் திருவாய் மொழிப் பாடல்

புகழும் நல் ஒருவன் என்கோ ? பொருவில் சீர்ப் பூமி என்கோ ?
நிகழும் ஆகாசம் என்கோ ? நீள் சுடர் இரண்டும் என்கோ ?
திகழும் தண்பரவை என்கோ ? தீ என்கோ ? வாயு என்கோ ?
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ ? கண்ணனைக் கூவும் ஆறே.

(என்கோ—என்பதோ? நீள்சுடர்—சந்திர சூரியர், பரவை—கடல் கண்ணைக் கூவும் ஆறு கண்ணனாகிய பரமாத்வை அழைக்கும் முறை)

ஸமதர்சனம் வந்தபோது எல்லாம் பகவான் மயமாகவே இருப்பதால் அவரைப் பொருத்தமாக எந்தவிதப் பெயரிட்டும் பேச முடியாதிருக்கும், அந்நிலையில் பெருமையையும், முக்யத்வத்தையும் கண்ணன் மேலும் விவரிக்கிறார்.

எங்கு நிகழ்ந்திருக்கும் என்தன்னை ஏகமாத்
தங்கும் சமநினைவால் தானுணர்ந்தான்—அங்கங்கே
எவ்வா றியன்றிடினும் யோகியவன் என்னிடையில்
அவ்வா றியன்றவனே யாம்

(இ—ள்) எங்கும் நிகழ்ந்திருக்கும்—எல்லாப் பிராணிகளிடத்திலும்இருந்து கொண்டிருக்கும், என்தன்னை என்னை ஏகமாகத்தங்கும் சமநினைவால்—ஒன்றாயிருக்கிற அபேதத் (ஒருமை) தைத் தியானிப்பதால், உணர்வான்—பஜிக்கின்றவனாகிய, யோகி அவன்—அந்த யோகி அங்கே எவ்வாறு இயன்றிடினும்—எந்தெந்த மார்க்கத்தில் எவ்வாறு பிரவர்த்தித்த போதிலும், என்னிடையில்—

என்னிடத்தில் அவ்வாறு இயன்றவனே யாம்-பஜிப்பதற்குத் தக்கவாறு இருந்துகொண்டேயிருக்கிறான்.

ஸர்வ பூதஸ்திதம் யோமாம் பஜத்யேகத்வம் ஆஸ்தித:
_ஸர்வதா வர்தமாநோபி ஸயோகீ மயி வர்ததே_

(இ-ள்) ய:-எவன் ஒருவன், மாம்-என்னை, ஸர்வ பூதஸ்திதம்-எல்லாப் பிராணிகளிடத்திலும் இருக்கிற, ஏகத்வம் ஆஸ்தித:-ஒருமை அடைந்து, பஜதி-பஜிக்கிறானோ, ஸ:யோகீ-அந்த யோகியானவன் ஸர்வதா வர்(த்)தமா ந: அபி-எந்த மார்க்கத்தில் பிரவர்த்திருந்த போதிலும், மயி வர்(த்)ததே-என்னிடத்திலே இருக்கிறான்.

'ஏகத்வம் ஆஸ்தித:(ஏகமாத் தங்கும்)'என்ற தொடருக்கு த்வைத சித்தாந்திகள் 'எங்குமிருக்கிற பரமாத்மா ஒருவரே என வுணர்ந்து' என உரை கொண்டனர். 'அபேதத்தை ஆசிரயித்து என்பது அத்வைத உரை பூரணமாக, ஞானாகரமாய் ஒரே விதமாயிருக்கிற (தத்துவத்தை உணர்ந்து) என ராமாநுஜர் உரை செய்தார்.

'ஸாவதா வர்(த்)மா நோபி' (அங்கங்கே எவ்வாறு இயன்றிடினும்) என்பதற்கு ராமாநுஜர் தியான காலத்திலும் தியானமல்லாத காலத்திலும் என்றும் த்வைத சித்தாந்திகள் 'யோகி தரும நெறியில் சென்றாலும் அல்லது அதைப் புறக்கணித்தாலும்' என்றும் உரை செய்தனர்.

ஸமதர்சனம் ஒரு முறை தியான விஷயமாய் விட்டால் பின் அது யோகியைவிட்டு நழுவுவதே யில்லை அது கை வந்தவனுக்கு முக்தி உண்டு அவன் வெளித் தோற்றத்திற்கு உடலால் செய்யும் கருமங்கள் தருமமாக விருந்தாலும், பிறிதாக விருந்தாலும் மனம் பரமாத்மாவிடமே லயித்துப் பேரானந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும்.

ஸமதர்சனத்திலிருந்து பிறப்பது ஸம பாவனை அந்நிலை எது என்பதையும் அதைப் பெற்றிருக்கும் யோக நிலையே மிக உயர்ந்ததென்றும் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

தன்னொத்த எவ்விடத்தும் மன்னா சமமாக
மன்னொத்த இன்பம் வளர்துன்பம்-உன்னலுறில்
ஆங்கவனே சால அதிநாம யோகிஎன
_ஓங்கறிவார் நாமதிப்பர் உற்று._

(இ-ள்) மன்னா!-அரசனாகிய அர்ஜுனா! எவ்விடத்தும்-எல்லா உயிர்களிடத்தும் தன்னொத்த-தன்னைப் போலவே சமமாக

ஒன்றுபோல, மன் ஒத்த இன்பம்–மிகப்பெருகும் இன்பம்; வளர் துன்பம்–பெருகும் கஷ்டம் (இரண்டையும்) உன்னலுறின்–பாவிப்பானானால், அவனே–அவனையே, சால அதிநாம யோகி என–மிக வதிகமான பெருமையுடைய யோகி என்று, ஓங்கு அறிவார்–பெரிய ஞானிகள், உற்று மதிப்பர்–நன்கு பாராட்டுவார்கள்.

ஆத் மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பச்யதி யோர்ஜுந
    3   3   3 2   3
ஸுகம் வா யதிவா து: கம் ஸயோகீ பரமோமத:

(இ–ள்) அர்ஜுந! –அர்ஜுந, ஸர்வத்ர–எல்லா உயிர்களிடத்திலும், ஆத்ம ஔபம்யே ந தனக்குப் போலவே ஒற்றுமையினால், ஸுகம் வா யதிவா துக்கம்–இன்பத்தையோ துன்பத்தையோ ய:–எவன், ஸமம் பச்யதி–ஸமமாகப் பார்க்கிறோனோ, ஸ:–அவன் பரம:யோகீ–மேலான யோகீ–(என்று), மத:–எண்ணப்படுகிறான்.

எல்லா உயிர்களையும், சமமாய் ஒன்றாகப் பார்க்கின்றவனுக்கு உயிர்களிடம் ஸமபாவனை உண்டாகும். எல்லா உயிர்களுக்கும் வருகின்ற சுகதுக்கங்களைத் தனக்குப் போலப் பாவிப்பதாவது:–பிறரை அடையும் இன்ப, துன்பம் தன்னை அடையாவிடினும், தன்னை அடைந்ததாகவே அநுபவிப்பது இது பாவானா சக்தி என்றும் சொல்லப்படுகிறது. நாடக மேடையில் வரும் நடிகன் நாடகத்தில் வரும் பாத்திரங்களின் சுகதுக்கங்களைத் தான் அநுபவிப்பது போல் நடித்தாலும் அது உண்மையில் அவனுக்குச் சுயாநுபவமாகாது.

சுகபோகத்திற்கிடமான ஆடம்பர அரச வாழ்க்கையைப் புத்தரின் மனம் விரும்பவில்லை. தந்தை வகுத்த தடைகளையும் மீறி, ஏழைகளும் நோயாளிகளும் படும் துன்பத்தை அவர்களைப் போலவே புத்தர் மனம் அநுபவித்தது. அவர்களுக்கு வரும் இன்பத்தைப் தனதாகவே உணர்ந்து உயிர்கள் யாவும் இன்பம்பெற அடிகோலினார். அவ்வாறே மஹாத்மாவும் உலகமக்களுக்கு வரும் இன்ப, துன்பங்களைத் தன்னதாகவே கொண்டநுபவித்தார். ராமாநுஜரும் அவ்வாறு அனுபவித்ததாகக் குரு பரம்பரை வரலாறு தெரிவிக்கிறது. ஞானிகளும் அவ்வாறே அநுபவித்தார்கள் என்பதை அவர்கள் பாடல்களிலும், உரைகளிலும் காணலாம். பகவானும் அவ்வித சமபாவனை தனக்கிருந்ததாலேயே அவதாரங்களைச் செய்தார் என்ற உண்மையை புராண சாஸ்திரங்களை ஊன்றிக் கவனித்தால் உணர்ந்து கொள்ளலாம்.

அதனால் கண்ணன் யோகப்பயிற்சியால் ஸம பாவனையைப் பூரணமாய் எய்தியவன்தான் யோகிகளில் மேலானவன் என்று

அர்ஜுனனுக்குக் கூறினார். அதைக்கேட்ட அர்ஜுனன் யோகத்தால் விளையும் ஸமதர்சனம், அதனினும் அரிதாகிய ஸமபாவனை இரண்டையும்பற்றி ஆலோசித்தான். அவ்விரண்டும் மனத்தை அடக்குவதிலிருந்தே படிபடியாகப் பிறக்கவேண்டும் என்பதை நினைத்தபோது ஸாத்யமா? (இயலுமா?) என்ற சந்தேகம் உண்டாயிற்று. அதைக் கண்ணனிடம் கேட்கிறான்.

அண்ணலைப் பின்கேட்டான் அமர்விசயன் நீயுரைத்த
எண் அமரும் ஒப்பார் எழில்யோகம்-திண்ணமிது
மன்னு நிலைமை மதுசூதனாகாணேன்
உன்னுமனம் சஞ்சலத்தால் ஓர்ந்து
வன்னெஞ்ச சஞ்சலமாய் மாறாய் வலிந்தடரும்
அந்நெஞ்சு காற்றைப்போல் ஆன்றடக்கித்-தன்னி
லரிதென்றிருப்பனென வாங்கவனுங் கேட்கச்
சுரிசங்கன் தானுரைத்தான் சொல்

(இ-ள்) மதுசூதனா-கண்ணனே! நீ உரைத்த-உம்மால் சொல்லப்பட்ட, ஒப்பு ஆர் எண் அமரும்-ஸாம்ய நிலை மிக்குப் பொருந்திய, எழில் யோகம்-சிறந்த யோகத்தில், உன்னுமனம் சஞ்சலத்தால் ஓர்ந்து-கருதற்குரிய மனம் சஞ்சலத் தன்மை பெற்றிருப்பதைக் காரணமாகக் கொண்டு இது-இம் மனமானது, திண்ணம் மன்னு நிலைமை-நன்கு நிலைத்திருக்கும் தன்மையை, நான் காணேன்-நான் அறிய முடியவில்லை (என்று), அமர்விசயன்-போர்வீரனாகிய அர்ஜுனன், அண்ணலைப் பின் கேட்டான்-பெரியோனாகிய கண்ணனைப் பிறகு கேட்டான்.

வல் நெஞ்சு-வலிமை படைத்த மனம், சஞ்சலமாய்-சஞ்சலத்தன்மை வாய்ந்ததாய், மாறாய்-(விவேகத்திற்கு) மாறுபட்டு வலிந்து அடரும்-(விவேகியை விஷயங்களில்) வலிய இழுத்துச் செல்லும், அந்நெஞ்சு-அந்தவிதமிருக்கிற மனத்தை, காற்றைப்போலவே, ஆன்று அடக்கி தன்னில் அரிது- நன்கு அடக்கித் தன்னில் நிறுத்துவது மிகவும் அரியது என்று இருப்பன் என - என்றே எண்ணுகிறேன் என்று (அர்ஜுனன்) சொல்ல சுரிசங்கன் தானுரைத்தான் சொல்-வளைந்த சங்கையுடைய கண்ணபிரான் சமாதானம் சொன்னார்.

3 3 4 3

யோயம் யோக ஸ்த்வயா ப்ரோக்த ஸாம்யேந மதுஸூதந

2 4

ஏதஸ்யாஹம் நபச்யாமி சஞ்சலத்வாத் ஸ்திதிம் ஸ்திராம்

2 3 3 3 4

சஞ்சலம்ஹிமந கிருஷ்ண ப்ரமாதீ பலவத்த்ருடம்

3 3

தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸூதுஷ்கரம்

(இ-ள்) மதுஸூதந-கிருஷ்ணா, சஞ்சலத்வாத்-(மனம்) சலிப்புற்றது. ஆகையால், த்வயா உம்மால் ஸாம்யேந-ஸாம்யமாக, ய:-அயம்யோக: - யாதொன்று அறிந்த யோகம், ப்ரோக்த:-சொல்லப்பட்டடதோ, ஏதஸ்ய-இந்த யோகத்தினுடைய ஸ்திராம்-நிலையான ஸ்திதிம் -நிலையை அஹம்-நான், நபச்யாமி-பார்க்கிறேனில்லை.

கிருஷ்ண-கண்ணனே! சஞ்சலம்-சலிக்கும் ஸ்வபாவமான மந:-மனமானது பலவத்-(புருஷனை) வலுவிலும், த்ருடம்ஹி-(விஷயங்களில்) கெட்டியாகவும், ப்ரமாதீ-கலங்கச் செய்கிறதாயும், (இருக்கிறது) தஸ்ய-அந்தமனத்தினுடைய நிக்ரஹம்-அடக்கிச் சயிக்கப்படுவதை வாயோ: இவ-காற்றினதைப் போல ஸூதுஷ்கரம்-மிகவும் செய்யவரிதென்று, அஹம்மந்யே-நான் நினைக்கிறேன்.

சமதர்சனமும், சமபாவனையும் உண்டாவதற்கு ஏற்றதாக மனம்இடம்தரும் என்று தோன்றவில்லை என்பது முற்பகுதியின் பொருள். அவை உண்டாக மனத்தை வெல்ல வேண்டியது அவசியமாகையால், மனத்தின் தன்மைகளும் அதனால் அது வெல்வதற்கு அரிதாகும் என்பதும் பிற்பகுதியில் சொல்லப்பட்டன. மனத்தின் தன்மையையறிந்த நாம் கேட்கக்கூடிய கேள்வியே அர்ஜுனன் வாயிலாக வந்தது இதற்குக் கண்ணன் என்ன சமாதானம் சொல்லப்போகிறார் என்பதை காண்போம்.

68. விடையும் வினாவும்

'தியான ஸித்தியினால் ஸமதர்சனமும் ஸமபாவனையும் உண்டாகி இம்மையிலேயே (இகத்திலேயே) யோகி, பேரின்பப் பலனை அனுபவிக்கிறான்' என்று கண்ணன் சொன்னபோது அர்ஜுனன் 'மனத்தைப் பிறபொருள்களின் மீது செல்லாமல் ப்ருமத்தினிடமே நிலையாக நிறுத்த முடியுமா? நிறுத்தினால் தானே யோக பலன் கிட்டும்' என்ற சந்தேகம் கொண்டான். அதனால்

கண்ணனை நோக்கி 'மனம் சஞ்சல சுபாவமுடையது. ஒருவனைக் கலங்கச் செய்கிறது. புத்திக்கு அடங்காததாயிருக்கிறது, எங்கும் சஞ்சரிக்குமியல்புடைய காற்றையடக்குவது எப்படித் துர்லபமோ, அவ்வாறே மனத்தை அடக்குவதும் அசாத்தியமாகும் என்றே நினைக்கிறேன்' என்று கேட்டான்.

கண்ணன், அர்ஜுனன் சொன்ன சஞ்சலம் நிலையின்மை ஆகியமனத்தின் இரு தன்மைகளையும் ஒப்புக்கொண்டு, மனத்தை வெல்வதற்கு ஒருபாயத்தை இரு சுலோகங்களால் விவரிக்கிறார்.

நேராக நின்றடக்க நில்லாது அரிதுமனம்
காரார் கொடைத் தடந்தோள் கௌந்தேயா-சீராரும்
யோகத் திடைப்பயில்வால் ஏலுந் துறவதனால்
ஆகத் ததுவடக்க லாம்

(இ-ள்) கார் ஆர் கொடை தடம் தோள் கௌந்தேயா!- மேகத்தை ஒத்த ஈகையையும் விசாலமான தோளையும் உடைய அர்ஜுனா!, மனம்-மனமானது, நேராக நின்று அடக்க நில்லாது- நன்றாக ஒரே மாதிரிக் கட்டுப்படுத்த முடியாமல் கஷ்டமாகவே இருக்கும், சீர் ஆரும்-சிறப்புப் பொருந்திய, யோகத்து இடை- யோகத்தில், பயில்வால்-(தக்க) பழக்கத்தாலும், ஏலும் துறவு அதனால்- தக்க வைராக்கியத்தாலும், ஆக-நன்றாக, அது-அம்மனம், அடக்கலாம்-அடக்கப்படலாம் (அத்து அசை)

அஸம்சயம் மஹாபா3ஹோ மனோ து3ர் நிக்3ரஹஞ்சலம்
அப்4யாஸேநது கௌந்தேய வைராக்3யேணாச க்3ருஹ்யதே.

(இ-ள்) ஹே மஹா பாஹோ-ஓ பலசாலியே! சலம்-சலிக்கும் தன்மையதான, மந:- மனமானது துரநிக்ரஹம்-அடக்க முடிய அரிதுதான், அஸம்சயம்-சந்தேகமில்லை ஹே கௌந்தேய!-ஓ குந்தியின் மைந்தா! அப்யாஸேந-அப்பியாச (பழக்க)த்தாலும், வைராக்யேணச:- வைராக்யித்தாலும் க்ருஹ்யதே-அடக்கப்படுகிறது.

'கொடிய மத யானையை வசப்படுத்தி விடலாம். பார்க்கும் பிராணிகளின் மீது பாய்ந்து கடிக்கும் சிங்கம், கரடி, புலி முதலிய மிருகங்களின் வாயையும் கட்டுப்படுத்திவிடலாம். ஐம்பெரும் பூதங்களைக் கூட ஒருவர் வசப்படுத்திவிடலாம். ஆனால் சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறம் அரிது' என்று கூறும் பிரசித்தமான பாடல் நம் நாட்டில் வழங்கி வருகிறது.

கீதையை வெளியிட்ட கண்ணனும் "மனத்தை அடக்குவது மிக அரிது" பலருக்கு அசாத்தியமான காரியம் தான் என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால், அடக்குவதற்கு அபூர்வமான உபாயம் ஏதேனும் கையாளவேண்டுமோ என்று எதிர்பார்க்க வேண்டாதபடிக் கொடிய மிருகங்களை அடக்குவதற்கு வேண்டிதான பழக்கமே தேவை' என்கிறார். மனத்தை அடக்குவதற்கு உறுதியோடுவிடாமல் பயிற்சி செய்ய வேண்டும். அப்பயிற்சி வெற்றிகரமாவதற்கு வைராக்யம் வேண்டும். ஏற்கனவே விரும்பி அநுபவித்த பொருள்களில் மனம் செல்லாதிருக்கவேண்டும் என்றால், அவற்றில் வெறுப்பும் அதன் காரணமாக அவற்றை எந்த வகையிலும் பற்றக்கூடாது என்ற உறுதியும் இருக்க வேண்டும். முன்னே பிரியத்திற்கிடமாக விருந்த ஒவ்வொரு பொருளிலும் இருக்கும் துக்க ஹேதுவை அறிதல் வைராக்யம் பிறக்க உதவும். அவ்வைராக்யம் மனத்தை அடக்க அரிதாயிருந்த போதிலும் அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் அடக்கியாக வேண்டும் என்று தெரிவித்தார்.

இதைக் கேட்ட அர்ஜுனனுக்கு, எதற்கும் அடங்காமல் மதங்கொண்டு திரிந்த யானை முடிவில் களைத்து ஒரு நிதானத்திற்கு வருவது போல் தன்னிச்சைப்படி அலைந்தமனம், முடிவில் தானே ஒரு கட்டுப்பாட்டில் வாராதா? அப்படி வந்தால் விடாத பயிற்சியும், வைராக்கியமும் அவசியமில்லையோ என்று ஆலோசிக்க ஆரம்பித்தான். கண்ணன் அதைத் தெரிந்து கொண்டு, சமாதானம் சொல்லுகிறார்.

தன் இசையா நெஞ்சுதன்னால்சார் வரிதாம் யோகமென்
றென்னிசைவ தாகு மீது பின்னே-முன்னிசையு
நெஞ்சான் முயன்றவனால் நேரே உபாயத்தால்
எஞ்சா தடையலாமிங்கு

(இ-ள்) தன் இசையா-தன்னால் அடக்கப்படாத, நெஞ்சு தன்னால்-மனத்தையுடைய ஒருவனால், யோகம் சார்வு அரிது-யோகம் அடைய முடியாதது, என்று-என்பது, என் இசைவது ஆகும்-எனது கொள்கையாகும். இது பின்னை பிறகு இந்த யோகத்தை, முன் இசையும் நெஞ்சான் முன்னமே-அடக்கப்பட்ட மனத்தைக் கொண்டு, முயன்றவனால் நேரே உபாயத்தால்-முயற்சி கொண்டு ஒழுங்காகப் பண்ணும் அப்பியாஸத்தால் எஞ்சாது அடையலாம்-குறைவில்லாமல் பெறலாம் (இங்கு-அசை)

அஸம்யதாத்மநா யோகோ துஷ்ப்ராப இதி மே மதி:

வச்யாத்மாநா து யததா சக்யோ வாப்து முபாயத:

(இ–ள்) அஸம்யத ஆத்மநா–ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளாத மனத்தையுடைய யோக:–யோகமானது, துஷ்ப்ராப:–அடையக்கூடியதல்ல. இதி–என்று மே–என்னுடைய மதி:–நிச்சயம் வச்ய ஆத்மநா–வசப்பட்ட மனதுடையவனாய் யததாது–முயற்சி செய்பவனாலே உபாயத:–உபாயமாய், அவாப்தும்–அடைய, சக்ய:–சாத்தியமானது.

மனத்தை அடக்குவத் அசாத்தியமானாலும், தியான யோக சித்திக்கு அது இன்றியமையததாகவே இருக்கிறது. மனத்தை அடக்காமல் யோகத்தைத் திண்ணமாகப் பெறவே முடியாது. அதை அடக்குவதற்கு முறையான பயிற்சி அல்லது அப்பியாஸத்தைத் தவிர வேறு ஸாதனமில்லை என்பதைக் கண்ணன் இச்சுலோகத்தால் வெளியிட்டார்.

இதைக் கேட்டபோது அர்ஜுனனுக்கு மேலும் ஒரு சந்தேகம் தோன்றியது. ‘காற்றைப்போல் சஞ்சலமுள்ள மனதை அடக்குவது பலருக்கு அரிதாகும் என்பதைக் கண்ணனே அடிக்கடி ஒப்புக்கொண்டு பேசுகிறார். அது உண்மையானால், மனதை அடக்கும் முயற்சியில் பலருக்குத் தோல்வி ஏற்படலாம். ஆரம்பத்தில் சிறிதுவெற்றிக் குறி தோன்றினாலும், யோகப் பயிற்சியில் மேலும் மேலும் முன்னேறும்போது மனத்தை அடக்குவது சாத்தியமாகாமல் யோகத்திற்காகச் செய்த பிரயத்தனங்கள் (முயற்சிகள்) யாவும் இடையே முறிவடைந்து போகலாம். அவ்வாறு ஆரம்பபித்த யோகம் பூர்த்தியாகாமல் நழுவினால், யோகியின் கதி என்னவாகுமோ?’ என்ற ஆலோசனை உண்டாயிற்று. அதனால் பின்வருமாறு கண்ணனை மறுபடிக் கேள்வி கேட்கிறான்.

ஆங்கு விசயன் அமலனதனைக் கேட்டான்
ஈங்குவிருப் புற்றான் இயல்வற்றுப்-பாங்குமனம்
தக்கயோ கத்துச் சலித்தங் கது சேராது
எக்கதியைத் தானடையு மிங்கு.

(இ–ள்) ஆங்கு–அப்பொழுது, விசயன்–அருச்சுனன், ஈங்கு இவ்வுலகில், விருப்புற்றான்–(யோகத்தில்) பிரியத்தோடு பொருந்தியவன் இயல்வு அற்று பிரயத்தனம் (அதிகம்) இல்லாமல், பாங்கு மனம்–நேரிய மனமானது, தக்க யோகத்து–சிறந்த யோகத்தில் சலித்து–

(நிற்கமாட்டாமல்) சஞ்சலமடைந்து அது சேராது—யோகசித்தியையும் பெறாமல்,எக்கதியைத்தான் அடையும் என்ன கதியை (கடைசியில்) பெறுவான்? என்று, அமலன் தன்னைக் கேட்டான்—பரிசுத்த மூர்த்தியாகிய கண்ணனைக் கேட்டான்.

அயதி: ச்ரத்தயோ பேதோ யோகாச் சலித மாநஸ:
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம்கதிம் க்ருஷ்ண கச்சதி

(இ—ள்) ச்ரத்தயா உபதே:—சிரத்தையோடு கூடியவன், அயதி:— முயற்சியில்லா பக்ஷத்தில், யோகாத்—யோகத்தினின்றும், சலித மாநஸ:— சலிப்புற்ற மனத்தையுடையவனாய், யோகஸமஸித்தம்—யோக சித்தயை அப்ராப்ய—அடையாமல் ஹே க்ருஷ்ண—ஓ பகவானே! காங்கிதம் கச்சதி— என்ன கதியை அடைகிறான்?

ச்ரத்தை அல்லது விருப்பம் என்பது இக வாழ்விற்கு மேலான வாழ்வுண்டென்ற தீவிர உணர்ச்சி அல்லது நம்பிக்கையைக் குறிக்கும்' யோகசித்தி என்பது புற நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படாமல் விடாது பகவானையே தியானிப்பதைக் குறிக்கும்.

இக் கேள்வியைக் கேட்டு முடியு முன்னே, அர்ஜுனனுக்கு முன்னையதைவிட அபாயகரமான துன்பம் யோகத்தை இடையே விட்டவனுக்கு வருமோ' என்ற சந்தேகம் தோன்றியது அதனால் மேலும் ஒரு கேள்வி கேட்கிறான்.

முன்பயன்சேர் கன்ம முழு தொழிந்து மேற்பிரமந்
தன் பயனா நல்வழியிற் சாராதே-பின்பவன்றான்
தஞ்சமில்லாது அவ்விரண்டுந் தான ழுவிச் சின்னமா
மஞ்சனவே மாயுமோ மற்று.

(இ—ள்) முன் பயன் சேர் கன்மம்—முன்னே சொன்ன பயனைத்தரும் கரும பலன், முழுது ஒழிந்து—முற்றுமில்லாமல்போய், மேல் பிரமந்தன் பயனான நல்வழியில்சாராதே—மேலான பிரும்மஞானத்தால், நற்கதியும் பிரும்மஞானத்தால்—நற்கதியும் பெறாமல், பின்பு அவன்தான்—பிறகு யோகப்ரஷ்டன் ஆனவன், தஞ்சம் இல்லாது— பற்றுக்கோடு எதுவுமில்லாமல், அ இரண்டும் தான் நழுவி—இகம், பரம் எனப்படும் இரண்டுபேறுகளையும் இழந்து, சின்னமா மஞ்சு எனவே மாயுமோ —சிதறிய மேகம் போல நாசமடைவானோ?

கச்சிந்நோ பய விப்ரஷ்டச: சிந்நாப்ரமிவ நச்யதி
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண:பதி

(இ-ள்) உபய விப்ரஷ்ட:-இரண்டிலும் நழுவிய இவன் ஹேமஹா பாஹோ-பெரிய தோள்களுடைய கண்ணனே! அப்ரதிஷ்ட:-(கருமமும்) கை புகுதாமல், ப்ரம்மண: பதி-பிரும்மத்தின் மார்க்கத்திலும், விமூட:-மூடனானவன், சிந்ந அப்ரம் இவ-சிதறிப்போன மேகம் போல கச்சித் ந நச்யதி-நாசமடைய மாட்டானோ?

'உபய விப்ரஷ்ட:-இரண்டும் கெட்டு! இதற்கு ராகநேந்திர சுவாமிகள் "துறக்கமுமில்லை: மோக்ஷமுமில்லை; அல்லது துறக்கத்திற்குச் சாதனமான காமிய கருமமுமில்லை; மோக்ஷத்திற்குச் சாதனமான பூரணத்தியான யோகமுமில்லைை: அல்லது இகலோக சுகமுமில்லை பரலோக சுகமுமில்லை;ஆதலால் இரண்டுங்கெட்டு" என உரை தந்துள்ளார். இவ்விரண்டு வினாக்களுக்கும் கண்ணன் கூறப்போகும் விடையை காண்போம்.

69. யோக ப்ரஷ்டன்

மனம் சஞ்சலத் தன்மை வாய்ந்தது. ஒருவன் தன் சுவாதீனத்தில் அடக்குவதற்கு மிகவும் அரியது: என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதிலும் பழக்கத்தாலும், விஷயங்களை வெறுப்பதாலும் (வைராக்கியத்திலும்) அடக்கப்படுகின்றது. மனத்தை அடக்காமல் யோகத்தை அடைய முடியாதென்பது நிச்சயம். அப்பியாசாதி உபாயங்களாலேதான் ஒருவனால் யோகத்தைப் பெற இயலும்.

என்று கண்ணன் சொன்னபோது அர்ஜுனன் சிந்திக்கலானான். 'நம்பிக்கையோடு யோகத்தைப் பயில ஆரம்பித்து ஒருவன் அதைப் பூர்த்தி செய்யவேண்டிய முயற்சியில்லாமல் யோகத்தினின்றும் நழுவி யோக பலனை அடைய மாட்டான் அல்லவா? அவன் எக்கதியை அடைகின்றான்? இரண்டும் கெட்டுப் பற்றுக்கோடு (ஆசிரயம்) இல்லாதவனாய் கர்மஸித்தி, ஞானஸித்தி இரண்டும் பெறாமல் சிதறிய மேகம்போல் நாசமடைய மாட்டானோ? கண்ணா! இந்த என் சந்தேகத்தைத் தவிர்க்க நீரே அருகதை யுடையவர் உம்மைத்தவிர வேறொருவரில்லை' என்று அர்ஜுனன் கண்ணனைக் கேட்டான்.

யோகத்தை ஆரம்பித்தும் போதிய முயற்சியின்மையால் அதை இடையே நழுவ விட்டவனுக்கு 'யோகப்ரஷ்டன்' என்று பெயர். யோகத்தைத் தொடங்கி போதிய முயற்சி யிருந்தும் ஆயுள் காலமின்மையால் ஸித்தியடையாமல், மரணமடைந்தவனும் யோகப்ரஷ்டனாகிறான். 'இவ்வதிகாரியின் கதி என்னவாகும்? என்பதே அர்ஜுனனின் கேள்வி. கண்ணன் இதற்கு அடுத்துவரும் சுலோகங்களில் சமாதானம் சொல்லுகிறார்.

ஆயன் அவனுக் கறிய உரை செய்தான்
மேயஉல கத்தினும் மேலிடத்தும்-மாய்வவனுக்
கில்லாதான் அன்றி இவன்தான் விசயனே
பொல்லா நெறியிற் புகான்.

(இ-ள்) ஆயன்-கோபாலன், அவனுக்கு-அர்ஜுனனுக்கு அறிய-(நன்கு) தெரியும்படியாக விசயனே! -அர்ஜுனா! மேய உலகத்தினும்-பொருந்திய இவ்வுலகத்திலும்-(இகத்திலும்), மேல்இடத்தும்-பரலோகத்திலும், அவனுக்கு-யோகப்ரஷ்டன் தனக்கு, மாய்வு இல்லாதான்-கேடு இல்லாதவனாகிறான், அன்றி....அல்லாமலும், இவன்தான்-(யோகத்தை இடையே நழுவ விட்ட) இவன், பொல்லா நெறியில் புகான்-தீய மார்க்கத்தில் பிரவேசிப்பதில்லை(என்று) உரை செய்தான்-எடுத்துக் கூறினான்.

பார்[2]த் நைவேக நாமுத்ர விநாசஸ்தஸ்ய வி[3]த்யதே
நஹி கல்யாணக்ருத் கச்சித் [3]துர் [3]கதிம் தா[3]த [2]கச்சதி.

(இ-ள்) பார்த்த-அர்ஜுனா! தஸ்ய (யோகப்ரஷ்டனுக்கு) அவனுக்கு இஹ-இந்த லோகத்திலும், விநாச:- கேடு, நைவ வித்யதே-உண்டாகிறதே இல்லை, ஆமுத்ர-பரலோகத்திலும், நைவ இல்லவே இல்லை தாத-குழந்தாய், கல்யாண க்ருத்-சுலபமானதை (யோகத்தை)ச் செய்து (இடையே நழுவவிட்ட) க:சித்-எவனும், துர்கதிம்-கேட்டை, நஹி கச்சதி? -அடையமாட்டானன்றோ?

இகத்தில் கேடுறுவது, என்பதற்கு விவேகம் அற்ற தாழ்ந்த பிராணிகளாகப் பிறத்தல் என்றும், பரத்தில் கேடு என்பதற்கு நரகத்தில் அழுந்துவது என்றும் ராதவேந்திரர் உரை கொண்டார். கல்யாணக்ருத் (சுபத்தைச் செய்து) என்ற தொடருக்கு தியானத்தையோ, வேறு சிரேஷ்டமான கடமைகளை பரம விச்வாஸத்துடன் செய்து இடையே நழுவவிட்டு என்று பொருள் கொண்டார்.

'யோகப்ரஷ்டனுக்கு எப்பொழுதும் கேடுவராது என்றால் வேறு என்ன நேருகிறது' என்பது அடுத்த படியாகச் சொல்லப்படுகிறது

புண்ணியர்கள் எய்துபெரும் போகத் தினிதமர்ந்தே
நண்ணியதில் பல்லூழி நாளிருந்து-திண்ணியசீர்
செல்வநலம் தூயார் சிறந்தமனை யிற்பிறக்கும்
நல்வினையோ கம்சிதைந்தான் நன்கு

(இ-ள்) நல்வினை யோகம்-சத் கருமமாகிற யோகத்தினின்றும், நன்கு சிதைந்தான்-(ஆரம்பித்து) முற்றிலும் நழுவிய யோகப்ரஷ்டன், புண்ணியர்கள் எய்து பெரும்பாகத்து-புண்ணியம் செய்தவர்கள் அடையும் பெரிய அனுபவத்தில் இனிது அமர்ந்து-நன்றாகப் பொருந்தி அதில் நண்ணி-அதற்குரிய உலகத்தைச்சேர்ந்து, பல் ஊழி நாள் இருந்து-அங்கு நீண்டகாலம் தங்கியிருந்தபின், திண்ணியசீர் செல்வநலம்-உறுதியான மேலான செல்வநலத்தோடு, தூயார் சிறந்தமனையில்-பரிசுத்தம் மிகுந்து (அதனால்) மேன்மைபெற்ற குலத்தில், பிறக்கும்-பிறக்கிறான்.

ப்ராப்ய புண்ய க்ருதாம் லோகாத் உஷித்வா சாச்வதீஸ் ஸமா:
சுசீநாம் ஸ்ரீமதாம் கே[3]ஹே யோக[3]ப்[4]ரஷ்டோபி[4]ஜாயதே

(இ-ள்) யோகப்ரஷ்ட:-யோகத்திலிருந்து நழுவியவன், புண்ய க்ருதாம்-புண்ணியவான்களின் லோகாந்-உலகங்களை ப்ராப்ய-அடைந்து சாச்வதீ:-சாசுவதமான ஸமா:-(பல) ஆண்டுகள், உஷித்வா-(அங்கு) வசித்து சுசீநாம்-பரிசுத்தர்களான (ஆசார சீலர்களான) ஸ்ரீ மதாம்-செல்வந்தர்களுடைய, கேஹே-கிருஹத்தில், அபிஜாயதே-பிறக்கிறான்.

விச்வாஸத்தோடு ஒருவனால் ஆரம்பிக்கப்பட்ட யோகம் நழுவிப்போனாலும், யோகப்ரஷ்டனுக்கு புண்ணிய ஸாதனத்தால் கிட்டும் போகலோகம் கிடைக்கிறது. அங்கு நீண்ட காலவாஸம் கிடைப்பதோடு இகலோகத்தில் செல்வமும், ஆசாரமும் நிறைந்த உத்தம குலத்தில் பிறப்பும் கிடைக்கிறது. யோகம் இடையே நழுவினாலும், வேறு புண்ணிய கர்மாக்களைச் செய்தவர்களுக்குக் கிடைக்கும் இகபர நன்மைகள் யோகப்ரஷ்டனுக்குத் தடையின்றி உண்டாகின்றன என்பது இதனால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தொடங்கிய யோகம் எவ்வாறாகும்? அதில் மறுபடிப்பிரவேசம் ஏற்படுமா? என்று இயல்பாக எழும் வினாக்களுக்குக் கண்ணன் அடுத்தபடியாக விடையளிக்கிறார்.

மற்றதுவே அன்றி வளர்மதிசேர் யோகியர்கள்
உற்ற குலத்தில் உதயமாம்-முற்றுலகில்
இவ்வாறுசேரு மிதிற்பிறவி தான் மன்னா
எவ்வாறு தானரிதே இங்கு
ஆங்கேதன் முன்பிறவி யானயோ கத்துணர்வைப்
பாங்கேலும் புத்தியினில் பற்றியே-ஈங்கமர்ந்த
பின்னு மதில்முயற்சி பெற்றியன்று பேறதனின்
மன்னுமவ னாகுமே மற்று.

(இ-ள்) அதுவே அன்றி-அவ்வாறல்லாமல் வளர்மதிசேர் யோகியவர்கள் உற்றகுலத்தில்-விருத்தியாகும் ஞானமுடைய யோகிவயர்கள் பொருந்திய வம்சத்தில், உதயமாம்-(யோகப்ரஷ்டன்) பிறப்பான், மன்னா-அரசனாகிய அர்ஜுனனே! முற்றுஉலகில்-உலகம் முழுவதிலும், இவ்வாறு சேரும் இதில் பிறவிதான்-இவ்விதம் ஞான ஒழுக்கம் நிறைந்த யோகியர் பரம்பரையில்-பிறவி உண்டாவது இங்கு-இவ்வுலகில் எவ்வாறுதான் அரிது-எந்த விதத்திலும் (பிறருக்கு) மிகவும் துர்லபமாகும்.

ஆங்கே-யோகரிடைத் தோன்றிய அப்பிறப்பில், முன் பிறவியான யோகத்து உணர்வை-பூர்வ தேக வாசனையால் தனக்குண்டான அவ்வுணர்வை புத்தியினில்பற்றி-புத்தியைக் கொண்டு கிரகித்து, ஈங்கு அமர்த்த பின்னும்-இவ்வுலகில் (மறுபடிப்) பிறந்த பிறகும் கூட, அதில் முயற்சிபெற்று-அந்த யோகத்தில ஊக்கம் அடைந்து இயன்று-உழைத்து, பேறு அதனின் மன்னும் அவனாகும்-பலனை நிலையாகப் பெறுபவனாகிறான்.

அத2வா யோகி3நா மேவ குலே ப4வதி தீ4மதாம்
ஏதத்3தி4 து3ர்லப4தாம் லோகே ஜந்ம யதீ3த்3ருசம்
தத்ர தம பு3த்3தி4 ஸம்யோக3ம் லப4தே பௌர்வதே3ஹிகம்
யததே ச ததோ பூ4ய: ஸம்ஸித்3தௌ4 குருநந்தன

(இ-ள்) அதவா-அல்லது யோகி நாம்-யோகிகளான, தீம் தாம்-புத்திமான்களின், குலே ஏவ-வம்சத்தில்தானே, பவதி-(யோகப்ரஷ்டன்) பிறக்கிறான். சத்ருசம்-இப்படிப்பட்ட யத் ஜந்ம-யாதொரு பிறப்புண்டோ, ஏதத்ஹி-இதுதான். லோகே-உலகில், துர்லபதரம்-(உயிர்களுக்கு) மிகவும் அபூர்வமானது.

குருநந்தன–குருவமிசச் சிரேஷ்டனே! தத்ர–(யோகியர் குலத்தில் தோன்றிய) அப்பிறப்பில், பௌாவதைஹிகம்–முன்தேக வாசனையாலுண்டான, தம் புத்தி ஸம்யோகம்–அந்தப் புத்தியோகத்தை லபதே–அடைகிறான், தக அதனால், பூய:–மறுபடியும், (அதிகமாய்), யததே–முயற்சி செய்கிறான்.

'யோக முயற்சியில் நழுவினால், அம் முயற்சி வரப்போகும் பிறவிகளிலாயினும் வெற்றியடைந்தே தீரும். முன் எடுத்துக்கொண்ட காரியத்தில் பிரவேசம் தேகவாசனையால் தானே ஏற்படும் என்பது இச்சுலோகங்களில் தெளிவுபடுத்தப்பட்டது. இக்கருத்து

ஒருமைக் கற்றான் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

என்ற குறளில் திருவள்ளுவரால் நன்கு சுட்டிக் காட்டப்பட்டது. இப்பகுதிக்குத் திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் என்பார் கீதார்த்ததை ஒட்டியே விளக்கவுரை எழுதியிருப்பது அறிவுடையோர் கவனத்திற்குரியது.

கௌரவர்களை எதிர்த்துப் போர் புரியவந்த அர்ஜுனனுக்கு ஆசாரியர்களையும் உறவினர்களையும் எதிரியாகப் பார்த்தபோது சோக மோஹம் உண்டாயின. அதனால் போரைக் கைவிடப் பார்த்தானே யொழியக், கண்ணனிடம் தத்துவ ஞானமோ, யோகமோ உபதேசம் பெற விரும்பவில்லை. விரும்பியதாக அர்ஜுனன் வரலாற்றிலிருந்து எந்தவித ஆதாரமும் கிடைக்கவுமில்லை. இருந்தபோதிலும், தருமருக்கோ சகாதேவனுக்கோ கிட்டாத உபதேசம் யோகங்களைப் பற்றிப் பகவான் மூலமாகக் கிடைத்தது. அதனால் அர்ஜுனன் யோகப்ரஷ்டன் என்றே ஊகிக்கவேண்டும். முந்தின பிறப்புக்களில் செய்த முயற்சியின் பலனோ தானாக வந்தது என்று வித்வான்கள் சமாதானம் சொல்வதுண்டு.

'உபநிஷத்துக்களில் 1 சுப இச்சை 2 விசாரணை 3 தநுமாநஸீ 4 ஸத்வாபத்தி 5 அஸம் ஸக்தி 6 அபாவனை 7 துரீயம் என்ற பிரிவுகளுடன் சொல்லப்படும் ஞான பூமியில் ஏதாது மூன்றை அர்ஜுனன் முந்திய பிறப்புகளில் கடந்திருக்கவேண்டும் என்று பண்டிதர்கள் காரணங்காட்டி வாதிப்பதும் சர்வ சாதாரணம்.

70. தியானத்திற்கு எது சிறந்தது?

'யோகத்தை ஆரம்பித்து, ஸித்தி அடையாமல் இடையே நழுவவிட்ட யோகப்ரஷ்டன் இகத்திலும், பரத்திலும் கேட்டை அடைவதில்லை. புண்ணியம் செய்தவர்களின் உலகத்தில் நெடுங்காலம் சுகமாயிருந்து பின் சதா சாரமுள்ள யோகியர் குலத்தில் பிறக்கிறான். அத்தகைய பிறவி இகத்தில் உண்டாவது பிறர்க்கு மிகவும் அரிதாகும். அப்பிறப்பில் பூர்வதேக வாசனையால் அவன் யோக சம்பந்தத்தைப் பெறுகின்றான். மீண்டும் முயல்கின்றான் என்று கண்ணன் முன்னே சொன்னாரல்லவா?

அதைக் கேட்டபோது கடந்த பிறப்புக்களைப் பற்றியோ, அவற்றில் ஆரம்பித்து இடையே விட்ட காரியங்களைப் பற்றியோ, கொஞ்சமும் ஞாபகமில்லாத உயிர்களுக்கு முந்திய பிறப்பில் இடையே விட்ட செயலில் எப்படிப் பிரவேசம் மறுபடி உண்டாகும்? என்ற சந்தேகம் அர்ஜுனனுக்கு உண்டாயிற்று. அதை அறிந்துகொண்ட கண்ணன் பிரவேசம் உண்டாகும் விதத்தை ஒரு சுலோகத்தால் கூடமாக (உட்பொருளாக) உணர்த்துகிறார்.

முன்னியலும்யோக முயற்சி வசமறவே
பின்னிவனைத் தன்வசமாம் பேறளிக்கும்-மன்னுநசை
யோகத்திலுற்றான் உரைசேர் பிரமமாம்
ஆகத்து முதியல்வான் ஆம்

(இ-ள்) முன் இயலும் யோக முயற்சி—முன்பிறப்பில் பழகின யோக முயற்சியானது வசம் அறவே—(விஷயங்களுக்குப் பராதீனாய்) மனம் தன்வசமின்றி இருந்தபோதிலும் இவனைப் பின்—இந்த யோக ப்ரஷ்டனை, மறுபடியும் தன்வசமாம் பேறு அளிக்கும்—(விஷயங்களின்றும் இழத்துத்) தன் வசமாகும்படியான பலனைக் கொடுக்கும், மன்னு நசை யோகத்தில் உற்றான்—அறிய முயலவேண்டும் என்னும் ஆசையையாயினும் யோகத்தை திடமாக வைத்தவன், உரைசேர் பிரமமாம் ஆகத்து—சப்தப்பிரும்மாகிற வேதோக்த கருமபலனை, மீது இயல்வான் ஆம்—(அதிக்ரமித்தவன்) கடந்தவன் ஆகிறான்.

4
பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவசோபிஸ:
3 3 3 3
ஜிஞ்ஞாஸு ரபி யோகஸ்ய சப்தப்ரஹ்மாதி வர்ததே.

(இ—ள்) பூர்வ அப்யாஸேந—முன்பு பழக்கமான தேந ஏவ—அந்த யோகப் பயிற்சியாலேயே ஸ:—அந்த யோகப்ரஷ்டன். அவச:—அபி—(மனச்) சுவாதீனமில்லாதவனாயினும் ஹ்ரியதே—(விஷயங்களினின்றும் யோகத்திற்கு) இழுத்துச் செல்லப்படுகிறான், யோகஸ்ய—யோகத்தை, ஜிஞ்ஞாஸு: அபி—அறிய முயன்றவனும், சப்தப்ரஹ்ம—வேதோக்த கருமபலனை அதிவா(த்) கதே—கடக்கிறான்.

சுவர்க்க போகங்களை அனுபவித்துப் பூலோகத்தில் யோகியர் வம்சத்தில் பிறந்த யோகப்ரஷ்டன் அப்பிறப்பில் தன் முயற்சியால் யோகத்தில் மற்றவனாய் ஐம்புலவிஷயங்களில் இழுக்கப்பட்டு மனதிற்கு அடிமையாக உழன்று கொண்டுமிருக்கலாம். அவ்வாறிருந்தாலும் பூர்வத்தில் இருந்த அப்பியாசத்தால் வாழ்க்கையில் நேரும் ஏதாவது ஒரு சம்பவத்தை வியாஜமாகக் கொண்டு அவன் மறுபடியும் யோகத்திலே இழுக்கப்படுகிறான். அவ்வாறு யோகப்ரஷ்டன் இழுக்கப்படுவது தெய்வாதீனமாக நேருகிறது எனலாம்.

யோகத்தில் பிரியமோ, முயற்சியோ சிறிதுமில்லாதிருந்த அர்ஜுனனுக்குத் திடீரென யோகத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பிரியம் ஏற்படக் காரணமாயிருந்த சம்பவம் இவ்வுண்மையை உணர்த்தும்.

யுத்தம் செய்ய வந்த அர்ஜுனன் தன் தேரை இருபடைகளுக்கும் நடுவில் நிறுத்தும்படிச் சாரதியாயிருந்த கண்ணனிடம் கூறினான். சொன்னபடிக் கண்ணன் தேரை நடுவில் நிறுத்திவிட்டுச் சும்மாயிருந்து விடவில்லை. 'பார்த்தா! பச்சைதாந் ஸமவேதாந் குருந்தி ('பல் குருக்கள் ஈட்டம் பார்') என்று வரும் பகுதியால் கண்ணன் அத்தருணத்தில் அர்ஜுனனை ஒரு காரணம் பற்றியே பார்க்கத் தூண்டியதாகத் தெரிகிறது கண்ணன் சொற்படிச் சுற்றத்தாரையும் எதிரியாக வந்த ஆசாரியர்களையும் உற்றுக் கவனித்த அர்ஜுனன் உள்ளத்தில் கருணை பிறந்தது. அக்கருணையே கண்ணன் வாயிலாகப் பல யோக தத்துவங்களைக் கேட்கக் காரணமாயிற்று. அறிவிலும், அநுபவத்திலும் அர்ஜுனனைப்பார்க்கிலும் உயர்ந்தவர்களாகத் தோன்றின. பிறருக்குக் கிடையாத யோக உபதேசம் அர்ஜுனனுக்குக் கிட்டியதற்கு பூர்வ அப்பியாஸமே காரணம் என்பது இதனால் நன்கு வெளியாகிறது. இவ்வாறு யோகாப்பியாசம் செய்து அது கைகூடாமல் நழுவியவர் அர்ஜுனனைப் போல் தெய்வாதீனமாக மறுபடி யோகத்திற்கு இழுக்கப்டுவர் என்பது இப்பகுதியில் வெளிப்படை.

வேதோக்த கரும பலத்தை அதிக்ரமிக்கிறான்(கடக்கிறான்) எனபதற்கு 'வேதத்தில் கூறிய காமிய கருமங்களின் பலனைக் காட்டிலும் அதிகப் பலனை அடைகிறான்' என்று சங்கரர், ஸ்ரீதரர் முதலியோர் உரை செய்துள்ளனர்.

யோகம் இன்னதென அறிய விரும்புகின்றவனே சுவர்க்காதிபலன்களுக்கு மேலான பலனைப் பெறுகின்றான் என்றால் யோகப்ரஷ்டன் முக்தியைப் பெறுவான் என்பது சொல்லாமலே விளங்கும் என்பதே சுலோகத்தின் பிற்பகுதியின் பொருள். யோகத்தில் உண்டாகும் வெறும் ஆசையே முக்தியில் சேர்க்கும் என்று கொண்டால் யோகத்தைப் பயில்வது அனாவசியம் என்று தோன்றுமல்லவா? அதனால் கண்ணன் அதிலிருந்து மாத்திரம் முக்திவந்துவிடாது. பல பிறவிகளில் யோகத்தைப் பயிலவேண்டும் என்று மேலும் சொல்கிறார்.

மிக்க முயற்றியுடன் மேலியல்வான் பல்பிறப்பில்
ஒக்க வருநல் லுயர்வினையில்-தக்கமர்ந்து
சாரும் துயர் அகன்று தானியன்றா னாய்ப்பின்னும்
சேரும் பரகதியைச் சென்று

(இ-ள்) மிக்க முயற்றியுடன் மேல் இயல்வான்-மிகுந்த முயற்சியோடு மேலும் யோகாப்பியாசம் செய்யும் யோகி, பல்பிறப்பில்-பல பிறவிகளில் ஒக்கவரு நல் உயர்வினையில்-ஒரேவிதமாகச் செய்யப்படும் மிக மேலான தியான யோகத்தில். தக்கமர்ந்து-நன்குபொருந்தி சாரும் துயர் அகன்று-அண்டுகின்ற பாவங்களினின்று நீங்கப்பெற்றவனாய், பின்னும் தான் இயன்றனாய்-மேலும் யோகத்தில பொருந்தி (சித்தியடைந்தவனாய்), பரகதியைச்சென்று சேரும்-உத்தமகதியை (முக்தியை)ப் போய்ப் பெறுவான்.

ப்ர[3]யத்நா த்யதமா நஸ்து யோகீ[3] ஸம்சுத்த[3 4] கில் பி[3]ஷ:
அநேகஜந்ம ஸம்ஸித்த[3 4] ஸ்ததோ யாதீ பராங் கதீம்[3]

(இ-ள்) தத:- பிறகு, ப்ரயத்நாத்-பெரு முயற்சியோடு, யதமாந:யோகீது- அப்பியாஸம் செய்கின்ற யோகியானவன், அநேக ஜந்ம-பல பிறவிகளில் ஸம்ஸித்த:-ஸித்தியடைந்து, ஸம்சுத்த கில்பிஷ:-பாபம் நீங்கப் பெற்றவனாய், தத:-(யோகத்தில்) அதில் நின்றும், பராம்கதிம்-ப்ரும்ம சாயுஜ்யத்தை-அடைகிறான்

யோகம் இன்னதென்று அறிய வேண்டுமென்ற ஆசை அந்த அளவிலே நிற்பதில்லை. ஆசை யோகத்தில் அறிவைத் தருகிறது.

அறிவால் யோகத்தில் பெரு முயற்சியும், விடாத பயிற்சியும், பல பிறப்புக்களில் உண்டாகின்றன. அப்பயிற்சியால் ஒருவன் செய்த பாவங்கள் நீங்கப்பெற்று ஏதாவது ஒரு பிறப்பில் தவறாமல் ஸித்தி ஏற்பட்டு முடிவாகப் பரகதி(முக்தி) உண்டாகிறது என்பதே இச்சுலோகத்தின் கருத்து.

யோகத்தில் உண்டாகும் ஆசைக்கே இவ்வாறு மேலான பலனைத் தரும் ஆற்றல் இருக்குமானால் அதைப் பயின்று ஸித்திபெறும் யோகியின் பெருமை சாமானியமாகுமா? அதை அடுத்த சுலோகத்தில் தெரிவிக்கிறார்.

தவம் புரிந்தார் தன்மை உணர்ந்தார் கருமத்
துவந்தியன்றார் தங்களிலும் யோகி-யவன்சிறந்து
மிக்குணர்ந்தா னென்றுணரப் பட்டான் விசயாநீ
தக்குயர்ந்த யோகமே சார்.

(இ-ள்) தவம் புரிந்தார்-முனிவர், தன்மை உணர்ந்தார்-சாஸ்திரத்தின் இயல்பை உணர்ந்த ஞானிகள், கருமத்து உவந்த இயன்றார்-கருமங்களைப் பிரியத்தோடு செய்கின்றவர்கள் தங்களிலும்-இவர்களைப் பார்க்கிலும் யோகி அவன்-யோகியானவன் சிறந்து மிக்கு உணர்ந்தான் என்று உணரப்பட்டான்-மேலானவனாய் மிகுதியாக அறிந்தவன் எனக் கருதப்படுகிறான், விசயா-அர்ஜுனா! நீ தக்குயர்ந்தயோகமே சார்-(ஆதலால்) நீ நன்கு மேம்பட்ட யோகிய ஆகு

தபஸ்விப்4யோ4தி4கோ யோகீ ஜ்ஞாநிப்3யோபி மதோ3தி4க:
கர்மிப்4யச்4சாதி4கோ யோகீ3 தஸ்மாத்3யோகீ3 ப4வார்ஜுந.

(இ-ள்) யோகீ-யோகியானவன், தபஸ்விப்ய:-தவசிகளைக் காட்டிலும் அதிக:-சிறந்தவன் ஜ்ஞாநிப்ய:அபி-ஞானிகளையும் காட்டிலும், அதிக:மத:-சிறந்தவனாக எண்ணப்படுவான் காமிப்ய:-கருமஞ்செய்பவரையும் விட, யோகீ அதிக:-யோகீ மேலானவன்,, தஸ்மாத்-ஆகையால் அர்ஜுன-, யோகுபவ-நீ யோகியாவாயாக.

தியானம் பயிலும் யோகி விவரங்களை மேற்கொண்டிருக்கும் தபஸியையும் வேதோக்தமான கருமங்களைச் செய்பவரையும் சாஸ்திரம் பயின்ற ஞானிகளையும்விடப் பன்மடங்கு சிறந்தவன் என்றாலும் தியானத்திற்குத் தேர்ந்துகொள்ளும் பொருள்களின் (விஷயங்களின்) வேற்றுமையால் யோகியர்களுக்குள்ளும் தார தம்மியமுண்டு என்பதை முடிவாகக் கூறுகிறார்.

முன்உரைத்த யோகிகண் முற்றுமென் பால் மனஞ்சேர்
தன்னுரைப்பான் மேல்விரும்பித் தானென்னை-மன்னுநலம்
பெற்றே பணிந்தான் பிறங்கியுயர் யோகிஎன
வுற்றேநான் கொள்வான் உகந்து.

(இ-ள்) முன் உரைத்த-முன்னே சொல்லப்பட்ட யோகிகள் முற்றும்-யோகியர் எல்லாருக்குள்ளும், என்பால்-என்னிடம் மனம் சேர்தல் உரைப்பால், மேல் விரும்பித் தான்-மனதை நிறுத்தி விச்வாஸத்தால் மேலான பக்தி கொண்டே, என்னை மன்னுநலம் பெற்றே-என்னிடமே நிலைத்திருப்பதாகிய நன்மையை அடைந்து பணிந்தான்-பஜிக்கின்றவனை பிறங்கி உயர் யோகி என-புகழ்பெற்ற மேலான யோகி என்று, நான் உற்றே உகந்து கொள்வான் நான் சம்மதித்து மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

யோகி[3]நா மபி ஸர்வேஷாம் மத்[3]க[3]தே நாந்தராத் மநா
ச்ரத்[3]தா[4]வாந் ப[4]ஜதேயோமாம் ஸமே யுக்த தமோ மத:

(இ-ள்) யோகிநாம்-யோகிகள், ஸர்வேஷாம் அபி எல்லாருக்குள்ளும் மத்கதேநஅந்தராத்மாநா-என்னையடைந்த சிந்தையினால் ய: ச்ர;ததாவாந்-எவன் சிரத்தையோடு, மாம்பஜதே என்னைப் பஜிக்கிறானோ ஸ:மே அவன் எனக்கு, யுக்த தம:-மிகவும் (யுக்தனாக) சிரேஷ்டனாக, மத:-எண்ணப்படுகிறான்.

இதற்குச் சங்கரார் கூறும் உரை:- சில யோகிகள் தியானத்திற்கு விஷயமாக உருத்திரன் இந்திரன், சூரியன், சுப்பிரமணியன், கணபதி முதலிய தெய்வங்களிலொன்றை குறித்துக் கொள்கின்றனர். அவ்வாறின்றிச் சிலயோகி தியானத்திற்கு விஷயமாகப் பரமாத்வை (வாசு தேவனை)க் கொள்கின்றனர். அவர்களில் பரமாத்மாவைத் தியானிக்கின்ற யோகியே சிரேஷ்டன்.

தியானத்திற்கு விஷயமாகப் பலவிருக்கலாம். அவை எல்லாவற்றிலும் பரமாத்மா தியான விஷயமாயிருப்தே மேல் ஆகையால் பரமாத்மாவையே தியானம் செய்யும் யோகி, பிறயோகியர்களில் சிறந்தவன் என்று கூறி 'ஆத்மஸம்யம யோகம்' என்னும் பெயருடைய இவ்வாறாம் அத்தியாத்தைப் பூர்த்திசெய்தார்.

71. ஸாரமும் பலனும்

மனத்தைச் சுவாதீனப்படுத்துவதை அல்லது பகவந் நிஷ்டையில் நிறுத்துவதை ஆறாம் அத்தியாயம் விவரித்துக் கூறியதால் ஆத்ம ஸம்யமயோகம் எனப் பெயர்பெற்றது. அதைக் கேட்டுக் கொண்டிருந்த அர்ஜுனன் விடுத்த வினாக்களுக்கும் அவனுக்கு அந்நேரத்தில் தோன்றிக் கொண்டிருந்த சந்தேகங்களுக்கும் ஏற்பப் பல விவகாரங்களை இவ்வத்தியாயம் தொகுத்துச் சொல்லுகிறது. அதன் ஸாரம் வருமாறு:–

பயனைக் கருதாதவனாய்ச் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்பவன் ஸந்யாசியும் யோகியும் ஆவான். சங்கல்பத்தை விடாமல் அக்னியை மாத்திரம் விட்டவன் ஸந்நியாசி அல்லன் கிரியை விட்டவனும் அவ்வாறே.

ஸந்நியாசம் என்று சொல்லப்படுகிறதோ அதுவே யோகமுமாகும். எல்லாவித விருப்பங்களையும் விடாமல் ஸந்நியாஸி ஆக முடியாததுபோல, கருமயோகியாகவும் முடியாது.

ஞானத்தை அடைய விரும்புகின்றவனுக்குக் கருமயோகம் காரணமாக (ஸாதனமாக)ச் சொல்லப்படுகின்றது. ஞானயோகத்தில் ஸித்தி பெற்ற யோகாரூடனுக்கு நிலைத்த தியானத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. விஷயங்களிலும் கர்மாக்களிலும் பற்றில்லாதவனாய் ஸங்கல்பமில்லாதிருப்பவன் யோகாரூடன் ஆவான்.

ஒருவனுக்கு மனமேபந்து அல்லது விரோதி ஆகையால் அதைக் கொண்டு ஒன்று முன்னேற்றமடைவது; அல்லது கெடுவது தவிர வேறு வழியில்லை மனத்தை ஜயித்தவனுக்கு அது பந்துவாகிறது ஜயிக்காதவனுக்கு மனம் பகையாகி அவனைக்கேட்டிலே செலுத்துகிறது.

மனத்தை வென்றவன் *சீதோஷ்ண* சுக துக்கங்களிலும், மான அவமானங்களிலும் சம நிலையுடையவனாய் தன் ஆத்மாவில் நிஷ்டையுடையவனாகவேயிருக்கிறான். ஞான விக்ஞானங்களை அறிந்து திருப்தியான மனத்தோடு மனோவிகாரமின்றிப் புலன்களை வென்று மண் பொன் கல் என்பனவற்றைச் சமமாய்ப் பாவிப்பவனே யோகாரூடன் முக்தி பெறத்தக்க இவ்வித யோக்கியர்களில் நண்பர்

பகைவர் உதாஸீனர் மத்தியஸ்தர்; பந்து ஸாது பாபி ஆகிய எல்லாரிடமும் புத்தியை (பாவனையை) யுடையவர் சிறந்தவராவர்.

யோகி தனிமையாய் ஏகாந்தமான இடத்தில், சுத்தமாய் உயர்வு தாழ்வில்லாதிருக்கிற ஒரு தலத்தில், தர்ப்பை, அதன்மீது மான்தோல், அதன் மீது வஸ்த்ரம் ஆக ஆசனம் அமைத்து அதில் அமர்ந்து சித்த விருத்திகளை அடக்கி மனதை ஒருமைப்படுத்தி (ஏகாக்ரப்படுத்தி) மனத் தூய்மைக்காக (சித்த சுத்திக்காக) யோகத்தைச் செய்யவேண்டும். யோகத்திற்காக உட்காரும் காலத்தில் உடல் தலை கழுத்து இவற்றை வளையாமலும் அக்கம் பக்கம் பாராமல் தனது மூக்கு நுனியை பார்த்துக் கொண்டும் மனத்தை விஷயங்களில் செலுத்தாமலும் பிரும்ம சரி விரதத்தோடு அடக்கிப் பகவானையே தியானம் செய்யவேண்டும். இங்ஙனம் எப்பொழுதும் தியான யோகம் செய்கின்றவர் பகவானையடைந்து சாந்தியுடன் கூடியபேரின்பத்தைப் பெறுவர்.

மித மிஞ்சி உண்பவரும், உறங்குபவரும் அடியோடு உண்ணாதவரும் உறங்காதவரும் யோகத்திற்கு ஏற்வர்களல்லார். மிதமாக உணவு,உறக்கம்,நடையுடை கிரியைகள் உள்ளவனே யோகத்திற்குத்தக்கவன்.

காற்றில்லாத விடத்திலுள்ள தீபம்போல் யோகியின் மனம் அசைவற்றிருக்கும். யோகத்தால் அடக்கப்பட்ட மனம் ஒடுங்கி ஆத்மாவையே கண்டு மகிழவேண்டும். பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாத அவ்வானந்தம் வேறு எதுவுமில்லை. அதைப் பெற்ற யோகியை எவ்வளவு துக்கம் வந்தபோதிலும் அசைக்க முடியாது.

ஆதலின் அப்பேரின்பத்தைப் பெறுவதற்குச் சாதனமான யோகமே பெறத்தக்கது. அதன் பொருட்டு ஸங்கற்பத்தால் உண்டாகும் எல்லா ஆசைகளையும் விட்டு மனத்தால் இந்திரியங்களை அடக்க வேண்டும். தைரியத்தோடு மனதை விஷயங்களினின்றும் மீட்டு மெள்ள மெள்ளப் புத்தியால் பரமாத்மாவிடத்தில் நிறுத்தி வேறு எதையும் சிந்திக்காமலிருக்க வேண்டும்

சஞ்சலத்தன்மை யுடையதாகையால் மனம் எழுந்து ஓடத்தான் செய்யும். அதை மெதுவாகத் திருப்பிப் பரமாத்மாவிடம் நிற்கச் செய்ய வேண்டும். அவ்விதம் மனம் சாந்தமாகிப் பாபமகன்ற யோகி பிரும்ம தரிசனமாகிய சிறந்த இன்பத்தைப் பெறுகிறான்.

தியான யோகத்தில் மனத்தை நிறுத்திய யோகி தன்னை எல்லா உயிர்களிலும் தன்னில் எல்லா உயிர்களையும் பார்க்கிறான்.

எல்லாவற்றிலும் பரமாத்வையும் பரமாத்மாவிடம் எல்லாவற்றையும் காண்கிறவனுக்குப் பகவான் எப்பொழுதும் மறைவதில்லை. அவனும் பகவானுக்கு மறைவதில்லை. எங்குமுள்ள பகவானை அவ்வாறு உபாஸிப்பவன் எவ்வாறிந்தபோதிலும் நித்திய முக்தனாகவேயிருக்கிறான் அன்றியும் இன்ப துன்பங்களில் தன்னைப் போலவே பிறரையும் நினைப்பவன் உத்தம யோகியாகக் கருதப்படுகிறான்.

ஸம யோகத்திற்குத் தகுதியாக, காற்றைப்போல் கட்டுக்கு அடங்காத மனத்தைச் செய்துகொள்வது அரிதுதான். அப்பியாஸத்தாலும் வைராக்கியத்தாலுமே அதை அடக்க வேண்டும். மனத்தை அடக்காமல் வேறு எந்த வழியிலும் யோகத்தை அடையமுடியாது.

யோகத்தை ஆரம்பித்து அதிலிருந்து நழுவிச் சித்தியடையாமல் போனாலும் பாதகம் ஏற்படுவதில்லை. யோகப்ரஷ்டன் இகம்பரம் இரண்டிலும் கேடடைவதில்லை. அவன் புண்ணிய லோகங்களில் பல்லாண்டுகள் இன்ப அநுபவம் பெற்று மகாமேதாவிகளான யோகியர் குலத்தில் பிறக்கிறான். முயற்சி செய்யாமலிருந்தபோதிலும் பூர்வ வாசனையானது அவனைமறுபடி யோகத்தில இழுத்துசச் செல்லும். அதனால் முற்பிறவியில்விட்ட குறையைச் பூர்த்தி செய்ய முயன்று பல பிறவிகளில் சித்தியைத் தேடி முடிவில் உத்தம கதியைப் பெறுகிறான்.

ஆதலின் எல்லா வகையிலும் யோகம் சிறந்தது. அதை மேற்கொண்ட யோகியர் சிறந்தவர். அவர்களிலும பரமாத்மாவையே தியானத்திற்கு விஷயமாகக் கொண்டவர் மேலும சிறந்தவராவர்.

இவ்வத்தியாய விவரங்களை இன்னும் சுருக்கமாக மனதில வைக்கும் வண்ணம் வேதாந்த தேசிகர் ஒரே பாடலில் வெளியிட்டிருக்கிறார். அதுவருமாறு:-

யோகமுயற்சியும் யோகிற் சமநிலை நால்வகையும்
யோகினு பாயமும் யோகுதன்னால்வரும் பேறுகளும்
யோகுதனில் தன் திறமுடையயோகுதன் முக்கியமும்
நாகணையோகி நவின்றனன் நன்முடி வீரனுக்கே.

(இ-ள்) யோகமுயற்சியும்-யோகத்திற்கு எவ்வாறு முயலவேண்டும் என்பதையும், யோகில் சமநிலை நால்வகையும்-யோகத்தால்வரும்-நாலுவகையான சமநிலைகளையும். யோகியின்

உபாயமும்–யோகத்தில (மனத்தை அடக்குவதற்குரிய) உபாயத்தையும், யோகுதன்னால் வரும் பேறுகளும்–யோகத்தால் உண்டாகும் பலன்களையும், யோகுதனில்–பலவகையான யோகங்களைவிட, தன் திறமுடையோகுதன் முக்யமும்–(பரமாத்மாவாகிய) தன்னிடத்தே மனத்தை நிறுத்தலாகிய தியான யோகத்தின் சிறப்பையும் நன்முடிவீரனுக்கு–சிறந்த கிரீடமணிந்த அர்ஜுனனுக்கு, நாகணை யோகி நவின்றனன்–சேஷசாயியாகிய கண்ணன் கூறினான்.

பலனைக் கூறும் கதை

கோதாவாரி தீரத்தில் ப்ரதிஷ்டமான நகரத்தில் ஜாநச்ருதி என்ற வேந்தன் அரசுபுரிந்து வந்தான். அவன் கணக்கற்ற யாகங்களையும், தானங்களையும் செய்து புகழ்பெற்றான். அதன் காரணமாகவே 'காதில் கேட்கப்பட்டவன்' என்ற பொருளைடைய ஜாநச்ருதி என்பது அவனுக்குக் காரணப் பெயராகவந்தது. குடிகளை மைந்தர்போலக் கருதி பஞ்சம் என்பதே ஏற்படாமல் நிர்வாகம் செய்யதனால் குடிகள் அவனைத் தந்தையாகவே மதித்தனர்.

இவ்வரசனின் உயர் குணத்திலீடுபட்ட தேவர்கள் அரசன் வேண்டாமலே அவனுக்குப் பேருதவிசெய்ய ஆசைகெண்டனர். அதற்காக அன்ன பக்ஷியின் உருவம் எடுத்து ஜாநச்ருதி உலாவிக்கொண்டிருந்த மாடிமீது அவன்தலைக்கு நேராக உயரத்தில் பறந்தனர். அப்பொழுது பின்னே சென்று கொண்டிருந்த பறவைகள் முன்னே செல்பவைகளை நோக்கி 'முன்னே தேஜோ மண்டலத்தில இடையே தார்மிக ஜாநச்ருதி நிற்பதைக் காணாமல் நீங்கள் கடந்து செல்கீறீர்களே' என்றன. அதைக் கேட்ட மற்ற பறவைகள் 'இவருக்கென்ன பயம்? ரைக்வரென்னும் பிரும்மக்ஞானியைவிட இவர் உயர்ந்தவரா என்ன? என்று பதில் இறுத்தன.

அவ்வாறு அன்னப் பறவைகள் தன்னைப் போற்றுவதையும், தூற்றுவதையும் கேட்டுவிட்டு அரசன் தன் தேரோட்டியை வரவழைத்து ரைக்வரைத் தேடி வருமாறு உத்தரவிட்டான். ஸாரதி உடனே புறப்பட்டுப் பற்பல நாடுகளைக் கடந்து கடைசியாகக் காஷ்மீரம் சென்றான்.

கல்விக் களஞ்சியமாய் நீர்வளமும் நிலவளமும் திகழ்ந்த அக் காஷ்மீரை ஆண்ட அரசன் வனத்தில் வேட்டையாடச் சென்றிருந்தபோது ஓர் ஸ்வயம்பு லிங்கத்தைப் பார்த்தான். அங்கு ஓர் ஆலயம் அமைத்து லிங்கத்தை மாணிக்கத்தால் அர்ச்சனை செய்ததால் லிங்கத்திற்கு மாணிக்கேச்வரர் என்ற பெயர் வந்தது.

வனத்தில் அவ்வாலயம் இருந்த இடத்திற்கருகே ஸாரதி, சொறி நிறைந்த தன் உடலைச் சொறிந்த கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்தான். அவரது தேஜஸ்ஸைப் பார்த்து ரைக்வராயிருக்கலாம் என ஊகித்தான். பிறகு அவருடன் சம்பாஷணை செய்து ரைக்வரே என உறுதி செய்துகொண்டு தன் அரசனிடம் போய் நடந்ததைத் தெரிவித்தான்.

தெரிந்ததும் ஜானச்ருதி எண்ணிறந்த காணிக்கைகளை எடுத்துப் போய் ரைக்ரவரிடம் வைத்து வணங்கி நின்றான். அவற்றை மதிக்காமல் அடே முட்டாள்! இவை எனக்கு எதற்கு? எடுத்துப்போ என்று ரைக்வர் சொன்னதும் அரசன் தனக்குச் சாபம் வந்துவிடுமோ என்று முதலில் பயந்தான்; பின்னர் சிறிது சிறிதாகத்தைர்யம் கொண்டு அவர் பாதத்தில் மறுபடி விழுந்து இத்தகைய காந்தி தங்களுக்கு உண்டாகக் காரணம் என்ன?என்று கேட்டான். அவர் கீதை ஆறாம் அத்தியாயத்தின் பெருமை என்று தெரிவித்து ஜீநாச்ருதியின் வேண்டுகோளின்படி அவனுக்கு ஆறாம் அத்தியாத்தை உபதேசம் செய்தார். உபதேசம் பெற்ற ஜாநச்ருதி ஆறாம் அத்தியாத்தை அடிக்கடி பாராயணம் செய்து முக்தி பெற்றார். அன்ன வடிவம்கொண்டு வந்திருந்த விண்ணவர் ரைக்வரைத் தேடும் பொருட்டு ஜாநச்ருதி பிரயத்தினம் செய்ய ஆரம்பித்தபோதே தம் கோரிக்கை முடிந்ததாக் கருதிக் தமதுலகம் சென்றனர். (பாத்ம புராணத்திலுள்ள இக்கதை சாந்தோக்ய உபநிஷத்திலும் பிரும்ம சூத்திரத்தில அப சூத்ராதி கரணத்திலும் காணப்படுகிறது.

72. அநேக ஆயிரத்தில் ஒருவர்

கீதை உபதேச ஆரம்பமாகிய இரண்டாம் அத்தியாயம் சுலோகம் 39–ல் ப்ரும்மக்ஞானத்திற்குரிய ஸாதனம் நுட்பமாகக் குறிக்கப்பட்டது. அதன்பின் ஐந்தாம் அத்தியாய முடிவுரையில், பலனில் ஆசையில்லாமல் பகவதர்ப்பணமாகச் செய்யப்படும் நிஷ்காம்ய கருமம் அல்லது கர்ம யோகமும் அதனால் ஞானமும் ஸித்திகிறதென்பதும் விவரமாகச் சொல்லப்பட்டன. ஞானத்தை எய்த நேரடியான ஸாதனமாயும் இன்றி யமையாததாயும் இருக்கின்ற தியான யோகம் ஆறாம் அத்தியாத்தில் விவரிக்கப்பட்டது. இந்த ஆறு அத்தியாயங்களையும் சேர்த்து, கீதா

சாஸ்திரத்தின் முதல் ஷட்கம் என்று உரையாசிரியர்கள் கூறியிருக்கின்றனர்.

ஏழு முதல் பன்னிரண்டு வரையுள்ள அத்தியாயங்களை இரண்டாம் ஷட்கமாகக் கொண்டிருப்பதால், மூன்று சித்தாந்த ரீதியான வியாக்கியானங்களிலும் 'விக்ஞான யோகம்' என்ற பெயருடைய ஏழாம் அத்தியாய ஆரம்பத்தில் ஒரு முகவுரை காணப்படுகிறது. அதன் ஸாரம் வருமாறு:–

அத்வைத முகவுரை:– கடந்த ஆறு அத்தியாயங்கள் முடிய ஆத்ம தத்துவத்தைச் சொல்லி, இனி வரப்போகும் ஆறு அத்தியாங்களில் உபாஸிக்க யோக்கியமான (தகுதியான) ரூபத்தைச் சொல்லப் போகிறார்.

விசிஷ்டாத்வைத முகவுரை:– கண்ணன் கடந்த ஆறு அத்தியாங்களால் பரமாத்வாகிய நாராயணனை அடைவதற்கு சாதனமாகிய உபாஸனையைச் சொல்லும்பொருட்டு ஜீவாத்மஸ்வரூப நிச்சயத்தோடு கூடிய கருமானுஷ்டானத்தைச் சொன்னார். மேல்வரும் ஆறு அத்தியாயங்களில் பரமாத்மாவின் ஸ்வரூபத்தையும் அப்பரமாத்மாவை அடைவதற்கு காரணமான உபாஸனை என்று சொல்லப்படுகின்ற பக்தியையும் சொல்லப்போகிறார்.

இந்த ஏழாம் அத்தியாத்தில் பரமாத்ம ஸ்வரூப நிச்சயத்தையும் ஜீவனுக்குப் பரமாத்ம ஸ்வரூபம் பிரகிருதியால் எவ்வாறு மறைக்கப்பட்டிருக்கிறதென்பதையும், அந்தப் பிரகிருதியை விலக்கிக் கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய சரணாகதியின் விவரத்தையும், சரணாகதி செய்கின்றவர்களுக்குள் அமைந்த பேதத்தையும், ஞானமே சிரஷ்டம் என்பதையும் சொல்லியிருக்கிறார்.

த்வைத முகவுரை:– ஆறாவது அத்தியாத்தில் சொல்லப்பட்ட ஞான ஸாதனமான தியானம், பக்தி அல்லது ஈச்வர விச்வாஸத்தைப் போஷகதாரமாக்கொண்டே பெருக வேண்டும் சிசுபாலன் விஷயத்தில் போல வெறுப்பு அல்லது விரோத பாவத்தை ஆதாரமாகக்கொண்டு வளர முடியாது. ஆகவே அடுத்துவரும் ஆறு அத்தியாயங்களில் பக்தியைப் பிறப்பிக்கக் சாதகமான பரமாத்மாவினுடைய ஸ்வரூபமும் பெருமைகளும் பேசப்படுகின்றன. இரண்டாம் அத்தியாயம் சுலோககம் 12லும், அதுபோல் முதல் ஆறு அத்தியாங்களில் பிற இடங்களிலும் அங்கங்கே பகவத்தன்மையைப்பற்றி குறிப்புகள் காணப்பட்ட போதிலும் முதல் ஷட்கத்தில் பிரதானமாகச் சொல்லப்பட்ட விஷயம்

ஸாதனமேயாகும். அவ்வாறே அடுத்துவரும் ஆறுஅத்தியாயங்களிலும் அங்கங்கே சாதன விஷயம் பிரஸ்தாபிக்கப்படலாம். ஆனபோதிலும் அவை ஆறும் ஸாத்யம் (அடையப்படுவது) எனப்படும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தையும் பெருமைகளையும் தெரிவிப்பதையே முக்கிய நோக்காக உடையவை எனத் தெளிய வேண்டும், முதல் இரண்டு ஷட்கங்கள் ஸாதனம் அதனால் அடையப்படும் ஸாத்யம்; உபாயம்; உபேயம் அல்லது காரணம் காரியம்; என்ற முறையில் வேறுபடுத்தி ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஏட்டிலும் வாய்மொழியிலும் மட்டும் வரும் கொள்கை உண்மையாயிருந்த போதிலும் அனுபவத்தினால் அல்லது தெளிவாகாது, கண்ணன் தன் சிஷ்யனை ஊக்கி உற்சாகப்படுத்தும் பொருட்டுப் பரமாத்மாவின் மகிமைகளை விவரிப்பதாக முன்கூட்டியே தெரிவிக்கிறார்.

என்னமரு நெஞ்சனாய் யோகத் தியல்வுற்றே
நின்னமரு மென்பற்றாய் நின்றநீ - முன்னினையு
முண்மயக்கற் றொன்றொழியா தென்னை உணர்வண்ணம்
திண்மையுறக் கேள் பார்த்தா தீர்ந்து.

(இ—ள்) பார்த்தா! – பார்த்தனே!, என் அமரும் நெஞ்சனாய் – என்னிடத்தில் பொருந்திய மனமுடையவனாய், யோகத்து இயல் உற்றே நின்ற நீ – யோகத்தை மேற்கொண்டு செய்கின்றவனாக நீ, நின் அமரும் என் பற்றாய் – உன் (மனத்தில்) நிலையாக என்னையே ஆதாரமாக (சரணாகதி அடைந்தவனாய்) க் கொண்டு, முன்னினையும் – (உண்மை) நினைவால் அழிந்து போகும், உள் மயக்கு அற்று – மனதில் வரும் சந்தேகம் இல்லாமல், ஒன்று ஒழியாது – ஒன்றும் தப்பாமல் என்னை திண்மைஉற உணர்வண்ணம் – என்னை நன்றாக முற்றும் தெரிந்து கொள்ளத் தக்கவழியை, தீர்ந்து கேள் – நன்றாகக் கேள்.

மய்யாஸக்தமநா: பார்த[2] யோகம்[3] யுஞ்ஜந்[3] மதாச்ரய:
அஸம்சயம்[3] ஸமக்ரம்[2] மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ச்ருணு[2]

(இ—ள்) பார்த்த – அர்ஜுனா!, மயி– என்னிடத்தில், ஆஸக்தமநா:– பற்றிய (நிலைத்த) மனமுடையவனாய், மத் ஆச்ரய:– என்னை ஆதாரமாகப் பற்றியவனாய், யோகம் யுஞ்ஜந் – யோகம் செய்து கொண்டு, மாம் – என்னை, அஸம்சயம் – சந்தேகமில்லாமல், ஸமக்ரம் – முற்றிலும், யதா ஜ்ஞாஸ்யஸி – எப்படி அறிவாயோ, தத் ச்ருணு – அதைக்கேள்.

'ஸமக்கரம்' (முழுவதும்) என்ற பதத்தை 'மாம்' (என்னை) என்னும் சொல்லோடு அந்வயித்து 'சகல விபூதி பலம், சக்தி ஐசுவரியம் முதலிய குணசம்பன்னனாயிருக்கிற என்னை' என்று சங்கரர் உரை கொண்டார்.

'மதாச்ரய;' (என் பற்றாய்) என்ற தொடருக்கு' "பகவானே என்னை எல்லாக் கிரியைகளையும் செய்விக்கிறார்; அவரே எனக்குப் புகலிடம்; அவரிடமே நான் நிலைத்திருக்கிறேன்' எனத் தெளிவது " என ராகவேந்திரர் உரை கொண்டார்.

இச்சுலோகம் முழுமைக்கும் ராமாநுஜர் பின்வருமாறு உரை தந்துள்ளார்:– 'என்னை எதிர்பார்த்தும் (நம்பியும்) என்னிடம் பிரீதி வைத்தும் என்னுடைய ஸ்வரூபம், குணம், செய்கை, வரலாறு, புகழ் முதலியவற்றில் எப்பொழுதும் மனம் லயித்தவனாயும் என்னையே பற்றுக்கோடாக கொண்டவனாயும் என் விஷயமான யோகத்தைத் தொடங்குபவனாயும் இருக்கின்ற நீ, சந்தேகமின்றிப் பூரணனாயிருக்கின்ற என்னை எவ்விதம் அறிவாயோ, அதைக்கேள்.

சொல்வோனையும், கேட்போனையும் முறையே வக்தா, ச்ரோதா என்று வடமொழியில் சொல்லுகிறார்கள். உபதேசம் நடக்கும்போது கேட்போனின் (ச்ரோதாவின்) மனோநிலை சொல்வோனையே (வக்தாவையே) பொறுத்திருக்கிறது. ஆகவே, தான் சொல்லப்போகும் விஷயத்தில் சிஷ்யன் கேட்க ஊக்கம் உண்டாவதற்காக அது எத்தகையது என்பதைக் கண்ணன் மேலும் தெரிவிக்கிறார்.

மிக்க அறிவிதைவி வேகத் துணர்வுடனே
ஒக்க உனக்கொன் றொழியாமற் - சிக் கெனவே
யான்பகர்வன் யாதறிந்தால் வேறொன் றினியறியத்
தான்படுவ திங்கில்லை சார்ந்தது.

(இ–ள்) யாது அறிந்தால் – எதைத் தெரிந்துகொண்டால் சார்ந்து – அதையொட்டி வேறு ஒன்று இனி அறியத்தான் படுவது இங்கு இல்லை – வேறு எதையும் மேலும் அறியவேண்டுவதாக இப்பிரபஞ்சத்தில் கிடையாதோ, மிக்க அறிவு இதை – மிகுந்த ஞானமாகிய இதனை, விவேகத்து உணர்வுடனே – விஞ்ஞானத்தோடு கூட, ஒக்க – முழுவதும், உனக்கு ஒன்று ஒழியாமல் – உனக்கு எதுவும் பாக்கியமில்லாமல், சிக்கெனவே – திறம்பட (நன்றாக), யான் பகர்வன் – நான் சொல்லுகிறேன்.

ஜ்ஞாநம் தேஹம் ஸவிஜ்ஞாநம் இதம் வக்ஷ்யாம்யசேஷத:[3]

யத்ஜ்ஞாத்வா நேஹ பூயோந்யத் ஜ்ஞாதவ்ய மவசிஷ்யதே[4]

(இ–ள்) யத் ஜ்ஞாத்வா – யாதொன்றை அறிந்து, இஹ – இங்கு, பூய: ஜ்ஞாதவ்யம் – மறுபடி அறிய வேண்டுவதாய், அந்யத்த ந அவசிஷ்யதே – வேறு எதுவும் மிஞ்சமாட்டாதோ, இதம் ஜ்ஞாநம் – (அந்த) இத்தகைய ஞானத்தை, அஹம் தே – நான் உனக்கு, ஸவிஜ்ஞாநம் – விஜ்ஞானத்துடனே, அசேஷத: – குறைவில்லாமல் முழுவதும், வக்ஷ்யாமி – சொல்லுகிறேன்.

'அறிவு, விவேகத் துணர்வு' என்ற தொடர்கள் மூலத்தில் ஞானம் என்றும் விக்ஞானம் என்றும் குறிக்கப்பட்டன. இத் தொடர்களுக்குக் கீதையில் வரும் இடங்களில் எல்லாம் உரையாசிரியர்கள் தங்கள் சித்தாந்தத்திற்கேற்ப வெவ்வேறான பொருள் செய்திருந்த போதிலும் திருக்குறளில் சொல்லப்படும் 'செம்பொருள் காண்பதாகிய அறிவை' அதாவது 'பாவனை தெளிதல் அல்லது நிதித்தியாசனம்' எனக்கொள்ளுவது பொருந்தும். கீதை உரையாசிரியர்களில் சிலர் 'விக்ஞானம்' என்பதற்கு 'அனுபவ ஞானம்' என்று கொண்டது இப்பொருத்தத்தை நன்கு உணர்த்தும்.

யாதொன்றை அறிந்தால் அறிய வேண்டுவது எதுவுமிராதோ, அதைச் சொல்வதாக முன்னே தெரிவித்தாரல்லவா? அதை அறிவது மிகவும் துர்லபம் (அரிது) என்பதை அடுத்தபடியாகத் தெரிவிக்கிறார்.

மானிடவர் பல்லாயிரத்தொருவன் மன்னுலகந்

தானியல்வான் ஆங்கவர்கள்தங்களினும்-மேனிகழ்ந்தே

என்னை முழுதறிவான் எங்கேனும் ஆங்கொருவன்

தன்னையறி வான்அரிது தான்

(இ–ள்) மன் உலகம் மானிடவர் பல்ஆயிரத்து ஒருவன் தான் – உலகில் பல ஆயிரக்கணக்கான மனிதர்களில் ஒருவனே, இயல்வான் – (ஞான) ஸித்தியின் பொருட்டு முயற்சி செய்கிறான், அவர்கள் தங்களினும் – அவ்வாறு முயல்வோர்கள் பலரிலும், மேல் நிகழ்ந்தே – மேலும் பயின்று, என்னைமுழுதறிவான் – என்னைப் பூரணமாய் உள்ளபடி அறிந்துகொள்ளக்கூடியவன், ஆங்கு ஒருவன் – எங்கோ ஒருவனே, தன்னைஅறிவான் அரிது தான் – தன்னையறிந்து கொள்ளக் கூடியவன் துர்லபமே.

மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சி த்யததி ஸித்தயே

யததா மபி ஸித்தாநாம் கச்சிந்மாம் வேத்தி தத்வா

(இ-ள்) மநுஷ்யாணாம் – மனிதர்களில், ஸஹஸ்ரேஷு – ஆயிரத்தில், கச்சித் – ஒருவன், ஸித்தயே – ஸித்தியின் பொருட்டு, யததி – முயற்சி செய்கிறான், யததாம் – (அவ்வாறு) முயன்று, ஸித்தாநாம் – ஸித்தி பெற்றவருக்குள்ளும், கச்சித் – ஒருவனே தத்துவ: – உள்ளபடியே, மர்ம வேத்தி – என்னையறிகின்றான்.

ஆயிரக் கணக்கான மனிதர்களில் ஞானத்தைப் பெறும் பொருட்டு எவனோ ஒருவன் தான் முயற்சி செய்கின்றான், அவ்வாறு முயற்சி செய்கின்ற ஞானியர்களுள்ளும் எவனாவது ஒருவன் தான் என்னை உண்மையாய் அறிகின்றான். தன்னறிவில் பரமாத்மா ஞானம் அடங்கியிருப்பதால், பரமாத்மாவை உள்ளபடி அறிவோன் அநேக ஆயிரத்தில் ஒருவன் என்று சொல்லும்படியாக மிகவும் துர்லபம் என்று கொள்ளத் தமிழ்ப் பாடலில் 'தன்னையறிவான் அரிது' எனப்பட்டது.

சொல்லப்போகும் பொருளில் பிரியமும் விச்வாஸமும் இல்லாதோருக்கு உபதேசிப்பது வீணாகும். பெருமையுடைய சிறந்த பொருள்களை அவர்களுக்கு உபதேசிப்பது பாவமுமாகும். ஆகையால், கண்ணன் தன்னைச் சரணடைந்து உபதேசிக்க வேண்டிய அர்ஜுனன், தன் உபதேசத்தைக் கேட்பதற்கு முன் அதை மிகப்பெருமையுடையதாக நினைத்து, அதைக் கேட்பதில் அன்பையும் விச்வாஸத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கருதினார். அதனால் 'ஞானத்தைப் பெற முயலும் ஆயிரக் கணக்கானவரில் ஒருவர்கூடத் தெரிந்து கொள்ள அரிதான பெரிய விஷயத்தை உனக்குச் சொல்லப்போகிறேன். சிரத்தையுடன் கேள்' என்றார். என்ன உபதேசம்? என்பதை அடுத்த இதழில் காண்போம்.

73. பராபிரகிருதியும் அபார பிரகிருதியும்

இனி, ஜீவன் அசித்தைப்போல் தனக்குப்பரதந்திரனாயிருப்பவன் என்று பகவான் உணர்த்தமுற்படுகிறார்.

பூமி:ஆப:அநல:வாயு:கம் மநோ புத்தி ரேவச

அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி: அஷ்டதா

(பூமி: – நிலம், ஆப: – நீர், அநல: – தீ, வாயு: – காற்று, கம்– ஆகாயம்,. (என்ற ஐம்பூதங்களும்) மந: – மனம் (முதலிய

இந்திரியங்களும்) புத்தி: – மஹான், அஹங்கார ச – அஹங்காரமும், இதி – ஆகிய, அஷ்டதா பிந்நா – எட்டு விதமாகப் பிரந்திருக்கும், இயம் ப்ரக்ருதி: – இந்த ப்ரக்ருதி, மே நவ – என்னுடைய தேயாகும் (என்று) (வித்தி – அறிவாயாக)

இங்கு பிரத்யக்ஷ ஸித்தமான பஞ்ச பூதங்களை எடுக்கிறான். இது, அவற்றின் ஐந்து தந்மாத்ரைகளுக்கும் உபலட்சணம் மேலே, பிரத்தியக்ஷ அனுமானங்களால் ஏற்படும் காரணப் பொருளைக் காட்டுகிறான். மனம் என்பது ஞான கர்மேந்திரியங்களுக்கும் உபலட்சனம். புத்தி என்பது மஹான் என்னும் தத்துவம். இவ்வாறு எட்டு வகையாகப் பிரிந்து நிற்கும் இந்த வியஷ்டி காரணம் பஞ்ச தந்மாத்ரங்களையும், பத்து ஞானகருமேந் திரியங்களையும் சேர்த்து மூலப்பிரகிருதியின் காரியமான இருபத்து மூன்று தத்துவங்களும் இங்கு உணர்த்தப்படுகிறது.

மண்ணும் புனலும் வளர்எரியும் வாயுவுடன்
விண்ணும் மனம்சேர் வியன்புலனும் - திண்ணமரு
மானுமாங் காரமுமாய் வந்தவகை எட்டுடைய
தானவசித்(து) என்னதுருவாம்

(மண்ணும் – நிலனுட, புனலும் – நீரும், வளர் எரியும் – விறகிட வளர்வதால் அனலம் எனப்படும் தீயும், வாயுவுடன் – வாயுவோடு கூடிய விண்ணும் – ஆகாயமும், மனம் சேர் வியன் புலனும் – மனத்தோடு கூடிய பதுனோரு வியக்கத்தக்க இந்திரியங்களும் , கிண்ணம் அருமாறும் – நிச்சயமான அரிய மஹானும் ஆங்காரமுமாய் – அஹங்காரமூமாக, வந்தவகை எட்டு உடையதான – இப்படி எட்டுவகையை உடையதாயிருக்கும், அசித்து – அசேதனப் பொருளும், என்னது உருவாம் – என்னுடைய உடலாகும்.

உடனே பகவான் இந்த அசேனமாக பிரகிருதி தாழ்ந்தது; இதனைக் காட்டிலும் வேறுபட்டதாய் ஜீவன் என்ற பெயர் பெற்றதாய் அசேதன பிரகிருதியைக் காட்டிலும் மேலானதான பிரகிருதியையும் ஏனனுடையது என்று அறிக என்று அர்ஜுனனுக்கு உணர்த்தினார்.

மற்றதெனில் வேறாகி மன்னுயிராய் மேலாகி
உற்றதுதான் என்றான் உருவாக - முற்றுமரத்
தாங்கும் சகத்திதனைத் தான மைந்து நிற்குமே
ஒங்கித் தழைபுயத்தால் உன்னு.

(ஓங்கித் தழைபுயத்தாய் – நீண்டு பெருத்திருக்கும் கைகளை உடையவனே! மற்று அதனில் வேறாகி – முன் சொல்லப்பட்ட அசேதன பிரகிருதியைக் காட்டிலும் வேறுபட்டதாய், மன் உயிராய் – நிலைபெற்ற உயிராய் இருப்பதாய், மேல்ஆகி உற்றதுதான் – (அசேதனத்தைக் காட்டிலும்) மேற்பட்டதாயிருக்கும் பிரகிருதி; சகத்து இதனை – இவ்வுலகத்தை, முற்றுமறத்தாங்கும் – முழுவதும் நன்றாகத் தாங்குமதாய், என்றன் உருவாக – என்னுடைய உடலாக, தான் அமைந்து நிற்குமே – தானும் பொருந்தி நிற்கிறது, உன்னு – இதையும் அறிந்து கொள்)

கொண்டிருக்கும் உலகை, தான் அமைந்து நிற்கும் – தான் (பரப்பிரகிருதி) தரித்துக்கொண்டிருக்கும் என்பதை, உன்னு – அறிந்துகொள்.

அபரேயமித ஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்[3]தி[4]மே பராம்
ஜீவ பூ[4]தாம் மஹா பா[3]ஹோ யயேத[3]ம் தா[4]ர்யதே ஜக[3]த்

(இ–ள்) மஹாபாஹோ பெருந்தோளாய்!, இயம் அபரா – (முன் சொல்லப்பட்ட) இது தாழ்ந்த்தான, ப்ரக்ருதி: – பிரகிருதியாகும், இதஃது அந்யாநாம் – இதைவிட வேறானதாயும், ஜீவ பூதாம் – ஜீவஸ்வரூபமாயும், யயா இதம் ஜகத் தார்யதே – எதனால் இந்தப் பிரபஞ்சம் தரிக்கப்படுகிறதோ (அதை) மேபாரம் ப்ரக்ருதிம் – என்னுடைய சிரேஷ்டமான பிரகிருதி என்று தெரிந்து கொள்.

இங்கு சொல்லப்பட்ட பிரகிருதி சேதனப் பிரகிருதி என்றும் சித்து என்றும் சொல்லப்படுகிறது. முன் சொன்ன அசேதனப் பிரகிருதிக்கும் இச் சேதனப் பிரகிருதிக்கும் உள்ள வேற்றுமையைக் காட்டுவதே இச் சுலோகத்தின் நோக்கமாகும்.

இப்பிரகிருதி ஜீவாத்மா அல்லது உயிர்களின் ஸ்வரூபமாயிருப்பதோடு முந்திய பிரகிருதியின் பரிணாமமாகிய தேகம், பிரபஞ்சம் இவற்றினின்று வேறானதாகவே எண்ணப்படுகிறது. உலக அநுபவத்திலும் உயிர் உடலைவிடச் சிறந்ததாகவே நினைக்கப்படுகிறது. ஸ்ரீதரர் தனது உரையில் முன் சொல்லப்பட்ட பிரகிருதி ஜடமாதலால் தாழ்ந்தது' என எழுதியுள்ளார். "எந்தப் பிரகிருதியால் பிரபஞ்சம் தரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்பதற்குச் சங்கரரும் ராமாநுஜரும் 'எனது ஜடப்பிரகிருதியைச் சேதனப் பிரகிருதி தரித்துக் கொண்டிருக்கிறது' என உரை கூறியுள்ளார்.

பிரபஞ்சத்திற்குக் காரணம் இவ்விருவகைப் பிரகிருதிகளானால் பகவானுக்கு அதனால் என்ன பெருமை என்ற கேள்வி எழுமல்லவா? அதற்கு அடுத்துவரும் சுலோகம் விடையாக வருகிறது.

இந்த விரண்டு முதலாக எப்பொருளும்
வந்த பரிசுணர் நீமன்னவனே- அந்தவகை
தானதனால் எல்லாச் சகத்தின் பிறப்பிறப்பு
நானெனவே காண் நீநயந்து

(இ—ள்) எப்பொருளும் — பிரபஞ்சமும் பிரபஞ்சத்திலுள்ள எல்லா வகையான ஜட அஜடப் பொருள்களும், இந்த இரண்டு முதலாக — இந்த இரண்டு பிரகிருதிகளையும் காரணமாகக்கொண்டே, வந்த பரிசு — உண்டான விதத்தை, மன்னவனே! — தலைவனாகிய அர்ஜுனா! நீ உணர் — நீ தெரிந்துகொள்வாயாக, அந்த வகை தான் — அவ்வாறே, அதனால் — (இருவகைப் பிரகிருதிகளை என்னிடமே) கொண்டிருப்பதனால், எல்லாச் சகத்தின் பிறப்பு இறப்பு — எல்லாவித உலகங்களின் உற்பத்தி லயத்திற்கு, நான் எனவே — (காரணம்) நானே என்று, நீ நயந்து காண் — நீ நன்கு அறிவாயாக.

ஏத[3]த்யோநீநீ பூ[4]தாநீ ஸர்வாணீத்யுப[4]தாரய
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக[3]த: ப்ரப[4]வ: ப்ரலயஸ்த[2]தா

(இ—ள்) ஸர்வாணி பூதாநி — எல்லாப் பூதங்களும், ஏதத் யோநீநிஇதி — இவற்றினின்றும் (பிரகிருதிகளினின்றும்) உண்டானவை என்று உபதாரய — தெரிந்துகொள், க்ருத்ஸ்நஸ்ய ஜகத: — எல்லா(வித) உலகங்களுக்கும், அஹம்ப்ரபவ: — நான் உத்பத்தி காரணம், தசா — அப்படியே ப்ரளய; — நாச(த்திற்கும்) காரணம்.

பூதங்களின் (பிராணிகளின்) உற்பத்திற்கு உயர்ந்த பிரகிருதியும் தாழ்ந்த பிரகிருதியும் காரணமான போதிலும் அவை இரண்டும் பகவானையே ஆதாரமாகக் கொண்டு, காரியப்படுவதற்கு அவரையே எதிர்பார்த்திருக்கின்றன. இரண்டு பிரகிருதிகளும், அவர் அதீனத்தில் இருப்பதால் காரியப்படும் பிரகிருதிகளுக்கும் பகவான் நிமித்த காரணமாகிறார். உற்பத்திலயத்திற்கு ஈச்வரன் நிமித்த காரணம் என்பதை பல சித்தாந்தங்கள் ஒப்புக் கொள்கின்றன. உபாதான காரணம் ஸஹகாரி காரணம் என்று ஒப்புக்கொள்வதில்தான் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன.

பிரகிருதிகளில் ஒன்று மற்றொன்றைவிட உயர்ந்தது என்றால் இரண்டையும் தன்னகத்தே கொண்ட பகவான் அவற்றைவிட உயர்ந்தவரா? அவற்றிக்குச் சமானமானவரா? என்ற கேள்வி எழுமல்லவா? அதற்க விடை அடுத்தபடியாகச் சொல்லுகிறார்.

என்னில்வே றாகிமிக் கிங்கோர் பொருளுளதென்
றுன்னிலாங் கில்லை உயர்விசயா - மன்னியநூன்
மாமணிபோல் கோப்புண்டு வந்தேயென் பாலிதெல்லாம்
சேமமுற நிற்கும் செறிந்து

(இ–ள்) உயர் விசயா – மேன்மை பொருந்திய அர்ஜுனா! உன்னில் ஆராய்ந்து பார்த்தால், என்னில் வேறாகி – என்னிடத்திலிருந்து அந்நியமான, மிக்கு – மேலானதான, இங்கு – இப்பிரபஞ்சத்தில். ஓர் பொருள்உளது என்று இல்லை – ஒரு வஸ்துவும் கிடையாது, என்பால் – என்னிடம், இதெல்லாம் – உலகமும் உயிர்களுமாகிய பிரகிருதிகளாலாகிய யாவும், மன்னிய நூல் – நிலையன நூலில், மாமணிபோல் – சிறந்த மணிக்கூட்டங்கள் போல், கோப்புண்டு வந்தே – கோக்கப்பட்டு, சேமம் உற செறிந்து நிற்கும் – பாதுகாப்பு உடையதாகச் சேர்ந்து இருக்கின்றன.

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய
மயிஸர்வ மிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ

(இ–ள்) தநஞ்சய – அர்ஜுனா! மத்த: பரதரம் – என்னிலும் மேலான அந்யத் கிஞ்சித் – வேறு ஒன்றும், நாஸ்தி – கிடையாது, இதம் ஸர்வம் – இதெல்லாம், ஸூத்ரே மணி கணா இவநூலில் மணிக்கூட்டம் போல, மயிப்ரோதம் – என்னில் கோக்கப்பட்டிருக்கின்றது.

முற்பகுதியில் இச்சுலோகத்தில் பகவானாகிய தான் பிரகிருதிகள் இரண்டைவிடச் சிரேஷ்டமானவர் எனத் தெரிவித்தார். தனக்கு ஒப்பாக வேறு ஒரு பொருள் உண்டோ என்ற சந்தேகத்திற்கிடமில்லாமல் வேறு ஒன்றுமில்லை' என்று தெரிவித்தார். முந்திய சுலோகத்தில் உற்பத்திலயத்திற்குத் தன்னையே காரணமாகச் சொன்ன பகவான் இச்சுலோகத்தின் பிற்பகுதியில் காத்தல் தொழிலுக்கு உலகம் தன்னையே ஆதாரமாகக் கொண்டுள்ளது என உவமையால் வெளியிட்டார் பரமாத்வாகிய தான் ஜடசேதனங்களுக்குத் தலைவனாயும் காரணமாயும், ஞான சக்தி பலம் முதலிய

குணங்களோடிருத்தலாலும் 'தன்னைச் சிரேஷ்டம் என்றார்' என்பது ராமாநுஜர் கூறிய உரை.

ஆக இந்நான்கு பாடல்களால் கண்ணன், 'ஈசுவரன், சித்து, அசித்து என்ற மூன்று தத்துவங்களையும் அவற்றின் ஏற்றத் தாழ்வுகளையும் காரணங்காட்டிச் சுருங்கக்கூறினார்.

74. தியான ஸாதனமான ஞானம்

கண்ணன் தான் தெரிவிக்கப்போகும் ஞானத்தின் பெருமையை முகவுரையில் கூறிய பின் எல்லாவற்றிக்கும் அடிப்படையான ஜடப்பிரகிருதி சேதனப் பிரகிருதி, பரமாத்மா (சித்து, அசித்து, ஈச்வரன்) ஆகிய மூன்று தத்துவங்களை வெளியிட்டார். சென்ற ஆறாம் அத்தியாய முடிவில் 'தியானம் செய்யும் யோகிகளுள் வாஸுதேவனாகிய தன்னையே தியானத்திற்கு விஷயமாகக் கொண்டவனே சிறந்தவன் என்று தெரிவித்ததை விசேஷ ஞானத்தைக் கூறும் இந்த ஏழாம் அத்தியாயத்திற்குத் தோற்றுவாய் என்று சொல்லாம். இரண்டு வகைப் பிரகிருதிகளின் மூலமாய்ப் "பிரபஞ்சத்தின் உற்பத்தி, ஸ்திதி, லயம் (படைத்தல், காத்தல், அழித்தல்) ஆகிய முத்தொழில்களுக்கும் காரணமாயிருக்கின்ற பகவானாகிய" தனது இயல்பைக் கண்ணன் இதற்கு முன் கூறினாரல்லவா? அதையே மேலும் விவரிக்கிறார்.

'எல்லாப் பொருள்களிலும் பகவானையும் பகவானிடம் எல்லாப் பொருள்களையும் பார்க்கின்றவனுக்குப் பகவான் காணாமற்போக வில்லை' என்று (அத் 6 சு30ல்) கூறக்கேட்ட அர்ஜுனனுக்கு எல்லாப் பொருள்களிலும் பகவத் ஸ்வரூபத்தை எப்படிக் காண்பது கிரகிப்பது உணர்வது உணராதவனுக்குப் பகவத் ஸ்வரூபத்தை தைலதாரைபோல இடைவிடாமல் தியானம் செய்வது எங்ஙனம் ஸாத்யமாகும்? என்ற சந்தேகம் மனத்தில் எழுவது இயல்பு அதைப் போக்குவதற்காகக் கண்ணன் இப்பகுதியில் பகவத் ஸ்வரூப ஞானத்தைத் தியானத்திற்கு ஸாதனமாகும் முறையில் விவரங்களுடன் வெளியிடுகிறார்.

ஸ்ரீதரர் இவ்வத்தியாயத்திற்கு முகவுரை போல முதலில் சுலோக உரையில் "இதுவரை ஆத்ம தத்துவத்தைச் சொல்லி இனி உபாஸிக்க யோக்கியமான பகவத் ஸ்வரூபத்தைச் சொல்லப் போகிறார்" என்று கூறியது இக்கருத்தையே ஆதரிக்கும் நூலில் மணிகள் கோத்தாற்போலப் பகவானிடம் எல்லாப் பிரபஞ்சங்களும்

கோக்கப்பட்டிருப்பதை எவ்வாறு?' எனக்கண்ணன் பின்வரும் சுலோகங்களில் விளக்குகிறார்:-

எல்லாநான் ஆதலினால் அப்பில் இனிமையுநான்
சொல்லார் மதியிரவிச் சோதியுநான் - நல்லார்கள்
ஓங்காரம் வேதத் துயர்விண் மிசைத்தத்தம்
பாங்குநர ரில்பௌ ருடம்

(இ—ள்) எல்லாம் நான் ஆதலினால் — யாவும் (உற்பத்தி லயம் எல்லாம்) நானே ஆகிறபடியால், அப்பில் இனிமையும் நான் — நீரில் ரஸம் (ருசி) நான் ஆகிறேன் சொல் ஆர்மதி இரவி சோதியும் நான் — புகழுடைய சந்திர சூரியர்களிடத்தில் ஒளியும் நானே ஆகிறேன். வேதத்து — வேதங்களில், நல்லோர்கள் ஓங்காரம் — பெரியோர்கள் போற்றும் பிரணவம், உயர்விண் மிசை சத்தம் — பரந்த ஆகாயத்தில் சப்தம், பாங்கு நரரில் பௌருடம் (நான்) — சிறந்த மனிதரிடத்தில் ஆண்மை (நானேயாகிறேன்)

4
ரஸோஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சசிஸூர்யயோ:
3 3 3 2
ப்ரணவ ஸ்ஸர்வ வேதேஷு சப்த: கே பௌருஷம் ந்ருஷு

(இ—ள்) கௌந்தேய — குந்தி புத்திரனே! அஹம்—நான், அப்ஸுரஸ: — நீரில் ரஸம், சசிஸூர்யயோ: — சந்திரசூரியர்களில், ப்ரபா அஸ்மி — ஒளியாகிறேன், ஸர்வ வேதேஷு — எல்லாவேதங்களிலும், ப்ரணவ:— பிரணவமாகிற ஓங்காரம், கே சப்த: — ஆகாயத்தில் ஒலியும், ந்ருஷு — மனிதரில், பௌருஷம் — ஆண்மையும், அஹம் அஸ்மி — நானாகவே இருக்கிறேன்.

ஒவ்வொரு பொருளுக்கும் விசேஷமாக, சத்து என்று ஒன்று உண்டு. பொருள்களின் வேறுபாட்டிற்கு அதுவே காரணம். அச்சத்து நீங்கிய பொழுது அதைப் பெற்றிருந்த பதார்த்தம் அதன் தன்மையோடு இருக்க முடியாது. நீரின் சத்தாகிய ருசிக்குப் பகவானே காரணம் ஆதலால், 'நீரில் ருசி நானே என்றார். அவ்வாறே ஒவ்வொரு பொருளுக்கும் சத்தாகச் சொல்லப்படுவது எதுவாயிருந்த போதிலும் அதைப் பிறரால் ஆக்கவோ அழிக்கவோ எந்த நிலையிலும் ஆகாது. அந்த விதமான சத்துக்குப் பொறுப்பாளியாய்க் காரணமாய்ப் பகவான் எல்லாவற்றிலும் இருக்கிறார். அவ்வாறே சூரிய சந்திரர்களில் ஒளியாகிய சத்துக்குக் காரணமாயிருப்பதால் 'பகவானே ஒளியாயிருக்கிறார்' எனப்பட்டது.

வேதங்கள் விரும்பும் விவரங்களைப் பிரணவமே பூரணமாக வெளியிடுவதால் பிரணவம் வேதத்தின் சத்து அல்லது சாரமாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, பகவான் பிரணவமாகிறார். அவ்விதமே ஆகாயத்தின் தன்மையாகிய ஒலியும், பல விதங்களில் வெளிப்படுகிற புருஷனின் தன்மையாகிய பௌருஷம் அல்லது ஆண்மையும் பகவானே ஆகிறார்.

இப்புவிநல் கந்தம் எரிலொளி எப்பொருட்கும்
கைப்படுயிர் சத்தைக் கருதுங்கால் - ஒப்பில்லா
நல்தவத்தோர் மாட்டு நலம் சிறந்தநற்றவநான்
பற்றலர்கள் கோளரியே பார்.

(இ—ள்) பற்றலர்கள் கோள் அரியே — பகைவர்களுக்கு வலிய சிங்கம் போன்றவனே! கருதுங்கால் — ஆராய்ந்து பார்த்தால், இபுவி நல்கந்தம் — இந்தப் பூமிக்கு நல்ல வாஸனையும், எரியில் ஒளி — அக்கினியில் பிரகாசமும், எ பொருட்கும் கைப்படு உயிர் சத்தை — எல்லா வித பதார்த்தங்களுக்கும் பொருந்திய உயிராகிய சத்தையும் (வாழ்வும்) ஒப்பு இலா — நிகர் இல்லாத, நல்தவத்தோர் மாட்டு — சிறந்த தபஸிகளிடம் நலம் சிறந்த நல்தவம் — நன்மை மிகுந்த மேலான தவமும், நான் — நானே ஆகின்றேன் என்பதை, பார் — தெரிந்து கொள்

புண்யோ கந்த[3]: ப்ருதி[4]வ்யாஞ்ச[2] தேஜச்சாஸ்மி விபாவஸௌ[4]
ஜீவநம் ஸர்வ பூ[4]தேஷு தபச்சாஸ்மி தபஸ் விஷு

(இ—ள்) ப்ருதிவ்யாஞ்ச — மண்ணில், புண்ய: கந்த: — நல்ல மணம், விபாவஸௌ ச — சூரியனில் தேஜ: அஸ்மி — பிரகாசம் (நான்) ஆகிறேன், ஸர்வபூதேஷு — எல்லாப் பிராணிகளிலும், ஜீவநம் — வாழ்வு (உயிர் நிலை)யும், தபஸ்விஷுச — தவம் செய்வோர்களில், தப: — தவமும், அஸ்மி — (நான்) ஆகிறேன்.

மண்ணின் பிரதான குணமாகிய வாஸனையை மண்தானே பெற்றுக்கொள்ளவில்லை. வாஸனை அதனது சுபாவமே அதற்குக் காரணம் பகவானேயாதலால், 'மண்ணில் கந்தம் நானே' எனப்பட்டது. இவ்வாறே ஒவ்வொரு பொருளிலும் உள்ள பகவத் ஸ்வரூபத்தை தியானத்திற்குத் தகுதியாகக் கிரகித்து அநுபவிக்கலாம். இதை நம்மாழ்வார் வாயிலாக வெளிவந்த திருவாய்மொழிப் பாட்டால் உணரலாம்.

"மண்ணையிருந்து துழாவி
வாமனன் மண்ணிது வென்னும்"

என்ற அடி இப்பகுதிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

சூடு அல்லது எரிக்கும் சக்தியாகிய தேஜஸ்ஸு அக்கினியின் பிரதான குணம். அதற்குப் பகவானே காரணம் ஆதலால், தன்னை 'அக்கினியில் தேஜஸ் நானாகிறேன்' என்றார். ஜீவனம் அல்லது வாழ்வதற்குரிய சக்தி பகவானின் ஆதீனத்தில் இருப்பதால் பகவானே வாழ்வாகிறார்.

உபவாஸம் முதலிய விரதங்களை மேற்கொண்டு தவம் செய்ய இயலுவது கடவுளின் ஆதீனத்திலேயே இருப்பதால் அவரே தவத்திற்குக் காரணமாகிறார். அந்த வகையில் அவரே தவமாகிறார். இவ்வாறு தானகவே எல்லாப் பொருள்களையும் சொல்லுவதைத் தெளிவாக உணர்வதற்கு மேலும் சொல்லுகிறார்.

எப்பொருட்கும் வித்தா நிலை நின்ற வென்னை நினை
அப்புருடர் புத்தியுநான் ஆகின்றேன் - ஒப்பில்
பிறரொளியை யாக்குமப் பேரொளி நான் ஆவன்
செறிதிண்தோள் பார்த்தா தெளி.

(இ-ள்) செறிதிண்தோள் பார்த்தா – மிக்க வலிமையைவாய்ந்த தோளையுடைய அர்ஜுனா! நிலை நின்ற என்னை – எதனாலும் மாறுபாடடையாமல் இருக்கின்ற என்னை, எப்பொருட்கும் – எல்லா பொருள்களுக்கும் வித்தா நினை – வித்தாகத் தெரிந்துகொள், அப்புருடர் – அவ்வாறு தெரிந்து கொள்ளுகிற புத்திமான்களுக்கு, புத்தியும் நான் ஆகின்றேன் – நான் புத்தியாக விருக்கின்றேன். ஒப்பில் பிறர் ஒளியை – ஒப்பற்ற பிறருடைய தேஜஸ்ஸை, ஆக்கும் அ பேரொளி நான் – உண்டாக்குகின்ற பெரிய தேஜஸ் நானே ஆகின்றேன்(என), தெளி – தெளிந்து கொள்.

பீ4ஜம் மாம் ஸர்வபூ4தாநாம் வித்3தி4 பார்த2 ஸநாதநம்
பு3த்3தி4ர் பு3த்3தி4மதாம் அஸ்மி தேஜஸ் தேஜஸ்விநா மஹம்

(இ-ள்) பார்த்த – அர்ஜுனா! ஸர்வ பூதாநாம் – எல்லாப் பிராணிகளுக்கும், ஸநாதநம் மாம் – நித்தியனான என்னை, பீஜம் வித்தி – வித்தாகவறி, புத்திமதாம் – புத்திமான்களுக்கு, புத்தி அஸ்மி(நான்)

புத்தியாகிறேன், தேஜஸ்விநாம் – தேஜஸ் உள்ளவர்களுக்கு அஹம் தேஜ: – நான் தேஜஸ்

பீஜம் வித்தி (வித்தா நினை) என்ற தொடருக்கு 'வித்துப்போல் இருப்பதாக அறி' என்றும் 'வித்தாக அறி' என்றும் இருவகையாகப் பொருள் கொள்வதுண்டு.

முதற்பொருள்:– மரம் வித்திலிருந்து உண்டாகிறது. மரம் உண்டாவதற்கு வித்துக் காரணமானாலும் 50 அடி உயரமும் பல கிளைகளோடு மிகுந்த பரப்பையுமுடைய மரத்தின் உருவத்திற்கும் அதில் அடங்கிய எல்லாப் பொருள்களுக்கும் வித்தைமாத்திரம் காரணமாகச் சொல்ல முடியாது. காற்றிலும் நிலத்திலும் அடங்கிய பொருள்களை யெல்லாம் வித்து தன்னிடம் அமைந்த சக்தியால் கிரகிக்க அவை யாவும் சேர்ந்து மரமாகிற தேகத்திற்குக் காரணமாயிற்று. ஆலமரமாகிய தேகம் தோன்ற ஆலம்வித்து காரணமாயிருந்த போதிலும் ஆலமரமானது முழுவதும் வித்தென முடியாது, பண், பானையாக ஆவதற்குக் காரணமாயிருப்பது போல் மரமாவதற்கு வித்துக்காரணமாகாது. ஆகவே, பகவான் ஜகத்திற்காகப் பானை செய்யும் குயவன் போல் நிமித்த காரணன் ஆகிறாரேயொழிய, பானையாகும் மண்போல் உபாதன காரணமாவதில்லை என்பது ஒரு சாராரின் சித்தாந்தம்.

2ம் பொருள்:– வித்தாகிறேன் என்பதில் எல்லாக் காரணங்களும் அடங்கியிருக்கின்றபடியால் பானை தோன்றக் குயவன்போலப் பகவான் ஜகத்திற்கு நிமித்த காரணமாகவும் பானையாகும் மண்போல உபாதான காரணமாகவும் பானையின் வடிவம் உருவம் தோன்ற உதவும் தண்ட சக்கரங்கள் போல ஸஹகாரி காரணமாகவும் பகவானேயாகிறார்' என்பது மற்றொரு சராரின் சித்தாந்தம்.

இவ்வாறு அபிப்பிராயபேதமிருந்த போதிலும் நெசவு செய்வோன் ஆடையை உண்டாக்குவது போல் பகவான் சித்து அசித்தைக்கொண்டு உலகை உண்டாக்கவில்லை. நெசவு செய்வோன் பருத்தியைக்கொண்டு ஆடையைச் சிருஷ்டிப்பதற்கும் பகவான் மூலப்பொருள்களை கொண்டு உலகை சிருஷ்டிப்பதற்கும் அடிப்படையிலேயே பெரிதும் வேற்றுமையுண்டு என்பதை எல்லா சித்தாந்திகளும் ஏகமாய் ஒப்புக்கொள்கின்றனர்.

75. யார் யாருக்கு ஆதாரம்?

நீர், நிலம், நெருப்பு முதலியன வேறான பொருள்களில் எல்லாம் பகவான் இருக்கிறார். ரஸம், கந்தம்(வாசனை), ஒளி என்று ஒவ்வொரு பொருளையும் வேறுபடுத்திக் காட்டும் பிரதான குணங்களுக்குக் காரணம் அவரேயாதலால் அக்குணங்களின் பெயர்களும் பகவானையே குறிக்கின்றன. பகவானை அக்குணங்களால் வியவகரிக்கலாம். அது மாத்திரமின்றி அக்குணங்களால் உணர்ந்து தியானம் செய்வதற்கு அவ்வுணர்வைச் சாதனமும் ஆக்கிக் கொள்ளலாம்.

பிரபஞ்சத்திற்கும் அதிலுள்ள பொருள்களுக்கும் பிராணிகளுக்கும் பகவான் காரணமாய் இருப்பதை "ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறளின் தொடர் நன்கு வெளிப்படுத்துகிறது. பானை தோன்றுவதற்குக் குயவன் காரணமாவது போல் மாத்திரம் பகவான் பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருப்பதில்லை என்பதை "எழுத்தெல்லாம் அகர முதல்" என்ற முதல் குறள் உவமை எடுத்துக்காட்டுகிறது. பிற எழுத்துக்களின் ஒலியிலிருந்து பிரிக்க முடியாமல் அகரக் கூறு (பகுதி) சேர்ந்தேயிருப்பதுபோல் பகவானும் பதார்த்தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன பிரதான குணங்களிலிருந்து பிரிவுபடாமல் கலந்தேயோ அல்லது குணங்களாகவோ இருக்கிறார்.

ஆகப் பகவானை உற்பத்தி ஸ்திதிலயத்திற்கு (படைத்தல், காத்தல், அழித்தல்)ச் சட்டி பானைக்குக் குயவன் ஆவது போல நிமித்தகாரணன் என்றோ, பானையாவதற்கு மண்ணும் குயவனும் போல உபாதான காரணன், நிமித்தகாரணன் இரண்டும் என்றோ எவ்விதம் சொன்னபோதிலும் முத்தொழில்களை உலகத்தாரைப் போலச் செய்வதில்லையென்றே வேதம் சொல்லுகிறது. அதை எல்லா சித்தாந்திகளும் அபிப்பிராய பேதமில்லாமல் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர்.

முத்தொழில்களும் தானாக நடைபெறுவதில்லை. பகவானால் சங்கல்பமாத்திரத்தில் நடைபெறுகின்றன. அனயாசமாக நடைபெறுகின்றன. அது லீலை அல்லது விளையாட்டாகவே நடைபெறுகிறது என்று உபநிஷத்தில் சொல்லப்படுகின்றன. அதையொட்டிச் சித்தாந்திகள் செய்த பல சுலோகங்களும் கவிகள் இயற்றிய பல பாடல்களும் இருக்கின்றன.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

என்ற கம்பர் பாடல் வேத வாக்கியங்களை ஒட்டி வந்ததேயாகும்.

ஈச்வரன் எல்லாவற்றிற்கும் காரணமாய் பொருள்களை வேறுபடுத்திச் சொல்வதற்கான அவற்றிற்குரிய பிரதான குணங்களாயிருக்கிறார் என்று சொன்னமையால் கடவுளை எந்த விதமாகவும் தியானம் செய்யலாம் என்று ஏற்படுமல்லவா? துர்நாற்றம், கொடுமை, சினம் முதலிய தீய குணங்களைப் பெற்றவைகளும் பிரபஞ்சத்தில் பல இருக்கின்றன. அக்குணங்களாகவோ உணர்ந்து தியானம் செய்வதைவிட நற்பொருளின் நற்குணங்களாகத் தியானம் செய்வதே மேல் என்பதை அடுத்த சுலோகத்தால் கண்ணன் வெளியிடுகிறார்.

திண்மையினோர் திண்மையுநான் தீதிலாத் தேசுபெறும்
ஒண்மையறு காமரா கம்மொழிந்த - வண்மை
அறம்செறியும் காமநான் ஆடவர்கள் ஏறே
சிறந்ததெலா நானாத் தெளி.

(இ–ள்) ஆடவர்கள் ஏறே – ஆண்களில் சிங்கம் போன்றவனே! திண்மையினோர் – பலவான்களுக்கு, தீதுஇலா தேசுபெறும் – குற்றமற்ற புகழைத்தரும் ஒண்மைஅறு – மேன்மை இல்லாத காமராகம் ஒழிந்த – ஆசாபாசம் நீங்கிய, திண்மையும் நான் – பலமும் நானாக விருக்கிறேன், வண்மை அறம் செறியும் காமம் நான் – வளம் தருமத்தோடு விரோதிக்காக ஆசை நானே ஆகிறேன். சிறந்தது எலாம் நானாத் தெளி – சிறந்த பண்புகளையெல்லாம் நான் என்றே அறிந்து கொள்.

3 3 3
பலம் பலவதாஞ்சாஹம் காமராக விவர்ஜிதம்
4 3 4 4 4 4
தர்மா விருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப

(இ–ள்) பரதர்ஷப – பரதச் சிரேஷ்டனே!, பலவதாஞ்ச – பலவான்களுக்கு, அஹம் – நான், காமராக விவர்ஜிதம் – ஆசாபாசங்கள் அற்ற, பலம் – பலமாயிருக்கிறேன், பூதேஷு – பிராணிகளிடம் தர்மா விருத்த: – தருமத்தோடு விரோதிக்காத காம: அஸ்மி – காமம்(நான்) ஆகிறேன்.

வெவ்வேறான எல்லாப் பொருள்களின் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணமாய் பொருள் வேறுபாட்டைத்தரும் தன்மை தானேயாய், எங்கும் எல்லாவற்றிலும் பரம்பொருள் நிறைந்திருப்பின் உயிர்களைப் போதிக்கும் பிரகிருதி பகவானைப் பாதிக்காமலிருக்குமா? என்ற கேள்வி பிறப்பது இயல்பு. அதற்கு விடையாகக் கண்ணன் தானிருக்கும் நிலையை மேலே வெளியிடுகிறார்.

இன்ன குணமூன்றில் ஏய்த்த பொருளனைத்து
மன்னே என் தன்மையினால் வாய்ந்ததென - உன்னுக நீ
ஆங்கவைஎன் பாலே அமைந்திடினும் யான் அவற்றின்
நீங்கலுற நிற்பன் நிகழ்ந்து.

(இ–ள்) இன்ன குண மூன்றில் – இவ்விதமான (சாத்வீக, ராஜஸ, தாமஸ) மூவகைக் குணங்களில், ஏய்ந்த – பொருந்திய, பொருள் அனைத்தும் – (உலகில் சரீரம், இந்திரீயம், போக்யப் பொருள் என்ற) வஸ்துக்கள் எல்லாம், என் தன்மையினால் வாய்ந்தது என – என்னால் என்னிடம் உண்டானவைகள் என, நீ உன்னுக – நீ அறிந்து கொள்வாயாக, அவை என்பாலே அமைந்திடினும் – அவை என்னிடம் இருந்த போதிலும், யான் அவற்றின் நீங்கள் உற நிகழ்ந்து நிற்பன் – நான் அவற்றில் பொருந்தாமல் நீங்கியே நிலையாக இருப்பேன் (நான் அவற்றில் இல்லை)

3
யேசைவ ஸாத்விகா பாவா ராஜஸாஸ்தாமஸாச்சயே
3 4
மத்த ஏவேதீ தாந் வித்தி நத்வஹம் தேஷு"தே மயி

(இ–ள்) ஸாத்விகா: – சாத்துவிகங்களாயும், ராஜஸா: – ராஜஸங்களாயும் தாமஸா:– தாமஸங்களாயும், ஏச ஏச பாவா: – எந்தெந்தப் பொருள்களுண்டோ, தாந் – அவற்றை, மத்த ஏவ இதி – என்னிடத்தினின்று (உண்டானவை) என்றே, வித்தி – அறிந்து கொள், தே மயி – அவை என்னிடம் (இருக்கின்றன,) அஹம்து – நானோ, தேஷுந – அவற்றினிடம் இல்லை.

'பாவா' என்பதற்கு வெவ்வேறான பெயர்கள் சொல்லக்கூடிய பொருள்கள் எனக்கொள்ள வேண்டும் குணங்களின் வெவ்வேறான பரிணாம நிலைகளே அதற்குக் காரணம் அவ்விதம் தோன்றும் எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணம் தானே என்று முன்னே சொல்லி வந்தவற்றைத் தொகுத்துக் கூறினார். புறக்காரணமின்றி அகக் காரணமும் தானே என்பது தோன்ற அவற்றிற்குப் பிறப்பிடம் இருப்பிடம்

இறப்பிடம் எல்லாம் தானே என்பது தோன்ற 'மத்த ஏவேதி' (அவை என்பாலே) எனக்கூறினார். சுகதுக்கத்திற்குக் காரணமாய் பிரகிருதியும் அதன் குணங்களும் அவற்றின் பரிணாமப் பொருள்களும் பகவானிடத்தில் இருந்தால் அவற்றால் பகவான் பாதிக்கப்படமாட்டாரா என்ற வினாவெழும். அதற்கு விடையாகத் தன்னிடம் அவை இருந்தபோதிலும் அவற்றிடம் தானில்லை, அதனால் தான் பாதிக்கப்படுவதில்லை என்பதை நுட்பமாகத் தெரிவித்தார். இப்பகுதிக்கு ராமாநுஜர் கூறிய உரை கவனிக்கத்தக்கது.

ராமா:— ஜீவாத்மா இல்லமல் சரீரம் இருக்கமாட்டாது. ஜீவாத்மா சரீரம் இல்லாமல் இருக்கும் ஜீவாத்மா உடலால் போக விஷயத்திற்கு உதவி பெறுகிறது. அவ்வாறு பகவானுக்குத் தேகத்தால் ஆகவேண்டியது எதுவுமில்லை. லீலையின் பொருட்டுத்தேகத்தை கிரகிக்கிறார் என்பதே இதன்பொருள்.

'உலகு நின்னோடு ஒன்றி நிற்க நிற்றியாதலால்' என்று வரும் திருமழிசைப் பிரானின் மொழிகள் இதற்கு மேற்கோளாகும்.

வேதாந்த விசாரம் செய்வோர் இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்வதுண்டு. குற்றவாளி சிறையில் கைதியாக விருக்கிறான் காவலாளியும் (சிறை அதிகாரியும்) அங்கேயே இருக்கிறான் அவ்விடத்தில் இருப்பது கைதிக்குத் துக்க ரூபமாயிருக்கிறது. காவலாளிக்கோ அவ்வாறில்லை. ஒரே இடத்தில் இருந்த போதிலும் ஒருவனுக்கு அவ்விருப்பு துக்க ரூபமாயும் மற்றொருவனுக்கு அவ்வாறில்லாமலும் இருப்பதால் இடம் துக்கத்திற்குக் காரணம் ஆகாது. ஒருவன் (கைதி) தான் செய்த குற்றத்திற்காக அங்கு நிர்ப்பந்தமாய்க் கொண்டுவரப்பட்டான் மற்றவன் (காவலாளி) தன் இச்சையால் அங்கு இருக்கிறான். அங்கு துக்கத்திற்குச் செய்த வினை காரணமாகிறது. அவ்வாறே பிரகிருதியில் சேர்ந்திருக்கும் ஜீவனின் துக்கத்திற்குக் காரணம் அவன் செய்த கர்மம். கர்மத்தால் ஜீவனுக்குப் பிரகிருதி சம்பந்தம் விரும்பினும் விரும்பாவிடினும் நிர்பந்தமாய் வந்தது ஈச்வரனுக்கு இச்சையால் வந்தது. ஆகவே பிரகிருதி ஜீவனுக்குத் துக்க ரூபமாயும் பகவானுக்கு அதில்லாமலும் இருக்கிறது சம்பந்தமோ இடமோ அதற்கக் காரரணமாகாது என்பது இதனால் விளங்குகிறது.

அன்றியும் இச்சுலோகத்தின் பிற்பகுதியால் பிரகிருதியும் பிரகிருதி விகாரமான பொருள்களும் பகவானை ஆச்ரயித்து அவரை ஆகாரமாய்க் கொண்டு அவர் ஆதீனத்திலே அவரிடம் இருக்கின்றன.

ஆனால் பகவான் அதை ஆச்ரயித்து அதனிடம் இருக்கவில்லை ஆகையால் மாயாதீதன் எனப்படுகிறார். பகவான் ஜீவனுக்கும் பிரகிருதிக்கும் ஆதாரம் அவை அவருக்கு ஆதாரமல்ல. ஆகையால் அவர் ஆனந்த மயனாயிருக்கிறார்.

76. தடையும் தடை நீக்கமும்

பிரகிருதியில் தோன்றிய முக்குணங்களின் விகாரம் அல்லது பரிணாமமே வேற்றுமைத் தன்மை வாய்ந்த பதார்த்தங்களுக்கிடமான. பிரபஞ்சம், சாத்வீகம், ராஜஸம் தாமசம் ஆகிய மூன்று குணங்களிலிருந்து எல்லாவிதமான பொருள்கள் தோன்றுவதற்குக் காரணமும் தோன்றிய பொருள்களுக்கு ஆதாரமும் பகவானே என்று சொல்லப்பட்டது.

குணங்களுக்கிருப்பிடமான பிரகிருதி பகவானிடமே பகவானின் அதீனத்தில் இருக்கிறது. அதிலிருந்தே பகவானின் காரணமாகப் பிரபஞ்சம் தோன்றுகிறது (உண்டாகிறது). பிரபஞ்சம் முழுவதும் பகவானிடமிருந்த போதிலும் அது முழுவதிலும் பகவானில்லை என்று கண்ணன் முன்னே சொன்னாரல்லவா?

அதில் சாதாரணமாக யாருக்கும் ஒரு சந்தேகம் எழுவது இயல்பு 'பகவான் பிரகிருதியின் முக்குணங்களுக்கு மிகவும் அப்பாற்பட்டவன் ஆகவே எவராலும் அறிய முடியாதவன். குணங்களுக்கு அப்பாற்றபட்டவனைக் குணங்களுக்கு வசப்பட்ட பிரபஞ்ச உயிர்களால் எப்படி உணர முடியும்? உயிர்கள் உணர்ந்துகொள்ளும் வகையில் பகவத் ஸ்வரூபம் இருந்தால் உயிர்களைப் போலவே குணங்களின் வசப்பட்டிருக்க வேண்டும் அவ்வாறு இருப்பின் பகவானின் தன்மையைப்பற்றிக் கூறும் சுருதி (வேத) வாக்கியங்களோடு முரண்படும்' என்ற சந்தேகம் அர்ஜுனன் மனத்தில் எழுந்தது. அதைப்போக்கவே கண்ணன் தன்னை உயிர்கள் உணர முடியாதிருப்பதற்குத் தடை அல்லது காரணமாயிருப்பது யாது என மேலும் தெரிவிக்கிறார்.

முக்குணஞ்சேர் இப்பொருளான் மோகித்த இவ்வுலகம்
அக்குணங்கள் தம்மில் அ மேலாய் - மெய்க்குணங்கள்
ஒன்றதனில் ஓர்குறையா தோங்கிறையாம் என்னைத்தான்
நின்றறிய மாட்டாது நேர்.

(இ—ள்) முக்குணம் சேர் இ பொருளான் – மூன்று வித குணவிகாரங்களாயுள்ள இந்தப் பொருளாலே, மோகித்த இ உலகம் – மோகமடைந்திருக்கிற இப்பிரபஞ்சம் முழுமையும் அ குணங்கள் தம்மில் அதி மேலாய் – அந்தக் குணங்களினின்றும் வேறுபட்டு மிகவும் மேம்பட்டு, மெய்க்குணங்கள் ஒன்றதனில் – (அப்ராக்ருதமான சுத்த) சாத்வீக குணத்தில், ஓர் குறையாது கொஞ்சமும் மாறாமல் (அழியாது நிலையாக), ஓங்கு இறையாம் என்னைத்தான் – சிறந்திருக்கிற ஈச்வரனாகிய என்னை, நேர் நின்று அறிய மாட்டாது – உள்ளபடியே அறிந்துகொள்ள முடிகிறதில்லை.

த்ரிபி[4]ர்கு[3]ணமயைப் பா[4]வை: ஏபி[4]ஸ்ஸர்வ மி[3]தம் ஜக[3]த்
மோஹிதம் நாபி[4]ஜாநாதி மாபே[4]ப்ய பரமவ்யயம்

(இ—ள்) த்ரிபி: – குண மயை: – மூன்றுவித குணவிகாரங் களாயுள்ள ஏபி:பாவை: – இந்தப் பொருள்களாலே மோஹிதம் – மயக்கமடைந்த இதம் ஜகத் ஸர்வம் – இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஏப்ய: பரம் – இம்முக்குணங்களில் மேம்பட்டு, அவ்யயம் – நாசமற்றிருக்கிற மாம் – என்னை, ந அபிஜாநாதி – அறிகிதில்லை.

'ஸர்வம் இதம் ஜகத்' (இவ்வுலகம்) என்னும் தொடர் மெய்யுணர்வு முற்றிய ஞானிகள் தவிர மற்ற உயிர்களையே குறிக்கும். முக்குணங்களுக்கு வேறாக அழிவின்றி நிலையாகவிருக்கின்ற என்னை முக்குண விகாரத்தாலான தேக இந்திரிய விஷயாதிகளால் மயங்கிய அவிவேகிகள் காண்பதில்லை என்றதனால் காணாததற்கு மாயை என்ற பெயருடைய பிரகிருதியைக் காரணமாகச் சொல்லலாம் அன்றியும் பிரகிருதியைக் காண்பதற்குத் தடை என்றும் பிரபஞ்சத்தையும் பிரபஞ்சப் பொருள்களையும் பிரகிருதியின் கார்யம் என்றும் கொள்ளலாம்.

குணங்களின் காரியங்களான (விகாரங்களான) பொருள்கள் உயிர்களுக்குப் பகவானை எப்படி மறைக்கும்? என்ற வினாவிற்கு விடை காண்பது சுலபம். குண விகாரமான சரீரத்தையே உயிர் பெற்றிருப்பதால் உயிருக்கு அதனால் மோஹமும் மெய்பொருளைக் காண முடியாமையும் ஏற்படுவது இயல்பு.

கண்களுக்கு விஷயமாய்க் காணக்கூடிய பொருளுக்கு உருவம் உண்டு. மோஹத்தை விளைவிப்பதே அதற்குச் சுபாவமாகையால் அதைச்சரீரத்தினுடைய தர்மமாகவே (லக்ஷணமாகவே) சொல்லலாமல்லவா? சுகதுக்கமாகிய மோஹத்திற்கு ஏதுவா

(காரணமா)கிய பிரகிருதியைப் பகவான் தன்னிடமே கொண்டிருந்தால் அது அவருக்குச் சரீரம்போல் ஆய்விடாதா? பக்தர்களுக்கும் ஞானிகளுக்கும் தோன்றும் பகவானின் ரூபமும் அவதாரங்களில் பகவான் மேற்கொள்ளும் விக்கிரகமும் பிரகிருதி விகாரமான சரீரம் தானே அது அவருக்கு மோஹத்தை விளைவிக்கதா? என்று சந்தேகம் கொள்ள இடமில்லாதபடி மற்ற உயிர்கள் தேகத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பத போல் தன்னிடத்தில் பிரகிருதி இருந்த போதிலும், 'தான் அதை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை' என்பது தோன்ற 'தான் அதில் இல்லை' என்று தெரிவித்தார்.

அதனால் பகவான் பிரகிருதிக்கு அப்பாற்றபட்டவர்; மாயதீதன் என்பது வெளியாயிற்று 'மாமேப்ய பரம் அவ்யயம்' (குணங்களிலும் மேம்பட்டு, நாசமற்ற என்னைக்) காண்பதில்லை என்று மேலும் இச் சுலோகத்தில் சொல்வதனால் 'அப்ராக்ருதமான (பிரகிருதிக்கு எதிரான சுத்த சாத்வீகமான) திவ்ய மங்கள விக்கிர ரூபமுடைய என்னை' என்று பொருள் கொள்வாருளர் அவ்வாறு கொள்வார், ஈச்வரன் அவதார நிமித்தமாகவும் பக்தர் ஞானிகளின் பொருட்டாகவும் கொண்டிருக்கும் சரீரம் கூடப் பிரகிருதியாலாயதல்ல. அது அப்ராக்ருத சரீரம் என்பர். முக்குணப் பிரபஞ்சத்தால் மோஹமடைந்தவர்கள் அதை உணரமாட்டாமல் தங்களைப்போலவே பகவானும் பிராகிருத சரீரம் படைத்தவர் முக்குண வயப்பட்டவர் எனக் கருதுகின்றனர் என வாதிக்கின்றனர்.

உண்மை எவ்விதமிருப்பினும் பரமாத்ம ஸ்வரூபத்தைக் காண்பதற்கத் தடையாயிருப்பது. பிரகிருதியாகிய மாயையே என்று கொள்வதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. பிரகிருதியைச் சரீரமாகப் பெற்று அதன் வயப்பட்டு மோஹமடைந்து தடைப்பட்ட உயிர்களுக்கு விடுதலை பெற்று உய்ய வழியுண்டோ எனில் 'உண்டு அது யாது என்பதை அடுத்த படியாகக் கண்ணன் கூறுகிறார்.

இந்தக் குணமயியாம் என்றதென் மாயைதன்
சந்தந்தி னிற் கடக்கும் சார்வரிதால் - சிந்தையுடன்
என்னையடைந் தேயியல்வான் இம்மா யையைக்கடக்க
முன்னையமர்ந் துற்றான் முயன்று.

(இ–ள்) இந்தக் குண மயியாம் என்றது – இந்த மூன்று வித குண ரூபமானது எனப்பட்ட, என் மாயைதன் – என்னுடையதான மாயையினுடைய, சந்தத்தினில் கடக்கும் சார்வு அரிது – கட்டினின்றும் விடு படத்தக்க வழிஇல்லை; இ மாயைக்கடக்க – இந்த மாயையிலிருந்து விடுபட, முயன்று – முயற்சியோடு, என்னையே அடைந்து – என்னை ஒருவனையே அடைக்கலமாகப்பற்றி, முன்னை சிந்தையுடன் தீவிரமாக முழுமனதுடன், அமர்ந்து உற்றான் – (என்னிடமே) நிலையாகப் பொருந்தினவன், இயல்வான் – (மாயைக் கடக்கச்) சக்தனாவான்.

தைவீஹ்யேஷா[3] குணமயீ[3] மமமாயா துரத்யயா[3]

மா மேவயே ப்ரபத்யந்தே[3] மாயா மேதாம் தரந்திதே.

(இ–ள்) குணமயீ – குணஸ்வரூபையான ஏஷா மம மயா – இந்த என் மாயையானது, தைவீஹீ – தெய்வ சம்பந்தமுடையதாதலின், துரத்யயா – ஒருவராலும் கடக்க வரிது, யே – யார், மாம் ஏவ – என்னையே பற்றுகிறார்களோ. தே – அவர்கள், ஏதாம் மாயாம் – இந்த மாயையை, தரந்தி – கடக்கின்றார்கள்.

'பகவானைக் கொண்டல்லது வேறு உபாயத்தால் மாயையைக் கடக்க முடியாது' என்பது சுலோகக்கருத்து 'மமமாயா (என்மாயை) என்றதற்கு லீலையின் பொருட்டு எனக்குப் பிரியமாயிருக்கிற' என்று பொருள் படுவதால் மாயையின் வலிமை அதனால் வெளியாகிறது முன்னமே கண்ணன் தன்னையே மாயைக்கு இடமாகச் சொல்லியிருப்பதால் என்னுடைய மாயை (மம மாயா) என்று சொல்வதே போதும் 'தைவீஹி' (தெய்வ சம்பந்தமுடையதாதலின்) என்று மேலும் விசேஷமாகச் சொல்லியது முத்தொழில் வல்லமையுடைய மாயையின் சக்தியையும் கடத்தற்கு அரியதாயிருக்க அதுவே காரணமாயிருப்பதையும் காட்டும் முக்குணங்களுக்கு அதிஷ்டானமாய் உண்மையை உணரவெட்டாது மருளச்செய்யும் தாமஸகுணத்தை மேலும் மேலும் உற்பத்திசெய்யும் துர்க்கா தேவியின் வல்லமையைக் குறிக்கவே 'தைவீ' என்ற பதம் வந்ததெனச் சிலர் கொள்வர்.

மாயையைத் துர்க்கையாகக் கொள்ளினும் அல்லது அச்சக்தியை வேறு எந்தப்பெயரால் குறிக்கினும் இச்சுலோக முற்பகுதியில் பகவானே மாயையின் வலுவிற்கும் மோஹத்திற்கும் காரணமாகத் தோன்றும் பகவானின் ஆதரவும் தூண்டுதலும் பெற்றமாயையால் வரும் மோஹத்தை யாராலும் எப்பொழுதும் கடக்க இயலாது என ஏற்படும் இதற்குச் சமாதானம் சுலோகத்தின் பிற்பகுதியில் சொல்லப்படுகிறது.

பக்தியின் எல்லையாகிய ஈச்வர சரணாகதியால் யோகி முதல் எல்லோரும் மாயையைக் கடக்கலாம் என்றார் மாயையை மித்தை (மித்யை) என்பது சங்கரரின் சித்தாந்தம் ஆனால் ராமாநுஜர் வேறுவிதமாகக் கொண்டதால் இச்சுலோகத்திற்கப் பின்வருமாறு உரை எழுதியுள்ளார்.

ராமா: – 'மாயையைமித்தை என்பது சரியன்று; மந்திரத்தாலும் வெடி மருந்து முதலியவற்றாலும் பார்க்கப்படுகின்ற விசித்திரங்கள் பொய்யாயிருக்கலாம். ஆனால் மந்தராதிகள் பொய்யாகா அவ்வாறே மாயையும் பொய்யன்று இவ்வுண்மை சுருதியிலும் சொல்லப்பட்டுள்ளது மாயைத் தாண்டுவதென்பது அதனால் வரும் துன்பங்களைப் போக்கிக்கொள்வது' ஆக இவ்விரண்டு சுலோகங்களாலும் பரமாத்மாவை அறிய மாயை தடை என்பதும் அதை நீக்க உபாயம் எது என்பதும் சொல்லப்பட்டன.

77. இரு நால்வர்

பிரபஞ்சத்திற்கும் உயிர்களுக்கும் ஆதாரமாய்ப் பரமாத்மா எங்கும் வியாபித்திருக்கிறார். இருந்த போதிலும் உயிர்கள் அவரை அறிய வொட்டாமல் தடையாக நிற்பது, மாயை. மாயை மிக்க வலிமை வாய்ந்தது எவராலும் எந்த உபாயத்தாலும் எளிதில் கடக்கவொண்ணாதது.

கடுந்தவம் புரிந்தும் பிறரால் எளிதில் செய்யமுடியாத கர்மாக்களைச் செய்தும் யோகம் பயின்றும் மாயையை வென்று விடுவேன் என்று சங்கல்பம் செய்தனர் பலர். காரியத்தில் நிறைவேற்றும் பொருட்டு அரும்பாடு பட்டனர். காரிய சித்தி ஏற்படுவது போல் தோன்றும் காலத்தில் 'பிறரால் சாதிக்க முடியாததை நம்மால் நிறைவேற்ற முடிந்தது' என்ற எண்ணம் விருத்தியாகி அதுவே சூட்சும ரூபமான அஹங்காரமாக வளர்ந்து விடுகிறது. அவ்வாறு அழிந்தோர் பலருடைய வரலாறுகளே புராணங்களில் மலிந்திருக்கின்றன. மகா ஞானிகளும் அறிந்து கொள்ள முடியாதபடி மாயை அதிசூட்சும ரூபத்தில் வேலை செய்யும் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தனது 1001 உபதேசங்களில் காட்டியுள்ளார்.

'நாரதருக்கு மாயையால் ஆத்ம ஸ்வரூபம் மறைந்தது, பெண்ணாகிப் பதியையும் புத்திரர்களையும் செல்வத்தையும் இழந்து அழுது வருந்தினார். முடிவில் பகவானாலேயே அம்மாயை நீங்கப் பெற்று ஸ்வரூப ஞானத்தைப் பெற்றார்' என்று பரமஹம்சர் தேவிபாகவதத்திலிருந்து எடுத்துக்காட்டியது போல் பல வரலாறுகள் இருக்கின்றன. ஆகவே எந்த மார்க்கத்தில் எவர் சென்ற போதிலும் சித்தி பெறுவதற்கு மாயைக் கடந்தாக வேண்டும். கடப்பதற்குப் பரமாத்வைப் பற்றுதல் ஒழிய வேறு எந்தவித உபாயமும் இல்லை என்று முன்னே உறுதியாகச் சொல்லப்பட்டது.

அதைக்கேட்ட அர்ஜுனன் 'பகவத் சரணாகதியே மாயையைத் தாண்டுவதற்கு மார்க்கமானால் எல்லோருக்கும் அதை ஏன் செய்வதில்லை' என்று ஆலோசிக்க ஆரம்பித்தான். அதையறிந்த கண்ணன் சமாதானம் சொல்லுகிறார்.

மூடர் நராதமர்கண் முன்மாயை யாலறிவின்
பாடழிந்தார் ஆசுரமாம் பாவஞ்சேர் - கேடார்ந்த
தீவினையார் நால்வரெனைச் சேருங் கதியதனின்
மேவியுறு வாரல்லர் மிக்கு.

(இ—ள்) மூடர் — முட்டாள்களும், நராதமர்கள் — மனிதர்களில் அதமர்களும் முன் மாயையால் அறிவின் பாடு அழிந்தார் — (எந்தவித முயற்சியையும் தன் வலிமையால் அழிக்க) முந்தும் மாயை காரணமாக அறிவு கெட்டவர்களும் ஆசுரமராம் பாவம் சேர் — அசுரத்தன்மையாகிய பாவம் சேரப் பெற்று, கேடு ஆர்ந்த தீவினையார் — (அதனால்) துன்பம் நிறைந்து வரும் தீயசெயலையே செய்கின்றவர்களும், நால்வர் (ஆகி நான்கு ரகத்தைச் சேர்ந்தவர்களும்) எனை சேரும் கதி அதனில் — என்னைச் சரணாகதி பண்ணுதலாகிய மார்க்கத்தில், மிக்கு மேவி உறுவார். அல்லர் — எப்பொழுதும் (எங்கும்) பற்றவே மாட்டார்கள்.

நமாம்து^{3}ஷ்க்ருதினோ மூ^{4}டா: ப்ரபத்^{3}யந்தே நராத^{4}மா:
மாயயாபஹ்ருத் ஜ்ஞானா ஆஸுரம் பா^{4}வமாச்ரிதா:

(இ—ள்) மூடா — மூடர்களும், நராதமா: — அதம வழியில் செல்வோரும் மாயயா — மாயையால், அபஹ்ருத்க்ஞானா: — அபகரிக்கப்பட்ட, அறிவையுடையோரும், ஆசுரம் பாவம் — அசுரத்தன்மையை. ஆச்ரிதா:— அடைந்தவர்களுமான, துஷ்க்ருதிந:—

பாவத் தொழில் செய்பவர்கள் மாம் – என்னை, நப்ரபத்யந்தே – ஆசிரியிக்க மாட்டார்கள். (பற்ற மாட்டார்கள்)

ஆஸுரம் பாவம் (ஆசுரமாம் பாவம்) என்பதற்குப் பரஹிம்ஸைக் தன்மை என்று சங்கரர் பொருள் கொண்டார்.

நான்கு ரகமானவர்களின் தன்மைகளை ராமாநுஜர் தனதுரையில் விவரித்திருக்கிறார்.

ராமாநுஜர் :– வீபரீத ஞானத்தால் பகவானுக்கே சேஷமான (உடையவனுக்குச் செல்வம் போல் அடிமைப்பட்ட) ஜீவாத்மா சரீராதிகளை மமதை (புறப்பற்றுக்) கொண்டு தங்களுக்கே உரியவை என்று நினைத்திருப்பவர்கள் மூடர்கள். பிரும்மம், ஜீவாத்மா முதலியவற்றின் ஸ்வருபத்தைச் சாமானியமாய் அறிந்திருந்த போதிலும் சித்தி பெறுவதற்குரிய வழியில் செல்லமாட்டதவர்கள். நராதமர்களாவர் ஞானமிருந்தும் வஞ்சக யுக்திகளால் பகவத் ஸ்வரூபத்தை மறுத்துரைப்போர் மாயையால் அறிவின் பாடழிந்தோர் (அபக்ருக்ஜ்ஞாநா:) ஆவார்கள். ஈசுவரனும் அவனுக்கே உரிய எல்லா வஸ்துக்களும் யுத்திவாதங்களைக் கொண்டு இல்லை என்று மறுக்க முடியாதபடி, உண்மை என்று நிரூபிக்கப்பட்ட போதிலும், அவ்விவரத்தைக் கேட்கும் போதே ஆத்திரமும் விரோதமும் மனதில் கொள்ளுகிறவர்கள் அஸுர பாவம் (தன்மை) உடையவர்களாவார். ஆக இந் நான்கு வகுப்பாரும் ஒருவரைவிட ஒருவர் விசேஷ பாதகர்கள் என்றார்.

ராகவேந்திரர்:– பழக்க ஒழுக்கத்தால் (நராதமர்) மனிதரில் கடையாயவர் விவேகம் குறைந்தவர்களாய், நிலையுள்ளவற்றையும் நிலையில்லாதவற்றையும் பகுத்து உணர்ந்து கொள்ள மாட்டாதவர்கள். 'மாயையால்' என்பதற்குப் பகவானின் திருவுள்ளத்தாலும் தமது சுபாவத்தாலும் என்று பொருள். உள்ளதை உள்ள படியே தெளிவாக உணர்ந்துகொள்ள முடியாதபடி அறிவை இழந்தவர்கள் 'அபஹ்ருத்க்ஞானா:' எனப்பட்டனர். இவை முதலிய காரணங்களால் அசுரத்தன்மை வாய்ந்தவர்கள் இந்திரிய விஷயங்களால் வரும் இன்பத்தையே விரும்பி, பகவானாகிய என்னை உபாஸிக்க விரும்புவதில்லை; பற்றுவதுமில்லை.

என்னை உபாஸிக்காத தீயோர் நால்வர் இங்ஙனமிருக்க என்னை உபாஸிக்கும் நல்லோர்களும் நான்கு வகையான விருக்கின்றனர் என்று கண்ணன் அடுத்தபடியாகச் சொல்கிறார்.

மாடிழந்தான் மன்னுயிரை வேண்டுணர்வோன் வான் பொருளைத்

தேடியிருப்பான் ஞானம் சேர்வுற்றான் - பீடமரும்

நல்வினையார் நால்வரிவர் என்பால் நலம்புனையும்

தொல்வினையால் சேர்வர் துணிந்து

(இ—ள்) மாடு இழந்தான் – (பொருள் செல்வம் அல்லது ஆரோக்கிய) செல்வத்தை இழந்து பெறும் பொருட்டு வருந்துகின்றவன். மன்னுயிரை வேண்டு உணர்வோன் – தன்னைப்பற்றிய ஸ்வரூப ஞானத்தைப் பெற விரும்புபவன், வான் பொருளைத்தேடி இருப்பான் – மிக்க பொருளை மேலும் மேலும் பெற விரும்புவோன் ஞானம் சேர்வுற்றோன் – ஞானம் கைவரப்பெற்ற ஞானி பீடுஅமரும் – (ஆக இவ்விதம்) பெருமை தங்கிய, நல்வினையார் நால்வர் இவர் – புண்ணியமுடைய நான்கு வகையான இவர்கள் நலம் புனையும் தொல்வினையால் – நன்மை மிகுந்த பழமையான (பல பிறவிகளில் செய்த) நற்கருமங் காரணமாக, துணிந்து (உபாயம் பலம் இரண்டிலும்) உறுதி கொண்டு, என்பால் சேர்வர் – என்னையே பற்றுவார்கள் (உபாஸிப்பர்)

சதுர்விதா ^{4} ***பஜந்தே*** ^{4} ***மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந***

ஆர்தோ ஜிஜ்ஞா ^{2} ***ஸு: அர்தார்*** ^{2} ***தீர் ஜ்ஞாநீ*** ^{4} ***ச பரதர்ஷ*** ^{4} ***ப***

(இ—ள்) பரதர்ஷப – பரதவம்சக்திலுதித்தவனே! ஆர்த்த: – (இல்லாததைப் பெற விரும்பும்) ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு: – ஸ்வரூப ஞானம் பெற விரும்புவோன், அர்த்தார்த்தீ – பொருளை விரும்புவோன் ஜ்ஞானீச – ப்ரும்ம ஞானியும், சதுர்விதா:– நான்கு வகையினரான, ஸுக்ருதிநஜநா:– புண்ணியசாலிகளான ஜனங்கள், மாம்பஜந்தே – என்னைப் பஜிக்கின்றனர்.

'மாடு' என்பது பொதுப்படையாகச் செல்வத்தைக் குறிக்கும் பழந்தமிழ்ச்சொல். அதைப் பொருள், கல்வி, பதவி, அதிகாரம், ஆரோக்கியம் எல்லாவற்றையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இல்லாததையோ இழந்ததையோ வருந்திப்பெற விரும்புவோனைக் குறிக்கும் ஆர்த்த:' என்ற மூலச் சொல்லுக்கு அதனால் 'மாடிழந்தான்' என்ற பாடல் தொடர் நேர் பொருளாயிற்று.

செல்வத்திலிருந்து கொண்டே திருப்தியடையாமல் மேலும் மேலும் பெற விரும்புவோனும் பகவானை விருப்பம் நிறைவேறும் பொருட்டு

உபாஸிக்கிறான். அவனே அர்த்தாரத்தீ எனப்படுவன். எவ்வளவு கிடைத்த போதிலும் திருப்தி பெறாத பேராசையுடையவர்களாயிருந்த போவதிலும் அதைப் பெறுவதற்கு அடிப்படையான உறுதியான உபாயம் என்றுணர்ந்து பகவானை உபாஸிக்கிறார்கள். ஆகவே அவர்களும் பக்தர் வரிசையில் பொதுவாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த ரகத்தைச் சேர்ந்தவகளின் தன்மை முழுதும் தோன்றும் பொருட்டு 'அர்த்தார்த்தீ' என்ற மூலத்தொடர் பாடலில் வான்பொருளைத் தேடியிருப்பான் என்று விவரிக்கப்பட்டது பாராட்டத்தக்கது.

'ஜிக்ஞாஸு' என்பதற்குச் சொரூப ஞானத்தையுடைய விரும்பிப் பகவானைப் பிரார்த்திப்பவன் என்று பொதுவாகச் சிலரும், ஜீவாத்மாவாகிய தன்னை அறியும் பொருட்டுப் பகவானை உபாஸிப்பவன் என்று குறிப்பாகச் சிலரும் பொருள் கொள்வர். வேறாகப் பொருள் கொள்ளப்படினும் 'ஞானம் ஸித்திக்காமல் அது ஸித்திக்கும் பொருட்டுப் பகவானை உபாஸிப்பவர் என்று ஒரு சாராரும் பேதமின்றி ஒப்புக் கொள்கின்றனர்.

ஞானி என்பவன் தனக்கு எதையும் பகவானிடம் வேண்டாமல் பகவானே தாரகம் போஷணம் போக்யம் என்றுணர்ந்து அவரையே தியானித்துக் கொண்டிருப்பவன்.

துன்புற்ற காலத்தில் அதைப் போக்கிக்கொண்டு இழந்த பதவி அரசு இவற்றை அடைந்து, தான் முன்னேயிருந்த நிலையில் இருக்கும் பொருட்டுப் பகவானாகிய கண்ணனை உபாஸித்தவள் திரௌபதி அவள் 'ஆர்த்த:' என்பதற்கு எடுத்துக்காட்டு. துச்சாதனன் துகில் உரிந்த போது கண்ணனை இவள் பிரார்த்தனை செய்தது ஆர்த்தனின் நிலையைத் தெளிவாகக் காட்டும் என்போரும் உளர்.

ஜிக்ஞாஸுவுக்கு பாகவதத்தில் வரும் உத்தவரை உதாரணமாகக் கூறுவர்.

பாகவத புராணத்தில் வரும் துருவனின் பக்தி வரலாறே அர்த்தார்த்தியின் பக்திக்கு எடுத்துக்காட்டு.

சுயநலம் அறவே நீங்கிப் பிரதிப் பிரயோசனத்தை எதிர் பாராமல் பகவானை உபாஸிக்கும் ஞானியின் நிலையை பிரகலாதனின் வரலாற்றால் அறியலாம். ஆக இதுவரைச் சொல்லி வந்த தீயோர் நால்வர் நல்லோர் நால்வர் இவ்விரு நால்வரில் நல்லோரே சிறந்தவர் அவர்களின் ஞானி மேலும் சிறந்தவன் எப்படி என்பதைக் காண்போம்.

78. அவனே நான்

பிரபஞ்சம் முழுமைக்கும் சேதன அசேதனப் பிரகிருதிகளின் மூலமாய் உற்பத்தி முடிவிற்குக் காரணமாயிருக்கிற பகவானை உயிர்கள் உணர்வதற்குத் தடையாயிருப்பது மாயை. மூன்று வித குண விகாரங்களாயுள்ள பொருள்களாலே உயிர்கள் மோகமடைந்திருக்கின்றன. பிரபஞ்சத்தைத் தன்னிடமே கொண்டிருந்த போதிலும் அதினின்று வேறாயிருக்கிற நாச விகாரமற்ற பகவானை உயிர்கள் மோஹம், மாயை அல்லது பிரகிருதியின் காரணத்தால் அறிந்து கொள்ள முடிகிறதில்லை. மாயையோ அபாரமான வலிமை வாய்ந்ததாயிருப்பதால் அதைக் கடப்பது சுலபமல்ல. கடப்பதற்குப் பகவானைப் பற்றுவதைத் தவிர வேறு எந்த விதமான உபாயமும் இல்லை. பகவானையே சரணமாகப் பற்றியவர்கள் மாயையைக் கடப்பதற்குப் பகவானே ஸித்தோபாயமாக (உறுதியாக வெற்றிதரக் கூடிய உபாயமாக) இருந்த போதிலும் உயிர்களில் பெரும்பாலோர் அசுர சுபாவங்காரணமாகப் பாபிகளாய், மூடர்களாய், அகங்காரிகளாயிருப்பதால் அவரைப் பற்றுவதில்லை.

நான்கு வகையான புண்ணியசாலிகள் மாத்திரம் பற்றுகிறார்கள். அவர்கள் முறையே துன்ப நிவர்த்திக்காகவும், ஞானம் பெறுவதற்காகவும், பொருளைப் பெறுவதற்காகவும் ஸ்வரூப ஞானம் சித்தத்தால் பிரதிப் பிரயோசனம் எதையும் வேண்டாமலும் பகவானைப் பூஜிக்கிறார்கள் என்று முன்னே கண்ணன் சொன்னாரல்லாவா? அந்த நான்குவிதப் புண்ணிய சாலிகள் ஒரேவிதமானவர்கள் தானா? அவர்களில் ஏற்றத்தாழ்வு உண்டா என்று சந்தேகம் ஏற்படுமல்லாவா? அதைப் போக்கக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

ஆங்கதனின் ஞானி யதிகன் அவன்என்றும்
பாங்கிலெனைச் சேர்ந்தேக பத்தியனாய் - நீங்கலுறா
தென்னையவன் செப்பாத வேய்ந்துகக்கும் யானுமவன்
தன்னையுகந் தேயிருப்பன் சார்ந்து

(இ—ள்) அதனின் — அந்த அதிகாரிகளில் (நான்கு விதமான பக்தர்களில்), ஞானி அதிகன் — ஞானி சிறந்தவன் அவன் என்றும் — (ஏனெனில்) அவன் எப்பொழுதும் பாங்கில் எனைச்சேர்ந்து — நல்ல

முறையில் என்னை (உபாயமாகப்) பற்றி ஏகபத்தியனாய் – (பொருள், பதவி உலக இன்பம் இவற்றை நினையாமல்) ஒரே விதமான பக்தி பூண்டவனாய் நீங்கல் உறாது. (என்னை) விட்டுப்பிரியாமல் அவன் செப்பாத ஏய்ந்து உகக்கும் – ஞானி (பேசாமல் தன்னுள்ளே என்னைத்) தியானத்தில் பொருந்தி மகிழ்வான். யானும் – (பகவானாகிய) நானும், சார்ந்து அவன் தன்னை உகந்தே இருப்பன் – பற்றி அவனையே என்னில் கொண்டு மகிழ்ந்து கொண்டே இருப்பேன்.

தேஷாம் ஜ்ஞாநீ நித்ய யுக்த: ஏக பக்திர் விசிஷ்யதே[4]

ப்ரியயோ ஹி ஜ்ஞாநிநோத்யர்தம் அஹம் ஸச மமப்ரிய:[2]

(இ–ள்) தே ஷாம் – அவர்களுள், க்ஞாநீ – ஞானியானவன், நித்ய யுக்த: – எப்பொழுதும்கூடி, ஏகபத்தி – ஒரே பக்திமானாய் (இருப்பது பற்றி), விசிஷ்யதே – சிறப்பிக்கப்படுகிறான். ஹி – ஏனெனில், க்ஞாநிந: – ஞானிக்கு, அஹம் – நான், அத்யர்(த்)தம் ப்ரிய:– மிகவும் பிரியன், ஸச – அவனும் மம – எனக்கு, ப்ரிய:– பிரியன்

ஞானி அடையவேண்டியவன் பகவான் அதற்கு உபாயமும் பகவான். மற்றவர்களுக்கு அடைய வேண்டிய பலன் வேறாய் பகவான் உபாயமாத்திரமாய் ஆவதால் பொருள், இன்பம், ஞானம் முதலிய பலன்களையும் நினைப்பார்கள். பலன் நிறைவேறிவிட்டால் பலனுக்கு உபாயமாயிருந்த பகவானை மறக்கவும் செய்வார்கள். உபாயம் பலன் அல்லது ஸாதனம் ஸாத்யம் என்ற இரண்டையும் பகவானாகவே கொண்ட ஞானிக்கு பகவானைத் தவிர வேறொன்றை எக்காலத்திலும் விரும்ப இடமில்லாதிருப்பதால் அவனது தியானத்தை ஏக பக்தி என்றார். பிறரின் பக்தி பயன் கைகூடுமளவிலே மட்டும் இருப்பதால் ஞானி சிறந்தவன் என்றும், அச்சிறப்பிற்குப் பக்தியே காரணம் என்றும் தெரிவித்தார்.

ஆனால், ஒரு சிலரைப் பேச எடுத்துக்கொண்டு அவர்களில் ஒருவனை மட்டும் புகழ்ந்து பேசினால், அது கூடமாக (மறைபொருளாக) மற்றவர்களைக் குறைவாகச் சொன்னது போலாகுமல்லவா? ஞானி நால்வரில் மேலானவன் என்றால், மற்ற மூவரும் தாழ்ந்தவர் என்று தானே ஏற்படும்? அவ்விதம் தோன்றாமல் இருப்பதற்காகக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

உற்றிவர்கள் எல்லாம் உதாரரே ஞானியெனும்

மற்றிவன்என் றன்னுயிரா வாய்ந்தறிவன் – அற்றமற

என்றும் அவனென்னை ஏலும் பரகதியா
நின்றுணர்வு செய்யு நிகழ்ந்து.

(இ–ள்) உற்று இவர்கள் எல்லாம் உதாரரே – (பத்தி) பொருந்திய இவர்கள் யாவரும் சிறந்தவர்கள்தான். ஞானி எனும் இவன் – (அவர்களில்) ஞானி எனப்படும் இவன், என் தன் உயிரா வாய்ந்து அறிவன் – எனக்கு உயிராக அமைந்திருக்கிறான். என்பதை நிச்சயமாக அறிவேன், அவன் – அந்த ஞானியோ, அற்றம் அற – இடையீடில்லாமல் என்றும் – எப்பொழுதும், என்னை ஏலும் பரகதியா – என்னையே அமைந்த ஒரே சிறந்த உபாயம் (பலம் எல்லாம்) ஆக நிகழ்ந்து நின்று உணர்வு செய்யும் – நிலையான கதியாக எண்ணி இடைவிடாமல் நம்பித் தியானிப்பான்.

உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம்
ஆஸ்தித[2]ஸ் ஸஹி யுக்தாத்மா மாமே வா நுத்தமாம்கதிம்[3]

(இ–ள்) ஏதே ஸர்வ ஏவ – இவர்கள் எல்லாருமே, உதாரா: – வன்மையுடையோர் (சிறந்தவர்) ஜ்ஞாநீது – ஞானியோ, ஆத்மா ஏவ – (எனது) ஆத்மாவென்றே, மே மதம் – என்னுடைய கொள்கை, ஹி – ஏன் என்றால் ஸ: – அவன், யுக்தாத்மா (ஸந்) – என்னடத்தில் மனதை நிலையாக நிறுத்தினவன், மாம் ஏவ – என்னையே, அநுத்தமாம் – ஸர்வ உத்தமமான, கதிம் – கதியாக (பேறாக), ஆஸ்தித: – அடைந்தவனாயிருக்கிறான் (பெற்றிருக்கிறான்)

ஒரு குருடன் தனக்கு வழிகாட்ட மற்றொரு குருடனை நம்புவது போல், பிற உயிர்கள் அசுரத்தன்மைவாய்ந்தவர்களாய் தங்கள் இஷ்டா நிஷ்டங்கள் (விருப்பு வெறுப்பு) நிறைவேறுவதற்காக உபாயம் அல்லாதவற்றை உபாயமாகப் பற்றுகிறார்கள். அவ்வாறில்லாமல் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாய் முடிவான உபாயமாய் இருக்கிற பகவானை, சுயநலங் கருதியாயினும் உபாயமாகப் பஜிக்கிறார்களாகையினால், நல்லோர் நால்வரில் ஞானி தவிர மற்றைய மூவரையும் சிறந்தவர்களே என்றார். ‘உதாரர்’ என்பதற்கு வள்ளல் அல்லது தாராள மனப்பான்மையுடையவோர் என்ற பொருள் உண்டு. சுலோகத்தில் வந்த அதே சொல்பாடலிலும் வந்துள்ளது. இச்சுலோகத்தால் இச் சொல்லுக்கு பகவான் தன்னிடத்திலிருந்து எவர் சிறிதாயினும் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்களைத் தனக்கு எல்லாச் செல்வத்தையும் வழங்கிய பெரிய கொடையாளியாக

நினைக்கிறார். ஆகையால், இங்கு உதாரர் என்கிறார்' என்று உரை சொல்வதுண்டு.

இச்சுலோகத்தில் பகவான் 'ஞானியே எனக்கு ஆத்மா அல்லது அவனே நான்' என்று சொன்னதை 'பிரும்மத்திற்கும் ஜீவனுக்கும் பேதம் கிடையாது. ஜீவனே பிரும்மம்' என்று சொன்னதாகவும் உபநிஷத்தில் மஹாவாக்கியங்களின் பொருளே இதில் குறிக்கப்பட்டது என்று அத்வைத சித்தாந்தக்காரர்கள் கொள்வர். அதினின்றும் மாறுபட்ட பிறர் 'அவனே நான்' என்று இங்கு சொன்னபோதிலும் பிரும்மத்திற்கும் ஜீவனுக்கும் பேதம் உண்டு: இரண்டும் ஒன்றாகாது என்பது தோன்ற, இச் சுலோகத்திற்கு உரையும் கொண்டுள்ளனர்.

ராமாநுஜர் :— 'என்னைத் தவிர ஞானிக்குப் பிராணதாரனை இல்லை அதனால் எனக்கு அவனை (ஞானியை)த் தவிர ஆத்மதாரனை இல்லை' என்பது கண்ணன் கருத்து.

ராகவர்:— தனக்கு அதிகப் பிரியமுள்ள ஒருவனை மற்றொருவன் 'அவனே நான்' என்று உலக வழக்கில் சொல்வதுபோல பகவானும் ஞானிகளிடத்தில் தனக்கு உள்ள பிரியத்தால் 'ஞானியே நானே' என்று கூறியருளினான்.

'உயிர்களுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்ற பகவான் உயிருக்குயிராயவன் எனத் தோத்திரம் செய்யப்படும் பெருமை வாய்ந்தவர். 'ஞானியே எனக்கு உயிர் ஆத்மதாரணை என்று சொல்வது ஈச்வரத் தன்மைக்குச் சேருமா எனில் 'சேரும் என்பதுமே மதம்' என்பதால் விளங்கும். பகவான் ஸர்வ சுதந்திரன் ஆகையால் தன்னிச்சையால் ஞானியை அவ்வாறு கொள்கிறார். அது அவரை எந்த விதத்திலும் பாதிக்காது. பலவந்தமாக அடிமைப் படுவது துக்கமாயிருக்கும் சுதந்திரமாக இச்சைகொண்டு அடிமைப் படுவது அவ்வாறிராது என்று உலகியலில் காணலாம்' என்று பிற்கால உரையாசிரியர் கூறுவர்.

இக் கீதாச் சுலோகம் போன்ற பொருளுடைய பக்தர் பாடல்கள் பல இருக்கின்றன.

'யானும் நீயே என்னுடைமையும் நீயே

என்று நம்மாழ்வாரும்.

நாரணனே நீ என்னை அன்றி இலை

என்று திருமழிசைப் பிரானும் கூறியது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

79. பிற தெய்வங்களும் உபாஸனையும்

பரமாத்வாகிய பகவானைப் பலர் பலவிதமான நோக்கங்களுடன் உபாசிக்கிறார்கள். சிலர் துன்ப நிவர்த்தியின் பொருட்டுப் பிரார்த்திக்கிறார்கள் பொருளை அடைவதற்காகச் சிலர் வேண்டிக் கொள்கிறார்கள். ஞான சித்தியின் பொருட்டுக் பலர் பிராத்தனை செய்கிறார்கள். பகவானிடம் எதையும் வேண்டாமல் சிந்தையில் பகவானைத் தவிர வேறு எதையும் கொள்ளாமல் பகவானையே எப்பொழுதும் தியானிக்கின்றவன் ஞானி. அவனே சிறந்த பக்தன். புண்ணிய சாலிகள் நால்வருள் அவனே மிகச் சிறந்தவன் கோரிய பலன் கிட்டியவுடன் பகவானை மறக்கும் அர்த்தார்த்தி முதலியோரைப்போல் அல்லாமல் எப்பொழுதும் பகவானையே உத்தம கதியாக நம்பியிருக்கும் ஞானி பகவானுக்கு உயிர். 'பகவானே அவன்' என்று கண்ணன் முன்னே சொன்னரல்லவா? அத்தகைய பக்தனின் தன்மையை மேலும் சொல்லுகிறார்.

புண்ணியமார் பல்பிறவி பூண்டியன்றோன் அந்தத்து
நண்ணியுணர் வென்னை நயத்ததடையும் - எண்ணியுயிர்
எல்லாமும் வாசுதேவனே தான்என உணர்ந்த
நல்லான் மிகவரிய னாட்டு.

(இ—ள்) புண்ணியம் ஆர் பல் பிறவி பூண்டு இயன்றோன் — புண்ணியம் மிகுந்த பல பிறப்புகளை மேற்கொண்டவன் அந்தத்து — முடிவில், உணர்வு நண்ணி — ஞானம் பெற்று, என்னை நயந்து அடையும் — என்னை விரும்பி அடைகிறான் உயிர் எல்லாமும் — பிராணிகளின் பிரபஞ்சம் முதலியயாவும், வாசுதேவனேதான் என எண்ணி உணர்ந்த — பகவானாகிய வாசுதேவனே (யன்றி வேறில்லை) என நினைத்து அனுபவத்தால் தெரிந்து கொண்ட, நல்லான் — மஹாத்மா, நாட்டு மிக அரியன் — உலகத்தில் மிக அபூர்வம் (துர்லபம்)

பஹூநாம் ஜந்மநாம் அந்தே ஜ்ஞாநவாந்[2] மாம் ப்ர[4]ப[3]த்யதே
வாஸு[3]தேவஸ் ஸர்வமிதி மஹாத்மா ஸுதுர்லபா:

(இ—ள்) பஹூநாம் ஜந்மநாம் அந்தே – பல பிறவிகள் எடுத்ததன் முடிவில், க்ஞாநவாந் – ஞாநியாய்மாம் ப்ரபத்யதே – என்னை அடைகின்றான். வாஸுதேவ:— வாசுதேவனே, ஸர்வம் இதி—எல்லாம்

என்கிற (உணர்வுடைய), ஸ:மஹாத்மா அப்படிப்பட்ட மஹான், ஸுதுர்பல:– மிகவும் அரியன்.

ஞானம் மோக்ஷத்திற்குச் சாதனமாகச் சொல்லப்படுகிறது. பகவானின் இயல்பை (ஸ்வரூபத்தை) உணர்ந்து கொள்ளுவதே ஞானமாகும். அப்படியாயின் அந்த ஞானத்தைப்பெற்று அநேகமாக எல்லோரும் முக்தி பெற்றுவிடலாமே? ஏன் பெறுவதில்லை? என்ற கேள்வி பிறக்கிறது. அக் கேள்விக்கு விடை இச்சுலோகத்தில் அடங்கியிருக்கிறதெனக் கொள்ளலாம்.

பகவத் ஸ்வரூபத்தைச் சாஸ்திரத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். பிறருக்கு எடுத்துச் சொல்லலாம். அதை நம்பி மறுக்காமல் பலர் இருக்கவும் செய்யலாம். இவர்கள் யாவரும் கடவுள் தன்மையைத் தெளிந்து கொண்டவர் ஆகார். அனுபவ சாத்தியமாகச் சர்வமும் கடவுளே என்று உணர்ந்து உலகப் பொருள்களின் பற்றுக்கள் அறவே தோன்றாது, வாசுதேவனையே பற்றுவது எல்லோருக்கும் சுலபமாகச் சித்திக்காது. பல பிறவிகளில் அவன் பொருட்டுச் செய்யப்பட்ட யோக முயற்சியும் பயிற்சியும் சேர்ந்து அதன் பலனாக ஒரு ஜந்மத்தில் இத்தகைய ஞானம் அனுபவ சாத்தியமாகும்.

'வாஸுதேவ: ஸர்வம்' (எல்லாமும் வாசுதேவனே) என்பதற்கு மூன்று விதமாகப் பொருள் கொள்ளப்படுகின்றன.

அத்வைதம்:– எல்லா வாஸுதேவனே; அவனையன்றி வேறாக ஜீவனாகிய நான் பிரபஞ்சம் முதலிய வேறான பொருள் இல்லை என்ற ஞானம்.

விசிஷ்டாத்வைதம்:– 'நான் வாசுதேவனுக்கே ஆட்பட்டவன் என்னுடைய ஸ்வரூபம், ஸ்திதி (இருப்பு) பிரவிருத்தி (முயற்சி) எல்லாம் வாசுதேவனுடைய அதீனம்' என்கிற உணர்வு

த்வைதம்:– வாசுதேவனே வாழ்வு தாழ்வு அழிவு முதலிய எல்லாவற்றிற்கும் காரணன் என்னும் உணர்வு ஸர்வம் (எல்லாம்) என்பது பகவான் பூர்ணன் என்பதையும் குறிக்கும்.

வாசுதேவனே எல்லாமாய்ப் பரிபூரணனாய் இருக்கும்பொழுது உலகில் பலர் பிற தெய்வங்களை உபாசிப்பதேன்? பலவிதப் பெயர்களையுடைய பல மூர்த்திகளை உபாசிக்கும் வழக்கம் உலகில் எங்ஙனம் தோன்றியது? என்று வரும் வினாக்களுக்கு விடை அடுத்துவரும் சுலோகங்களில் அளிக்கப்படுகிறது.

காமங்க ளான வவற்றால் கருத்தழிந்தார்
சேமமுற வேமற்றைத் தேவதைகள் - நாமங்கள்
பற்றியநிய தங்களுடன் பண்டைத்தம் வாசனையால்
உற்றியல்-வான்பால் உகந்து.

(இ—ள்) காமங்கள் ஆன அவற்றால் – (இந்திரிய விஷயங்களால் வரும்) ஆசையால் கருத்து அழிந்தார் – அறிவு கெட்டவர்கள், சேமம் உறவே – க்ஷேமத்தை அடையக்கருதி, மற்றைத் தேவதைகள் நாமங்கள் – பிற தெய்வங்களின் பெயர்களைக்கொண்டு நியதங்களுடன் – (அதற்கு உரிய ஆதார அனுஷ்டான) முறைப்படி, பண்டைத்தம் வாசனையால் – பூர்வத்தில் செய்த (பாப) வாசனை காரணமாக அன்பால் உகந்து உற்று இயல்வர் – பிரியத்தோடு மகிழ்ந்து (பிறதெய்வ உபாசனையிலே) பொருந்தி இருப்பார்கள்.

காமை ஸ்தைர் ஹ்ருதஜ்ஞா நா: ப்ரபத்யந்தே³ந்ய தே³வதா:
தந்தம் நியம மாஸ்தா²ய ப்ருக்ருத்யா நியதாஸ்வயா

(இ—ள்) (புருஷா: – புருஷர்கள், ஸ்வயா ப்ரக்ருத்யா – தமது பாப வாஸனையால், நியதா: – நித்தியமும், தை: தை: – அந்தந்த காமை:— விஷய ஆசையால், ஹ்ருதக்ஞா நா:— அபகரிக்கப்பட்ட அறிவையுடையவர்களாய், அந்யதேவதா: – இதர தெய்வங்களை தம் தம் நியமம் – அதற்குரிய நியமத்தோடு, ஆஸ்தாய – அடைந்து, ப்ரபந்யந்தே – ஆச்ரயிக்கிறார்கள்.

கீதார்த்ரத தீபிகை என்னும் நூலில் இச்சுலோகத்திற்குப் பின்வரும் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது:— 'இங்கு கண்ணன் இதர தெய்வங்களை' என்று கூறியது யாகத்தால் பஜீக்கப்படும். இந்திராதி தேவதைகளைக் குறிக்கும் யாகம் செய்வது மிகப் பிரயாசமான காரியம் அதனால் பெறும் பேறு (பலன்) மிகவும் அற்பம். யாகம் சரியாக நிறைவேறாவிட்டால் பலன் கிட்டாது போவதோடு பாபமும் சம்பவிக்கும் பகவானைத் தியானிக்கும் விஷயத்தில் கொஞ்சம்கூடப் பிரயாசம் இருப்பதற்கில்லை அன்றியும் பிரும்மத்தியானத்தை ஒரு சிறிது செய்து பின்பு செய்யாமல் விட்டாலும் செய்த அளவிற்குப் பலன் உண்டாகும்; தோஷம் (பாபம்) உண்டாகவே செய்யாது....."

இப்பகுதியில் வரும் பிற்பொருளை எல்லோரும் அங்கீரித்த போதிலும் 'இதர தெய்வங்களை' என்றதற்கு 'யாகத்தால் பஜிக்கப்படும் தேவதைகளை' என்று கூறப்பட்ட உரையை எல்லா சிந்தாந்திகளும்

அங்கீகரிப்பதில்லை. யாக முதலிய கருமங்களைப் பகவதர்ப்பணமாகச் செய்யவேண்டியதென்றும் செய்யாது விடுவதுகூடாது; அது பாபமாகும்' என்று கண்ணன் கீதையில் முன்னே சொல்லியிருப்பதால் இவ்வுரை பொருந்தாது எனக்காரணம் காட்டி இது 'பல சமயங்களுக்குரிய வாயு தெய்வங்களைக் குறிக்கும்' எனச் சொல்லுவதைப் பொருந்துமாறு கொள்க.

இச்சுலோகப் பொருள் அடியில் வரும் நம்மாழ்வார் பாட்டாலும் நன்கு விளக்கப்படுவது நோக்கத்தக்கது.

அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனவடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

(அறிவு – காமத்தால் அபகரிக்கப்பட்ட அறிவு விதிவழி – பூர்வ கர்ம வாசனைக்கேற்ப)

பரமாத்மா ஒருவராயிருக்க உலகில் பல துறைகளும் மார்க்கங்களும் இருப்பதற்குப் பூர்வகர்ம வாஸனை மாத்திரம் தான் காரணமா? பகவானின் உதவியின்றி அவை தழைக்குமா? என்றுவரும் வினாவிற்கு விடை அடுத்தபடியாகத் தருகிறார்.

இங்கென் உருவாம் இமையோரை யாரையார்
அங்கருமத்தில் அர்ச்சிப்பான் இச்சிப்பார் - சங்கையற
நான்அவருக் காங்கவர்பால் நன்றிருப்பான் தான்சலியா
தானவகை செய்வன் அமர்ந்து

(இ–ள்) இங்கு என் உருவாம் – இப்பிரபஞ்சத்தில் என்னுடைய ரூபமாகிய, இமையோரை – தேவர்களில் யாரையார் அம்கருமத்தில் இச்சிப்பார் – எவரைஎவர் தம்மனதில்வைத்துப்பூசிக்கும் பொருட்டு விரும்புகிறார்களோ, அவருக்கு – அத்தகைய பக்தர்களுக்கு, அவர் பால் – (அவர் விரும்பும்) தெய்வங்களிடம், சங்கை அற – சந்தேகமில்லாமல் (உறுதியாக) நான்தான் – பரமாத்மாவாகிய நானே, சலியாறு நன்று இருப்பன் – நிலையாக விச்வாசம் ஏற்படும் பொருட்டு, ஆளவகை அமர்ந்து செய்வன் – (பூர்வ கருமத்திற்கு) ஏற்பவிடாமல் செய்து கொண்டேயிருக்கிறேன்.

யோயோ யாம்யாம் தநும் ப[4]க்த ச்ரத்[3]த[4]யார்சிது மிச்ச[2]தீ
தஸ்யதஸ்யாசலாம் ச்ரத்[3]தா[4]ம் தாமேவ வித[4]தாம்யஹம்

(இ–ள்) ய: ய: பக்த: – எந்த எந்த பக்தன், யாம் யாம் த நும் – எந்தெந்த மூர்த்தியை, ச்ரத்தயா – சிரத்தையுடன், அச்சிதும் இச் சதி – அர்சிக்க விரும்புகிறனோ தஸ்ய தஸ்ய – அவன் அவனுடைய தாம் ஏவ ச்ரத்தாம் – அந்தச்சிரத்தையையே, அசலாம் – திடமாக, அஹம் விததாமி – நான் செய்கிறேன்.

வாஸுதேவன் எல்லாமாய்ருப்பதால் எந்தத் தெய்வத்தைப் பூஜித்தாலும் அது பகவானைப் பூஜித்ததாகவேயாகும். எல்லாம் பகவானுடைய ரூபங்களேயாதலால் அதை உணர்த்தவே தமிழ்ப் பாடலில் 'என் உருவாம் இமையோர்' எனப்பட்டது. ஆனால் இதர தெய்வத்தை உபாஸிப்பவன் பரமாத்மா' என்ற ஒருமை உணர்வு இல்லாமல் பேத புத்தியோடு தனது கர்மாநு குணமாகத் தோன்றும். ஆசைக்கேற்ப அது நிறைவேறும் பொருட்டு கர்மாக்குப் பிரியமான தெய்வத்தை உபாசனைக்கு எடுத்துக் கொள்ளுகிறான். பேத புத்தியோடு உபாஸனைக்குத் தெய்வத்தை தேர்ந்து கொண்டாலும் அவனுக்கு அத்தேவதை விஷயமான பக்தியை நிலையாகச் செய்வது பகவானே தான் என்பது இதனால் வெளியாயிற்று.

80. வாஸுதேவனும் பிற தெய்வங்களும்

வாஸுதேவன், விஷ்ணு, நாரயணன் முதலிய பெயர்கள் பகவானின் ஸர்வ வியாப்தியைக் (எங்கும் பரந்திருக்கம் தன்மையை) குறிக்கும் இதை வாயினால் சொன்னால் போதாது, மனத்தால் நினைத்தாலும் போதாது, மனத்தால் உணரவேண்டும். அது அகக் காரணங்களுக்கும் புறக்காரணங் களுக்கும் அநுபவமாக வேண்டும். இவ்வாறு அனுபவ பூர்வமாக உணர்ந்து 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்' என்று பேசும்படி 'தாரகம் போஷணம் போக்யம்' எல்லாம் வாஸுதேவனே என்ற முடிவான ஞானத்தோடு பகவானை பஜிப்பதற்குப் பல பிறப்புகளில் செய்த நல்வினைப் பயன்கள் வேண்டும் அவ்வாறான மனோபாவத்தைப் படைத்த மஹாத்மா மிக அரிது.

வாஸுதேவனே ஆதாரமாய்ப் எல்லாமாய் இருக்கும்பொழுது, ஜீவ கோடிகளில் பலர் பூர்வ ஜந்ம வாசனையால் விரும்பியதைப் பெறும் பொருட்டு ஞானமின்றிப் பிற தெய்வங்களையும் உரிய நியமத்தோடு பூசிக்கின்றார்கள். எந்த தெய்வத்தை எந்த நாமத்தைச் சொல்லி எந்த ரூபமாக – எந்த பக்தன் பூசிக்க விரும்பியபோதிலும் அவன் விசுவாஸத்தை நிலையாகச் செய்வது நானே என்று கண்ணன் முன்னே கூறினார். அப்பொழுது பலனைக் கொடுப்பது பிறதெய்வங்களா? பகவானா? என்ற ஐயம் அர்ஜுனனுக்கு உண்டாயிற்று அடுத்து வரும் சுலோகத்தில் கண்ணன் சந்தேகத்தைப் போக்குகிறார்.

அந்த விருப்பத் துடனே யவரையவர்
தந்த மலதிறைஞ்சித் சார்வுறுவர் சிந்தையுடன்
என்பால் செயப்பட்டே இங்கவரால் காமமவை
தம்பால் அவரடைவர்தாம்

(இ–ள்) அவர் – (பிற தெய்வங்களை) ஆராதிப்போர், அந்த விருப்பத்துடனே – செல்வம் அதிகாரம் சுவர்க்க பதவி முதலியவற்றில் ஆசை கொண்டு அவரை – பிறதெய்வங்களை, தம்தம் அலது இறைஞ்சி – தங்கள் சோரூபத்திற்குப் பொருந்தாத வகையில் ஆராதித்து, சிந்தையுடன் சார்வுறுவர் – பிரியமாய் அடைவார்கள். காமம் அவை – விரும்பியவைகளை, என்பால் செயப்பட்டே – என்னால் அளிக்கப்பட்டே, இங்கு – இப்பிரபஞ்சத்தில், அவரால் – அந்தத் தெய்வங்களின் மூலமாக அவர் தம்பால் அடைவர் – அப்பக்தர்கள் தங்களுக்குப் பெறுகிறார்கள் (தாம் – அசை)

ஸ தயா ச்ரத்3த4யா யுக்த: தஸ்யாராத4நம் ஈஹதே
லப4தே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹிதாந்.

(இ–ள்) ஸ: – அவன் தயா ச்ரத்த யுக்த: – அந்த சிரத்தையோடு கூடினவனாய், தஸ்ய – அத் தேவதையின், ஆராதனம் – ஆராதனத்தை (பூஜையை), ஈஹதே – விரும்புகிறான், தத:– அதனால், தாந் – அந்த கர்மாந் ஏவ – விரும்பிய பலன்களையே மயா – என்னால், விஹிதாந் – அளிக்கப்பட்டவைகளாக, லபதே – அடைகின்றான்.

இச்சுலோகத்திற்கு இன்னும் ஒரு வகையாகப் பின்வருமாறு பொருள் கொள்வதுமுண்டு:– "ஒவ்வொருவரும் வாஸுதேவனே ஆதி காரணன். ஆதிமூலமே என்று அறிந்திருந்தபோதிலும் பூர்வ

வாசனையின் தொடர்பால் பகவானை ஏதாயினும் தாம் விரும்பும் வெவ்வேறான ரூபங்களையும் நாமங்களையும் கொண்டு வணங்குகிறார்கள். அக்குறிப்பிட்ட ரூபத்திலோ விக்கிரகத்திலோ தெய்வத்தினிடமோ வரும் அவர்களுடைய நம்பிக்கை அல்லது விச்வாஸத்தை நானே நிலையாகச் செய்கிறேன். அந்த விச்வாஸத்தோடு கூடியவன் நாளடைவில் சரியான மார்க்கத்தைத் தெரிந்து கொண்டு என்னையே ஆராதிக்கத்தொடங்குகிறான் முடிவில் எதையும் வழங்கும் தன்மைவாய்ந்த ஒருவனாகிய என்னலேயே முக்தியையும் விரும்பியவேறு பலன்களையும் பெறுகிறான்.

'மயா ஏவ' (என்பால் செய்யப்பட்டே – என்னலேயே) என்பதற்கு 'பரமாத்மாவாயும் அந்தராத்மாவாயும் பிற தெய்வங்களிடமிருக்கிற என்னால்' எனப் பொருள் கொள்ளும் உரையாசிரியரும் உண்டு. கடவுள் தத்துவத்தை விளக்க ஒரு ஐரோப்பிய கவி கொடுத்திருக்கும் உதாரணம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

ஒருவனுக்கு உடலில் தோன்றிய புண்ணில் சீ(ழ்) மிகுந்து புரையோட ஆரம்பித்தது புரையில் (துவாரத்தில்) அங்கு மிங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்த கிருமியின் காரணமாக வேதனை அதிகரித்தது. வேதனை தாங்காத நோயாளி, புண்ணிலிருந்த கிருமியை எடுத்து வெளியே விட்டான் அப்பொழுது கிருமி நோயாளியைப் பார்த்து நான் எனது முயற்சியாலும் உழைப்பாலும் வருந்தி, எனக்கு வேண்டிய உணவைத் தேடிப் பெற்று வந்தேன். அந்த இடத்திலிருந்து என்னை ஏன் வெளியே எடுத்துவிட்டாய்? இது உனக்குப் பாபமில்லையா?' என்று கேட்டது. அதற்கு நோயாளி கிருமியைப்பார்த்து 'எனது சுகத்திற்காக நான் உண்டு வளர்ந்த என் தேகத்திலிருந்த ரத்தத்திலிருந்த பதார்த்தங்களையே நீ உனது உழைப்பினாலே பெற்றதாகப் பிரமித்துக் கொண்டு, அதை உண்டு வளர்ந்தாய். எனக்காக நான் உண்ணாவிட்டால் நீ அந்த இடத்திலிருந்து உன் உணவைப்பெற முடியாது. என்போகத்திற்காக அமைந்த உடலுக்குத் தீங்கு செய்கின்ற உன்னை வெளியே அகற்ற எனக்கு உரிமையுண்டு' என்று பதில் சொன்னானாம். இவ்வுதாரணத்தில் தேகி அல்லது மனிதனை பகவான் போலவும் பிறதெய்வங்களை உபாசித்து அவர்களால் தன் உபஸனா பலத்தைக்கொண்டு, பலன் பெறுவதாக நினைப்போரைக் கிருமிகள் போலவும் கொள்ள வேண்டும்.

எப்பெயரால் எந்த விக்கிரகத்தை ஆராதித்தாலும் கோரிய பலனைப் பெறுவதற்குப் பகவானே ஆதிகாரணமாயிருக்கிறார். பிரும்ம இந்திராதி தேவர்கள் யாவரும் வழங்கும் கருவிகளே என்பது இதனால் விளங்குகிறது. எந்த மூர்த்தியை – எந்தத் தெய்வத்தை ஆராதித்தாலும் பகவானே பலனைத் தருகிறார் என்றால், பிற தெய்வங்களையே ஆராதித்தால் போதுமே அவ்வாறு செய்வோர் தங்கள் வழியைக் கைவிட வேண்டியதில்லையே. பகவானை ஆராதிக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை என்று ஏற்படும் அல்லவா? அவ்விதமான சந்தேகத்தைப் போக்கக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

அற்ப மதியான அவர்க்கங் கமைபலந்தான்
நிற்பதில தாக நிகழுமே - கற்பமரர்
பின்சேர்ந்தார் அங்கவரைப் பெற்றோர் அவர்எனையே
என்சேர்ந்தாரும் பெறுவர் இங்கு.

(இ–ள்) அற்ப மதியான அவர்க்கு – (என் சொருபத்தையறியாத) அற்ப புத்தியையுடைய அவர்களுக்கு அமைபலம் தான் – ஏற்பட்ட பலனானது, நிற்பது இலதாக நிகழும் – நிலையாக இராமல் முடிவுள்ளதாக இருக்கும். கற்பு அமரர் பின் சேர்ந்தார் – (இந்திரன் முதலிய) அறிவுடைத் தெய்வங்களைப் பற்றியவராகிய அவர் – அவர்கள், அவரைப் பெற்றோர் – அத்தெய்வங்களையே அடைகின்றனர். என் சேர்ந்தாரும் – என்னை அடைந்து ஆராதித்தவர்களும் எனையே, பெறுவர் – என்னையே அடைகிறார்கள்.

2 4 4
அந்த வத்து பலந்தேஷம் தத்பவத்யல்ப மேதஸாம்
3 3 3 4
தேவாந் தேவயஜோ யாந்தி மத் பக்தா யாந்தி மாமபி

(இ–ள்) தேஷாம் அல்பமே தஸாம் அந்த அற்ப மதிகளுக்கு, தத்பலம் – (பிற தெய்வ வழிபாட்டால் கிடைக்கும்) அந்தப் பயனானது, அந்தவத் பவதி – முடிவுள்ளதாகக் கிடைக்கிறது, தேவ யஜ: – தேவர்களை யாராதிக்கும் அத்தகையோர், தேவாந் யாந்தி – தேவர்களை அடைகின்றனர். மத் பக்தா: அபி – எனது பக்தர்களும், மாம் யாந்தி – என்னை அடைகின்றனர்.

இதர தெய்வங்களை ஆராதித்து அத்தெய்வங்களையடைந்தோர் மீண்டும் பிறப்பார். பகவானை அடைந்தோர் மீண்டொருகாலும் பிறவார் என்பது இதன் கருத்து.

இவ்விரண்டு சுலோகங்களாலும் வெளியான சாரப்பொருள் பின்வருமாறு:– 'எவர் எந்தப் – பெயரால் – எந்த விக்கிரகத்தை எந்த முறையில் ஆராதித்தாலும், அவ்வாராதனைக்கு அடிப்படையாக வேண்டிய விச்வாசத்தை மனதில் நிலையாகச் செய்கின்றவரும் விரும்பிய பலனைக் கொடுக்கின்றவரும் பகவானேதான். பிற தெய்வங்களை ஆராதித்துப் பெறும் பலன்கள் எவையாயிருந்தபோதிலும் நிலையாகவிருக்க முடியாது. பிற தெய்வங்களை ஆராதிப்போர் அத்தெய்வங்களை அவர்களுக்குரிய உலகில்போய் அடைந்து, ஆனந்தத்தை அநுபவிக்க முடியுமானாலும் அப்பலன் அத்தெய்வமும் அத்தெய்வ உலகும் நிற்கும்வரைத் தான் நீடிக்கும். அதன்பின் அழியும், அதனால் அவ்வுலகை அத்தெய்வத்தை அடைந்தோர், மீண்டும் பிறப்பார், பிறவாப் பேறாகிய முக்தியை பகவான் ஒருவனை ஆராதித்துத்தான் பெற முடியும்' என்பது.

இக்கருத்தை ஒரு பக்தர் பின்வரும் ஒரு பாடலில் வெகு அழகாகவும் தெளிவாகவும் காட்டுகிறார்:–

தேருங்கால் தேவன் ஒருவனே என்றிருப்பர்
ஆரும் அறியார் அவன் பெருமை - ஒரும்
பொருள்முடிவும் இத்தனையே எத்தவம் செய்தார்க்கும்
அருள்முவது ஆழியான் பால்.

(தேரும் கால் – ஆராயும்பொழுது, ஒரும் – கருதும், அருள் முடிவது – பலன் சிந்திப்பது ஆழியான் பால் – வாசு தேவனிடமே)

மின்சாரப் பொத்தான்களால் வெளிச்சத்தைத் தர முடியுமா? அமுக்கினால் வெளிச்சம் வருகிற உண்மைதான் ஆனால் மின்சார சக்தி நிலையத்திலிருந்து சக்தி பரவாவிடில்? பொத்தானால் என்ன செய்ய முடியும்?, விளக்கேற்றும் மின்சாரப் பொத்தான் ஸ்தானத்தில் தேவதைகள் இருக்கின்றனர். மின்சார சக்தி நிலையத்தின் ஸ்தானத்தில் பகவான் இருக்கிறார் வெளிச்சத்தை விரும்பும் சமூகம் எதை முதலில் கவனிக்க வேண்டும்?

81. மாயையின் விசித்திரம்

அற்ப மதியை உடையவர்கள் அற்ப பலன்களை விரும்பிப் பல்வேறு தெய்வங்களை உபாஸிக்கிறார்கள். தனக்கு வேண்டாத

விரோதியை மறைமுகமாகக் கெடுப்பதற்கு மந்திரங்களால் துஷ்ட தேவதைகளை உபாஸித்து 'செய்வினை, ஏவல்' முதலிய தீச் செயல்களில் சிலர் ஈடுபடுகின்றனர். இத்தொழில்களில் தேர்ச்சி பெற்று இவற்றையே ஜீவனமாகக் கொண்டு பிறருக்கு உதவி செய்வோரும் இருக்கின்றனர். ராவணனின் புதல்வன் இந்திரஜித்து நிகும்பலையில் யாகம் செய்வதாக ராமாயணத்தில் வரும் குறிப்பு இத்தகைய உபாஸனையையே குறிக்கும்.

பணம், பதவி, செல்வாக்கு, சொல்வன்மை முதலியவற்றில் விரும்பியவாறு விரைவாகச் சித்தி பெறுவதற்கும். மலடர்கள் புத்திரப்பேற்றை அடைவதற்கும் உரிய தெய்வங்களையோ நவக்கிரகங்களையோ உபாஸிக்கிறார்கள். இவ்வாறு பிற தெய்வங்களை உபாஸிப்பதால் வரும் பலன்கள் முடிவுடையதாகவேயிருக்கும். அவ்வித உபாஸனையின் ஈடுபடுவோர் தமக்கு வரும் பலன்கள் தேவதைகளிடமிருந்தே வருவதாக நினைக்கிறார்கள், எல்லா உயிர்களுக்கும் அந்த ரமாத்வாக நின்று உரிய பலனைத் தேவதைகளின் மூலம் பகவானே அடைவிக்கிறார் என்பதை அவர்கள் அறிகிறதில்லை.

அறியாமை ஒருபுறமிருக்க, பகவானையும் விபரீதமாக உணர்ந்து கொள்ளுகிறார்கள். அந்த விபரீத ஞானம் எத்தகையது என்பதைக் கண்ணன் ஒரு சுலோகத்தால் வெளியிடுகிறார்.

ஒன்றோர் குறையத் துயர்ந்துயர்ந்த என்தன்மை
நின்றோர் அறியார் நிகழ்ந்தென்னை - இன்றோர்பா ல்
வந்தியல்வான் முன்தெரியான் என்றே மதித்துயிர்போற்
புத்தியிலார் ஓர்ந்தார் புணர்ந்து

(இ-ள்) ஒன்று ஓர் குறை அற்று – சிறிது கூட அழிவ இல்லாததாய், உயர்ந்து உயர்ந்த – மிக உத்தமமான, என் தன்மை – எனது சொரூபத்தை, நின்றோர் – பிரபஞ்சத்தில் உள்ளோர். நிகழ்ந்து அறியார் – எப்பொழுதும் அறிகிறதில்லை. புந்தி இலார் – அறிவில்லாதவர்கள் (அவிவேகிகள்) என்னை – (அழிவில்லாத) என்னை, இன்று ஓர்பால் – இன்ன காலத்தில் இன்னதோர் இடத்தில் முன் தெரியான் – முன்னே தோன்றாமல், வந்து இயல்வான் – வந்து தோன்றுவான் (பிறப்பான்), என்றே மதித்து – என்றவிதமாகவே எண்ணி, உயிர் போல் – பிற உயிர்களைப் போலவே புணர்ந்து ஓர்ந்தார் – சேர (ஒக்க) அறிந்தார்கள்.

3 3 4
அவ்யக்தம் வ்யக்தி மாபந்தம் மந்யந்தே மாம் அபுத்தய:
4
பரம் பாவம் அஜாநந்தோ மமாவ்யய மநுத்தமம்

(இ-ள்) அவ்யயம் - அழிவற்றதும், அநுத்தமம் - உத்தமமானதுமான, மம பரம்பாவம் - எனது மேலான சொரூபத்தை, அஜாநந்த: - அறியாத, அபுத்தய: - மூடர்கள் (அவிவேகிகள்) மாம் - என்னை, அவ்யக்தம் - முன் காணப்படாமல், வ்யக்திம் - காணப்படுதலை (தோற்றத்தை) ஆபந்நம் - பிறகு அடைந்ததாக, மந்யந்தே - நினைக்கிறார்கள்.

தேவர்களுக்குக் கழிந்த பிறப்புக்களும் வரப்போகும் பிறப்புக்களும் பலவாயிருக்கின்றன. அதன்றித் தேவர்களாய் இந்திரன் வருணன் அக்கினி பிரமன் என்ற பல பதவிகளை வகிக்கும் போதே சாபங் காரணமாகப் பிறக்க நேருவதுமுண்டு. அவ்வாறே பகவானும் மனிதன், ஆமை, மீன், பன்றி ஆகிய ரூபங்களோடு கூடிய பிறவியை அடைந்து அதனால் மற்ற உயிர்கள் உடல் பெற்றுத் தோன்றுவது போல் தோன்றுகிறார் என்று சிலர் நினைப்பதாகச் சொல்வது இச் சுலோகத்திற்கு முதற் பொருள்.

பகவான் மேற்கொண்ட ராமகிருஷ்ணாதி அவதாரங்களின் மகிமையை உணரமாட்டாத அறிவிலிகள், ராமனையும் கிருஷ்ணனையும் கரும பந்தத்தால் வந்த சரீரத்தைப் பெற்று அதனால் தோற்றத்திற் குட்பட்ட மனிதனாகவே சிலர் நினைப்பதாகச் சொல்வது இரண்டாம் பொருள் விபீஷணன், விதுரர், பீஷ்மர் போன்ற மஹாத்மாக்கள் என்ன உபதேசம் செய்தும் அறியமாட்டாது ராமனையும் கண்ணனையும் அற்ப மனிதர் என்றே வசை கூறிப் பழித்த ராவணன், சிசுபாலன், துரியோதனன் முதலியோர் இதற்கு ஏற்ற உதாரணமாவர்.

'கருமங் காரணமாக உடலோடு தோன்றி மறையும் ஜீவனை முற்றும் அறியலாகும். பகவானின் உத்தம சொரூபத்தை உணராக அவிவேகிகள் மற்ற ஜீவன்களைப் போலவே பகவானும் பூரணமாய் உணர்ந்து கொள்ளத்தக்கவர்' என்று சிலர் நினைப்பதாகச் சொல்வது மூன்றாவது பொருள்.

இச்சுலோகத்திற்குச் சங்கரர் கூறுவது:- 'ஈசுவரனாயும் மாயையைச் சுவாதீனத்தில் வைத்திருக்கின்றவனாயும் உள்ள என்னை, மாயைக்கு உள்பட்ட சாதராண மனிதனாக நினைக்கின்றார்கள்.

ஸ்ரீதரர் கூறுவது:- பிரபஞ்சத்திற்கு அதீனனான நான், உயிர்களைக் காக்கும் பொருட்டு லீலை (விளையாட்டு)யாலே

பிரகாசிக்கின்ற பலவித ரூபங்களுடையவனாயும் சுத்தசத்துவ சொருபத்தோடுமிருக்க என்னை விவேகமில்லாதவர்கள் கருமத்தால் உண்டான பஞ்ச (ஐந்து) பௌதிக தேகத்தையுடையவனாயும் பிறதேவதைகளுக்குச்சமானனாயும் நினைக்கின்றார்கள்.

பகவானின் சொரூபத்தை அறியாத அவிவேகிகளும் கம்ஸன், சிசுபாலன் போன்ற ஈசுவர விரோதிகளும் கூறும் அவதூறுகள் பகவானுக்கு வருத்தத்தை உண்டாக்குமா என்று கேட்கலாம் அதற்கு விடையாக விபரீத உணர்வு தானாக உண்டாவதில்லை அதுவும் தன்னுடைய அதீனத்திலேயே இருப்பதால் வருத்தத்திற்கு இடமில்லை என்பதைக் கண்ணன் அடுத்தபடியாகத் தெரிவிக்கிறார்.

என்பிறவி யோகமெனு மிம்மாயை யான்மறைந்தே
அன்பிலர்கள் யார்க்கும் அறிவரியேன் - என்பதனால்
என்னை இயல்பிறப்பற் றேதும் குறைவிலானா
உன்னலுற வோரா துலகு.

(இ—ள்) என் பிறவி யோகம் எனும் இமாயை யான் மறைந்தே – என்னிடம் தோன்றிய யோகம் எனப்படும் இந்த மாயையால் நான் மறைக்கப்பட்டிருப்பதால், அன்பிலர்கள் யார்க்கும் – என்னிடம் பக்தி இல்லாத அனைவருக்கும் அறிவரியேன் – அறிதற்கு முடியாதவனாக இருக்கிறேன், என்பதனால் – என்ற இக்காரணத்தால், உலகு – உலகத்திலுள்ள உயிர்கள், என்னை –, இயல் பிறப்பு அற்று ஏதும் இல்லாதவனாய்க் கொஞ்சமும் அழிவு அற்றவன் என்று, உன்னல் உற ஓராது – நினைத்து அறியமாட்டாது.

நாஹம் ப்ரகாச ஸ்[3] ஸர்வஸ்ய யோகமாயா ஸமாவ்ருத:
மூடோ[4]யம் நாபிஜா[4] நாதி லோகோ மாம் அஜம் அவ்யயம்

(இ—ள்) அஹம் – நான், யோக மாயா ஸமாவ்ருத: – யோகமாயையால் மூடப்பட்டு, ஸர்வஸ்ய – எல்லோருக்கும், ந ப்ரகாச; – புலப்படுகிறவன் அன்று (பிரத்தியக்ஷனல்லேன்), மூட: அயம் லோக : – மூடமான இந்த உலக ஜனங்கள், மாம் – என்னை, அஜம்... பிறப்பிலி – என்றும் அவ்யயம் – அழிவற்றவன் என்றும் ந அபிஜாநாதி – அறிகிறதில்லை.

'யோக மாயை என்று ஒன்றாகக் கொள்வதல்லாமல் யோகமும் மாயையும் என்று இரண்டாகக் கொள்ளுவதுமுண்டு. யோகம் என்பதற்கு 'சக்தி' என்றும் மாயை என்பதற்கு 'துர்க்கா' என்றும்

பொருள் கொண்டு, 'இவ்விரண்டின் காரணமாக நான் எல்லாராலும் அறியப்படுபவனாக விருப்பதில்லை எல்லோருடைய பகுத்தறிவாலும் மனதாலும் உணரக்கூடியவனாகவில்லை உலகமே என்னால் அக்ஞானத்தில் ஆழ்ந்திருக்கிறது. ஆகவே உலக உயிர்களால் ஆதியும் அந்தமும் விகாரமுமில்லாத என் உண்மைச் சொரூபத்தைக் காண முடிவதில்லை! என்பது பொருள்.

நான்கு சுவர்களுள்ள ஒரு அறையில் இருக்கும் இரண்டு மனிதர்களுக்கிடையே ஒரு திரை இருந்தால், அது ஒருவரையொருவர் காணமுடியாதபடி இருவர்க்கும் தடையாகவிருக்கும். அவ்வாறே யோக மாயை உயிர்களுக்குத் தங்களின் நின்றும் விலக்ஷணமாய் வேறாய் இருக்கிற பகவானை மறைத்தால், பகவானுக்கும் உயிர்களை உள்ளபடிக் காண முடியாதபடி மறைக்கத்தானே செய்யும் என்று அர்ஜுனனுக்குத் தோன்றலாமல்லவா? அவ்வாறு தோன்றாமலிருக்க மாயை உலகத்திரை போலல்லாமல் வேறுபட்டு விசித்திரமாயிருக்கும் தன்மையைக் கண்ணன் வரும் சுலோகத்தால் விளக்குகிறார்.

நன்றறி வன் நானே நாடோறும் பூதங்கள்
சென்று நிகழ்ந்துவரும் செம்பொருள்கள் – இன்றிவற்றுள்
ஒன்று மெனையுணர மாட்டா துளதென்றே
குன்றுயர்ந்த தோளாய் குறி.

(இ–ள்) குன்று உயர்ந்த தோளாய் – மலைபோல் பருத்துயர்ந்த தோள்களையுடைய அர்ஜுனா! நாள்தோறும் – எப்பொழுதும், சென்று நிகழ்ந்து வரும் பூதங்கள் – கடந்து நிகழ்ந்து கொண்டு இனி வரப்போகும் பிராணிகளையும், செம்பொருகள் – அவற்றாலாய சிறந்த பிரபஞ்சங்களையும், நானே நன்று அறிவேன் – நான் ஒருவன் மாத்திரமே தெளிவாக அறிவேன், இன்று இவற்றுள் – இப்பொழுது இப்பிரபஞ்சத்துள், ஒன்றும் – ஒரு உயிரும், எனை உணரமாட்டாது உளது என்றே – என்னை (உள்ளபடி) உணர்ந்துகொள்ள முடியாமல் இருக்கிறது என்பதை, குறி – தெரிந்து கொள்.

வேதாஹம் ஸமதீதாநி வர்தமாநாநி சார்ஜுந
பவிஷ்யாணிச பூதாநி மாம்து வேத நகச்சந

(இ–ள்) அர்ஜுந – அர்ச்சுனா! ஸமதீநாதி – கடந்தவைகளும், வர்(த்)தமாநாநிச – நிகழ்வனவும் பவிஷ்யாணி – வருமவைகளுமான, பூதாநி – பூதங்களை (பிராணிகளை அல்லது பிரபஞ்சத்தை),

அஹம்வேத – நான் அறிவேன், மாம்து – என்னையோ, நகச்சந வேத – ஒருவரும் அறிய மாட்டார்கள்.

நான் மாயைக்குக் கட்டுபட்டவன் அல்லன்; நான் மாயதீதன் ஆகையால், என் பார்வையை மாயையால் மறைக்க முடியாது எனவே, நான் ஒருவனே முக்காலங்களையும் முற்றும் தெளிவாக உணர்வேன். மாயையில் கட்டுப்பட்ட இப் பிரபஞ்சத்தில் யாரும் என்னை உள்ளபடி உணர்வதில்லை. அறியும் சக்தி மிகுதியாக வாய்ந்த பிரமன் முதலிய தேவர்களும் என்னை முழுதும் அறியவில்லை. என் சொரூபத்தில் அவர்கள் அறிந்தது மிகச்சிறிய அம்சமே.

பகவானுக்கும் உயிர்களுக்கும் குறுக்கே விழுந்திருக்கும் மாயை எனும் திரை உயிர்களுக்குப் பகவானைக் காண முடியாது மறைக்கிறது. கடவுளைக் காணமுடியாமல் உயிர்கள் என்னென்னவோ செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அத்திரைக்கப்பால் நின்று பகவான் உயிர்களின் ஒவ்வொரு செயலையும் தெளிவாகக் கண்டுகொண்டே யிருக்கிறார் மாயை உயிர்களுக்குத் தடை: பகவானுக்கோ அது தடையாகயில்லை மாயையின் விசித்திரம்தான் என்னே!

82. விரோதி ஸ்வரூபம்

உலகில் துன்பம் நேர்ந்தபோதெல்லாம் பிராப்தம் அல்லது விதி என்கிறோம். இந்த விதம் நாம் அனுபவிக்கும்படியாகக் கடவுளின் திருவுள்ளம் இருக்கும்போது, நாம் என்ன செய்யமுடியும்? என்றெல்லாம் பேசிப் பகவானையே முற்றிலும் பொறுப்பாளியாக்கிவிடுகிறோம் பந்த நிவர்த்தியாகிய மோக்ஷம் சிலருக்குப் சித்திப்பதற்கும் பகவானே பொறுப்பாளி என்கிறோம். பக்தர்கள் 'அதுவும் அவனது இன் அருளே' என்று பகவானின் கருணையை நன்மைக்குக் காரணமாக்கிப் பேசுகின்றனர். அப்பகுதிகளைப் படித்துப் பிறவற்றை ஊன்றிக் கவனியாதவர்க்கு எல்லோருக்கும் முக்தி வராமலிருப்பதற்கும் பலருக்குத் துன்பமே வாழ்க்கையில் மிகுதியாகவிருப்பதற்கும் பகவானே பொறுப்பாளி என்று தோன்றும்.

'மாயை விசித்திரத் தன்மை வாய்ந்தது உயிர்களுக்கு மோஹத்தை உண்டாக்குகிறது. அதனால் பந்தம் செய்கிறது பகவானை அறியவொட்டாமல் மறைக்கிறது. ஆனால், அதுவே பகவானுடைய அதீனத்தில் இருந்து கொண்டு, அவருக்கு எதையும் மறைப்பதில்லை.

'எல்லா உயிர்களுக்கும் இடையே அமைந்த விசித்திரத் திரை போன்ற மாயை, இறைவனிடத்திலே தோன்றி அடங்குகிறது என்று கண்ணன் கூறிய மாயையின் விசித்திரத் தன்மையைக் கேட்டபோது, 'அர்ஜுனனுக்கு, பகவானே, ஒருவனுடைய பந்தத்திற்கும் பந்த நிவர்த்திக்கும் காரணமாய்ப் பொறுப்பாளியாயிருக்கிறார். இன்ப துன்பத்திற்குக் காரணமாக உயிர்கள் செய்யக் கூடியது எதுவும் இல்லாத போது, நிஷ்காமிய கருமம், தியானம், யோகம், ஞானம் இவை எதற்கு?' என்று தோன்றியது. அச் சந்தேகத்தைப் போக்குவதற்குக் கண்ணன், உயிர்களின் விபரீத உணர்வும் மோகமும் நீங்காமலிருப்பதற்கு உரிய மற்றொரு காரணத்தையும் கூறுகிறார்.

முன்னியலும் இச்சை முனிவான் முயன்றெழுந்து
பின்னிருமை கொண்ட பெருந்துயரால் - இந்நிலத்துப்
பூதங்கள் எல்லாம் புணர்பொழுதே எய்துமே
ஏதங்க ளாமோகம் இங்கு.

(இ—ள்) புணர் பொழுதே – உயிர்தேகத்தோடு சேரும் போதே (பிறக்கும் போதே) இ நிலத்து பூதங்கள் எல்லாம் – இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பிராணிகள் யாவும், முன் இயலும் – முந்திய பிறப்புகளில் நடந்ததற்கேற்ப, இச்சை முனிவான் – விருப்பு வெறுப்பு (காமம், குரோதம்) களின், முயன்று எழுந்து – முயற்சியால் உண்டாகி பின் – அதற்குப் பிறகு, இருமை கொண்ட பெரும் துயரால் – இன்பதுன்பம் அல்லது லாப நஷ்டம் என்ற இரு வேறு தன்மை பெற்று வரும் பந்தத்தினால் வரும் ஏதங்கள் ஆம் – குற்றங்கள் நிறைந்த, மோகம் – மயக்கத்தை (அவிவேகத்தை) எய்தும் – அடையும்.

இச்[2]சா த்[3]வேஷ ஸமுத்[2]தே[3]ந த்[3]வத்வ மோஹேந பா[4]ரத
ஸர்வ பூ[4]தாநி ஸம்மோஹம் ஸர்[4]கே யாந்தி பரந்தப

(இ—ள்) பாரத – பரதவம்சத்தவனே! இச்சாத்வேஷ ஸமுத்தேந – விருப்பு வெறுப்புகளால் உண்டான, த்வந்தவ மோஹேந – இன்ப துன்பங்களான இருமையில் தோன்றிய அவிவேகத்தாலே, ஸ்ர்வ பூதாநி – எல்லாப் பிராணிகளும், பரந்தப – பகைவரைத் தவிக்கச் செய்யும் அர்ஜுனா! ஸர்கே – பிறக்கும்போதே (தேகத்தைப் பெறும் பிறப்புக் காலத்திலேயே) ஸம்மோஹம் யாந்தி – மயக்கத்தை அடைகின்றன.

பொருள்களில் உண்டாகின்ற விருப்பு, வெறுப்பு முந்திய பிறப்பின் தொடர்ச்சியாகும். ஒரே சூழ்நிலையில் ஒரேவிதமான பராமரிப்பில்

ஒருவரால் வளர்க்கப்பட்ட இரு குழந்தைகளில் ஒன்று சங்கீதத்தை விரும்புகிறது. மற்றொன்று அதை வெறுக்கிறது. ஒரு குழந்தைக்கு வெறுப்பிற்கிடமாயிருக்கும் பொருள், மற்றொரு குழந்தைக்கு விருப்பிற்கிடமாயிருக்கிறது பிரியத்தோடு முகரும் வாசனைகளும் உண்ணுதற்குரிய சுவைகளும் வெவ்வேறாயி ருக்கின்றன. பூனைக்குட்டியைப் பிடித்து அணைத்துக்கொள்வது ஒன்றிற்குப் பிரியமாயும், பூனைக்குட்டியின் ஸ்பரிசம் தானாகக் கிட்டினால் கூட மற்றொரு குழந்தைக்கு வெறுப்பாயுமிருக்கிறது. பல குழந்தைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் இதை நன்கு கவனித்திருக்கலாம் இதற்கு முந்தியதின் தொடர்ச்சி என்பதைத் தவிர வேறு பொருந்தமான காரணம் எவரும் சொல்லக் காணோம்.

உயிர்கள் கழிந்த பிறப்புக்களில் எந்தெந்த விஷயத்தில் விருப்பும் வெறுப்பும் பாராட்டி வந்தார்களோ, மறுபடியும் அந்தந்த துவந்தங்களே நடக்கும் பிறப்பில் விரும்பப்பட்டவைகளாயும் வெறுக்கப்பட்டவை களாயும் மிருக்கின்றன. துவந்த்வங்கள் தன் கைவரிசையை உயிரிடம் காட்டுவதற்கு உடல் கருவியாக விருக்கவேண்டியதவசியம். அவ்வுடல் பிறக்கும்போதே உயிரைச் சேர்ந்துவிடுவதால், ஜநநகாலத்திலிருந்தே உயிர்களை மயங்கச் செய்கின்றன.

பகவானை அடைந்தபோது இன்பமும் பிரிந்தபோது துன்பமும் அடைய வேண்டியதுதான் உயிர்கள் அவற்றிற்கு மாறாகப் பகவானை அடைவதில் வெறுப்பும், பொருள், பதவி முதலியவற்றைப் பெறுவதில் விருப்பம் கொள்வது அவிவேகம் காரணமாக உலகில் சர்வ சாதாரணமாயிருக்கிறது. இந்த அவிவேகத்தைப் பிறப்பிக்கப் பகவந்மாயை பொதுக் காரணமாயிருந்த போதிலும் அதுவே முற்றிலும் பொறுப்பாகாது உயிருடன் சேர்ந்த உடலும் அவிவேகம் வளரக் காரணமாகிறது.

ஞானிகளும் பக்தர்களும் தேகத்தையே அவிவேகத்திற்குப் பிரதான காரணமாகக் கூறுவர் ஆழ்வார்களுள் பிரதானரான ஒருவர் பிரதான விரோதியின் தன்மையை

"பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கம் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை............"

(இந் நின்ற நீர்மை - இவ்வாறன தன்மை)

என்று கூறுகிறார். அவிவேகம் தவறான ஒழுக்கத்தையும், தவறான ஒழுக்கம், சரீரத்தையும் அவ்வாறு வந்த சரீரமே அவிவேகத்தைப் பெருக்கத் துணை செய்து, அதன் காரணமாகத் தானே திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கிறது. இவ்வாறு வருவது உலகினர்க்கு இயல்பாகத் தோன்றி துன்பமாயிருந்த போதிலும் விலக்க வேண்டும் என்ற எண்ணமோ முயற்சியோ இல்லாமல் போய்விட்டதாம். அதனால் அப்பக்தர் பிற உயிர்களுக்கும் சேர்ந்து தானே பரிந்து மிகக்கொடிய விரோதியாகிய உடலுடன் சேர்ந்திருக்கும் தன்மையை உயிர்களாகிய நாங்கள் அடையாதபடி அருள் செய்ய வேண்டும் 'இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை.... அருளாய்' என்று வேண்டுகிறார்.

நெருப்பு தன்னிடம் அகப்பட்ட பதார்த்தங்களை எரிக்கும் தன்மை வாய்ந்தது காற்று துணை செய்தால் நன்கு பற்றிக்கொள்ளும். கொழுந்து விட்டு ஜ்வாலையோடு பிரகாசமாய் எரியும். காற்றின் உதவியில்லாவிட்டால் நன்கு எரியாது காற்றே இல்லாவிட்டால் அவ்விடத்தில் நெருப்பு முற்றிலும் வலியிழந்து போகும்.

மாயையை நெருப்பு என்று சொல்லலாம் உயிர்கள் பெற்றிருக்கும் உடலை காற்று ஸ்தானத்தில் சொல்லலாம். மாயை தன்னிடம் இருந்த போதிலும் இறைவன் தன் அதீனத்திலேயே வைத்திருக்கிறார். அதனால் மாயை அவரைப் பாதிப்பதில்லை. அவ்வாறே தனக்கே விரோதியாயிருக்கும் மாயைக்குத் துணை செய்யும் பரமவிரோதியான உடலின் ஸ்வரூபத்தை (இயல்பை) உள்ளபடி உணர வேண்டும். உணர்ந்து அதைத் தன் அதீனத்தில் கொண்டுவர முயல வேண்டும். கொண்டு வரவும் வேண்டும் எப்படிக் கொண்டு வருவது? உபாயம் யாது? – என்று கேட்கலாம். அதைக் காண்போம்.

83. இரண்டையும் வெல்வர்

பகவானிடத்தில் அவர் வசப்பட்டிருக்கும் விசித்திர மாயை உயிர்கள் ஸ்வரூபத்தை அறிய வொட்டாமல் மறைக்கிறது. உயிர்களுக்குப் பிறக்கும் போதே கூடத் தோன்றிய தேகம் உயிர்களுக்கு மாயையில் மோஹத்தை உண்டாக்குகிறது. மாயையைப் புறப்பகை என்று சொல்லலாம். உயிருடன் பிறக்கும் போது ஒன்று சேர்ந்து விருப்பு வெறுப்புகளாகி துவந்தத்தை உண்டாக்கி மாயையில் சிக்க வைக்கும் உடலை உயிர்களின் அகப்பகை என்று கூறலாம்.

உடலைத் தானாகவே பாவித்து அதன் அதீனத்தில் வருவோர் பிரபஞ்சத்தில் பெரும்பாலோர். அவர்கள் அனைவரையும் மோஹிக்கச் செய்து மாயையின் வசப்படவே உடல் துணை செய்யும். மோஹ வலையில் அகப்பட்டவர் உண்மை ஸ்வரூபத்தை அறியமாட்டாமல் பிறப்பு இறப்பு என்னும் பந்தத்திற்கு அனாதியாக ஆளாகி வருகிறார்கள் என்று கண்ணன் முன்னே தெரிவித்தார் அல்லவா?

அதைக் கேட்ட அர்ஜுனனுக்கு 'இவ்வாறு எல்லா உயிர்களுக்கும் மாயையால் மதியிழந்தால் முக்தி பெற எவருக்குத்தான் வழி உண்டு? என்ற யோசனை உண்டாயிற்று அதையறிந்து கொண்ட கண்ணன் மோஹத்தினின்றும் விடுபடுவோரும் சிலர் உண்டு என்பதை அடுத்த படியாகத் தெரிவிக்கிறார்.

புண்ணியம் செய்புருடர் யார்க்கும் புணர்பாவ
நண்ணியிருந் தான்முடிவை நன்றாகத் - திண்ணியராய்
நின்றவர்கள் அவ்விருமை வெல்லும்பே றென்னையே
ஒன்ற உகந்தடைவர் உற்று.

(இ-ள்) புண்ணியம் செய் புருடர் யார்க்கும் - புண்ணிய கருமங்களைச் செய்த உயிர்கள் எல்லாம் புணர்பாவ ஆன் முடிவை நண்ணி இருந்து - தங்களை (அனாதியாகத்) தொடரும் பாவம் நன்கு நசிக்கப்பட்டவர்களாக இருந்து, நன்றாக திண்ணியராய் நின்றவர்கள் - நல்ல திட சங்கல்பம் பெற்று இருப்பவர்கள், அ இருமை வெல்லும் - அந்தத் துவந்தங்களை வெல்வார்கள்; என்னையே பேறு என்றைனையே - (பகவானாகிய) என்னையே புருஷார்த்தமாகப் பெறும் பொருட்டு, உற்று உகந்து அடைவர் - இடைவிடாமல் சந்தோஷத்தோடு பஜிப்பார்கள்.

யேஷாம் த்வந்தகதம்பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம்
தேத்வந்த்வமோஹ நிர்முக்தா பஜந்தேமாம் த்ருட வ்ரதா:

(இ-ள்) புண்ய கர்மணாம் - புண்ணியஞ் செய்தவரான ஏஷாம்ஜ நாநாம் - எந்த ஜனங்களுடைய, பாபம் - பாபமானது, அந்தகதம் - அழிவுற்றதோ, தே - அவர்கள், த்வந்தவமோஹ நிர்முத்த: - துவந்த மோஹங்களிலிருந்து விடுபட்டு த்ருட வ்ரதா - திடமான சங்கல்பத்தோடு மாம் பஜந்தே - என்னை பஜிக்கின்றனர்.

பாவத்தின் வலி ஒடுங்கப் புண்ணியத்தின் ஆதிக்கம் ஒருவனுக்கு அதிகமிருக்க வேண்டும். ஆகவே நற் கருமங்களைச் செய்து கொண்டே

யிருந்தால் மனம் மாயையின் வழியில் இழுக்கப்படாது, சுகம், துக்கம் லாப நஷ்டம் வெம்மை தண்மை முதலிய பேதத்தின் கற்பனைத் தன்மையை உணரவாரம்பிக்கும் உணரவே உலகப் பொருள்கள் காரணமாக மனதில் வரும் விருப்பு வெறுப்புக் குறைந்து கொண்டே வரும். அந் நிலையில் விரும்பி அடையத் தக்கவர் பகவான் ஒருவரே என்ற உணர்வு வரும். அதனால் உலக விஷயங்களில் வைராக்கியம் பிறந்து மனஉறுதியும் திட சங்கல்பமும் உண்டாகும். அவர்கள் பகவான் ஒருவனையே பஜிப்பார்கள் என்று இச்சுலோகத்தால் கூறப்பட்டது.

பகவானை இவ்விதம் பஜிப்பது எதற்கு? என்று கேட்டான். அதற்கு விடையா 'பிரும்மத்தை உணர்வதே அத்தியானத்திற்குப் பயன்' என்பது மேலும் சொல்லப்படுகிறது.

மூப்பு இறப்புத்தீர முயன்றென்னை வந்தடைவர்
ஆப்புறமந் தப்பிரமம் ஆங்கறிவர் - கோப்புடைய
வெவ்வத்தி யாத்துமத்தும் எல்லாக் கருமத்தும்
செவ்வை தெறிவுறுவர் சேர்ந்து.

(இ—ள்) மூப்பு இறப்பு தீர – வயோதிகம் மரணம் ஆகிய இரண்டையும் நீக்கிக் கொள்ளும் பொருட்டு, முயன்று என்னை வந்து அடைவர். பிரயத்தினம் செய்து என்னைத் தியானம் செய்வோர் ஆப்புறம் அந்தப் அந்தப் பிரமம் அறிவர் (எல்லாவற்றிக்கும் அப்பாற்பட்டதான அந்தப் பிரும்மத்தைத் தெரிந்து கொள்வார்கள். கோப்பு உடைய எ அத்தியாத்துமத்தும் – ஒழுங்கையுடைய எந்த அத்தியாமத்தைப் பற்றியும்' எல்லா கருமத்தும் – எல்லாவிதமான கருமங்களைப் பற்றியும், செவ்வை சேர்ந்து தெரிவுறுவர் – உண்மை (தத்துவத்தை) அனுஷ்டித்தே தெளிந்து கொள்வார்கள்.

ஜராமரண மோக்ஷாய மா-மாச்ரித்ய யதந்தியே
தே[3]ப்ரஹ்ம த[3]த்வி[3]து: க்ருத்ஸ்ந மத்[3]த்[4]யாத்மம் கர்மசாகி[2]லம்

(இ—ள்) மாம் ஆச்ரித்ய – என்னை அடைந்து, யே எதந்தி – எவர் முயல்கிறார்களோ, தே – அவர்கள், தத்பிரம்ம – அந்தப் பிரும்மத்தையும், க்ருத்ஸ்நம் – எல்லா, அத்யாத்மம் – அத்தியாத்துமத்தையும் அகிலம் கர்மச – எல்லாக் கருமங்களையும், விது:– அறிவார்கள் (அப்புறம் – ஆப்புறம் என்று செய்யுளில் மாறியது)

பிறப்பு இறப்பு ஆகிய இரண்டிளின்றும் விடுதலையடையத் தன் முயற்சி வேண்டும்.

விருப்பமும் தன் முயற்சியும் தோன்றப் புண்ணிய வினைகள் சாதகமாகவிருக்கும். அதனால் வருகின்ற பகவத் தியானம் மூன்று விதப் பயன்களைக் கொடுக்கும். அது பரப் பிரும்மம், ஜீவாத்மா சகலவித கர்மங்கள் இவற்றின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவதாகும் என்பது.

இவ்விதம் கூறியது அதைக்கேட்ட அர்ஜுனனுக்கு 'பகவானாகிய கண்ணன் பிரும்மத்தினின்றும் வேறானவரோ என்ற சந்தேகத்தை உண்டாக்கியது அதை நீக்குவதற்குக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

அதிபூத மற்றிங் கதிதெய்வ மெல்லா
மதியெச்சந் தாமா வறிந்தோர் - கதிபெற்றுப்
போம்பொழுது மென்னையே பேராத நெஞ்சார
யாம்பொருளாக் காண்பர் அமர்ந்து.

(இ-ள்) (என்னை) - என்னை, அதிபூதம் - அதி பூதமாகவும், அதி தெய்வம் எல்லாம் - அதி தெய்வமாகவும், அதி எச்சம் தாமா - அதி யக்ஞும் ஆகவும், அறிந்தோர் - தெரிந்து கொண்டவர், கதி பெற்று போம்பொழுதும் - (உயிர்) பிரயாணமாகும் மரணகாலத்திலும், என்னையே - பேராத நெஞ்சராய் - நீங்காமல் மனத்தில் வைத்தவர்களாய் அமர்ந்து ஆம் பொருளாக காண்பர் - நிலையாக விருக்கும் தத்துவமாக அறிகிறார்கள்.

ஸா[4]தீ பூ[4]தாதீ[4] தை[3]வம் மாம் ஸாதி[4] யஜ்ஞஞ்சயே விது[3]:
ப்ரயாண காலேபிச மாம்தே[3] விதுர்யுக்த சேதஸ:

(இ-ள்) யேமாம் - எவர்கள் என்னை ஸாதி பூகாதிதைவம் அதிபூதம் அதிதைவம் இவற்றோடு கூடியவனாயும் ஸாதி யக்ஞுச்ச - அதி யக்ஞுத்தோடு கூடினவனாயும் விது: - அறிகிறார்களோ, தே - அவர்கள் ப்ரயாண காலேபி - மரணகாலத்திலும், யுக்த சேதஸ: - (என்னோடு) கூடிய மனத்தையுடையவராய், மாம் விது: - என்னை அறிவார்கள்.

மரணா காலத்தில் 'நாராயணா' என்று சொல்லிப் பகவானைத் தியானித்த அஜாமிளன் அதற்கு முன்பு மகாபாதங்களைச் செய்திருந்த போதிலும் முக்தியை அடைந்தான் என்ற கதை பாகவதத்தில் வந்துள்ளது. ஆனால் மரண காலத்தில் பகவத் தியானம் உண்டாவது மிகவும் துர்பலம் பாபி ஒருவன் மரணமடையும் தறுவாயில் இருந்தபோது பக்கத்தில் உள்ளவர்கள் அவன் பகவான் நாமத்தைச் சொல்லுவதற்காக நாரயணன் என்ற பெயருடைய அவன் மகனைப் பக்கத்தில்

கொண்டுவந்து நிறுத்தி 'இவன் யார்?' என்று கேட்டார்கள். நோயாளி 'தெரியவில்லையே' என்றான். உன் மகன் நாரயணன் தான் நன்றாகப் பார்த்துச் சொல்' என்று பக்கத்திலிருந்தவர்கள் மறுபடிச் சொன்னார்கள். நோயாளி 'அந்த நமனா இவன்? என்று சொல்லிக் கண்மூடிவிட்டான், என்று ஒரு கதை சொல்வது உண்டு.

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு'

என்ற குறள் உரையில் பரிமேலழகர் 'உயிர் உடம்பினீங்குக் காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாயத் தோன்றுமென்பது எல்லா ஆகமங்கட்கும் துணிவு. ஆதலின் வீடு எய்துவார்க்கு அக்காலத்து, பிறப்பிற்கு ஏதுவாய் பாவனை கெடுதற் பொருட்டு கேவலப் (பரம்) பொருளையே பாவித்தல் வேண்டுதலான் அதனை முன்னே பயிறலாய இதனின் மிக் உபாயம் இல்லை என்பது அறிக' என்று கூறினார்.

முன்னே தியானம் பயின்றவர்கள் மாத்திரமே பிராணப் பிரயாண காலத்தில் பரம் பொருளைத் தியானிக்க முடியும் என்பதை உணர்த்தக் கண்ணன் இப்பகுதியில் பரம்பொருளே தான் என்று கூறியதோடு நிற்காமல் தியானம் தன்னை அறியவும் மரண காலத்தில் அதிபூதம் அதியக்ஞும் அதிதெய்வம் ஆகியதன்னை மனத்தில் பாவிக்கவும் உதவும் என்றார். அதிபூதம், அதி தெய்வம், அதியக்ஞும் இன்னதென்பதை உணர்த்தப் போகும் அடுத்த அத்தியாத்திற்கு இதைத் தோற்றுவாயாகக் கொள்ளலாம்.

84. ஸாரமும் பலனும்

இதுவரைக் கூறிவந்த ஏழாம் அத்தியாயப் பகுதி விசேஷ ஞானத்தை உணர்த்தியதால் விக்ஞான யோகம் எனப் பெயர் பெற்றது சிறப்பாகவும் பிரதானமாகவும் கூறியது ஞானபாகமாயிருந்த போதிலும் பல்வேறு விஷயங்கள் இப்பகுதியில் விரவி வந்திருப்பதால் இவ்வத்தியாய சாரத்தைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

பகவானிடத்தில் பூரணமாக பற்றுக்கொண்டு சரணாகதி செய்து பகவானையே நன்கு அறிதற்காகப் பெறவேண்டியதான உபதேசமாவது; மேலும் கேட்க வேண்டாதபடியான அனுபவத்துடன் கூடிய ஞானம் பெற்று, ஸித்தி அடைய ஆயிரத்தில் ஒருவனே முயற்சி செய்கிறான்.

அவ்வாறு முயற்சி செய்யும் ஸித்தர்கள் பலரில் அபூர்வமாக ஒருவரே பகவத் ஸ்வரூபத்தை நன்கு அறிகிறார்.

பகவானின் சக்தியாகிய பிரகிருதியே பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம் என எட்டுவிதமாகப் பிரிந்திருக்கின்றது இது அப்ரா ப்ரக்ருதி என்று சொல்லப்படுகிறது. இது தாழ்ந்தது; இதினின்றும் வேறுபட்டு விசேஷமாகச் சொல்லப்படுகின்ற ப்ராப்ரக்ருதியால் பிரபஞ்சம் தரிக்கப்பட்டிருக்கின்றது. அதுவே ஜீவன் என்றும் சொல்லப்படுகிறது. பகவானின் அதீனத்தில் இருக்கும் ஜீவசொரூபமான பிரகிருதியை அபராப்ரக்ருதியை விடச் சிரேஷ்டம் என அறிந்து கொள்ள வேண்டும்.

அபரா, பரா என்று சொல்லப்படும் இருவகைப் பிரகிருதிகளே எல்லா பூதங்களுக்கும் காரணம். பிரபஞ்சமும், பிரபஞ்சப் பொருள்களும் அவற்றிலிருந்தே உண்டாகின்றன. அவற்றின் மூலமாய்ப் பகவான் எல்லாவற்றினுடைய உற்பத்திலயத்திற்குக் காரணமாகிறார். நூலில் மணிகள் கோக்கப்பட்டிருப்பது போல் பகவானிடத்தில் எல்லாப் பிரபஞ்சங்களும் கோக்கப் படுகின்றன.

ஜலத்தில் ரஸமாகவும், சந்திர சூர்யர்களிடம் ஒளியாகவும், எல்லா வேதங்களிலும் (ஓங்காரம்) பிரணவமாயும், ஆகாயத்தில் ஒலியாகவும், மனிதர்களிடத்தில் பௌருஷமாகவும் பூமியில் வாஸனையாகவும், அக்கினியில் பிரகாசமாகவும் பிராணிகளிடத்தில் ஜீவநமாக (வாழ்வாக)வும் தவசிகளிடத்தில் தவமாகவும், எல்லாப் பூதங்களுக்கும் அழியாத விதையாகவும், புத்திசாலிகளுக்குப் புத்தியாகவும்; தேஜஸ் உள்ளவரிடம் தேஜஸாகவும், பலவான்களிடம் பலமாகவும், தர்மத்திற்கு விரோதமில்லாத கர்மமாகவும் இருப்பவர், பகவானே.

ஸாத்வீக ராஜஸ தாமஸ குணங்களால் உண்டான வஸ்துக்கள்யாவும் பகவானாலே உண்டாயினவாக அறிய வேண்டும் அவ் வஸ்துக்களில் அவை பகவான் இல்லாத போதிலும் (வசப் படாத போதிலும்) அவை பகவானிடத்திலேயே (அவர் அதீனத்திலேயே) இருக்கின்றன.

முக்குணங்களால் மோஹமடைந்த பிரபஞ்சம் எல்லாவற்றையும் கடந்து வேறாயிருக்கிற பகவானின் சொரூபத்தை உள்ளபடி அறிந்து கொள்வதில்லை பகவானிடமிருந்து தோன்றிய முக்குண மயமான மாயையை எவராலும் வெல்ல முடியாது பகவானையே எவர் சரணமடைகின்றனரோ அவரே அம்மாயையைக் கடப்பர்.

மாயையால் மதியை இழந்து அசுரத்தன்மையை அடைந்து பாபிகளான அதமர் என்னை அடையமாட்டார்கள் துன்பத்தினின்று விடுபடும் பொருட்டுப் பகவானைப் பஜிக்கும் ஆர்த்தர், சொரூபஞானம் பெறும் பொருட்டு பிரார்த்திக்கும் ஜிக்ஞாஸு, செல்வத்தை மேலும் மேலும் அடையும் பொருட்டு வேண்டும் அர்த்தார்த்தீ தத்துவமறிந்து எதையும் கடவுளிடமிருந்து வேண்டாத ஞானி எனப் பகவத் பக்தர்களில் நான்கு வகை உண்டு.

அந்நால்வரும் சிறந்த புண்ணியசாலிகளான போதிலும் பகவானிடம் மட்டுமே சிறந்த அன்பு கொண்ட ஞானி மேலானவன் அவன் பகவானுக்கு மிகப்பிரியமானவன். அவனுக்கும் பகவான் ஒருவரே மிகப் பிரியமானவர். பகவானையே சர்வமுமாய்ப் பற்றியிருக்கிற ஞானி பகவானுக்கு ஆத்மாவாகிறான்.

ஒருவன் அநேகம் பிறப்புகளில் செய்த புண்ணியத்தால் எல்லாம் வாசுதேவ சொரூபம் என்ற ஞானத்தை அடைகிறான். பிற பொருள்களில் பற்றவனாய் வாசுதேவன் ஒருவனையே பஜிக்கின்றான். எல்லாவற்றையும் வாசுதேவ மயமாய்க் கண்டு தியானிக்கும் மயாத்மா கிடைப்பது துர்லபம்.

புத்திர சந்தானம் செல்வம், பதவி. அதிகாரம் முதலியன வேண்டும் என்ற ஆசையால் தம் தம் பூர்வ ஜந்ம வாசனைக்கேற்ப இதர தேவதைகளை உபாஸிக்கின்றனர். யார் எந்த தேவதையை எந்தவிதமான ஆசாரத்தோடு உபாஸித்த போதிலும் பகவானே அவர்களுக்கு அந்தவித சிரத்தையை உண்டு பண்ணுகிறார். ஆதலின் உரிய பலனைப் பகவானிடமிருந்தே இதர தேவதைகள் மூலமாக அடைகின்றனர். அந்த அற்ப பக்தியுள்ளவர் பெறும் பலன் விரைவில் அழியக் கூடியதேயாகும். தேவரைப் பூஜிப்பவர்கள் தேவர்களையும் என்னை அர்ச்சிப்போர் என்னையும் அடைவர்.

அழிவற்ற பகவானது மேலான தன்மையை அறியாத அவிவேகிகள் காணப்படாத அவரைக் காணப்படுதலை அடைகின்ற சாதாரண மனிதனாகவே (கரும வசப்பட்ட ஜீவனாகவே) நினைக்கிறார்கள்.

பகவான் யோக மாயையால் மறைக்கப்பட்டிருப்பதால் எல்லோருக்கும் பிரகாசமாக இல்லை. அதனால் மூடர்கள் அழிவற்ற பகவத் சொரூபத்தை அறிவதில்லை. மாயை பகவானிடமேயிருந்த போதிலும் பகவான் முக்காலங்களிலும் உள்ளவற்றைத் தெளிவாக அறிகிறார்.

ஆனால் அவரையோ எவரும் அறிவதில்லை விருப்பு, வெறுப்பு, சுகதுக்கம் இவைகளுக்குப் பிறப்பிடமான தேக சம்பந்தத்தால் பிறக்கும் போதே உயிர்கள் மோஹத்தை அடைகின்றன. புண்ணிய வினைகளால் பாபங்கள் அழியப் பெற்றவர்களே த்வந்தவ மோகங்களினின்றும் விடுபட்டுப் பகவானை அடைகின்றார்கள்.

ஜரா (கிழத்தனம்) மரணங்களை ஒழிக்கும் பொருட்டுப் பகவானை எவர் ஆசிரயிக்க முயல்கின்றனரோ அவர் பிரும்மத்தையும் ஆத்மாவையும் கர்மாவையும் பற்றிய எல்லா விஷயங்களையும் அறிவர். அதிபூத, தெய்வ அதியக்ஞத்துடன் கூடியவனாகப் பகவானை அறிந்து கொண்டவர்கள் மரண காலத்திலும் பகவத்தியானத்தையே பெறுவார்கள்.

இவ்வத்தியாய சாரத்தை வேதாந்த தேசிகர் மேலும் சுருக்கமாக அடியில் வரும் ஒரு பாடலில் வெளியிட்டிருக்கிறார்.

தானின்ற உண்மையைத் தன்தனி மாயை மறைத்தமையும்
தானன்றி மாயைதனைத் தவிர்ப்பான் விரகற்றமையும்
மேனின்ற பக்தர்கள் நால்வரின் ஞானிதன் மேன்மைகளும்
தேனின்ற செங்கழலான் தெளிவித்தனன் பார்த்தனுக்கே.

(இ-ள்) தான் நின்ற உண்மையை – தனது நிலையான 'சொரூபத்தை' தன் தனிமாயை மறைத்தன்மையும் – தன்னுடைய ஒப்பற்றமாயையால் மறைக்கப்படுவதையும் தான் அன்றி – பகவானைத் தவிர, மாயைத்தனைத் தவிர்ப்பான் விரகற்றமையும் – மாயையைக் கடப்பதற்க வேறு உபாயமில்லாததையும், மேல் நின்ற பக்தர்கள் நால்வரின் 'சிறந்த பக்தர்கள் நால்வகையோரில்,' ஞானி தன் மேன்மைகளும் – ஞானியினுடைய சிறப்புகளையும், தேன் நின்ற செங்கழலோன் – இனிமை பொருந்திய சிறந்த பாதங்களையுடைய கண்ணபிரான், பார்த்தனுக்கு – அர்ஜுனனுக்கு தெளிவித்தனன் – அறியப்படுத்தினான்.

பலனைக் கூறும் கதை

பாடலிபுரத்தில் சங்கு கர்ணன் என்ற அந்தணன் இருந்தான் பணத்தின் பேராசையால் பிராமணகுல தர்மத்தைக் கைவிட்டு வியாபாரத்தை மேற்கொண்டான். அதில் மேலும் மேலும் விருத்தியடைந்து செல்வம் பெருகிய போதிலும் தேவபூஜை பித்ரு பூஜை, அதிதி பூஜை முதலிய எதுவும் செய்யாமல் பொருளை அதிகம் பெற

ஆசை கொண்டு அரசரையும் அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் வரவழைத்து விருந்தளித்து அவர்கள் நட்பைப்பெற முயன்று வந்தான்.

மூன்று மனைவிமார்களைப் பெற்றுச் சிற்றின்பம் அநுபவித்தும் திருப்தி பெறாமல் பணச் செருக்கால் நான்காவது மனைவியாக ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்ளும் பொருட்டுத்தன் பரிவாரத்துடன் நாட்டுபுறத்திற்குச் சென்றான். இளைப்பாறும் பொருட்டு ஒரு மரத்தடியில் வழியில் தங்கினான் சற்று உறங்கும் போது கொடிய பாம்பொன்று அவனைக்கடித்தது சிறிது நேரத்தில் கண் இருண்டது காதடைத்து நாவுலரவே அவன் பயத்தால் மனதில் பாம்பையே நினைத்துக்கொண்டு மரணமடைந்தான்.

மரண காலத்தில் நினைத்தற்கேற்ப சங்கு கர்ணன் ஒரு பாம்பாகவே பிறந்தது, புத்திரர்களக்குத் தெரியாமல் கோடிக்கணக்கான திரவியத்தை எங்கு புதைத்துவைத்திருந்தானோ அந்த இடத்திலேயே தங்கி அதைக் காத்துவந்தான். ஒரு நாளிரவில் பாம்பாகப் பிறந்திருந்த சங்கு கர்ணன் தனது பாப ஜந்மங்கள் நினைவுக்கு வரப்பெற்று வருந்திப் பிறகு, தன் நான்கு புத்திரர்கள் கனவிலும் தோன்றி, புதைக்கப்பட்டிருக்கும் தன் செல்வத்தைக் கொண்டு தனக்கு நற்கதியளிக்க வேண்டினான்.

நால்வர்களில் ஒருவனான சிவன் என்னும் பெயருடைய புத்திரன் பணவாசையால் தனியாகப் போய்ப்புதையல் இருந்த இடத்தை தோண்டினான். அங்கிருந்த பாம்பு சீறிவந்து செய்தியைத் தெரிந்து கொண்டு முற்பிறப்பில் தனது புத்திரனான அவனை நோக்கி "இப் புதையல் பொருளை கீதை ஏழாம் அத்தியாயம் பாராயணம் செய்வோருக்கு அன்னமிடுவதில் செலவு செய், வேறு தான தர்மம் எதுவும் வேண்டாம் நான் நற்கதியை அடைவேன்" என்று தெரிவித்தது.

நான்கு மைந்தர்களும் அவ்வாறே செய்து தந்தைக்கு நற்கதியளித்துத் தாமும் நற்கதி அடைந்தனர் (என்பது பாத்ம புராணம்)

85. மோக்ஷார்த்தி அறிய வேண்டுவது

யாவரும் உபாஸிக்க வேண்டிய்வரான பகவான் வாஸுதேவன் சேதன அசேதனங்களுக்குப் பதியாகவும், காரணனாயும், எல்லாவற்றுக்கும் ஆதாரமாயும் இருக்கிறார். அதனால் எல்லா சப்தங்களுக்கும் பொருளாயும் யாவரையும் ஆள்பவனாய்

மேம்பட்டிருக்கிறார். ஒரே நிலையாய் அழிவின்றிப் பகவத் ஸ்வரூபம் மாறாதிருந்த போதிலும் உயிர்களுக்கு மாயையால் மறைக்கப்பட்டிருக்கிறது.

மிகுந்த புண்ய வசத்தால் வரும் பகவத் சரணாகதி ஒன்றினாலே தான் அம்மாயை விலகும். சரணாகதியைப் பண்ணுவோர் வேண்டும் பலனுக்குத் தக்கபடிப் பலவகைப் படுவார்கள். அவர்களில் பகவானை அடையக்கோரி அவரையே நம்பி அவரிடத்தில் விசேஷ பக்தி பண்ணும் ஞானி யாவரினும் சிறந்தவன்' என்று சொல்லி, எல்லா வகையான பக்தர்களும் அறிய வேண்டியவற்றையும் கைப்பற்ற வேண்டியவற்றையும் முந்தின அத்தியாய முடிவில் கண்ணன் வெளியிட்டார்.

அவ்வாறு அறிய வேண்டியதாயும் அடைய வேண்டியதாயும் முன்னே குறிக்கப்பட்ட பொருள்களே எட்டாவது அத்தியாயத்தில் விளக்கப் படுகிறது. அதிலும் விசேஷமாக நாசமற்ற பரப்ரும்மமே அதிகம் விளக்கப்படுவதால் 'இது அக்ஷரப் பரப்ரும்ம யோகம்' எனப் பெயர் பெற்றது.

உபதேசம் செய்த கண்ணன் ப்ரும்மத்தைத் தன்னிலும் வேறான பொருள் போலப் படர்க்கையிடமாகப் பேசியதால், அர்ஜுனனுக்கு வாசுதேவனும், பிரும்மமும் வெவ்வேறான வஸ்துக்களோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. அதனால் முந்தின அத்தியாத்தில் முடிவில் குறிக்கப்பட்டவைகளைப்பற்றி விளக்கிக் கூற வேண்டுகிறான்.

ஏது பிரமமதாம் ஏதத்தி யாத்துமமாம்
ஏது கருமமாம் இங்கிறைவா - ஏதாம்
அதிபூதம் ஏதாம் அதிதெய்வம் ஏதாம்
அதிஎச்சம் எங்ஙனிய லாம்

(இ—ள்) இறைவா — தலைவனே! ஏது பிரமம் அது ஆம் — மேலே கூறிய பிரமம் என்பது யாதாகும்? ஏது அத்தியாத்துமம் ஆம்? — அத்தியாத்துமம் என்பது யாது?, அதிபூதம் ஏது ஆம் — அதிபூதம் எனப்படுவது யாதாகும்? அதி தெய்வம் ஏது ஆம்? — அதி தெய்வம் எனப்படுவது யாது? அதிஎச்சம் ஏது ஆம் — அதியக்ஞும் என்பது யாது?, எங்ஙன் இயம் ஆம்? — அதன் தன்மை எப்படிப்பட்டதாகும்?

கிம் தத்^{3}ப்^{3}ரஹ்ம கிமத்^{4}யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம
அதி^{4} பூ^{4}தஞ்ச கிம் ப்ரோக்தம் அதி^{4}தை^{3}வம் கிமுச்யதே

(இ–ள்) புருஷோத்தம – மேலோனே தத் ப்ரஹ்ம கிம் – அந்தப் பிரும்மமாவது யாது? அத்யாத்ம் கிம் – அத்தியாத்துமம் யாது? கர்ம கிம் – கர்மம் என்பது என்ன? அதிபூதஞ்சகிம் ப்ரோக்தம்? அதிபூதம் என்று எது சொல்லப்பட்டது? கிம் அதிதைவம் – எது அதி தெய்வம் என்று, உத்யதே – சொல்லப்படுகிறது?

எவ்வகையால் இவ்வுடல்விட் டேகுங்கால் நல்நெஞ்சில்
மெய்வகையான் நின்நினைக்க மேவுதியென் – றிவ்வகையால்
பார்த்தனவன் கேட்ட படிக்கேற்க ஆங்கடைவே
வார்த்தையருள் செய்தான்மைம் மால்

(இ–ள்) இ உடல் விட்டு ஏகுங்கால் – இந்தச் சரீரத்தை விட்டுப் பிரியும்போது (மரண காலத்தில்) எ வகையால் – எவ்வாறு, நல் நெஞ்சில் – (நிக்கரகிப்பட்ட) சிறந்த மனதில் (அந்தக்கரணத்தில்) மெய்வகையால் நின் நினைக்க மேவுதி – முறையாக உம்மை நினைப்பதால் உணரப்படுகிறீர்? என்று – என்றவாறு, பார்த்தன் அவன் – அர்ஜுனன், கேட்டபடிக்கு ஏற்க – கேட்ட கேள்விகளுக்குப் பொருத்தமாக மை மால் – கார்மேக வண்ணனான திருமால், அடைவே – முறையாக வார்த்தை அருள் செய்தான் – விடை கூறியருளினான்.

இவ்விரு சுலோகங்களிலும் வேறான இரண்டுவிதமான கேள்விகள் அடங்கியுள்ளன ஒன்று 'எது' என்பது மற்றொன்று 'எப்படி' என்பது, பொருளே 'இன்னது' என அறிந்திராதவன், அதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுக் கேட்பதற்கு 'எது, யாது அல்லது என்ன என்ற வார்த்தைகளை உபயோகிப்பான். பொருளை மாத்திரம் அறிந்தவன் பொருளின் அமைப்பையோ தன்மையையோ அறிய விரும்பும் போது எப்படி என்று கேட்பான். அர்ஜுனன் 'எப்படி என்பதையே எங்ஙன் இயல்? எவ்வகை? என்ற தொடர்களால் தெரிவிக்கிறான்.

ஜரா (கிழத்தனம்) மரணங்களை ஒழிக்கும் பொருட்டுப் பகவானை அடைந்து முக்தியடையவிரும்புவோர் அறிய வேண்டியதான பிரும்மம், கர்மம் அத்தியாத்துமம் இவை யாவை? என்று முதல் மூன்று கேள்விகளை ஒருவகையாக அடக்கிக் கொள்ள வேண்டும் செல்வத்தைக் கோரும் அர்த்தார்த்திகள் எனப்படுவோர் அறிய

வேண்டியதான அதிதெய்வம் இவற்றைப்பற்றி வந்த வினாக்களை மற்றொரு பகுதியாகவும் எல்லாவித பக்தர்களும் அறியவேண்டியதான அதியக்ஞத்தைப்பற்றிய வினாவை மூன்றாம் பகுதியாகவும் கொள்ளல்தகும்; அதியக்ஞத்தைப்பற்றி 'இன்னது? எத்தகையது?' என்ற இருவிதமான அறிவும் இன்மையால் அர்ஜுனன் இரு கேள்விகள் கேட்டான்.

அந்திம ஸ்ம்ருதி அல்லது மரண காலத்தில் பகவத் தியான விஷயமாக சந்தேகங்கள் பலவிருந்தமையால், அர்ஜுனன் (1) அந்நினைவால் என்ன பயன்? (2) தியானிக்கப்பட வேண்டிய பொருள் எவ்வித லக்ஷணம் வாய்ந்தது? (3) எந்த உபாயத்தால் எவ்விதம் நினைக்கப்பட வேண்டும்? என்று மூன்று கேள்விகளாகக் கேட்டான்.

ஆக, அர்ஜுனன் கேட்ட எட்டுக் கேள்விகளுக்கும் கண்ணன் ஒவ்வொன்றாக விடையளித்தார். அறிய வேண்டிய அவை:-

அக்கரம் அப்பிரமம் ஆம்அத்தி யாத்துமமாந்
தொக்க வசித்தின் தொடர்தன்மை - மிக்க
கருமமாங் கண்ட தொழில் காரணமாக
வருமங் குயிருணர்வார் மாட்டு

(இ-ள்) அக்கரம் - அக்ஷரம் (நாச மற்றது) எனப்படுவது, அ பிரமம் ஆம் - அந்தச் சிறந்த பிரும்மமேயாகும், தொக்க - உயிரோடு சம்பந்தப்படுகின்ற, அசித்தின் தொடர் தன்மை - பிரகிருதியினுடைய தொடரும் இயல்புடைய குணம் (ஸ்வபாவம்), அத்தியாத்துமம் ஆம் - அத்தியாத்துமம் ஆகும், கண்ட தொழில் காரணமாக - அநுபவத்தில் தெரிந்திருக்கிற தொழில் (விஸர்க்கம் ... புணர்ச்சி) காரணமாக உயிர் உணர்வுக்கிடமான உடலில் பொருந்தி வருவதற்கு இடமாயுள்ளது, மிக்க கருமம் ஆமாம் - மிகுந்ததான கருமம் எனப்படும்.

அக்ஷரம் ப்ர3ஹ்ம பர3மம் ஸ்வபா4வோத்4யாத்ம முச்யதே
பூ4தபா4வோத்3ப4வகரோ விஸர்க3: கர்ம ஸஞ்ஜித:

(இ-ள்) பரமம் அக்ஷரம் - மேலான அக்ஷரம் எனப்படுவது, ப்ரும்மம் - பிரும்மமாகும், ஸ்வபாவ: - ஸ்வபாவமானது, அத்யாத்மம் உச்யதே - அத்தியாத்துமம் என்று சொல்லப்படும், பூத பாவ; உத்பவகர; - பிராணித்தன்மையை உண்டு பண்ணுவதான, விஸர்(க்)க:- புணர்ச்சியானது, கர்ம ஸஞ்சத: - கருமம் எனப்படும்.

அழிவில்லாததற்கு அக்ஷரம் என்று பெயர். பிரும்மம்யாது என்று கேட்ட அர்ஜுனனுக்குக் கண்ணன் 'நானே பிரும்மம்' எனக் கூறாது 'பிரும்மம்' அக்ஷரம் என்று கூறியதில் ஒரு கருத்து அடங்கியிருக்கிறதென த்வைத சித்தாந்திகள் கூறுவதுண்டு, 'விஷ்ணுவைக் குறிக்கும் பல நாமங்களில் அக்ஷரம் ஒன்று என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆகையால் விஷ்ணுவாகிய தானே பிரும்மம். பிரும்மம் தன்னிலும் வேறானதன்று என்பதே இதன் பொருள் என்பர். 'பரமம்' என்று வந்த விசேஷணம் 'பகவானை ப்ராப்ர க்ருதி (ஜீவன்) யிலிருந்து வேறானவன் என்பதைக் காட்ட வந்தது' என்றும் த்வைத உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

ஜீவனை ஒட்டி (அண்டி)யிருப்பது என்ற பொருளைத் தருவதால், அத்யாத்மம் தேகத்தையும் அதன் உறுப்புகளான உடல், இந்திரியம், மனமாகியவற்றைக் குறிக்கும். ஸ்வபாவம் (ஸ்வ–ஜீவன் பாவ–அதற்கு உதவியாகவிருப்பது) என்பதும் அவ்வுடலையே குறிக்கும்.

மேற்கூறிய ஜீவனும் ஜடமாகிய உடலும் சேர்ந்து வருவதற்குக் காரணமான புணர்ச்சி அல்லது விஸர்க்கமே கருமம்.

அக்ஷரம் என்று சொல்லப்படும் பிரம்மஸ்வரூபம் பஞ்சாக்கினி முதலிய வித்தைகளால் அறியப்படும் என்று சாஸ்திரம் கூறுகிறது. முக்தியை அடைய விரும்புவன் பற்ற வேண்டியதாயும் அறிய வேண்டியதாயும் இருப்பதால் கண்ணன் இதை அர்ஜுனன் கேட்ட முறைப்படி முன்னே தெரிவித்தார்.

முக்தியடைய விரும்புவோன் அவசியம் விட வேண்டியதாய் இருப்பதால் விடுவதற்கும் அதன் அறிவு அவசியமாகையால் இரண்டாவதாக அத்தியாத்துமத்தின் தன்மையைத் தெரிவித்தார்.

புணர்ச்சியில் வீரியத்தை விடும் கருமமாகிய விஸர்க்கமும் பிறப்புக்குக் காரணமாயிருப்பதால், அதுவும் மோக்ஷார்த்தியால் வெறுக்க வேண்டியதாயிற்று.

ஆகக் கண்ணன் முதல் மூன்று வினாக்களுக்கு விடையாக மோக்ஷார்த்தி (முக்தியில் இச்சையுள்ளவன்) பற்றவும் விலக்கவும் வேண்டி அறிய வேண்டியதான மூன்று பொருள்களை இப்பகுதியில் விளக்கினார். பின்னும் அறியவேண்டியவை எவை என்பதைக் காண்போம்.

86. மரண காலத்தில் தியானிக்க முடியுமா?

அர்ஜுனன் கேட்ட கேள்விகளுக்குக் கண்ணபிரான் வரிசையாக விடையளிக்க ஆரம்பித்தார் அல்லவா? முதலாவதாக முக்தி பெற விரும்புவோர் (மோக்ஷார்த்திகள்) அவசியம் வேண்டியதான பற்றத் தகுந்தவைகளையும் விடத்தகுந்தவைகளையும் விளக்கினார். அவை பிரும்மம், அத்தியாத்துமம், கருமம் முதலியன என்ன என்பவைகளே.

அடுத்த படியாக செல்வம், பதவி, போகம் முதலியவற்றை விரும்பும் அர்த்தார்த்திகள் அறிய வேண்டியவற்றை விளக்குகிறார்.

அதிபூதம் பூத பரிணாமம் ஆகும்
அதிதெய்வம் துய்க்கும் அவனாகும் - அதிஎச்சம்
ஆங்கு யிருள்நின்றே ஆராத்தியனாகி
ஓங்கு இறையாநானென் றுணர்

(இ—ள்) பூத பரிணாமம் – (மண், விண் முதலிய) பஞ்ச பூதங்களின் விகாரத் தன்மை, அதிபூதம் ஆகும் – அதி பூதம் என்று சொல்லப்படும்; அதி தெய்வம் – அதி தெய்வம் என்பது துய்க்கும் அவன் ஆகும் – அனுபவிப்பவனாகிய விராட் புருஷனைக் குறிக்கும்; அதி எச்சம் – அதியக்ஞம் என்பது, உயிருள் நின்று – எல்லா உயிர்களிலும் அந்தர்யாமியாகவிருந்து ஆராத்தியனாகி – (எல்லா வகைக் கருமங்களாலும்) பூஜிக்கப்பட்டவனாகி, ஓங்கு இறையா – மேலான ஈசுவரனாவிருக்கிற, நான் – நானே ஆகிறேன், என்று – என்பதை, உணர் – (நீ) அறிந்து கொள்.

அதீ4பூதம் க்ஷரோ பா4வ: புருஷச்சாதீ4 தை3வதம்
அதீ4யஜ்ஞ: அஹமே வாத்ர தே3ஹே தேஹ ப்4ருதாம்வர

(இ—ள்) அதி பூதம் – அதி பூதமாவது, க்ஷர: பாவ: – நாசமடையும் தன்மை வாய்ந்தது, அதிதைவதம் – அதிதைவதமாவது, புருஷ: – விராட் புருஷனாகும் – தேஹ ப்ருதாம் வர: – சரீரகளுக்குள் சிறந்த அர்ஜுனா!, அத்ர தேஹே – இந்த தேகத்தில் அதியக்ஞ: – அதியக்ஞமாவது, அஹம் ஏவ – நானே (ஆகிறேன்)

உடலுடன் கூடிய ஜீவனே (உயிரே) இங்கு பூதம் எனப்பட்டது. அந்த விதமான உயிருக்கு உதவியாகவிருப்பது எதுவோ அதுவே இங்கு

அதிபூதம் என்று குறிக்கப்படுகிறது. ஆகாசம் முதலிய குணங்களும் அவற்றின் ஆதாரங்களுமே சரீரமாய்ப் பரிணமித்திருப்பதால், சரீரத்தையே அதிபூதம் என்று சொல்லலாம். அது நாசம் என்று சொல்லப்படும். பரிணாமத் (மாறுதலடையும்) தன்மை வாய்ந்தது. செல்வத்தை விரும்பும் ஐசுவரியார்த்திகள் என்போர் இதையறிவதாவது – அவற்றைத் தங்கள் பேறாக நினைக்க வேண்டுமென்பது.

அதி தெய்வமாவது – தைவத்தின் மீதிருப்பது, அதாவது இந்திரன், வருணன், அக்கினி, பிரமன் முதலிய எல்லாத் தேவர்களுக்கும் மேலாயிருப்பது 'உயிர்களில் தேவர்களுக்கும் மேம்பட்டவனாயிருக்கிற புருஷனே போகங்களை அநுபவிக்கும் போக்தா என்று ஐசுவரியார்த்திகள் அறிய வேண்டும்' இரண்டாம் தொடரின் பொருள்.

அதியக்ஞமாவது: – 'அதி+யக்ஞ' எனப்பிரித்து யாகாதி கருமங்களில் யாருக்க நிவேதனம் அளிக்கப்படுகிறதோ, அவன் என்று பொருள் கொள்ளலாம். அதை அறிகையாவது – எல்லா உயிர்களுக்கும் அந்தர்யாமியாயிருக்கும் பகவானே யக்ஞங்களால் ஆராதிக்கப்படுவபவனாக எல்லோரும் யக்ஞம் முதலான நித்திய நைமித்திக கர்மங்களை அநுஷ்டிக்கும் போதெல்லாம் நினைக்க வேண்டும் என்பது.

வாழ்வின் முடிவில் பகவானை எதற்காகத் தியானிக்க வேண்டும் என்ற அர்ஜுனனின் கேள்விக்கு அடுத்த படியாக விடையளிக்கிறார்.

அந்தக்கா லத்திலு மாங்கென்னை யேநினைந்திங்
கிந்த வுடலினைவிட் டேகுமவன் - சிந்தைநிகழ்
என்றன்மை தானெய்தும் ஈங்கிதனில் சங்கைசேர்
தன்றன்மை யொன்றில்லை தான்

(இ–ள்) அந்த காலத்திலும் – மரணமடையும் பொழுதும், என்னையே நினைந்து – (பிறிதொன்றை நினையாமல்) என்னை மட்டுமே தியானித்து, இங்கு இந்த உடலினை விட்டு ஏகும் அவன் – இவ்வுலகில் பூத சரீரத்தை விட்டுப் பிரிகின்ற ஒருவன், சிந்தை நிகழ் – மனத்தில் தியானத்தின் போது தோன்றின, என் தன்மை – எனது சொரூபத்தை, தான் எய்தும் – அவன் பெறுகிறான், இதனில் – இவ்விஷயத்தில் சங்கை சேர் தன் தன்மை ஒன்று இல்லை–சந்தேகம் உண்டாவதற்குக் கொஞ்சமும் இடம் இல்லை.

அந்த காலேச மா மேவ[3] ஸ்மரத் முக்த்வா களேபரம்
ய[3] ப்ரயாதி[4] ஸமத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்சய:

(இ—ள்) அந்த காலேச — மரண காலத்திலும், மாம் ஏவ ஸ்மரந் — என்னையே சிந்தித்துக்கொண்டு, ய:— எவன், களேபரம் — சரீரத்தை முக்த்வா — விட்டு, ப்ரயாதி — மரிக்கிறனோ ஸ: — அவன், மத் பாவம் — எனது தன்மையையாதி — அடைகிறான் அதர — இவ்விஷயத்தில், ஸம்சய; நாஸ்தி — சந்தேகம் இல்லை.

அந்தக்காலம் என்பது முடிவுகாலமாதலால், மரணத்தைக் குறித்தது மரண காலத்தில் பகவத்தியானம் செய்தவன் பகவத் சொரூபத்தை அடைகிறான். மரண காலத்திலும் என்பதில் வந்த உம்மை அவ்வேளையில் தியானிப்போர் அருமை என்பதைக் காட்டிற்று மத் பாவம் (என் தன்னை) என்னும் தொடருக்கு அத்வைதிகள் அல்லாதார் 'என்னிடம் இருக்கும் ஆனந்த நிலையை என்று பொருள் கொள்ளுகின்றனர். அந்நிலைமை அடைவதற்கு மரண காலத்தில் பகவானை நினைக்க வேண்டியதவசியம்' என்பது எல்லா சித்தாந்திகளுக்கும் சம்பந்தமான பொருள். ஆதிபரதன் முதலியோர் மரண காலத்தில் நினைத்திருக்கும்படி மிருகங்களுக்குச் சமானமான வடிவத்தை அடைந்தது இதிகாசப் பிரசித்தம்.

அது எவ்வாறு நேரும் என்பது அடுத்தபடியாக விளக்கப்படுகிறது.

தானெந்த எந்தப் பொருளுன்னித் தன்முடிவில்
ஊன்வந்த வாக்கை ஒழித்தோரும் - தானந்த
அந்தாவது தன்னையே ஆங்கணையும் எக்காலும்
சிந்தையது செய்தலினால் சேர்ந்து.

(இ—ள்) தன் முடிவில் — ஒருவன் தனது மரண காலத்தில், தான் எந்த எந்த பொருள் உன்னி — எந்த எந்தப் பிராணியை மனதில் நினைத்து ஊன் வந்த ஆக்கை — மாமிசத்தால் ஆகிய உடலை ஒழித்து ஏகும் — விட்டுப் போவானோ தான் — அவன், அந்த அதுதன்னையே அணையும் — நினைத்த அந்தப் பொருளையே அடைகிறான், (ஏனெனில்), எக்காலும் — எப்பொழுதும், சிந்தையது — அவனுடைய மனமானது, சேர்ந்து — (அப்பொருளைப்) பற்றியே, செய்தலினால் — விடாமல் நினைத்தலைச் செய்யும் காரணத்தால்.

யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலே3பரம்

தம் தமே வைதி கௌந்தேய ஸதா3 தத்3 பா4வ பா4வித:

(இ-ள்) கௌந்தேய – குந்தி புத்திரனே, அந்தே – முடிவு காலத்தில், யம் யம்வாபி பாவம் – எந்த எந்தத்தன்மையை, ஸ்மரந் – சிந்தித்துக் கொண்டு, களேபரம் – சரீரத்தை, த்யஜதி – விடுகிறானோ, ஸதா – எப்பொழுதும் தத்பாவ பாவித: – அத் தன்மையையே சிந்தித்துக் கொண்டு, தம் தம் எவ – அவ்வற்றையே, ஏதி – அடைகிறான்.

மரண காலத்தில் மனம் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டேயிருக்க ஒருவன் உடலை விடுவதற்குக் காரணம் உண்டு. வாழ்நாளில் எப்பொருள் அடிக்கடி சிந்தனைக்கு விஷயமாகிறதோ, அதுவேதான் பழக்கத்தால் மரண காலத்திலும் நினைவில் வரும் புத்திராபிமானத்தால் புத்திரனையே நினைத்துப் பழகியவனுக்கு மரணகாலத்தில் புத்திரனின் நினைவேதான் வரும். மரண கால நினைவுக்குத் தகுந்த பலன் வருவது ஒருபுறமிருக்க, மரணகால நினைவின் தன்மை வாழ்நாளில் ஏற்பட்ட பழக்கத்தையே பொறுத்திருக்கிறது. ஆகவே, மரண காலத்தில் பகவத் தியானம் கைகூட வேண்டுமானால், யாது செய்ய வேண்டும் என்பது அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது.

ஆதலால் எக்காலும் அங்ஙனனை நின்றுநினை

தீதறுசீர் வெஞ்சமத்தைச் செய்குதி நீ - காதலால்

என்பால் மனம்புத்தி ஏய்ந்தான் எனையடையும்

தன்பாலோர் சங்கையறச் சார்ந்து

(இ-ள்) காதலால் – பக்தியால் என்பால் – என்னிடம், மனம் – புத்தி ஏய்ந்தான் – மனத்தையும் புத்தியையும் வைத்தவன் எனை அடையும் என்னை அடைவான், ஆதலால் – ஆகையால், ஓர் சங்கை அறச் சார்ந்து – கொஞ்சமும் சந்தேகமின்றிப் நம்பி, எக்காலும் – எப்பொழுதும் அங்ஙன் எனை நின்று நினை அவ்வாறு என்னை விடாமல் நினை தீது அறு சீர் வெஞ்சமத்தை – குற்றமற்ற புகழுக்கிடமான போரை, நீ செய்குதி – நீ செய்வாயாக.

தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மா மநுஸ்மர யுத்யச

மய்யர்பித மநோ பு3த்3தி4: மாமே வைஷ்யஸ்ய ஸம்சய:

(இ–ள்) தஸ்மாத் – ஆகையால், ஸர்வேஷு காலேஷு – எல்லாக் காலங்களிலும், மாம் அநுஸ்மர – என்னைச் சிந்திப்பாயாக, யுத்யச – யுத்தமும் செய்வாயாக, மயி – என்னிடத்தில், அர்ப்பித மநோ புத்தி: – வைக்கப்பட்ட (ஸமர்ப்பிக்கப்பட்ட) மனமும் புத்தியுமுடைய நீ, மாம் ஏவ– என்னையே ஏஷ்யஸி – அடைவாய், அஸம்சய: – சந்தேகமில்லை.

தினசரி வாழ்க்கையில் தியானத்திற்கு அடிக்கடி விஷயமாகும். பொருளே மரண காலத்தின் போதும் மனத்தில் வந்து நிற்கும் பகவானை வாழ்வில் தியானம் செய்து பழகியவர்களுக்கு மரண காலத்திலும் பகவத் தியானம் முயற்சியின்றித் தானாகவே கைகூடும் 'ஆகையால் சுயதர்மமாகிய போரை என்னைத் தியானம் செய்து கொண்டே நீ செய்தால், உனக்கும் அந்திமஸ்ம்ருதி கைகூடி, என்னை அடைய ஏதுவாகும்' என்று கண்ணன் விடை கூறினார்.

87. பயிற்சியும் பயிற்சிப் பொருளும்

செம்படவப் பெண்கள் சிலர் கடலில் மீன்களை பிடித்துக் கொண்டு தங்கள் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். சூரியன் அஸ்தமித்து அந்திவானம் இருண்டது. நாலாபக்கங்களிலும் மேகம் சூழ்ந்து திடீரென மழை பொழியவாரம்பித்தது. ஊரை அடைய நெடுந்தூரம் இருந்ததால் செம்படவப் பெண்கள் வழியில் இருந்த ஒரு பூக்காரியின் வீட்டிலேயே தங்கிவிட்டார்கள் மழையின் மிகுதியால் வீட்டினுள் படுத்திருந்த செம்படவப் பெண்களுக்கு பூவின் வாசனையால் இரவு ஒருமணிவரைத் தூங்கவே முடியவில்லை. வாயில் திண்ணையில், புலால் வாடை வீசும் மீன் பிடிக்கும் தங்கள் வலையை வைத்திருந்தார்கள் எல்லோரும் அதை உள்ளே எடுத்து வந்து தலையணையாக வைத்துக்கொண்டு படுத்தார்கள் உடனே சிறிது நேரத்திற்கெல்லாம் உறங்கிப் போனார்கள். என்பது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறும் நீதிக் கதைகளில் ஒன்று.

முயற்சியின்றிச் சுலபமாக நல்வழியைப் பற்றுவதற்கும் தீ வழியைப் பற்றுவதற்கும் முந்திய பழக்கம் வேண்டும் பழக்கமே எதற்கும் துணை செய்வதால் பலவித வேதனைகளுக்கிடமான மரண காலத்திலும் பகவத் தியானம் சிந்திக்க வேண்டுமானால் வாழ்வில் அடிக்கடி தியானம் செய்து பழக வேண்டும். 'அந்திம ஸ்ம்ருதியால் பகவானை அடைய விரும்புவோருக்கு வாழ்வில் மனத்தை அவ்வாறு

பயிற்சி செய்து பக்குவமாக வைத்திருக்க வேண்டியது அவசியம்' என்று கண்ணன் முன்னே தெரிவித்தார் அல்லவா? மனத்தைப் பக்குவப்படுத்தும் வகை மேலும் தெளிவாக அடுத்துவரும் சுலோகத்தில் சொல்லப்படுகிறது.

எஞ்சாத சீலத் தியோகம் செறிந்தியலு
நெஞ்சால்வே றொன்றை நினையாதே - துஞ்சாத
தன்னினைவால் செல்வம் தருபரம புருடனாம்
என்னியல்வே வந்தடையும் இங்கு.

(இ—ள்) எஞ்சாத சீலத்து – (ஒருவனுக்கு) குறைவு படாத அப்பியாசத்தால், வேறு ஒன்றை நினையாதே – (பகவானைத்) தவிர மற்றெதையும் நினைக்காமல், யோகம் செறிந்து இயலும் – தியானத்தோடு கூடிப் பொருந்திய, 'நெஞ்சுதன் துஞ்சாத நினைவால் – மனத்தினுடைய இடைவிடாத (ஈசுவர சொரூப) நினைவின் காரணமாக, செல்வம் தரு –(முக்திச்) செல்வத்தை அளிக்கின்ற, பரம புருடனும் என் இயல்வே – பரமாத்வாகிய என் சொரூபமே, வந்து அடையும் – வந்து சேரும்.

அப்[4]யாஸ யோக[3] யுக்தேந சேதஸா நாந்யகா[3]மிநா
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்[2]தா நுசிந்தயந்

(இ—ள்) பார்த்த – அர்ஜுனா! அப்யாஸ யோக யுக்தேந – அப்பியாஸத்தோடும் யோகத்தோடும் கூடி, ந அந்ய காமிநா – புறம்பே செல்லாத, சேதஸா – மனதினால், திவ்யம் – பிரகாச ரூபமான பரமம புருஷம் – பரம்ம புருஷனாயிருக்கும் (என்னை) அநுசித்த யந் – (அந்திய காலத்தில்) சிந்திப்பவன், யாதி – (என்னை) அடைகிறான்.

திருத்தமாக தேர்ச்சியோடு ஒரு காரியத்தைச் சுலபமாகச் செய்வதற்காக திரும்பத் திரும்பச் செய்வது அப்பியாசமாகும். மனம் புறப் பொருளில் செல்லாமல், ஈசுவரத் தியானத்தில் நிலைப்பதற்கு அடிக்கடி பயில வேண்டும். 'எஞ்சாத' என்பதற்கு 'நித்திய நைமித்திக கர்மங்களுக்கு விரோதமில்லாத எல்லாக் காலங்களிலும் தியானிக்க வேண்டிய பொருளை நினைத்துக்கொண்டிருப்பது எனப் பொருள் கொள்ள வேண்டும் மூலத்தில் வந்த 'திவ்யம்' என்ற சொல் பாடலில் 'செல்வம்தரு என்று பெயர்க்கப்பட்டது. இதற்கு சங்கரர் சூர்ய மண்டல மத்தியில் இருக்கிறவனாகிய' என்றும் பிறர் 'பிரபஞ்ச சிருஷ்டியாகிய லீலையில் ஈடுபட்ட' எனவும் உரைகொள்வார்.

அடிக்கடி நினைத்துப் பயின்றால் நிலையாகப் பரம்பொருளில் மனத்தை நிறுத்தலாகிய தியான யோகமும், அவ்வித யோக மார்க்கத்தால் மரணகாலத்தில் பகவத்தியானமும் கைவந்து அதனால் ஒருவன் பரம்பொருளை அடைய முடிகிறது என்று பொருள்படுகிறது எல்லாவற்றிற்கும் வாழ்வில் அடிக்கடி செய்யப்படும் பயிற்சியே அடிப்படையான காரணமாகிறது. பயின்று தியானிக்கப்படவேண்டிய பரமபுருஷனின் தன்மைகளை மேலும் இரண்டு சுலோகங்களால் வருணிக்கிறார்.

எண்மதியன் தொல்லையான் எல்லா நியமிப்பான்
நுண்மைப் பொருளுக்கு நுண்ணியான் - திண்மை
உலகளிப்பான் உன்னரியான் ஒங்கிரவி வண்ணன்
விலகுமந்தத் துப்பரனை மிக்கு
இந்த வுட லினைவிட் டேகுங்கால் தான்சலியாச்
சிந்தையுறு பத்தி திகழ்யோக - முந்துற்றே
வாயுவினைத் தன்புருவ மத்தியத்தில் வைத்துணர்வான்
சேயுயரு மப்பரனைச் சேர்ந்து

(இ—ள்) விலகும் அந்தத்து – உயிர் பிரியும் மரண காலத்தில், இந்த உடலைவிட்டு ஏகும் கால் – (ஒருவன்) இந்தப் பிரகிருதி சரீரத்தைவிட்டு நீங்கும்பொழுது தான் சலியா சிந்தை உறு – சஞ்சலமற்ற மனத்துடன் பொருந்தி பத்தி திகழ் யோகம் முந்துற்று – பக்தி விளங்கும் தியானத்தில் நன்கு ஈடுபட்டு, வாயுவினை – பிராண வாயுவை, தன் புருவ மத்தியத்தில் வைத்து – தன்னுடைய இரு புருவங்களின் நடுவில் செவ்வையாய் நிறுத்தி எண் மதியன் – சர்வக்ஞனும் தொல்லையான் – அநாதி கலமா யிருக்கின்றவனும், எல்லா நியமிப்பான் – எல்லாவற்றையும் ஆளுபவனும், நுண்மைப் பொருளுக்கு நுண்ணியான் – அணுவுக்கு அணுவாய் விளங்குபவனும், திண்மை உலகு அளிப்பான் வலிய உலகங்கள் யாவற்றையும் காப்பவனும், உன் அரியான் – சிந்திக்கக் கூடாத ரூபமுடையவனும், ஒங்கு இரவி வண்ணன் – சிறந்து சூரியனைப் போன்ற பிரகாசமான நிறமுடையவனும் ஆகிய, பரனை – பரமாத்வை மிக்கு உணர்வான் – இடைவிடாமல் ஸ்மரிப்பவன், அபரனை சேர்ந்து சேய் உயரும் – அப் பரமாத்வையை சேர்ந்து மிகவும் மேன்மை பெறுவான்.

கவிம் புராணம் அநுசாஸிதாரம் அணோரணீயாம் ஸமநு ஸ்மரேத்[3]ய:
ஸர்வஸ்ய தா[3]தாரம் அசிந்த்யரூபம் ஆதி[3]த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்
ப்ரயாணகாலே மநஸாசலேந பக்த்யா யுக்தோ[3]யோக பலேந சைவ
ப்[4]ருவோர்மத்[4]யே ப்ராண[3]மாவேச ஸம்யக் ஸமத்பரம் புருஷ முபைதி தி[3]வ்யம்

(இ—ள்) கவிம் — ஸர்வக்ஞனாய், புராணம் — புராதனனாய், அநுசாஸிதாரம் — ஆளுபவனாய், அணோ: அணீயாம்ஸம் — அணுவுக்கு அணுவாய் ஸர்வஸ்ய — எல்லாவற்றிக்கும், தாதாரம் — சிருஷ்டி கர்த்தாவாய், அசிந்த்ய ரூபம் — சிந்திக்க அரிய ரூபம் உடையவனாய், தமஸ: பரஸ்தாத் — பிரகிருதிக்குப் புறம்பே, ஆதித்ய வர்ணம் — சூரியனைப் போன்ற நிறமுடையவனை ப்ரயாண காலே — மரண காலத்தில், பக்த்யா யுக்த: — பக்தியோடு கூடியவன், யோகபலேநச — யோக பலத்தால் அசலேந மநஸா — அசைவுறாத மனதினால், ப்ருவோர் மத்யே — புருவங்களுக்கிடையில், ப்ராணம் — பிராணனை, ஸம்யக் ஆவேச — நன்றாய் நிறுத்திய: அநுஸ்மரேத் — எவன் இடைவிடாது சிந்திக்கிறானோ. ஸ: — அவன், தம் திவ்யம் — அந்த மேலான, பரம் புருஷம் — பரம புருஷனை, உபைதி — அடைகிறான்.

தியானத்திற்கு விஷயமான பரம்பொருளின் தன்மை ஸர்வக்ஞன் புராணன் என்ற பல சொற்களால் விவரிக்கப்பட்டது. அவற்றில் தமஸ: பரஸ்தாத்(ஓங்கு) என்ற தொடர்தனக்குரியது. 'பிரகிருதி மரணத்திற்கு அப்பாற்பட்ட தன்மைவாய்ந்தவன் என்பது பொருள்.'

பகவானை சூரியனுடைய தேஜஸிற்கு ஒப்பிட்டுக் கூறியதனால் சூரியனைப்போல பிறப்பிறப்பாகிய விகாரத்திற்குட்பட்டவரோ என்ற சந்தேக தோன்றலாமல்லவா? அதை நீக்கும் பொருட்டே 'ஓங்கு' என்ற பொருளுடைய தமஸ: பரஸ்தாத், என்ற தொடர் விசேஷணம் சேர்க்கப்பட்டது தேஜோமயமான பகவானின் தன்மை பிரகிருதியிலிருந்து உண்டானதல்ல; விகாரமின்றி எப்பொழுதும் நிலையாகவேயுள்ளது என்பதைக் காட்ட வந்தது. ஆகவே அவருக்குப் பிறப்போ எல்லையோ (அளவோ) இருக்கவேண்டியதில்லை என்றாயிற்று.

மரண காலத்தில் பிராணனைப் புருவங்களின் மத்தியில் கொண்டு வந்து நிறுத்துவது என்பது எல்லோருக்கும் சாத்தியமாகாது. சுவாஸத்தையும் பிரதானமான வாயு சஞ்சாரத்தையும் உடலில் கட்டுப்படுத்தி அதைத்தமது சுவாதீனத்தில் கொண்டு வந்த

யோகியர்க்கே அவ்வாறு செய்ய இயலும். முக்தி பெறுவோர் அனைவருக்கும் மரண காலத்தில் சாதாரணமாக ஏற்படும் நிகழ்ச்சியுமல்ல முக்கிய வாயுக்களை யோக சாதனத்தால் கட்டுப்படுத்திப் பழகாத பக்தர்களும் ஞானிகளும் மரண காலத்தில் பகவானது இடைவிடாத நினைவால் (தியானத்தால்) முக்தி பெறுவார்கள் என்பதற்கு இது விலக்கல்ல. அதுவே பெரியோர் உரையாசிரியர்கள் ஆகிய பலருடைய சித்தாந்தம்.

மரண காலத்தில் பகவத்தியானம் வேண்டும். அது கைகூட முந்திய பயிற்சி வேண்டும். பயிலுவதற்குமுன் பயிற்சிக்குரிய பொருளைப்பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அதனால் கண்ணன் இப்பகுதியில் பயிற்சிக்குரிய பொருளின் இயல்பையே பிரதானமாகக் கூறினார்.

88. யாருக்குச் சுலபன்?

அந்திம காலத்தில் பகவானைத் தியானம் செய்வதற்கு வாழ்நாளில் அடிக்கடி நினைத்துப் பயின்றிருந்தால் தான் முடியும் தியானிக்கப்பட வேண்டிய பொருளோ பிரகிருதிக்கு அப்பாற்பட்டதாய் அணுவைப் பார்க்கிலும் அணுவாய் கோடி சூரியப் பிரகாசமாய் சிந்திக்ககூடாத ரூபமுடையதாய் இருக்கிறது! என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லாவா? அதைக்கேட்ட அர்ஜுனன் பிரகிருதிக்கு அப்பாற்பட்டுச் சிந்திக்கவரியதாயிருக்கிற பரம புருஷனை பிரகிருதி வசப்பட்ட உயிர்களால் வாழ்நாளில் எங்ஙனம் சிந்தித்துப் பழக முடியும்? என்று சந்தேகிக்க ஆரம்பித்தான்.

அதையறிந்து கொண்ட கண்ணன் அர்ஜுனனின் சந்தேகத்தைப் போக்குவதற்காகத் தியானிக்க வேண்டிய பரம்பொருளின் தன்மையை மேலும் எடுத்துக் கூறுகிறார்.

அக்கரமாய் யாதொன்றை ஆய்ந்தமறை யோருரைப்பர்
செக்கநசை யார்யாதைச் சென்றடைவர் - மிக்கதுற
வேய்ந்தியவர் இச்சித்தார் யாதையுனக் குச்சுருங்க
ஆய்ந்துரைப்பான் அப்பதத்தை மற்று.

(இ—ள்) ஆய்ந்த மறையோர் — வேதார்த்தங்களை அறிந்தவர்கள், யாது ஒன்றை — எந்த ஒரு பொருளை, அக்கரமாய் உரைப்பார்

நாசமற்றதாகச் சொல்லுவார்களோ செக்க நசையார் – காமக்குரோதங்களை விட்ட யதிகள் (விதராகர்), யாதை – எதனை, சென்று அடைவர் – போய்ச் சேருவார்களோ, யாதை இச்சித்தார் – எதை அறிய விரும்பினோர், மிக்க துறவு ஏந்தியவர் – பிரும்மச் சரியத்தை மேற்கொண்டவர்களாயிருக்கின்றனரோ. அ பதத்தை–அந்த ஸ்தானத்தை (லக்ஷியத்தை) உனக்கு சுருங்க ஆய்ந்து உரைப்பான் – உனக்குச் சுருக்கமாக ஆராய்ந்து சொல்லுகிறேன். (மற்று – அசை)

யத^{3} க்ஷரம் வேத^{3}விதோ^{3} வத^{3}ந்தீ விசந்தீ யத்யத^{3}யோ வீதா^{3}ராகா:
யதீ^{3}ச்^{2}சந்தோ^{3} ப்ரஹ்மசர்யம் சரந்தீ தத் தே^{3} பதம் ஸங்^{3}க்ர
ஹேண ப்ரவக்ஷ்யே

(இ–ள்) யத் – எதை, அக்ஷரம் – நாசம் அற்றதாக, வேத வித: – வேதம் அறிந்தவர்கள்; வதந்தி சொல்லுகின்றார்களோ, வீதாராகா: – ஆசையைவிட்டவர்ளான யத்யதய: – யதிசீலர்கள், யத் – எதை, விசந்தி – (முடிவாகப்) போய்ச் சேருகிறார்களோ, யத்இச்சந்த: – எதை விரும்புவர்கள், ப்ரும்மசர்யம் – பிரும்மசரிய விரதத்தை, சரந்தி – அனுஷ்டிக்கின்றார்களோ, தத்பதம் – அந்த ஸ்தானத்தை, தே – உனக்கு, ஸங்க்ர ஹேணை – சுருக்கமாக ப்ரவக்ஷ்யே – சொல்லுகிறேன்.

பிரும்மம் பிரகிருதிக்கு அப்பாற்பட்டது: பருத்தல், சிறுத்தல், தோன்றுதல், மறைதல் முதலிய விகாரங்கள் இல்லாமல் நித்தியமாய் நிலையாய் சத்தியமாய் சிந்தைக்கெட்டாதாய் இருப்பதைப் பெரியோர்கள் வேதத்தால் அறிந்து சொல்லுகிறார்கள், அவ்வாறு சொன்ன போதிலும் அப்பிரும்மத்தைப் பலர் அடையவும் செய்கிறார்கள், பிரும்மத்தை உலகியலில் ஈடுபட்டுப் பழகிய சிந்தையால் உணர முடியாதென்று சிலர் பிரும்மத்தை அறிந்து உணர்வதற்காக விரதங்களோடு கூடிய பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள் என்று, பிரம்ம பதமும், அதை அடைவதும் வாழும் போது சாதனானுஷ்டானத்தால் அதை உணர்வதும், உண்மை என்பதை இதனால் விளக்கினார்.

'மனத்தைப் பிரும்மத்தினிடம் செலுத்துவது பிரும்மசரியம் ஆகும். இது உலகப் பற்றைத் துறந்தார்க்கே சாத்தியமாவதால் 'மிக்க துறவு ஏந்தியவர்' என்று பாடலில் கூறப்பட்டது. அக்ஷரமாகச் சொல்லப்படும் பதத்தை உபாஸிக்க வேண்டிய முறையை அடுத்தபடியாக முன்கூறியபடிச் சுருக்கமாக வெளியிடுகிறார்.

பொறிவாசல் எல்லாம் அடைத்தக வாய்ப் புந்தி
நெறியாக்கி மீது நிறுத்திச் - செறியோகன்
ஓங்காரம் செப்பியெனை உன்னி யுடலொழித்துப்
போங்கால் பரமகதி போம்.

(இ—ள்) பொறி வாசல் எல்லாம் அடைத்து – இந்திரியத் துவாரங்கள் எல்லாவற்றையும் அடக்கி, புந்தி – மனத்தை, அகவாய் நெறி ஆக்கி – இருதயத்தில் இருக்கும் என் வழிச்செலுத்தி மீது நிறுத்தி செறியோகன் – (சிரசின்) மேல் (பிராணனை) நிறுத்தி யோகம் என்னும் தாரணையை அடைந்தவன், ஓங்காரம் – 'ஓம்' என்னும் ஏகாக்ஷரப் பிரும்மத்தை, செப் பி – சொல்லிக்கொண்டு, எனை உன்னி – (பிரும்மாகிய) என்னையே இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டு, உடல் ஒழித்து போங்கால் – தேகத்தை விட்டுப் பிரியும் போது பரம கதிபோம் – மேலான பதத்தை அடைவான்.

ஸர்வத்3வாராணி ஸம்யம்ய மநோஹ்ருதி நிருத்4யச
மூர்த்3த்4ந்யா தா4யாத்மந: ப்ராணம் ஆஸ்தி2தோ யோகதா3ர4ணாம்
ஓமித்யேகாக்ஷரம் ப்3ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந்
ய: ப்ரயாதி த்யஜந் தே3ஹம் ஸ யாதி பரமாம் க3திம்.

(இ—ள்) ஸர்வ த்வாராணி – எல்லாத் துவாரங்களையும் ஸம்யம்ய – அடக்கி, மந; – மனதை, ஹ்ருதி – இருதயத்திலிருக்கும் (என்னிடத்தில்) நிருத்யச – வைத்து, யோக தாரணம் – யோகம் என்னும் தாரணையை, ஆஸ்தித: – அடைந்தவனாய், ஓம் இதி–ஓம் என்கிற, ஏகாக்ஷரம், ப்ரம்ம – ஏகாக்ஷரப்பிரும்மத்தை வ்யாஹரந் – சொல்லிக் கொண்டு, மாம் அனுஸ்மரந் – என்னை இடைவிடாமல் சிந்தித்து, ஆத்மந: ப்ராணம் – தன்னுடைய பிராணனை, மூர்த்ந ஆதாய – சிரசில் வைத்து, தேஹம் த்யஜந் – உடலைவிட்டு, ய: ப்ரயாதி – எவன் போகிறானோ, ஸ: – அவன், பரமாம் கதிம் – மேலான கதியை, யாதி – அடைகிறான்.

இவ்விரு சுலோகங்களிலும் தியானிக்கும் முறை சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. ஸர்வத்வாராணி (பொறி வாசல் எல்லாம்) என்றது முக்கிய வாயுக்கள் வெளிச் செல்லுதற்குரிய மார்க்கங்களைக் குறிக்கும். ஹ்ருதி – ஹ்ருத் என்ற தாதுவிலிருந்து பிறந்ததால் 'தாங்குதல்' என்று பொருள்பட்டு நாராயணனைக் குறிக்கும் பிரபஞ்சத்தைத்

தாங்குகின்றவன். நாராயணன் ஆதலால் 'ஹ்ருதி' என்ற பதத்திற்கு நாரயணனிடத்தில் என்று பொருள் கொள்வதுமுண்டு ஒருவன் உடலைவிட்டு நீங்கும் போது புனிதமான ஓரெழுத்தாலாகிய பிரணவத்தை உச்சரிப்பதோடு பரம புருஷனை நினைக்கவும் வேண்டும். அவ்வித நினைப்பு வரும்போது உயிர் பிரும்மத்தை அடையும்.

ஓ மெனும் ஓரெழுத்திலுள்ளவன் 'பகவானே' என்பதைப் பிரகலாதன் வாயிலாக வெளிவரும் கம்பர் பாட்டாலும் உணரலாம்.

ஓமெனும் ஓரெழுத்து அதனினுள் உயி
ராமவன் அறிவினுக் கறிவும் ஆயினான்.

ஆக மேற்கூறிய தியானமும் அந்திம காலத்தில் சிலருக்குச் சுலபமாக வரும். அதற்காக அவர்கள் செய்ய வேண்டுவது யாதென்பதைக் கண்ணன் மேலும் கூறிகிறார்.

செல்வமுயர் இன்பத்துச் செல்லாத நெஞ்சனாய்
நல்விரகால் என்னினைந்து நாடோறும் - தொல்வகையால்
என்றுமெனைக் கூடு மியோகிக்குப் பார்த்தனே
நன்று பெறவெளியன் நான்

(இ—ள்) செல்வம் உயர் இன்பத்து – (பணம், பதவி, அதிகாரம் முதலிய) உலகச் செல்வத்தால் வரும் உயர்ந்த மகிழ்ச்சியில், செல்லாத – பற்றாத, நெஞ்சனாய் – மனத்தை உடையவனாய், நல்விரகால் – சிறந்த பக்தி உபாயத்தால் என் நினைந்து – எனையே நினைத்துக் கொண்டு, நாள் தோறும் – பிரதி தினமும், தொல் வகையால் – பழகிய முறைப்படி, என்றும் எனைக்கூடும் யோகிக்கு – எப்பொழுதும் என்னையே தியானிக்கின்ற யோகிக்கு, பார்த்தனே – அர்ஜுனா! நான் – பரமாத்மாவாகிய நான், நன்று பெற எளியன் – நன்கு அடைவதற்கு சுலபனாகிறேன்.

அநந்ய சேதாஸ் ஸததம் யோமாம் ஸ்மரதி நித்யச:
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்ய யுக்தஸ்ய யோகிந:

(இ—ள்) பார்(த்)த – அர்ஜுனா!, நித்யச: – தினந்தோறும் ஸததம் – எப்பொழுதும் அநந்ய சேதா: – வேறு சிந்தனையின்றி ய: மாம் ஸ்மரதி – எவன் என்னை நினைக்கிறானோ, நித்யயுக்தஸ்ய – நித்தியம் தியானம் புரிகின்ற, தஸ்ய யோகிந: – அந்தயோகிக்கு, அஹம் ஸுலப: – (பெறுவதற்கு) நான் சுலபனாகிறேன்.

நித்ய:- மரணம் வரைக்கும் அதாவது தீர்க்க காலம் என்று சங்கரர் பொருள் கொண்டார்.

மனத்தை உலகியதிலிருந்து நீக்கிப் பரம புருஷனிடம் நிறுத்த அடிக்கடிப் பழக வேண்டும். நெடு நாள் பழக்கத்தால் அது முயற்சியின்றித் தானாகவே எப்பொழுதும் நடைபெறும். பக்தி தியானமாகும் அது பயில வேண்டிய சாதனம் பூர்த்தியான நிலையாகும். சாதனம் கைவரப் பெற்றோர் பக்தர்களாகிறார்கள். அந்நிலை பக்தியாகும் பிரகிருதிக்கு அப்பாற்பட்டு உலகியலில் ஆழ்ந்தோரின் சிந்தைக்கெட்டாதவனாயிருந்த போதிலும் பரம புருஷன் பக்தர்களுக்குப் பெறுவதற்குச் சுலபனாகிறான் அத்தகைய பக்தர்களுக்குப் பகவான் அற்பர்கள் விரும்பும் பலனைக் கொடாமல் விரோதியை ஒழித்து ஞானத்தைக் கொடுத்துத் தன்னையே கொடுக்கிறான் அவர்களுக்குக்குப் பகவானைப் பெறுவதே எளிதான பிறகு மரண காலத்தில் அவர் நினைவு ஏற்படுவது பிரமாதமாகுமா?

இதை நம்மாழ்வார்

'பத்துடை அடியவர்க்கு எளியவன் திருவாய்மொழி என்றும்

மாணிக்கவாசகர்

'பத்தி வலையுள் படுவோன் காண்க (திருவாசகம்)

என்றும் அநுபவத்தால் உணர்ந்து கூறுவது நோக்கத்தக்கது.

89. பலன்களும் வேற்றுமையும்

தியானத்திற்கு விஷயமாக எத்தனையோ பொருள்களை எடுத்துக்கொள்ளலாம். செல்வம் பதவி அழகு இவைகள் முயற்சியில்லாமலே பலருக்குத் தியானத்திற்குரிய விஷயமாகின்றன. அவற்றைப் பெறுவதில் உள்ள ஆசையால் பல தேவதைகளைத் தியானம் செய்து உபாஸிக்கிறார்கள். அவ்வித உபாஸனைப் பழக்கத்தால் அந்திம காலத்தில் பகவானின் நினைவிற்குப் பதிலாகப் பழகிய தேவதையின் நினைவே வரும். அவ்வித நினைவிற்குத் தக்க பலனையும் எவரும் பெறாமல் தப்புவதில்லை.

ஆகையால் பலன்களில் மேலானது எது? அதற்காக ஒருவன் கொள்ளவேண்டிய உயர்ந்த லக்ஷியம் எது? என்பதைக்கண்ணன் ஒரு சுலோகத்தால் மேலும் விளக்குகிறார்.

என்னை அடைந்தற்பின் எஞ்சாத் துயர்வினைக்கு
மின்னை நிகர்பிறப்பு மேவலுறார் - அன்ன
பெருமனத்த ராய்ப்பிறங்கும் பேரின்ப மன்னும்
திருமனத்த ரானார் சிறந்து.

(இ-ள்) என்னை அடைந்ததற்பின் – (பரமாத்வாகிய) என்னைச் சேர்ந்த பிறகு, எஞ்சா துயர் விளைக்கும் – மிக்க துக்கத்தை உண்டாக்குகின்ற, மின்னை நிகர் பிறப்பு – மின்னலைப்போன்ற நிலையில்லாத பிறப்பை மேவல் உறார் அடையமாட்டார்கள், சிறந்து திரு மனத்த ரானார் – மேம்பாடு அடைந்து மஹாத்மாக்களானவர்கள் அன்ன பெருமனத்தராய் – (என்னையே நினைத்தலாகிய) பெரு மனம் படைத்தவர்களாய் பிறங்கும் பேர் இன்பம் மன்னும் – புகழுடன் விளங்கும் மோக்ஷத்தை பெறுவார்கள்.

மாம் உபேத்ய புநர் ஐந்ம து:காலயம் அசாத்வதம்
நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமாம் கதா:

(இ-ள்) மாம் உபேத்ய – என்னை அடைந்து, துக்காலயம் – துயரத்திற்கு இருப்பிடமாயும் அசாத்வதம் – நிலையில்லாலும் இருக்கின்ற, ஐந்ம – பிறவியை புந: – மறுபடியும், ந ஆப்நுவந்தி – அடையமாட்டார்கள், மஹா ஆத்மாந: (பகவானையே நினைத்தலாகிய மேலான மனம் படைத்தவர்கள் பரமாம் – உத்தமமான, ஸம்ஸித்தம் – பல ஸித்தியை, கதா: – அடைந்தாலோ, புந: ஐந்ம – மறுபிறப்பை, ந ஆப்துவந்தி – அடையமாட்டார்கள்.

இச்சுலோகத்தில் என்னை அடைந்தவர்கள் மறுபடிப் பிறவி யெடுக்கமாட்டார்கள் என்ற அளவில் நிற்காமல் 'பல ஸித்தியை அடைந்தவர்கள் (ஸம் ஸித்திம்) என்று மேலும் சொல்லியிருப்பதால் இருவிதமாகப் பொருள் கொள்ளுகின்றனர்.

தன்னை (பகவானை) அடைவதே மோக்ஷம் என்பதைக் காட்டவே அவ்வாறு கூறப்பட்டது என்ற ஒரு சாரார் பொருள் கொள்கின்றனர்: மற்றொரு சாரர் பகவானை அடைவது மோக்ஷமாகாது. மோக்ஷம் அதற்கு அப்பாற்பட்டது. என்றாலும் பகவானை அடைந்தவர் மோக்ஷத்தை அடைந்துதீர்வார்கள். ஆதலால் பகவானைப் பெற்றவர்களுக்குக் மோக்ஷம் அடைந்தவர்களுக்கும் மறுபிறவி இல்லை என்று இங்கு கூறப்பட்டது என்று கொள்வர்.

பிறவிக்குக் காரணமான சரீரம் மின்னலைப் போல நிலையற்றது என்பதை.

'மின்னனின் நிலை யில மன்னுயிர் ஆக்கை கள்

என்ற அடிகளில் நம்மாழ்வார் விளக்கியுள்ளார். அதையொட்டி மூலத்திலுள்ள 'அசாத்வதம்' என்ற பதம் பாடலில் 'மின்னை நிகர் பிறப்பு' என்று மொழி பெயர்க்கப்பட்டது.

பகவானை உபாஸித்து அதனால் அவரையடைந்து 'மோக்ஷம் பெறலாம் என்றால் பிரமன் இந்திரன் முதலியோரைத் தியானித்து, பிரமலோகம் அல்லது இந்திர லோகம் பெற்று அதனால் பிறவியில்லாத மோக்ஷத்தைப் பெறலாகுமா? என்று வரும் சந்தேகத்தைப் போக்க, கண்ணன் அர்ஜுனனுக்கு மேலும் கூறுகிறார்.

வேதா உலலகளவும் மீண்டு வரும்உலகென்
றோதாநின் றார்கள் உணர்வுடையோர் - போதார்ந்த
தாராரும் கௌந்தேயா என்னடைந்தார் தாமீண்டு
வாரார் மறுபிறப்பின் வாய்.

(இ—ள்) போது ஆர்ந்த மலர்கள் பொருந்திய, தார் – ஆரும் – மாலை அணிந்த கௌந்தேயா – அர்ஜுனா! வேதா உலகளவும் உலகு – பிரும்மாண்டத்தில் பிரும்மலோகம் முடிய போக ஐச்வர்யத்திற்கு இடமான எல்லா உலகங்களும், மீண்டு வரும் – (அழிந்து அழிந்து) மறுபடி தோன்றும், என்று – உணர்வு உடையோர் – ஞானிகள் ஓதா நின்றார்கள் – ஏகமாகச் சொல்லுகிறார்கள் என் அடைந்தோர் – (ஆனால்) என்னை அடைந்தவர்களோ, மீண்டு – மறுபடியும், மறுபிறப்பின் வாய் வாரார் – புநர் ஜந்மத்தைப் பெறமாட்டார்கள்.

ஆப்3ரஹ்ம பு4வநால்லோகா: புநராவர்திநோர்ஜு3ந
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே

(இ—ள்) அர்ஜுந – அர்ச்சுனா, ஆ ப்ரம்ம புவனாத் – பிரும்மலோக வரையிலுள்ள, லோகா: – உலகங்கள், புநரா வர்(த்)திந: – திரும்பும் தன்மையுடையவைகள், கௌந்தேய – குந்திபுத்திரனே! மாம்உபேயத்து – என்னை அடைந்தாலோ, புந: ஜந்ம – மறுபடியும் பிறவி, ந வித்யதே – கிடையாது.

பிரும்ம லோகம்வரை என்று பொருள்கொண்டு பிரும்மலோகம் நீங்கலாக மற்றைய உலகங்கள் தோன்றி அழியும் தன்மை வாய்ந்தன

அவற்றை அடைந்தவர் மறுபடியும் பிறவியைப் பெறுவர்' என்று இச்சுலோகத்துக்குப் பொருள் கொள்வோரும் உண்டு.

ஆனால் பெரும்பாலோர் 'பிரமலோகம் உள்பட, பிரும்மாண்டத்திலுள்ள எல்லா உலகங்களும் தோன்றித்தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை ஆகவே அவற்றைத் தேவதைகளின் அனுக்கிரகத்தால் பெற்றவனும் பிறந்தே தீருவான்' என்றே பொருள் கூறுகின்றார்.

இந்திராதி தேவதைகளைத் தியானித்து அவர்கள் அனுக்கிரகத்தால் பெறலாகும் சுவர்க்காதி பலன்கள் பிறவியைப் போக்க மாட்டா நசபுனராவர்த்ததே' (திரும்பி வர மாட்டான்) என்று வேதம் போற்றும் மோக்ஷபதவியாகிய பலனைப்பெறுவதால் மட்டுமே, பிறவி நீங்கும்.

ஆக இச்சுலோகத்தால் வாசுதேவனைத் தியானிப்பதால் வரும் மோக்ஷபலம் நித்தியமானதென்றும், வேறுபலன்கள் அநித்யமானவை என்றும் விளக்கப்பட்டன.

'எதனால்?எப்படி? வேறு பலன்கள் அநித்யமாய் முடிகின்றன என்பது மேலும் விளக்கப்படுகின்றன.

ஆயிர மேலுகங்கள் ஆங்கயனுக் கோர்பகலாம்
ஆயிர மாமிரவு மற்றதுவென் - றோயும்
பகலிரவு தானறியும் பண்புடையார் இன்னே
நிகரறிவு தாஞ்செய்வார் நின்று.

(இ-ள்) ஓயும் - கழிந்து கொண்டிருக்கும், பகல் இரவு தான் ஆகும். பண்பு உடையார் - பகல் இரவு எனப்படும் காலதத்துவ உணர்வுடைய பெரியோர், அயனுக்கு - பிரமனுக்கு, ஆயிரம் மேல் உகங்கள் - ஆயிரம் சதுர் யுகங்கள், ஓர் பகலாம் - ஒரு பகலாக விருக்கும், ஆயிரமாம் அது ஆயிரமான அச் சதுர்யுகங்கள் இரவு ஆம் - ஒரு இரவாகும், என்று - இன்னே - இந்தவிதமாக, நின்று நிகர் அறிவுதாம் செய்வர் - தெளிவா கத்துல்லியமாக கணக்காக விவரத்தைத் தெரிவிப்பார்கள்.

ஸஹஸ்ர[3] யுகபர்யந்தம் அஹர்யத் ப்ரஹ்[3]மணோ விது[3]:
ராத்ரிம் யுக[3] ஸஹஸ்ராந்தாங் தேஹோரா ராத்ர விதோ ஜநா:

(இ-ள்) 'யேஜநா: - எந்த ஜனங்கள், அஹோ ராத்ரவித: - பகல், இரவுகளை அறிந்திருக்கிறார்களோ, தே - அவர்கள், ப்ரும்மண: -

பிரமனுக்கு, யத் அஹ: – எது தினமோ (பகல்), தத் – அது, ஸ ஹஸ்ரயுக பர்யந்தம் – ஆயிரம் (சதுர்) யுகங்களின் முடிவு என்றும் ராத்ரிம் – இரவை, யுக ஸஹஸ்ராந்தாம் – ஆயிரம் (சதுர்) யுகங்களின் முடிவு என்றும், விது: – சொல்வார்கள்.

கீதையில் இச்சுலோகம் சொல்லப்படுவதற்குச் சங்கரர், ஸ்ரீதரர் முதலிய உரையாசிரியர்கள் காரணங்கூறியிருக்கின்றனர்.

சங்கரர்:– பிரமலோகம் கூட கால அளவையைப் பெற்றிருக்கும்போது மற்றைய உலகங்கள் யாவும் அழியத்தகுந்தவை களே என்பதை அறிவிப்பதற்காக இச்சுலோகம் சொல்லப்பட்டது.

ஸ்ரீதரர்:– பிரமலோகம் வெகுகாலம் நீடித்திருக்கும் என்பதையும் பிற உலகங்களை விடச் சிறந்தது என்பதையும் அறிவிக்கும் பொருட்டு இது கூறப்பட்டது.

ஆயிரம் யுகம் என்றது ஆயிரம் சதுர்யுகங்களைக் குறிக்கும் பிரமனது ஆயுள் விவரத்தை புராணாதி சாஸ்திரங்களால் அடியில் கண்டபடி அறியலாகும்:

கை நொடிப்பொழுது அல்லது கண்ணிமைப் பொழுது

	15 –	ஒரு காஷ்டை
காஷ்டை	30–	ஒரு கலை
கலை	30 –	ஒரு முகூர்த்தம்
முகூர்த்தம்	30 –	ஒரு நாள்
நாள்	15 –	ஒரு பக்ஷம்
பக்ஷம்	2 –	ஒரு மாதம்
மாதம்	2–	ஒரு இருது
இருது	3 –	ஒரு அயனம்
அயனம்	2 –	ஒரு வருஷம்
(மனித)வருஷம்	1 –	ஒரு தேவநாள்
தேவநாள்	365 –	ஒரு தேவ வருஷம்

யுகக் கணக்கு விவரம்

யுகம்	தேவ வருஷம்	மனித வருஷம்
கிருதயுகம்	4800	1728000
திரோதா யுகம்	3600	1296000
துவாபர யுகம்	2400	864000
கலியுகம்	1200	432000
ஆக யுகம் 4க்கு (1சதுர் யுகத்துக்கு) வருஷம்	12000	4320000

பிரும்மாவின் ஆயுள் கணக்கு

மேற்கூறிய ஆயிரம் சதுர் யுகம் பிரமனுக்கு ஒரு பகல் இந்தப் பகல் ஒவ்வொன்றும் 71 சதுர்யுகம் கொண்ட 14 மந்வந்தரங்கள் என்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. பிரமனின் இரவுக்கும் அவ்வாறே சதுர்யுகம் 1000 2000 சதுர் யுகங்கள் பிரமனுக்கு ஒருநாள் இவ்விதம் 360 நாள்கள் அவருக்கு 1 வருஷம் இவ்வித வருஷங்கள் 100 பிரமனின் ஆயுள். இந்த ஆயுள் காலம் 'பரர்' என்று சொல்லப்படுகிறது. ஒரு பராவுக்கு மூன்று கோடியே பதினொருலக்ஷத்து நான்காயிரம் கோடி மநுஷிய (311040000000000) வருஷங்கள் 'இவ்வளவு நீண்ட காலம் அழிவில்லாததிருக்கும் பிரமலோகம் யாதாகும்' என்பதைக் காண்போம்.

90. சிறந்த ஸாதனம் எது?

பகவானைத் தவிர வேறு யாரை அடைந்தாலும் எந்த உலகத்தைப் போய்ச் சேர்ந்தாலும் ஜனன மரணத்திலிருந்து தப்ப முடியாது. பிரும்ம லோகம் உள்படச் சகலப் பிரபஞ்சமும் காலத்தின் அதீனத்தில் அகப்பட்டிருக்கின்றது. நீண்ட காலத்திற்குப்பிறகாவது அழிந்தே தீரும். மறுபடித்தோன்றும் அவ்வாறு நெடுங்காலமிருந்து பின் நெடுங்காலம் இல்லாமல் மறைந்திருப்பதற்கு, பிரும்மலோகத்தைக் கண்ணன் அர்ஜுனனுக்கு முன்னே உதாரணமாக எடுத்துச் சொன்னார் அல்லவா? அவ்விதம் தோன்றிமறையும் தத்துவத்தை மேலும் விளக்குகிறார்.

தோன்றா அயனுடம்பில் தோன்றும் பொருளெல்லாம்
என்றாம் பகலி னிடையுதிக்கும் ஆன்றார்ந்தங்
காகு மவையெல்லா மவ்வுருவுள் ளேயடங்கிப்
போகு மிரவாகும் போது.

(இ—ள்) என்றாம் பகலின் இடை – பொருந்திய பகல் கால ஆரம்பத்தில், தோன்றுப் பொருள் எல்லாம் – காணப்படும் பொருள்களடங்கிய பிரபஞ்சம் முழுவமும் தோன்றா அயன் உடம்பில் – காணப்படாத பிரம்மனின் சூட்சுமப் பிரகிருதியிலிருந்து உதிக்கும் உண்டாகும்; இரவு ஆகம்போது – இரவுக்காலம் வரும்போது, ஆன்று ஆர்ந்து அங்கு ஆகும் அவை எல்லாம் – அமைந்து நிறைந்து பிரபஞ்சத்தில் ஆன பொருள்கள் யாவும், அ உரு உள்ளே அடங்கிப்

போகும் – காணப்படாதது என்று சொல்லப்பட்ட அந்தச் சூட்சுமப் பிரகிருதியினுள்ளே அடங்கிவிடும்.

அவ்யக்தாத் வ்யக்தயஸ் ஸர்வா: ப்ரபவந்தி அஹராகமே
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவா வ்யக்த ஸஞ்ஜிகே

(இ–ள்) அஹராகமே – பகல் வரும் பொழுது, வ்யக்தய: ஸர்வா: – காணப்படும் பொருள்கள் எல்லாம், அவ்யக்காத் – காணப்படாத சூட்சுமப் பிரகிருதியினின்றும், ப்ரவந்தி – உண்டாகின்றனர், ராத்ரி ஆகமே – இரவு வரும் பொழுது, அவ்யக்த ஸஞ்ஜிகே – காணப்படாததென்று சொல்லப்படுகிற, தத்ரைவ – (சூட்சுமப் பிரகிருதியாகிய) அவ்விடத்திலேயே, ப்ரலீயந்தே – அடங்கிவிடுகின்றன.

ஆயிரம் சதுர்யுகங்கள் பிரமனுக்கு ஒருபகல். அப்பகலின் முடிவில் மஹாப் பிரளயம் உண்டாகி அதுவரையில் காணப்பட்ட பொருள்கள் எல்லாம் அழிந்து சூட்சுமப் பிரகிருதியில் அடங்கிவிடுகின்றன. அப்பிரளயம் ஆயிரம் சதுர் யுகங்கள் நீடித்திருப்பதால் அக்கால அளவு பிரம்மனுக்கு ஒரு இரவு என்று சொல்லப்படுகிறது. இரவு முடிந்து பகல் ஆரம்பிக்கும்போது பிரளயம் முடிந்து, காணப்படாத சூட்சுமப் பிரகிருதியாகிய மூலத்தில் அடங்கியவை மறுபடி காணக்கூடியவையாக வெளிப்படுகின்றன. இவ்வாறு மாறிமாறி நடைபெறுகின்றது.

'அவ்யக் தாத்' என்பது பிரம்மனையும், வ்யக்தாத் என்பது சத்துவம், ராஜசம், தாமசம் முதலிய முக்குண விகாரங்களையும், அவற்றின் காரியங்களையும் குறிக்கும் என்று சிலர் உரை கொள்வர். 'அவ்யக்தாத்' என்பதற்கு 'ப்ரும்மாவின் நித்திராவஸ்தை' என்று சங்கரர் உரை கொண்டதும் நோக்கத்தக்கது.

ப்ரும்மாவின் பகல் முடிவில் உண்டாகின்ற பிரளயத்தில் பிரும்மலோகம் நீங்கலாக மற்றப் பிரபஞ்சம்தான் அழியும் பிரும்மாவிற்கு உரிய ஆயுளான நூறு பிரும்ம வருடங்கள் கழியும்போது பிரும்மலோகமும் அழிந்துவிடும் என்று பாகவதாதி புராணங்கள் கூறுகின்றன.

பிரும்மாவின் பகல் இரவு ஆயுளும் இவ்வாறு முடிவுடையதாகச் சொல்லப்பட்டால் பகவானுக்கும் ஆரம்பம் முடிவு முதலிய இருக்கலாமோ என்ற சந்தேகம் பலருக்கு எழலாம் அதைப் போக்குவதற்காகக் கண்ணன் மேலும் இரு சுலோகங்களால் பகவத் ஸ்வரூபத்தின் தன்மையை வெளியிடுகிறார்.

எல்லாப் பொருளும் இறுதியினைக் கூடியே
நில்லாத காலத்து நிற்குமதாய்ச் - சொல்லார்ந்த
அக்கரமாய் நின்றபொரு ளாங்கசித்தின் மேலாகி
மிக்கபெரு நுண்மையதாம் வேறு
நுண்ணேர்கொள் அக்கரமா நூலுரைக்கும் அப்பொருளே
எண்ணோர் பரமகதி என்றுரைப்பர் - நண்ணியது
மீளரர் எனக்கதுதான் மேலாய் ஒளிசிறந்து
மாளா விருப்பிடமா மற்று.

(இ—ள்) எல்லாப் பொருளும் — எல்லாவிதப் பூதங்களும், இறுதியினை கூடியே நில்லாத காலத்தும் — தத்தம் காரியங்களோடு காரணங்களோடும் ஒருங்கே நில்லாது நசிக்கும் காலத்திலும், நிற்கும் அதாய் — (அவைகளிலிருக்கும்) தான் நசியாததாய், சொல் ஆர்ந்த அக்கரமாய் – புகழ் நிறைந்த அக்ஷரம் என்னும் பெயர் படைத்தாய், நின்ற பொருள் – நிலையாகவிருக்கும் பொருள், அசித்தின் மேலாகி – (பிரகிருதி) அசித்தைவிடச் சிறந்ததாய், மிக்க பெரு நுண்மையதாம் வேறு – மிகமிகச் சூட்மமானதாய் வேறுபட்டிருக்கும்.

அ பொருளை — அந்தப் பொருளை நுண் ஏர் கொள் — அவ்வியக்தத்தன்மை கொண்ட, அக்கரமா நூல் உரைக்கும் — அக்ஷரம் என்று நூல்கள் கூறும். எண்ணோர் பரமகதி என்பர் — (அப்பொருளை) அறிவுடைய வேத வித்துக்கள் பரம புருஷார்த்தம் என்று சொல்வார்கள், அது நண்ணிமீளார் — அதை அடைந்தவர்கள் மறுபடியும் திரும்புவதில்லை, அது தான் எனக்கு மேலாய் ஒளி சிறந்துமாளா இருப்பிடம் ஆம் — அதுவேதான் என்னுடைய மேலான பிரகாசமான நிலையான (நியமனத்) தானம் ஆகும்.

பரஸ்தஸ்மாத்து பா[4]வோந்யோ வ்யக்தோ வ்யக்தாத் ஸநாதந:
யஸ்ஸ ஸர்வேஷு பூ[4]தேஷு நச்யத்ஸு ந விநச்யதி
அவ்யக்தோ க்ஷர இத்யுக்த: தமாஹு[3]: பரமாம்கதிம்
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தாம[3] பரமம்[4] மம

(இ—ள்) தஸ்மாத் அவ்யக்தாத் — அந்தப் பிரகிருதிரூப அவ்வியக்தத்தைக் காட்டிலும் பர: — சிரேஷ்டமான, அந்ய: — மற்றொரு அவ்யக்த: — பிரமாணத்துக்குப் புலப்படாத, ஸநாதந: — நித்தியமான ய: — பாவ: — யாதொரு பாவ (தன்மை) முண்டோ ஸ: — அது, ஸர்வேஷு

பூதேஷு – எல்லா பூதங்களும், நச்யத்ஸு – நசிக்கும் பொழுதும், ந விநச்யதி – நசிக்கிறதில்லை.

ய: – எதுவானால் அவ்யக்த: – அவ்வியக்தம், அக்ஷர: – அக்ஷரம் இதி உக்த: – என்று சொல்லப்படுகிறதோ தம் – அதை, பரமாம்கதிம் – மேலான புருஷார்த்தமாக, ஆஹு: – சொல்லுகிறார்கள், யம் – யாதொன்றை, ப்ராப்ய அடைந்து, ந நிவர்த்தந்தே – மீண்டும் வரமாட்டோர்களோ, தத் – அது, மம, என்னுடைய பரமம் – மேலான, தாம – (நியமன) ஸ்தானம்.

'அது' என்னுடைய மேலான ஸ்தானம்:– என்பதற்குக் கொள்ளப்படும் விசிஷ்டாத்வைத ரீதியான பொருள் சிந்திக்கத்தக்கது அது பின் வருமாறு; – பகவானுக்கு நியமனம் ஸ்தானங்கள் பல உண்டு அவற்றுள் அசேதனமான பிரகிருதி ஒரு நியமன ஸ்தானம் பிரகிருதியோடு கலந்திருக்கிற ஜீவன் என்னும் பராப்ரக்ருதி இரண்டாவது நியமனஸ்தானம். அவ்வதேசனப் பிரகிருதியை விட்டுப் பிரிந்த(முக்தியடைந்த) முக்தஸ்வரூபமான ஜீவன் மேலான நியமன ஸ்தானம்.

தமிழ்ப்பாடலில் வந்த 'மேலாய் ஒளி சிறந்த' என்பதற்கு, 'பிரகிருதியோடு கலந்து மிதமான ஞானமுடைய ஜீவஸ்வரூபத்தைக் காட்டிலும் மேலானதாய், எல்லையற்ற ஞானத்தோடு முக்த ஸ்வரூபமாயிருக்கிற' என்று பொருள் கொள்ளலாம்.

கடந்த அத்தியாங்களில் பக்தியும் யோகமும் முக்தியில் கூட்டுவிக்கும் சிறந்தபடிகளாகச் சொல்லப்பட்டன. ஆனால் அவை யிரண்டையும் சமமாக நினைக்கலாமா? என்பதற்கு விடையாகப் பக்தியே எல்லாச் சாதனங்களிலும் சிறந்ததென்பதை அடுத்து வரும் சுலோகத்தில் தெரிவிக்கிறார்.

தன்னகத்துப் பூதங்கள் எல்லாம் தகவிருத்தி
அன்னவற்றில் தான்பரந்தே யாங்கமைந்து - மன்னியசீர்
அந்தப் பரம்புருடன் அன்பால் அனன்னியமாம்
சிந்தைக் குறவெளியான் சேர்ந்து

(இ–ள்) தன் அகத்து – தனக்குள்ளே பூதங்கள் எல்லாம் தக – பிராணிகள் யாவும் பொருந்தியிருக்க, விருத்தி அன்னவற்றில் – விருத்தியடையும் (வளரும்) அப்பிராணிகள் யாவற்றிலும், தான் பரந்து அமைந்து – தானும் வியாபித்துப் பொருந்திய மன்னிய சீர் – மிக்க

புகழோடு கூடிய, அந்தப் பரம் புருடன் – அந்தப் பரம புருஷனாகிய பகவான், அன்பால் – அன்போடு செய்யப்படும் அனன்னியமாம் சிந்தைக்கு – வேறொன்றை நாடாத பக்தியால் சேர்ந்து உற – அடைவதற்கு எளியன் – சுலபனாகிறான்.

2 4 4
புருஷஸ்ஸ பர: பார்த பக்த்யா லப்யஸ்த்வநந்யயா
2 4 3
யஸ்யாந்த: ஸ்தாநி பூதாநி யேந ஸர்வமிதம் ததம்

(இ–ள்) பார்த்த அர்ஜுந இதம் ஸர்வம் பூதாநி இந்த எல்லாப் பூதங்களும், யஸ்ய – எவருடைய, அந்த: ஸ்தாநி – உள்ளுக்குள் இருக்கின்றனவோ, யேந – எவரால், ததம் – வியாபிக்கப்பட்டிருக் கிறதோ ஸ: – அந்த பர: புருஷ: – பரம புருஷன், அனன்யயா – மற்றொன்றை நாடாத, பக்த்யா – பக்தியினால் லப்ய: – அடையத் தகுந்தவன்.

பிறிதொன்றை நாடாத பகவத் பக்தி ரூபமான தியானமே அனன்ய பக்தி என்ப்படும் ஞானம், யோகம் என்று சொல்லப்படுகின்ற பிற சாதனங்களை விட, பக்தி அனுஷ்டிப்பதற்கு எளிது அப்பக்தியே ஞானத்தையும் தருவதாலும் பக்தியால் அடைவதற்கு எளியனாய்ப் பகவானிருத்தலாலும் சிறந்த ஸாதனமாகச் சொல்லப்படுகிறது.

91. இரு வேறு மார்க்கங்கள்

உயிர்கள் விரும்பத்தக்க பலன்கள் பலவாயிருந்த போதிலும் வாசுதேவனை (பிரும்மத்தை) அடைவதே சிறந்த் பலனாகும். வாசுதேவன் பக்திக்கு எளியனாய் இருப்பதால் இந்திரியங்களுக்கு வசப்படாமல் மனதை ஒரு நிலைப்படுத்தித் தைல தாரை போல் பகவானை இடைவிடாமல் தியானம் செய்து பெறலாம், அவ்வாறு பெற்றவர்கள் பிறவி எடுக்கமாட்டார்கள்.

பிற பலன்களில் விருப்பங்கொண்டு அவற்றைப் பெறச் சாதனங்களை அனுஷ்டிப்போர் கோரிய பலனைப் பெறுவர் அப்பலன் அற்ப காலமே நீடிக்குமாதலால் அதனைப் பெற்றவர் மறுபடியும் துன்பத்திற்கிடமாகிய பிறவியை மீண்டும் அடைவர்.

பிறவியை ஒழிக்கும் மோக்ஷ பலனை அடையப் போகும் உயிர்களுக்கு மரண காலத்தில் பகவானின் நினைவு உண்டாகும். 'பிற பலன்களை அடையப்போகும் உயிர்களுக்கு மரண காலத்தில் தக்க

சாதனானுஷ்டானம் முன்னமே இல்லாததால், பகவானின் நினைவு 'உண்டாவதில்லை' என்று முன்னே கண்ணன் சொன்னாரல்லவா?

இப்பொழுது 'பிறப்பை அடியோடு நீக்கிக் கொண்டவர் மரணமடைந்ததும் எவ்வழியாகச் செல்கிறார்கள்? பிறர் எவ்வழிச் செல்லுகிறார்கள், இரு வேறு மார்க்கங்களிலும் உள்ள தேவதைகள் யாவர்? என்பதைச் சொல்லுகிறார்.

யாதுவழி செல்லுங்கால் யோகியர்கள் மீளார்கள்
யாதுசெல்லுங் கான்மீள்வர் இவ்வுலகின் - மீதமைந்த
அவ்வழிகள் தாமிரண்டு மாங்குனக்குச் சொல்லுகேன்
இவ்வழியில் கேளா யிது.

(இ–ள்) யோகியர்கள் – யோகிகளில், யாது வழி செல்லுங்கால் மீள்வர் – (சுவர்க்க இன்பத்தைக்கோரிய புண்ணியவான்கள்) எந்த மார்க்கமாய்ச் சென்றால் திரும்புகின்றார்களோ, யாதுவழி செல்லுங்கால் மீளார்கள் – (பரம கதியை விரும்பியவர்) எந்த மார்க்கமாய்ச் சென்றால் திரும்ப மாட்டார்களோ, இ உலகின் மீது அமைந்த – இவ்வுலகில் பொருந்திய, அ வழிகள் தாம் இரண்டும் – அவ்வழிகள் இரண்டையும், உனக்கு சொல்லுகேன் – உனக்குத் தெரிவிக்கிறேன், இ வழியில் இது கேளாய் – இவ்விதம் சொல்லப்படும் இவ்விவரத்தைக் கேட்பாயாக.

யத்ரகாலே த்வநாவ்ருத்தி ஆவ்ருத்திம் சைவ யோகிந:
ப்ரயதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப

(இ–ள்) பரதர்ஷப – பரதவமிசத்தில் சிறந்தோனே! யத்ர காலே – எந்தக் காலத்தில், ப்ரயாதா: – சென்ற (மரணமடைந்து, யோகி ந: – யோகிகள், அவாவ்ருத்திம் – திரும்பாமையும் (ஜந்மமில்லாமையையும்), ஆவ்ருத்திம் – திரும்புதலையும் (பிறப்பையும்) யாந்தி – (முறையே) அடைகின்றனரோ, தம் காலம் – அந்தக் காலம் – அந்தக் காலத்தை லக்ஷ்யாமி – சொல்லுகிறேன்.

'யோகி ந:' என்பதற்கு ஞானயோகிகளும் கர்மயோகிகளும் என்பது சங்கரர் கொண்ட பொருள். முக்தியை அடைபவர்கள் மரணமடையும் காலம், சுவர்க்க இன்பம் எய்தி மீளப்போகின்றவர் மரண மடையும் காலத்திலிருந்து வேறுபட்டிருக்கும் இருவரும் வெவ்வேறு காலத்தில் மரணமடைகின்றனர். மரணமடையும் காலத்திற்கும், சிலர் பிறவியை எடுப்பதற்கும் எடுக்காமைக்கும் சம்பந்தம் உண்டு என்பது இச்சுலோகத்தில் வெளியாகிறது.

காலம் என்பது அக்காலத்திற்குரிய காலாபிமான தேவதையையும் குறிக்கும். அக்காலத்தில் உடலைவிட்டுப்பிரிந்த உயிர்கள் செல்லும் மார்க்கத்தையும் குறிக்கும். அம்மார்க்கத்தின் ஒரு பகுதி காலாபிமான தேவதையின் ஆதீனத்திலும் பிறபகுதிகள் மற்ற தேவதைகளின் அதீனத்திலும் இருக்கின்றன. உயிர்கள் செல்லும் மார்க்கத்தையும் மார்க்கத்திலுள்ள தேவதைகளையும் அடுத்துவரும் சுலோகங்களில் குறித்திருப்பதால் இச்சுலோகத்தில் யத்ர காலே என்ற தொடரிலிருக்கும் கால சப்தத்திற்கு 'மார்க்கம்' என்று பொருள் செய்திருக்கின்றனர் சிலர். அதைத் தழுவி, கீதை வெண்பா ஆசிரியரானவாதிகேசரி 'யாது வழி' என்று மொழி பெயர்த்திருக்கின்றாரோ என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. உயிர்கள் செல்லும் மார்க்கம் பகல் தொடங்கி ஸம்வத்ஸரம் (ஆண்டு) வரையிலுள்ள காலாபிமானி தேவதைகளால் நிறைந்திருப்பதால் 'மார்க்கத்தை' கால சப்தம் குறித்ததாகக் கொள்வது தவறாகாது.

திரும்பி வராத உயிர்கள் செல்லும் மார்க்கம் முன்னதாகச் சொல்லப்படுகிறது.

அங்கிபகன் முற்பக்கம் ஆங்கு வடவயனத்
தங்கமிசை ஏகியே தாமணைவர் - சங்கையற
மன்னும் பிரமத்தை வாய்ந்ததனைத் தம்முணர்வால்
உன்னும் மனத்தவர்கள் உற்று.

(இ—ள்) சங்கை அற – சந்தேகமில்லாமல், அதனை தம் உணர்வால் உற்று உன்னும் மனத்தவர்கள் – அப்பிரும்மத்தை அறிவினால் உணர்ந்து நினைக்கும் மனம் படைத்தவர்கள் (தியானம் செய்வோர்), அங்கி – அக்கினி, பகல், முன் பக்கம் – சுக்கிலபக்ஷம், வட அயனம் – (ஆறு மாதங்களான) உத்தராயணம் தங்கமிசை – இக் காலங்களிலிருந்து ஏகி – (மரணமடைந்து) சென்று, மன்னும் – நிலையான, பிரமத்தை – பரம்பொருளை, வாய்ந்துதாம் அணைவர் – அவர்கள் நன்கு அடைவார்கள்.

அக்னிர் ஜ்யோதி ரஹச் சுக்ல ஷ்ஷாண்மாஸா உத்தராயணம்
3 2 3 3 3
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்ம விதோ ஜநா:

(இ—ள்) அக்நி: – அக்கினி, ஜ்யோதி: – ஜோதி, அஹ: – பகல், சுக்ல: – சுக்லபக்ஷம், ஷாண் மாஸா: – ஆறு மாதங்களான. உத்தாராயணம், தத்ர – இதில், ப்ரயாதா: – மரணமடைந்த, ப்ரஹ்மவித:

– பிரும்மத்தை யறிந்த ஜநா; – ஜனங்கள், ப்ரம்ம – பிரும்மத்தை, கச்சந்தி – அடைகின்றார்கள்.

வாழ்விலே பிரும்மத்யானம் செய்து பழகியவர்கள் மரணமடைந்ததும் அக்கினி அபிமானி தேவதை, பகல் காலத்திற்கு அபிமானி தேவதை, சுக்கில பக்ஷத்திற்கு அபிமானி தேவதை, உத்தராயணத்திற்கு அபிமானி தேவதை பிரகாசத்திற்கு அபிமானி தேவதை ஆகிய அந்தந்தத் தேவதைகளது உலகங்களின் மார்க்கமாய்ச் சென்று பிறகு பிரும்மத்தை அடைகிறார்கள் என்றும் இதுவே வேதத்தில், 'முக்தி பெறுவோன் செல்லும் அர்ச்சிராதி மார்க்கம்' எனப்படுகிறது என்றும் சிலர் கூறுவர். திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் குறிக்கும் பின்வரும் பாடல் இம்மார்க்கத்தையே குறிப்பதாகத் தோன்றுகிறது.

சண்டமண்ட லத்தினூடு சென்றுவீடு பெற்றுமேல்
கண்டுவீடி லாதகாத லின்பநாளும் எய்துவீர்

அடுத்தபடியாக இரண்டாவது மார்க்கம் சொல்லப்படுகிறது.

தூமம்இராப் பிற்பக்கம் சோரமற் றென்னயன
மாமதன்மேல் சந்திரனை ஆங்கணைந்த - போமவன்றான்
நல்வினையில் சேர்பயனா நாடணைந்து மீளுமே
அல்வினையின் சார்பால் மறிந்து

(இ–ள்) தூமம் – புகை, இரா – இரவு, பின்பக்கம் கிருஷ்ணபக்ஷம், சோரா – குறையாத தென் அயனம் – தக்ஷிணாயணம், ஆம் அதன் மேல் ஆகின்றவற்றில், போம் அவன் தான் – போகின்ற (மரணமடைகின்ற) புண்ணிய கருமம் செய்தவன், நல்வினையில் சேர்பயனால் – நற்கரும புண்ணிய காரணமாக, சந்திரனை அணைந்த – சந்திரனது ஜோதியைப் பெற்ற நாடு அணைந்து – நாட்டைச் சேர்ந்து அல் வினையில் சார்பால் – பாபத்தின் சேர்க்கையால், மறிந்து மீளும் – மறுபடி பிறவி எடுத்து இவ்வுலகத்திற்கு வருவான்.

தூ[4]மோ ராத்ரி ஸ்ததா[2] க்ருஷ்ண ஷண்மாஸா த[3]க்ஷிணாயநம்
த[3]த்ர சாந்த்ர மஸம் ஜ்யோதிர் யோகீ[3] ப்ராப்ய நிவர்ததே

(இ–ள்) தூம: – புகை, ராத்ரி: – இரவு, ததா – அப்படியே, க்ருஷ்ண: – கிருஷ்ண பக்ஷம், ஷண்மாஸா: – ஆறு மாதங்களான, தக்ஷிணாயநம் – தக்ஷிணாயநம், தத்ர – இதில், யோகீ –

யோகியானவன், சாந்த்ரமஸம் – சந்திர ஸம்பந்தியான ஜ்யோதி: – சோதியை, ப்ராய – அடைந்து, நிவர்(த்) ததே – திரும்புகிறான்:

முந்திய சுலோகத்தில் சொல்லியது போல, புகை இரவு கிருஷ்ண பக்ஷம் தட்சிணாயநம் முதலியவைகள் அவற்றிற்குரிய அபிமானி தேவதைகளின் அதீனத்தில் இருக்கும் மார்க்கத்தைக் குறிக்கும். இதைத் தூமாதி மார்க்கம் என்று கூறுவதுண்டு. இவ் வழிச்சென்று சுவர்க்கம் அடைந்து திரும்புவோர் கருமயோகிகள் என்று சிலர் சொல்வதுண்டு.

ஆனால் ஒருவன் செல்லும் மார்க்கம் அர்ச்சிராதி மார்க்கமா? தூமாதிமார்க்கமா? என்பது அவன் மரண கால நினைவைப் பொறுத்த விஷயம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

92. சுக்கில கதியும் கிருஷ்ண கதியும்

இவ்வுலகில் பலருக்கு, நீண்ட ஆயுள் ஆரோக்கியம் பணம் பதவி அதிகாரம் சிற்றின்பம் புத்திரப்பேறு முதலியவை மந்திரம் தியானம் பிரார்த்தனை உபாசனை இவற்றைச் செய்தாவது பெறவேண்டிய சிறந்த பலன்களாகத் தோன்றுகிறன்றன. அவ்வாறு தோன்றுவதற்குத் தேகமும் அதன் காரியமாகிய மனமுமே, தான் என்று நினைத்து, தேகத்திற்கு அந்நியமான உயிரைப்பற்றிய சிந்தனை தீவிரமாக இல்லாமல், இருப்பதே, காரணமாகும்.

உயிரைப்பற்றிய உணர்வு வரப்பெற்ற பெரியோர், பேறு அல்லது புருஷார்த்தமாகச் சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையுமே கொள்வார். பொருள் பதவி காரணமாக மண்ணுலகில் சொற்ப காலம் தோன்றி மறையும் இன்பத்தை இன்பமகாவோ, பகுத்தறிவு படைத்த மனிதன் முயன்று பெறவேண்டிய உறுதிப் பேறாகவோ, மதிக்கமாட்டார்கள். எனவே கண்ணபிரான் பெரியோர்களால் பாராட்டப்படுகின்ற சுவர்க்க மோக்ஷ பலன்களைப் பெறுவோர் செல்லும் இரு வேறு மார்க்கங்களையும் முன்னே சொன்னார். அதற்கு அடுத்தபடியாக முடிவுரை கூறுகிறார்.

வெளிதுகரி தாயிருமை மேவியுல கேய்ந்த
அளியநெறி யாங்கவற்றில் ஒன்றால் – தெளிவுஅமரும்
மீளாப் பதமணையு மிக்கதனான் மீண்டுவரும்
கோளாறு தானணையும் கூர்ந்து

(இ—ள்) வெளிது கரிதாய் இருமைமேவி உலகு எய்ந்த அளிய நெறி – அவற்றில் சுக்ல கதி கிருஷ்ண கதி என இரண்டாகப் பொருந்திய உலகிற்குச் சாசுவதமாய் ஏற்பட்ட மார்க்கங்களில், ஒன்றால் – ஒரு மார்க்கத்தால், தெளிவு அமரும் மீளா பதம் மிக்கு அணையும் – (மாயையின் கலப்பின்றி) தெளிவுக்கிடமான திருப்பி வரவேண்டாத பதவியை நன்கு (ஒருவன்) அடைவான், அதனால் – (மற்றொரு) மார்க்கத்தால், மீண்டு வரும் கோள் ஆறுதான் அணையும் – திரும்பிவந்து பிறத்தல் ஆகிய துன்பத்தை (ஒருவன்) அடைவான்.

சுக்ல க்ருஷ்ண கதீ[3] ஹ்யேதே ஜகதச்சாச்வதே[3] மதே

ஏகயா யாத்ய நாவ்ருத்தி மந்யயாவர்த்ததே புந:

(இ—ள்) சுக்ல க்ருஷ்ண – வெளுப்பும் கறுப்புமான, ஹ்யேதே கதீ – இக்கதிகள் இரண்டும், ஜகத: – உலகத்துக்கு, சாச்வதே – சாத்சதங்களாக, மதே – எண்ணப்பட்டிருக்கின்றன, ஏகயா – ஒன்றினால், அநாவ்ருத்திம் – மீண்டு வராத தன்மையை யாதி அடைகிறான். அந்யயா – மற்றொன்றால், புந: – மறுபடியும், ஆவர்(த்)ததே – திரும்புகிறான்.

'உலகம்' என்பது ஞானம் கர்மம் ஆகிய யோகங்களை அனுஷ்டிக்கும் பெரியோர்களைக் குறிக்கும். அர்ச்சிராதி மார்க்கம் என்று சொல்லப்படும் சுக்ல ககிதயால் செல்கின்றவர்கள் திரும்புவதில்லை; முக்தியை அடைகின்றனர், தூமாதி மார்க்கம் எனப்படும் கிருஷ்ண கதியில் செல்கின்றவர்கள் நெடுங்காலம் சுவர்க்க இன்பத்தை அநுபவித்த போதிலும் மறுபடித் திரும்பிவந்து உலகில் பிறக்கிறார்கள். இருவகையான ஞானிகளும் சுக்ல கதியில் செல்கிறார்கள் என்றும், புண்ய கர்மம் செய்தவன் கிருஷ்ண கதியில் செல்கிறான் என்றும் வேதத்தில் சொல்லப்படுகிறது. புண்ய கர்மம் செய்தவன் என்பதற்குப் பலனைப் பகவதர்ப்பணம் (தியாகம்) செய்யாமல் கர்மம் செய்தவன் என சகித்துக்கொள்ளுதல் பொருத்தமாகவிருக்கும்.

இது காறும் சொல்லப்பட்ட செய்திகளின் அவசியமும் மேன்மையும் மறுபடி ஒரு சுலோகத்தால் மேலும் சொல்லப்படுகின்றன.

இவ்வழிகள் தானறிந்த யோகியவன் பார்த்தனே
எவ்வழியும் மோகத் திடையணையான் - அவ்வழியால்
காலம் அனைத்திலுநீ காதலால் யோகத்தை
ஏல முயல்கண்டா யிங்கு.

(இ-ள்) பார்த்தனே! – அர்ஜுனா!, இ வழிகள் – இந்த இரண்டு மார்க்கங்களையும், அறிந்த – தெரிந்து கொண்டிருக்கிற, யோகி அவன் - யோகியானவன், எ வழியும் – எந்த விதத்தாலும் மோகத்திடை அணையான் – (அற்ப பலன்களை விரும்பி) மோகம் அடைவதே இல்லை, அ வழியால் – அவ்வாறிருப்பதன் காரணமாக, நீ – காலம் அனைத்திலும் - எப்பொழுதும், காதலால் – பிரியத்தோடு, இங்கு – இவ்வுலகில் யோகத்தை – யோக மார்க்கத்தை, ஏல முயல் கண்டாய் – அடைய வேண்டிய முயற்சியைத் தெரிந்து கொள்வாயாக.

நைதே ஸம்ருதீ பார்தஜாநந் யோகீ முஹ்யதி கச்சந
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந

(இ-ள்) பார்(த்)த – அர்ஜுனா! ஏதே – இந்த, ஸ்ம்ருதீ – மார்க்கங்களை ஜாநன் – அறிகின்ற, யோகீ – யோகியானவன், கச்ச ந –எவலும் ந, முஹ்யதி – மோக மடைவதில்லை தஸ்மாத் – ஆகையால், அர்ஜுந – அர்ஜுனனே! ஸர்வேஷு – எல்லா, காலேஷு – காலங்களிலும், யோக யுக்த: – யோகத்தோடு கூடியவனாய், பவ – ஆகுவாயாக,

நல் ஞானத்தை அடைய முயல்பவனோ அல்லது அறச் செயல்களைப் புரிகின்றவனோ யோகியாவான், அவற்றில் ஒன்றை மேற்கூறிய இரண்டு மார்க்கங்களில் ஏதாயினும் ஒன்றிற்குச் சாதனமாக அனுஷ்டிப்பதாலும் மனம் அவர்களுக்கு வேறொன்றில் பற்றாதிருப்பதாலும் யோகி எனப்படுகின்றனர். பிரும்மத்தை உணர்ந்து அதனால் பிரும்மஞானியாகி விளங்குவோரும் யோகியராவர், அத்தகைய யோகிக்கு வாழ்க்கையில் மற்றையோரால் பாராட்டப்படும் இழிந்த (க்ஷுத்ர) பலன்களால் கலக்கம் உண்டாவதில்லை, உலகத்தார் விரும்பும் பணம் பதவி அதிகாரம் சிற்றின்பம் முதலிய பலன்கள் யோகியர்களுக்கு மோகத்தை விளைவிப்பதில்லை. யோகியர்கள் தாங்களாகவும் அவற்றில் மோ்கம் கொள்ளுவதில்லை, எனவே அவர்கள் மரண காலத்தில், பகவானை நினைக்கத் தவறுவதில்லை.

'தஸ்மாத்' (அவ்வழியால்):– 'யோகம் மிக மேலான பலனுக்கு ஏற்ற சாதனமாயிருப்பதால்' என்று பொருள் கொள்ள வேண்டும்.

ராமாநுஜ சித்தாந்த ரீதியாக இச்சுலோகத்தின் சாரம் அடியில் வருமாறு சொல்லப்படுகிறது :– 'இவ் விருவகை மார்க்கத்தையுமறிந்த யோகியானவன் பிராணப் பிரயாணகாலத்தில் (மரணத்தின் போது) ஒரு விதத்தாலும் மோகத்தை அடையமாட்டான். தனக்கென்று வகுத்த

அர்ச்சிராதி மார்கத்தாலேயே போவான். ஆகையால், பார்த்தா!, நீயும் பிரதிதினமும் அர்ச்சிராதி மார்க்கத்தைச் சிந்தித்திருப்பதாகிய யோகத்தைச் செய்ய முயல்வாய்!

'க்ஷத்திரியனுக்குரிய தர்மமாகிய இந்த யுத்தத்தை பலனை விரும்பாமல் யோகபாவத்துடன் மேற்கொள்வாய்' என்று கூறியதாகக் கொள்வதும் பிரகரணத்திற்குச் சேரவெடுக்கும் பொருளாகும்.

இவ் வத்தியாயத்திற் கூறப்பட்ட ஞானத்தின் பலனைக் கூறுமுகத்தால் இவ்வத்தியாயத்திற்கு, அடுத்துவரும் கடைசிச் சுலோகத்தில் முடிவுரை கூறப்படுகிறது.

வேதத்தில் வேள்வியினின் மெய்த்தவத்தில் தானத்தில்
ஓதப் பயனதனை யுற்றொழிந்து - மீதுபோய்
இந்த வறிவமரும் யோகிதான் மேன்முதலாம்
அந்த நிலமடையும் அங்கு.

(இ-ள்) இந்த அறிவு அமரும் யோகி தான் - இந்த (இரு) அத்தியாயங்களில் சொல்லப்பட்ட பகவானின் மகிமையை அறிந்த யோகியானவன் வேதத்தில் - வேதங்களிலும், வேள்வியினில் - யக்ஞங்களிலும், மெய் தவத்தில் - சிறந்த தவங்களிலும், தானத்தில் - கொடைகளிலும். ஓது அப்பயன் அதனை - சொல்லப்படுகின்ற எல்லாப் பலன்களையும், உற்று ஒழிந்து - (பெற்ற போதிலும்) அற்ப பலமென்று விட்டு, மீது போய் - அதிக்கிரமித்து, மேன் முதலாம் அந்த நிலம் அடையும் - சிறந்த முதலாவதாகிய அந்த ஸ்தானத்தை அடைகிறான்.

வேதே3ஷு யஞ்ஜேஷு தபஸ்ஸு சைவ
தா3னேஷு யத்புண்ய பலம் ப்ரதி3ஷ்டம்
அத்யேதி தத்ஸர்வமித3ம் விதித்வா
யோகீ3 பரம்ஸ்தா2நமுபைதி சாத்3யம்

(இ-ள்) வேதேஷு - (எல்லா) வேதங்களிலும், யக்ஞேஷு - யாகங்களிலும், தபஸ்ஸுச ஏவ - தவங்களிலும், தானேஷுச - தானங்களிலும், யத் - எந்த, புண்ய பலம் - புண்ணிய பலமானது, ப்ரதிஷ்டம் - சொல்லப்பட்டதோ, இதம் - இதை, விதித்வா அறிந்து, யோகீ - யோகியானவன், தத்ஸர்வம் - அவை எல்லாவற்றையும், அத்யேதி - அதிக்கிரமிக்கிறான், ஆத்யம் - முதன் முதலான, பரம் ஸ்தானம் பெரிய ஸ்தானத்தையும், உபைதி - அடைகிறான்.

ஞானத்தாலோ கர்மத்தாலோ யோக சித்தியை அடைந்தவனுக்கு லௌகிக பலன்களைப் பெறுவது மிக எளிது. ஆனபோதிலும் அவற்றைப் பெற விரும்பாமல் (அதிக்ரமித்து மேலான பதவியையே பெறுகிறான்)

'பரம் ஸ்தாநம்' என்பதற்குச் சங்கரர் விஷ்ணுவினுடைய பரம பதமாகிய ஸ்தானத்தை என உரை கூறியுள்ளார்.

93. ஸாரமும் பலனும்

கீதை எட்டாம் அத்தியாயம் அழிவில்லாத பரப்பிரும்மத்தை உணர்த்துவதால் பல பதிப்புகளில் அக்ஷரப் பரப்பிரும்ம யோகம் என்றே சொல்லப்படுகிறது. அந்திம காலத்தில் பரமாத்மாவின் நினைவு வருவதற்கான பயிற்சியையும் தெரிவிப்பதால் சில பதிப்புகளில், இவ் வத்தியாயம் 'அப்பியாஸ யோகம்' என்றும் குறிக்கப்படுகிறது. பிற அத்தியாயங்கள் போல் இதிலும் பல விஷயங்கள் விரவி வருவதால் இதையும் பின்வருமாறு வகுத்தும் தொகுத்தும் தெளிந்து கொள்ளலாம்.

அழிவில்லாமல் எங்கும் வியாபித்து உலகிற்கு மூலகாரணமாய் உத்தமமாய் இருக்கின்ற வஸ்து பிரும்மம். ஒவ்வோர் உடலிலும் தனித்திருக்கும் ஜீவ சுபாவம் (சொரூபம்) அத்யாத்மமென்று சொல்லப்படுகிறது. உயிரும் உடம்புமாகிய பூதங்களில் (பிராணிகளின்) உற்பத்திக்குக் காரணமாயிருப்பது கருமமாகும். நாசமடையத் தகுந்த பொருள்கள் அதிபூதம் என்று சொல்லப்படுகின்றன. விராட் புருஷன் (ஹிரண்ய கர்ப்பன்) அதி தெய்வதமாகச் சொல்லப்படுகின்றான் எல்லா தேகங்களிலும் அந்தரியாமியாயிருந்து கொண்டு யக்ஞத்தில் பிரவர்த்திக்கும்படி யேவுகின்றவனாயும், பலனைக் கொடுக்கின்றவனாயுமிருக்கின்ற கண்ணன் என்னும் வாஸுதேவன் அதியக்ஞன்.

அந்திம காலத்திலும் பகவானையே தியானிக்கின்றவனாய்ச் சரீரத்தைவிட்டுப் பிரிகின்றவன். பகவானது சொரூபத்தையே அடைவது நிச்சயம். அந்திம காலத்தில் எதை எதை எண்ணிக் கொண்டு ஒருவன் உயிரை விடுகிறானோ, அதன் ரூபத்தையே அடைகிறான், ஆதலால் எல்லாக் காலங்களிலும் பரமாத்மாவையே தியானித்துக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு சுயதர்மத்தைச் செய்தவர்கள் பகவத் தியானபரராய் பகவானையே அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அப்பியாஸத்தால் வேறு விஷயங்களில் பிரவேசிக்காத மனத்தால் பிரகாச ரூபமான பரம புருஷனையே தியானிக்கின்றவன் அந்தப் பரம புருஷனையே அடைகின்றான். சலிக்காத மனத்தோடும் பக்தியோடும் தியான பலத்தோடும், கூடிய எவன் அந்திம காலத்தில் பிராணவாயுவை இரு புருவங்களுக் கிடையே நிறுத்தி, சர்வக்ஞனாய் அனாதி காலமாய் எல்லோரையும் அடக்கி ஆளுபவனாய் அணுவிலும் அணுவாய் சகலப் பிரபஞ்சத்திற்கும் ரக்ஷகனாய் சிந்திக்கக்கூடாத ரூபமுடையவானாய் சூரியனைப்போல் பிரகாச முடையவனாய் மாயைக் கடந்தவனாயிருக்கிற புருஷனை, இடைவிடாமல் தியானிக்கின்றானோ, அவன் அந்தப் புருஷனை அடைகின்றான். வேதார்த்தங்களை அறிந்தவர் எதை அக்ஷரம் (அழியாது) என்கின்றார்களோ, வைராக்கியமுள்ள துறவிகள் எதை அடைகின்றார்களோ எதை அறிய விரும்புவோர் பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டிக்கின்றார்களோ அந்த ஸ்தானத்தைப் பின்வருமாறு சுருக்கமாய் உரைக்கலாம்.

எல்லா இந்திரியங்களையுமடக்கி மனத்தை ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவிடம் நிறுத்தி, சிரசில் பிராண வாயுவை நிறுவி, பிரும்மத்தைச் சொல்லுகின்ற பிரணவத்தைச் சொல்லி, பகவானை தியானித்துக் கொண்டே உடலைவிடுபவன் சிரேஷ்டமான கதியைப் பெறுவான், வேறொன்றிலும் பற்றில்லாமல் பகவானையே நினைப்பவனுக்குப் பகவான் சுலபனாகிறான். அவனுக்குப் பிரயாசமில்லாமல் அடையத் தகுந்தவனாகிறான். பகவானை அடைந்த மஹாத்மாக்கள் மீண்டும் பிறப்பை அடைவதில்லை, பிரம லோக முதலாயுள்ள எல்லா உலகங்களும் மீண்டும் உற்பத்தி லயங்களை (அழிவை) அடைந்த போதிலும் பகவானை அடைந்தவர்கள் பிறப்பதில்லை.

ஆயிரம் சதுர்யுகங்கள் பிரும்மாவிற்கு ஒரு பகல் மற்றோராயிரம் சதுர்யுகங்கள் அவருக்கு ஒரு இரவாகும், பகலில் (காணப்படாத) சூட்சுமப் பிரகிருதியிலிருந்து காணப்படும் ஸ்தூலப் பிரகிருதி (வ்யக்தம்) எல்லாம் தோன்றி இரவில் அங்கேயே அடங்கி விடுகின்றன. சராசரங்களான பிராணிகள் யாவும் பகலில் பிறந்து இரவில் இறக்கின்றன. இந்த அவ்யக்தங்களுக்கெல்லாம் மேலானது. பிரும்மம், அது அநாதியாய் பிராணிகள் இறக்கும் போதும் இறக்காமலிருக்கிறது. அவ்வியக்தமாய் அக்ஷரமாயிருக்கும் அப்பிரும்மமே உயர்கதியாகும். அதை அடைந்தவர் திரும்புவதில்லை. அதுவே பகவானின் பரம

பதமாகும். எவனால் எல்லா உலகங்களும் வியாபிக்கப் பட்டிருக்கின்றனவோ, எவன் எல்லாப் பிராணிகளுக்குள்ளி ருக்கின்றானோ அந்தப் பரம புருஷன் பக்தி ஒன்றாலே தான் அடையத் தகுந்தவன்.

ஞானியோ, பக்தனோ உத்தராயணத்தில் இறக்கும் போது அக்கினியாபிமானி தேவதை சுக்கில பக்ஷாபிமானி தேவதை, உத்தராய்ணத்திற்கு அபிமானிதேவதை ஆகியோரால் அந்த உலகங்களின் மார்க்கமாய்ச் சென்று பிரும்மத்தை அடைகிறான். அடைந்து திரும்புவிதில்லை, காமிய கருமயோகி மரணமடையும் போது புகைக்கு அபிமானி தேவதை, கிருஷ்ண பக்ஷாபிமானி, தேவதை, தக்ஷிணாயணாபிமானி தேவதை ஆகியோரின் லோகங்களின் மார்க்கமாய்ச் சென்று சந்திரப்பிரகாசத்தோடு கூடிய சுவர்க்கலோகத்தை அடைந்து திரும்புகிறான்.

இவ்விரண்டு மார்க்கங்களும் உலகில் என்றுமிருக்கின்றன. ஒன்று திருப்பியனுப்புவது. மற்றொன்று திரும்பாததாகும். இவற்றை அறிந்த யோகி எவனும் மோகமடைவதில்லை, ஆகையால் நற்கதியை விரும்புவோர் எப்போதும் யோகியாயிருத்தல் வேண்டும்.

வேதங்களை அத்யயனம் செய்வதற்கும், யக்ஞங்களைச் செய்வதற்கும், தவத்தைச் செய்வதற்கும், தானங்களைச் செய்வதற்கும் சொல்லப்பட்ட புண்ணிய பலனை யோகி அதிக்ரமிக்கிறான். இதைப் பின்னுமறிந்து மூலகாரணமான உத்தமஸ்தானமாகிய பிரும்மானந்தத்தைப் பெறுகிறான்.

இக்கருத்துக்களை இன்னும் சுருக்கமாக மனதில் பதியவைக்கும்படி வேதாந்த தேசிகர் அடியில் வரும் ஒரு பாடலில் வெளியிட்டிருக்கிறார்.

ஆராத செல்வமும் ஆருயிர்காணும் அரும் பயனும்
பேராததன் கழற்கீழமரும் பெரு வாழ்ச்சிகளும்
சோராதுகந்துவர் தூய்மதி கொள்வதுஞ் செய்வனவும்
தோரா விசயனுக்குத் திருநாரணன் செப்பினனே

(இ—ள்) ஆராத செல்வமும் – போதும் என்ற எண்ணந் தோன்றாத செல்வத்தையும், ஆர் உயிர் காணும் அரும் பயனும் – ஆத்ம சொரூபத்தைத் தரிசிப்பதாகிய பெரும் பயனையும், பேராததன் கழற்சீழ் அமரும் பெரு வாழ்ச்சிகளும் – பகவானின் திருவடியை அடைந்து

திரும்ப வேண்டாத சிறந்த புருஷார்த்தத்தையும், சோராது உகந்தவர் – விடாமுயற்சியுடன் (பகவத்தியானத்தையே) மகிழ்ந்து செய்தவர், தூய் மதி கொள்வதுவும் – பெறும் சுத்த அறிவையும், செய்வனவும் – (அவர்கள்) செய்யவேண்டியவற்றையும், தோரா விசயனுக்கு – தோல்வியுறாத அர்ஜுனனுக்கு, திருநாரணன் செப்பினன் – நாராயணனின் அவதாரமான கண்ணபிரான் தெரிவித்தான்.

பலனைக்கூறும் கதை

'தக்ஷிணாபதம் என்னும் மண்டலத்தில் ஆமர்த்தகம் என்றோர் நகரமிருந்தது. அங்கு பாவசர்மா என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் அந்நியப் பெண்களிடம் மோஹங்கொண்டு தகாத காரியங்களைச் செய்தான். மது மாமிஸங்களை உண்டு வந்தான். இத்தகைய செலவிற்கு வேண்டி உத்தமர்களுடைய சொத்தைத் திருடிவந்தான். மிருகங்களையும் வேட்டையாடி வந்தான், ஒரு நாள் மிதமிஞ்சிக் கள்ளைப்பருகி மயக்கத்தாலும் அஜீரணத்தாலும் இறந்தான். அதனால் ஒரு வனத்திலே அவன் பனைமரமாகப் பிறந்திருந்தான்.

பாவ சர்மா உயிருடனிருந்தபோதே அவன் வாழ்ந்த பிரதேசத்தில் குசீலன் என்றோர் வேதியன் தன்மனைவி குமதி என்பாளோடு வாழ்ந்து வந்தான். இருவரும் பணம் தேடுவதில் பேராசை கொண்டிருந்தனர். குசீலன் வைதிக விருத்தியை மேற்கொண்டிருந் தானாதலால் எருமை குதிரை முதலிய பாப தானங்களை ஒவ்வொரு நாளும் வாங்குவான். வாங்கியதைச் சிறிதுகூட நற்பாத்திரத்திலும் புண்ய காலத்திலும் செலவிடாமலே காலம் கழித்துவந்தான்.

இவ்வாறு பலநாட்கள் கழித்து தம்பதி இருவரும் இறந்தனர். செய்த பாவத்தால் இருவரும் பிரும்ம ராக்ஷஸர்களாகப் பிறந்த பசி தாகத்துடன் அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். ஒரு நாள் பாப சர்மா பனையாக விருக்கும் மரத்தடியில் வந்து தங்கினார். மனைவி கணவனைப் பார்த்து 'எத்தனை காலம் இத் துன்பத்தை அனுபவிப்பது? இதிலிருந்து விடுபட மார்க்க மேதுமில்லையா' என்று கேட்டாள். அதற்குக் கணவன், "ப்ரும்ம வித்யோபதேசம், அத்யாத்ம விசாரம், கர்மவிதி ஆகியவற்றைத் தவிரத் துன்பத்தினின்று கரையேற நமக்கு வேறு வழி ஏது?" என்று பதில் உரைக்க, மனைவி "ப்ரும்மம் என்பது யாது?, அத்யாத்துமம் என்பது யாது? கருமம் என்பது என்ன? என்ற கேள்விகளைக் கணவனிடம் கேட்டாள். இவ்வினாக்கள் கீதை எட்டாம்

அத்தியாத்தில் முதல் பகுதியில் அர்ஜுனனால் கேட்கப்பட்டவை. ஆகையால் இவற்றை அவன் கேட்டபோது அங்கிருந்த பனைமரம் முறிந்து விழுந்தது. அதிலிருந்து பாபசர்மா திவ்விய தேகம் பெற்றெழுந்தான்.

பிரும்ம ராக்ஷஸராயிருந்த தம்பதிகளும் பாப உடலை நீத்து அப்பொழுதே தேவசரீரம் பெற்று அங்கு வந்த விமானத்தின் மீதேறி வைகுண்டம் சென்று அழியாத சுகம் எய்தினார். பாப சர்மா பிறரும் நற்கதியடையும் பொருட்டுத் தான் பனையாக நின்ற விடத்தில் நடந்த சம்பவத்தையும் கீதை எட்டாவது அத்தியாத்தின் முதல் பகுதியையும் அங்கு நன்றாக எழுதி வைத்தான். புனித க்ஷேத்திரமான காசிமா நகரம் சென்று வாசுதேவனை ஆராதித்தான் பகவானின் சந்நிதியிலமர்ந்து கீதையில் எட்டாவது அத்தியாத்தில் இப்பகுதியை விடாமல் ஜபம் செய்து வந்தான். அதனால் அவன் பேரின்பத்தைப் பெற்றதன்றி அவன் பாவத்தால் நரகத்திலிருந்த அவன் பித்ருக்களும் நற்கதி பெற்றனர். (இது பாத்ம புராணத்திலுள்ளது).

94. இரகசியங்களில் சிறந்த இரகசியம்

"ஏழாம் அத்தியாய முடிவில் பகவானின் பெருமை 'ஸாதிபூதாதி தைவம்' முதலிய தொடர்களால் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வத்தியாத்தில் அவருடைய சிறப்பு மேலும் விரிவாகவும் பூர்ணமாக விளக்கப்படுகிறது. அதனால் ஒன்பதாம் அத்தியாயமாகிய இப்பகுதியை ஏழாவதற்கு பின் வைத்திருக்க வேண்டும் என நினைத்தலாகாது. ஏழாவது அத்தியாய முடிவில் கூறப்பட்ட 'அதிபூதா' முதலிய தொடர்களையும் எட்டாவது அத்தியாத்தில் தெளிவுபடுத்தவேண்டியதாயிற்று. ஆகவே பகவானின் பெருமையை இவ் வொன்பதாம் அத்தியாத்திலேதான் விளக்க நேர்ந்தது" என்பது அத்தியாயமுறை வைப்புக்கு ராகவேந்திரர் முதலியோர் கூறும் சமாதானமாகும்.

"முன் அத்தியாயத்தில், உபாஸிப்பவர்களின் வேறுபாட்டிற்குக் காரணமான விசேஷணங்கள் கூறப்பட்டன. இவ்வத்தியாத்தில் உபாஸிக்க வேண்டிய பகவானின் மகிமையையும் ஞானிகளுக்குரிய விசேஷ அம்சங்களையும் ஆராய்ந்து, பக்திரூபமான உபாஸனத்தின் தன்மை சொல்லப்படுகிறது" என்று ராமாநுஜரால் முறைவைப்பு விளக்கப்படுகிறது.

இவ்வத்தியாயம் பொதுவாகச் சிறந்த ஞானத்தையும் சிரேஷ்டமான ரகசியத்தையும், கூறுவதால் 'ராஜவித்யா ராஜ குஹ்ய யோகம்" எனச்சொல்லப்படுகிறது.

மிகமிக ஆச்சரியகரமான பகவானின் சிறப்புகள் இங்கு சொல்லப்படுவதால், கண்ணபிரான் அர்ஜுனனின் கவனத்தை முற்றிலும் நன்கு இழுக்கும் பொருட்டு, ஆரம்பத்திலேயே சொல்லப் போகும் விஷயத்தைப்பற்றிச் சிலாகித்துப் பேசுகிறார்.

இந்த மறைப்பொருளை என்பால் பொறாமையிலாச்
சிந்தை திகழுனக்குச் செப்புகேன் - எந்த
அறிவை அறிவகை சேர்ந்தவ்வறிவு தப்பாச்
செறிவில் வினைவிடுதி தீர்ந்து.

(இ-ள்) எந்த அறிவை – எந்த ஞானத்தை, அறிவகை சேர்ந்து – உபாஸனையோடு சேர்ந்து, அ அறிவு – (ஆக்கப்பட்ட) அவ்வித ஞானத்தைக் கொண்டு, தப்பா செறிவில் வினை – (சுலபமாக) நீங்காத அசுபமான பாவத்தினின்றும், தீர்ந்து விடுதி – (நீ) முற்றிலும் நீங்கப் பெறுவாயோ, இந்த மறை பொருளை – (அத்தகைய) இந்த ரகசியமான பொருளை, என்பால் – என்னிடம், பொறாமை இலா – அசூயை இல்லாமல், திகழ் சிந்தை – விளங்குகின்ற மனமுடைய, உனக்கு செப்புகேன் – உனக்கு நான் தெரிவிக்கின்றேன்.

இதம்து[3] தே குஹ்ய[3] தமம் ப்ர வக்ஷ்யாம்ய நஸூயவே
ஜ்ஞாத விஜ்ஞாத ஸஹிதம் யத்[3]ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேஅசுபாத்

(இ-ள்) யத் – எதை, ஞாத்வா – அறிந்து, அசுபாத் – ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷயஸே – விடுபடுவாயோ (தத்) – அப்படிப்பட்ட, குஹ்ய தமம் – அதி ரகஸ்யமான, விக்ஞான ஸஹிதம் – உபாசனையோடு கூடின, இதம் ஞானம் – இந்தப் பிரும்ம ஞானத்தை, அனஸூயவே – பொறாமையற்ற, தே – உன் பொருட்டு, ப்ரவக்ஷ்யாமி – நன்கு சொல்லுகிறேன்.

மறைப்பொருள் – அதி ரகஸ்யார்த்தமான பக்தி என்னும் உபாஸன ஞானம். 'தகுதியற்றவர்கள் அறியா வண்ணம் ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்படவேண்டிய பொருள்' என்பர் ராகவேந்திரர்.

அசூயை – பொறாமை: – "எல்லாப் பதார்த்தங்களிலும் வேறுபட்டிருக்கின்ற அபாரமான எம்பெருமானின் மகிமையைக்

கேட்டால் இது இவ்வாறு இருக்குமா? என்று அதில் நம்பிக்கை கொள்ளாமை" என்பது ராமாநுஜர் கூறும் உரையின் சாரமாகும்.

அனஸூயவே – பொறாமையிலாச்சிந்தை திகழ் உனக்கு: – என்ற தொடருக்கு ஸ்ரீதரர் பின்வருமாறு உரை கூறியுள்ளார். " பகவான் அடுத்தடுத்துத் தன் மகிமையையே சொல்லிக்கொள்கின்றான் என்ற அசூயை கொள்ளாத உன் பொருட்டு" இவ்வாறு ஸ்ரீதரர் கூறும் கருத்து அடியில்வரும் திருவாய் மொழிப்பட்டாலும் நன்கு விளங்கும்.

தானேயாகி நிறைந்தெல்லா உலகுமுயிரும் தானேயாய்
தானே யானென்பானாகித் தன்னைத்தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ் சோலைக்
கோனேயாகி நின்றொழிந்தான் என்னைமுற்று முயிருண்டே

பரம ரகஸ்யார்த்தங்களையோ பகவானின் மகிமைகளையோ தகுதியற்றுவர்களிடம் சொல்லலாகாது என்பது தமிழ் இலக்கணமாகிய நன்னூலிலும்

களி மடி, மரணி, காமி, கள்வன்
பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன்,
தடுமாறுளத்தன், தறுகணன்,
பாவி படிறன் இன்னோர்க்குப் பகராற்
நூலே

என்றே சொல்லப்படுகிறது.

'தகுதியற்றவர்களுக்குப் பகவானின் மகிமையைச் சொல்லப் புகுவதும் பாவச்செயல்' என்று ராமாயணத்திலிருந்து மேற்கோள் காட்டி விளக்குவதுமுண்டு. பகவத்குணம் கேட்கத் தகுதியற்றவனாய், அதில் மிகவும் அசூயை கொண்டிருந்த ராவணனுக்கு, அநுமார் ராமனின் ஆக்ஞையில்லாமல் பகவத் மகிமைகளைக் கூறினார். அதனால் ராவணன் திருந்தவுமில்லை. உபதேசத்தைப் பிரியத்தோடு ஏற்கவுமில்லை. உபதேசம் செய்த குற்றத்திற்குத் தண்டனையாக அரக்கர்கள் மூட்டிய நெருப்பு அனுமாரின் வாலில் சிறிது நேரம் (ஜானகி நடந்ததை அறிந்து அக்கினி பகவானைப் பிரார்த்தனை செய்து மாற்றும் வரையில்) சுட்டு வேதனை செய்து கொண்டிருந்தது.

ஆக இச்சுலோகத்தால் கீதோபதேசம் பெற அர்ஜுனனுக்கிருந்த தகுதியும் உபதேசம் பெறத்தகுதியற்றவர் இன்னார் என்பதும் குறிப்பாகக விளக்கப்பட்டன.

அர்ஜுனனின் கவனத்தை ஈர்ப்பதற்காகக் கண்ணன் மேலும் சொல்வதாவது

இதிசார வித்தை இதிசார குய்யம்
இதியாம் பவித்திர மிதாகும் - எதிர்காணு
மாட்சி தருந்த தன்மத்து மன்னும் சுகத்தியலு
மாட்சி தரும் வீயா திது.

(இ-ள்) இது - இந்த ஞானமானது, இராத வித்தை - வித்தைகளில் எல்லாம் சிறந்தது, இது -, இராச குய்யம் - இரகசியங்களில் எல்லாம் சிறந்தது இது-, பவித்திரம் ஆம் - பரிசுத்த மானதாகும், இது ஆகும் எதிர்காணும்மாட்சிதரும் - இந்த ஞானமே தான் பிரத்தியக்ஷ விஷயமாகப் பார்க்கும் பெருமையைக் கொடுக்கும், தன்மத்து மன்னும் - (விலகாமல்) தர்ம மார்க்கத்திலே பொருந்தியிருக்கும், சுகத்து இயலும் - (அனுஷ்டிக்க) சுகத்தோடு பொருந்தியிருக்கும், இது -, வீயாது - அழிவற்றதாய், மாட்சி தரும் - பெருமையைக் கொடுக்கும்.

ராஜ வித்[3]யா ராஜ கு[3]ஹ்யம் பவித்ரம் இத[3]ம் உத்தமம்
ப்ரத[3]யக்ஷாவகமம் த[4]ர்ம்யம் ஸுஸுக[2]ம் கர்து மவ்யம்

(இ-ள்) இதம் - இந்த ஞானமானது, ராஜ வித்யா - வித்தைகளுக்கெல்லாம் சிரேஷ்டம், ராஜகுஹ்யம் - இரகசியங்களில் மிகவும் சிறந்தது, உத்தமம் - உத்தமமானது, பவித்ரம் - பரிசுத்தமானது, ப்ரத்யக்ஷாவகமம் - நேரில் அறியத் தகுந்தது, தர்மயம் - தருமமார்க்கத்தினின்றும் விலகாதது கர்(த்)தும் - அனுஷ்டிப்பதற்கு, ஸுஸுகம் - மிகவும் சுலபமானது, அவ்யம் - அழிவற்றது.

'இது (இதம்) என்பதற்கு ஞானம் என்றும் பக்தி என்றும் உரையாசிரியர் வெவ்வேறாகப் பொருள் கொள்வர். வித்தைகளுக்குள் சிறந்திருப்பதால் ராஜவித்தையென்றும் இரகசியங்களுக்குள் மிகவும் சிறந்திருப்பதால் 'ராஜ குஹ்யம்' என்றும் பெயர் பெற்றது, எல்லாப் பாபங்களையும் போக்கக்கூடிய பரிசுத்தம் (தூய்மை) வாய்ந்திருப்பதனால் 'பவித்ரம்' எனப்பட்டது.

ப்ரதயக்ஷாவகமம் (எதிர் காணும் மாட்சி தரும்): - இப்பகுதிக்கு ராமானுஜர் "அறியவேண்டும் பொருளான என்னை (கண்ணபிரானை) பிரத்தியக்ஷ விஷயமாகக் காணும் பெருமையைத் தரும்" என உரை கூறியுள்ளார்.

ராகவேந்திரர்:– ப்ரத்யக்ஷ– இந்திரியங்கள் ஒவ்வொன்றிலும் நின்று அவற்றை ஆள்பவன் (ப்ரதி – ஒவ்வொரு; அக்ஷ–பொறியின் கருவி). எனவே இந்திரியத்தின் ஒவ்வொரு கருவியையும் உள்ளிருப்பதே உரிய பாதையில் செலுத்தும் பகவானைக் குறிக்கும் 'அவகம' – ஒன்றை அறியச் சாதனமாயிருப்பது. ஆகவே 'பிரத்யக்ஷாவகம்' என்பது இந்திரியங்களுக்கு நிர்வாஹகனான பகவானை உணர்வதற்குரிய சாதனத்தைக் குறிக்கும்.

அவ்வயம் (வீயாது) – பிற ஸாதனங்களைப் போலப் பலனை அளித்த போதே அழியாமல் மோக்ஷ பலனைக் கொடுத்த பின்பும் அழியாதிருக்கும் (ராமா)

பிரும்மம் அல்லது பரமாத்மாவை உணர்ந்து கொள்ளக்கூடிய சாதனம் இவ்வளவு தூரம் வெகுசுலபமாயிருக்குமானால் உலகில் எவருமே சம்சார துக்கத்திலிருந்து வருந்த வேண்டியதில்லை. அவ்விதம் வரும் சந்தேகத்தைப்போக்கி, மேற்கூறிய சாதனத்தைப் புறக்கணிப்போரின் குறைகளை அடுத்தபடியாகக் கண்ணன் சுட்டிக் காட்டுகிறார்.

இத்தருமந் தன்னை யியல்வான் விரும்ப
மத்தரவர் என்னை மருவாதே - அத்த
முடிவியற்று மிப்பவத்து மூளுமவர் மூள்வர்
படிமதிக்கும் வில்லாய் கை

(இ–ள்) படி – உலகில் மதிக்கும் வில்லாய் – விரோதிகளும் போற்றும்படி வில்வித்தையில் வல்லவனே! இ தருமம் தன்னை – (பக்தியோடுகூடிய ஞானமாகிய) இந்தத் தருமத்தை, இயல்வான் விரும்பாத – அனுஷ்டிப்பதற்கே நம்பிக்கை கொள்ளாத, மத்ரவர் – மூடர்கள், என்னை மருவாதே – என்னை அடையாமல், அத்தம் முடிவு இயற்றும் – (மிருத்யு) காலமானது (எல்லாவற்றிற்கும்) அழிவை உண்டு பண்ணும், இபவத்து மூளுமவர் – இச்சம்சாரத்தில் அழுந்தியவர்களாய் மூள்வர் – திரும்பித் திரும்பி வருகிறார்கள்.

3 3 4 4
அச்ரத்ததாநா:புருஷா தர்மாஸ்யாஸ்ய பரந்தய
அப்ராப்யமாம் நிர்தந்தே ம்ருத்யு ஸம்ஸாரவர்த்மநி

(இ–ள்) பரந்தப – அர்ஜுனா! அஸ்ய தர்மஸ்ய – (பக்தியோடு கூடிய ஞானமாகிற) தர்மத்தை; அச்சரத்த தாநா;– நம்பாமலிருக்கிற, புருஷா: – மனிதர்கள், மாம் – என்னை, அப்ராப்ய – அடையாமல், ம்ரித்யு

ஸம்ஸாரவர்த்மநி – மிருத்தியுவுடன் கூடிய சம்சார மார்க்கத்தில், நிவர்த்தந்தே – திரும்பி வருகிறார்கள்.

"நான் உபதேசிக்கப் போகிற ஞானம் பேரின்பமாகிய முக்தியை அடைவிக்கும் சிறந்த சாதனம் என்பதில் தீவிர நம்பிக்கையில்லாதவர்களே உலகில் பெரும்பாலோர் சம்சாரத்தில் மேலும் மேலும் அழுந்துவதற்கு அந்த அவநம்பிக்கை (விச்வாசமின்மை)யே காரணம்! என்று கண்ணன் இச் சுலோகத்தால் வெளியிட்டார்.

95. பரமாத்ம க்ஞானம்

கண்ணபிரான் அர்ஜுனனின் கவனத்தை இழுப்பதற்காகத்தான் உபதேசிக்கும் பொருளைப்பற்றி மிகமிக மேன்மையாகப் புகழ்ந்தார். அப்புகழுரையில் 'ப்ரத்யக்ஷாவகமம் (எதிர்காணுமாட்சி தரும்) தர்ம்யம்' (தன்மத்து மன்னும்) என இரண்டு தொடர்கள் வந்தன. அவற்றில் முன்னையது பிரும்மத்தை நேரடியாக உணர்வதையும் பின்னது சாஸ்திரங்களின் மூலமாகப் பகவானைப் பற்றித் தெரிந்து கொள்ளும் அறிவையும் குறிக்கும். பின்னதை முன்னதில் செலுத்தும்படி என்னலாம். அவை முறையே ஸாதனமும் ஸாத்யமும் (அடையப்படுவதும்) ஆகும். இவற்றையே கண்ணபிரான் முன்னே அர்ஜுனனுக்கு உபதேசிப்பதாக உறுதி கூறினார். அவற்றைப் புறக்கணிப்போர் அடைகின்ற பலன்யாதெனக் கூறினார். தகுதியை நினைத்து அர்ஜுனனுக்கு உபதேசம் செய்வதாகச் சொன்ன பொருளை ஞானம் என்றும் விக்ஞானம் என்றும் இரண்டாக வகுத்துக் கொண்டார். அவற்றில் நாலுமுதல் பதினைந்தாம் சுலோகம்வரை ஞானத்தைப் பற்றி விளக்குகிறார்.

நானிவ் வுலகெல்லா நான்பரந்தங் குட்கரந்து
தானியலு மேனியனாய்த் தான்தரிப்பான் - ஆண்மையால்
என்னால் தரித்திருக்கும் எப்பூத தமுமவற்றின்
மன்னாது நானிருப்பவன் மற்று.

(இ–ள்) நான் இ உலகெல்லாம் – நானே இப்பிரபஞ்சங்களிலெல்லாம் வியாபித்திருக்கிறேன்; நான் – பரந்து – வியாபித்து அங்கு உள் கரந்து – அப்பிரபஞ்சத்தினுள்ளே (உருவம் தெரியாதவாறு) மறைந்து இயலும் மேனியனாய் தான் தரிப்பவன் – பொருந்தியிருக்கும்

சொரூபத்தையுடையவனாய்த் தாங்கிக்கொண்டிருக்கிறேன்; ஆண்மையால் – சக்தியால், என்னால் – என்னிடம், எப்பூதமும் – எல்லாப்பிராணிகளும், தரித்து இருக்கும் – தாங்கப்பட்டு இருக்கும், அவற்றின் – அவைகளில், நான் மன்னாது இருப்பன் – நான் (சம்பந்தப்படாமல்) பொருந்தாமலே இருக்கின்றேன். (நான் அவற்றில் இல்லை என்றபடி)

மயாதத[3] மிதம் ஸர்வம் ஜகத[3]வ்யக்த[3] மூர்த்திநா
மத்[2]ஸ்தாநி ஸர்வபூ[4]தாநி நசாஹம் தேஷ்வஸ்தித[2]:

(இ-ள்) அவ்யக்த மூர்(த்)திநா – தெரியப்படாமலிருக்கிற ரூபத்தையுடைய, மயா–என்னால் இதம் ஸர்வம் ஜகத் – இந்தச் சகலப் பிரபஞ்சமுதும், ததம் – வியாபிக்கப்பட்டிருக்கிறது; ஸர்வ பூதாநி – எல்லாப் பிராணிகளும் – மத்ஸ்தாநி – என்னிடத்தில் இருக்கின்றன; அஹம் – நான், தேஷு – அவைகளிடத்தில், நசாவஸ்தித: – இருக்கிறதில்லை.

உலகெல்லாம் (ஸர்வம் ஜகத்) என்னும் தொடர் அசையும் பொருள் அசையாப் பொருள்கள் (சராசரங்கள்) அடங்கிய உலகைக் குறிக்கும், எங்கும் பகவான் பிரபஞ்சத்தில் பரந்து (வியாபித்து) இருப்பதால் எல்லோருடைய தோற்றத்திற்கும் விஷயமாக இருத்தல் வேண்டுமே என்று நினைக்கிறோம். ஆனால் அவர் தோன்றுவதில்லை. ஏன்? அதற்குச் சமாதானமாக கரந்த உருவில் வியாபித்திருக்கிறார் எனப்பட்டது.

வியாபகம் அல்லது பரந்திருத்தலைக் கூறும்போது பகவானுக்கு ஆதாரம் அல்லது தன்னைக் கொள்ளுவதற்காக ஒரு பொருள் வேண்டுமே; அது உலகமாயிருக்கலாமோ என்று பலருக்குத் தோன்றுமல்லவா? அதைப் போக்குவதற்காகவே கண்ணபிரான் 'பகவான் எல்லாவற்றிக்கும் ஆதாரமாய் எல்லாவற்றையும் தரித்துக் கொண்டிருந்த போதிலும் தான் எதனாலும் தரிக்கப்படாமல் எவ்வித ஆதாரத்தையும் வேண்டாதவராயிருக்கிறார்' என்பதை வெளியிட்டார்.

எல்லாப் பொருள்களும் பகவானை ஆதாரமாகக் கொண்டு பகவானிடமே இருக்கின்றன. வென்றால் நாம் அனைவரும் பூமியால் தாங்கப்படுவதுபோல், பகவானல் தாங்கப்படுகிறோம் என்று தோன்றும் நெருப்பின், சம்பந்தத்தால் பூமி கொதிப்பை அடைகிறது. நீரின் சம்பந்தத்தால் மண் குளிர்ச்சியை அடைகிறது. நெருப்பின் சம்பந்தம் பெற்ற மண் தொடுவதற்குச் சூடாகவும், நீரின் சம்பந்தங்கொண்ட மண்

தொடும்போது குளிர்ந்தும் இருப்பதை அநுபவத்தில் உணர்கிறோம். பிராணிகள் யாவும் பகவானை ஆதாரமாகக் கொண்டு பகவானிடம் இருப்பதால் பிராணிகளின் தன்மை பகவானுக்கும் பகவானின் தன்மை பிராணிகளுக்கும் பரஸ்பரம் செல்லத்தான் செய்யும் என்ற எண்ணம் அர்ஜுனனுக்கு உண்டாகலாம். அதைப்போக்குவதற்குக் கண்ணன் மேலும் சொல்வதாவது:-

அத்தன்மை யாற்பூதத் தாங்கெனக்கோர் தொத்தில்லை
இத்தன்மை என்னைச்சேர் யோகங்காண் - மெய்த்தன்மை
யீங்கிதனைத் தாங்கியிதில் வேறுநின்ற என்னினைவால்
ஆங்கதனைத் தானளிப்பன் ஆர்ந்து:

(இ-ள்) அ தன்மையால் – அவ்விதம் ஆதாரமாய் இருந்த போதிலும், பூதத்து – பிராணிகளோடு, எனக்கு ஓர் தொத்து இல்லை – எனக்கு ஒருவிதமான சம்பந்தமும் இல்லை; இதன்மை – இவ்வாறு (ஆதாரமாகியும்) சம்பந்தமற்றிருக்கும் தன்மை, என்னை சேர் யோகம் காண் – என்னிடம் அமைந்த யோக சக்தி எனவறிந்து கொள்; மெய் தன்மை – எனது சொரூபமானது, ஈங்கு இதனை தாங்கி – இங்கே (காணப்படும்) பிரபஞ்சத்தைத் தரித்து, இதில் வேறு நின்றே – இதில் (சம்பந்தப்படாமல்), வேறுபட்டிருந்தே என் நினைவால் – எனது சங்கல்பத்தால், அதனை ஆர்ந்து அளிப்பன் – அதை நன்கு ஆண்டு பரிபாலிக்கிறேன்.

நசமத்ஸ்தா3னி பூ4தானி பச்யமே யோக3மைச்வரம்
பூ4தப்4ருந்நச பூ4தஸ்தோ மமா2த்மா பூ4தபா4வந:

(இ-ள்) பூதாநி – பூதங்கள் (பிராணிகள்), மத்ஸ்தாநிச – என்னிடத்தில் இருப்பவையல்ல, மே – என்னுடைய, ஐச்வரம் யோகம் – அற்புதமான சக்தியை, பச்ய – பார், மம ஆத்மா – என்னுடைய சொரூபமானது. பூதப்ருத் – பூதங்களைத் (தரிக்கிறதும்) தாங்குகிறதும், பூத பாவந: – பூதங்களை (உண்டாக்குகிற அல்லது) காக்கிறது மான போதிலும், பூதஸ்த: நச – பூதங்களிடத்தில் இருப்பதன்று.

பகவானிடமே எல்லாப்பூதங்களும் இருக்கின்றன; பகவானே எல்லாவற்றையும் தரித்துக் கொண்டிருக்கிறார். ஸ்பரிச உணர்ச்சியால் உயிர்கள் பகவானைத் தெரிந்துகொள்ள முடியாதபடி தமது தன்மையைப் பகவானிடம் செலுத்தவோ பகவத்தன்மை தாம்கிரகிக்கவோ இயலாதவாறு பகவான் பிரபஞ்சத்தை தாங்கிக் கொண்டிருக்கிறார்

ஸ்பரிசம் அல்லது தொடுதல் பிரபிருதிப் பொருளுக்குரிய குணங்களில் ஒன்று. அத்தன்மை பகவானிடம் இல்லை என்பதை வேதம் சொல்லுகிறது. 'நயன இந்திரியத்தால் காணப்படாதவர்; ஸ்பர்ச இந்திரியத்தால் உணரப்படாதவர்' என்பது சுருதி வாக்கியம்.

பகவான் பிரபஞ்சத்திற்கு ஆதாரமாய் எல்லாவற்றையும் தரித்துக் கொண்டிருக்கும் பொழுது அவர் ஆதாரம் எதுவும் இன்றி அவற்றில் இல்லாமல் (சம்பந்தப்படாமல்) எவ்வாறிருக்க முடியும்? என்று பிறக்கும் கேள்விக்கு விடையகாத்தான் 'தனது அற்புத யோக சக்கியே அதற்குக் காரணம்' என்று தெரிவித்தார். அன்றியும் உலக ரீதியான ஒரு பொருளை மற்றொன்றிற்கு ஆதாரம் என்பதற்கும் பகவானை ஆதாரம் என்பதற்கம் உள்ள வேற்றுமையும் இதனால் நன்கு காட்டப்பட்டது.

மேலும் இப்பகுதியில் மூலத்தில் வந்த 'ஆத்மா' என்ற பதமும் மொழி பெயர்ப்பில் வந்துள்ள மெய்த்தன்மை' என்ற தொடரும் ஆழ்ந்த பொருள் கொண்டவை. தேகம் என்று மூலத்திலும் உடல் என்று மொழி பெயர்ப்பிலும் வந்திருந்தால் பகவானின் சொரூபம் ஜடப் பிரகிருதியால் ஆயதோ என்று கொள்ள வேண்டியவரும், அவ்வாறு எண்ண இடமில்லாதிருக்கும் பொருட்டும், பகவத் சொரூபம் பகவத் தன்மையிலிருந்து வேறுபட்டதல்ல என்பதைக் காட்டுவதற்கும், ஆகவே ஜடப் பிரகிருதியால் வந்த தேகம் ஆதாரத்தைப்பற்றி இருப்பதுபோல் பகவத் சொரூபம் ஆதாரம் எதையும்பற்றி இருக்கவில்லை எனத் தெளிவு படுத்தற் பொருட்டும் உபயோகிப்பட்ட 'ஆத்மா' என்ற பதமும் அதன் பொருத்தமான மொழி பெயர்ப்பும் அறிஞர்களின் பாரட்டுதற்குரியவை.

'பிரபஞ்சத்தைத் தரித்துக்கொண்டிருந்த போதிலும் பகவான் அதனால் பாதக மடையாமலிருக்க முடியும்' என்பதைக் கண்ணன் ஒரு உதாரணம் காட்டி விளக்குகிறார்.

வாயு விசும் புற்றெழுந்து, மன்னுமுல கெவ்விடத்தும்
போயுலவுந் தன்மையது போலவே - ஏயுமுல
கென்னிடையி லெல்லா மினிதிருக்கு மென்பதனை
நின்நிடையே சால நினை.

(இ—ள்) வாயு – காற்றானது, விசும்பு உற்று எழுந்து மன்னும் – ஆகாயத்தில் பொருந்திச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்; எவ்விடத்துத் போய் உலவும் தன்மை அது போலவே – (ஆகாயத்தில் பொருந்திய காற்று) எல்லா இடங்களிலும் சென்று சஞ்சரிக்கும் தன்மை

வாய்ந்திருக்கிறது. போலவே, உலகு எல்லாம் – பிரபஞ்சம் முழுவதும், என்னிடையில் ஏயும் – என்னிடத்தில் பொருந்தி, இனிது இருக்கும் – நன்றாக வாழும், என்பதனை – என்ற உண்மையை, நின் இடையே சால நினை – உனக்குள்ளே நன்கு எண்ணிப்பார்.

யதா2 காச ஸ்திதோ2 நித்யம் வாயுஸ் ஸர்வத்ர கோ3 மஹாந்
ததா2 ஸர்வாணி பூ4தாநி மத்ஸ்தாநீத்யுப தா4ரய

(இ–ள்) ஸர்வத்ரக: – எங்கும் பரந்திருக்கிறதும், மஹாந் – நிறைந்திருக்கிறதுமான, வாயு; – வாயுவானது, நித்யம் – எப்போதும், யதா – எப்படி, ஆகாசஸ்தித: – ஆகாயத்தில் (ஒட்டாமல்) இருக்கிறதோ, ததா–அப்படியே, ஸர்வாணி பூதாநி – சகல பூதங்களும், மத்ஸ்தாநிஇதி – என்னிடத்திலிருப்பதாக, உபதாரய – அறிந்துகொள்.

வாயு ஆகாயத்தில் இருக்கிறது, எங்கும் பரவியிருக்கிறது எப்பொருளும் இருப்பதற்கு இடம் அவசியம் வேண்டும். அவ்வாறே வாயுவின் இருப்பிற்கு ஆகாயமாகிய இடம் அவசியம் ஆகிறது. ஆகவே ஆகாயம் வாயுவின் இருப்பிற்கு ஆதாரம் ஆகிறது. ஆனால் அவ்வாயு ஆகாயத்திற்கு ஆதாரமாகவில்லை. ஆகாயம் வேறு எந்த ஆதாரத்தையும் கொள்ளாமல் வாயுவோடு சம்பந்தப்படாமல் (பாதிக்கப் படாமல்) இருக்கிறது.

அவ்விதம் பூதங்கள் யாவும் பகவானையே ஆதாரமாகக் கொண்டு பகவானிடமே இருக்கின்றன. காற்றால் பாதிக்கப்படாத ஆகாயம் போல் பகவான் பூதங்களால் பாதகமடையாமல் பூதங்களுக்கா தாரமாய் அவற்றைத் தன்னுள்ளே கொண்டிருக்கிறார். ஆகவே பூதங்களில் எங்கும் பகவான் இருக்கிறார் என்பதும், இல்லை என்பதும் ஒன்று தான், அதை எந்தவிதமாகக் கூறினாலும் தவறாகாது. ஆதாரம் வேண்டாத ஆகாயத்தின் தன்மையே ஆதாரம் வேண்டாத பகவத் சொரூபத்தையும் நன்கு விளக்கும், இது காறும் கூறியது முமுக்ஷு அவசியம் அறிய வேண்டிதாயிருப்பதால் ஞான பாகமாயிற்று.

96. பகவானும் கருமமும்

பகவானே எல்லாப் பிரபஞ்சங்களையும் தரித்துக் கொண்டிருக்கிறார். அவரே எல்லாவற்றிற்கும் ஆதாரம். பகவத் சொரூபம் எங்கும் வியாபித்திருந்த போதிலும், எந்த ஒன்றையும் ஆதாரமகக் கொண்டிருக்கவில்லை. ஆகையால் 'பிரபஞ்சம்' முழுதும்

பகவானிடமிருந்த போதிலும் பகவான் எதிலும் இல்லை' என்று சொல்வதும் பொருந்தும். அதுவே பகவானுடைய அற்புதமான யோக சக்தியாகும்.

உருவமில்லாத ஆகாயம் எங்கும் வியாபித்து, வாயுவிற்கு இடமாய், வாயுவில் ஒட்டாமல் வாயுவால் பாதிக்கப்படாமல், எல்லாப் பொருள்களுக்கும் தான் அவசியமாய் இருந்தபோதிலும், தான் எதையும்தனக்கு ஆதாரமாய் வேண்டாமல் இருப்பதோ, பகவானின் சொரூபத்தை உணர்ந்து கொள்வதற்கு ஏற்ற இலௌகிக திருஷ்டாந்தம் என்று கண்ணன் கூறினாலல்லவா? அது பகவத் சம்பந்தமான ஞானத்தின் ஒரு பகுதியாகும்.

'பகவான் தனது நிலையால் (இருப்பால்) பாதிக்கப்படுவதில்லை என்றால் செய்யும் தொழிலால் பாதகமடையாமல் இருக்க முடியுமா? என்ற வினா எழும். அவ் வினாவிற்கு விடையாக, மற்றும் மூன்று சுலோகங்களில் கண்ணன் பரமாத்மாவைப்பற்றிய ஞான பாகத்தை, மேலும் விளக்குகிறார்.

முன்அசித்தாம் என்உருவில் முற்றுமிப்பூதங்கள்
தன்னசிப்பால் ஊழிச் சமைவில்-மன்னவற்றை
ஆதிகா லத்தே அடையப் படைத்திடுவன்
மீதியான் தானே விரித்து

(இ-ள்) முன் அசித்தாம் என் உருவில்-மூலப் பிரகிருதியாகிய அசித்து என்று சொல்லப்படுகிற என் சொரூபத்தில் ஊழி சமைவில்-(நான் முகனுக்கு முடிவு நாளான) கல்பாந்த காலத்தின்போது முற்றும் இ பூதங்கள் தன் நசிப்பு-எல்லாவிதமான பிராணிகளுடைய (முடிவு) லயம் (என்னால்) உண்டாகின்றது; ஆதிகாலத்தே – கல்பஆரம்பத்தில், அவற்றை-அப் பூதங்களை யான் தானே விரித்து-நானே பலவாகப் பிரித்து விரிவாக, மீது அடைய படைத்திடுவன்-திரும்பவும் முறையாகச் சிருஷ்டிக்கின்றேன்.

4
ஸர்வ பூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்
3
கல்ப க்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்.

(இ-ள்) கௌந்தேய-குந்திபுத்திரா! கல்பக்ஷயே-பிரளயகாலத்தில், ஸர்வ பூதாநி-எல்லாப் பூதங்களும், மாமி காம் ப்ரக்ருதிம்-என்னுடன் சேர்ந்த மூலப்ரக்ருதியில், யாந்தி-(லயத்தை) சேர்தலை அடைகின்றன; கல்பாதௌ-சிருஷ்டிகாலத்தில், தாநி-அவைகளை, புந:-மறுபடியும், அஹம்-நான், விஸ்ருஜாமி-சிருஷ்டிக்கிறேன்.

பிரகிருதி அசித்து, மூலப் பிரகிருதி, அபாராப் பிரகிருதி, மாயை எல்லாம் ஒரு பொருளையே குறிக்கும் பல சொற்கள், ஏழாவது அத்தியாயம் நான்காவது சுலோகத்தில் பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமாய் (உபாதான காரணமாய்) பகவானிடத்தில் உள்ளதாய் சொல்லப்படும் 'அபார ப்ரக்ருதி' என்பதும் இதுவேயாகும். கல்ப ஆரம்பத்திலிருந்து கல்பம் முடியும் வரை இப் பிரகிருதியே ஸ்தாவரமாயும் ஜங்கமுமாயுமுள்ள பலவகைப் பொருள்களாய் நாமம் (பெயர்) ரூபம் (வடிவம்) கொண்டு பிரிக்கப்பட்டுப் பிரபஞ்சமாய் விளங்குகின்றது.

கல்பாரம்பத்தில் பகவானால் செய்யப்படும் சிருஷ்டித் தொழிலே இதற்குக் காரணமாகும். கல்ப முடிவில் நானாவிதத் தோற்றங்களோடிருந்த பிரபஞ்சம் முழுதும், நாம ரூபங்கொண்டு, பிரிக்க முடியாமல் பகவத் சொரூபமான பிரகிருதியாகிய மூலத்தில் ஒடுங்கி விடுகிறது. பகவான் செய்யும் ஸம்காரத் தொழிலே (அழித்தலே) இதற்குக் காரணமாகும்.

ஆக, 'படைத்தலும் அழித்தலுமாகிய தொழில்கள் பகவானால் கல்ப ஆரம்பத்திலும் கல்ப முடிவிலும் முறையே திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன' என்பது இதனால் தெரிவிக்கப்பட்டது. இராமாயணத்திலும் இதே கருத்துத்தான்.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்.

என்று சொல்லப்படுகிறது.

வேதத்தில் சிருஷ்டியைப் பற்றிக் கூறும் சந்தர்ப்பத்தில் பிரகிருதியைக் குறிப்பிட்டதாகக் காணப்படவில்லை. அதிலிருந்து, 'பகவான் சாதனமோ பொருளோ எதுவுமில்லாமல் தொழில் (கருமம்) செய்கிறாரோ' என்று ஊகிக்க இடமுண்டாகும். அவ்வாறு ஊகிக்க இடமில்லாதபடி, முன் சுலோகத்தில் கூறிய பொருள் மேலும் விளக்கமாக அடுத்து வரும் சுலோகத்தில் கூறப்படுகிறது.

என்பின் பிரகிருதி எய்ந்துநான் இங்கிவற்றை
முன்தன்மை யால்பின்னு மூண்டளிப்பன்-தன்தன்மை
சேர்வசமொன் றனறிச் சிறந்த வசத்திலவை
ஆர்வகையே பூதமுமங் காம்.

(இ–ள்) தன் தன்மை சேர்வசம் ஒன்று இன்றி–சுதந்திரமாக இயங்கும் தன்மை எதுவும் இல்லாமல், அவை சிறந்த வசத்தில் ஆர்–(பிரகிருதியின்) முக்குணங்களில் மேலோங்கியிருப்பதன் அதீனத்தில் பொருந்தியதாகின்ற (பிரகிருதி வசப்பட்டிருக்கிற), பூதமும் ஆம் இவற்றை உயிர்களை என்தன் பிரகிருதி ஏய்ந்து–என் (சுவாதீனத்தில்) என்னிடமிருக்கும் பிரகிருதியைக்கொண்டு நான் முன்தன் மையால்–நான் (உயிர்களின்) பழமையான கரும சுபாவத்தை அனுசரித்து, பின்னும் மூண்டு அளிப்பன்–திரும்பத் திரும்பப்படைக்கின்றேன்.

ப்ரக்ருதிம்ஸ்வாம் அவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:
பூதக்ராமம் இதம் க்ருத்ஸ்நம் அவசம் ப்ரக்ருதேர்வசாத்.

(இ–ள்) ஸ்வாம்–என்னுடைய (சுவாதீனமான) தான, ப்ரக்ருதிம்–பிரகிருதியை அவஷ்டப்ய–சுவீகரித்து (கொண்டு) அவசம்–பிராசீன கருமாதீனமான, 'க்ருத்ஸ்நம் இதம் பூதக்ராமம்–எல்லாப்பிராணிக் கூட்டங்களையும், புந: புந:–மறுபடி மறுபடி ப்ரக்ருதே: வசாத்–பழமையான (அவற்றின்) கரும சுபாவத்தை அனுசரித்து, விஸ்ருஜாமி–சிருஷ்டிக்கிறேன்

'ப்ரக்ருதிம் ஸ்வாம் (என்தன் பிரகிருதி)' என்பதற்கு 'என்னுடைய அதீனத்துக்கு உட்பட்ட பிரகிருதியை' என்றும் 'விசித்திரமாய் விகாரப்படும் என்னுடைய பிரகிருதியை' என்றும் உரையாசிரியர்கள் வெவ்வேறாகப் பொருள் கொள்வர். பொருள்களுக்குரிய மூன்று குணங்களையும் தன்னகத்தே கொண்டது பிரகிருதியாகும்.

அவஷ்டப்ய (ஏய்து,:–எட்டு வகையாக விகாரப்படுத்தி என்றும் சிருஷ்டியில் பிரபஞ்சத்திற்குப் பிரகிருதியை உபாதான காரணமாகச் (பானைக்கு மண்போலச்) செய்து என்றும் பொருள் கொள்ளப்படுகின்றன.

தம் வசமின்றிப் பிரகிருதி வசமான பூதங்கள் (உயிர்கள்) என்றதனால் உயிர்களுக்குப் பகவானின் அதீனம் இல்லாது போய்விடாது 'என் அதீனத்தில் (என்னிடம், உள்ள பிரகிருதி' என்று ஆரம்பத்திலே சொல்லப்பட்டமையால் 'பிரகிருதி உயிர்களைத் தன் வசப்படுத்துவதும், படுத்தாதிருப்பதும் பகவானின் திருவுள்ளம் அல்லது சங்கல்பத்தையே பொறுத்திருக்கிறது' என்பது நன்கு விளங்கும். அன்றியும் இச் சுலோகத்திற்கு ராமாநுஜரும் ராகவேந்திரரும் கூறிய உரையின் சாரமும் நோக்கற் பாலது..

ராமாநுஜர்– 'எனது சுவாதீனமான பிரகிருதியை எட்டு விதமாகப் பரிணமிக்கச் செய்து பிரகிருதிக்குச் சுவாதீனமாயிருக்கும் காரணத்தால் பராதீனம் அடைந்திருக்கிற தேவன், மனிதன், திரியக் முதலிய சகல உயிர்களையும் அவற்றின் பிராசீன கருமத்தை அநுசரித்து மீண்டும் மீண்டும் சிருஷ்டிக்கிறேன்' என்று கண்ணன் கூறினார்.

ராகவேந்திரர்:–'சிருஷ்டியில் பகவான் பிரகிருதியை உபயோகிப்பதால் அவரால் பிரகிருதியின் சிருஷ்டித் தொழிலைச் செய்ய இயலாது' என்னைக் கொள்ளலாகாது. பிரகிருதியைச் சாதனமாக்குவது அவருக்கு உகந்த லீலையும் (விளையாட்டும்) கருணையமாகும். 'ஸ்வாம்' (என்தன்) என்ற விசேஷணம், 'சிருஷ்டிக்குச் சாதனமாகும் தன்மை பிரகிருதியில் பொருந்துவதும் ஈச்வராதீனத்தில் அடங்கியிருப்பதைக் காட்டவே, கொடுக்கப்பட்டுள்ளது.

பலவற்றைப் படைப்பதால் கருமம் ஜீவன்களைப் பந்தப்படுத்துவதுபோல் பகவானையும் பந்தப்படுத்தாமலிருக்குமா? என்ற கேள்வி எழும். அதற்கு விடை அடுத்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது.

அந்தக் கருமங்களாங்கவற்றில் தொத்தற்று
சம்பந்தம் தான்முயலான் தன்படிபோல்-இந்தப்
பெருந்தகைமை யாலிருக்கும் பெற்றியினா லென்னை
வருந்த இறையும்பிணியா வாங்கு

(இ–ள்) அந்த கருமங்கள்–(படைத்தல் அழித்தலாகிற) அந்தத் தொழில்கள், அவற்றில் தொத்து அற்று சம்பந்தம்தான் முயலான் தன்படி போல்–அவ்வித (உலக) கருமங்களில் அபிமானம் இல்லாதவனாய் சம்பந்தமும் கொள்ளாதவனாகிய (நிஷ்காமியகரும யோகியின்) தன்மை போலவே, இந்த பெரும் தகைமையால் இருக்கும் பெற்றியினால்–இந்த விசித்திரமான யோகத் தன்மையால், என்னை–வருந்த–பாதிக்கும்படி, இறையும் பிணியா–சிறிது கூடக் கட்டுப்படுத்தமாட்டா.

நசமாந்தாநி கர்மாணி நி ப[3]த்[4]நந்தி த[4]நஞ்சய
உ தா[3]ஸீநவ தா[3]ஸீநமஸக்தம் தேஷு கர்மஸு

(இ–ள்) தனஞ்சய–அர்ஜுனா! தாநி கர்மாணி–அந்தச் சிருஷ்டி கருமங்கள் தேஷு கர்மஸு–அந்தக் கருமங்களிலே, அஸக்தம்–அபிமான மற்றும், உதாஸீநவத் ஆஸீநந்–சம்பந்தமற்றவனைப் போலவுமிருக்கிற, மாம் என்னை ந நிபத்நந்தி–பந்திக்கமாட்டா.

உலகில் எந்தத் தொழிலைச் செய்வதாயிருந்தாலும் தொடங்கு முன் 'என்னென்ன செய்யவேண்டும்?' என்னென்ன பொருள் வேண்டும், செலவு என்னவாகும்? யாராருக்கு என்ன பயன் விளையும்? எனக்கு என்ன கிடைக்கும்? நினைத்தபடி நிறைவேறாவிடில் பிறருக்கு என்ன பாதகம் விளையும்? எனக்கு என்ன நேரும்?' என்று யோசிக்கிறார்கள். தொழில் செய்யும் காலத்திலும் இதே மனோபாவம் தொடர்ந்து வருகிறது. இதற்குக் கருமத்திலுள்ள பற்று அல்லது அபிமானமே காரணமாகும். உயிர்கள் செய்யும் கருமங்களால் பந்தம் அடைவதற்கும் இவ்விதப் பற்றே காரணமாகிறது. பகவான் பற்றின்றி, சம்பந்தமில்லாதவர்போல் படைப்பாதி தொழில்களைச் செய்வதால், அவற்றால் பாதிக்கப்படவோ பந்தப் படவோ இல்லை. ஆனால் 'படைப்பின் காரணமாக உயிர்களில் மனிதன், மிருகம், தேவன், பறவை என்று உண்டாகும் வேற்றுமைக்குப் பொறுப்பும் உயிர்கள் செய்த பூர்வ கருமமே யாதலால், சிருஷ்டியாதி கருமங்களால் பகவான் 'சிறிது கூட பாதகம் அடைவதில்லை' என்று விதந்து கூறப்பட்டது. இச்சுலோகத்திற்கு ராமாநுஜர் கூறிய உரையும் கவனிக்கத்தக்கது.

ராமாநுஜர்:– எல்லா உயிர்களையும் சமமாய்ப் படைக்காமல் தேவன் மனிதன் என்று பலவித விஷம் சிருஷ்டியாகப் படைத்தலால், என்னைப் புண்ணிய பாவங்களாவது, கிருபையற்றவன், பட்சபாதமுள்ளவன் என்னும் அபவாதமாவது (பழிச்சொல்) சார்தலில்லை. செய்யும் கருமத்தில் பலாபேக்ஷயில்லாமல் உயிர்களின் பூர்வ கருமத்திற்குத் தக்கபடி நான் சிருஷ்டிப்பதே அதற்குக் காரணமாகும்.

97. கர்மவாதிகளும் அவர்கள் அடையும் பலனும்

'பிரபஞ்சம் பகவானை ஆதாரமாகக் கொண்டு பகவானிடமிருந்த போதிலும், பகவான் காற்றிற்கு இருப்பிடமான ஆகாயம்போல் பிரபஞ்சத்தில் ஒட்டாது, ஆதாரம் எதுவுமின்றி இருக்கிறார். பிரகிருதியைக் கொண்டு சிருஷ்டி கருமங்களைச் செய்த போதிலும், அக் கருமங்களில் அபிமான மற்றும் சம்பந்தம் அற்றவன் போலவும் இருக்கிற பகவானை, அவை பந்திப்பதில்லை! என்று கண்ணன் அர்ஜுனனுக்கு முன்னே கூறினாரல்லவா?

அவ்விதம் கூறியதில் 'பிரகிருதியைக் கொண்டு சம்பந்த மற்றவர் போல விருந்து.........' என்று தெரிவித்த பகுதி சிலருக்கு பகவானை மந்த சுபாவ முடையவர் என்றும் பிரகிருதியே முற்றிலும் சிருஷ்டிகர்த்தா; பகவானிடம் பிரகிருதி யிருப்பதைக் கொண்டு சிருஷ்டித் தொழில் பகவானுக்குக் குரியதாகச் சொல்லப்படுகிறது' என்று எண்ண இடந்தரும் அவ்வித நினைப்பை நீக்கும் பொருட்டுக் கண்ணன் அடுத்தபடியாகத் தெரிவிப்பதாவது:

என்னோக்கம் பெற்றங் கசித்துச் சராசரத்தை
முன்னோக்கில் நின்று முயன்றுபெறும்-இந்நோக்காம்
ஏதுவினால் கௌந்தேயா எவ்வுலகும் தன்கரும
மீது வளந்தருமே மிக்கு.

(இ-ள்) அசித்து-பிரகிருதியானது, என் நோக்கம் பெற்று-(உயிர்களின் கருமத்துக்குத் தக்கபடிச் சத்திய சங்கல்பனான) என்னுடைய கடாக்ஷத்தை அடைந்து, முன் நோக்கில் நின்று-(என்) மேற்பார்வையிலேயிருந்து, சராசரத்தை முயன்று பெறும்-சரா சரமாயுள்ள இந்தப் பிரபஞ்சத்தை உண்டுபண்ணும்; கௌந்தேயா-அருச்சுனா! இந்நோக்காம் ஏதுவினால்-இவ்விதம் கர்மாநுகுணமாக நான் கடாக்ஷிக்கின்ற நிமித்தத்தால், எ உலகும்-எல்லா உலகங்களும், தன் கரும மீது மிக்கு வளர் தரும்-உயிர்கள் செய்த கருமத்தை அடிப்படையாகக் கொண்டு திரும்பத் திரும்ப உண்டாகும்.

மயாத்யக்ஷேண[4] ப்ரக்ருதி: ஸூயதே ஸ சராசரம்
ஹேதுநா அநேந கௌந்தேய ஜகத் விபரிவர்த்ததே.[3]

(இ-ள்) கௌந்தேய-குந்தி புத்திரனே!, அத்யக்ஷேண-ரசாக்ஷியாயிருக்கிற, மயா-என்னாலே (என்னுடைய மேல் பார்வை நிமித்த காரணமாக), ப்ரக்ருதி:-மாயையானது ஸ சராசரம்-அசையும் பொருள் அசையாப் பொருள்களுடன் கூடிய பிரபஞ்சத்தை ஸூயதே-உண்டுபண்ணுகிறது, அநேந ஹேதுநா-இந்த நிமித்தத்தாலோயே (காரணத்தாலேயே), ஜகத்-(உயிர்களுடன் கூடிய) பிரபஞ்சமானது, விபரிவர்(த்)ததே-திரும்பிக் கொண்டே இருக்கிறது.

அத்யக்ஷ என்னும் பெயர்ச்சொல், ஒன்றை 'நேரடியாகக் கண்காணிப்பவன் என்று பொருள்படும். அத்யக்ஷபதத்தின் (ஒருமை) மூன்றாம் வேற்றுமை 'அத்யேக்ஷண' என்று வந்தது. இவ்வேற்றுமை (விபக்தி) கர்த்தாவை (கர்த்தாப் பொருளை)க் குறிக்கும் பகவான்

சிருஷ்டியாதி தொழில்களைச் செய்வதில் 'பிரகிருதியை நேரடியாகக் கண்காணிப்பது மட்டுமில்லாமல். பிறர் எவருடைய சகாயமுமின்றித் தானே செய்விக்கும் கருத்தாவாகவுமிருக்கிறார்' என்பதைப் பூரணமாக எடுத்துச் காட்டவல்ல சக்தி இவ்வேற்றுமைப் பதத்தில் அடங்கியிருப்பது நோக்கத்தக்கது. பகவான் தனது சங்கல்ப மாத்திரத்தால் பிரகிருதியை உற்பத்தி செய்யச் செய்கிறார். நேரடியாகப் பிரகிருதியின் செயலைப் பார்வையிடவும் செய்கிறார். ஆகவே இப்பொருளில் மூலத்தில் வந்த சொல்லின் ஆழ்ந்த கருத்தை யறிந்து மொழி பெயர்ப்பாசிரியரான 'வாதிகேசரி' என்ற யதிகள் 'அசித்து சராரசத்தை முன்னோக்கி நின்று....பெறும்' என்று வெளியிட்டது. அறிஞர்களின் பாராட்டிற்குரியது.

'அநேக ஹேதுநா–இந் நோக்காம் ஏதுவினால்' என்ற தொடரும் ஆழ்ந்த சிந்தனைக் குரியது. பிரபஞ்சமாகப் பரிணமிப்பதற்குப் பிரகிருதி கருவியாக விருந்தபோதிலும் அதுவே காரணமாகச் சொல்லப்படலாம். எனினும், பிரதான (இன்றியமையாத) காரணம் பகவானே என்பதை, இப்பகுதி நன்கு எடுத்துக் காட்டியது.

'என்னுடைய', 'எனக்குரிய' என்ற பதங்களால் இக்கருத்து முந்திய சுலோகங்களில் குறிப்பாகக் காட்டப்பட்டது. எனினும் பகவானுடைய பூரணமான தன்மையைப் பின்னும் தெளிவாக விளக்கும் பொருட்டுக் கண்ணன் இங்கு மறுபடி எடுத்துக் காட்டினார்.

பகவான் இவ்வாறு சிருஷ்டி கர்த்தாவாய், காப்பாளராய், சம்ஹாரகர்த்தாவாய் இருக்கப் பலர் அவரை ஏன் பொருட்படுத்தாதிருக்க வேண்டும்? அவ்வாறிருந்தும் அவர்கள் தண்டனையின்றித் தப்பியிருக்கிறார்களே அந்நிலைக்குச் சமாதானம் சொல்லிப் பகவானை யாவற்றிற்கும் சிருஷ்டி கர்த்தாவாக எங்ஙனம் ஒப்புக் கொள்ள முடியும்? என்றவாறு அர்ஜுனன் மனத்தில் எழுந்த வினாக்களுக்குக் கண்ணன் அடுத்தபடியாக விடையளிக்கிறார்.

எந்தவுல குக்கும் இறையாகும் என்பெருமை
சந்தமதி னின்றுணர்வு சாராதார்-மந்தராய்
மானிடமா மிவ்வுடலில் வந்துதித்த வென்னையது
தாமிடமா நின்றிகழ்வர் தாம்.

(இ–ள்) எந்த உலகுக்கும் இறையாகும் என் பெருமை–எல்லா உலகங்களுக்கும் முக்கிய காரணனாயிருக்கும் மஹேசுவரனான என்னுடைய பெருமையை, சந்தம் அதினின்று உணர்வு சாராதார்–

(பரமாத்ம) தத்துவ சொரூபத்தோடு சேரக் கிரகிக்கும் சக்தி பெறாதவர்கள், மந்தராய்—மூடர்களாய், மானிடமாம் இ உடலில் வந்த உதித்த என்னை—இந்த மனித தேகத்தைப் பெற்றுத் தோன்றியிருக்கிற என்னை, அது தான் இடமா நின்று இகழ்வர்—(தங்களைப்போல் கருமத்தால்) அந்தத் தேகத்தையே பற்றியிருக்கிறவனாக (எண்ணி) எப்பொழுதும் அவமதிக்கின்றார்கள்.

அவஜாநந்தி மாம்மூடா[4] மாநுஷீம் தநுமாச்ரிதம்
பரம்[4]பாவ மஜாநந்தோ மமபூத[4] மஹேச்வரம்

(இ—ள்) மம—என்னுடைய, பரம்பாவம் – பரமதத்துவத்தை (சிரேஷ்டமான சுவரூபத்தை), அஜாநந்த: – தெரியாத, மூடா:– மூடர்கள், பூத மஹேச்வரம்—பூதங்களுக்கெல்லாம் மகா ஈசனாயிருக்கிற மாம் – என்னை, மாநுஷீம் தநும் – மனித தேகத்தை, ஆச்ரிதம்—ஆசிரயித்து இருப்பவனாக(எண்ணி), அவஜாநந்தி – அவமதிக்ககிறார்கள்.

பரம் பாவம் அஜானந்த: (என் பெருமை.....உணர்வு சாராதார்):– என்ற தொடருக்கு பகவான் தனக்குக் கர்ம பந்தம் இல்லாதிருக்கவும் தனது இச்சையால் உயிர்கள் தன்னைப் பற்றிக் கடைத் தேறட்டுமென்று கருணையாலும், ஔதார்யத்தாலும் அன்பினாலும் இவ்வாறு தானே சங்கல்பம் செய்து அவதரித்திருக்கின்ற பரம ரகஸ்யத்தை உணர்ந்து கொள்ளாமல்' என்று கூறுவது ராமாநுஜ சித்தாந்த ஸாரமாகும்.

மூடர்கள் பகவானை இகழ்வதற்கு அவர்களுடைய விபரீத ஞானமே காரணமாகும் என்பதும் அவ்விபரீத ஞானத்திற்கு ஈசுவரனின் அவதாரத்தைப் பற்றி அவர்களுக்குத் தோன்றிருக்கிற வினோத நினைப்பே காரணமாகும் என்பதும் இச் சுலோகத்தில் சொல்லப்பட்டன. அந் நினைப்பு இரண்டு விதமாகும்.

1. பகவான் ராமகிருஷ்ணாதி அவதாரங்களில் மனித தேகத்தை கரும பந்தத்தால் அடைந்திருக்கிறார் என்று கொள்வது

2. அவதாரங்களில் பகவான் (விகாரத்திற்கிடமில்லாத அப் பிராகிருதமான தனது திவ்விய மங்கள விக்கிரகத்தையே மனுஷ்யாதி சரீரம் போல் தோன்றச் செய்திருக்க அதை உணரமாட்டாமல்) மற்ற உயிர்களைப் போலவே பிரகிருதி சரீரத்தைப் பெற்றிருக்கிறார் என்று கொள்வது.

இரணியன், இராவணன், சிசுபாலன் போன்றவர் இவ் விருவித நினைப்பு முடையவர் கருமம் ஒன்றையே வேதத்தில் கோரிய பலன்களையெல்லாம் அளிக்க வல்லதாக எண்ணியவர் விசேஷ

கருமங்களைச் செய்து அவற்றின் பயனாக எந்த உயிரும் ஈசுவர பதவியை அடையலாம் என்றும், தாங்கள் விசேஷ கர்ம பலத்தால் ஈசுவரனுக்கு மேலான பதவியை அடைந்து ஈசுவரனையும் தாழ்த்தி விட்டோம், என்று அகங்கரித்தவர்கள் அத்தையகையோர், உரிய மந்திரங்களின் உதவியால் விதிப்படிச் செய்யப்பட்ட வேத கர்மா, பலனை அளிப்பதால், ஈசுவரன் எவ்விதத்திலும் பல சித்திக்குக் காரணமாகமாட்டார் என்பது அவர்கள் கொண்ட மதம். ஆகவே அவர்களும் அவர்போன்ற பிறரும் பகவானை அவதாரத்திற்கு முன்பும் அவதாரத்திலும் கர்ம பந்தமுடையவனாக நினைப்பது இயல்பாதல்ால் அதுவே காரணமாகப் பரம தத்துவத்தை அறியாமல் பகவானை இகழ்கிறார்கள் என்று இங்கு சொல்லப்பட்டது.

அவமதிப்பவர்கள் அதற்குரிய பலனைப் பெறாது தப்புவதில்லை என்பது அடுத்தபடியாகக் காட்டப்படுகிறது.

பழுதான வாசை பழுதான கன்மம்
பழுதான ஞானம் படைத்தார்-பழுதான
நெஞ்சினராய் மோகமுறு நேரசுர ராக்கதராம்
வஞ்சத் தகப்படுவர் வந்து

(இ—ள்) மோகம் உறும்—(தத்துவத்தை) மறைக்கின்ற மயக்கம் பொருந்தியான, நேர் அசுரர் ராக்கதராம்—மிக்க அசுரத்தன்மையும் இராக்கதத் தன்மையும் பொருந்திய, வஞ்சத்து வந்து அகப்பட்டவர்— பிரகிருதிக்குள் புகுந்து அகப்பட்டுக்கொண்ட இவர்கள். பழுதான ஆசை—(கோரியது) நிறைவேறாத ஆசையும், பழுதான கன்மம்— (எடுத்தது) கைகூடாத செயலும், பழுதான ஞானம் – பயனளியாத அறிவும், படைத்தார் – பெற்றவர்களாய், பழுதான நெஞ்சினராய் (கெடும்)—வியர்த்தமான நினைவுடன் (கெடுவார்கள்).

மோகா4சா மோக4 கர்மாணோ மோகஜ்ஞாநா விசேதஸ:
ராக்ஷஸீம் மாஸுரீஞ் சைவ ப்ரக்ருதீம் மோஹிநீம் ச்ரிதா:

(இ—ள்) ஆசுரீம்—அசுர சம்பந்தமும், ராக்ஷஸீஞ்சைவ—ராக்கத ஸம்பந்தமுமான, மோஹிநீம்—மோகத்தையுண்டு பண்ணும், ப்ரக்ருதிம்— பிரகிருதியை, ச்ரிதா:—அடைந்த (அவர்கள்), விசேதஸ:— ஞானமில்லாதவராயும், மோகாசா:—வியர்த்தமான ஆசையுடையவர்களாயும், மோக கர்மாண:—பயனற்ற செய்கையுற்றவர்களாகவும் மோக(க்) ஞான:—பயனற்ற அறிவுடையவர்களாகவும் (பவந்தி)—ஆகிறார்கள்.

'மோகம் காரணமாக, நிலையான உயிருக்கு எப்பொழுதும் நன்மை பயக்கவல்ல சாதனங்களைத் தெரிந்து கொள்ள மாட்டாதவர்களாய், இந்திரியங்களுக்கு வசப்பட்டு விஷயாந்தர சுகங்களையே புருஷார்த்தமாகக் கொள்கிறார்கள். அவ்விதம் கொள்ளும் ராவணாதியர் யாகாதிகளைச் செய்தபோதிலும் கர்மாவே பலன் தருவதாக மோகித்திருப்பதால், கரும பலனை வழங்கும் பகவானின் சக்தியையும் சொரூபத்தையும் அறிய முடியாதவர்கள் ஆகிறார். ஆகவே கருமவாதிகள் பிரகிருதியின் காரியமாகிய அகங்கார மமகாரங்களுக்கு ஆளாகிக் கெடுகிறார்கள்' என்று கண்ணன் கூறினார்.

98. சாத்வீகரும் உபாசனையும்

தாமத குணம் மிகுந்த அசுரர் இராக்கதர் முதலியோர் பகவானின் பரமதத்துவத்தை அறிந்து கொள்வதில்லை. பகவான் தன்னிச்சையால் கருணைகொண்டு எடுத்த அவதாரங்களைத் தங்களுக்கு நேர்ந்த பிறப்புபோலவே கருதுகிறார்கள், பிறர் காணமுடியாத தன் சொரூபத்தைச் சம்சாரிகள் கண்ணால் காணும் பொருட்டாக பகவான் ராம கிருஷ்ணாதி அவதாரங்களில் மேற்கொண்டிருந்த தேகத்தைக் கரும பந்தத்தின் விளைவாக நினைத்து அவமதிக்கிறார்கள், அதனால் வீணான ஆசையும் மோகமும் கொண்டவர்களாய், விபரீத ஞானத்தால் தூண்டப்பட்டு வீணான கருமங்களைச் செய்து அழிகிறார்கள்!' என்று கண்ணன் முன்னே கூறினாரல்லவா?

அத்தகைய தாமதகுணம் வாய்ந்த அசுர பிரகிருதிகள் உலகில் எல்லா காலங்களிலும் மிக்கிருந்து வருவதால் பலர் புறக்கணிக்கும்படியாகப் பகவானிடத்தில் ஏன் உண்மையாகவே குறை இருத்தல் கூடாது' என்று தோன்றலாமாகையால் அதைப் போக்குவதற்காக கண்ணபிரான் சாத்துவீக குணம் வாய்ந்த மகான்களின் நிலையை அடுத்து வரும் மூன்று சுலோகங்களால் விளக்குகிறார்.

மிக்க மனத்தாருலகில் வீயா முதலாகி
ஒக்க மனத்துன்னிவே றென்றறியாத்-தக்கமனத்
தான்றவதென் னைப்பணிவ ராங்கவர்க டிவ்வியமா
யென்ற வியல்பெற்றியல்வார் இங்கு

(இ-ள்) தக்க மணத்து ஆன்றவர்-சிறந்த மனம் படைத்த மகாத்மாக்கள் மிக்க மனத்தார்-பரந்த நோக்குடையவர்களாய், வேறு ஒன்று அறியா-பிறிதொன்றை நினைக்காமல் உலகில் பிரபஞ்சத்தில் வீயா-அழியாமல் முதல் ஆகி-(எல்லாவற்றிற்கும்) ஆதி காரணமாகிய என்னை-என்னையே, ஒக்க மணத்து-ஒரே மனமுடையவர்களாய், உன்னி-தியானித்து, பணிவர்-பஜிப்பார்கள். அவர்கள்-அத்தகைய மகாத்மாக்கள், இங்கு-இவ்வுலகில், திவ்வியமாய் ஏன்ற இயல்-தெய்வத்தன்மை பொருந்திய பிரகிருதியை (சாத்துவீக குணத்தை) பெற்று இயல்வார்-அடைந்தவர் ஆவார்கள்.

மஹாத்மாநஸ்து மாம் பார்த்[2] தைவீம்[3] ப்ரக்ருதிமாச்ரிதா:
[4]பஜந்த்யநந்ய மநஸோ ஜ்ஞாத்வா[4] பூதாதி[3] மவ்யயம்.

(இ-ள்) பார்த்த-அர்ஜுனா!, மஹாத்மாநஸ்து மகாத்மாக்களோ, தைவீம்-தெய்வம் சம்பந்தம் பொருந்திய, ப்ரக்ருதிம்-பிரகிருதியை ஆச்சரிதா:-அடைந்தவர்களாய், பூதாதிம்-பூதங்களுக்கு (பிராணிகளுக்கு) ஆதியாய் அவ்யயம்-அழிவில்லாத மாம்-என்னை, ஜ்ஞாத்வா-அறிந்து, அநந்ய மநஸ:- வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தாவர்களாய், பஜந்தி-வணங்குகின்றார்கள் (தியானிக்கின்றனர்)

தாமசம், ராஜசம், சாத்துவிகம் ஆகிய முக்குணங்களுக்கிடமாயிருப்பது பிரகிருதி. முக் குணங்களில் தாமச குணம் மிக்கவர்கள் பரமாத்மாவின் உண்மை சொரூபத்தை உணரமாட்டாதவர். ஆகையால் அவதார ரகசியம் உண்மை மகிமை முதலியவற்றை உணர்ந்துகொள்ள முடியாதவர்களாய் பகவானைத் தங்களைப்போலவே நினைத்து அவமதிக்கின்றனர்.

சாத்துவீக குணம் மிகுந்த பெரியோர்களும் உலகில் பலர் இருப்பதால் அவர்கள் மோஹவலைப்படாமல் பகவானின் உண்மைச் சொரூபத்தை உள்ளபடி உணர்வார்கள். அவ்வாறு உணர்ந்தவர்களாலேயே பகவானின் அவதார மேன்மையை உள்ளபடி கிரகிக்க முடியும். பாராட்டவும் முடியும். அவதாரத்தால் பிரகாசமடைந்த குணங்களை நினைந்து உருக முடியும்.

நம் நாட்டில் மஹாத்மா காந்தியடிகள் பல ஏழைகளின் துயரத்தைக் காணப் பெறாமல் மனமிரங்கி அவர்களைப் போலவே உடையணிந்துகொண்டார். அவர்களைப் போலவே இந்தியாவின் சராசரி வருமானத்திற்கு மேற்போகாத குறைந்த செலவில் உண்ணவும்

செய்தார். பெரிய பதவிகளைப் பெறுவதற்குத் தகுதியும், திறமையும், வசதியும் அவருக்கு இருந்தன. அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு உயர்ந்த பதவியில் அவர் இருக்க விரும்பவில்லை என்பதை அறியாத சிலர் மகாத்மாவை காட்டுமிராண்டி என்றும் ஆண்டி என்றும் அவமதிக்கத்தான் செய்தனர். பாதி நிர்வாண ஆண்டி என அயல் நாட்டுப் பிரமுகர் இகழ்ந்து உரையாடியது உலகப் பிரசித்தம்.

ஆனால் மஹாத்மா ஏழைகளின் துயரங்கண்டு மனமிரங்கி விரும்பியே ஏற்றுக்கொண்ட எளிமையின் மேன்மையையும் தியாகத்தையும் பலர் அறிந்து பாராட்டினர். சொல்லிச் சொல்லி நினைந்து நினைந்து மனம் உருகவும் செய்தனர். அவ்வாறே தாமத குணம் மிக்க அசுரப்பிரகிருதிகள் பகவானின் அவதாரத்தை அவமதித்துப் பேசிய போதிலும் சாத்துவிகம் நிறைந்த பக்தர்களும் ஞானிகளும்

தொடர்ந்து ஆரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே

– சிலப்பதிகாரம்

என்று உருகிப் பாராட்டவே செய்கிறார்கள்.

சாத்துவிகர்கள் பகவானைப் பஜிக்கும் முறை பின்னும் விளக்கமாகச் சொல்லப்படுகிறது.

எந்நாளும் என்னைத் துதித்தே யியற்றியுடன்
மெய்ந்நா மனத்தான் மிகப்பணிந்து-தன்னார்ந்த
பத்தியுடன் என்னைப் பயிலுறுவார் தாமென்றும்
சித்தியினைச் சேர்ந்தார் செறிந்து.

(இ–ள்) தாம் என்றும் சித்தியினை செறிந்து சேர்ந்தார்– எப்பொழுதும் யோகத்தில் மிக்குப் பொருந்திய மஹாத்மாக்கள் எந்நாளும்–எப்பொழுதும். என்னை துதித்து–என்னைப் புகழ்ந்துகொண்டு, இயற்றி உடன்–(உழைப்பும்) உறுதியும் கொண்டு, மெய்நா மனத்தால்–உடல் நாக்கு மனம் ஆகிய மூன்று கரணங்களாலும், மிக பணிந்து–நன்கு வணங்கி தன் ஆர்ந்த பக்தியுடன்–தம்மிடம் பொருந்திய பக்தியோடு என்னை பயிலுறுவர்–என்னைத் தியானம் செய்து கொண்டிருப்பார்கள்.

ஸததம் கீர்தயந்தோமாம் யதந்தச்ச த்ருடவ்ரதா:
நமஸ்யந்தச்ச மாம்பக்த்யா நித்ய யுக்தா உபாஸதே

(இ-ள்) மாம்-என்னை ஸததம்-எப்பொழுதும், கீர்(த்)தயந்த:- புகழ்வோரும், யதந்தச்ச-முயற்சிசெய்கிறவர்களாயும் த்ருட வ்ரதா:- உறுதியான விரதமுடையவர்களாயும், மாம் – என்னை நமஸ்யந்தச்ச – வணங்குகிறவர்களாயும், பக்த்யா – பக்தியுடன், நித்ய யுக்தா:- ஜாக்கிரதையுடையவர்களாயும், மாம்-என்னை, உபாஸதே- உபாசிக்கிறார்கள்.

இச் சுலோகத்திற்கு ஸ்ரீதரரும் ராமாநுஜரும் சற்று விரிவாக உரை எழுதியுள்ளனர்.

ஸ்ரீதரர்:- ஒரு சிலர் பகவதாராதனை முதலியவற்றில் பிரயத்தனம் செய்து திடமான விரதமுடையவர்களாய் உபாசிக்கின்றனர். சிலர் ஜாக்கிரதையோடும் பக்தியோடும் கீர்த்தனம் செய்கின்றவர்களாய் பகவானை உபாசிக்கின்றனர். சிலர் ஜாக்கிரதையோடு பக்தியால் எப்பொழுதும் பகவானை நமஸ்காரம் செய்கின்றவர்களாய் உபாசிக்கின்றனர்.

ராமாநுஜர்:- சிலர் எப்பொழுதும் பகவானுடைய குணவிசேஷங்களைச் சொல்லுகின்ற நாமங்களை (பெயர்களை) ஸ்மரிப்பதனால் புளகாங்கிதமும் தழுதழுத்த குரலும் பெறுகிறார்களாகையால் நாராயண கிருஷ்ண வாசுதேவாதி நாமங்களையே சதா சொல்லுகிறார்கள். பின்னும் சிலர் ஆராதனைகளிலும் ஆராதனைக்கு உபயோகமாகக் கோயில் எடுத்தல் நந்தவனம் வைத்தல் முதலிய கைங்கரியங்களில் திடமான முயற்சியுடையவர்களாய் பக்தியும் சாந்த மனமும் பெற்றவர்களாய் எட்டு அங்கங்களாலே கல் முள் புழுதி முதலியன வுள்ள இடங்களளென்று பாராமலே தண்டாகாரமாய்ப் பகவானை நமஸ்காரம் செய்து உபாஸிக்கின்றனர். சிலர் பக்தியோடு பகவானையே அடையவேண்டுமென்ற எண்ணமுடையவராய், தமக்கென்றிருந்த சகல பொருள்களையும் தியானம் செய்து உபாசிக்கிறார்கள்.

ஆக இச்சுலோகத்தில் சாத்துவிக குணம் மிக்க மகாத்மாக்கள் மிகுந்த பக்தியோடு மனம், வாக்கு, காயம் (உள்ளம், உரை, செயல்) ஆகிய திரிகரணங்களாலும் பகவானை எப்படி உபாசிக்கிறார்கள் என்ற சொல்லப்பட்டது. அடுத்து வரும் சுலோகத்தில் ஞானத்தால் எப்படி உபாசிக்கிறார்கள் என்பது சொல்லப்படுகிறது.

வேறுசிலர் ஞானமெனும் வேள்வியான் மெய்த்தன்மை
தேறியெனை யேமருவிச் சேவிப்பர்-கூறுபடும்
பல்வகையா லெங்கும் பரந்தவெனை யேகமா
நல்வகையா லென்னை நயந்து

(இ-ள்) வேறு சிலர்- மற்றும் சில மகான்கள், ஞானம் எனும் வேள்வியான்-ஞானம் எனப்படும் யக்ஞத்தால், மெய் தன்மை தேறி-தத்துவத்தைத் தெளிந்து கொண்டு எனையே மருவி-என்னையே (மனதால்) பொருந்தி, எங்கும் பரந்தஎனை-எல்லாவிடங்கிளிலும் வியாபித்திருக்கின்ற என்னை, கூறு படும் பல்வகையால்-வேறுபட்ட அநேக விதங்களாகவும், ஏகமா-ஒன்றாகவும் (ஏக தத்துவமாகவும்) நல் வகையால் என்னை நயந்து சேவிப்பர்-நல்ல முறையில் என்னை விரும்பி உபாசிப்பார்கள்.

ஜ்ஞாந யஜ்ஞேந சா ப்யந்யே யஜந்தோ மா முபாஸதே
3 4 2
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விச்வதோ முகம்.

(இ-ள்) அந்யேச-மற்றப் பெரியயோர்கள், க்ஞாந யக்ஞேந-ஞானம் என்னும் யக்ஞத்தால், யஜந்த:-பூஜிப்பவர்களாய், மாம்-என்னை ஏகத்வேந-ஏகாகாரமாயும் ப்ருதக்த்வேந-பிருதக்வதத்தாலும், பஹுதா-அநேக விதங்களால், விச்வதோ முகம்-விசுவதோ முகனான (என்னை), உபாஸதே-உபாஸிக்கிறார்கள்.

புனிதமான பகவத் ஷயாதிகளைப் படிப்பதும் நினைப்பதும் ஆராய்வதும் பிறருக்குச் சொல்வதும் பிறர் சொல்லக் கேட்பதும் இவற்றால் மிக்க மகிழ்வதும் ஞான யக்ஞத்தால் பகவானை உபாஸிப்பதாகும். மூலத்தில் வந்த 'முகம்' என்ற பதத்தை முழுப் பொருளைக் குறிக்க வந்த சினை ஆகு பெயராய்க் கொள்ளலாம். 'ஏகமா' என்பது நாராயணானகவும் கூறுபடும் பல் வகையால் என்பது வாஸுதேவன், சங்கர்ஷணன் என்று வருகிற வெவ்வேறு நிலைகளாகவும் சிலரால் கொள்ளப்படும்.

இச்சுலோகத்திற்கு த்வைத, விஷிஷ்டாத்வைத, அத்வைத சித்தாந்த ரீதியாகக் கொள்ளப்படும் பொருள்களும் உற்று நோக்கத் தக்கன.

த்வைதம்-ஏகவேந்திரர்:- எங்கும் நிறைந்த நாராயணன் ஒருவனே என்று சிலரும் அந்த நாராயணன் எல்லாப் பொருள்களைக் காட்டிலும்

வேறுபட்டவன் என்று சிலரும் அந்த நாராயணன் அநேக ரூபங்களை உடையவனென்று சிலரும் உபாசிக்கின்றார்கள்.

விசிஷ்டாத்வைதம்–ராமாநுஜர்:– சில மகாத்மாக்கள் (முந்திய சுலோகத்தில் கூறியவாறு) கீர்த்தனங்களாலும், நமஸ்காராதிகளாலும், ஞான யக்ஞத்தாலும் பகவானைப் பஜித்து உபாசிக்கிறார்கள். அது எப்படி எனில் (1) ஜகதாகாரத்தாலே (உலக வடிவாலே) சகல சேஷியான (தலைவனான) பகவானை அநேக விதங்களாக ஒன்றே என்றறிந்து உபாசிக்கின்றவர்கள் (2) பகவானாகிய வாசுதேவன் நாமரூபங்கள் அற்றிருந்த சூட்சுமசித் சூட்சும அசித் ஆகிய வஸ்துக்களை சரீரமாக உடையதாயிருந்து, ஸ்தூல சித், ஸ்தூல அசித் ஆகிய வஸ்துக்களின் தேகியாகத்தான் ஆகவேண்டுமென்று சங்கற்பித்த மாத்திரத்தில், தேவ, மநுஷ்ய, பசு பக்ஷி மிருக ஸ்தாவரமாகிய வெவ்வேறு விசித்திரமான வஸ்துக்களைச் சரீரமாகவுடையவனாய் அப்பரமாத்மாவே இருக்கின்றானென்று அனுசந்தானம் செய்து உபாசிக்கின்றார்கள்.

அத்வைதம்–சங்கரர்:– விச்வதோமுகம்–விச்வரூபியான ஞான யக்ஞத்தாலே–பகவத் விஷய ஞானமாகிய யக்ஞத்தாலே ஏகத்துவத்தால்–பரமாத்மா ஒருவனே என்கிற பரமாத்ம தரிசனத்தாலே, பிருதக்த்வத்தால்–ஒரு விஷ்ணுவானவர் சூரிய சந்திராதி தேவதா ரூபியாயிருக்கிறார் என்னும் பாவனையினாலே,

இவ்வத்தியாயத்தில் இது காறும் கூறியது ஞானம். மேலும் சொல்லப்போவது விக்ஞானம், அதைக் காண்போம்.

99. விக்ஞானம்

பகவான் சர்வ வியாபியாய் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் முத்தொழில்களுக்கும் கர்த்தாவாய், தன்னிடமிருந்தபோதிலும் காற்றுடன் சம்பந்தப்படாத ஆகாயம்போல் இருக்கிறார். இவ்விதமான பகவத் சொரூபத்தையும் யோக மகிமையையும் அறியமாட்டாதவர் அவதார ரகசியத்தை விபரீதமாகக் கிரகித்துக் கொண்டு, பகவானை நிந்தித்துக் கெடுகிறார்கள். தத்துவத்தையும் அதன் காரணமாக அவதார மேன்மையையும் அறிந்த பக்தர்களுள் ஞானிகளும் பகவானை உபாசித்து நலம் பெறுகிறார்கள் என்று கண்ணன் இவ்வத்தியாயத்தில் 15–ம் சுலோகம் முடியக் கூறிய பகுதியை ஞானம் என்று சொல்லலாம்.

அடுத்து வரும் நான்கு சுலோகங்களில் கூறப் போகும் விஷயம் விஞ்ஞானம்.

ஞானத்திற்கு 'பகவத் சொரூபத்தையறிதல் அல்லது பகவத் விஷயமான சிரவண மனனாதிகளால் உண்டாவது' என்றும், பகவான் ஸர்வோத்தமன் என்பதை வேதங்களால் அறிவது என்றும் பல வகையாக உரை செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞானம் என்பதற்கு 'பகவத் மகிமைகளை விசேஷமாயறிவது; அல்லது சிரவணாதிகளாலுண்டாய ஞானத்தால் கிடைக்கும் பகவத் தரிசனம்; பகவான் மகிமைகளை வேதங்களாலறிவது' எனப் பல வகையாக உரை செய்துள்ளனர்.

நான்கிருது நான்வேள்வி நான்சுவதை நான்மருந்து
நான்கருது மந்திரநெய் நான்தானே-நான்கனலும்
அங்கி யதுவு அதிற்சிறந்த ஓமமுமாய்
தங்கியது மைவென்ன தான்.

(இ—ள்) நான்—, கிருது—(ஜியோதிஷ்டோமாதி) கிருதுசொரூபன்; நான்— வேள்வி—யக்ஞ சொரூபன்; நான்—, சுவதை—(பித்ருக்களுக்குரிய) அன்னம்;நான் மருந்து—நான் ஒளடதம் அல்லது தானியாதி சொரூபன்; நான்—, கருது மந்திரம்—எண்ணப்படும் மந்திர சொரூபன்; நான் தானே நெய்—நானே நெய் முதலிய ஓமத் திரவியங்களாயிருக்கிறேன்; நான்—, கனலும்—அக்னியும், அதிற் சிறந்த அங்கி அதுவும்—அதில் சிறப்பாகச் சொல்லப்படுகிற ஆவேநீயம் காருகபத்தியம் தட்சிணாக்கினியும் ஓமமுமாய் தங்கி அமைவதும் தான்—ஓமாக்கினி சொரூபனாயும் அமைந்தவனாகின்றேன்.

அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதா[4]ஹ மஹ மௌஷதம்[4]
மந்த்ரோஹ மஹ மேவாஜ்யம் அஹமக்[3]நி ரஹம் ஹு[3]தம்

(இ—ள்) அஹம்—நான், க்ரது:— (ஜோதிஷ்டோமாதி) கிரது ஸ்வரூபன், அஹம்—நான்,யக்ஞ:—யக்ஞ ஸ்வரூபன், அஹம்—நான், ஸ்வதா—(பித்ருக்களுக்குரிய) அன்னம் அஹம் நான், ஒளஷதம்—மருந்து அல்லது தான்யாதிகள், அஹம்—நான், மந்தர: மந்திரம், அஹம் ஏவ—நானே, ஆஜ்யம்—நெய் அஹம் —நான் அக்னி:—ஓமாக்கினி அஹம்—நான், ஹுதம்—ஓம ஸ்வரூபன்.

க்ருது (கிருது) யக்ஞம் இவைகள் யாகத்தின் வகைகள், க்ரது என்பது மிகவும் சிரமத்தோடு கூடியது. செய்து முடிக்க அதிக காலமும்

நீடிக்கும். ஸ்வதா (சுவதை) என்பது பித்ருக்களுக்கு எள், நீர் ரூபமாகவும் அன்னாதி ரூபமாகவும் கொடுக்கப்படும் சிராத்தாதிகளையும் குறிக்கும். ஏழாம் அத்தியாயத்தில் ரஸாதிகளை பகவானின் சொரூபமாகச் சொல்லியதைப்போலவே இங்கும் யக்ஞும் சுவதை முதலியவைகள் பகவானின் சொரூபமாக (காரணமாயும் ஆதரவாயும் இருப்பதுபற்றி)ச் சொல்லப்படுகின்றன.

ராகவேந்திரர்:– முதலிய தானே என்று பகவான் அருளிய தன் கருத்து யாதெனில், அவரே அவற்றிற்கு நியாமகனாகவும் (அவற்றின்) அவி முதலியவற்றைப் புஜிப்பவனாகவும் இருப்பதுபற்றி என்று கொள்க.

இந்தவுல குக்குநான் ஏலும் பிதாவாவன்
பந்தநிகழ் மாதா பயில்விதாதா-முந்தையுமாம்
பாட்டனறி தன்மை பவித்திர நல்லோங்காரம்
ஈட்டமுறும் வேதங்கள் யான்.

(இ–ள்) இந்த உலகுக்கு–இந்தப் பிரபஞ்சத்திற்கு நான்–ஏதும் பிதா–சக்திவாய்ந்த தந்தையும், பந்தநிகழ்–தொடர்பு உள்ள மாதா–தாயும், பயில்விதாதா–எப்பொழுதும் (ரக்ஷகன்) காப்பாளனும், ஆவன்–ஆகின்றேன், யான்–முந்தையுமாம் பாட்டன்–(எல்லா உயிர்களுக்கும்) முன்னதாகின்ற பிதாமகனும்,அறிதன்மை–அறிய வேண்டிய வஸ்துவும் பவித்திரம்–பரிசுத்தமானதும் நல்ஓங்காரம்–சிறந்த (ஓம் என்னும்) பிரவணமும், ஈட்டம் உறும் வேதங்கள்–(ருக், ஸாம, யஜுர்)என்னும் சேர்க்கையுடைய வேதங்களும் (ஆகின்றேன்.)

பிதாமஹஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:
வேத்யம் பவித்ர மோங்கார உத்ஸாம யஜுரேவச

(இ–ள்) அஸ்ய–இந்த, ஜகத:–உலகத்திற்கு, அஹம்–நான், பிதா–தகப்பனும் மாதா–தாயும், தாதா–ரக்ஷகனும் பிதாம:–பாட்டனும் (ஆவேன்,) பவித்ரம்–பரிசுத்தமானதும், வேத்யம்–அறியவேண்டும் பொருளும்(நானே) ஓங்கார:–ஓங்காரமாகிய பிரணவமும், ரிக் – இருக்குவேதமும், ஸாம–சாமவேதமும், யஜுரேவச–யஜுர் வேதமும், அஹம் ஏவ–நானே (ஆகின்றேன்)

பாட்டன் என்னும் பொருளுடைய 'பிதாமஹ' என்ற மூலத்தொடர் விசேஷமாக மரியாதை செய்து பூஜிக்கத் தகுந்த ஒருவரைக் குறிக்கும் இச்சுலோகத்தில் கடவுளின் தன்மையைக் குறிக்க வந்த சொற்கள் அல்லது விசேஷகுணங்களின் ஆழத்தையும் பெருமையையும் வேதாந்த

பாஷ்யத்தில் (பிரும்ம சூத்திர உரையில்) விரிவாகக் காட்டப்பட்டிருககும் தாது விளக்கத்தால் அறிந்து மகிழலாம்.

பகவான் பிதாவாயும் மாதாவாயும், வேத சொரூபமாயும் யக்ஞ சொரூபமாயும் இருக்கிறார் என்பதை அனுபவித்துப் பக்தர்கள் வெளியிட்ட பாடல்களிலும் காணலாம்.

1. மேலாத்தாய் தந்தையரும் அவரே இனி ஆவாரே

(நம்மாழ்வார்)

2.பண்டைநான் மறையும்வேள்வியும்கேள்விப்பதங்களின் பொருளும்
... அண்டமும் தானாய் நின்ற
எம்பெருமான்

(திருமங்கை மன்னன்)

3. வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகிய ஆயனாய மாயம் என்ன மாயமே.

(திருமொழிசைப் பிரான்)

கண்ணன் மேலும் சொல்கிறார்.

பற்றாய்ப் பரிப்பவனாய்ப் பாங்கிறையாய்ப் பார்ப்பவனாய்
மற்றாங் கிருப்பிடமாய் வன்சரணாய்-உற்றனாய்
தோற்றமுடி வுக்கிடமாய்ச் சூழ்நிதியாய் வீயாத
ஏற்றமுடை வித்தாவேன் யான்.

(இ-ள்) பற்றாய்-அடையத் தகுந்தவனாய், பரிப்பவனாய்-தாங்கி போஷிப்பவனாய், பாங்கு இறையாய்-(நியாமகனாய்) சிறப்பாக ஆள்பவனாய், பார்ப்பவனாய்-(நேரில் காணும்) சாட்சியாய், இருப்பிடமாய்-(எல்லாவற்றிற்கும்)இருப்பிடமாய், வன் சரணாய்-நன்கு சரணமாடையத் தகுந்தவனாய், உற்றனாய்-(பிரியம் செய்யும்), நண்பனாய், தோற்றம் முடிவுக்கு இடமாய்-உற்பத்திக்கும் அழிவுக்கும் (ஆதாரமாய்) ஸ்தானமாய், சூழ் நிதியாய்-மிக்க தனமாய், வீயாத ஏற்றம் உடைவித்து-அழியாத பெருமைவாய்ந்த வித்தையாயும், பெருமைவாய்ந்த விதையாயும், யான் ஆவேன்-நானே ஆகின்றேன்.

க[3]திர் ப[4]ர்தாப்ரபு[4]: சாக்ஷீ நிவாஸ: சரணம் ஸுஹ்ருத்
ப்ரப[4]வ: ப்ரளயஸ்[2]தானம் நி[4]தானம் பீ[3]ஜமவ்யயம்.

(இ-ள்) கதி:- அடையப்பட வேண்டியவனும், பர்(த்)தா:- போஷகனும், ப்ரபு:-(நியாமகனும்) ஆள்பவனும், ஸாக்ஷீ-சாட்சியும், நிவாஸ:- வாஸஸ்தானமும், சரணம்-சரணமடையத் தகுந்தவனும்,

ஸுஹ்ருத்-(இதபரனும்) பிரியம் செய்யும் தோழனும், ப்ரபவ: ப்ரளயஸ்தானம்-உற்பத்தி முடிவுக்கு ஸ்தானமும், நிதானம்-ஆதநிரமும் அவ்யயம் பீஜம்-நாச மற்ற விதையும், 'அஹமேவ-நானே'.

பிரளய காலத்தில் மேல் நடு கீழ் ஆகிய மூவுலகங்களும் உயிர்களும் பகவானிடத்தில் நிதிபோல் ஒன்று சேர்ந்த இருப்பதால், சூழ்நிதி' எனப்பட்டது.

சில தொடர்களுக்குச் சங்கரர் பின்வருமாறு உரை தந்துள்ளார்.

சாக்ஷீ(பார்ப்பவனாய்):- செய்தலையும் செய்யாதிருத்தலையும் பார்த்துக கொண்டிருப்பவனாய்

நிவாஸ: (இருப்பிடமாய்):- பிராணிகளுக்கு இருப்பிடமாய்

பீஜம் (வித்து):- சம்சாரமாகிய விருக்ஷத்திற்கு விதையும்.

'பந்தமும் பந்தம் அறுப்பதோர் மருந்தும் பான்மையும்
பல்லுயிர்க்கெல்லாம்
அந்தமும் வாழ்வும்-ஆய எம்பெருமான்

என்று திருமங்கை மன்னன் அருளிய பாடல் இக் கீதாச் சுலோகத்தையே வெளியிடுகிறது.

தாவமது செய்வேனான் பார்த்தா தடுத்து மழை
மேவவது தன்னை விடுவேனான்-சாவவிடாத்
தெள்ளமுது நானே செறுங்கூற் றமுநானே
உள்ளதில் தானதுநான் உற்று

(இ-ள்) பார்த்தர்-பார்த்தனே! நான் தாவம் அது செய்வேன்-நான் தாபத்தை உண்டாக்குகின்றேன். நான் மழை தடுத்து-நான் மழையைப் பெய்யாமல் நிறுத்துவதோடு அது தன்னை மேவவிடுவேன்-அம் மழையைப் பெய்யச் செய்கிறேன். சாவவிடா தெள் அமுது நானே-சாக்காமல் செய்கின்ற சிறந்த அமிர்தமும் நானே ஆகின்றேன். செறும் கூற்றமும் நானே-கொல்லும் யமனும் நானே ஆகின்றேன். உற்று உள்ளது இலது ஆனன் நான் காணப்படவதும் காணப்படாததுமாகப் பொருந்திய (சூட்சுமஸ்தூலப் பொருள்களும்) நானே ஆகின்றேன்.

தபாம்யஹம் அஹம் வர்ஷம் நிக்ருஷ்ணாம் யுத்ஸ்ருஜாமிச
அத்ருதஞ்சைவ ம்ருத்யுச்ச ஸதஸச்சாஹ மர்ஜுந யஹம்

(இ-ள்) அர்ஜுந-அர்ச்சுனா!, அஹம்-நான், தபாமி-தாபத்தை உண்டாக்குகிறேன், நிக்ருஹ்ணாமிச-மழைபெய்யாமலும் (வர்ஷிக்காமலும்) தடுக்கிறேன், உத்ஸ்ருஜாமி-மழை பெய்விக்கிறேன்

அம்ருதஞ்ச–ஜீவித்திருக்க ஏதுவும், ம்ருக்யுஞ்ச–நாச ஏதுவும், ஸத்–உள்ளதும் அஸச்ச–இல்லாததும் அஹம்–நானே.

'அஹம் (நான்)' என்ற சொல்லைப் பலமுறை கூறியது 'வெறும் வார்த்தையாகவோ உபசாரமாகவோ சொல்லவில்லை. பூரணமான அர்த்தத்தில் சொல்லுகிறேன்' என்பதைக் காட்டியது.

இத்தகைய பகவானின் மகிமைகளை பாகவதம் பாரதம் ராமாயணம் பாத்மம் முதலிய புராணங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுவே விஞ்ஞானம் எனப்படும். அத்தியாய ஆரம்பத்தில் சொல்லப் போவதாக அர்ஜுனனுக்கு வாக்களித்தபடியே கண்ணபிரான் இந்த நான்கு சுலோகங்களில் சுருக்கிக் கூறினார்.

100. இரு வித உபாஸகர்

வேதத்திலும் புராணங்களிலும் விரிவாகச் சொல்லப்பட்ட பகவானின் மகிமைகள் விக்ஞானம் என்ற பெயரால் சுருக்கமாக முந்திய நாலு சுலோகங்களில் சொல்லப்பட்டன, அதில் 'கிருது முதலிய நானே–' என்று கூறிய பகுதியில் 'யாகத்தில் கொடுக்கப்படும் அவிசு முதலியவற்றைப் புஜிக்கின்றவர் பகவான்' என்று பொருள் படுகிறதால்லவா? அதனால் வேதத்தில் கூறிய கர்மாக்களைக் காமிய பலன்களை விரும்பி யக்ஞம் செய்கின்றவர்கள் அக்கினியில் இடும் அவிசையும், காமிய பலனை விரும்பமால் ஞானிகளும், பக்தர்களும் அர்ப்பணம் செய்வதையும் பகவான் சமமாகவே ஏற்றுக் கொள்ளுகிறார் என்று பொருள்படும். அதன் காரணமாக நிஷ்காமியமாக அர்ப்பணம் செய்வோருக்கும், காமியமாக அர்ப்பணம் செய்வோருக்கும் கிடைக்கும்பலனின் வித்தியாசம் இராதென்றே தோன்றும். இவ்வாறு தோன்றும் சந்தேகத்தைப் போக்கும் பொருட்டு கண்ணன் இரு சாராரும் அடையும் பலன்களிலுள்ள ஏற்றத் தாழ்வை எடுத்துக் காட்டி அவர்களின் தன்மைகளையும் நுட்பமாக அடுத்து வரும் நான்கு சுலோகங்களில் விளக்குகிறார்.

இந்தவெனை வேதத் தியல்கின்றார் எச்சத்தால்
வந்ததிறைந்ஞுசித் தம்வினைபோய் வானிரப்பர்–அந்தவவர்
சென்றமரர் நாடணைந்து தேவர்தம் போகத்தை
நின்றமர்ந்து துய்ப்பார் நிகழ்ந்து

(இ–ள்) இந்த என்னை–இவ்வித அற்புத மகிமைகளோடு இருக்கிற என்னை வேதத்து இயல்கின்றார்–(வேதாந்த நிஷ்டையில்லாமல்) ருக் யஜுஸ் ஸாமம் என்னும்மூன்று வேத கர்மங்களைச் செய்கின்றவர் எச்சத்தால் வந்து இறைஞ்சி–யக்ஞங்களைக் கொண்டு ஆராதித்து (சோமபானம் பண்ணி), தம்வினை போய்–பாபத்தினின்று நீங்கி, வான் இரப்பர்–சுவர்க்க இன்பத்தைப் பிரார்த்திப்பர்: அந்த அவர்–(பலனை விரும்பிய) அத்ததைய கரும நிஷ்டையில் இருப்பவர், சென்று அமரர் நாடு அணைந்து–உடல் போன பின் சுவர்க்க லோகத்தை அடைந்து தேவர்தம் போகத்தை–(சுவர்க்கத்தில்) தேவர்களுக்கு உரிய தான இன்பத்தை, நின்று அமர்ந்து நிகழ்ந்து துய்ப்பார்–நன்றாக நெடுங்காலம் அனுபவிப்பார்கள்.

த்3ரைவித்3யாமாம் ஸோமா2பா:பூத பாபா ய3ஜ்ஞைரிஷ்ட்3வா
ஸ்வர்கதிம் ப்3ரார்தயந்3தே தேபு2ண்யமா4ஸாத்3ய ஸுரேந்த்ர லோகம்
அச்நந்தீ திவ்யாந் திவி தேவ போகாந்

(இ–ள்) த்ரைவித்யா:– இருக்கு யஜுஸ், சாமமென்கிற மூன்று வேதங்களை அறிந்தவர்கள், ஸோமா:– சோம பானம் செய்து, புத பாபா:–பாவமற்றவர்களாய் யக்ஞை:–யாகங்களாலே, மாம்–என்னை இஷ்ட்வா–ஆராதித்து, ஸ்வர்கதிம்–சுவர்க்க லோகத்தை, ப்ராத்யந்தே–வேண்டுகின்றார்கள், தே–அவர்கள், புண்யம்–புண்ணிய பலனாகிய சுரேந்த்ர லோகம்–தேவேந்திர லோகத்தை, ஆஸாத்ய–அடைந்து, திவி–சுவர்க்கத்தில், திவ்யாந்–உத்தமமான தேவ போகாந்–தேவதைகளுடைய இன்பங்களை, அச்நந்தி–அனுபவிக்கிறார்கள்.

'த்ரைவித்யா:' (வேதத்து இயல்கின்றார்) என்ற தொடர் ரிக், யஜுஸ், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களை அறிந்தவர்களைக் குறிக்கும். அதாவது 'இன்ன கர்மாவை, இன்ன தேவதையைக் குறித்துச் செய்தால், இன்ன பலன் கிடைக்கும்' என்பதை வேதத்தால அறிந்துகொண்ட காமிய கர்மிகள் என்பது பொருள். வேத விதிப்படி அவர்கள் யாகம் செய்து யாகார்ப்பண சேஷ (மீத) மாகிய ஸோமத்தைப் பானம் செய்து பாவத்தைப் போக்கி கொள்கிறார்கள். தாம் செய்யும் நற்கருமத்திற்குப் பலனாக சுவர்க்கப் பேற்றை விரும்புகிறார்கள். விரும்பியவாறே இந்திரலோகம் சென்று தேவர்களுக்குரிய வானந்தத்தைப் பெறுகின்றனர்.

பொன்னகரில் வாழ்வெய்திப் புண்ணியத்தின் குறையை
மன்னின வரிவ்வுலகில் பாடழிந்தே-பின்னடைவர்
காக்குமறைத் தன்மைக் கதியடைந்தார் காமத்தாற்
போக்குவரத் தேபெறுவர் பூண்டு.

(இ-ள்) காக்கு மறை தன்மை கதி அடைந்தார்-காப்பாற்றப்படும் வைதிக தர்ம மார்க்கத்தை மேற் கொண்ட காமிய கர்மிகள், பொன் நகரில் வாழ்வு எய்தி-சுவர்க்க லோகத்தில் இன்பத்தைப் பெற்று, புண்ணியத்தின் குறையை மன்னினர்-(அவர்களில்) புண்ணியம் குறைவுற்றவர்கள் பாடு அழிந்து பின்-(சுவர்க்க) இடம் இல்லாது போன பின்பு, இ உலகில் அடைவர்-இந்த மனித உலகத்தை அடைவார்கள்; காமத்தால்-(போகத்தில் கொண்ட) இச்சை காரணமாக, போக்குவரத்து பூண்டு பெறுவர்-(பிறப்பு இறப்பை) சுவர்க்கத்திற்கும் மனித உலகிற்கும் போய் வருவதையே மிக்குப் பெறுவார்கள்.

4 3
தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விசாலம் க்ஷீணே புண்யே
மார்த்யய லோகம் விசந்தி
4 3 3 4
ஏவம் த்ரயீ தர்ம மநு ப்ரபந் நா கதா கதம் காமகாமா லபந்தே

(இ-ள்) தே-அவர்கள் (சுவர்க்கத்தை அடைந்தவர்கள்), விசாலம்-விஸ்தாதாரமான, தம் ஸ்வர்க் லோகம்-அந்தச் சுவர்க்கலோகத்தை, (அடைந்து), புக்த்வா-அநுபவித்து, புண்யே-புண்ணியமானது க்ஷீணே(ஸதி-நசித்தப்பின். மர்த்ய லோகம்-மனித உலகத்தை விசந்தி-அடைகிறார்கள், ஏவம்-இந்தப்படி, த்ரயீதர்மம்-வேதோக்தமான கருமத்தை அநுப்ரபந்நா:-அனுசரித்தவர்களான காம காமா:-(சுவர்க்காதி) காமங்களை விரும்பிய அவர்கள், கதா கதம்-போக்குவரத்தை (பிறப்பு இறப்பை), லபந்தே-அடைகின்றார்கள்.

சுவர்க்கத்தில் இருப்பவர்கள் புண்ணிய பலன் சிறிது எஞ்சியிருக்கும் போதே, மனித உலகிற்கு வருகிறார்கள், அப்புண்ணிய வினைகளில் தூண்டப்பெற்று மறுபடி சுவர்க்கலோகத்தை அடைகிறார்கள்; அங்கு அனுபவித்துப் புண்ணிய பலன் குறைந்த உடன் மனித உலகை மறுபடி அடைகின்றனர். ஆனால் திரும்பி வராத மோட்சத்தைப் பெறுவதில்லை.

பகவானையே எல்லாமாகக் கொண்ட பக்தர்கள் பெறும் பலன் அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது.

வேறின்றி என்னை எவர்மெய்நினைந்து சேவிப்பர்
பேறென்றி என்றும் பிரியாதே- தேறுமவர்
தம்பேறாம் யோக மிவைபிரியாச் சேமநான்
வன்பேறாச் செய்வன் மகிழ்ந்து.

(இ-ள்) வேறு இன்றி-(என்னைத் தவிர) வேறான பிரயோசநம் இல்லாதவர்களாய், என்னை மெய் நினைந்து-என்னையே நன்கு தியானிக்கின்றவர்களாய், எவர் பேறு ஒன்றி என்றும் பிரியாது சேவிப்பர்-யாவர் பேறாகிய என்னிடமிருந்து எப்பொழுதும் நீங்காமல் (நன்கு) உபாஸிக்கிறார்களோ, தேறும் அவர்-(என்னைத்) தெளிந்து கொண்ட அவர்களது தம் பேறாம்-உரிய நன்மையான, யோகம் சேமம் இவை-யோகம் க்ஷேமம் ஆகிய இவைகளை, பிரியா-எப்பொழுதும், நான்-நானே மகிழ்ந்து-உவகையுடன், வன் பேறா செய்வன்-(எனக்குக் கிடைத்த) சிறந்த பாக்கியமாக கருதி ஏற்றுச் செய்வேன்.

அநந்யாச் சிந்தயந்தோம் யேஜநா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தாநாம் யோக க்ஷேமம் வஹாம்யஹம்

(இ-ள்) அநந்யா-என்னை நினைப்பதைப் பார்க்கிலும் வேறு பயன் இல்லாதவர்களாய் மாம்-என்னையே, சிந்தயந்த:-தியானிப்பவர்களாய் யேஜநா:-எந்த மனிதர்கள் பர்யுபாஸதே-நன்கு உபாஸிக்கின்றார்களோ, நித்யாபியுத்தா நாம்-எப்பொழுதும் (என்னை விட்டு நீங்காத) நிஷ்டையில் இருக்கிற, தேஷாம்-அவர்களுடைய யோக க்ஷேமம்-யோக க்ஷேமங்களை, அஹம்-நான் வஹாமி-வகிக்கிறேன்.

அநந்யா: சிந்தய:' (வேறின்றி (நினைந்து) என்பதற்கு 'பகவானைத் தவிர வேறொரு பயனையும் நாடாமல் நினைந்து' என்றும், அந்நிய தேவதைகளை உபாசியாமல் என்னையே (பகவானையே) 'சிந்தித்து' என்றும், இரு வகையாகப் பொருள் கொள்ளப்படும்.

பாடலில் வ்ந்த 'மெய்' என்ற சொல்லை 'சேவித்து என்பதனோடும் கூட்டி 'மெய்ச்சேவித்து' என வாக்கிக் கொண்டால் பர்யுபாஸதே' என்ற மூலத்தின் பொருள் கிடைக்கும். பக்தர்களுக்கு அடையவேண்டிய பொருளும் அதை அடைய உபாயமும் பகவானே யாதாலால் அவர்கள் பகவானிடம் எதையும் வேண்டாமல் மனம் வாக்குக்காயம் ஆகிய முக்கரணங்களாலும் பகவானையே உபாசிக்கின்றனர். பகவானைத் தவிர வேறுபலனில் நோக்கமுடைய த்ரை வித்யர்கள் பகவானை உபாசித்த போதிலும், சிறந்த

பக்தர்களுடைய உபாஸனைக்கும் அதற்கும் தன்மையில் வேறுபாடுள்ளது. ஆகவே இரண்டையும் பகவான் ஏற்றுக் கொண்டபோதிலும், கொடுக்கப்படும் பலன்கள் வெவ்வேறாயிருப்பதற்கு உபாஸனையின் வேற்றுமையையே காரணமாகச் கொள்ளவேண்டும்.

'யோக க்ஷேமம்' என்பதற்கு உரையாசிரியர்கள் பல்வேறாகப் பொருள் கொண்டுள்ளனர். ஸ்ரீதரர்:- செல்வம் முதலியவற்றை அடைவது யோகம் அடைந்தவற்றை ரக்ஷிப்பது க்ஷேமம்.

சங்கரர்:—அடையாததை அடைவது யோகம். அடைந்ததை ரக்ஷிப்பத க்ஷேமம்.

ராமாநுஜர்:-'என்னுடன் (பகவானுடன்) சேர்க்கையாகிற யோகத்தையும், மீண்டும் திரும்பாமையாகிற க்ஷேமத்தையும்...................!

அடுத்தபடியாக அந்நிய தேவதைகளை உபாசிப்போர் அடையும் பலனின் வேறுபாடு காரணத்துடன் விளக்கப்படுகிறது.

மற்றான தெய்வத்தை மன்னி விருப்புற்றுப்
பற்றாம் எனஇறைஞ்சும் பண்பினரும்-முற்றான
என்னையே ஏத்திறைஞ்சும் அல்லாவே தாந்தவிதி
தன்னையே ஏய்ந்துணர்ந்தார் தாம்.

(இ—ள்) மற்றான தெய்வத்தை—வேறு தேவதைகளை, மன்னி—(மனத்தில்) நிறுத்தி, விருப்பு உற்று—பிரியத்தோடு, பற்று ஆம்என—(அதையே) பக்திஆகும் என்று கருதி, இறைஞ்சும் பண்பினரும்—உபாஸிக்கும் தன்மை வாய்ந்தவர்களும் முற்றான என்னையே பூரணனாயிருக்கிற என்னையே ஏத்தி இறைஞ்சும்—(உண்மையில்) துதி செய்து வணங்குகிறார்கள்; (அவர்கள்) அல்லா வேதாந்தவிதி தன்னை உணர்ந்ததார்—(ஆனால் என்னை) வேதாந்தமல்லாத (தவறான) மார்க்கத்தால் என்னை ஆராதிக்கிறவராவார்.

யேப்யந்ய தேவதா பக்தா யஜந்தே ரத்யாந்விதா:
தேபிமாம் ஏவ கௌந்தேய யஜந்தீ அவிதி பூர்வகம்

(இ—ள்) யே பி—பின்னும் எவர்கள், அந்ய தேவதா பக்தா:—பிற தெய்வங்களுக்கப் பக்தர்களாய்,ச்ரத்தயா அந்விதா:—சிரத்யோடு கூடினவர்களாய், யஜந்தே—ஆராதிக்கிறார்களோ, தேபி—அவர்களும், கௌந்தேய—குந்தி புத்திரா!, அவிதி பூர்வகம்—(கிரமம் தவறி) அஞ்ஞான பூர்வகமாய், மாம் ஏவ—(எங்கும் நிறைந்து சர்வ சக்தனாயிருக்கிற) என்னையே யஜந்தி—ஆராதிக்கிறார்கள்.

யக்ஞங்களில் இந்திராதி தேவர்களின் பெயரையும் மந்திரத்தையும் சொல்லி நைவேத்தியங்கள் அளிக்கப்பட்ட போதிலும், அவற்றைப் பெற்றுக் கொள்பவர் இந்திரன் அக்கினி முதலிய சப்தங்களால் முடிவாகக் குறிக்கப்படுகிற பகவானேயாவர். அவரே அனுக்கிரகமும் செய்கிறார். அதைத்தெரிந்து கொள்ளாமல் பிற தேவதைகளே அவற்றைப் பெற்று அருள் செய்வதாக எண்ணி அவர்களிடம் பக்திக்கொண்டு அவர்களை உபாஸிப்பது வேதாந்த விதிக்கு மாறுபட்டதாகும். பகவத் பக்தர்கள் பெறும் பலனுக்கும் த்ரைவித்யர்கள் பெறும் பலனுக்கும் வித்தியாசம் இருப்பதற்கு, இதுவே காரணம் என்று இதனால் தெரிவிக்கப்பட்டது.

சங்கரர்:– அந்நிய தேவதைகளை ஆராதிக்கின்றவர்களும் என்னையே ஆராதிக்கின்றவர்களாயினும் அக்ஞான மார்க்கமாய் ஆராதிக்கின்றார்கள்.

101. பத்துடை அடியார்க்குப் பகவன் எளியன்

எந்தத் தேவதையை உபாஸித்தாலும், உபாஸிக்கின்ற அந்தத் தேவதையைக் குறித்தே எதைக் கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்பவர் ஸர்வ வியாபியாய் எல்லா வற்றிற்கும், அந்த்ராத்மாவாயிருக்கிற பகவான்தான் 'ஆனாலும் எவ்வளவு பக்தியோடும் விசுவாசத்தோடும் சிலர் பிற தெய்வங்களை ஆராதித்த போதிலும் அது கிரமம் தவறிய அக்ஞான மார்க்கமாகும்' என்று முன்னே சொல்லப்பட்டது.

அதைக் கேட்ட அர்ஜுனனக்கு 'பிற தேவதைகளை உபாஸிப்போர் அளிக்கும் நிவேதனத்தையும் ஏற்றுக் கொள்பவர் பகவானாயிருக்கும்போது, அவர்களில் ஆராதனை ஏன் (சாஸ்திரக்) கிரமம் தவறியதாக எண்ணப் படுகிறது?' என்ற சந்தேகம் உண்டாயிற்று. அதையறிந்த கண்ணன் சந்தேகத்தைப் போக்குவதற்காகப் பின் வருமாறு சொல்கிறார்.

ஆங்கனைத்து வேள்விக்கும் ஆராத்தி யானனே
பாங்கதனின் நானே பலங்கொடுப்பேன்-ஈங்கென்னை
இவ்வா றறியார் இதனாலத் தத்துவத்தின்
வவ்வா நழுவுவர்சார் வற்று,

(இ-ள்) அனைத்து வேள்விக்கும்-(எந்த தேவதையைக் குறித்தும் செய்யப்படுகின்ற) எல்லா யக்ஞங்களாலும், ஆராத்தியன் நானே-(அவிஸ் முதலியவற்றை ஏற்றுக் கொள்வதால் உண்மையில்) ஆராதிக்கப்படுகிறவன் நானே, அதனின் நானே பலங்கொடுப்பேன்-அதனால் நான் தான் உரிய பலனை (தேவதைகள் மூலமாக) வழங்குகின்றேன், என்னை அ தத்துவத்தின் இவ்வாறு அறியார்-என்னை அந்த உண்மைப் பிரகாரம் இந்த விதம் தெரிந்துகொள்ளாதவர், இதனால்-இந்த அக்ஞானங்காரணமாக, வவ்வா-(முக்திப் பலனை)ப் பெறாமல், சார்வு அற்று-கதி இல்லாமல்,நழுவுவர்-நழுவ விடுவார்கள்.

அ ஹம்ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா[4] ச ப்ரபு[4]ரேவச
ந து[4] மாமபிஜாநந்தி தத் வநாதத் ச்யவந்திதே

(இ-ள்) ஸர்வ யக்ஞாநாம் – எல்லா யக்ஞங்களிலும், போக்தாச – (அவிஸ் முதலியவற்றை) புஜிக்கின்றவனும், ப்ரபு: ச – பலம் கொடுக்கின்றவனும், அஹம் ஏவ ஹி – நானே அல்லவா? தேது – (காமிய கரும நிஷ்டர்களாகிய பரதேவதா உபாஸகர்களாகிய) அவர்களோ, மரம் – என்னை, தத்வேந – உள்ளபடியே நாபி ஜாநந்தி – அறிகிறதில்லை, அத: – ஆகையால், ச்யவந்தி – (பேரின்ப பலனைப் பெறாது) தப்பிப் போகிறார்கள்.

'அஹம் ஏவ(நானே)' என்ற தொடருக்கு தொனியர்த்தத்தால் யாகத்தைச் செய்விக்கிறவனும் பகவானே நிவேதனத்துக்குரியவனும் பகவானே' என்று கொள்ளலாம் பிரபுவாயும் போக்தாவாயும் (ஆராத்தியன்) பகவானிருக்க அவருக்கும் பரதேவதைகளுக்கும் உள்ள சம்பந்தம் தாரதம்மியம் இவற்றைத் தெரிந்து கொள்ளாமல் பரதேவதை களையே ஆராத்யர்களாக நினைத்துக் கருமம் செய்வதே அறியாமை யாகும். "கர்மங்களெல்லாம் இந்திராதி தேவர்களுக்கு அந்தராத் மாவான பரம புருஷனுக்கு ஆராதன ரூபங்கள்; ஆராதிக்கத்தக்கவனும் அவனே" என்று கருமம் செய்வது ஞானம். அறியாமையோடு கருமம் செய்கின்றவர்களின் நிவேதனத்தையும் பகவான் ஏற்றுக்கொண்ட போதிலும் அவ்வாறு செய்யும் நிஷ்காமிய கர்மிகள் அறியாமை காரணமாக அற்பமான பயன்களை மட்டுமே பெற்று, பேரின்பமாகிய முக்தியை நழுவவிட்டு, திரும்பத் திருபப் பிறப்பு இறப்பிற்கே ஆளாகின்றனர்.

அடுத்தபடியாக பரதேவதைகளைக் குறித்து நிஷ்காமிய கருமம் செய்வோர் எவ்வெவற்றை அடைவர்' என்பது தொகுத்துச் சொல்லப்படுகிறது.

தேவர் தமையணைந்தார் சென்றடைவ ராங்கவரை யாவர் பிதுக்கள்பால் ஆங்கணைந்தோர் - மேவுவரப் பூதத்தை ஆங்கணைந்தோர் பொன்றாது சேர்வரெனைப் பாதத் தணைந்தாரென் பால்

(இ-ள்) தேவர் தமை அணைந்தார் -(இந்திராதி) தேவர்களைக் குறித்துச் செய்கிறோம்என்ற ஸங்கல்பத்தோடு யக்ஞம் முதலிய கருமங்களால் தேவர்களை ஆராதித்தவர், ஆங்கு அவரை சென்று அடைவர்-(அவர்கட்குரிய) உலகில் அவர்களைப் போய்ச் சேர்கிறார்கள்:'யாவர் பிதுக்கள் பால் அணைந்தா'-எவர்கள் பிதுருக்களைக் கோரி ஆராதிக்கின்றார்களோ அவர்கள், ஆங்கு(அடைவர்)-பித்ருக்களைப் போய் அடைகின்றார்கள்; அ பூதத்தை அணைந்தார்-யட்ச;ா இராட்சதர் பிசாசு முதலியவற்றை ஆராதிக்கின்றவர்கள், ஆங்கு மேவுவர்-அவ்வுலகில் சென்று (அப்பூதாதிகளையே) அடைவார்கள் என்பால் அணைந்தார்-('தேவ பித்ரு பூதங்களுக்கு அந்தராத்மாவான பரமாத்மாவை ஆராதிக்கக் கடவோம்' என்ற சங்கல்பத்தோடு கருமம் செய்து) என்னை ஆராதித்தவர்கள், பொன்றாது சேர்வர் எனை பாதத்து-அழிவில்லாதவர்களாய் என் திருவடிகளை அடைகிறார்கள்.

யாந்தி தேவ வ்ரதா தேவாந் பித்ருந் யாந்தி பித்ருவ்ரதா: பூதாநி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜி நோபிமாம்

(இ-ள்) தேவ வ்ரதா:-தேவதைகளைக் குறித்து விரதம் பூண்டவர்கள், தேவாந்-தேவர்களை, யாந்தி-அடைகின்றார்கள்; பித்ரு வ்ரதா:-பித்ருக்களைக் குறித்து விரதம் பூண்டவர்கள், பித்ருந் யாந்தி-பித்ரு தேவதைகளை அடைகின்றார்கள், பூதேஜ்யா-பூதங்களைக் குறித்து யக்ஞம் செய்வோர், பூதாநி-பூதங்களை, யாந்தி-அடைகின்றார்கள், அபிச-பின்னும் மத்யாஜிந:-என்னைக் குறித்து ஆராதிப்பவர்கள், மாம்-என்னை, யாந்தி-அடைகின்றார்கள்.

பலன் குறைவாகவும் எல்லையுடையதாகவும் இருந்தபோதிலும் பரதேவதைகளை ஆராதித்துப் பலனை அடைவது பலருக்குச் சாதாரணமாயும் எளிதாயுமிருக்கிறது. பகவானின் பெருமையும்

ஸ்வரூபமும் எல்லையற்று இருப்பதால் சாமானியர் அவரை ஆராதிப்பது என்பது அசாத்தியமாக விருக்குமே' என்ற நினைப்பு அர்ஜுனனுக்கு உண்டாயிற்று. அதையறிந்து கொண்டு கண்ணன் அவ்வெண்ணத்தை மறுத்து 'எல்லாரிலும் பகவானே ஆராதிப்பதற்கு மிகச் சுலபன்' என்பதை அடுத்தபடியாகத் தெரிவிக்கிறார்.

பத்திரமும் பூவும் பழமும் புனலுமெனக்
கொத்தியலும் பத்தி யுடனுதவிச்-சுத்திய
தூமனத்தான் தந்ததனைத் துய்ப்பனவ னப்பத்தி
யாமனத்த தென்றுநான் ஆர்ந்து

(இ-ள்) தூமனத்தான்-பரிசுத்த மனமுடையவனாய், ஒத்து இயலும் பத்தி உடன்-ஒரே மாதிரியான சிறந்த பக்தியோடுகூட, உதவி சுத்திய-கொடுக்கப்பட்ட பரிசுத்தம் பொருந்திய, பத்திரமும் பூவும் பழமும் புனலும்-துளசி முதலிய இலைகளோ பூவோ பழமோ நீரோ எதுவும், எனக்கு தந்ததனை-எனக்கென்றே அர்ப்பணம் செய்யப்பட்ட அவற்றை, நான்-, அவன் அ பத்தியாம் மனத்தான் என்று-(கொடுத்த) அவன் நேரான பக்தி நிறைந்த மனமுடையவன் என்று, ஆர்ந்து துய்ப்பன் (பிரியத்தோடு) சுவீகரிக்கிறேன் (ஏற்றுக்கொள்ளுகிறேன்)

பத்ரம் புஷ்பம் ப[3]லம் தோயம்யோமே ப[4]த்த்யா ப்ரயச்சதி
த[3] தஹம் ப[4]க்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மாநா:

(இ-ள்) ய;-எவன், பக்த்யா-பக்தியோடு பத்ரம்-துளசி முதலிய இலையை, புஷ்பம்-பூவை, பலம்-பழத்தை, தோயம்-ஜலத்தை மே-எனக்கு, ப்ரயச்சதி-கொடுக்கிறானோ ப்ரயதாத்மாந: (தஸ்ய)-சுத்தமாயிருக்கிற மனதுள்ள அவனுடைய, பக்த்யுபஹ்ருதம்-பக்தியினால் கொடுக்கப்பட்ட, தத்-(பத்திர புஷ்பாதிகளை) அதை, அஹம்-நான், அச்நாமி-சுவீகரிக்கிறேன்.

இச் சுலோகத்திற்குச் சங்கரர் கூறிய உரை சிந்தித்துப் போற்றற்குரியது. சங்கரர்:-அதிகாரிகளான மகாத்மாக்களுக்குப் பிரம்மஞானம் சுலபம் அதன் பலமாகிய அநாவிருத்தி இலக்கணம், அனந்தம், அகண்டம், ஆனந்தம், வேறுபாடு அற்ற மோட்சம் என்று சொல்லப்பட்டனவும் அதிசுலபமே. ஆயினும் அவ்விதம் பிரக்ஞர்களாகவும் அதிகாரிகளாகவும் அல்லாதவர்க்கு கதியாதென்பது இதனால் சொல்லப்படுகிறது. யோகம் அடைய முயலும் சாது ஜனமான பக்தனுக்கு நான் அனாயாசமாக அடையைத் தகுந்தவன் என்று

தொடங்குகிறார். பத்திரம் புஷ்பம் பலம் ஜலம் என்பனவற்றை என்னை உத்தேசித்துச் சாளக்கிராமத்தில் எந்த முமுக்ஷு (முக்தியை விரும்புபவன்) பக்தியோடும் சிரத்தையோடும் அர்ப்பணம் செய்கின்றானோ அந்த சுத்த விருத்தியையுடையவனது சிறந்த பக்தியாலே சமர்ப்பிக்கப்பட்ட வஸ்துவைப் பரமேசுவரனாகிய நான் செவ்வையாய் அங்கீகரிக்கிறேன்; அப் பொருளால் சந்துஷ்டனாகிறேன். ஈசுவரார்ச்சனை செய்யாத பிறப்பு வீண் என்பது சுருதி (வேத) சித்தம். ஈசுவர ஆராதனம் ஷட்(ஆறு) கருமங்களில் ஒன்றாகலான். அவ்வாராதனம் முமுக்ஷுவால் அவசியம் செய்யத் தகுந்ததென்று இதனால் சொல்லப்படுகிறது. 'அப்யாகத: சுவயம் விஷ்ணு:' என்ற பிரசித்தமான ஸ்மிருதி வாக்கியத்தால் காலத்தில் வந்தடைந்த என் சொரூபமான அதிதிக்கு (தானமே கிரகஸ்தனுக்கு உரித்தானதாதலால்) பத்திரம் போஜனம் பழம் புஷ்பம் அல்லது ஜலம் ஆகியவற்றில் தான் எதைக் கிரகிக்கிறானோ அதைப் பக்தியோடும் சிரத்தையோடும் அர்ப்பணம் செய்தால் பரமேசுவரனாகிய நான் அந்த அதிதி மூலமாகப் புஜிக்கிறேன்' என்றும் கொள்க.

பக்தர்க்குப் பகவான் மிக எளியவன்; அடைவதற்குச் சுலபன் என்பதை நான்கு பக்தர்கள் சரித்திரத்தால் உணரலாம்.

1. அக்ஷய பாத்திரத்திலிருந்த கீரை இலையைக் கொடுத்து (பத்ரம்)க் கண்ணன் அருள் பெற்றவள் திரௌபதி (பாரதம்)
2. புஷ்பத்தால் அருள் பெற்றவன் கஜேந்திரன் (பாகவதம்)
3. பழத்தால் அருள் பெற்றவள் சபரி (ராமாயணம்)
4. ஜலத்தை அதிதிக்கு அளித்து பகவான் அருள் பெற்றவர் ரத்தீதேவர் (பாகவதம்)

102. பகவான் எல்லார்க்கும் சமம்

ஆசார்ய பரம்பரையில் ஒருவரான ஸ்ரீ பட்டரிடம் ஒருவர் சென்று 'சுவாமீ!, இலையையோ, பூவையோ பழத்தையோ நீரையோ எதையாயினும் எனக்குப் பக்தன் அன்போடு அர்ப்பணம் செய்யட்டும், அதைப் பிரியத்தோடு ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கண்ணன் கீதையில் சொல்லியருக்கிறிராரே. பூஜை செய்யும்போது முள்ளுடன் கூடிய பூவையோ இலையையோ பகவானுக்குச் சமர்ப்பிக்கலாமா? என்று கேட்டாராம். 'சமர்பிக்கலாமா? என்ற சந்தேகத்துக்கு இடமேது?

தாராளமாக முள்ளுள்ள பழத்தையும் இலையையும் பூவையையும் வைத்துப் பூஜிக்கலாமே என்று பட்டர் பதில் சொன்னபோது கேள்வி கேட்டவன்தேர்ந்த சாஸ்திரியாகையால் பட்டரை மடக்கி விட்டதாக இறுமாப்படைந்து அவற்றை உபயோகிக்கக் கூடாது என்று சாஸ்திரம் விலக்கியிருக்கிறதே என்று பல மேற்கோள்களை (பிரமாணவாக்கியங்களை), எடுத்துக்காட்டினார். அப்பொழுது பட்டர் சிரித்துக் கொண்டே 'அவற்றைச் செடியிலிருந்து எடுக்கும்போதும், பகவானுக்குச் சமர்ப்பிக்கும்போதும் பக்தன் கையில் குத்துமே என்று விலக்கியதே தவிர பகவான் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பதால் அல்ல. அன்புடன் அர்ப்பணம் செய்தால் முள் உள்ளவற்றையும் அவர் அங்கீகரிக்கவே செய்கிறார்' என்று சமாதானம் சொன்னாராம். அதைக் கேட்ட சாஸ்திரி ஆனந்தமும் அதிசயமும் அடைந்தார் என்று ஒரு வரலாறு வைணவ குருபரம்பரையில் வழங்கி வருகிறது.

கண்ணபிரான் தான் (பகவான்) அவ்விதம் சர்வ சுலபனாய், பக்தர்க்கு மிக எளியனாய் இருப்பதை மேலும் ஒரு சுலோகம் சொல்லி முடிவு செய்கிறார்.

செய்யுமதும் உண்பதுவும் செந்தீயில் ஓமத்தால்
பெய்யும் அதும்தானமெனப் பேசுமதும்-மெய்யுணர்வால்
உற்ற தவமுமவை என்பால் உடன்இருத்தி
மற்றதனில் தொத்தைநீ மாற்று

(இ-ள்) செய்யும் அதும்-செய்யக் கூடிய காரியம் எதையும் உண்பதுவும்-(நீ) சாப்பிடுகின்ற எந்தப் பொருளையும், செந் தீயில் ஓமத்தால் பெய்யும் அதும்-செந்நிறமான அக்னியில் ஓமம் செய்து இடுகின்ற எந்தப் பொருளையும், தானம் என பேசும் அதும்-தானம் என்று சொலலி நீ செய்கன்ற எதையும், மெய் உணர்வால் உற்ற தவமும்-நல் அறிவோடு நீ செய்கின்ற எந்தத் தவத்தையும், அவை-(ஆகிய) எல்லாவற்றையும், என்பால் உடன் இருத்தி-என்னிடத்தில் அப்பொழுதைக்கப்பொழுதே சமர்ப்பித்துவிடடு; அதனில் தொத்தை நீ மாற்று-அவற்றில் பற்றை நீ விட்டுவிடு.

யத்கரோஷி யதச்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸியத்
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம்

(இ-ள்) கௌந்தேய- குந்தி புத்திரனே!, யத்-எதை, கரோஷி-செய்கிறாயோ, யத்-எதை, அச் நாஸி-புஜிக்கிறாயோ, யத்-எதை

ஜுஹோஷி—ஹோமம் செய்கிறாயோ, யத்—எதை, ததாஸி—தானம் செய்கிறாயோ, யத் தபஸ்யஸி—எதைத் தவம் செய்கிறாயோ, தத்—அதை மதர்ப்பணம்—எனக்கு அர்ப்பணமாக, குருஷ்வ—செய்வாயாக.

'என்பால் உடன் இருத்தி' என்ற தொடரில் வந்த 'உடன்' என்பதை மூன்றாம் வேற்றுமை உருவாக எடுத்தும் சிறந்த பொருள் செய்து கொள்ளலாம். யாகம் தானம் முதலியவற்றுள் ஆராதிக்கப்படும். தேவர்கள் ஆராதனத்தைச் செய்து அதன் பலனைப் புசிக்கும் கர்த்தா ஆகிய அனைவரும் பகவானின் அதீனத்தில் இருப்பதால், யாவருக்கும் மேலான பதியாகிய பகவானிடத்தில் கர்மம் செய்வோன் தன்னையும் ஆராதிக்கும் தேவர்களையும் சமர்ப்பித்துவிடவேண்டும் என்று விரிவாகப் பொருள் கொள்ளலாம்.

இச் சுலோகத்திற்கு ஸ்ரீதரர்:— 'எவனுக்கு எது கிடைக்கின்றதோ எவன் எதைச் செய்கின்றானோ அவற்றை எல்லாம் பகவானுக்கு அர்ப்பணம் செய்யலாம் என்பது கருத்து. ஆகையால் மேலேகூறியவாறு துளசி முதலியவற்றைத் தேடிச் சம்பாதிக்க வேண்டிய பிரயாசங்கூட அவசியமில்லை என்பதாயிற்று.

ராமாநுஜர்:— 'லௌகீக வைதீகமான எல்லா விஷயங்களிலும் செய்யப்படும் காரியங்கள் எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பது கருத்து'.

பகவதர்ப்பணம் செய்த கர்மா பாவத்தை விளைவிக்கத் தக்கதாயிருந்தாலும் புண்ணியத்தைத் தரத்தக்கதாயிருந்தாலும் கர்த்தாவைப் பீடியாது என்பது இதனால் விளங்கியது. 'ஆனால் ஒருவன் உலகமே வெறுக்கும் பாவ கர்மாவைப் பகவதர்ப்பணம் பண்ணிக் கொண்டே விடாமல் செய்யலாமா?' என்று சிலர் கேட்கலாம். அக்கேள்விக்குத் தக்க பதிலை அடியில் வரும் சிறு கதையிலிருந்துதான் தெரிந்து கொள்ளவேண்டும்.

பசுவைக் கொன்று ஒரு அந்தணன், கிருஷ்ணார்ப்பணம்' எனக்குப் பாவமில்லை என்றான். அவன் பலருக்கு அன்னதானம் செய்யும்போது பகவான் ஒரு குஷ்டரோகி வடிவம் எடுத்துக் கொண்டு ஒரு இலைக்கு எதிரே அமர்ந்தார். அந்தணன் மிகக் கோபத்தோடு அவரை 'எழுந்திரும்' என்று அதட்டினான், பகவான் அந்தணனை 'நீ யார்?' என்று கேட்ட போது அவன் 'நான் தான் அன்ன தாதா' என்று

உரத்துப் பதில் சொன்னான் அப்பொழுது பகவான் 'கோஹத்தி (பகவதை) செய்த தாதாகவும் நீ தான்: ஈச்வரனல்ல' என்று சொல்லி மறைந்துவிட்டார்.

இதனால் தெரிந்தே ஒருவரால் முரண்பாடில்லாமல் பாவச் செயலை எப்பொழுதும் பகவர்ப்பணமாகச் செய்யமுடியாதென்பது வெளியாகிறது.

எதையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதால் யாதுபயன் என்பதற்கு விடை அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது.

இந்தத் துறவுசேர் யோகத்தை எய்தியநீ
முந்தைச் சுபாசுபமாம் மூள்விளையின் - பந்தம்
அறப்பெறுதி ஆதலினால் ஆங்குவீ டெய்தி
உறப்பெறுதி என்னை உகந்து.

(இ—ள்) இந்த – இந்தவிதமான, துறவு சேர் – சந்நியாசத்தோடு கூடின யோகத்தை எய்தியநீ – யோகத்தைப் பொருந்தினாயானல் நீ முந்தை சுபஅசுபமாய் மூள்வினையின் – அனாதியாக நன்மையாகவும், தீமையாகவும் மூள்கின்ற கருமங்களினுடைய, பந்தம் – கட்டினின்று, அற பெறுதி – விடப்படுவாய், ஆதலினால் – ஆகவே வீடு எய்தி – மோக்ஷம் பெற்று, என்னை உகந்து உற பெறுதி – (பகவானாகிய) என்னை மகிழ்ந்து அடையப் பெறுவாய்.

சுபா[4] சுபபலைரேவம்[4 2] மோக்ஷ்யஸே[3] கர்மபந்தனை:[4]
ஸந்யாஸ யோக[3] யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி

(இ—ள்) ஏவம் – இப்படி, ஸந்யாஸ யோக யுக்தாத்மா – (கருமங்களை என்னிடம் அர்ப்பணம் செய்வதாகிற) ஸந்நியாஸ யோகத்தோடு கூடினவனாய், சுபா சுப பலை:– நன்மை தீமைகளைப் பலமாயுள்ள கர்மபந்தனை:– கரும பந்தக்களிலிருந்து, மோக்ஷ்யஸே விடுபடுவாய், விமுக்த் – (அவ்வாறு) விடுபட்ட நீ, மாம் – என்னை, உபைஷ்யஸி – அடைவாய்,

செய்யும் கடமைகள், சத்கர்மாக்கள் இவற்றால் வரும் பலனைத் தனக்கு வேண்டாம் என்று பகவதர்ப்பணம் பண்ணுவதே துறவு அல்லது ஸந்யாஸம் ஆகும். அவ்வாறு செய்வதால் வரும் பலனே முக்தியாகும்.

அப்பலன் (1) பந்தம் உறப்பெறுதி (பந்தனை: மோக்ஷ்யஸே) (2) என்னை உறப்பெறுதி (மாம் உபைஷ்யஸி) என்று பாடலிலும்

சுலோகத்திலும் இரண்டு பிரிவுகளாகச் சொல்லப்பட்டன. இதற்குச் சங்கரர் 'வாழ்விலே ஜீவன் முக்தனாக விருந்து, தேகம் போனபின் பகவானாகிய என் சொரூபமாவாய்' என்று பொருள் கூறியுள்ளார்.

பகவான் பக்தர்கள் பிரியத்தோடு எதை அளித்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுகிறார் என்று முன்னே சொல்லப்பட்டது. அதிலிருந்து பகவான் பக்தர்களிடம் திருப்தியடைந்து அனுக்கிரகம் செய்வது போல், தன்னை வெறுப்போரிடம் அதிருப்தி அடைந்து அவர்களைக் கடுமையாகத் தண்டித்துத் துன்புறுத்துகிறார் என்ற எண்ணம் உண்டாகலாம். அவ்விதம் எண்ணுவோருக்குப் பகவான் உலகிலுள்ள அதிகாரம் படைத்த அரசர்களைப் போலவும் பிரபுக்களைப் போலவும் தோன்றுவார். அந்நிலையில் பக்ஷபாதமும், கொடுமையும் நிறைந்தவராகவே கடவுளை எண்ணத்தோன்று மாதலால் அதைப் பரிகரிக்கும் பொருட்டுக் கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

யாவர்க்கும் ஒப்பனான் என்றனக்கு யாரிடத்தும்
மேவுவெறுப் போருகப்பு மிங்கில்லை - யாவரெனை
யன்பதனா லேயடைவா ராங்கவரென் பாலவர்பால்
இன்பதனா லேயிருப்பன் யான்.

(இ–ள்) யாவர்க்கும் நான் ஒப்பன் – நான் எல்லோரிடத்திலும் சமமாயிருக்கின்றவன், என் தனக்கு யாரிடத்தும் மேவு வெறுப்பு ஓர் உகப்பு இங்கு இல்லை – எனக்கு ஒருவருடத்திலும் பொருந்திய அப்பிரியமோ விசேஷ விருப்போ கிடையாது; யாவர் எனை அன்பு அதனால் அடைவார் – யார் என்னைப் பக்தியாலே பஜிக்கின்றார்களோ, அவர் என்பால் – அவர்கள் என்னிடத்திலே விருக்கின்றார்கள்; யான் இன்பதனால் அவர் பால் இருப்பன் – நானும் மகிழ்வோடு அவர்களிடம் இருக்கின்றேன்.

ஸமோஹம் ஸர்வபூ4தேஷு நமேத்3வேஷ்யோஸ்தீ ந ப்ரிய:
யே ப4ஜந்தீது மாம் ப4க்த்யா மயிதேஷு சாப்யஹம்

(இ–ள்) அஹம் – நான், ஸர்வபூதேஷு – எல்லாப் பிராணிகளிடத்திலும், ஸம; – ஸமமாயிருக்கின்றவன், மே – எனக்கு த்வேஷ்ய – சத்துருஷம், ந– இல்லை, ப்ரியச்ச – தோழனும் (இஷ்டனும்) நாஸ்தி – இல்லை, மாம் – என்னை, பக்த்யா – பக்தியினாலே, பஜந்தி – பஜிக்கிறார்களோ, தே அவர்கள் மயி – என்னிடத்தில் (இருக்கிறார்கள்)

அஹமபி – நானும், தேஷு – அவர்களிடத்தில், (வர்த்ததே – இருக்கிறேன்)

'யாவர்க்கும் ஒப்பன் நான் (ஸமோஹம் ஸர்வ பூதேஷு)' என்னும் தொடருக்கு சாதியினாலும் சுபாவத்தினாலும் உருவத்தினாறும் அறிவினாறும் மிகவும் ஈனமாயும், உயர்வாயுமுள்ள எல்லாப்பிராணிகளிலும் யாராயிருந்தாலும், என்னை ஆச்ரயிக்கும் விஷயத்தில் இன்னான் உயர்வானவன் இன்னான் தாழ்வானவன்' என்று எனக்குக் கிடையாது. எல்லார்க்கும் நான் சமமானவன் என்று பொருள் கொள்ளலாம். கஜேந்திரன் என்ற யானையும், புறாவும் மோட்சம் பெற்றது இதற்கு எடுத்துக்காட்டு.

துவேஷமும் பிரியமும் பகவானுக்கு இல்லாதிருந்தும் பக்தர்கள் பகவானிடம் விசேஷபலனைப் பெறுவதற்குக் காரணத்தை இச்சுலோகத்தின் பிற்பகுதிக்குச் சங்கரர் எழுதிய உரையால் அறியலாம்.

சங்கரர் ஸ்ரீதரர்: – அக்கினி எல்லார்க்கும் பொதுதான். ஆயினும் அதைக் கிட்டியவனுக்கு மட்டுமே குளிரைப் போக்கி வெளிச்சத்தைக் கொடுத்து உதவுகிறது. அவ்வாறே பொதுவான கற்பக விருக்ஷமும் தன்னை விரும்பி வந்தவனுக்கு மாத்திரமே பலம் தருகிறது. அதேவிதம் தான் பகவானின் மகிமை அவரை அடுத்தவர்களையே ரட்சிக்கும்.

'பக்தனிடத்தில் பகவானிருக்கிறார் பகவானிடத்தில் பக்தன் இருக்கிறான்' என்று இங்கு கூறிய கருத்தை

"உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னிலிட்டேன்
என்னப்பா என் இருடி கேசா என்உயிர்க் காவலனே"

–(பெரியாழ்வார்)

என்ற பாடலில் அறியலாம்.

103. பகவத் கிருபைக்குப் பிறப்பு ஒரு தடையா?

'பகவத் கிருபையைப் பெறுவதற்கு ஒருவன் தான் பருகும் நீர் ஏதாயினும் அர்ப்பணம் செய்யலாம். எந்த இலையையும் பூவையும் அர்ச்சிக்லாம். எந்தப் பழத்தையும் சமர்பிக்கலாம். செய்யும் போது உண்டாகும் பக்தி அல்லது மன நெழ்ச்சியே பிரதானம், அவ்வாறே

ஒருவன் தான் செய்யும் எந்தக்கிரியையையும் பகவதர்ப்பணம் செய்து பலனில் இச்சைக்கொள்ளாமல் யோகபாவம் படைத்திருந்தால் போதும், பரிபூர்ண பகவத் கிருபைக்குப் பாத்திரமாகலாம் என்று கண்ணன் சொல்லியபோது அர்ஜுனனுக்குப் பின்னும் ஒரு சந்தேகம் தோன்றியது. பக்தி பரவசத்தால் இத்தகைய கிரியைகளை இன்னின்ன வகுப்பார்தான் செய்து பகவத் கிருபையைப் பெறமுடியும் என்ற வரம்பு இருக்குமோ? என எண்ணலானான். அதை யறிந்து கொண்ட கண்ணபிரான் அச்சந்தேகத்தைப் போக்கும் பொருட்டு, பக்தியைப்பற்றி மேலும் உயர்வாக விவரிக்கிறார்.

மிகவும் துராசார மேவிலும் வேறுன்னாத்
தகவொன்றி என்தன்னைச் சார்வான் - இகழ்வின்றி
மேலறிவ னென்றே மதிக்கப் படுமவன்றான்
மேலறிவின் தன்மையான் மிக்கு.

(இ–ள்) மிகவும் துராசாரம் மேலும் – அதிகம் துராசராமுள்ளயினாயிருந்தாலும், வேறு உன்னா தகவுமின்றி – மற்றெதையும் நினையாத பண்போடு பொருந்தி, என் தன்னை சார்வான் – என்னையே பஜிக்கின்றவன், மிக்கு மேல் அறிவின் தன்மையான் – சிரேஷ்டமான மன நிச்சயமுடைய அறிவைப் பெற்றிருப்பதால், அவன் தான் – அவனே, இகழ்வு இன்றி – குறைவில்லாத வால் அறிவின் என்றே மதிக்கப்படும் – நுண்ணிய ஞானம் படைத்த பெரியோன் ஆகவே மதிக்கப்படுவான்.

அபிசேஸ்து[3] துராசாரோ பஜதே[4] மாம் அநந்ய பாக்
ஸாதுரேவ[4] ஸமந்தவ்ய[3]: ஸம்யக்வ்யவ ஸிதோ ஹிஸ:

(இ–ள்) ஸுதுராசாரோவி – மிகவும் துராசாரமுள்ளவன் ஆனாலும், அநந்ய பாக் – மற்றொன்றை நாடாமல், மாம் – என்னை, பஜதே சேத் – பஜிப்பானாகில் ஸ: – அவன் ஸாதுரேவ – ஸாதுவாகவே மந்தவ்ய: – நினைக்கத் தகுந்தவன் ஸ:– அவன் ஸம்யக் – நன்றாக, வ்யவ ஸிதோ ஹி – மனநிச்சயமுள்ளவன் அன்றோ?

துராசாரம் – கெட்ட நடவடிக்கை தன் இனத்திற்கம் குலத்திற்கும் ஏற்றபடி இதை செய்; அதைச் செய்யாதே என்று சொல்லப்பட்ட விதிவிலக்குகளைக் கடத்தலாகும் இச்சுலோகத்திற்குக் கூறப்படும் வெவ்வேறான உரையின் சாரமாவது.

சங்கரர்:– 'தூரசார்ரமுள்ளவன் ஆனாலும் அந்நிய (தெய்வங்களிடம்) பக்தியற்றவனாய் பகவானையே பஜித்தனாகில் ஸதாசாரமுடையவனாகவே கொள்ளத் தகுந்தவன், (ஸாது: – ஸதா சாரமுடையவன்) அதற்குக் காரணம் அவனிடமுள்ள ஸாது (நல்ல) நிச்சயமுள்ள தன்மையே.'

மத்வாசாரியார் ராகவேந்திரர்: – ஸ: (அவன்) – தெய்வத் தன்மை தன்னிடம் அமைந்த ஒருவன் சில சமயங்களில் ஜீவாத்மாக்களில் சிலர் தம்தகுதிக்கு மேலான பெருமையைப் பெற்று விடுகின்றனர். அத்தகையவர்கள் பகவானின் திருவுள்ளப்படித்தவறு செய்ய இங்கு வருகின்றனர். அவர்கள் பகவானை (பரமாத்வைத் தவிரவேறு தெய்வங்களை ஸர்வேச்வரனாகப் பஜிப்பதில்லை. தெய்வங்களின் இறைமை (நாயகத்வம்) பற்றித் தெளிவான நுட்பமான அறிவு இருந்தால் ஒழிய அவ்வாறு செய்ய இயலாது. ஆகுவே அவர்கள் ஞானம் படைத்த ஸாதுவாகவே மதிக்கத்தக்கவர். உறுதியும் தெளிவும் நுட்பமும் கூடிய ஞானமும், அதனால் நேரான பக்தியும் படைத்தவர்களிடம் துராசாரம் ஏன் இருக்கிறதென்றால், தகுதிக்கு மேலாக முன்னேபெற்றிருந்த மதிப்பு (ஈடாகி)க் குறைய வேண்டும் என்பதன் பொருட்டே. துராசாரத்தினாலேயே அத்தகைய சாதுக்கள் விஷயத்தில் பகவானின் நியமனம் நிறைவேற்றப்பட்டதாகிறது. ஆகவே துராசாரம் இருந்தபோதிலும் பகவானிடம் அனன்யமான (வேறொன்றை நாடாத) பக்தி பூண்டவனை உண்மைப் பக்தன் என்று கொள்ளத் தட்டில்லை"

ஸ்ரீதரர்:– வ்யவஸித: (வாலறிவன்) என்பதற்கு ஈசுவர பஜனை செய்தாலே நான் கிரதார்த்தனாக வேண்டும் என்னுந் தெளிவான!

'முடிவான கூர் அறிவு பெற்றிருந்த போதிலும் அநந்ய பக்தனிடம் தவறான நடவடிக்கை சேர்ந்திருக்கும் போது ஏன் அவனை ஸாதுவாக மதிக்கவேண்டும்?' என்ற ஐயம் அர்ஜுனன் மனதில் மறுபடி தோன்றியதைக் கண்ணபிரான் உணர்ந்தார். அதற்கு விடையாக அடியில் வருமாறு தெரிவிக்கிறார்.

ஒல்லை அவன்தருமத் துற்ற ஒருவனாம்
அல்லைவினைச் சாந்திதனை மன்னுமே-எல்லையில்சீர்க்
கௌந்தேயா ஆங்கிதனைக் கட்டறுநீ என்பத்தன்
போந்தே நசியான் புறத்து

(இ-ள்) எல்லை இல் சீர் கௌந்தேயா!-அளவற்ற பெருமையையுடைய குந்தி புத்திரனே!, அவன்-அத்தகைய துராசார முடைய உண்மை பக்தன், ஒல்லை கருமத்து உற்ற ஒருவன் ஆம்-சீக்கிரமமாக நல்லாசாரம் பொருந்தி ஒருவனாகி விடுவான். அல்லை வினை சாந்திதனை மன்னும்-கருமபந்தம் தொடராத நிஷ்டையை அடைவான், என் பக்தன்-என்னிடம் (அனன்யமான) பக்தி கொண்டவன் புறத்து போந்து நசியான்-துன்மார்க்கத்தில், சென்று கெட்டுப்போகமாட்டான், இதனை நீ கட்டறு-இதை இவ்வாறு என்று உறுதிகூறு (பிரதிக்ஞைசெய்)

க்ஷிப்ரம்[4] பவதி தர்மாத்மா[2] சச்வச்[3] சாந்திம்[2] நிகச்சதி

கௌந்தேய ப்ரதிஜ்ஞா[4] நீஹி நமே பக்த: ப்ரணச்யதி

(இ-ள்) கௌந்தேய-குந்தி புத்திரா! க்ஷிப்ரம்-சீக்கிரத்தில், தர்மாத்மா பவதி-(துராசாரமுடைய பக்தன்) தர்மமான ஆசார சீலம் பொருந்திய மனமுடையவனாகின்றான். சச்வத்-எப்போதும், சாந்திம்-சாந்தியை (நிஷ்டையை) நிகச்சதி-அடைகின்றான், மே-என்னுடைய பக்த:-பக்தன், ப்ரணச்யதி-நசிக்க மாட்டான் (என்று) ப்ரதி ஜாநீஹி-நீ பிரதிக்ஞை செய்வாக.

தருமத்து உற்ற ஒருவன் ஆம்-தருமத்தோடு பொருந்தின ஒருவனாவன் எந்தவிதமான தடையுமின்றி என்னை அடையவேண்டுமென்ற எண்ணத்தைக்கொண்டு அதனால் என்னை அடைவதற்கு விரோதமான துராசாரத்தினின்றும் நீங்குகிறார் என்பது பொருள்.

'பிரதிக்ஞை செய்' என்பதற்கு சங்கரர்:-'நிச்சயமான பிரதிக்ஞை செய்' என்றும்,

ஸ்ரீதரர்:- வாதம் செய்யப்படும் சபையில் முரச வாத்தியங்களை முழங்கிக் கொண்டும் கைகளை உயர தூக்கிக் கொண்டும் துராசார முடையனாயினும் என் பக்தன் கெட்டுக் போகவில்லையென்று நீ சத்தியம் செய்' என்றும் உரை கூறுவர்.

இச்சுலோகத்திற்கு த்வைத சித்தாந்திகள் கூறும் உரை சற்று வேறு பட்டிருப்பது சிந்தனைக்குரியது. ராகவேந்திரர்:- நப்ரணச்யதி (நசியான்)-நரகில் தண்டனை அனுபவிப்பதில்லை. அவனுடைய அறிவு முடிவானதாகவும் கூறியதாகவும், இருப்பதால் அவனுடைய மனம் சன்மார்க்கத்தில் திரும்பி விடுகிறது. ஆசார சீலன் ஆகி விடுகிறான். இச் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட யாவும் தேவதைகளையும்,

மஹரிஷிகளையும் குறித்தவை மற்றயோர் விஷயத்தில் பொருந்த மாட்டா, தமது அமிசமாக உலகில் அவதரிக்கும் தெய்வங்கள் விஷயத்திலும் இச்சந்தர்ப்பத்தில் கூறியவை பொருந்தும்.

'ஆக துராசாரமுடைய பக்தன் வெகு சீக்கிரத்தில் ஆசார சீலனாகவும் ஆகி விடுவதால் அவன் போற்றற்குறியன் என்று இதனால் காரணம் கூறப்பட்டதாயிற்று.

இதற்கு, பக்தனிடத்தில் சாமானிய ஜனங்களுக்குத் துராசாரம் போல் தோன்றுபவை பகவதனுக்கிரகத்தால் உண்மையில் பகவானும் பக்தரும் வியக்கத்தக்க ஆசாரங்களாகவே ஆகும். அதனால் அவை பாராட்டவும் படும்'. என்றும் பொருள் கொள்வோருண்டு.

தன்னடியார் திறத்தக்கத்துத் தாமரையாள் ஆகிலும்
சிதகுறைக்கு மேல் என்னடியார் அது செய்யார்
செய்தாரேல் நன்று செய்தார் என்பர்போலும் – (பெரியாழ்வார்)
குன்றனைய குற்றம் செய்யினும் குணம் கொள்ளும் –
(பொய்கையார்)

(அடியார் திறத்து அகத்து–பக்தர் விஷயத்தில், தாமரையாள்– இலக்குமி, சிதகு–குற்றம் என்பர் போலும் (பகவான்) சொல்லுவர் போலும், குன்று அணைய–மலை அளவாக குணம் கொள்ளும்– குணமாக (பகவான்) ஏற்றுக் கொள்வார்)

இவ்வாறு கூறுவதற்கு பிரகாலாதன், விபீடணன், கண்டாகருண்ன் முதலியோரின் வரலாறுகள் எடுத்துக் காட்டாகும். குகன் சுக்கிரீவன் முதலியோரிடமும் அசுர இராக்கத பக்தர்களிடமும் துராசாரங்களிலிருந்த போதிலும் அவை பகவானால் போக்யமாகவே கொள்ளப்பட்டன. சபரி விருத்தாந்தமும் இதற்கு விலக்கல்ல.

பிறப்பும் அது காரணமாக பெற்றோர் உறவினர் சமூகம் முதலிய சூழ்நிலை காரணமாகவிருக்கும் எந்தவிதத் துராசாரமும், பகவத் கிருபைக்குத் தடையல்ல என்னும் கருத்துப் பின்னும் ஒரு சுலோகத்தால் தெளிவாக்கப்படுகிறது.

பார்த்தவெனைப் பற்றினார் பாவம் பயில்பிறவி
சேர்த்தபெண் வைச்சியரும் சூத்திரரும்-பேர்த்து
வினையடையார் வீடெய்தி மேற்கதியா மின்பம்
தனையடைவர் சென்று தழைத்து.

(இ-ள்) பார்த்த-பார்த்தனே! பாவம் பயில் பிறவி சோர்த்த பாவச் செயல் நிகழ்தற்கிடமான பிறவியில் களைத்த, பெண்-பெண்களும் வைசியரும் சூத்திரரும்-மூன்றாவது நான்காவது வருணத்தார்களும், எனைபற்றினால்-என்னை ஆச்ரயித்தால், பேர்த்து வினை அடையார்-திரும்பவும் கரும பந்தத்தைப் பெறாமல், சென்று தழைத்து-மேம்பட்டு விளங்கி, மேற்கதியாம் இன்பம் தனை அடைவர்-உத்தமமாகிய மோட்சத்தைப் பெறுவார்கள்.

மாம்ஹி பார்த[2] வ்யபாஶ்ரித்ய யேபிஸ்யு: பாபயோநய:
ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா[2] ஶூத்[3]ரா ஸ்தேபி யாந்தி பராங் கதிம்[3]

(இ-ள்) பார்த்த-அர்ஜுனா! மே-எவர்கள், பாபயோ நய:-பாபத்தைக் காரணமாகவுடைய ஸ்த்ரிய-பெண்களாயும்,வைச்ய:-வைசியர்களாயும், ததா-அப்படியே. சூத்ரா அபி-நான்காம் வருணத்தவாராயும் ஸ்யு:-ஆவர்களோ தேபி-அவர்களும், மாம்-என்னை,வ்யபாஶ்ரித்ய-ஆராதித்து பரமாம்-மேலான, கதிம்-கதியை யாந்திஹி-அடைகின்றனரன்றோ?

பிறவியாலும், கருமத்தாலும் இழிவாகக் கருதப்பட்ட பலர் பகவத் பக்தியால் உயர்வடைந்து பேறு பெறுகின்றனர். இதற்கு விதுரர் தர்ம வியாசர் சபரி முதலியோர் வரலாறு பிரசித்தமான எடுத்துக் காட்டாகும். பிறவியால் உயர்வாகக் கருதப்பட்டபோதிலும் கருமத்தால் இழிந்து பின்பு பகவந்நாம பக்தியால் உயர்ந்து பேறு பெற்றவர் வான்மீகர் அஜாமிளன் முதலியயோர் ஆக பகவதனுக்கிரகத்திற்கு பிறவி தடையுமாகாது. உபாயமும் (ஸாதனமும்) ஆகாது. பக்தியே ஸாதனமாகும். அதைப் பயின்று மேலான கதியைப் பெறுவதற்கு எல்லோரும் அதிகாரிகள் உரிமை படைத்தவர்கள் என்ற வேத உண்மையை தான் கீதையும் கூறுகிறது.அத்தகைய சமநோக்கு இல்லாத நூல் மஹாத்மாவை ஆயுள் காலம் முழுவதும் ஆகர்ஷக்குமா? அதனால் அன்றோ பிரார்த்தனைக் கூட்டத்தில் கீதையைச் சொல்லிச் சொல்லிப் பிறரையும் படிக்கத் தூண்டினார்.

வித்வான் ஆர். நரசிம்மாசாரியார் M.A.,

நூலாசிரியர் பற்றி . . . . . .

- 1909 ஆம் ஆண்டு வானமாமலை என்றும் நாங்குனேரியில் (திருநெல்வேலி மாவட்டம்) பிறப்பு;
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1934 ஆம் ஆண்டு தமிழ் பி.ஏ. (ஹானர்ஸ்) பட்டப் படிப்பு;
- அரசு கலைக் கல்லூரிகளிலும் மதுரைக் கல்லூரியிலும் பல்லாண்டுகள் தமிழ்ப் பணி
- தமிழகத்திலும் வடநாட்டில் மும்பை, கொல்கத்தா நகரங்களிலும் சமய, ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றியது;
- மும்பை தமிழ்ச் சங்கத்தினர் 'ராமாயண ப்ரிவீண்' என்ற விருதும் கொல்கத்தா பிரம்மஞான சபையினர் 'பிரம்ம ஸ்ரீ' என்ற விருதும் அளித்துச் சிறப்பித்தது;
- மதுரை அருள்மிகு கூடலழகர் திருக்கோயிலில் தொடர்ந்து 25 ஆண்டுகள் மார்கழி மாதம் முழுதும் திருப்பாவைச் சொற்பொழிவாற்றியது; மதுரை வானமாமலை மடத்தில் பத்து ஆண்டுகள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய விரிவுரைகள் நிகழ்த்தியது;
- அமுதசுரபி, கலைமகள், சுதேசமித்திரன் வாரமலர் ஆகிய இதழ்களில் சிறுகதைகள், கட்டுரைகள் 'வாரன்' என்ற புனைபெயரில் எழுதி வெளியிட்டது; தினமணிச் சுடரில் 'கீதைமணிகள்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதி வெளியிட்டது;
- எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் செயற்பாடுகளாலும் தமிழ்ப் பணியும் வைணவசமயப்பணியும் ஆற்றிய சிறப்பு . . . ஆகியவை.

ஸ்ரீ லெக்ஷ்மி பிரஸ், மதுரை - 10. ✆ 5351563.